# திருக்குறள் உரைவேற்றுமை

## காமத்துப்பால்

ஆசிரியர்
முனைவர் இரா. சாரங்கபாணி

T.14292

அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
1992

# திருக்குறள் உரைவேற்றுமை

## காமத்துப்பால்

ஆசிரியர்
முனைவர் இரா. சாரங்கபாணி
சிறப்புநிலைப் பேராசிரியர்
திருக்குறள் ஆய்வகம்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
1992

முதற் பதிப்பு: 1992

© அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

**திருக்குறள் உரைவேற்றுமை**

**காமத்துப்பால்**

TIRUKKURAL URAI VETRUMAI

**KAMATTUPPAL**

விலை ரூபாய்:

அச்சிட்டோர்: **அபர்ணா அச்சகம்,**
9, அங்காளம்மன் கோவில் தெரு,
சிதம்பரம்-608 001.

# அண்ணாமலைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் மாண்பமை தி. சி. மோகன் அவர்களின்

## அணிந்துரை

திருக்குறள், தோன்றிய காலம் தொட்டு இன்று வரை எல்லா நாட்டாராலும், எல்லா மொழியினராலும், எல்லா இனத்தவராலும், எல்லாச் சமயத்தினராலும் ஏற்கப் பெற்றுப் போற்றிப் புகழப் பெறுகின்றது. அதன் சிறப்புணர்ந்து பாரத நாட்டுப் பல மாநிலத்தவரும் வேற்று நாட்டவரும் தத்தம் மொழிகளில் மொழி பெயர்த்துக் கற்று வருகின்றனர். 'தொட்டனைத் தூறும் மணற்கேணி, மாந்தர்க்குக் கற்றனைத் தூறு மறிவு' என்ற குறளுக்கேற்பத் திருக்குறளைக் கற்குந் தோறும் புத்தம் புதுக் கருத்துக்களைக் கண்டு எழுதியும் சொற்பொழிவு ஆற்றியும் வருகின்றனர். இங்ஙனம் திருக்குறளுக்குச் சுருக்க உரையாக, தெளிவுரையாக, விளக்க உரையாக, பல உரைநூல்கள் இவ் விருபதாம் நூற்றாண்டில் வெளிவந்து கொண்டிருக்கின்றன. சில குறளுக்குப் புதிய உரை விளக்கங்களைத் திங்கள், வார இதழ்களில் சிலர் எழுதி வருகின்றனர். மொழிபெயர்ப்புக்களிலும் சில உரை வேறுபாடுகள் காணப்படுகின்றன. சிலர் தம் சொற்பொழிவுகளில் சில குறளுக்குப் புதிய விளக்கம் தருகின்றனர்.

திருக்குறள் உரை வேற்றுமை என்னும் இந்த நூல் வேறுபட்ட பல உரைகளைத் தொகுத்துத் தருவதுடன் 'முடிநிலை' என்னும் பகுதியில் ஏற்கும் உரை இது, ஏலாத உரைஇது, எனக் காரணம் கூறி விளக்கிச் செல்கிறது. திருக்குறள் உரைவேற்றுமை அறத்துப்பால், பொருட்பால் என்னும் இரண்டினைத் தொடர்ந்து இப்பொழுது மூன்றாவதாகிய காமத்துப்பால் வெளி வருகிறது.

அறத்துப்பாலிலும், பொருட்பாலிலும் நேரே நின்று அறங் கூறிய திருவள்ளுவர், காமத்துப்பாலில் தாம் மறைந்து நின்று அகத்திணை மாந்தரை - தலைவன், தலைவியரைப் பேச வைக்கிறார். காமத்துப்பால் கற்பனைச் சுவை நிறைந்த குறட்பாக்களைக் கொண்டது. இப்பாக்களை உரையாசிரியர்கள் பல்வேறு வகையில் விளக்கி உள்ளனர். அவற்றைக் கண்டு திளைத்து இலக்கிய இன்பம் பெற இந்நூல் துணை செய்யும். கூற்று வகையானும் குறளுக்கு அமைக்கும் பின்னணி வகை யானும் உரையாளர்கள் வேறுபட்டுச் செல்வதை இந்நூல் சுட்டி விளக்குகிறது. காமத்துப்பால் குறித்த விரிந்த செய்திகளைச் சுருங்கிய காலத்தில் அறிந்தின்புறத் திருக்குறள் உரைவேற்றுமை-காமத்துப்பால் தந்த பேராசிரியர், முனைவர் **இரா. சாரங்கபாணி** அவர்களின் நன்முயற்சியினைப் பாராட்டுகிறேன். அவருக்கு என் வாழ்த்துக்கள்.

திருக்குறள் பற்றிய தெளிவு வேண்டுவார்க்கு, இத்திருக்குறள் உரைவேற்றுமை ஓர் ஒளி விளக்கு. இதனை அண்ணாமலைப் பல்கலைக்கழகம் தமிழுலகுக்கு வழங்கியமை நினைந்து மகிழ்வெய்துகின்றேன்.

அண்ணாமலைநகர்
25—4—92

**தி.சி. மோகன்**
துணைவேந்தர்.

கலைமாமணி, தமிழாகரர், பேராசிரியர்,
டாக்டர் **ஆறு. அழகப்பன்,**
தமிழியல்துறைத் தலைவர்,
முதன்மையர், இந்திய மொழிப்புலம்,
**அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.**

## பதிப்புரை

வான்புகழ் வள்ளுவர் தமிழுக்குத் தந்த தெய்வத்தாமரை எனத் திகழும் திருக்குறளின் மூன்றாம் பகுதி காமத்துப்பால். அறம் பொருள், இன்பம் என்பதே தமிழ் வழக்கு. அறத்துப்பால், பொருட்பால் என்ற தலைப்புக்களில் தம் நூலை வடிவமைத்த வள்ளுவர் எக்காரணம் பற்றியோ இன்பத்துப்பால் எனக் கூறாமல் 'காமத்துப்பால்' என்றே பெயர் தந்துள்ளார். இன்பம் என்ற சொல் 'காமம்' என்ற சொல்லின் பொருள் ஊற்றத்தைத் தர இயலாது என்று கருதியே இவ்வாறு அமைத்தார் போலும்.

காமம் என்பது தூய தமிழ்ச் சொல். 'அன்புணர்ச்சியின் நிறைவு' என்பது இதன் பொருள்.

'கம நிறைந்தியலும்' – தொல்-சொல் - நூற்பா - 355 என்பர் தொல்காப்பியர். 'கமம்' என்ற சொல்லின் அடிப்படையில் பிறந்தது 'காமம்' என்பது.

தமிழ் மொழியின்கண் காதல், காமம் என்ற இரு சொற்கள் உள்ளன. இரண்டும் நிறையன்பைக் குறித்து வழங்குவன. எனினும் சிறிது பொருள் வேறுபாடுடையன. காதலன் என்ற சொல் கணவனாக ஏற்றுக் கொண்டவனையும் குறிக்கும்; மகன் முதலிய அன்புடையார் பிறரையும் குறிக்கும். காதல் புதல்வன்; காதலந்தோழி எனவரும் சங்கத் தொடர்கள் இதனை உணர்த்தும்,

ஆனால், 'காமம்' என்ற சொல் ஆண்-பெண் உறவு பற்றிய பருவ வேட்கையையே பெரும்பாலும் உணர்த்தி வரும். தொல்காப்பியர் இப்பொருளில் 'காமம்' என்ற சொல்லையே எடுத்தாளுகின்றார்.

"அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கின்
காமக் கூட்டம்" - (களவியல்-நூற்பா-1)
"காமக் கிழவன் உள்வழிப் படினும்" -
(களவியல்-நூற்பா-23)

சங்க நூல்களிலும் பெருவழக்கினது 'காமம்' என்ற சொல்லாட்சி தான்.

"மெய்யில் தீரா மேவரு காமம்" – (அகம். 28.)

வள்ளுவர் குறளில் காதல், காமம் என்ற இரு சொற்களும் இடம் பெறுகின்றன. ஆனால், காமத்துப்பாலில் பெருவரவிற்றாகக் 'காமம்' என்ற சொல்லை 38 குறட் பாக்களில் எடுத்தாளுகின்றார். இச்சொல்லின் ஊற்றமே காமத்துப்பால் எனப் பெயரமையக் காரணமாயிற்று.

இப்பாலுக்கு உரை எழுதிய அறிஞர்கள் பலர். பண்டைய உரைகட்கு மாறாகப் புத்துரை கண்டோர் சிலர்; பாடபேதங் களைத் தம் விருப்பம்போல் மாற்றியமைத்தோரும் உள்ர். இவ்வுரைகள் எல்லாவற்றுக்கும் சிகரம் வைப்பது போன்று பேராசிரியர் டாக்டர் இரா. சாரங்கபாணி அவர்களின் ஆய்வுரை இப்போது அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழியல்துறை வெளியீடாக மலர்கிறது. அறத்துப்பால் உரை வேற்றுமை 1989 ஆம் ஆண்டிலும், பொருட்பால் உரை வேற்றுமை 1992 ஆம் ஆண்டிலும் வெளிவந்துள்ளன.

இவ்வுரை நூலின் சிறப்பு நலன்கள் பல. அவற்றுள் தனிச் சிறப்புப் பெறுவது பேராசிரியரின் கருத்தை விளக்கும் முடிநிலைப் பகுதி. பரிமேலழகர், காளிங்கர் முதலிய உரையாசிரியர்களின் கருத்துக்களை மட்டும் தொகுத்துக் கூறும் உரைவளம், உரைக் கொத்து என்பன போலமையாது தம் கருத்தை அறுதியிட்டுக் கூறும் உரைகல்லாக அமைவது இதன் தனிச்சிறப்பு.

"காய்தல் உவத்தல் அகற்றி நடுநின்று ஆய்தல் அறிவுடையார் கண்ணதே" என்பதற்கு இலக்கியமாக அமைவது இவ்வுரை நூல். கடிவன கடிந்தும், முடிவன கூறியும், பொருந்துவன ஏற்றும் செல்கிறது இவர் உரை விளக்கம்.

அகக் கோட்பாட்டில் மருதத்தின் உரிப்பொருளான 'ஊடல்' பற்றி இவர் கூறும் புதுவிளக்கம் தமிழர் பண்பாட்டின் அரணாக அமைகின்றது.

வள்ளுவர் பரத்தமை ஒழுக்கத்தை ஏற்கவில்லை; வன்மையாகக் கடிந்துரைக்கின்றார். "பரத்தமை முயக்கம் இருட்டறையில் ஏதில் பிணம் தழீஇயற்று" எனச் சாடுகின்றார். அத்தகைய கொள்கை அழுத்தம் உடையவர் "தலைவன் பரத்தமை ஒழுக்கத்தில் ஈடுபட்டிருந்து மீண்டான்; அதனால் தலைவி ஊடினாள்" எனக் கூறுவாரா என்பது ஆய்விற்குரியது அன்றோ?

பேராசிரியரின் 'முடிநிலை' இக்கருத்தைத் தெளிவாக எடுத்துரைக்கின்றது.

"ஊடி யவரை யுணராமை வாடிய
வள்ளி முதலரிந் தற்று" - குறள் 1304

என்ற குறளுரையில்,

"பரத்தையரிடத்து நின்றும் வந்த தலைமகனோடு தலைமகள் புலந்து சொல்லியது" எனப் பரிமேலழகர் துறைவிளக்கம் தருவர். இதனைச் சான்றுடன் மறுக்கின்றார் பேராசிரியர்.

"காமத்துப்பாலில் வள்ளுவர் பரத்தையர்ப் பிரிவு நிகழ்ந்ததாகக் கொண்டு குறள் யாக்கவில்லை என்பது இன்றைய அறிஞர் பலரின் கருத்து. அப்பிரிவு பற்றிய வெளிப்படையான குறிப்பு யாதும் குறளில் இல்லை என்பது அவர் கருத்துக்குச் சான்றாகும். "நண்ணேன் பரத்தநின் மார்பு" (1311) என்றவிடத்துத் தலைவன் பரத்தமை உடையவனாகத் தலைவி கற்பித்துக் கொண்டதன்றி மெய்யான நிகழ்ச்சியன்று. ஆதலின், பரிமேலழகரும் மணக்குடவரும் பரத்தையரையும் காமக்கிழத்தியரையும் சுட்டி எழுதும் உரைகள் பொருந்தா". என விளக்குவர்.

கூற்றுக்கள் பற்றிய வகையில் சில இடங்களில் பண்டைய உரையாசிரியர் கருத்துக்களை இவர் தக்க சான்றுகள் கூறி மறுத்துரைக்குமிடங்கள் திருக்குறளில் இவருக்குள்ள தோய்வினைப் புலப்படுத்துகின்றன.

'அலரெழ ஆருயிர் நிற்கும்' (1141) எனத் தொடங்கும் குறளுரையில்,

"மணக்குடவரும் பரிமேலழகரும் இக்குறளைத் தலைவன் கூற்றாகக் கொள்ளினும் அலரெழ ஆருயிர் நிற்றலைத் தலைவி மேலதாகப் பரிமேலழகரும், தலைவி மேலதாக மணக்குடவரும் கொண்டு உரை எழுதியுள்ளனர். தலைவியின் மேலதாகக் கொள்வதே சிறப்புடைத்து, வரைந்து கற்பொழுக்கப்படும் வேட்கை அவளுக்கே மிக்கிருத்தலின். தோழி கூற்றாகப் பரிப்பெருமாள் உரைத்தல் சிறப்பில்லை. தலைவி தன்னை மறந்து விடுவாள் எனத் தலைவன் கருதியதாகக் கொண்டு கூறும் இராமலிங்கம் பிள்ளை உரை அகத்திணை மரபன்று"

ஆசிரியரின் இலக்கணப் புலமை ஆங்காங்கு நுண்மையாகப் பளிச்சிடுகின்றது.

இவ்வரிய உரைவேற்றுமை நூலைக் காலத்திற் கேற்ற வகையில், அறிஞர் பலரும் ஒப்பும் வண்ணம் ஆக்கித் தந்த பேராசிரியருக்கு எமது நன்றி. அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழியல் ஆய்வுத்துறைக்கு இந்நூல் பெருமை தருகிறது. இந்நூலைத் தமிழார்வம் மிக்க பல்துறைப் பெருமக்களும் வாங்கிப் படித்துப் பயன்பெறவேண்டும் என்பது எமது பெருவிருப்பம்.

அண்ணாமலை நகர்
25—4—92

ஆறு. அழகப்பன்

# நூன்முகம்

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் நான் புலவர் வகுப்பிற் பயின்றகாலை, தொல்காப்பியம், சங்கவிலக்கியங்கள், திருக்குறள், காப்பியங்கள், பத்திப் பனுவல்கள், சிற்றிலக்கியங்கள் முதலியன பாடமாக இருந்தன. அவற்றுள் தொல்காப்பியம், சங்க இலக்கியம், திருக்குறள் ஆகியவை உள்ளங்கவர்ந்த நூலாக அமைந்தன. காரணம் அவை மொழியுணர்வும் இன உணர்வும் பண்பாட்டெழுச்சியும் தோன்றத் துணை செய்தமையேயாம். அவற்றைக் கற்பித்த ஆசிரியப் பெருமக்களும் 2000 ஆண்டுகட்கு முன் தோன்றிய அப்பழைய நூல்கள் இக்காலத்துக்கேற்பப் பயன் தாரா என அவலக்குரல் எழுப்பாமல் ஆர்வத்துடன், அவை எப்படி நடைமுறைக் கியைந்து வரும், நம் வாழ்க்கை உயர்ச்சிக்கு வழிவகுக்கும் என அறிவுறுத்தினர். அக்காலத்தே, பெரியார் திராவிடர் கழக மாநாடு நடத்தியபோதெல்லாம் அடுத்துக் குறள் மாநாடு நடத்திக் குறட் கருத்தை யாண்டும் பரப்பினார். அதனாலும் குறள்பால் பற்று மிகுந்தது.

தமிழுணர்வும் புலமையும் மிக்க புலவர் வி.மு. சோமசுந்தரம் பிள்ளை, திருமுறைச் செல்வர் க. வெள்ளைவாரணனார், முத்தமிழ்வித்தகர் லெ. ப. கரு. இராமநாதன்செட்டியார், ஆகிய மூவரும்எனக்கு முறையே திருக்குறள் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் கற்பித்தனர். பயிலுங் காலத்திலே குறளைச் செம்மையாகக் கற்றேன். பின்னர்க் காரைக்குடி அழகப்பா கல்லூரியில் ஆசிரியனாகப் பணியாற்றிய போது முதுகலை வகுப்பிற்குத் தொல்காப்பியம், சங்கவிலக்கியம், திருக்குறள் ஆகியவற்றைப் பயிற்றும் வாய்ப்புக் கிடைத்தது. அங்கு பேராசிரியர், செம்மல் வ.சுப. மாணிக்கனார் தலைமையில் 20 ஆண்டுக்கு மேலாகப் பணிபுரியும் பேறு பெற்றேன். அவரும் நானும் நாள் தோறும் மாலையில் உலாவச் செல்வது வழக்கம். ஒருநாள் அவர் நம் துறை ஆசிரியர்களுள் எவரேனும் ஒருவர், திருக்குறளுக்கு இதுகாறும் வெளி வந்துள்ள உரைவேறுபாடுகளைத் தொகுத்து, தக்க உரை எது எனக் காரணங்காட்டி முடிபுரைத்துத் திருக்குறள் உரைவேற்றுமை என்னும் பெயரில் நூல் எழுதலாம் என்று கூறினார். உடனே அப்பணியை நானே மேற்கொள்கின்றேன்

என்றுரைத்துத் தொடங்கினேன். நான் தொகுத்து வைத்திருந்த திருக்குறள் உரை வேற்றுமைகளையும் எழுதிய முடிநிலைக் கருத்துக்களையும் பார்த்துச் செப்பம் செய்து தந்தார்கள். அவ்வுரை வேற்றுமை நூலில் எல்லாக் குறள்களும் இடம்பெறவில்லை. அறத்துப்பாலில் 217, பொருட்பாலில் 487, காமத்துப்பாலில் 196 குறள்களே வேற்றுமையுடையவாகத் தேர்ந்தெடுக்கப் பெற்றன. பல ஆண்டு முயற்சியின் பயனாக உரைவேற்றுமை-அறத்துப்பால் 1957 ஆம் ஆண்டிலும், பொருட்பால் 1960 ஆம் ஆண்டிலும், காமத்துப்பால் 1964 ஆம் ஆண்டிலும் காரைக்குடி செல்வி பதிப்பகத்தின் வழியே வெளிவந்தன.

உரைவேற்றுமை நூல் வெளிவந்து இப்பொழுது 25 ஆண்டுகள் ஓடிவிட்டன. அதற்குப்பின் எத்துணையோ உரை நூல்கள், கட்டுரைகள், மொழிபெயர்ப்புகள் வந்த வண்ணம் உள்ளன. அவற்றை யெல்லாங் கண்டு வேறுபட்ட உரைகளைத் தேர்ந்து முடிநிலையும் எழுதித் திருக்குறள் உரைவேற்றுமையை விரிவுபடுத்தி ஓய்வுக்காலப் பணியாக வெளியிடுக என மூதறிஞர் வ.சுப.மா. அவர்கள் அறிவுரை கூறினார்கள். அதனைச் செய்ய எண்ணிய ஞான்று அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழியல் துறைத் தலைவர், முனைவர் ஆறு. அழகப்பனார் என்னைத் திருக்குறள் ஆய்வகத்தில் சிறப்புநிலைப் பேராசிரியராகப் பணிபுரிய அழைத்தார். நானும் அவ்வாய்ப்பினை ஆர்வத்துடன் பயன் படுத்திக் கொண்டு திருக்குறள் முப்பாலுக்கும் உரை வேற்றுமையை மூவாண்டில் முடிப்பதாகத் திட்டம் தந்து கூறியாங்கே முடித்தேன். அண்ணாமலைப் பல்கலைக்கழக வெளியீடாக எல்லாக்குறளும் அடங்கிய விரிவான திருக்குறள் உரைவேற்றுமை-அறத்துப்பால் 1989 ஆம் ஆண்டிலும் பொருட் பாலும் காமத்துப் பாலும் 1992 ஆம் ஆண்டிலும் வெளிவந்தன.

காமத்துப்பால் உரைவேற்றுமை நூலில் எடுத்தாண்ட உரை நூல்கள், உரை நடைநூல்கள், கட்டுரைகள், மொழிபெயர்ப்பு, இதுவரை வெளிவாரா எழுத்துரை ஆகியவற்றின் பட்டியல்களைப் பின்னே காணலாம். உரை நூல்களின் பட்டியலிலுள்ள பெயர்ப் பக்கத்திலேயே உரைவேற்றுமைகளின் மொத்த எண்ணிக்கை தரப்பட்டுள்ளது. உரைநடை நூல்கள் முதலிய பிறவற்றுக்குப் பட்டியலின் பெயர்ப் பக்கத்திலேயே உரை வேற்றுமையுள்ள குறள் எண்கள் குறிக்கப்பட்டுள்ளன.

# உரை நூல்கள்

| | | உரை வேற்றுமை மொத்த எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | பரிமேலழகர் உரை | — |
| 2. | மணக்குடவர் உரை | 157 |
| 3. | பரிதியார் | 103 |
| 4. | பரிப்பெருமாள் உரை | 90 |
| 5. | காளிங்கர் உரை | 105 |
| 6. | பழைய உரை | 7 |
| 7. | பழைய உரை (உ.வே.சா. அடையாறு நூலக வெளியீடு) | 45 |
| 8. | கவிராச பண்டிதர் உரை | 7 |
| 9. | மு.ரா. அருணாசலக்கவிராயர் உரை | 4 |
| 10. | கா. சுப்பிரமணியபிள்ளை உரை | 11 |
| 11. | பி சா. சுப்பிரமணிய சாத்திரியார் உரை | 1 |
| 12. | மு. வரதராசனார் தெளிவுரை | 5 |
| 13. | புலவர் குழந்தை உரை | 5 |
| 14. | வ.சுப. மாணிக்கனார் (உரைநடையில் 1330 திருக்குறள்) | 4 |
| 15. | நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம்பிள்ளை புதிய உரை | 90 |
| 16. | திருச்சி.கோ. வரதராசனார் உரை | 37 |
| 17. | ந.சி. கந்தையாபிள்ளை உரை | 5 |
| 18. | அ.கு. ஆதித்தனார் (30 குறளின் மெய்ப்பொருள்) | 3 |
| 19. | கு.ச. ஆனந்தன் (திருக்குறளின் உண்மைப் பொருள்) | 2 |
| 20. | கவிஞர் இறையரசன் (குறளும் பொருளும் உரைபாவடிவில்) | 8 |

21. சி. இலக்குவனார் எளிய உரை 16
22. வை.மு. கோபால கிருட்டிணமாச்சாரியார் உரை 2
23. மு. கோவிந்தசாமி திருக்குறள் நயவுரை 20
24. சாமி. சிதம்பரனார் திருக்குறள் பொருள் விளக்கம் 5
25. ஞா. தேவநேயப்பாவாணர் தமிழ் மரபுரை 14
26. ச. தண்டபாணி தேசிகர்
திருக்குறள் உரைக்களஞ்சியம்-காமத்துப்பால் 8
27. பிறர் உரை (பரிமேலழகர் காட்டியது) 1
28. மயிலை. சிவமுத்து உரை 7
29. ஞா. மாணிக்கவாசகன் உரை 3
30. கி. வீரராகவன் உரை 1
31. மதுரை இளங்குமரன் திருக்குறள்
வாழ்வியல் உரை 5
32. மு.ரா. கந்தசாமிப்பிள்ளை உரை 5
33. முனைவர் இரா. அருளப்பா
திருக்குறள் புத்தாய்வு 1
34. கவிஞர் கண்ணதாசன் காமத்துப்பால் உரை 3

## உரைநடை நூல்கள்

1. இலக்கியங்கள் காட்டும்
குறளுரை (1081) — மு. கோவிந்தசாமி
2. குறளோவியம் (1176) — கலைஞர் மு. கருணாநிதி
3. வள்ளுவர் கண்ட இல்லறம்
(1086, 1122, 1132, 1161) — சி. இலக்குவனார்
4. வள்ளுவர் கண்ட
உயிரினங்கள் (1111, 1274) — பூ. அமிர்தலிங்கனார்

5. வள்ளுவரும் மகளிரும் (1263) தெ.பொ. மீனாட்சிசுந்தரனார்

6. வள்ளுவர் வகுத்த வாழ்க்கை நெறி (1107, 1110) அ.மு. பரமசிவானந்தம்

7. வள்ளுவர் விருந்து (1107) கோ. சுப்பிரமணியபிள்ளை

8. மலரினும் மெல்லிது காமம் (1289) கு.ச. ஆனந்தன்

## கட்டுரை

நா. இராமையாபிள்ளை (1311)

## மொழிபெயர்ப்பு

சக்கரவர்த்தி நயினார் (1158)

## வெளிவாரா எழுத்துரை

இரா. முத்து (1114)


திருக்குறள் உரைவளம், திருக்குறள் உரைக்கொத்து, திருக்குறள் ஆராய்ச்சிப் பகுதி, திருக்குறள் உரைக் களஞ்சியம் முதலிய உரைத்தொகுப்பு நூல்கள் வெளிவந்தாலும், இத் திருக்குறள் உரைவேற்றுமை நூல் ஒருவகைத் தனிச் சிறப்பு உடையது. இது வேறுபட்ட குறளுரைகளை மட்டும் உடையது. அவ்வுரைகளுள் தக்கது எது என்பதனை விளக்கிக் காட்டும் முடிநிலைப் பகுதியைக் கொண்டது. முன்னைய உரைத்தொகுப்பு நூல்களிற் காணப் பெறாத சாமி. சிதம்பரனார், கி. வீரராகவன், கு.ச. ஆனந்தன், மயிலை. சிவமுத்து, இறையரசன், இரா. அருளப்பா, இளங்குமரன், கண்ணதாசன் முதலியோர் புதிய உரைகளையும் திருக்குறள் பற்றிய உரைநடை நூல்கள், கட்டுரைகள், மொழிபெயர்ப்புக்கள் ஆகியவற்றில் கண்ட உரை வேற்றுமைகளையும் இந் நூலிற்காணலாம். குறளன்பர்கள் அனுப்பி வைத்த புத்துரை தாங்கிய எழுத்துரையும் இந்நூலில் இடம் பெறுகின்றது.

காமத்துப்பாலின் ஒவ்வோரதிகாரத் தலைப்பின் கீழ் அது குறித்த உரையாசிரியர் கருத்துக்கள் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. அவற்றில் பெரிதும் கருத்து வேறுபாடு இன்மையான், முடிநிலை அவற்றுக்கு எழுதப் பெறவில்லை. வேறுபட்ட சில இடங்களில் மட்டும் அதிகாரக் கருத்துஇதுவாகலாம் எனக் குறிக்கப்பட்டுள்ளது. பலராலும் சிறப்பு நோக்கி ஏற்கப்படுதலின், பரிமேலழகர் உரை முதற்கண்ணும் அதற்கு வேறுபட்ட உரைகள் காலவரிசைப்படி தொடர்ந்தும் இடம் பெறும்.

**காமத்துப்பாலா? இன்பத்துப்பாலா?**

அறம், பொருள், இன்பம் என்று கூறுதலே முறையாதலின், முப்பாலின் மூன்றாவதனை இன்பத்துப்பால் என்றலே இயல்பாகும் என்று கருதிச் சிலர் தாம் உரையெழுதிய திருக்குறளில் இன்பத்துப்பால் என்றே பெயரிட்டுள்ளனர். காமத்துப்பால் என்பது பிறர் மாற்றி வைத்த பெயராகும் என்பது அன்னோர் தம் கருத்தாகும். அறம், பொருள், இன்பம் என்று இணைத்துக் கூறும்போது இன்பம் காமத்தைக் குறிக்கலாம். ஆனால், பொதுவாக இன்பம் என்று கூறும்போது துன்பத்துக்கு மறுதலையானது என்ற பொருளையே குறிக்கும். இன்பம் என்ற சொல்லை வள்ளுவர் காமத்தைக் குறிக்கச் சில இடங்களில் கையாண்டு உள்ளார்.

> அறம்பொரு ளின்பம் உயிரச்சம் நான்கின்
> திறந்தெரிந்து தேறப் படும். (501)
> அறனீனும் இன்பமும் ஈனும் திறனறிந்து
> தீதின்றி வந்த பொருள். (754)

என்னும் குறள்களை நோக்குக.

அச்சொல் துன்பத்துக்கு மறுதலையான பொருளிலேயே பல இடங்களில் ஆட்சி பெற்றுள்ளது.

> 'அறத்தான் வருவதே இன்பம்' (39)
> 'மக்கள்மெய் தீண்டல் உடற்கின்பம்' (65)
> 'ஒறுத்தார்க்கு ஒருநாளை இன்பம்' (156)
> 'ஈத்துவக்கும் இன்பம்' (228)

'இன்னாமை இன்பம் எனக்கொளின்' (630)
'இழிவறிந் துண்பான்கண் இன்பம்' (946)
'இன்பம் ஒருவற்கு இரத்தல்' (1052)

முதலிய ஆட்சிகளைக் காண்க.

காமமும் இன்பமும் வெவ்வேறு பொருளுடைய சொல்லாகக் காரண காரிய நடையில் 'ஊடுதல் காமத்திற்கு இன்பம்' (1330) என வழங்குதலும் நோக்கத்தகும்.

காமம் என்பதனை வடசொல் எனச் சிலர் கருதுகின்றனர். 'கமம் நிறைந்தியலும்' என்பது தொல்காப்பியம். அதன்படி நிறைந்தியல்வது என்ற பொருளில் வரும் கமம் முதனீண்டு காமம் ஆயிற்று என அறிஞர் சிலர் விளக்கந் தருகின்றனர்.

காமத்துப் பாலிலேயே காமம் என்னுஞ் சொல் 38 இடங்களில் ஆளப்பெறுகின்றது.

'இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு
அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கின்
காமக் கூட்டம் காணுங் காலை'
(களவியல், 1)

எனத் தொல்காப்பியத்தில் இச்சொல் வருகிறது.

'பொழுதிடை தெரியின் பொய்யே காமம்'
(குறுந்தொகை, 32)

'காமம் கைம்மிகின் தாங்குதல் எளிதோ'
(நற்றிணை, 39)

'மெய்யிற் றீரா மேவரு காமம்' (அகநானூறு, 28)
'காதற்காமம் காமத்திற் சிறந்தது' (பரிபாடல், 9)

எனச் சங்க இலக்கியங்களில் இச்சொல் பயின்று வரும். காமம் என்பது தமிழ்ச் சொல்லே யாதலானும் அது முந்தைய நூல்களில் ஆட்சி மிகுதி யுடைமையானும் காமம், இன்பம் இரண்டையும் வெவ்வேறு பொருளுடைய சொல்லாகக் கொண்டு காமத்தைக் காரணமாகவும் இன்பத்தைக் காரியமாகவும் (பயனாகவும்)

கூறுதலானும் இன்பம் என்னும் சொல் காம இன்பத்தை மட்டும் குறியாது பல்வகை இன்பத்திற்கும் பொதுப்பட நிற்றலானும் இன்பத்துப்பால் என வழங்குதலினும் காமத்துப்பால் என வழங்குதலே பொருத்தமுடைத்து. பழைய உரையாசிரியர்கள் அப் பெயரையே வைத்துள்ளமை கருதத்தகும்.

**காமத்துப்பாலின் இயல்கள்**

காமத்துப் பாலை மூவியல்களாகச் சிலர் கொண்டிருந்தனர் என்பது 'காமத்திறம் மூன்றெனப் பகுதி செய்து' (22) என்னும் திருவள்ளுவமாலை வெண்பாப் பகுதியால் பெறப்படும். இதனை மோசிகீரனார்,

ஆண்பாலேழ்; ஆறிரண்டு பெண்பால்; அடுத்தன்பு
பூண்பால் இருபாலோர் ஆறாக—மாண்பாய
காமத்தின் பக்கமொரு மூன்றாகக் கட்டுரைத்தார்
நாமத்தின் வள்ளுவனார் நன்கு (27)

என்னும் திருவள்ளுவமாலை வெண்பாவால் விளக்குவர். காமத்துப் பால் முதல் ஏழதிகாரங்கள் ஆண்பாற் கூற்று, அடுத்த பன்னிரண்டதிகாரங்கள் பெண்பாற் கூற்று, இறுதி ஆறதிகாரங்கள் இருபாற் கூற்று என்பது காமத்துப்பால் பாகுபாடு பற்றிய மோசிகீரனார் கருத்தாகும். பிரிவாற்றாமை அதிகாரத்துக்குமுன் தலைமகன் கூற்று முடிந்தது, இனித் தலைமகள் கூற்று வருமாறு என்றும் குறிப்பறிவுறுத்தல் அதிகாரத்தில் இருபாற் கிளவி வருமாறு, என்றும் காளிங்கர் கூறுதலான் மோசிகீரனார் கூறும் பாகுபாடு காளிங்கர் மேற்கொண்டது என அறியலாம். திருக்குறள் அதிகார அடைவு எனும் ஏடும்,

'காமத்துப் பால்கரு திருபத் தைந்ததில்
ஏமுறு மாண்பால் ஏழவை யன்றிப்
பெண்பால் ஆறிரண் டாம்பொது இருமூன்று'

என்று கூறி இப்பகுப்பையே சுட்டுகின்றது.

பரிப்பெருமாள் தகையணங்குறுத்தல் முதலாகப் புணர்ச்சி மகிழ்தல் ஈறாக அருமையிற் கூடலும் அதற்கு நிமித்தமுமாகிய அதிகாரம் மூன்றும் நலம்புனைந்துரைத்தல் முதலாகப் புணர்ச்சி விதும்பல் ஈறாகப் பிரிந்து கூடலும் அதற்கு நிமித்தமும் ஆகிய அதிகாரம் பதினெட்டும் நெஞ்சொடு புலத்தல் முதலாக ஊடல் உவகை ஈறாக ஊடிக்கூடலும் அதற்கு நிமித்தமுமாகிய அதிகாரம் நான்கும் ஆக இருபத்தைந்து அதிகாரம் கூறப்பட்டது என்பர்.

மணக்குடவர் காமத்துப்பாலில் உள்ள 25 அதிகாரங்களையும் குறிஞ்சி, பாலை, முல்லை, நெய்தல், மருதம் என்ற வரிசைப்படி ஒவ்வொரு திணைக்கும் 5 அதிகாரங்கள் அமைத்துள்ளதாகத் 'திருவள்ளுவர்' என்ற நூலில் திரு. செல்வக் கேசவராய முதலியார் கூறுகின்றார். அவர் மணக்குடவர் உரையாகக் காட்டும் பகுதி இன்று அச்சாகியுள்ள மணக்குடவர் உரையில் காணப்படவில்லை. சோழவந்தான் அரசஞ் சண்முகனாரும் காமத்துப் பாலை மேலே கூறியவாறு ஐந்தாகப் பிரிப்பதுண்டு எனக் குறிப்பிடுகின்றார்.

மணக்குடவர் ஆண்பாலியலாகக் குறிப்பறிதல், புணர்ச்சியின் மகிழ்தல், நலம்புனைந்துரைத்தல் என்ற மூன்றையுமே குறிப்பர். பெண்பாலியலாக அலரறிவுறுத்தல் முதல் அவர்வயின் விதும்பல் ஈறாக உள்ள 13 அதிகாரங்களோடு பின்வரும் நெஞ்சொடு புலத்தல், புலவி, புலவி நுணுக்கம் என மூன்றையும் கூறி 16 எனக் கொள்வர். இருவர் பாலியலாகத் தகையணங்குறுத்தல், காதற் சிறப்புரைத்தல், நாணுத்துறவுரைத்தல், குறிப்பறிவுறுத்தல், புணர்ச்சிவிதும்பல், ஊடலுவகை என்ற ஆறையும் குறிப்பர்.

ஆண்பாலியல் முதலாகக் கொண்ட மூவகைப் பாகுபாடும் குறிஞ்சி முதலாகக் கொண்ட ஐந்திணைப் பாகுபாடும் பொருத்த மாகப் படவில்லை. தகையணங்குறுத்தல் ஆண்பாற் கூற்றுக்கே சிறப்பினது. மணக்குடவர், பரிப்பெருமாள், காளிங்கர் கொண்ட இயற்பாகுபாட்டினும் களவு, கற்பு எனப் பகுத்துக் கொண்டு தகையணங் குறுத்தல் முதலாக அலரறிவுறுத்தல் ஈறாக உள்ள ஏழதிகாரங்கள் களவின்பாற்படும் என்றும் பிரிவாற்றாமை முதலாக ஊடலுவகை ஈறாக உள்ள பதினெட்டதிகாரங்கள் கற்பின் பாற்படும் என்றும் பரிமேலழகர் கொண்ட இயற்பாகுபாடு பொருத்தமுடையது.

**அதிகார வேறுபாடு:**

பரிமேலழகர் குறிப்பறிதல் (110) புணர்ச்சி மகிழ்தல் (111) கண்விதுப்பழிதல் (118) அவர்வயின் விதும்பல் (127) எனக் கொண்ட அதிகாரப் பெயர்களைக் குறிப்புணர்தல், புணர்ச்சியின் மகிழ்தல், கண்விதுப்பழித்தல், அவர்வயின் விரும்பல் எனக் காளிங்கர் சிறு வேறுபாடு தோன்றக் கொள்வர்.

மணக்குடவர், பரிப்பெருமாள், காளிங்கர் ஆகிய மூவரும் 'புலத்தலிற் புத்தேள் நாடுண்டோ' (1323) என்பதை இறுதிக் குறளாகக் கொள்ளப் பரிமேலழகர் 'ஊடுதல் காமத்திற் கின்பம்' (1330) என்பதை இறுதிக் குறளாகக் கொண்டுள்ளார்.

தனிப்படர் மிகுதியில் உள்ள 'நசைஇயார் நல்கார் எனினும்' (1199) என்னுங் குறளைக் காளிங்கர் நினைந்தவர் புலம்பல் என்ற அதிகாரத்தின் இறுதிக் குறளாகக் கொண்டுள்ளார். இங்கு அவர், அவர்வயின் விரும்பல் என்ற அதிகாரத்துள்ள 'உரனசைஇ உள்ளம்' (1263) என்ற குறளை அமைத்துள்ளார். நினைந்தவர் புலம்பலில் உள்ள 'விடாஅது சென்றாரை' (1210) என்னுங் குறளைக் காளிங்கர் அவர்வயின் விரும்பல் என்னும் அதிகாரத்து ஆறாவது குறளாகக் கொண்டுள்ளார். அவ்விடத்துத் தனிப்படர் மிகுதியின் 'வீழ்வாரின் இன்சொல் பெறாஅது' (1198) என்னும் குறளை வைத்துள்ளார். உரையாசிரியர்களிடையே காணப்பெறும் இம் மாற்றங்கள் நினையத் தகும்.

**உரையாசிரியர் இயல்பு:**

வ. உ. சி, நாகை தண்டபாணியார் முதலியோர் திருக்குறள் அறத்துப்பாலுக்கு மட்டுமே உரை எழுதியுள்ளனர். திரு. வி. க., கா. அப்பாத்துரையார் போன்றோர் அறத்துப்பால் முழுமைக்குமன்றிச் சில அதிகாரங்கட்கே விரிவான விளக்கம் வரைந்துளர். காமத்துப் பாலுக்கும் அவர்கள் உரை எழுதும் வாய்ப்புக் கிடைத்திருக்குமேல் நல்ல பல செய்திகளை நாம் அறிந்திருப்போம்.

திருக்குறளுக்குக் கிடைக்கும் உரைகளுள் காலத்தால் முந்தியது மணக்குடவர்உரை. அஃது எளிமையானது. பலநல்ல பாடவேறுபாடுகளைக் கொண்டது. பெரும்பாலும் குறள் கருத்தினை ஒட்டிச் செல்வது. பரிப்பெருமாள் உரை மணக்குடவர் உரைக்கு விளக்கம்போல் இருப்பினும், சில குறளுக்கு வேறுபட்ட உரையும் உண்டு. பரிதி உரை நேரே மூலத்தோடு பொருந்தி வாராது. கருத்து வாங்கி வழக்கு நடையில் எழுதப்பட்டுளது. சைவசமயச் சார்புடையது. சில குறளுக்கு நல்ல பாடமும் பொருத்தமான கருத்தும் அவ்வுரையிற் காணப் பெறும். காளிங்கர் உரை வினாவிடை நடையில் அமைந்துள்ளது. பாட வேறுபாடு மிகுதியாகக் காணப்பெறும், சமண் சார்பினது. பரிமேலழகர் உரை காலத்தால் பிந்தியதால் முன்னோர் உரைகளின் பல நலங்களையும் பெற்றுத் திகழ்கின்றது. ஒரோவழி, தமிழ்ப் பண்பாட்டைச் சுட்டிச் செல்லினும் வடநூற் சார்புடையது. குறளனைய சுருக்கமும் செறிவும் பெற்ற நடையினது.

கா. சு. பிள்ளை, மு. வ, சி. இலக்குவனார், ந. சி. கந்தையா மயிலை. சிவமுத்து, வ. சுப. மா, கி. வீரராகவன் முதலியோர் உரைகள் எளிய நடையில் சுருக்கமாக இருப்பினும், புதுக் கூறுகள் உடையன. கவிஞர் இறையரசன், கு. ச. ஆனந்தன் ஆகியோர் உரை புலவர் குழந்தை உரையின் போக்கில் பகுத்தறிவுப் பாதையில் நடப்பவை. தேவநேயப் பாவாணர், மதுரை இளங்குமரனார் உரைகள் தமிழ் மரபு தழுவியவை. ஆரியத் தழுவலுரையைக் கடிவன. முனைவர் மு கோ. வின் நயவுரை சில விடங்களில் ஏற்கத்தக்க நல்லுரையையும் விளக்கத்தையும் உடையது. நாமக்கல் கவிஞர் உரை முற்குறளுக்கும் வருங் குறளுக்கும் இயைபு காட்டித் தம் வாழ்க்கை யனுபவத்தை ஏற்றிப் பார்ப்பதால் புதிய உரை என அவர் வைத்த பெயருக் கேற்ப அந்நூல் பொருத்தமாக உள்ளது.

குறளுக்கெழுந்த ஒவ்வோர் உரையும் ஒவ்வொரு வகையில் தனிச் சிறப்பினது. விளக்கும் வகை, நயங்காட்டல், காலத்துக் கேற்பப் பொருத்தியுரைத்தல், இன்னபிற கூறுகளை அவ்வுரைக் கிடையே காணலாம். ஆதலின், புலமை நாட்டம் உடையவர் அனைத்துரைகளையும் ஆராய்ந்தறிதல் நன்று.

**பதிப்புக் குறிப்புக்கள்:**

சொற்களைப் பிரிக்கின்ற வகையிலும் உரை வேறுபடுதலின், குறள் மூலம் பிரிக்கப் பெறவில்லை. பரிமேலழகர் உரைக்கு வேறுபடும் ஓர் உரையையே பலர் எழுதி யிருப்பின், காலத்தால் முந்தியவர் பெயரால் அவ்வுரை சுட்டப் பெறும். உரை யாசிரியர்களின் சிறப்புரை முழுவதும் இப்பதிப்பிற் சேர்க்கப்பெற வில்லை. வேற்றுமை விளக்கத்துக்கு வேண்டும் சிறப்புப் பகுதி களையே காணலாம். அடிப்படையான வேற்றுமை உரைக் கிடையே இன்றெனினும், தெளிவான விளக்கத்துக்காகச் சில பகுதிகள் சேர்க்கப்பட்டுள. உரை வேற்றுமையின்றிச் சில தனிச் சொற்களுக்கு நயந் தோன்ற எழுதிய சிறு குறிப்புக்களும் விளக்கங்களும் இடம் பெற்றுள. பொருள் சிறவா முறையில் கண்ணழித்துக் கொண்ட உரைப் பகுதிகள் விடப்பட்டன.

முன்னைய பால்களிற் காணப்பெறும் பாடவேறுபாடுகளும் உரைவேறுபாடுகளும் அன்றி வேறுவகையான வேற்றுமை களையும் இக்காமத்துப் பாலிற் காணலாம். இப்பாலில் வரும் குறள்கள் எல்லாம் ஆசிரியர் கூற்றாக அன்றி அகத்திணைக் கிளவிக்குரியார் கூற்றாக வருதலின் கூற்று வேறுபாடு, களவு கற்பு என்னும் கைகோள் வேறுபாடு, துறையமைப்பு வேறுபாடு முதலிய எல்லாம் இப்பாலுக்கே உரியவாகும். துறையால் மட்டும் வேறுபடும் குறளும் இப்பதிப்பில் இடம் பெறும்.

இந்நூலில் பிறர்உரை என்று சுட்டப் பெறுவது பரிமேலழகர் உரையில் கண்டதே. அவ்வுரைக்குரியார் யாவர் என அறிய வியலவில்லை. அது நாம் தேடிப் பெறவேண்டும் பழைய உரை யாகவோ, பரிமேலழகர் கேட்டறிந்ததாகவோ இருக்கலாம்.

## முடிநிலை:

உரையாசிரியர்கள் பல்வேறு கருத்துக்களை ஒரு குறளுக்கு உரையாகக் கூறியிருப்பினும், வள்ளுவர் ஒரு கருத்தினைக் கருதியே அக்குறளை யாத்திருப்பர். அவர் கருதிய கருத்து யாது என்பதைக் குறளின் நடை ஒப்புமை, குறளின் சொல்லாட்சி, முன்னைய இலக்கிய மரபுகள், இலக்கண நெறிமுறை, சமயச் சார்பு, அரசியற் சார்பு, கொள்கை முனைப்பு முதலிய இன்மை ஆகிய நெறிமுறைகளைக் கடைப்பிடித்து முடிநிலைப் பகுதி கூறுகின்றது. அது பாடவேறுபாடுகளைச் சுட்டிக் காட்டுவதோடு எப்பாடம் சிறந்தது என்பதைத் தக்க ஏதுவால் நிலை நாட்டுகின்றது. உரையைக் கொண்டு புதிய பாடங்களையும் உய்த்துணர்ந்து கூறி அதன் வன்மை மென்மைகளை ஆராய்கிறது. இவ்வுரை வலிந்து கூறப்படுவது; இஃது இலக்கண முரணுடையது; இஃது அதிகாரக் கருத்தோடு மாறுபடுகின்றது; இன்ன காரணத்தால் இவர் உரையினும் இவர் உரை சிறந்தது என்பன போன்ற பல கருத்துக்களை முடிநிலையிற் காணலாம்.

குறளின் முற்பகுதிக்கு ஒருவர் உரையும் பிற்பகுதிக்கு ஒருவர் உரையும் பொருத்தமாகக் காணப் பெறின், அவ்விருவர் உரைப் பகுதிகளையும் இயைத்துக் காட்டிய நல்லுரைகளும் இப்பதிப்பின் கண் உள. உரையாளர் தம் உரைகளுட் சில நடைப் போக்குக் காரணமாகக் கருத்தைத் தெளிவுற விளக்குவனவாக அமைந்தில. அவ்விடங்களில் அவர் கருத்து இதுவாகலாம் எனக் காட்டி உள்ளேன். சில குறளுக்கு எனக்குப் பட்டதையும் இது பொருளாகலாம் என முடிநிலையிற் குறிப்பிட்டுள்ளேன்.

தொல்காப்பிய அகத்திணைத் துறைகட்குச் சில குறள்களைக் காட்டாக உரையாசிரியர்கள் தந்துள்ளனர். அன்னார் கொண்ட துறைகளுட் சில முடிநிலையிற் குறிக்கப்பட்டுள. சில குறள்களுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட துறைகள் பொருத்தமாகக் காணப்பெறின், துறைபற்றிய முடிநிலை இராது. விளக்க அளவில் வேறுபட்ட குறள்களுக்கும் முடிநிலை கூறப்படவில்லை.

ஒரு சொல்லுக்கு அல்லது தொடருக்குக் கூறப்பெற்ற பல பொருள்களும் கொள்ளத் தக்கனவாகத் தோன்றின், அவை முடிநிலைப் பகுதியில் தொகுத்து மட்டும் காட்டப் பெற்றிருக்கும். பிறர்தம் கருத்தைப் பொருத்தமாக மறுத்துரைக்கும் உரையாசிரியர்களின் கருத்துக்களையும் முடிநிலையிற் சுட்டியுள்ளேன்.

முடிநிலையிற் கூறுங் கருத்து எல்லோருக்கும் உடன்பாடாக இருக்கும் என்று நான் எண்ணவில்லை. உரைவேற்றுமையைப் பயின்ற அறிஞர் பெருமக்கள் ஒரோவழிக் கருத்து வேறுபடின், அதனைக் காரணத்தோடு எனக்குத் தெரிவிப்பின், அன்னார்தம் கருத்துக்களை நன்றி யறிதலோடு ஏற்றுப் போற்றுவேன். அஃது அடுத்த பதிப்பின் செம்மைக்கும் உதவும்.

## நன்றியுரை:

'திருக்குறள் உரைவேற்றுமை' என்னுந் தலைப்பில் நூல் தோன்ற அடிப்படைக் காரணராக அமைந்து அதன் செப்பத்திற்குப் பல்லாற்றானும் உதவி நெறிப்படுத்திய என் பேராசிரியப் பெருந்தகை, செம்மல், மூதறிஞர், அமரர் வ.சுப. மாணிக்கனார்க்கு என்றும் நன்றியன்.

திருக்குறள் உரைவேற்றுமையில் தம் உரைகள் இடம்பெற உதவிய கவிஞர் இறையரசன், திருவாளர்கள் ஆனந்தன், மு. கோவிந்தசாமி, கி. வீரராகவன், இளங்குமரன், இரா, அருளப்பா, அ.மு. பரமசிவானந்தம், நா. இராமையாபிள்ளை, இரா. முத்து முதலியோர்க்கு என் நன்றி உரியது.

முதறிஞர் தண்டபாணி தேசிகர் இயற்றிய திருக்குறள்-உரைவளம், திருக்குறள்-உரைக்களஞ்சியம் என்னும் நூல்கள் இவ்வுரை வேற்றுமை நூலுக்கு உறுதுணையாயிருந்தன. ஆகவே, அன்னார்க்கு என் நெஞ்சார்ந்த நன்றி.

திருக்குறள் ஆய்வகம் தோற்றுவித்து இடையறாது தமிழ்ப்பணி புரிய வழிவகுத்த தமிழக அரசின் முன்னாள் முதலமைச்சர் **பேரறிஞர் அண்ணா** அவர்களுக்கும் தமிழ் நாளும் தழைத்தோங்க வழிவழிச் சிறந்த தொண்டாற்றி வருகின்ற செட்டிநாட்டரசர் குடும்பத்தின் தோன்றல் அண்ணாமலைப் பல்கலைக் கழக இணை வேந்தர், டாக்டர் **மு.அ.மு. இராமசாமி** அவர்களுக்கும் என் உளமார்ந்த நன்றி.

'நகல்வல்ல ரல்லார்க்கு மாயிரு ஞாலம் பகலும் பாற்பட்டன் றிருள்' என்னும் குறளை உளங்கொண்டு யாவரிடத்தும் அகனும் முகனும் மலரக் கலந்து உரையாடும் இயல்பினர் நம் மாண்பமை துணை வேந்தர், முனைவர் **தி.சி. மோகன்** அவர்கள். எவ்விலக்கியத்தையும் புதிய நோக்கில் பார்க்கும் அறிவுத் திறலினர். என் பணிக்கு வேண்டிய உதவிகளையெல்லாம் உளமுவந்து செய்து வருபவர். அவர்கள் தம் பல்வேறு அலுவல்களுக்கிடையே என் பணியினைப் பாராட்டி, வாழ்த்தி, நல்லதொரு அணிந்துரை நல்கியதைப் பெரும் பேறாகக் கருதி என் நன்றியினையும் வணக்கத்தினையும் புலப்படுத்திக் கொள்கின்றேன்.

தமிழியல்துறைத் தலைவர், கலைமாமணி, முனைவர் **ஆறு. அழகப்பனார்** என்பால் பேரன்பு கொண்டவர். எனக்குப் பணிக்காலத்தை நீட்டித்து, வேண்டிய உதவிகளையெல்லாம் குறிப்பறிந்து செய்து, மேலும் பணிபுரிய வழிவகுத்தவர். அவர்தம் உறுதுணையால்தான் திருக்குறள் உரை வேற்றுமை மூன்றுபாலும் இத்துணை விரைவில் வெளிவந்தன. அவர் இந்நூலின் முடிநிலைப் பகுதியினை ஆழ்ந்து நோக்கி, அதன் சிறப்புக்களைப் புலப்படுத்தி, அரிய பதிப்புரை வழங்கியுள்ளார். அன்னார்க்கு என் உளமார்ந்த நன்றி.

இந்நூல் விரைவில் வெளிவர உதவிய பதிப்புத்துறைப் பொறுப்பாளர் திரு. வெ. இலக்குமணன் அவர்களுக்கும் என் நன்றி உரியது. இந்நூலுக்குரிய படிகளை எழுதியும் ஒப்பு நோக்கியும் ஆராய்ச்சி உதவியாளராகப் பணியாற்றிய திரு. வை. விநாயகம் எம்.ஏ ,எம்.பில் அவர்களுக்கு என் பாராட்டும் வாழ்த்தும் உரிய. இந்நூலைச் செம்மையாக அச்சிட்டுத் தந்த சிதம்பரம் அபர்ணா அச்சகத்தார்க்கும் என் நன்றி உரித்தாகுக.

அண்ணாமலைநகர்
28—4—92

இரா. சாரங்கபாணி

# சுருக்க விளக்கம்

| | |
|---|---|
| அ. கு. ஆ: | அ.கு. ஆதித்தனார். |
| அ. மு. ப: | அ.மு. பரமசிவானந்தம். |
| அருணா; மு. ரா. அ: | மு. ரா. அருணாசலக் கவிராயர். |
| இளங்: | மதுரை. இளங்குமரன். |
| இறை: | இறையரசன். |
| உ. வே. சா: | உ. வே. சாமிநாதையர். |
| கவிராச: | கவிராசபண்டிதர். |
| கா. சு. பிள்ளை: | கா. சுப்பிரமணிய பிள்ளை. |
| காளிங்: | காளிங்கர். |
| கி. வீ: | கி. வீரராகவன். |
| கு. ச. ஆ: | கு. ச. ஆனந்தன். |
| குழந்தை: | புலவர் குழந்தை. |
| கோ. சு. பிள்ளை: | கோ. சுப்பிரமணிய பிள்ளை. |
| சக்கர: | சக்கரவர்த்தி நயினார். |
| சாமி. சிதம்: | சாமி. சிதம்பரனார். |
| சி. இலக்: | சி. இலக்குவனார். |
| ஞா. மாணிக்: | ஞா. மாணிக்கவாசகன். |
| தண்ட: | ச. தண்டபாணிதேசிகர். |
| தெ. பொ. மீ: | தெ. பொ. மீனாட்சி சுந்தரனார். |
| தேவ: | ஞா. தேவநேயப்பாவாணர். |
| ந. சி. க: | ந. சி. கந்தையாபிள்ளை. |
| பரிதி: | பரிதியார். |
| பரிப்: | பரிப்பெருமாள். |
| பரிமே: | பரிமேலழகர். |
| பழைய: | பழைய உரை. |

| | |
|---|---|
| **பழைய (உ.வே.சா):** | பழைய உரை (உ. வே. சா. அடையாறு நூலகப்பதிப்பு) |
| **பி. சா. சுப்பிர:** | பி. சா. சுப்பிரமணிய சாத்திரியார். |
| **பிறர் உரை:** | பரிமேலழகர் எடுத்துக்காட்டியவை |
| **பூ. அமிர்த:** | பூ. அமிர்தலிங்கனார். |
| **மணக்:** | மணக்குடவர். |
| **மயிலை. சிவ:** | மயிலை. சிவமுத்து. |
| **மு. க:** | கலைஞர். மு. கருணாநிதி. |
| **மு. கோ:** | மு. கோவிந்தசாமி. |
| **மு. ரா. க:** | மு. ரா. கந்தசாமிப் பிள்ளை. |
| **மு. வ:** | மு. வரதராசனார். |
| **வ. சுப. மா:** | வ. சுப. மாணிக்கனார். |
| **வரத:** | திருச்சி. கோ. வரதராசனார். |
| **வெ. இராம:** | நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை. |
| **வை. மு. கோ:** | வை. மு. கோபால கிருட்டிணமாச்சாரியார் |

# திருக்குறள் உரைவேற்றுமை

## காமத்துப்பால்

### இயல் விளக்கம்

| | | | | |
|---|---|---|---|---|
| களவியல். | அதிகாரம் | 109— 115 | = | 7 |
| கற்பியல். | அதிகாரம் | 116—133 | = | 18 |
| | ஆக அதிகாரங்கள் | | = | 25 |

# 109. தகையணங்குறுத்தல்.

அஃதாவது பொழில்விளையாட்டு விருப்பான் ஆயம் நீங்க அதன்கண் தமியளாய் நின்றாளை, வேட்ட விருப்பான் இளையார் நீங்கத் தமியனாய் வந்து கண்ணுற்ற தலைமகன் அவள் வனப்புத் தன்னை வருத்த முறுவித்தலைச் சொல்லுதல். இது கண்ணுற்ற பொழுதே நிகழ்வதாகலின், முதற்கண் கூறப் பட்டது என அதிகார விளக்கம் தருவர் பரிமேலழகர்.

தகையணங்குறுத்தலாவது தலைமகனும் தலைமகளும் எதிர்ப்பட்ட இடத்துத் தலைமகளது கவின் தலைமகனை வருத்துதலும் தலைமகனது கவின் தலைமகளை வருத்துதலும், இது முதலாகக் காமம் நிகழுமாதலின் இது முற்பாடு கூறப்பட்டது என விளக்கந் தருவர் பரிப்பெருமாள்.

தகையணங்குறுத்தலாவது நாயகியை நாயகன் கண்டு அனுபவித்தல் என்பர் பரிதியார்.

இவ்வாறு பொருட்பகுதி உணர்த்தி மற்று இதன் பின்னரே காமப்பகுதி உணர்த்துவான் எடுத்துக் கொண்டார். அவற்றுள் இது தகையணங்குறுத்தல் என்பது; மற்று இதனால் காட்சி முதலாகிய வகையியற் கைக்கிளை காட்டுகின்றது என அதிகார விளக்கம் தருவர் காளிங்கர்.

இவ்வதிகாரத்தைக் காளிங்கர் போலவே காட்சி, ஐயம், தெளிதல், குறிப்பறிதல் ஆகிய நான்கும் அடங்கிய கலவைத் துறை எனக் கொள்வர் பாவாணர்.

தகையணங்குறுத்தல் தலைவன் தலைவி ஆகிய இரு பாலார்க்கும் உரியதாகக் கொள்வர் தண்டபாணிதேசிகர்.

தலைமகளது வனப்பு தன்னை வருத்தியதாகக் கூறுவதே மரபாதலானும் இவ்வதிகாரத்துள்ள பத்துக் குறள்களும் அவ்வாறே தலைமகனது கூற்றாய் வருதலானும் தலைமகனது கவின் தலைமகளை வருத்துதல் என்பது பொருந்தாது என்பர் கு. சுந்தரமூர்த்தி. அக்கருத்து ஒக்கும்.

**1081. அணங்குகொ லாய்மயில் கொல்லோ கனங்குழை
மாதர்கொல் மாலுமென் னெஞ்சு.**

**பரிமே:**

*[தலைமகள் உருவு முதலியன முன்கண்டறிவன அன்றிச் சிறந்தமையின் அவளைத் தலைமகன் ஐயுற்றது].*

இக் கனவிய குழையை யுடையாள், இப்பொழிற்கண் உறைவாளோர் தெய்வ மகளோ, அன்றி யொரு மயில் விசேடமோ அன்றி யொரு மானுட மாதரோ, இவளை இன்னள் என்று துணியமாட்டாது என் நெஞ்சு மயங்காநின்றது.

கனங்குழை—ஆகுபெயர். கணங்குழை என்று பாடமோதிப் பலவாய்த் திரண்டகுழை என்று உரைப்பாரும் உளர்.

**பரிப்:**

இக் கணங்குழையை யுடையவள் தெய்வங் கொல்லோ, நல்லதோர் மயில் கொல்லோ, அன்றி மக்களுள்ளாள் கொல்லோ. என என்மனம் மயங்காநின்றது. இவற்றுள் யாதோ எனக்குத் தெரிகின்ற தில்லை என்றவாறு ஆயிற்று.

கணங்குழை—ஆகுபெயர். ஆய்தல் என்பது தெரிதல்; பலவற்றினுந் தெரியப்படுதலின் நல்லது என்று பொருளாயிற்று. மக்களுந் தேவரும் ஒரு நீர்மையர் ஆதலின், தெய்வமோ மக்களோ என்று ஐயுறுக; மயிலோ என்றது என்னை? எனின், இம் மணம் காந்தருவம் அன்றே, தலைமகளைத் தலைமகன் எதிர்ப்படுங்கால் யாரும் இல்லாததோர் பொழிலகத்தே எதிர்ப் படுதல் வேண்டும். ஆயிடை எதிர்ப்பட்ட தலைமகள் இப்பெற்றி யாள் இவ்விடைத் தனி வருதல் கூடாதாகலான், ஈண்டு உறைவதோர் தெய்வமோ என்று ஐயுற்றான். அதன்பின் பொழிலகத்து வாழ்வன மயில்கள் பலவுமுள; அவற்றுள் இஃதொரு மயில் விசேடமோ என்று ஐயுற்றான் என்று கொள்ளப்படும். இதனுட் காட்சி சொல்லி ஐயம் சொல்லுதல் அன்றே இலக்கணம். அது கூறாதது என்னை எனின், கண்ட காலத்துப் புணர்ச்சி வேட்கை தோற்றுகையும் தோற்றாமையும்

நிகழுமாதலான் அதனை ஒழித்து அதற்குக் காரணமாகிய ஐயம் முதலாகச் சொன்னார் என்க. இது தலைமகன் தலைமகளை எதிர்ப்பட்டுழி ஐயுற்றது.

கணங்குழை என்பது இவர் பாடம்.

**பரிதி:**

தெய்வ மகளோ, நடமாடும் மயிலோ, கனத்த குழையுடைய பூமகளோ என்றன் சிந்தையை மயக்கிற்றவள்.

**தண்ட:**

குழை வாயிலாக அணிந்தாளை மனங்கொண்டு வினவுவனாயின் அவற்குப் பின் ஐயந்தோன்றக் காரணமில்லை. அங்ஙனம் தோன்றுமேனும், சூழலும் சாயலும் பற்றி ஆய்மயில் கொல்லோ என ஐயுற முடியாது; மயில் குழை யணியாது என்பது துணிவாதலின். ஆதலால், கனங்குழை மாதர் என ஒரு தொடராக்கி உரைத்தலும் உண்டு. இவ்வுரைக்குத் தோன்றுகின்ற உரு என எழுவாய் வருவித்துரைக்க.

**மு.கோ:**

'சூரர மகளிர் ஆரணங்கினரே' என்ற பாடலால் அணங் குடையவர் அரமகளிர் என்றாகின்றது. வரையர மகளிர்-மலை மகளிர். (இமயமலை) வடநாட்டுப் பெண்டிராகலாம்.

(இலக்கியங்கள் காட்டும் குறளுரை. ப, 76)

**கனங்குழை மாதர்கொல்** என்பதற்குத் திரண்ட கூந்தலை யுடைய மாதோ என உரைப்பர் இளங்குமரன்.

**முடிநிலை:**

'கணங்குழை' என்னும் பரிப்பெருமாள் பாடம் எதுகை நயமுடையது. கனங்குழை மாதர் எனப் பரிதி ஒரு தொடராக்கி உரைத்தல் காண்க. இக்குறட்கு எழுவாய் வேண்டும் என்னுங் கருத்தால் பரிமேலழகர் கனங்குழை மாதர்கொல் என்ற தொடரில் கனங்குழை என்பதனைப் பிரித்து அதனை ஆகுபெயராகக் கொண்டுஎழுவாய் கூறுவர். கனங்குழையாள் என எழுவாய் கூறின்

தண்டபாணியார் மேற்காட்டியாங்குத் தலைமகனுக்கு வேறு ஐயங்கள் தோன்றியனவாகக் கூறுவதில் பொருளில்லை. ஆதலின் தான் கண்ட வடிவு அணங்கோ? ஆய்மயிலோ? குழையுடைய பெண்ணோ எனப் பொருள் கூறி எழுவாய் வருவித்துரைப்பதே பொருந்தும். பரிப்பெருமாள் உரையில் சில தடைகளை எழுப்பி விடை கூறுதல் நயமுடைத்து. அணங்கு என்பதற்கு அரமகளிர் என உரைத்துப் பின் வடநாட்டுப் பெண்டிராகலாம் எனக் கூறும் மு.கோ. உரை இயல்பில்லை. குழை என்பதற்குக் கூந்தல் எனப் பொருள் காணும் இளங்குமரனார் உரையும் அன்னதே. கனம் என்னும் அடை கூந்தலுக்கு இயல்பில்லை.

**1082. நோக்கினா ணோக்கெதிர் நோக்குத றாக்கணங்கு
தானைக்கொண் டன்ன துடைத்து.**

**பரிமே:**

[மானுட மாதராதல் தெளிந்த தலைமகன் அவள் நோக்கி னானாய வருத்தங் கூறியது.]

இப்பெற்றித்தாய வனப்பினை யுடையாள் என்னோக்கிற் கெதிர் நோக்குதல், தானே தாக்கி வருத்துவதோர் அணங்கு தாக்குதற்குத் தானையையுங் கொண்டு வந்தாற் போலுந் தன்மையை யுடைத்து.

**மணக்:**

தெய்வத்திற்கு உவமை வடிவு. தானைக்கு உவமை நோக்கம். இது மெய்கண்டு வருந்துவான் கண் கண்டதனால் வருத்தம் மிக்கது கூறியது.

**பரிதி:**

பார்த்த பார்வைக்கு எதிராகப் பார்த்த பார்வை தாக்கப்பட்ட அணங்காகிய தெய்வப் பெண்ணின் கூட்டத்தைக் கண்டதற்கு ஒக்கும்.

'தானைக் கண்டன்ன தகைத்து' என்பது இவர் பாடம்.

**காளிங்:**

கண்ணுக்கு இனிதாகிய மிக்க அழகினையுடையாள் நாட்டத்து எதிர்நோக்குந் தன்மை, நெஞ்சே! எத்தன்மைத்தோ எனின், அனைத்துயிரையும் விதி வழி வந்து தாக்குவதாகிய கூற்றுப் பின்னும் தன்திறல் போதாமல் சேனையும் கொண்டு வந்த அவ்வொப்புடைத்தென்று இங்ஙனம் வருந்தித் தலைமகன் தன் நெஞ்சிற்குச் சொல்லியது.

**பிறர் உரை:**

'நோக்கினாள்' என்பதற்கு என்னால் நோக்கப்பட்டாள் என்று உரைப்பாருமுளர்.

**பழைய: (உ.வே.சா.)**

மானிடமாதராகத் தெளிந்த தலைவன் சொல்லியது. மிகுந்த வனப்பினை உடையாள் என் நோக்கிற்கு எதிரே நோக்குதல் தாக்கி வருத்துவதோர் அணங்கு தாக்குதற்கு வாளினையுங் கூடக் கொண்டு வந்தாற் போலும் தன்மையுடைத்து. தான் பார்க்க அவள் பார்த்தது வெட்டுதற்கு ஆயுதங் கொண்டது போலுங் கண்கள் என்றது. தாக்கணங்கு-போர் செய்யுந் தெய்வப் பெண். தானை-படை.

**மு.வ:**

நோக்கிய அவளுடைய பார்வைக்கு எதிரே நோக்குதல், தானே தாக்கி வருத்தும் அணங்கு ஒரு சேனையையும் கொண்டு வந்து தாக்கினாற் போன்றது.

**வெ. இராம:**

அவளைப் பார்த்த என் பார்வைக்கு எதிர்பார்வை அவள் பார்த்தாள். அந்தப் பார்வை நான் பார்த்ததிலேயே என்னைத் தாக்கிய அவளுடைய அழகு இப்போது தானே (கண்ணாகிய வேல்) ஆயுதத்தைக் கொண்டும் தாக்குவது போன்ற தன்மை யுடையதாக இருக்கிறது.

தாக்கணங்கு–தாக்கிய அணங்கு; அதாவது அவள் என்னைப் பார்ப்பதற்கு முன்னால் நான் அவளை முதலில் பார்த்த உடனேயே என்னைத் தாக்கி மயங்கச் செய்த அழகு. அணங்கு-அழகு; தானை என்பது எல்லா ஆயுதங்களுக்கும் பொதுப்பெயர். இங்கு வேலாயுதத்தைக் குறிக்கிறது.

இக்குறளைப் புகுமுகம் புரிதல் என்ற மெய்ப்பாட்டின தென்பர் நச்சினார்க்கினியர்.

'நோக்கினால் நோக்கெதிர்' என்றும் பாடம் என்பர் **கி.வீ.**

**முடிநிலை;**

நோக்கினாள் என்பதற்கு வனப்பினை உடையாள், நோக்கப்பட்டாள், நோக்கிய அவள் என உரைகள் பல உள. என்னைப் பார்த்தவள் என்று கருத்தோட்டமாகப் பொருள் கொள்ளுதல் நன்று. நோக்கு என்பது தலைவி மேற்றாகவும் எதிர்நோக்குதல் என்பது தலைவன் மேற்றாகவும் மு.வ. உரையில் காணப்படும். எதிர் நோக்குதலைத் தலைவிக்கு உரியதாகக் கொள்ளுதலே அகப்பொருள் மரபு. எதிர் நோக்குதலைத் தலைவனுக்குரியதாக்கிக் கூறின், 'தாக்கணங்கு தானைக் கொண்டன்ன துடைத்து' என்னும் உவமையொடு பொருந்து மாறில்லை. 'அணங்கு' என்பதற்கு வருத்தும் தெய்வப்பெண், கூற்று, அழகு என்னும் பொருள்களுள் வருத்தும் தெய்வப் பெண் என்னும் பொருளே அமைவுடையது. அணங்கை ஒரு பெண் பாலாகக் கொள்வதே **வழக்கு.** 'அணங்கு கொல் ஆய்மயில் கொல்லோ' [1081] 'ஆயுமறிவின ரல்லார்க் கணங்கென்ப' [981] என்று ஏனையிடத்து வரும் ஆட்சி காண்க. 'தானை' என்னும் சொற்கு வாள் என்றோ, வேல் என்றோ ஒரு தனிக் கருவியாகப் பொருள் கொண்டுரைப்பது ஏலாது. பரிதியின் உரை வேறுபாட்டிற்குத் **'தானைக் கண்டன்ன தகைத்து'** என்னும் பாடவேறுபாடே காரணமாகும். 'நோக்கினால் நோக்கெதிர் நோக்குதல்' என்னும் பாடம் சிறப்பில்லை, 'நோக்குதல்' என்பதிலே நோக்கினால் நோக்குதல் என்பது அடங்குதலான்.

**1083. பண்டறியேன் கூற்றென் பதனை யினியறிந்தேன்
பெண்டகையாற் பேரமர்க் கட்டு.**

**பரிமே:**

(மானுட மாதராதல் தெளிந்த தலைமகன் அவள் நோக்கினானாய வருத்தம் கூறியது.)

கூற்றென்று நூலோர் சொல்வதனைப் பண்டு கேட்டறிவதல்லது கண்டறியேன். இப்பொழுது கண்டறிந்தேன்; அது பெண்டகையுடன் பெரியவாய் அமர்த்த கண்களை யுடைத்து.

பெண்தகை—நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு என்னும் குணங்கள். அமர்த்தல்—அமர்செய்தல்.

**பரிதி:**

கூற்றுவன் என்பது பண்டறியேன்; இப்பொழுது அறிந்தேன், பெண் என்னும் உருவத்தினையுடைய கண்ணினால்.

'பேரமர்க்கட் பட்டு' என்பதிவர் பாடம்.

**முடிநிலை:**

அமர்த்த கண்பார்வையிற்பட்டு உழன்றமையின் கூற்றமென்பது அறிந்தேன் என ஏதுவோடு பொருள் கொள்ளக் கிடத்தலின், 'பேரமர்க்கட் பட்டு' என்று கொண்ட பரிதி பாடமும் தள்ளத்தக்க தன்று. 'சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு' (127) 'அவஞ் செய்வார் ஆசையுட் பட்டு' (266) 'மாணா மட நெஞ்சிற் பட்டு' (1297) என்னும் குறள்களும் 'பட்டு' என்னும் சீரான் இறுவது ஒப்பு நோக்குக.

**1084. கண்டா ருயிருண்ணுந் தோற்றத்தாற் பெண்டகைப்
பேதைக் கமர்த்தன கண்.**

**பரிமே:**

[மானுட மாதராதல் தெளிந்த தலைமகன் அவள் நோக்கினானாய வருத்தம் கூறியது.]

பெண்டகையை யுடைய இப்பேதைக்கு உளவாய கண்கள் தம்மைக் கண்டா ருயிருண்ணு ந் தோற்றத்துடனே கூடி அமர்த்திருந்தன.

பெண்டகை:- நாணம், மடம், அச்சம், பயிர்ப்பென்னுங் குணங்கள். அவை அவ்வக்குறிகளான் அறியப்பட்டன.

அமர்த்தல் - மாறுபடுதல். குணங்கட்கும் பேதைமைக்கும் ஏலாது கொடியவாய் இருந்தன என்பதாம்.

**மணக்:**

தம்மைக் கண்டவர்கள் உயிரை யுண்ணும் தோற்றத்தாலே பெண் தகைமையை யுடைய பேதைக்கு ஒத்தன கண்கள்.

அமர்தல்-மேவல். இது பேதையோடு ஒத்த தொழிலுடைத்து என்று கண்ணின் கொடுமையை உட்கொண்டு கூறியது.

**காளிங்:**

நெஞ்சே! இவ்விடத்து வந்து கண்டவராகிய நமது உயிர் பருகும் தன்மையே இவை இரண்டினுஞ் சாலப் புலப்படத் திகழ்வதால் இப்பெண்மை நலனும் பேதைமையும் உடையாட்கு இதனால் இயன்ற கண். எனவே, இரண்டும் ஒருவாற்றால் இத்துயர்க்கு ஒரு தண்ணளி செய்வன போலும் என்பது கருத்து.

**தண்ட:**

பெண்தகை-நாணம் முதலிய நான்கு. பேதைமை யென்பது அணிகலம் போல்வதாய் வேண்டியவழி மேற்கொள்ளப்பட்டு வேண்டாதவழி களையப்படும் குணம். இது அந்நான்கின் வேறாதலின் பெண்தகைப் பேதை எனப் பெண்ணைக் குறிப்பிட்டான்.

அமர்த்தன என்பதற்குப் போர் செய்கின்ற எனப் பொருள் காண்பர் வ.சுப.மா.

**அமர்ந்தன கண்** எனப் பழைய உரை (உ.வே.சா.) பாடம் கொள்ளும்.

முடிநிலை:

'அமர்த்தன' என்பதற்கு மாறுபட்டன என்னும் பரிமேலழகர் பொருளும் அவர்தரும் விளக்கமும் ஏற்புடைய. 'அமர்' என்பதற்குப் போர் என்பது பொருளாதலின், அமர்த்தன என்பதனைப் பெயரடியாகப் பிறந்த வினையாகக் கொண்டு அதற்குப் போர் செய்கின்றன எனப் பொருள் கூறும் வ.சுப.மா. உரையும் தகும். கண் தருகின்ற பெருந்துயரத்தைத் தலைவியின் பெண்ணலமும் பேதைமையும் ஒருவாறு தணிக்கின்றன என்று இயைபுபடுத்துக் கூறுவது காளிங்கர் உரைக் கருத்தாகும். அது சிறப்பில்லை.

**1085. கூற்றமோ கண்ணோ பிணையோ மடவரல்**
**நோக்கமிம் மூன்று முடைத்து.**

பரிமே:

[மானுட மாதராதல் தெளிந்த தலைமகன் அவள் நோக்கினானாய வருத்தம் கூறியது.]

என்னை வருத்துதலுடைமையாற் கூற்றமோ என்மேல் ஓடுதலுடைமையாற் கண்ணோ; இயல்பாக வெருவுதலுடைமையாற் பிணையோ? அறிகின்றிலேன். இம் மடவரல் கண்களின் நோக்கம் இம் மூன்றன் தன்மையையும் உடைத்தாயிரா நின்றது.

இன்பமுந் துன்பமும் ஒருங்கு செய்யாநின்ற தென்பதாம். தொழில் பற்றி வந்த ஐயநிலை யுவமம்.

மணக்:

கொடுமை செய்தலால் கூற்றமோ? ஓடுதலால் கண்ணோ? வெருவுதலால் மானோ? மடவரலே! நினது நோக்கம் இம்மூன்று பகுதியையும் உடைத்து.

இக்கொடிய புருவம் இவள்கண் என்னைத் துன்பஞ்செய்வதன் முன்னே அதனைக்கோடி மறைத்த தாயினும் அஃது அதனைக் கடத்தலும் உடையது. அதனால் அவற்றுள் யாதோ என்றவாறு. இது தலைமகள் குறிப்பறிதற் பொருட்டுத் தலைமகன் கூறியது.

**தண்ட:**

கண்ணைக் கண்ணோ என ஐயுறுதல் பொருந்துமோ எனின், இம்மடவரல் நோக்கம் மூன்று குணமுடைமையின் ஒடுங்குணம் ஒன்றே யுடைய கண்ணோ என ஐயுற்று, அதனின் வேறு இவள் நோக்கம் எனத் துணிதல் பொருந்தும் என்க.

***முடிநிலை:***

'மடவரல்' என்பதனை விளியாகக் கொள்வர் மணக்குடவர். இதுவரை தன் நெஞ்சிற்குக் கூறிவந்த தலைமகன் தலைவியை முன்னிலைப் படுத்திக் கூறியமையின், இது தலைவனது துணிவின் உச்சநிலை சுட்டும் என அதற்குத் தண்டபாணிதேசிகர் விளக்கம் தருவது கருதத் தகும். மணக்குடவர் 'கொடும் புருவங் கோடா மறைப்பின்' (1086) என்னும் அடுத்த குறளை முன் குறளாக முறைவைப்புக் கொண்டமையின் அதனோடு பொருத்தி விளக்கந் தந்துள்ளார். கண்ணோ என்பதற்குத் தண்டபாணி தேசிகர் தரும் விளக்கம் நயமுடைத்து. மடவரல் என்பதனை விளியாகக் கொள்ளாது படர்க்கைப் பொருளாகக் கொள்ளல் இயல்பாகும்.

**1086. கொடும்புருவங் கோடா மறைப்பி னடுங்கஞர்**
**செய்யல மன்னிவள் கண்.**

**பரிமே:**

(மானுட மாதராதல் தெளிந்த தலைமகன் அவள் நோக்கினானாய வருத்தங் கூறியது)

பிரியா நட்பாய கொடும்புருவங்கள் தாம் செப்பமுடையவாய் விலக்கினவாயின், அவற்றைக் கடந்து இவள் கண்கள் எனக்கு நடுங்குந் துயரைச் செய்ய மாட்டா.

**மணக்:**

வளைந்த புருவங்கள் தாம் செப்பமுடையனவாய் விலக்கின வாயின், இவள் கண்கள் அவற்றைக் கடந்துபோந்து எனக்கு நடுங்கும் துன்பத்தைச் செய்யலாற்றா.

இது மேல் தலைமகன் கூறிய சொற்கேட்டுத் தலைமகள் தலை இறைஞ்சிய வழி, கண்ணை மறைத்துத் தோற்றிய புருவமுறிவு கண்டு அவன் கூறியது.

**பரிப்:**

இக் கொடிய புருவம் இவள் கண்கள் என்னைத் துன்பம் செய்வதன் முன்பே கோடி மறைத்தனவாயின், அதனைக் கடந்து போந்து, எனக்கு நடுங்கப்படும் துன்பம் செய்ய லாற்றாவே அவை.

**காளிங்:**

இவளது கோடுதலுடைய புருவம் கோடாதவாய் மற்று அவ்வினை மறந்துளவாயின், நெஞ்சமே! யாம் இங்ஙனம் உள் நடுங்கு துயரம் செய்தல் இல்லை இவள்கண்.

**'மறப்பின்'** என்பது இவர் பாடம்.

**தண்ட:**

கூற்றென்பதனை யறிந்தேன் என்றவழித் தலைவி தலை குனிந்து நாணத்தால் புருவநெரித்து நின்றாள். அதனால் கருத்துணர்ந்த தலைவன், இயற்கையே கோடிய இவள் புருவம் நாணத்தால் கோடிக் கண்ணை மறைத்தது: அதனால் அஞர் செய்திலது என்றான் என்பர் எனக் கூறுவர்.

**சி. இலக்:**

'கோடா' என்பதற்கு மலையாக, கரையாக என்றும் பொருள் கொள்ளலாம். உயரமான ஒன்று இடையே நின்றால் பொருளைக் காண முடியாதன்றோ? ஆகவே, புருவம் கோடு, கரைபோன்று மறைக்கலாமே என்று தலைவன் கருதுகின்றான்.

(வள்ளுவர் கண்ட அறம் ப. 37)

**முடிநிலை:**

மணக்குடவர் மேலைக் குறளோடு தொடர்புபடுத்திக் கூறும் துறைவிளக்கம் நயமுடைத்து. 'கோடா' என்பதனை எதிர்மறை வினையெச்சமாகக் கொண்டு செவ்விதாக என உரை செய்வர் பரிமேலழகர். செய்யா என்னும் வாய்பாட்டு வினையெச்சமாகக் கொண்டு வளைந்து என உரை செய்வர் பரிப்பெருமாள். 'மறப்பின்' என்பது காளிங்கர் பாடம். இப்பாடம் சிறப்பில்லை. தண்டபாணி தேசிகர் காட்டும் பிறர் உரையில் 'மறைப்பின்' என்னும் செயின் என்னும் வாய்பாட்டு வினையெச்சத்திற்கு 'மறைத்தது. அதனால்' எனப் பொருள் கூறியிருத்தலின், அவ்வுரை பொருத்தமில்லை. 'கோடு என்பதற்கு மலை, கரை, என்று கூறும் பொருளும் ஈண்டு இயல்பில்லை.

**1087. கடாஅக் களிற்றின்மேற் கட்படாஅ மாதர்**
**படாஅ முலைமேற் றுகில்.**

**பரிமே:**

(அவள் முலைகளினாய வருத்தங் கூறியது)

இம்மாதர் படா முலைகளின் மேலிட்ட துகில் அவை கொல்லாமற் காத்தலின், கொல்வதாய மதக் களிற்றின்மே லிட்ட முகபடாத்தினை யொக்கும்.

கண்ணை மறைத்தல் பற்றிக் 'கட்படாம்' என்றான். துகிலான் மறைத்தல் நாணுடை மகளிர்க் கியல்பாகலின், அத்துகிலூடே அவற்றின் வெம்மையும் பெருமையுங் கண்டு இத்துணை யாற்றலுடையன இனி யெஞ்ஞான்றுஞ் சாய்வில வெனக் கருதிப் 'படாஅ முலை' யென்றான். உவமை சிறிது மறையாவழி உவை கொல்லு மென்பது தோன்ற நின்றது,

**மணக்:**

மதயானை முகத்துக்கண் மறைவாக இட்ட படாம் போலும், மாதரே நினது படாமுலை மேல் இட்ட துகில்.

**வெ. இராம:**

இந்த பெண்ணினுடைய திரண்டு மதர்த்து நிமிர்ந்திருக்கின்ற முலைகளின்மேல் அவளுடைய மேலாடை படிந்திருப்பது, மதமிகுந்த யானையின் மத்தகங்களின் மீது முகமூடிச் சீலை படிந்திருப்பது போல் அழகாக இருக்கின்றது.

படாமுலை— ஆடவன் கைபடாத முலை யெனினும் பொருந்தும்,

**தண்ட:**

முகபடாம் யானைக் கண்ணையும் சிறிது மறைத்துக் கேடு தவிர்த்தது போல முலைமேல் துகிலும் முலைக் கண்ணையும் மறைத்துக் காமநோயைத் தடுத்தது என்பதாம்.

**முடிநிலை:**

'மடவரல்' (1085) என்பதனை அண்மை விளியாகக் கொண்டது போலவே மணக்குடவர் இக்குறளில் வரும் 'மாதர்' என்பதனையும் அண்மை விளியாகக் கொண்டுள்ளார். உவமை விளக்கத்தில் உரைகளிடையே வேறுபாடு காண்க.

**1088. ஒண்ணுதற் கோஒ வுடைந்ததே ஞாட்பினு**
**ணண்ணாரு முட்குமென் பீடு.**

**பரிமே:**

[நுதலினாய வருத்தங் கூறியது.]

போர்க்களத்து வந்து நேராத பகைவரும் நேர்ந்தார் வாய்க் கேட்டு அஞ்சுதற் கேதுவாய என் வலி, இம் மாதரது ஒள்ளிய நுதல் ஒன்றற்குமே அழிந்து விட்டது.

மாதரென்பது அதிகாரத்தான் வந்தது. 'ஞாட்பினுள்' என்றதனாற் பகைவராதல் பெற்றாம். 'பீடு' என்ற பொதுமையான் மனவலியுங் காயவலியுங் கொள்க. 'ஓ' வென்னும் வியப்பின்கட் குறிப்பு அவ்வலிகளது பெருமையும், நுதலது சிறுமையுந் தோன்ற நின்றது. கழிந்ததற்கு இரங்கலின் தற்புகழ்த லன்றாயிற்று.

**பரிதி:**

சமர் பூமியிலே நண்ணாரை வெற்றிகொள்ளும் என் ஆண்மை, பிறைபோலும் நுதலிக்குத் தோற்றது.

**முடிநிலை:**

'நண்ணாரும் உட்குமென் பீடு' என்பதற்குப் பகைவர் வெருவ' வெற்றி கொள்ளும் ஆண்மை என்னும் பரிதியுரை மிக இயல்பானது. இதற்குப் பரிமேலழகர் கூறும் உரை நயமுடையது. 'கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும் வேட்ப மொழிவதாம் சொல்' (643) என்னும் குறள் நினைந்து இங்ஙனம் உரை வரைந்துள்ளார். ஒண்ணுதலிக்குப் பீடு உடைந்தது என உடையாள் மேல் வைத்துக் கூறும் பரிதி உரையினும் ஒண்ணுதலுக்கு உடைந்தது என உறுப்பின்மேல் வைத்துக் கூறும் பரிமேலழகர் உரையே பொருந்தும். இதுவே குறள் மூலத்துக்கும் உறுப்புக்கள் வருத்துவதாகக் கூறும் அதிகாரப் போக்குக்கும் இயைவதாம்.

**1089. பிணையேர் மடநோக்கு நாணு முடையாட்**
**கணியெவனோ வேதில தந்து.**

**பரிமே:**

(அணி நலத்தானாய வருத்தங் கூறியது.)

புறத்து மான்பிணை யொத்த மடநோக்கினையும் அகத்து நாணினையு முடையளாய இவட்கு ஒற்றுமை யுடைய இவ் வணிகளே யமைந்திருக்க வேற்றுமை யுடைய அணிகளைப் படைத்தணிதல் என்ன பயனுடைத்து?

'மடநோக்கு' வெருவுதலுடைய நோக்கு. இவட்குப் பாரமாதலும் எனக்கு அணங்காதலுங் கருதாமையின், அணிந்தார் அறிவில ரென்பதாம்.

**பரிப்:**

மேல் தலைமகன் கூடிய சொற்கேட்டு நாணுற்ற தலைமகள் வாளாது நிற்றல் ஆற்றாது தன் அணிகலனைத் தொட்டுழி, அதனை நோக்கி இத்தன்மையாட்கு இதனையும் அணிதல் வேண்டுமோ என்று தமரைக் கொடுமை கூறுவான் போல நலம் பாராட்டியது.

**காலிங்:**

நெஞ்சமே! தன் பெண்மை அழகு பேரொளி சிறத்தற்குப் பெடைமான் நோக்கனைய அழகும் மடப்பமும் சிறந்த நோக்கினது நலத்திற்கு இயல்பாகிய நாணினையும் தனக்கு உடையவளாகிய இவட்கு இனி வேறு சில தந்து அணிகின்ற அணி என்னையோ? எனவே நம்மை வருத்துகின்றது. மற்று இப்பிற வணியும் வந்து படைத்துணை செய்ய வேண்டுமோ என்று பின்னும் தன்னுறு துயரம் தன்னெஞ்சொடு கிளத்தல் கருத்து.

'**அணி எவனோ ஏதில தந்து**' என்பதற்கு உரை:

**வெ. இராம:**

காரணமில்லாத ஆபரணங்கள் எதற்காகவோ?
ஏதில – காரணமற்றவை; அனாவசியமானவை.

**வரத:**

தொடர்பில்லாத ஆபரணங்களால் அழகு செய்வது என்ன பயன் கருதி.

கண்ணுக் கணிகலமான கண்ணோட்டமும் பெண்ணுக் கணிகலமான நாணும் தொடர்புடையன; பிற அணிகலம் என்ன தொடர்பு? ஏன் அவை என்றான்.

**முடிநிலை:**

மேற்கண்ட உரைகளில் துறை வேறுபாடுகளைக் காணலாம். பரிப்பெருமாள் தலைமகன் தலைவியின் நலம் பாராட்டியதாகத் துறை கூறுவர். அங்ஙனம் கொள்ளாமல் தலைவியின் அணிகலன் தன்னை வருத்தியதாகத் தலைவன்

உரைப்பதாகக் கொள்ளும் துறை தகையணங் குறுத்தல் என்னும் அதிகாரத்துக்குப் பொருத்தமாதல் காண்க. பிணை ஏர் மடநோக்கு என்புழி, 'ஏர்' என்பதனை உவமை உருபாகக் கொண்டு பரிமேலழகர் பொருள் உரைப்பதே பொருத்தமுடையது. அதற்கு அழகு எனக் காளிங்கர் பொருளுரைப்பது சிறப்பில்லை. மேலும், அவர் நோக்கும் நாணும் என்பதை எண்ணும்மையாகக் கொள்ளாமல் நோக்கினது நலத்திற்கு இயல்பாகிய நாண் எனக் கூறியதும் இயல்பில்லை. 'மட நோக்கு' என்பதற்குக் கண்ணோட்டம் என்பதுபட உரைக்கும் வரதராசனார் பொருளும் 'ஏதில' என்பதற்குக் காரணமற்றவை என்று கூறும் இராமலிங்கம்பிள்ளை பொருளும் ஈண்டு இயல்பில்லை.

**1090. உண்டார்க ணல்ல தடுநறாக் காமம்போற்**
**கண்டார் மகிழ்செய்த லின்று.**

**பரிமே:**

[தலைமகள் குறிப்பறித லுற்றான் சொல்லியது.]

அடப்படு நறா, தன்னை யுண்டார் மாட்டு மகிழ்ச்சியைச் செய்வதல்லது காமம் போலக் கண்டார் மாட்டு மகிழ்ச்சியைச் செய்த லுடைத்தன்று.

'அடுநறா' வெளிப்படை. 'காமம்' என்றது ஈண்டு அது நுகர்தற்கிடனாகியாரை.

**மணக்:**

அடப்பட்ட நறவு உண்டார்மாட்டல்லது காமம் போலக் கண்டார்மாட்டு மகிழ்வு செய்தல் இன்று.

இது தலைமகள் தலைமகனைக் கண்டுழி வருத்தமுற்றுக் கருதியது.

**'அடுநறா'** என்பதற்குக் கொல்லுஞ்செயலையுடைய கள் என்று **அருணாசலக்கவிராயரும்,** நன்கு சமைத்த உணவு எனக் **கா.சு. பிள்ளையும்,** அழிவு செய்யக் கூடிய கள் என்று **இராமலிங்கம் பிள்ளையும்** பொருள் கூறுவர்.

**முடிநிலை:**

இக்குறளுக்குத் தலைவன் மேற்றாகப் பரிமேலழகரும் தலைவி மேற்றாக மணக்குடவரும் துறை கொள்வர். 'காமம் போல் கண்டார் மகிழ்செய்த லின்று' என வெளிப்படையாகக் கூறும் மனப்பான்மை ஆடவர்க் குரியதாக அகத்திணையிற் காண்கின்றோம். ஆதலின். தலைமகன் கூற்றாதலே தகும். காமம் என்பது ஓர் உணர்ச்சி. அது காணுதற்குரிய பொருள் அன்று. 'காமம் போற் கண்டார்' எனக் குறள் கூறுதலின், ஈண்டுக் காமம் என்பதற்குக் காமத்திற்குரியவர் எனப் பரிமேலழகர் கொள்ளும் உரை தெளிவுடையது 'அடுநறா' என்பதற்குக் 'கொல்லுங் கள்', 'அழிக்குங் கள்', நன்கு சமைத்த உணவு எனக் கூறப்படும் பொருள்கள் ஈண்டைக்குச் சிறப்பில.

# 110. குறிப்பறிதல்.

அஃதாவது தலைமகன் தலைமகள் குறிப்பினை அறிதலும் தோழிகுறிப்பினை அறிதலும், அவள்தான் அவ்விருவர் குறிப்பினையும் அறிதலுமாம், தகையணங்குற்ற தலைமகன் தலைமகளைக் கூடுங்கால் இது வேண்டுமாகலின், தகையணங்குறுத்தலின் பின் வைக்கப்பட்டது என அதிகார விளக்கமும் முறைவைப்பும் கூறுவர் பரிமேலழகர்.

குறிப்பறிதலாவது தலைமகள் உள்ளக் குறிப்பினைத் தலைமகன் அறிதல் என்பர் மணக்குடவர்.

இது தலைமகற்கே உரித்து. பெண்டிர் நாணமுடையரன்றே; அவரது உள்ளக்கருத்து வெளிப்படுமாறு என்னை எனின், மேலை அதிகாரத்துத் தலைமகனைக் கண்ட தலைமகள், 'காமம் போல் கண்டார் மகிழ்செய்தல் இன்று' (1090) என்று நினைத்தாளாகக் கூறினா ரன்றே! அதனானே கண்ணும் முகமும் வேறுபடும்; அதனானே அறியலாகும்; மனக்குறிப்பு அறிதல் கூறியது எற்றுக்கு? பிறவாற்றானுங் கூடுதற்கு நெறியுளவா லெனின், பிறவாற்றாற் கூடுங்கால், குரவராற் கூடின் பெருந்திணையாம்; பொருள் கொடுத்துச் சாரின் அசுரமாம்; வலியிற் சாரின் இராக்கதமாம்; மறவியிற் சாரின் பசாசமாம்; ஆதலின் இக்கூட்டத்துக்குக் குறிப்பறிந்தே புணர வேண்டுதலின், இது கூறப்பட்டது. மேலதனோடு இயைபும் இது. இது தலைமகற்கு உரித்தன்றோ எனின், அவன் வெளிப்பட இரத்தலான் வேண்டா என்க, என விளக்கந்தருவர் பரிப்பெருமாள்.

குறிப்புணர்தல் என அதிகாரத் தலைப்புக் கொள்வர் காளிங்கர்.

உள்ளக் குறிப்பினைப் பேச்சினால் அறிவதைப் பொருட்பாலில் கூறினார். இங்குக் குறிப்பறிதல் என்பது பேச்சின்றி முகக்குறியாலும், கண்ணாலும், செயலாலும் அறியும் மனோதத்துவ நிகழ்ச்சி யறிதலாம். தலைவன் தலைவியினுடைய உள்ளக் குறிப்பினைத் தோழனும், தோழியும் அறிதலும், தலைவன் தலைவியின்

குறிப்பினை அறிவதுமாகிய உண்மையினைக் கூறி இந்த உலகியலில், ஒருவரை ஒருவர் முகக்குறிப்பால் அறியும் முறையினையும் அறியவைக்கிறது என விளக்கந்தருவர் வரதராசனார்.

உள்ளக் குறிப்பினைப் பேச்சால் அறிவது பற்றிக் கூறுவது பொருட்பாலில் வரும் குறிப்பறிதல் அதிகாரம் (71) எனக் கூறும் வரதராசனார் கருத்தைக் 'கூறாமை நோக்கிக் குறிப்பறிவான்' (701) 'ஐயப்படாது அகத்த துணர்வானை' (702) 'குறித்தது கூறாமைக் கொள்வாரோடு' (704) என்னும் குறட்பாக்களைக் காட்டி மறுத்து அக்குறிப்பறிதலும் பேச்சால் அறிவது அன்று, குறிப்பால் அறிவது என்பதைத் தண்டபாணி தேசிகர் காட்டுவர்.

இயற்கைப் புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற் கூட்டம், பாங்கியற் கூட்டம் என்ற முறையில் குறள் விரித்துக் கூறாமையின் இக்குறிப்பறிதலுக்குத் தோழியை இயைபு படுத்தாமல் தலைவியின் குறிப்பைத தலைவன் அறிதல் எனக் கோடலே சாலும்.

**1091. இருநோக் கிவளுண்க ணுள்ள தொருநோக்கு**
**நோய்நோக்கொன் றந்நோய் மருந்து.**

**பரிமே:**

[தலைமகன் தலைமகள் உளப்பாட்டுக் குறிப்பினை அவள் நோக்கினால் அறிந்தது.]

இவளுடைய உண்கணகத்ததாய நோக்கு இது பொழுது என்மே லிரண்டு நோக்காயிற்று; அவற்றுள் ஒரு நோக்கு என்கண் நோய் செய்யும் நோக்கு, ஏனையது அந்நோய்க்கு மருந்தாய நோக்கு.

'உண்கண்' மையுண்டகண். நோய் செய்யு நோக்கு, அவள் மனத்தினாய காமக் குறிப்பினை வெளிப்படுக்கின்ற நோக்கு; மருந்தாய நோக்குத் தன்கணிகழ்கின்ற அன்பு நோக்கு; நோய் செய்யு நோக்கினைப் பொதுநோக் கென்பாரு முளர்; அது நோய் செயிற்கைக்கிளையாவ தல்லது அகமாகாமை யறிக. இவ்வருத்தந் தீரும் வாயிலு முண்டாயிற்று என்பதாம்.

**மணக்:**

இவள் மையுண் கண்ணிலுள்ள நோக்கம் இரண்டு வகைத்து; அவ்விரு வகையினும் ஒரு நோக்கு நோய் செய்யும், ஒரு நோக்கு அதற்கு மருந்தாம்.

நோய் நோக்கென்பது முதல் நோக்கின நோக்கம்; மருந்து நோக்கு என்பது இதனால் வருத்தமுற்ற தலைமகனைத் தலைமகள் உள்ளங் கலங்கி நாணோடு கூடி நோக்கின நோக்கம். அதனானே உடம்பாடு காண்டலின் மருந்து ஆயிற்று. இது நாணமுடைய பெண்டிரது உள்ளக்கருத்து வெளிப்படுமாறு கூறியது.

**தண்ட:**

மணக்குடவர், பரிப்பெருமாள், காளிங்கர் முதலிய உரையாசிரியர்கள் நோய்நோக்கு முதலில் உண்டான பொதுநோக்கு என்பர். பரிமேலழகர் நோய் செய்யுநோக்கு அவள் மனத்தினாய காமக்குறிப்பினை வெளிப்படுக்கின்ற நோக்கு என்பர். மேலும், பொதுநோக்கு என்பாரும் உளர்; அதுநோய் செய்யின் கைக்கிளை யாவதல்லது அகமாகாமை யறிக என மறுப்பர். இதனை உற்று நோக்கின் பின் பின் குறள்களான் வள்ளுவரே பொதுநோக்குண்டென்று கூறலானும் குறிப்பறிதல் கைக்கிளை வகையுள் ஒன்றே யாதலானும், கண்ட முதல் நோக்கிலேயே தலைவி தன் மனத்துக் காமக்குறிப்பினைவெளிப்படுத்தி நோக்காள் ஆதலானும் அங்ஙனம் நோக்குதல் பெண்தகைமைக்கு ஏலாத செயல் ஆதலானும் எல்லாரையும் பார்ப்பது போலப் பொதுவாக நோக்கினள். அந்நோக்குத் தலைவற்குக் கவலை நோயைப் பிறப்பித்தது. அந்நோயைப் பின்வந்த சிறப்புநோக்குத் தீர்த்தது என்றலே பொருந்துவதாம். அன்றியும் அகக் கைக்கிளைக்கு இழுக்கின்மையுமாம்.

**முடிநிலை:**

'நோய்நோக்கு' என்பதற்குத் தலைவியின் காமக்குறிப்பினைப் புலப்படுத்தும் நோக்கு எனப் பரிமேலழகர் கூறும் விளக்கம் பொருத்த மில்லை. நோய் செய்யும் நோக்கினைப்

பொது நோக்கு என்பாரு முளர். அது நோய் செய்யிற் கைக் கிளையாவ தல்லது அகமாகாமை யறிக எனப் பரிமேலழகர் மறுப்பர். மேற்கண்ட பரிமேலழகர் கருத்தைத் தண்டபாணி தேசிகர் பொருந்த மறுத்துள்ளமை நோக்குக. 'அரிவை நாட்டம் அகத்து நிகழ் வேட்கை, தெரிய உணர்த்தும் குரிசிற் கென்ப' 'நாட்ட மிரண்டும் கூட்டி யுரைக்கும் குறிப்புரையாகும்' எனத் தொல்காப்பியம் இரு நோக்கினையுமே குறிப்பறிதற்குக் கருவியாகக் கூறுதலின் முன்னையது பொது நோக்கென்றல் சாலாதாம் எனக் கூறும் கு. சுந்தரமூர்த்தியின் கருத்தும் ஏற்புடையதே. மணக்குடவர் இக்குறளுக்குத் தரும் விளக்கம் சிறப்புடையது.

**1092. கண்களவு கொள்ளுஞ் சிறுநோக்கங் காமத்திற்**
**செம்பாக மன்று பெரிது.**

**பரிமே:**

(தலைமகன் தலைமகள் உளப்பாட்டுக் குறிப்பினை அவள் நோக்கினால் அறிந்தது).

இவள் கண்கள் யான் காணாமல் என் மேனோக்குகின்ற அருகிய நோக்கம், மெய்யுறு புணர்ச்சியின் ஒத்த பாதி யளவன்று, அதனினு மிகும்.

தானோக்கியவழி நாணி யிறைஞ்சியும், நோக்காவழி உற்று நோக்கியும் வருதலாற் 'களவு கொள்ளும்' என்றும் அஃதுளதாங் காலஞ் சிறிதாகலிற் 'சிறுநோக்கம்' என்றும், அஃது உளப்பாடுள் வழி நிகழ்வதாகலின் இனிப் புணர்தல் ஒருதலை யென்பான் 'செம்பாகமன்று பெரிது' என்றும் கூறினான்.

**பரிப்:**

என் கண்களைச் சோர்வு பார்த்துக் களவினால் நோக்குகின்ற சிறிய நோக்கம் வேண்டப்பட்ட பொருளிற் பாதியே யன்று; பெரிது.

சோர்வு பார்த்தலாவது தலைமகன் தனது காதலினாலே எப்பொழுதும் நோக்குவனன்றே; தலைமகளுக்கும் அவ்வாறு நோக்க வேண்டுதலின் அவன் பாராக் காலத்தைக் குறித்து நிற்றல். களவினான் நோக்குத லாவது அக்காலத்தே நோக்குதல், தலைமகன் காணாமல் நோக்குதலின் களவு ஆயிற்று. கொள்ளுதல் நோக்குதற் பொருள்மேல் வருதலின் நோக்கு ஆயிற்று. சிறுநோக்கமாவது பார்த்ததும் மீளுதல். நெடிது நோக்காமையின் சிறிதாயிற்று. வேண்டப்பட்ட பொருளாவது, புணர்ச்சி. செம்பாகமன்று பெரிது என்பது, அதற்குப் பாதி இசைவுக்கு மேலே பெற்றேம் என்பது. இது மறைய நோக்குதல் உடம்பாடு என்றது.

**பழைய உரை:**

சந்தனச் சோலையில் பூவில் தேனை, பஞ்சவர்ணக் கிளி பொசிப்பதை அதரபானம் போலக் கண்டு களிப்பவள் கண் பார்வை காமத்திலும் பெரிது.

**வெ. இராம:**

காமத்திற்குச் செம்மையான பக்குவமுள்ளது கண்ணை மறைத்துக் கொள்ளும் சிறுபார்வைதான், பெரிய பார்வை அல்ல.

செம்பாகம்—செம்மையான பக்குவம்.

**வரத:**

கண்ணினால் தலைவனைக் காதலித்ததை மறைத்துச் சிறுபார்வையால் காதலை வெளிப்படுத்தும் இந்தப் பார்வை யானது காதல் நாடகத்தில் ஒரு சமமான பகுதியன்று. அந்த நாடகத்தில் பெரும் பகுதியாகவே முற்றுப் பெறுகிறது.

சிறு நோக்கமாவது கடைக்கண்ணால் சிறுகப் பார்த்துக் குறிப்புணர்தலும் குறிப்புரைத்தலுமாம்.

**முடிநிலை:**

பழைய உரைக்கண் ஓர் உவமை விளக்கம் காண்கின்றோம். இவ்வுவமை முற்றும் வருவித்துரைக்கப் படுவதாகும். இவ்வுரையை நோக்கின், 'கண்டு களிகொள்ளும் சிறு நோக்கம்' என்பது போன்ற பாடம் இருந்திருக்கலாம் எனத் தோன்றுகின்றது. குறளின் கிடக்கை முறைப்படி பொருள் செய்யாது தாம் கருதும் பொருளுக் கேற்பச் சொற்களை மாற்றிக் கொண்டு கூட்டியுள்ளார் இராமலிங்கம் பிள்ளை. 'செம்பாக மன்று பெரிது' என்னுந் தொடரில் அன்று எனும் எதிர்மறைப் பயனிலை செம்பாகம் என்பதற்கு அணித்தாக இயைந்து கிடக்கவும், பெரிது அன்று எனப் பின்வருஞ் சொல்லோடு இயைத்திருப்பது காண்க. மேலும் 'பாகம்' என்பதற்கு அவர் கொண்ட பக்குவம் என்னும் பொருளும் இங்குப் பொருந்தாது. பாகம்- பாதி. 'குலவிச்சை கல்லாமற் பாகம் படும்' என்னும் பழமொழி நோக்குக. 'காமம்' என்பதற்குக் காதல் நாடகம் என உரைப்பர் வரதராசனார். அங்ஙனம் நாடகமாகக் கொள்வது தலைவன் கூற்றாக வரும் இக்குறட்குச் சிறப்பில்லை. இக்குறட்குப் பரிமேலழகர் உரையும், பரிப்பெருமாள் விளக்கமும் கொள்ளற் குரியன.

**1093. நோக்கினா ணோக்கி யிறைஞ்சினா ளஃதவள்**
**யாப்பினு ளட்டிய நீர்.**

**பரிமே:**

[நோக்கினானும் நாணினானும் அறிந்தது.]

யான் நோக்கா வளவில் தானென்னை யன்போடு நோக்கினாள்; நோக்கி ஒன்றனை யுட்கொண்டு நாணி இறைஞ்சினாள்; அக்குறிப்பு இருவேமிடையுந் தோன்றிய அன்புப்பயிர் வளர அதன்கண் அவள் வார்த்த நீராயிற்று.

யாப்பினானாயதனை யாப்பு என்றார். ஏகதேச உருவகம்.

**பரிப்:**

பந்தம் என்பதனை யாப்பு என்று கூறினார். பார்த்தவள் பெயராது நாணி நிற்றலும் உடன்படுதலாம் என்றது.

**பரிதி:**

நோக்கினாள் முகத்தை யான் நோக்கத் தலைகீழிட்டது. அது என்போல என்னில், கட்டிய கட்டில் தண்ணீர் விட்டதற்கு ஒக்கும்.

**காளிங்:**

நெஞ்சமே! இங்ஙனம் சிறந்த நோக்கினை உடையாள் முன்னம் தான் நோக்கிப் பின்னர் யான் தன்னை நோக்குமிடத்து, எதிர்நோக்கு இன்றி முகம் இறைஞ்சி நின்றாள். மற்று அஃது யாதினை ஒக்குமோ எனில், ஓர்ப்புறைந்த இடத்துப் பின்னும் அதற்கு உறுதி பெறுவதாக நீர் பெய்து கூறு கொண்டாற் போலத் தானும் நம்மிடத்து ஓர்த்தற் குறிப்புடைமை வைப்புறுத்தினாள் போலும் என்று மகிழ்ந்து தேறினான் தலைமகன் என்பது கருத்து.

**பழைய உரை: (உ.வே.சா.)**

நோக்கினாலும் நாணினாலும் அவள் கருத்தறிந்து தலைவன் கூறியது. யானோக்கும் போது தன்னோக்கினால் என்னை நோக்கித் தலையைச் சாய்த்து நாணி நின்றாள். அவள் குறிப்பு என் காமப்பயிர் வளர்தற்குப் பாத்தியுள் வார்த்த நீராம்.

நோக்கினா னோக்கி' என்பது பாடம்.

**வெ. இராம:**

சிறு நோக்காகப் பார்த்தாள், பார்த்துவிட்டுத் தலைகுனிந்து கொண்டாள். அச்செய்கை இருவர் உள்ளத்திலும் உண்டான மனப்பொருத்தம் என்னும் பயிருக்குள் அவள் பாய்ச்சிய நீர் போன்றது.

யாப்பு-சம்மதிக்கும் மன ஒற்றுமை; அட்டுதல்—ஊற்றுதல்.

**வரத:**

இனி 'நோக்கி இறைஞ்சினாள்' என்பதற்குத் தன்னோரில்லாத் தலைமகனைக் காணவும் பெற்றேன், கருதவும் பெற்றேன் என்று வணங்கினாள் எனவும் கொள்ளலாம். வணக்கம் அவன் தகுதிக்கு ஏற்றதும் தன்னை ஏற்றுக்கொள்ள விருப்பம் அறிவித்தலையும் குறிப்பதாம்.

அ.கு.ஆ:

அவள் இவனை உற்றுப் பார்த்தாள், பார்த்து ஒருப்பட்டாள் போல் தலை தாழ்த்தி நின்றாள். இதனைக் கண்ட தலைமகன் அவள் உள்ளம் (நீர்ப்பட்ட பிசின்போல்) இளகி விட்டது. இனி ஒட்டும் என மகிழ்கிறான். இஃதே இப்பாட்டின் கருத்து.

நீர் பட்டுப் பிசின் இளகுவது போல, நெஞ்சம் இளகியதால் அவள் தலை தாழ்த்தாள் என்று உள்ளக் கட்டில் நீர்வார்த்தது ஆனது என்று கூறுகிறார். ஆர்வத்தால் "நெஞ்சக் கன கல்லு நெகிழ்ந்துருக" என்றார் அருணகிரியார்.

முடிநிலை:

'நோக்கினா னோக்கி, என்னும் பழையஉரை கொண்ட பாடம் சிறப்பில்லை. நோக்கி என்பதிலேயே நோக்கினால் நோக்கி என்னும் பொருள் பெறப்படும். இவ்வதிகாரத்து முன்னும் பின்னும் உள்ள குறள்கள் யாவும் நாணத்தால் நிகழும் செயல் களையே உணர்த்தலின் உடன்பாட்டைத் தெரிவிக்க வணங்கினாள் என்பது சிறிதும் தலைவிக்குச் சால்பின்மையறிக என வரதராசனார் உரையைத் தண்டபாணி தேசிகர் மறுப்பர். யாப்பினுள் அட்டிய நீர்' என்பதற்கே உரைவேறுபாடுகள் உள. அன்புப் பயிர் வளர அதன்கண் ஊற்றிய நீர் எனப் பரிமேலழகரும் கட்டிய கட்டில் தண்ணீர் விட்டது ஒக்கும் எனப் பரிதியும் பாத்தி யமைத்து நீர்பாய்ச்சிய தரையினைக் கருவிகொண்டு குத்திமேலும் இறுகச் செய்தல் எனக் காளிங்கரும், மனப்பொருத்தத்துள் பாய்ச்சிய நீர் போன்றது என இராமலிங்கம் பிள்ளையும் நீர் பட்ட பிசின் போன்று உள்ளக்கட்டில் நீர் வார்த்தது ஆயிற்று என அ.கு.ஆ. வும் பொருள் கூறுவர். இப்பொருள் களினும் காமப்பயிர் வளரப் பாத்தியுள் வார்த்த நீராம் எனும் பழைய உரை (உ.வே.சா) பொருந்துவதாகும். இவ்வுரைக்கு, 'வளர்வதன் பாத்தியுள் நீர் சொரிந்தற்று' (718) என்னும் குறளை ஒப்பு நோக்குக.

**1094. யானோக்குங் காலை நிலனோக்கு நோக்காக்காற்
றானோக்கி மெல்ல நகும்.**

**பரிமே:**

(நாணினாலு மகிழ்சியினாலு மறிந்தது).

யான் தன்னை நோக்குங்கால் தானெதிர் நோக்காது இறைஞ்சி நிலத்தை நோக்காநிற்கும்; அஃதறிந்து யான் நோக்காக்கால் தானென்னை நோக்கித் தன்னுள்ளே மகிழா நிற்கும்.

**மெல்ல நகும்** என்பதற்கு முறுவலிக்கும் என்று உரைப்பாரும் உளர்.

**காளிங்:**

நெஞ்சமே! யான் தன்னை நோக்கும் நேரத்து நாணினள் போலத் தான் நிலம் நோக்கி நிற்கும்; யான் அவள்குறிப்பு அறிதற்கு நோக்காதேன் போலக் கடைக்கணித்து நின்ற நேரத்துத் தான் என்னை நோக்கி மெல்லென வேறாய் ஓர் புன்முறுவல் செய்யும். எனவே, தன்வயிற் கொண்டதோர் குறிப்பின் குணம் பற்றிக் கொண்டு இன்புற்று ஆற்றினான் என்பது கருத்து.

**வரத:**

நிலன்நோக்கல், விரலால் கிண்டுதல் முதலியன பெண்களின் உள்ளக் கிளர்ச்சியையும், நாணத்தின் செயலையும் குறிப்பன. மெல்ல நகல் என்பது மன அடக்கத்தால் மகிழ்ச்சிக் குறிப்பை வெளிப்படுத்தல். நோக்காக்கால் என்பது, பார்க்காதவனைப் போல் பார்த்தல். அங்ஙனம் பொருள் கொள்ளாவிடின் அவள் நோக்கி மெல்ல நகுவதைத் தலைவன் அறிய முடியாது.

**முடிநிலை:**

'மெல்ல நகும்' என்பதற்கு முறுவலிக்கும் என்று உரை கண்டவர் காளிங்கர் என்பது அவர்தம் உரையாற் பெறப்படும். அதற்குத் தலைவி தன் மனத்தகத்தே மகிழும் என உரை கூறுவர் பரிமேலழகர். 'மெல்ல நகும்' என்ற தொடர்க்கேற்பப்

புன்முறுவல் செய்யும் என உரைத்த காளிங்கர் பொருள் பொருத்த முடையது. 'நோக்காக் கால்' என்பதற்குப் பார்க்காதவனைப் போல் பார்த்தல் என்னும் வரதராசனார் உரை தெளிவுடையது.

**1095. குறிக்கொண்டு நோக்காமை யல்லா லொருகண்**
**சிறக்கணித்தாள் போல நகும்.**

**பரிமே:**

(நாணினாலும் மகிழ்ச்சியினாலும் அறிந்தது.)

நேரே குறிக்கொண்டு நோக்காத் துணையல்லது ஒரு கண்ணைச் சிறங்கணித்தாள் போல என்னை நோக்கிப் பின் தன்னுள்ளே மகிழாநிற்கும்.

சிறக்கணித்தாள் என்பது செய்யுள் விகாரம். சிறங்கணித்தல்-சுருங்குதல்.

**மணக்:**

குறித்துக்கொண்டு நோக்காமை யல்லது ஒருகால் உடம் பட்டாள் போல நகாநின்றாள்.

அஃதாவது காமக் குறிப்புடையார் போல நகுதல். அது வெளிப்பட நில்லாமையின் 'போல' என்றார்.

அஃதாவது நகை தோற்றிய வழிப் பிறிதொன்று கண்டாள் போல நகுதல். இது தன் குறிப்புத் தோன்றாமல் நகுதல் உடன் படுதலாம் என்றது.

**பரிதி:**

குறித்துப் பார்த்து, பராமுகம் பண்ணுமாப் போல, ஒருகண் கீழ்க்கணித்து நோக்கிச் சிரிக்கும்.

**'சிறக்கணித்தாள் போல'** என்பதற்குக் கடைக்கணித்தாற் போல எனக் **காளிங்கரும்,** சிமிட்டினாற் போல எனக் **கவிராச பண்டிதரும்** கடைக்கண்ணால் எங்கோ பார்ப்பது போல என **இராமலிங்கம் பிள்ளையும்** பொருள் கூறுவர்.

**முடிநிலை:**

'ஒரு கண் சிறக்கணித்தாள் போல' என்பதற்கு, ஒருகால் உடம்பட்டாள் போல என்பது மணக்குடவர் உரை. 'குறிக் கொண்டு நோக்காமை யல்லால்' எனப் பார்வை பற்றி வரும் முன்தொடரை நோக்கின் 'ஒருகண்' என்பதற்கு உறுப்புப் பொருள் கொள்ளுதலே பொருந்தும். கீழ்க்கணித்து நோக்குதல், கண்ணைச் சுருக்கி ஓரமாய்ப் பார்த்தல், கடைக் கண்ணால் எங்கோ பார்ப்பது போலப் பார்த்தல், சிமிட்டினாற் போலப் பார்த்தல் எனக் கூறும் பொருள்களெல்லாம் ஏறத்தாழ ஒருபொருளுடையனவே.

**1096. உறாஅ தவர்போற் சொலினுஞ் செறாஅர்சொ**
**ஒல்லை யுணரப் படும்.**

**பரிமே:**

(தோழி சேட்படுத்தவழி அவள் குறிப்பறிந்த தலைமகன் தன்னுள்ளே சொல்லியது.)

புறத்து நொதுமலர் போலக் கடுஞ்சொற் சொன்னாராயினும் அகத்துச் செறுதலிலாதார் சொற் பிற்பயத்தல் குறையுற்றாராற் கடிதின் அறியப்படும்.

கடுஞ்சொல் என்பது இவ்விடம் காவல் மிகுதியுடைத்து வரற்பாலீர் அல்லீர் என்றல் முதலாயின.

**மணக்:**

கூடாதவர் போலச் சொல்லினும், செறுதலில்லாதார் சொல்லை இதற்குக் காரணமாகப் பிறிதொன்று உளதென்று விரைந்து அறிதல் வேண்டும்.

இஃது உறுப்பினால் இசைவு காட்டி உரையினால் மறுப்பினும் உடன்படுதலாம் என்றது.

**பரிப்:**

மனம் நெகிழ்ச்சி கண்டு சாரலுற்ற தலைமகனைத் தனதில் வலியுறுத்தற் பொருட்டுக் கடுஞ்சொல் கூறித் தலைமகள் நீங்கின வழி, இஃது உள்ளன்பு இன்மையால் கூறினாள் அல்லள்; அதற்குக் காரணம் யாது என்று தலைமகன் தன்னுள்ளே சொல்லியது.

**பரிதி:**

அயலார் போலே பார்த்தாலும் இன்பம் உள்ள ஆசைப் பார்வையாலே கூடுதற்கு இட்டம் என்று அறிக.

**பழைய உரை:**

அயலார் போலே பார்த்தாலும் சேதம் இல்லாமல் இன்பம் உள்ளாரைச் சடுதியிலே அறியப்படும்.

**வெ. இராம:**

ஆசையில்லாதவர் போலப் பேசினாலும் வெறுப்பில்லாமல் பேசுவதிலிருந்து (ஆசை உடையவர் என்பதை) விரைவில் அறிந்து கொள்ள முடியும்.

உறார் — காம முறாதவர்கள். செறார்சொல் — செறாராக சொல்லுவதால் — அதாவது கோபமில்லாமல் பேசுவதால் செறுதல் — சினத்தல்.

**முடிநிலை:**

'உறாதவர் போற் சொல்லுதலை'த் தோழி மேற்றாகப் பரிமேலழகரும் தலைவி மேற்றாகப் பிறரும் கொள்வர். தோழி கூற்றாகக் கூறுவது அகத்திணைக்கு மிகவும் ஏற்புடையது. பரிப்பெருமாள் உரையில் 'நீங்கின வழி' என வருதலின் 'உறாஅ தவர் போற் செலினும்' என்று பாடங் கொண்டிருப்பர் போலும். பரிதி உரையும் பழைய உரையும் அயலார் போலே பார்த்தாலும் எனக் கூறுகின்றன. இவ்வதிகாரத்து ஏனைக் குறள்கள் கண் பற்றி வருதலின் இக்குறட்கும் அதனைத் தொடர்புபடுத்தி உரை எழுத முயன்றனர் போலும். பார்வை போலச் சொல்லும் குறிப்பறிதற்

கருவியாதலின், இவ்வதிகாரத்து ஆசிரியர் சொல்பற்றிக் கூறுதலும் பொருந்தும். 'உறார்' என்பதற்குக் காம முறாதவர் என்னும் இராமலிங்கம் பிள்ளையின் உரை ஒருவாறு ஏற்புடையதேனும், 'செறார் சொல்' என்பதற்குக் கோபமில்லாமல் பேசுதல் என்னும் அவர் உரை ஏற்குமாறு இல்லை.

**1097. செறாஅச் சிறுசொல்லுஞ் செற்றார்போ னோக்கு**
**முறாஅர்போன் றுற்றார் குறிப்பு.**

**பரிமே:**

[தோழி சேட்படுத்தவழி அவள் குறிப்பறிந்த தலைமகன் தன்னுள்ளே சொல்லியது.]

பின்னினிதாய் முன்னின்னாதாய சொல்லும் அகத்துச் செறாதிருந்தே புறத்துச் செற்றார் போன்ற வெகுளி நோக்கும் நொதுமலர் போன்று நட்பாயினார்க்கு ஒரு குறிப்புப் பற்றி வருவன.

**பரிப்:**

மேல் தலைமகள் கூறிய கடுஞ்சொல்லும் அதன்பின் கடுத்து நோக்கின நோக்கமும் குறித்து இவ்வாறு செய்யினும் அன்பின்மை தோற்றம் இல்லாமையின் உடம்பாடு என்று தேறியது.

**வெ. இராம:**

கோபம் இல்லாத மறுப்புச் சொல்லும் கோபித்துக் கொள்வது போன்ற பார்வையும் (காமநோய்) அடையாதவர் போல 'காட்டிக் கொள்ளும்' காமநோய் அடைந்து விட்ட (பெண்களின் அடையாளம்.

**கவிராச:**

செறாஅச் சிறுசொல்-பிறகு சினேகம் பண்ணவேணும் என்று மனத்திலே நினைத்து முந்திக் கடின வார்த்தைகளைச் சொன்னது.

**முடிநிலை:**

செறாஅச் சிறு சொல்லையும் செற்றார்போல் நோக்கையும் பரிப்பெருமாள் தலைவிக் குரியவாகக் கொள்ளப் பரிமேலழகர் தோழிக்குரியவாகக் கொள்ளினும் இக்குறளை இருவரும் தலைவன் கூற்றாகவே கொண்டுள்ளனர். ஆனால், இராமலிங்கம் பிள்ளை இக்குறளைத் தலைவியின் இயல்பைப் பொதுநிலையிற் சுட்டுவதாக உரைத்துள்ளார். சினவாது சிறுசொல் கூறலும் உள்ளத்தில் அன்பு கொண்டு பகைவர்போல் பார்த்தலும் காமமுறாதது போல் காட்டிக் கொள்ளும் காமமுற்ற பெண்ணின் செயல் என்னும் குறிப்பினையறிந்து தலைவன் நடந்து கொள்ளவேண்டும் என்பது இராமலிங்கம் பிள்ளையின் உரைக்கருத்து. இக்கருத்தும் ஏற்கத் தகும்.

**1098. அசையியற் குண்டாண்டோ ரேஎர்யா னோக்கப்
பசையினள் பைய நகும்.**

**பரிமே:**

[தன்னை நோக்கி மகிழ்ந்த தலைமகளைக் கண்டு தலைமகன் கூறியது.]

என்னை யகற்றுகின்ற சொற்காற்றாது யானிரந்து நோக்கிய வழி அஃதறிந்து நெகிழ்ந்து உள்ளே மெல்ல நகாநின்றாள்: அதனால் நுடங்கிய வியல்பினை யுடையாட்கு அந்நகையின் கண்ணே தோன்றுகின்றதோர் நன்மைக் குறிப்புண்டு.

ஏர்–ஆகுபெயர்.

**மணக்:**

அசைந்த இயல்பினை யுடையாட்கு அவ்விடத்து ஓர் அழகுண்டு; யான் நோக்க நெகிழ்ந்து மெல்ல நகாநின்றாள்.

அவ்விடம் என்றது தானே நெகிழ்ந்து நக்க இடம்; அழகு தன் வடிவினுள் மிக்க குணம், பையநகுதல்–ஓசைப் படாமல் நகுதல்.

**பரிதி:**

அசைந்தாடும் மயில் போன்ற சாயலை யுடையாட்கு ஒரு அழகுண்டு. அதுதான் யான் பார்த்த போது தான் பாராமல் கடைக்கணித்து நோக்கிச் சிரிக்கும் சிரிப்பு.

**வெ. இராம:**

அப்போது அவள் இணக்கத்திற்கு அறிகுறியாக உண்டான ஒரு அழகு நிகழ்ச்சி உண்டு; என்னவெனில் நான் பார்க்கும் போது வெளிப்படையாக அவள் ஆசையுள்ளவளாக மீண்டும் மெல்ல சிரித்தாள்.

அசையியற்கு-அசைத்தலுக்கு - பொருத்துவதற்கு, அதாவது இணக்கத்திற்கு. பசை-ஆசை.

**மு.கோ:**

பெண்களுக்கழகு புன்சிரிப்பு. இன்றேல் காதல் கருகிச் சாதலாய் விடும். நோக்காக்கால் நக்கதுபோய் நோக்க நகுவதா யிற்று. மெல்ல மெல்ல இருவரும் நெருங்குகின்றனர்.

**முடிநிலை:**

'அசையியல்' என்பதற்கு அசைந்தாடும் மயில் போன்ற சாயலை யுடையாள் என்னும் பரிதி உரை நயமுடையது. அதற்கு இணக்கம் எனப் பொருள் கொள்ளும் இராமலிங்கம் பிள்ளை உரை வலிந்து கோடலாகும். 'ஏஎர்' என்பதற்கு நன்மைக் குறிப்பு, அழகு நிகழ்ச்சி என்னும் பொருள்களினும் அழகு என்னும் பொருளே இயல்பானது. பசை என்பதற்குக் கடைக்கணித்தல் எனக் கூறும் பரிதி உரை பொருத்தமில்லை. 'நோக்காக்கால் தானோக்கி மெல்ல நகும்' (1094) என்னும் குறளோடு இக்குறளை இயைபு படுத்தித் தலைவன் தலைவியர் இருவரும் காதலால் மெல்ல நெருங்குகின்றனர் என்னும் மு.கோ.வின் விளக்கம் உளவியலுக் கேற்றதாகும்.

**1099. ஏதிலார் போலப் பொதுநோக்கு நோக்குதல்
காதலார் கண்ணே யுள.**

**பரிமே:**

[தோழி மதியுடம் படுவாள் தன்னுள்ளே சொல்லியது]

முன்னறியாதார் போல ஒருவரை யொருவர் பொதுநோக்கத் தான் நோக்குதல் இக்காதலை யுடையார் கண்ணே யுளவாகா நின்றன.

**காளிங்:**

நெஞ்மே! இங்ஙனம் குறிக்கொண்டு நோக்காது அயலார் போலப் பொது நோக்கு நோக்குதலும் மற்று உள்ளத்துக் காதலுடையோர் மாட்டேயும் உள என்பது கண்டனம். அதனான் முன்னர் ஒருநோக்கு நோய்நோக் கன்றி யாம் அஞ்சியதூஉம் இனிமைக் கூறு என்பது சிறிது பயின்ற இடத்துத் தெளிந்தனம் என்று ஆற்றாமை சிறிது நீங்கினான் தலைமகன்.

**முடிநிலை:**

இக் குறளைத் தோழி தன் கூற்றாகக் கூறியதாகப் பரிமேலழகரும், தலைமகன் தன் நெஞ்சிற்குக் கூறியதாகக் காளிங்கரும் கொண்டுள்ளனர். 'காதலர் கண்ணே யுள' எனத் தலைமக்கள் இருவர்க்கும் பொதுவாகக் குறள் அமைந்து கிடத்தலின், மதியுடம்படும் தோழியின் கூற்றாகக் கொள்வதே ஏற்புடைத்து.

**1100. கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச்சொற்க
ளென்ன பயனு மில.**

**பரிமே:**

(தோழி மதியுடம் படுவாள் தன்னுள்ள் சொல்லியது)
காமத்திற்குரிய இருவருள் ஒருவர் கண்களோடு ஒருவர் கண்கள் நோக்கால் ஒக்குமாயின், அவர் வாய்மை தோன்றச் சொல்லுகின்ற வாய்ச்சொற்கள் ஒரு பயனு முடைய வல்ல.

இருவர் சொல்லும் கேட்டு உலகியல் மேல் வைத்துக் கூறியவாறு. இருவர் சொல்லுமாவன, அவள் புனங்காவல் மேலும் அவன் வேட்டத்தின் மேலும் சொல்லுவன.

**மணக்:**

கண்களோடு கண்கள் காமக்குறிப்பினால் நோக்கும் நோக்கம் ஒக்குமாயின், வாயினாற் சொல்லும் சொற்கள் ஒரு பயனுமுடைய வல்ல.

இது சார்தலுறுகின்ற தலைமகன் தன் நெஞ்சிற்குச் சொல்லியது.

**பரிதி:**

மனமும் கண்ணும் பொருந்திய பார்வை உண்டாகில் வாய்ச்சொல்லினால் என்ன பயனுமில.

**பழைய உரை:**

மனமும் மனமும் கண்ணும் கண்ணும் பொருந்திய காதல் உண்டாகில் வாய்ச் சொற் கொண்டு என்ன காரியம்?

**காலிங்:**

கேளாய் நெஞ்சே! ஒருவனோடு ஒருத்தியிடை மற்று அவர் தம் கண்ணொடு கண் எதிர்ந்து நோக்குங்கால், நெஞ்சில் காதல் குறிப்புக் கண்ணில் புலப்படுமாறு இரண்டு நோக்கும் தம்மில் ஒக்கக் குளிர்ந்திருக்கப்பெறின், மற்று வாய்ச் சொற் கொண்டு என்ன பயனுமில; எனவே, யாம் இவள் வாய்ச்சொல் கேட்கப் பெறின் எனைத்துப் பயனும் அதன்கணணே நிகழும் என்று அவள் சொற்கேட்டலும் காதலித்தான் தலைமகன் என்பது கருத்து.

இதனால் இயற்கைப் புணர்ச்சி எய்தினான் தலைமகன் என்பதூஉம் மற்று இவள் இன்சொல் கேட்ட கருத்துண்மையும் புலப்பட்டதென அறிக.

'வாய்ச் சொற் கொண்டு' என்பது இவர் பாடம்.

**பழைய: [உ.வே.சா.]**

தலைவனும் தலைவியும் தாம் இருவருள் ஒருவர் கண்களோடு ஒருவர் கண்கள் நோக்கினால் ஒக்குமாயின், ஒருவரை யொருவர் அறியேன் என்று சொல்லும் வாய்ச்சொல் மனத்தினால் உண்டென்ற காரியத்தை வாயினால் இல்லை யென்னல்.

தலைவனும் தலைவியும் புணர்ச்சி யில்லை என்று வாயினாற் சொல்லியதனைப் பார்வையினால் உண்டு என்று தோழி அறிந்தது.

**வை.மு.கோ:**

தலைவன் தலைவி என்ற இருவர் கண்களும் தம்முளொத்து விடின், வாய்விட்டுத் தம் காதலை ஒருவர்க்கொருவர் சொல்ல வேண்டுமென்பதில்லை என்று இக்குறட்குக் கருத்துக் காணினுமாம்.

**தேவ:**

காதற்குக் கண்ணோக் கொன்றே போதும் என்றவாறு. வாய்ச் சொற்கள் என்பது எழுத்துச் சொற்களையும் உளப் படுத்தும்.

**முடிநிலை:**

தலைமகன் தன்நெஞ்சிற்கு உரைப்பதாக இக்குறளைக் கொள்வர் மணக்குடவர். முன் குறள் போலவே மதியுடம் படுக்கும் தோழி கூற்றாகப் பரிமேலழகர் கொள்வது ஏற்புடையது. பரிதி உரையிலும், பழைய உரையிலும் மனத்தைத் தொடர்பு படுத்தி உரை காணப்படுதலின் அவ்வுரைகள் கொண்ட பாடம் வேறாகலாம். தலைமகன் தலைவியின் வாய்ச்சொற் கேட்டும் இன்புற விரும்பினான் எனக் காளிங்கர் விளக்கந் தருவர். 'என்ன பயனு மில' என்னும் குறளின் இறுதிப் பகுதியில் அக்கருத்து அமைந்திருப்பதாகப் புலப்படவில்லை. கண்ணின் ஏற்றம் கூறுவ தாகவே கொள்ளல் வேண்டும். 'வாய்ச் சொற்கள்' என்பதற்கு

விளக்கமாகப் பரிமேலழகர் தலைவியின் புனங்காவலையும் தலைவனது வேட்டை மேற் செல்லலையும் குறிக்கப் பழைய உரை (உ.வே.சா.) மனத்தில் காதலைக் கொண்டு வாயினால் ஒருவரை ஒருவர் அறியேன் என்று சொல்லுதலைக் குறிப்பிடு கின்றது. பாவாணர் கையெழுத்து மடல் போன்றவற்றையும் கொள்ளலாம் என்பர். இவையெல்லாம் விளக்க வேறுபாடுகளே யன்றி அடிப்படை உரை வேறுபாடுகளல்ல. இங்ஙனம் விளக்கம் ஏதும் தாராமல் உரைக்கும் வை.மு.கோ. உரை இயல்பானது.

# 111. புணர்ச்சி மகிழ்தல்.

அஃதாவது அங்ஙனம் குறிப்பறிந்து புணர்ந்த தலைமகன் அப்புணர்ச்சியினை மகிழ்ந்து கூறல். அதிகார முறைமையும் இதனானே விளங்கும் எனக் கூறுவர் பரிமேலழகர்.

புணர்ச்சி மகிழ்தலாவது தலைமகள் குறிப்பறிந்து புணர்ந்த தலைமகன் புணர்ச்சியினை மகிழ்ந்து கூறுதல் என்பர் மணக்குடவர்.

மேலதனோடு இயைபும் இது. இது தலைமகட்கு உரித்தன்றோ எனின், அவட்கும் ஒக்குமாயினும் அவள் மாட்டுக் குறிப்பினால் நிகழினல்லது கூற்றினால் நிகழாது என்க என விளக்கந் தருவர் பரிப்பெருமாள்.

கலவியின்பத்தை வெளியிற் சொல்லும் நாணமற்ற தன்மை இயல்பாகவே பெண்ணுக்கு இல்லை. ஆதலால் தான் இவ்வதிகாரம் பெண் சொல்வதாக அமையாமல் முழுவதும் ஆண்சொல்வதாக அமைந்துள்ளது என விளக்கந்தருவர் வெ.இராமலிங்கம் பிள்ளை

**1101. கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனு**
**மொண்டொடி கண்ணே யுள.**

**பரிமே:**

[இயற்கைப் புணர்ச்சி இறுதிக்கண் சொல்லியது.]

கண்ணாற் கண்டும் செவியாற் கேட்டும் நாவா லுண்டும் மூக்கான் மோந்தும் மெய்யாற் றீண்டியும் அனுபவிக்கப்படு மைம்புலனும் இவ்வொள்ளிய தொடியை யுடையாள்கண்ணே யுளவாயின.

**பரிதி:**

விளக்குக் கண்டு அழிந்த விட்டிலும், யாழ்கேட்டு அழிந்த அசுணமும், இரைகண்டு அழிந்த மீனும், செண்பகமணம் உண்டு

அழிந்த வண்டும், மெய்யின்பம் கண்டு அழிந்த யானையும் ஒவ்வொரு புலனால் அழிந்தன; ஐம்புலனும் ஓரிடத்திலே கூடியதால் என் செய்யாது.

**பழைய உரை:**

ஐந்து புலனாலும் அழியும் படியாக நாயகிக்கு மெய், வாய், கண், மூக்குச் செவியுண்டு; ஆகையால் காமுகர் அழியாரோ?

**முடிநிலை:**

ஐம்புல இன்பங்களுக்கு நிலைக்களனான பெண்ணின் பத்தால் பொருட்கேடு விளையும் என்பதுபடப் பரிதி உரையும் பழைய உரையும் கூறும். புணர்ச்சி மகிழ்தல் என்பது அதிகாரம் ஆதலானும் ஒத்த தலைவன் தலைவியரிடையே நிகழும் இன்பத்தையே காமத்துப்பால் கூறுதலானும் அவ்விருரையின் முடிபும் பொருந்தாது.

**1102. பிணிக்கு மருந்து பிறம னணியிழை**
**தன்னோய்க்குத் தானே மருந்து.**

**பரிமே:**

[இடந்தலைப்பாட்டின்கட் சொல்லியது.]

வாத முதலிய பிணிகட்கு மருந்தாவன அவற்றிற்கு நிதான மாயினவன்றி, மாறாய வியல்பினை யுடையனவாம்; அவ்வாறன்றி இவ்வணியிழையினை யுடையாள் தன்னினாய பிணிக்கு மருந்துந் தானே யாயினாள்.

**மணக்:**

நோயுற்றால் அதற்கு மருந்தாவது பிறிதொன்று; இவ்வணி யிழையால் வந்த நோய்க்குக் காரணமாகிய இவள், தானே மருந்தாயினாள்.

இது புணர்வதன் முன்னின்ற வேட்கை தணிந்தமை கூறிற்று.

**மு·கோ:**

பெண்ணைத் தவிர்த்து வேறு வழிகளில் காமநோயை மறுக்கவோ தீர்க்கவோ புகுந்தால் பிணிகள் பலவாம் என்பது கருத்து. இது விழையத் தக்க இன்பநோய்.

**முடிநிலை:**

பரிமேலழகர் உரையில் வரும் நிதானம் என்பதற்கு முதற் காரணம் என்பது பொருள். தலைவன் புணர்ந்து முன்நின்ற வேட்கைநோய் தணிந்தான் என்று இக்குறட்கு விளக்கமாக மணக்குடவர் எழுதியிருத்தல் தெளிவு பயக்கும். 'தன்னோய்க்குத் தானே மருந்து' என்றதன் கருத்து வாங்கி மு.கோ. விளக்கி யிருத்தல் காண்க.

**1103. தாம்வீழ்வார் மென்றோட் டுயிலி னினிதுகொ றாமரைக் கண்ணா னுலகு.**

**பரிமே:**

[நிரதிசய இன்பத்திற்குரிய நீ இச் சிற்றின்பத்திற்கு இன்னையாதல் தகாது என்ற பாங்கற்குச் சொல்லியது]

ஐம்புலன்களையும் நுகர்வார்க்குத் தாம் விரும்பும் மகளிர் மெல்லிய தோளின்கண் துயிலுந், துயில் போல, வருந்தாம லெய்தலாமோ; அவற்றைத் துறந்த தவயோகிகள் எய்துஞ் செங்கண்மா லுலகம்?

இந்திரனுலகு என்றுரைப்பாரு முளர்; தாமரைக்கண்ணான் என்பது அவனுக்குப் பெயரன்மையின் அஃது உரையன்மையறிக.

**மணக்:**

தம்மால் விரும்பப் படுவாரது மெல்லிய தோளின் கண் துயிலும் துயிலினும் இனிதோ? இந்திரனது சுவர்க்கம்.

இது சுவர்க்கத்தின்பமும் இது தானே என்று கூறியது.

**காளிங்:**

நெஞ்சே! நாம் விரும்புதற்கு உரிமை யுடையோர் தமது மென்தோள் மேவித்துயிலும் துயிலின் இனிமை போல இனிதோ தான்? இது அன்று; யாதெனின் ஆயிரம் வேள்வியின் எய்துவாராக அருமறை கூறும் அயனுலகுஆண்டு உறும் இன்பம்.

தாமரைக் கண்ணான் என்பது தாமரையிடத்தான் என்றது; மாயவன் உறையும் வைகுந்த உலகம் என்றும் ஆம்.

**குழந்தை:**

மனையோடு கூடி வாழும் இல்லற இன்பத்தை விட மனைவியைப் பிரிந்து அடைவதாக நீங்கள் கூறும் தாமரைக் கண்ணானுலகின்கண் மிகுதியான இன்பம் உண்டோ என அயலார் கொள்கையை மறுத்துக் கூறியது.

மென்றோள் துயில்— புணர்ச்சி இன்பம்; தாமரைக் கண்ணானுலகு — வடபுலத்தார் வாழ்விடம் என்ப

**வெ. இராம:**

பக்தி ஞான ஒழுக்கத்தால் பாசங்களை விட்டொழித்த சீவான்மா ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு வைகுந்தத்தில் பரமான்மாவாகிய நாராயணனுடைய திருமேனியைத் தழுவிக் கொண்டிருக்கும் மேலான இன்பத்தை அனுபவிக்கலாம் என்றும் அந்த குறிப்பிட்ட காலத்துக்குப்பின் மீண்டும் பிரிந்து பிறவியெடுக்க வேண்டும் என்றும் சொல்வது வைணவ சித்தாந்தம், அக்கருத்துப்படி நாராயணனைத் தழுவிக் கொண்டு காலந்தள்ளும் இன்பத்தை விடப் பெரிய இன்பம் தன் காதலியைத் தழுவிக் கொண்டு படுத்திருப்பது என்று புணர்ச்சியில் மகிழும் காதலன் சொல்லுகின்றான்.

**வரத:**

தாமரைக் கண்ணானுலகு என்றது பூமேல் நடந்தானது உலகமாகிய வீட்டுலகம் என்பாரும் உளர்.

**வை.மு.கோ:**

தாமரைக் கண்ணான் என்பதற்கு அடியாரின் இதயத் தாமரையிடத்து வீற்றிருக்குங் கடவுள் எனப் பொதுவாகக் கடவுளைக் காட்டு மென்பாருமுளர்.

**தேவ:**

இனி, 'இனிது' என்பதற்கு 'எளிது' என்று பரிமேலழகர் பொருள் கொண்டதும் தவறாம். 'தோட்டுயில்' என்பது இடக்கரடக்கல். 'கொல்' வினாவிடைச் சொல். திருமாலுக்குத் தாமரைக் கண்ணான் என்னும் பெயர் கண்ணன் தோற்றரவி னின்று தோன்றியதாகும்.

**முடிநிலை:**

'தாமரைக் கண்ணானுலகு' என்பதற்குத் திருமால் உலகம், இந்திரனது சுவர்க்கம், அயனதுலகம், பூமேல் நடந்தானது உலகம், வடபுலத்தார்வாழ்விடம், இதயத் தாமரையில் வீற்றிருக்குங் கடவுள் என்றெல்லாம் பொருள் கூறுவர். தாமரைக்கண்ணான் என்பதற்குத் தாமரையிடத்தான் (அயன்) எனக் காளிங்கர் கொள்ளும் பொருளும் அடியார் உள்ளத் தாமரையில் தங்கும் கடவுள் எனப் பிறர் கொள்ளும் பொருளும் பொருந்தா. 'கண்ணான்' என்பதில் இடையில் நிற்கும் கண் என்பதற்கு இடப்பொருள் கொண்டு பின் ஆன் விகுதி, ஏறிற்றென்றல் மரபன்று. 'புவ்வத் தாமரை புரையும் கண்ணன்' (பரிபாடல், 15:49) என்றும் 'கண்ணும் திருவடியும் கையும் திருவாயும், செய்ய கரியவனை (சிலம்பு: காதை 17) என்றும் திருமால் குறிக்கப் பெறுதலின் பரிமேலழகர் உரையே தகுவது. சீவான்மா வைகுந்தத்தில் திருமேனியைத் தழுவிக் கொண்டிருக்கும் என்பதும் அதன்பின் மீண்டும் பிறவியை யெடுக்கும் என்பதும் திருமாலியக் கோட்பாடுகள் அல்ல என்று அச்சமய வல்லார்வாய்க் கேட்டறிந் தமையான் இராமலிங்கம் பிள்ளை உரை ஏலாது. 'இனிது' என்பதற்கு எளிது என்னும் பரிமேலழகர் உரையினும் இன்பந் தருவது என்னும் மணக்குடவர் உரை ஏற்கும்.

**1104. நீங்கிற் றெறூஉங் குறுகுங்காற் றண்ணென்னுந்
தீயாண்டுப் பெற்றா ளிவள்.**

**பரிமே:**

[பாங்கற் கூட்டத் திறுதிக்கட் சொல்லியது].

தன்னை யகன்றுழிச் சுடாநிற்கும், அணுகுழிக் குளிரா நிற்கும், இப்பெற்றித்தாய தீயை என் கண் தருதற்கு இவள் எவ்வுலகத்துப் பெற்றாள்?

**மணக்:**

தன்னை நீங்கின இடத்துச் சுடும், குறுகின இடத்துக் குளிரும், இத்தன்மையாகிய தீ எவ்விடத்துப் பெற்றாள் இவள்?

இது புணர்ச்சி வேட்கையால் கூறுதலான், புணர்ச்சி மகிழ்தலாயிற்று.

**பரிப்:**

இரண்டாம் கூட்டத்துக் கூடலுற்ற தலைமகன் தலைமகள் கேட்பது பயனாகத் தனது வேட்கை தோன்றச் சொல்லியது.

**முடிநிலை:**

இளம்பூரணர் களவின்கண் தலைவனுக்கு நிகழும் கூற்றுக்களுள் 'பெற்றவழி மகிழ்ச்சியும்' என்பதற்கு இக்குறளை மேற்கொள் காட்டுவர். (தொல்காப்பியம், பொருள் 99)

நச்சினார்க்கினியர் இடந்தலைப்பாட்டில் தலைவியை நீங்கிய வழிப் பிறந்த வருத்தம் தலைவன் கூறியதற்கு மேற்கொள் காட்டுவர். (தொல்காப்பியம். பொருள், 102)

உரையாசிரியர்கள் சிலர் இக்குறளை இடந்தலைப் பாட்டிற் கூறியதாகவும் சிலர் பாங்கற் கூட்டத்திற் கூறியதாகவும் கொண்டுள்ளனர். இப்பாகுபாட்டின்படி குறள் அமையாமையின்

களவுக் கூற்றாக இளம்பூரணர் கொண்டாங்குக் கொள்ளலாம். 'நீங்கின் தெறூஉம்' என்பது கண்டு தலைவியை நீங்கிய வழிப் பிறந்த வருத்தத்தைத் தலைவன் கூறியாத நச்சினார்க் கினியரும் 'குறுகுங்கால் தண்ணென்னும்' என்பது கண்டு தலைவியைப் பெற்ற வழித் தலைவன் மகிழ்ச்சி கூறியதாக இளம்பூரணரும் உரைப்பாராயினர். இக்குறட்கு அடிப்படையான வேறுபாடில்லை.

**1105. வேட்ட பொழுதி னவையவை போலுமே**
**தோட்டார் கதுப்பினா டோள்.**

**பரிமே:**

[தோழியிற் கூட்டத்து இறுதிக்கண் சொல்லியது.]

மிக இனியவாய பொருள்களைப் பெறாது அவற்றின்மேல் விருப்பங் கூர்ந்த பொழுதின்கண் அவையவை தாமேவந்தின்பஞ் செய்யுமாறு போல இன்பஞ் செய்யும்; எப்பொழுதும் பெற்றுப் புணரினும் பூவினை யணிந்த தழைந்த கூந்தலினை யுடையாள் தோள்கள்.

**மணக்:**

காதலித்த பொழுது காதலிக்கப்பட்ட அவ்வப் பொருள்களைப் போலும், தோளின்கண் தாழ்ந்த கூந்தலினை யுடையவள் தோள்.

தோள் தாழ் கதுப்பு-புணர்ச்சிக் காலத்து அசைந்து தாழ்ந்த கூந்தல்.

'தோட்டாழ்' என்பது இவர் பாடம்.

**பரிதி:**

ஆயிரம் யாகம் வேட்ட இன்பத்துக்கு அளவு என்றாலும் அதற்கு அகப்படா இன்பந்தான் நாயகியான் ஆயது.

**வெ. இராம:**

பூவிதழின் அருமையுள்ள கன்னங்களை யுடைய காதலியின் தோள்கள் நான் விரும்பின உடனே எவை எவைகளை நினைக்கிறேனோ அவை அவைகளைப் போலவே இன்பமளிக்கின்றன.

என் காதலியின் மேனி நான் அவளுடைய அங்கங்களில் எது எதை எது எதுவாக எண்ணி விரும்பினாலும் உடனே அது போலவே இன்பமளிக்கும் பெருமையுள்ளது என்பது கருத்து.

**வரத:**

எல்லாப் பொருள்களாலும் கிடைக்கும் இன்பத்தை இந்தப் பெண்ணாகிய பொருள் ஒன்றே கொடுக்கிறது. இந்தப் பெண் இருந்தால் வேறு ஒரு விருப்பப் பொருளும் இந்த உலகில் எனக்கு இல்லை என்று மகிழ்கிறான். உலகம் ஐந்து பூதங்களால் ஆகியது. ஐந்து பூதங்களும் ஐந்து புலனின்பத்திற்குரியன. எனவே ஐம்புல இன்பத்தையும் ஒரு சேரக் கொடுக்கும் இவளே உலகப்பொருள் அனைத்துமாக இருந்து இன்பம் கொடுக்கிறாள் என்று மகிழ்கிறான்.

**அருளப்பா:**

பெண்ணின் தோளைச் சேர்வது விரும்பிய அளவுக்கு இன்பம் தருவது போல, இறைவனோடு உள்ளத்தால் இணைதலும் விரும்பிய அளவுக்கு-ஆர்வம் உள்ள அளவுக்கு-இன்பம் தரும்.

**கண்ணதாசன்:**

மனோரஞ்சிதம் எதை நினைத்து முகர்ந்தாலும் அந்த வாசனையைத் தரும். அதைப் போலவே பஞ்சணை என்றால் பஞ்சணை; மூங்கில் என்றால் மூங்கில்; வாழை என்றால் வாழை; நினைப்பதை எல்லாம் காட்டும் தோள்கள் இந்த நேரிழையாள் தோள்கள்.

(காமத்துப்பால் உரை)

**முடிநிலை:**

'தோட்டாழ்' எனப் பாடங் கொண்டிருத்தலின் மணக்குடவர் உரை வேறுபடுகின்றது. இப்பாடம் அத்துணைச் சிறப்பிலது. 'வேட்ட பொழுதின்' என்பதற்கு வேள்வியை இயைத்துக் கூறும் பரிதி உரை ஏற்கத் தக்க தன்று. தோட்டார் என்னும் அடை வருதலின் கதுப்பு என்பதற்குக் கன்னம் என்று பொருள் கோடல் செவ்விதன்று. உலகப் பொருள் அனைத்துமாக இருந்து தலைவி இன்பம் கொடுக்கிறாள் என்னும் வரதராசனார் விளக்கத்திற்கு 'வேட்ட பொழுதின் அவையவை போலுமே' என்னும் தொடர் இயையவில்லை. இறைவனோடு உள்ளத்தால் இணைதலும் விரும்பிய அளவுக்கு இன்பந்தரும் என இக்குறளின் முற்பகுதிக்கு அருளப்பா எழுதியிருப்பது வலிந்துரையாகும். இதற்கு மற்றை உரையாசிரியர்கள் எல்லாம் சிறு சிறு வேறுபாடு தோன்ற விளக்கம் தந்துள்ளமை காண்க. இளம்பூரணர் இது இயற்கைப் புணர்ச்சித்துறையன்று. இடந்தலைப் பாட்டின்கண் தலைமகன் கூறியது. நுகர்ச்சி பெற்றது என்பர். (தொல்காப்பியம், பொருள்-99)

**1106.** **உறுதோ றுயிர் தளிர்ப்பத் தீண்டலாற் பேதைக்
கமிழ்தி னியன்றன தோள்.**

**பரிமே:**

(தோழியிற் கூட்டத் திறுதிக்கட் சொல்லியது)

தன்னைப் பெறாது வாடிய என்னுயிர் பெற்றுறுந்தோறுந் தளிர்க்கும் வகை தீண்டுதலான், இப்பேதைக்குத் தோள்கள் தீண்டப்படுவதோர் அமிழ்தினாற் செய்யப்பட்டன,

**மணக்:**

சாருந்தோறும் என் உயிர் தழைப்பச் சார்தலால், பேதைக்குத் தோள்கள் அமுதினால் செய்யப்பட்டனவாக வேண்டும்:

சாராத காலத்து இறந்துபடுவதான உயிரைத் தழைக்கப் பண்ணுதலான், அமுதம் போன்றது என்றவாறு. இது கூடின் தலைமகன் மகிழ்ந்து கூறியது.

**பரிதி:**

தென்றற் கொடுமையாலும் சந்திரன் கொடுமையாலும் வற்றின சரீரத்தை நாயகி தீண்டச் சரீரம் தளிர்க்கையினாலே, நாயகிக்கு அமுதினால் பண்ணின தோள்.

**தேவ:**

மென்மையுந் தண்மையும் இன்பமும் பற்றி 'அமிழ்தின் இயன்றன' என்றான். பேதை என்னுஞ் சொல் பருவங் குறியாது இளமை குறித்து நின்றது. 'தோள்' பால்பகா வஃறிணைப் பெயர். தழைத்தல்-கிளர்ச்சியும் உரமும் பெறுதல்.

**முடிநிலை:**

குறளெழுந்த சூழலை மணக்குடவர் 'கூடின தலைமகன் மகிழ்ந்து கூறியது' என விளக்குவர். பரிதி, தேவநேயர் உரைகளில் ஒருவகை விளக்கங் காணலாம்.

**1107. தம்மி லிருந்து தமதுபாத் துண்டற்றா**
**லம்மா வரிவை முயக்கு.**

**பரிமே:**

(இவளை நீ வரைந்து கொண்டு உலகோர் தம்மில் இருந்து தமது பாத்துண்ணும் இல்லறத்தோடு படல் வேண்டும் என்ற தோழிக்குச் சொல்லியது)

அழகிய மாமை நிறத்தையுடைய அரிவையது முயக்கம் இன்பம் பயத்தற்கண் தமக்குரிய இல்லின் கணிருந்து உலகோர் தந் தாளான் வந்த பொருளைத் தென்புலத்தார் தெய்வம் விருந் தொக்கல்கட்குப் பகுத்துத் தங் கூற்றை யுண்டாற் போலும்.

தொழில் உவமம்.

**பரிப்:**

உணவினும் அதினின் மிக்க இன்பம் தருவது இல்லை, புணர்ச்சியின் இதனின் மிக்க இன்பம் தருவது இல்லை என்று அதன் இனிமை கூறியது.

**பரிதி:**

தம்மிட அகத்திலே இருந்து தம்மிட அசனத்தைப் பொசிப்பது போல இன்பம் இல்லை; அதினும் பெரியது அரிவை முயக்கம்.

**வெ.இராம:**

என்ன வியப்பு; பெண்ணைத் தழுவி முயங்கிக் கிடப்பது (யோகியர்கள்) தம் உடம்பிலிருந்தே ஒரு பகுதி (சத்தை) உணவாக உட்கொண்டு (உலகத்தை மறந்து) இருப்பதைப் போன்றதாக இருக்கிறதே.

**வரத:**

அன்பு வளர்ச்சிக்கு இல்லறம் பயன்படுவது போல, இன்ப வளர்ச்சிக்கு இவள் கூட்டுறவு பயன்படுகிறது என்பதாம். ஈதல் இன்பமானாற் போல் இவள் புணர்ச்சியும் இன்பமாய் அமைகிறது என்ற நயம் காண்க.

**அ.மு.ப:**

தலைவி தந்த இன்பத்தை எண்ணும் தலைவனுக்கு அவளோடு பின் கூடிவாழுங்கால், ஆற்றவேண்டிய அறவாழ்வோடு பகுத்துண்ணும் விருந்து புரந்தரும் விளக்கம் தெரிகின்றது இரண்டையும் இணைத்து வள்ளுவர் கூறுகின்றார்.

**கோ.சு.பிள்ளை:**

இல்வாழ்க்கையின் பண்பினால் அடையும் இன்பத்திற்கு அதன் பயனால் அடையும் இன்பமே ஒப்பானது என்று கூறி முடித்தார்.

**பழைய: (உ.வே.சா)**

பாத்து-சோறு. அம்ம என்று பாடங்கொண்டு அதற்கு அழகு எனப் பொருள் கொள்ளும். அதுவன்றித் தோழி நீ கேள் என்றும் ஆம்.

முடிநிலை:

உவமையணிபட வந்த இக்குறளுக்குப் பரிப்பெருமாளும் பரிதியும் சிறிது வேறுபட உரை செய்திருத்தல் காண்க. 'அம்மா' என்பதனை ஈண்டு வியப்பிடைச் சொல்லாகக் கொள்வர் இராமலிங்கம் பிள்ளை. திருக்குறளை ஒட்டிய காலத்து 'அம்ம' என்ற சொல்லே வியப்பிடைச் சொல்லாகப் பயிலக் காண்கிறோம். 'உண்டால் அம்ம இவ்வுலகம்' (புறம். 182) ஆதலால், 'அம்மா' என்பதை அரிவைக்கு அடைமொழியாகக் கொள்வதே சிறப் புடையது. யோகியர்களின் வாழ்க்கைப் போக்கை யறிந்து தம்மி லிருந்து தமது பாத்துண்டற்று என்பதற்கு இராமலிங்கம் பிள்ளை உரை செய்துள்ளார். இவ்வுரைக் கருத்து குறள் நடைக்குச் சிறிதும் இயல்பில்லை. 'பழியஞ்சிப் பாத்தூண்' (44) எனவும் 'பாத்தூண் மரீஇயவனை' (227) எனவும் முன்வந்துள்ள குறட் பகுதிகளை நோக்கும் போதும் 'தம் இல் இருந்து' என இக் குறளில் வரும் தொடரை நோக்கும் போதும் இல்லறத்தார் செயலையே சுட்டும் என்பது தெளிவு. மேலும், தம்மிலிருந்து என்பதற்குத் தம்முடம்பிலிருந்து எனப் பொருள் கொண்டுள்ளார். என்னிடமிருந்து, உன்னிடமிருந்து என்பன போன்ற நடை வழக்கு திருக்குறட் காலத்திற்குப் பிந்தியது. அத்தொடர்களில் வரும் 'இருந்து' என்பதைப் பிற்காலத்தார் சொல்லுருபு என்பர். குறட்கால நடைப்படி 'இருந்து' என்பது வினையெச்சமாகும். எளிமை, தெளிவு, மொழியியல் என்ற வகையால் நோக்கின், இக்குறட்குப் பரிமேலழகர் உரையே தகும். பாத்து என்பதற்குச் சோறு எனப் பழைய உரை பொருள் கூறுவதும் இயல்பில்லை. வரதராசனார் கூறும் பொருள் இக் குறட்கு நேர் பொருளாகாது. கருத்து வாங்கி எழுதிய ஒருவகை விளக்கம் என்னலாம். தமது பாத்துண்டலுக்கும் அரிவை முயக்கத்துக்கும் இயைபுகாட்டி எழுதும் அ.மு.ப. விளக்கம் நயமுடைத்து. 'அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது' (45) என்னும் குறட்கியைய இக்குறட்குக் கோ. 'சு' பிள்ளை தரும் விளக்கம் சிறப்பினது.

**1108.** **வீழு மிருவர்க் கினிதே வளியிடை**
**போழப் படாஅ முயக்கு.**

**பரிமே:**

(ஒத்த அன்புடைய நுமக்கு ஒரு பொழுதும் விடாத முயக்கமே இனியது என வரைவு கடாய தோழிக்குச் சொல்லியது.)

(நீ சொல்லுகின்ற தொக்கும்;) ஒரு பொழுதும் நெகிழாமையிற் காற்றால் இடையறுக்கப்படாத முயக்கம் ஒருவரை யொருவர் விழைவா ரிருவர்க்கு மினிதே.

ஈண்டு இருவரில்லை; இன்மையான் இஃது ஒவ்வாது என்பது கருத்து. களவிற் புணர்ச்சியை மகிழ்ந்து வரைவுடன்படான் கூறியவாறு.

**மணக்:**

ஒத்த காதலுடையார் இருவர்க்கும் இனிதாம் காற்றால் இடையறுக்கப் படாத முயக்கம்.

இது புணர்ச்சி விருப்பினால் கூறினமையால் புணர்ச்சி மகிழ்தலாயிற்று. இது குறிப்பினால் புகழ்ந்தது.

**பரிப்:**

என்றது இடையறுதல் இல்லாத முயக்கம் என்றவாறாயிற்று. தோழியிற் கூடியதலைமகன்பகற்குறியாயினும் இரவுக்குறியாயினும் ஒழுகா நின்றுழிக் காவல் கடுகுதல், நிலவுவெளிப்பாடு, அல்லகுறி முதலாயின வற்றால் இடையீடுபட்ட தலைமகட்குத் தன்வயின் உரிமையும் அவன்வயிற் பரத்தமையும் தோற்ற ஊடற் குறிப் பினால் தலைமகன் கூறியது.

**முடிநிலை:**

பரிமேலழகரும் மணக்குடவரும் இக்குறளைத் தலைவன் கூற்றாகக் கொள்ளினும் துறைகள் வேறுபட்டுள. மணக்குடவரின் துறைக்கு ஒரு விளக்கமாகப் பரிப்பெருமாளின் துறை யமைந் துள்ளது, 'அவன்வயிற் பரத்தமையும் தோற்ற ஊடற் குறிப் பினால் தலைமகன் கூறியது' என்னும் பரிப்பெருமாள் துறையில்

வரும் பகுதிக்குத் தலைவனின் பரத்தமை காரணமாகத் தலைவி யிடம் தோன்றிய ஊடற் குறிப்பினால் அவன் கூறியது என்று பொருள் கொள்ள வேண்டும். வரைவு கடாய தோழிக்குத் தலைமகன் மறுத்துக் கூறுவதாகக் கொள்ளும் பரிமேலழகர் துறையினும் களவில் கூடிமகிழ்ந்த தலைவன் தன் நிலையைப் புலப்படுத்தியதாகக் கொள்ளும் பிறர் உரைகள் சிறப்பின.

**1109.** **ஊட லுணர்தல் புணர்த லிவைகாமங்**
**கூடியார் பெற்ற பயன்.**

**பரிமே:**

(கரத்தல் வேண்டாமையின் இடையறவில்லாத கூட்டமே இன்பப் பயனுடைத்து என வரைவு கடாவியாட்குச் சொல்லியது)

புணர்ச்சி யினிதாதற் பொருட்டு வேண்டுவதாய ஊடலும், அதனை யளவறிந்து நீங்குதலும், அதன் பின் நிகழ்வதாய அப் புணர்ச்சி தானுமென இவை யன்றே, வரைந்து கொண்டு காமத்தை யிடைவிடா தெய்தியவர் பெற்ற பயன்கள்.

ஆடவர்க்குப் பிரிவு என்பது ஒன்று உளதாதன் மேலும் அதுதான் பரத்தையர் மாட்டு ஆதலும், அதனை யறிந்து மகளிர் ஊடி நிற்றலும், அவ்வூடலைத் தவறு செய்தவர் தாமே தம் தவறின்மை கூறி நீக்கலும், பின்னும் அவ்விருவரும் ஒத்த அன்பினராய்க் கூடலுமன்றே முன் வரைந்தெய்தினார் பெற்ற பயன்; அப்பயன் இருதலைப் புள்ளின் ஒருயிராய உழுவலன் புடை எமக்கு வேண்டா என அவ் வரைந்தெய்தலை இகழ்ந்து கூறியவாறு.

**மணக்:**

ஊடுதலும், ஊடல் தீர்தலும், பின்னைப் புணர்தலும் என்னும் இவை அன்பினால் கூடினார் பெற்ற பயன்.

காமம்—அன்பு. புணர்தல் எனினும் பேணுதல் எனினும் ஒக்கும். ஊடற் குறிப்புத் தோன்ற நின்ற தலைமகளை ஊடல் தீர்த்துப் புணர்ந்த தலைமகன் அதனால் வந்த மகிழ்ச்சி கூறியது.

**பரிதி:**

ஊடலும் ஊடிக் கூடவேண்டும் என்று நினைத்தலும் புணர்தலும் காம மகிழ்வார் பெற்ற பயன்.

**காளிங்:**

நெஞ்சே! இன்னமும் கேளாய், இவ்வளவின்றிப் பலவுள: அவை யாவை எனில் ஊடி இன்புறுதலும், அவ்வூடல் தீர்த்தற்குப் பணிதலும், பணிந்து, பணிமொழி கூறி இன்புறுதலும், ஊடல் தீர்ந்த விடத்து செறியக் கலந்து இன்புறுதலும் என்னும் இவை எல்லாம் காம இன்பக் கலவியைக் கலந்தார் பெற்ற பெரும்பயன்.

**வெ. இராம:**

பிரிதல் மறுபடியும் காம உணர்ச்சி கொள்ளுதல், மறுபடியும் புணர்தல் இவை காமப் புணர்ச்சியிற் கலந்த காதலர்கள் கண்ட பயன்.

ஊடல்—பிரிதல்; உணர்தல்—மறுபடியும் காம உணர்ச்சி கொள்ளுதல்.

**சி. இலக்:**

ஊடலும், ஊடல் காரணத்தை அறிதலும், கூடலும், ஆய இவைகள் திருமணம் செய்து கொண்டு இன்பத்தை இடைவிடாது அடைபவர் அடையும் பயன்களாம்.

**கு ச. ஆ:**

இருவருடைய உடலின்பமும் இனிதாக அமையும் பொருட்டு ஊடல் தேவை என்கிறார். இருவருடைய உள்ளங்களிலும், உடற் கூறுகளிலும் ஒத்திசையும் தன்மை இருப்பதற்காக ஒருவர் மற்றவரின் குறை நிறைகளை உணர்ந்து, தத்தம் இன்பத் துய்ப்பில் ஒருதலையான இன்பத்தையே பெரிதும் கருதாமல் இருவருடைய உடல் நிலையிலும், உணர்விலும், இன்பத்திலும் சமனிய நிலை ஏற்படுமாறு ஒருவருக் கொருவர் நேர்செய்து கொள்வதை உணர்வதுதான் ‘உணர்தல்’.

முடிநிலை:

ஊடல் என்பதற்குப் பிரிதல் என்றும் உணர்தல் என்பதற்குக் கூடவேண்டும் என நினைத்தல், காம உணர்ச்சி கொள்ளுதல என்றும் கூறும் பொருள்கள் சிறப்பில. உணர்தல் என்பதற்கு ஊடல் காரணத்தை அறிதல் என்னும் இலக்குவனார் பொருள் தரும். இதற்குக் கு.ச.ஆ. எழுதும் விளக்கமும் ஏற்கலாம். களவில் வரைவு மறுக்குந் தலைவன் கூற்றாகப் பரிமேலழகரும் கற்பில் ஊடல் தீர்த்துக் கூடி மகிழும் தலைவன் கூற்றாக மணக்குடவரும் கொள்வர். ஊடலும் உணர்தலும் வரைந்து கொண்ட இவ்வொழுக்கம் உடையார்க்கே உரியவாகலின், களவியல் கூறும் பகுதிக்குப் பொருந்தாது எனப் பரிமேலழகர் வரைந்தாராகிய பிறர்மேல் வைத்து அவை எமக்கு வேண்டாம் என்ற குறிப்பினனாகத் தலைவன் கூறினான் எனத் தண்டபாணி தேசிகர் தம் குறிப்புரையில் எடுத்துக் காட்டுவர். பரிமேலழகர் காமத்துப்பாலைப் பகுத்துக் கொண்ட இயல்முறைக்குக் களவுக் கைகோளாகக் கூறுவது பொருந்தும். எனினும் வரைவு மறுக்குந் தலைவன் கூற்றாகக் கொள்ளுந் துறை பொருத்தமாகப் பட வில்லை. இல்லறப்பயன்களைத் தோழி சுட்டிக்காட்டி வரைவு கடாவுதலாகத் துறை கூறின் பொருத்தமாகலாம். ‘வீழுமிருவர்க் கினிதே’ எனத் தொடங்கும் முற்குறளுக்கும் இத்துறை ஏற்பதாகும்.

**1110. அறிதோ றறியாமை கண்டற்றாற் காமஞ்**
**செறிதோறுஞ் சேயிழை மாட்டு.**

**பரிமே:**

(புணர்ந்துடன் போகின்றான் தன்னுள்ளே சொல்லியது.)

நூல்களானும் நுண்ணுணர்வானும் பொருள்களை யறிய வறிய, முன்னை யறியாமை கண்டாற் போலக் காணப்படா நின்றது; சிவந்த இழையினை யுடையாளை இடைவிடாது செறியச் செறிய இவண்மாட்டுக் காதல்.

அறிவிற் கெல்லை யின்மையான் மேன் மேல் அறியவறிய முன்னையறிவு அறியாமையாய் முடியுமாறு போலச் செறிவிற் கெல்லையின்றி மேன்மேற் செறியச் செறிய முன்னைச் செறிவு செறியாமையாய் முடியா நின்றது எனத் தன்னாராமை கூறியவாறு.

**பழைய: (உ.வே.சா)**

அறிய அறிய அறிவு மிகுதியாதல் போல நாயகியைச் செறியச் செறியக் காமம் மிகுந்தது.

**அ.மு.ப:**

காதலின்பம் பின் இல்லற வாழ்வில் புதுப்புதுக் கடமைகளை அவர்களுக்கு உணர்த்தப் போகின்றது. இளையராய் மற்றவர் பொறுப்பில் வாழ்ந்த அவர்கள் இருவரும் தனியராய் இல்லறம் ஏற்கும் போது, எத்தனையோ புதுப்புது உண்மைகளை அறியவேண்டியிருக்கும். புதிதுபுதிதாகப் பலப்பல உண்மைகளை அறிய, அவர்தம் அறியாமையை அவர்களே எண்ணி வியக்க வேண்டியுள்ளது. காமத்தோடு அந்தக் காட்சியும் தலைவனுக்குப் புலனாகிறது. பெரிதாகிய காமம் இந்தப் பேருண்மையையும் அவனுக்கு உணர்த்துகிறது.

(வள்ளுவர் வகுத்த வாழ்க்கை நெறி, ப. 45)

**கண்ணதாசன்:**

ஒரு புத்தகத்தைப் படிக்கப் படிக்க இன்னும் படிக்க வேண்டியவை நிறைய இருக்கின்றது என்று தோன்றுகிறது. அதுபோலவே இவளோடு பழகப் பழக இன்னும் பழக வேண்டியதும் பார்க்க வேண்டியதும் அதிகம் என்றே தோன்றுகிறது.

(காமத்துப்பால் உரை)

**முடிநிலை:**

இக்குறளுக்கு விளக்க வகையில் உரைகளிடையே சிறு சிறு வேறுபாடு காணப்பெறும். அடிப்படைப் பொருள் வேறுபாடில்லை. பின்நிகழும் இல்லற வாழ்வோடு இயைபுபடுத்தி எழுதும் அ.மு.ப. விளக்கம் தெளிவுடையது.

# 112. நலம்புனைந்துரைத்தல்.

அஃதாவது தலைமகன் தலைமகள் நலத்தைப் புனைந்து சொல்லியது. இது புணர்ச்சி மகிழ்ந்துழி நிகழ்வதாகலின் புணர்ச்சி மகிழ்தலின் பின் வைக்கப்பட்டது என அதிகார விளக்கமும் முறைவைப்பும் கூறுவர் பரிமேலழகர்.

நலம் புனைந்துரைத்தலாவது, தலைமகளது நலத்தினை அலங்கார வகையாற் கூறுதல். புனைந்துரை எனினும், பாராட்டு எனினும், கொண்டாட்டு எனினும், மகிழ்ச்சி எனினும் ஒக்கும் என விளக்கம் தருவர் மணக்குடவர்.

புணர்ச்சியால் மகிழ்வுற்ற தலைமகன் பிரியக் கருதின காலத்துப் புணராத முன்னின்ற வேட்கை புணர்ந்த பின்னும் அப்பெற்றியே நிற்றலின், இத்தன்மையாளை யாங்கனம் பிரிந்து ஆற்றுகேம் என்னும் கவர்ச்சியால் நெஞ்சு மிக்கது வாய்சோர்ந்து தன்னை அவள் காணாமல், தான் அவளைக் காண்பது ஓர் அணுமைக்கண் நின்று பாராட்டுகின்றான் ஆதலின் பிற் கூறப் பட்டது. இவ்வாறு கூறுதலானே தலைமகற்குச் சிறிது வேட்கை தணியும். இதனைத் தலைமகள் கேட்டலினாலே இவன் அன்புடையன் கொல்லோ என்றும், இப்புணர்ச்சி இன்னும் கூடுமோ என்றும் சொல்கின்ற கவர்ச்சி நீங்கும். "மதியும் மடந்தை முகனும் அறியா". இதுதலைமகன் கண் ணுள்ளதோர் மெய்ப்பாடு. இது பிரிதற்குறிப்பு ஆதலின் பிரிந்து கூடலின் முன் கூறப்பட்டது, இது தலைமகட்கு உரித்து அன்றோ எனின், உரித்து ஆயினும் குறிப்பினான் அல்லது கூற்றினான் நிகழாமையின் கூறார் ஆயினார் என்பர் பரிப்பெருமாள்.

உள்ள அழகினை மிகைப்படுத்திப் பேசுவது, நலம் புனைந் துரைத்தலாகும். பொருளின் அளவு வேறு. அவரவரின் நிலை வேறு. பொருளின் அளவு உயர்ந்த தாயினும் பற்றில்லை என்றால் மதிப்பீடு குறையும். பொருளின் அளவு தாழ்ந்த தாயினும் பற்று மிகுமானால் பற்றின் அளவுக்கு, உள்ளதினும் அதிகமாகப் பொருளை மதிக்கும். இங்கே காதலிக்கப்பட்டவளாகிய தலைவி யின் அழகினை, உள்ளதினும் அதிகமாகப் புனைந்துரைப்பதன்

மூலம் மனோதத்துவத்தினை ஆசிரியர் விளக்குகிறார். அடைந்த இன்பத்தை எண்ணி மகிழ்ந்த பிறகு அவைகளைப் புகழ்ந்து பேசுவதால் அதிகார முறைமையும் விளங்கும் என விளக்குவர் வரதராசனார்.

**1111. நன்னீரை வாழி யனிச்சமே நின்னினு
மென்னீரள் யாம்வீழ் பவள்.**

**பரிமே:**

(இயற்கைப் புணர்ச்சி இறுதிக்கட் சொல்லியது).

அனிச்சப் பூவே வாழ்வாயாக! மென்மையால் நீ யெல்லாப் பூவினும் நல்ல இயற்கையை யுடையை; அங்ஙனமாயினும் எம்மால் விரும்பப்பட்டவள் நின்னினும் மெல்லிய இயற்கையை யுடையள்.

இன்னீரள் என்று பாடமோதுவாரு முளர்.

**அருணா:**

அனிச்சப்பூவே, நீயெல்லாப் பூக்களினும் மிருதுவான குண முடையாய்; அப்படி யிருந்தாலும் என்னால் விரும்பப்பட்டவள் நின்னைப் பார்க்கிலும் மிருதுவான தன்மை யுடையாள். இத் தன்மையுடையாளை விசேடித்துப் பேசுதற்கு நீ எல்லையா யிருந்தமையால் நீ யென்றும் வாழ்வாயாக என்பதாம்.

எல்லை-அளவு.

**தண்ட:**

நலம் புனைந்துரைத்தல் என்பது புணர்ச்சியின் மகிழ்ந்த பின் நிகழ்வது ஆதலின், அவன் புனைந்துரைப்பது பிரிவிற் குறிப்பாதலின் அதனை யுட்கொண்டு தலைவி சிறிது மாறு பட்டாள். அதனை யுணர்ந்த தலைவன் தலைவியின் மென்மையைப் புகழ்பவன் போல மோந்தாலல்லது அனிச்சம் வாடாது; இவள் பிரிவுண்மையை நலம் புனைந்துரைக்கும் இதனானே உட்கொண்டு வாடினாள் ஆதலின் இவள் நின்னினும் மெல்லியள் என்றான்.

**பூ.அ:**

இவ்வாறாக, நலம் புனைந்துரைத்தல் அதிகாரத்தின் தலைக் குறளாக (முதற்குறள்) அவளின் உடல் மென்மையையும் இடைக் குறளாக (ஐந்தாம்குறள்) அவள் இடைமென்மையையும் அடிக் குறளாக (பத்தாம் குறள்) அவள் அடிமென்மையையும் அனிச்சப் பூக் கொண்டு காட்டுகின்ற முதற்பாவலரின் புலமையை அறியுந் தோறும் அவரைப்பற்றிய நமது முன்னைய அறியாமை விளங்கித் தோன்றுகிறது.

(வள்ளுவர்கண்ட உயிரினங்கள், ப.28)

**முடிநிலை:**

'வாழி' என்பதற்கு அருணாசலக் கவிராயர் காட்டும் காரணமும் 'நின்னினும் மென்னீரள்' என்பதற்குத் தண்டபாணி தேசிகர் கூறும் விளக்கமும் பாராட்டத்தக்கன. இவ்வதிகாரத்தில் இடம் பெறும் அனிச்சப்பூவிற்கு முறைவைப்புக் காரணம் காட்டி எழுதும் பூ. அமிர்தலிங்கனார் விளக்கம் நயமுடைத்து.

**1112. மலர்காணின் மையாத்தி நெஞ்சே யிவள்கண்
பலர்காணும் பூவொக்கு மென்று.**

**பரிமே:**

[இடந்தலைப் பாட்டின்கண் சொல்லியது]

நெஞ்சே! யானே காணப்பெற்ற இவள் கண்களைப் பலரானுங் காணப்படும் பூக்கள் ஒக்கு மென்று கருதித் தாமரை, குவளை, நீலம் முதலிய மலர்களைக் கண்டால் மயங்காநின்றாய்; நின் அறிவு இருந்தவாறு என்!

**மணக்:**

இது கண் பூவினது நிறம் ஒக்குமாயினும் குணம் ஒவ்வாது என்று கூறிற்று.

**பரிதி:**

நெஞ்சே! தாமரை, செங்கழுநீர் இவற்றைக் கண்டால் மயங்குகின்றாய்; அவைகள் நாயகி கண்ணைக் கண்டால் நாணும்; நாயகி கண்போல வண்ணம் பெற்றோம், விரகப்பார்வை அறியோம் என்று தலையிறக்கிடும்.

**முடிநிலை:**

'பலர் காணும் பூ' என்று ஆசிரியரே கண்ணோடு மலருக்குள்ள வேறுபாட்டினை வெளிப்படையாகக் கூறி யிருப்பவும், பரிதி பூவுக்கு விரகப்பார்வை இல்லை என்பதை ஒரு வேறுபாடாகக் கூறுதல் வேண்டுவதின்று.

**1113.** **முறிமேனி முத்த முறுவல் வெறிநாற்றம்**
**வேலுண்கண் வேய்த்தோ ளவட்கு.**

**பரிமே:**

[கூட்டுதலுற்ற பாங்கற்குத் தலைமகன் தலைமகளது இயல்பு கூறியது.]

வேய்போலுந் தோளினை யுடையவட்கு நிறந் தளிர்நிற மாயிருக்கும்; பல்லு முத்தமா யிருக்கும்; இயல்பாய நாற்றம் நறுநாற்றமா யிருக்கும்; உண்கண்கள் வேலா யிருக்கும்.

**பரிதி:**

மாந்துளிர் மேனியும், முத்து நகையும், தாமரைப்பூ நாற்றமும், வேல் போல் கண்ணும், மூங்கில் போல் தோளும் உடையவள்.

**முடிநிலை:**

'முறிமேனி' என்றே குறளில் இருப்பவும் மாந்துளிர் மேனி என்றும் 'வெறிநாற்றம்' என்றே இருப்பவும் தாமரைப் பூ நாற்றம் என்றும் பரிதி தம் உரையில் விளக்கி யுரைத்தல் காண்க.

**1114.** **காணிற் குவளை கவிழ்ந்து நிலனோக்கு**
**மாணிழை கண்ணொவ்வே மென்று.**

**பரிமே:**

[பாங்கற் கூட்டத்துச் சென்று சார்தலுறுவான் சொல்லியது.]

குவளைப் பூக்கள் தாமும், காண்டல் தொழிலை யுடைய வாயின், மாண்ட இழையினை யுடையாள் கண்களை யாமொவ்வே மென்று கருதி அந்நாணினால் இறைஞ்சி நிலத்தினை நோக்கும்.

**காளிங்:**

நெஞ்சே! யான் அழகுடையே னென்று இங்ஙனம் தன்னை மதித்து வான்நோக்கிச் செவ்விதாய் நிற்கும் குவளை மற்றதுவும் நம் மாணிழையாள் கண்ணுக்கு உவமை ஒவ்வேம் என்று நாணிக் கவிழ்ந்து நிலம் நோக்கி நிற்கும் என்பது இதற்குக் காரணம் என்றான் தலைமகன்.

**இரா.முத்து:**

மலர்ந்து செம்மாந்து நிற்கும் குவளை மலரை என் தலைவி காணப்பெற்றால் அந்நோக்கினை எதிர்கொள்ள இயலாத குவளை மலர், இத்தலைவியின் (குவளைமலரினும்) மிக்கசாயல் படைத்த கண்ணின் எழிலுக்கு முன்னால் நம்முடைய எழில் எம்மாத்திரம் என்று கருதி நாணமுற்று அதன் கரணியமாய்த் தலைவி காணாதவாறு தலைகவிழ்ந்து நிலத்தை நோக்கும்.

(வெளியாகாத எழுத்துரை)

**முடிநிலை**

தலைவியைக் கண்டபின் கவிழ்ந்து நிலனோக்கும் எனக் குவளையின் பின்னிலை கூறப்படுதலின் அவளைக் காணாமுன் உள்ள அதன் முன்னிலையைக் காளிங்கர் வானோக்கி நிமிர்ந்து நிற்கும் என்று எடுத்துக் காட்டி யிருப்பது பாராட்டத் தகும். 'காணின்' என்பதிலுள்ள காண்டற் றொழிலைப் பிறரெல்லாம் குவளைமலர் மீதேற்றி யுரைக்க, இரா. முத்து தலைவியின் மேல் ஏற்றியுரைப்பர். இதுவும் ஏற்கத் தகும். தலைவியைப் பகற்குறிக் கண் பெற்று மகிழ்தலுக்கு மேற்கோளாக இளம்பூரணரும் (தொல்–பொருள்-100) தலைவன் இரவுக் குறிக்கண் பெற்று மகிழ்ந்ததற்கு மேற்கோளாக நச்சினார்க்கினியரும் (தொல்–பொருள்-103) இக்குறளைத் தத்தம் உரையில் துறை வேறுபாடு தோன்றக் காட்டியுள்ளனர்.

**1115. அனிச்சப்பூக் கால்களையாள் பெய்தா ளுசுப்பிற்கு**
**நல்ல படாஅ பறை.**

**பரிமே:**

[பகற்குறிக்கண் பூவணி கண்டு சொல்லியது.]

இவள் தன் மென்மை கருதாது அனிச்சப் பூவை முகிழ் களையாது சூடினாள்; இனி யிவளிடைக்கு நல்ல பறைகள் ஒலியா.

**வெ.இராம:**

அனிச்சப் பூவை யானாலும் காம்பு நீக்காமல் சூடினாளோ பிறகு இடுப்பிற்கு நல்ல சொல் உண்டாகாது.

பறை – சொற்கள்; படா – உண்டாகா. இடை ஒடிந்து போகும் என்பது கருத்து.

**முடிநிலை:**

இடை ஒடியும்; அதனால் சாப்பறை ஒலிக்கும் என்பதே இக்குறட் கருத்து. நல்ல சொல் உண்டாகாது என்னும் இராமலிங்கம்பிள்ளை உரை கருத்தழுத்தம் உள்ளதாக இல்லை. மேலும் பறை என்பதற்கு நேரடியாகச் சொல் என்று பொருள் கோடல் தமிழ் வழக்கன்று. பறை என்பது ஒருவகை ஓசையுடைய தோற்கருவிக்குப் பெயராதலே வழக்கு. இச்சொல் இப்பொருளிலே தான் 'அறைபறை யன்னர் கயவர்' (1076) என்றும் 'அறைபறை கண்ணா ரகத்து' (1180) என்றும் குறளில் ஏனை ஈரிடத்தும் ஆட்சி பெற்றுள்ளது.

**1116. மதியு மடந்தை முகனு மறியா**
**பதியிற் கலங்கிய மீன்.**

**பரிமே:**

[இரவுக் குறிக்கண் மதி கண்டு சொல்லியது.]

வானத்து மீன்கள், வேறுபாடு பெரிதாகவும் தம்மதியினையும் எம் மடந்தை முகத்தினையும் இது மதி, இது முகமென்றறிய மாட்டாது, தந்நிலையினின்றுங் கலங்கித் திரியாநின்றன.

இனி இரண்டனையும் பதியிற் கலங்காத மீன்கள் அறியுமல்லது கலங்கின மீன்கள் அறியா என்று உரைப்பினும் அமையும்.

**பரிப்:**

மீன் இயக்கத்தைக் கலக்கமாகக் கூறினார். அன்றியும் பதியிற் கலங்கிய மீன் அறியா என்று பாடமோதித் தம் நிலைமையி னின்றும் கலங்கின மீன்கள் மதியினையும் மடந்தை முகத்தினை யும் அறியா வாயின எனினும் அமையும். மீன்கள் கலங்கித் திரிதலானே இவள் முகம் மதியோடு ஒக்கும் என்று கூறியது.

**பரிதி:**

மதியும் மடந்தை முகமும் அறியாவாய், பதியிலும் வேறேயாய் அலைந்தன விண்மீன்கள்.

**வெ. இராம:**

சந்திரனுக்கும் பெண்ணின் முகத்துக்கும் வேற்றுமை அறிந்து கொள்ள முடியாமல் வானத்திலுள்ள நட்சத்திரங்கள் தாம் இருக்க வேண்டிய இடத்தில் மாறிவிட்டோமோ என்று குழப்பம் அடைந்தன.

கலங்கின—திகைப்படைந்தன.

சந்திரன் அருகில் இல்லாத ஒரு சமயத்தில் என் காதலியின் முகத்தைக் கண்டு அந்த நட்சத்திரங்கள் நாம் இருக்க வேண்டிய இடங்களை விட்டு மாறிவிட்டோம் போல இருக்கிறது. மீண்டும் நம்முடைய இடத்துக்குப் போய்விடலாமா என்று திகைப் படைந்தன என்பது கற்பனை.

**முடிநிலை:**

'அறியா' என்பதை எதிர்மறை வினையெச்சமாகவும் 'கலங்கிய' என்பதைப் பயனிலையாகவும் கொண்டு உரைசெய்வர் பரிமேலழகர். பரிதி உரைக்கு 'அறியா' என்பது முற்றெச்சமாகும். 'கலங்கிய' என்பதனைப் பெயரெச்சமாகவும் 'அறியா' என்ப தனைப் பயனிலையாகவும் கொண்டு உரை செய்வர் பரிப் பெருமாள். இவ்வுரையோடு பரிமேலழகர் காட்டிய இரண்டாவது

உரை ஒப்புமை யுடையதென அறியலாம். மீன்கள் மதியோடு முகத்திற்கு வேறுபாடு அறியாமையால் நிலை கலங்குகின்றன என்று பரிமேலழகர் முதல் உரைப்படி பொருள் கொள்வதே பொருந்தும். இங்ஙனம் கொள்வதில் கலக்கத்திற்குரிய காரணம் புலப்படுத்தப் படுகின்றது. அவ்வாறன்றி முன்னரே நிலை கலங்கிய மீன்கள் அறியா என்று கொண்டு கூட்டின் அறியாமைக்குக் கலக்கம் காரணமாகி விடுதலின், அப்பொருள் சிறவாமை காண்க. 'பதியிற் கலங்கிய' என்பதற்கு, நாமிருக்கும் இடத்தினின்று மாறிவந்து விட்டோமோ என்று மீன்கள் திகைப் படைந்தன என்று கூறும் இராமலிங்கம் பிள்ளை உரை பாராட்டத் தகும். தலைவியை இரவுக் குறிக்கண் பெற்று மலிந்தமைக்கு இக்குறளை மேற்கோள் காட்டுவர் இளம்பூரணர் (தொல்-பொருள்-100).

**1117. அறுவாய் நிறைந்த வவிர்மதிக்குப் போல**
**மறுவுண்டோ மாதர் முகத்து.**

**பரிமே:**

[இரவுக் குறிக்கண் மதிகண்டு சொல்லியது.]

அம்மீன்கள் அங்ஙனங் கலங்குதற்குக் காரணம் யாது? முன் குறைந்த விடம் வந்து நிரம்பியே விளங்கு மதிக்கட் போல இம் மாதர் முகத்து மறுவுண்டோ?

**காளிங்:**

நாடொறும் நாடொறும் கலை கலையாக அற்று அற்றுச் செல்கின்ற அறுவாய் மற்றொரு வழியால் நிறைவு பெற்ற மதியன்றே, ஒவ்வொரு நாளும் விரிகின்ற மதியமானது; மற்று அது தானும் அற்று அங்ஙனம் நிறைந்த விடத்துப் பின்னும் யாவரும் அறிய முயற்கை என்பதோர் அடைகறை உடைத்து; மற்று அம்மதிக்குப் போல, ஒரு மறு உளதோ நம் மாதராள் திருமுகத் திங்கள் என்று இங்ஙனம் பின்னும் நுவன்றான் தலைமகன்.

**முடிநிலை:**

'அறுவாய் நிறைந்த அவிர்மதி' என்பதற்குக் காளிங்கர் விளக்கமாக உரை வரைந்துள்ளார். அவர் உரையில் வரும் முயற்கை என்பது முயல் போன்ற களங்கத்தைக் குறிக்கும். 'அங்கண் விசும்பில் முயலும் தொழப்படூஉம்' (172) என்று நாலடியாரும் 'முயற் கருங்கறை நீங்கிய மொய்ம்மதி' (5108) என இராமகாதையும் கூறுதல் காண்க.

**1118. மாதர் முகம்போ லொளிவிட வல்லையேற்**
**காதலை வாழி மதி.**

**பரிமே:**

(இரவுக் குறிக்கண் மதிகண்டு சொல்லியது )

மதியே, வாழ்வாயாக; இம்மாதர் முகம் போல் யான் மகிழும் வகை ஒளி வீச வல்லை யாயின், நீயு மென் காதலை யுடையை யாதி.

**பரிதி:**

மாதர் முகம் போலத் தேய்தலற்று மறுவற்று விரகப் பார்வை அற்புதப் பார்வை உண்டாகில் மதியே பிரகாசிப்பாயாக; அன்றி உதயஞ் செய்ய வேண்டா.

**வெ. இராம:**

சந்திரனே! நீ பெண்களின் முகம் போல் ஒளிவீச முடியு மானால், நீயும் ஒருவனால் காதலிக்கத் தக்க பொருளாவாய்; அதன் பிறகு நான் உன்னை வாழ்த்துவேன்.

**வரத:**

ஏசந்திரனே, இந்தப் பெண்ணின் முகத்தைப் போல, நான் மட்டும் மகிழும் வண்ணம் பிரகாசத்தைக் கொடுக்கும் ஆற்றலை யானால் நீயும் விரும்பப்படுவாய்; நீ வாழ்வாயாக.

**முடிநிலை:**

இவ்வதிகாரத்துக் கூறப்பட்ட பிற கருத்துக்களை இணைத்து இக்குறளுக்கு விரிவாகப் பரிதி உரை வரைந்துள்ளார். நான் மட்டும் கண்டு மகிழுமாறு ஒளி விடுவையேல் என்னும் வரதராசனார் உரை 'பலர் காணத் தோன்றல் மதி' என்னும்

அடுத்து வரும் குறளை உட்கொண்டு எழுந்ததாகும். 'காதலை வாழி மதி' என்பதற்குப் பிறனால் காதலிக்கப்படுவை என்று இராமலிங்கம் பிள்ளை கூறுவதும் கொள்ளத்தகும். திங்கள் முதலிய அஃறிணைப் பொருள்களைக் காதலோடியைத்துப் புனைவது இலக்கிய மரபல்லது பிறிதின்மையின் என் காதலுக்கு உரியை யாவாய் என்று தலைவன் தன்னோடு இயைபுபடுத்திக் கூறுவதாகக் கொண்டு பரிமேலழகர் எழுதிய உரை மறுத்தற்குரியதன்று. இக்குறளையும் தலைவியை இரவுக்குறிக்கண் பெற்று மகிழ்ந்ததற்கு மேற்கோள் காட்டியுள்ளார் இளம்பூரணர்.

(தொல்-பொருள்-100)

**1119. மலரன்ன கண்ணாள் முகமொத்தி யாயிற்**
**பலர்காணத் தோன்றல் மதி.**

**பரிமே:**

(இரவுக் குறிக்கண் மதிகண்டு சொல்லியது.)

மதியே, இம்மலர் போலுங் கண்ணினையுடையாள் முகத்தை நீ யொக்க வேண்டுதி யாயின், இதுபோல யான் காணத்தோன்று, பலர்காணத் தோன்றாதொழி.

**வெ. இராம:**

சந்திரனே! நீ மலர்போன்ற கண்களுள்ள என் காதலியின் முகம் போல, பிரகாசமுள்ள பெண் ஆகிவிட்டால் அதன் பிறகு நீ இப்படிப் பலபேர் உன்னைப் பார்க்கும்படி வெளியே திரியக் கூடாது. என் காதலியை நானே பார்த்து மகிழ்வதற்கு அவள் வீட்டில் இருப்பது போல் நீயும் உன் காதலனே பார்த்து மகிழ வெளியில் அலையாமல் இருக்க வேண்டும்.

'மலரன்ன கண்ணாள்' என்றது முன் சொன்ன 'மலர் காணின் மையாத்தி நெஞ்சே யிவள்கண் பலர் காணும் பூ வொக்கு மென்று' என்ற குறளை நினைப்பூட்டிப் பலர்காண வெளியில் பூத்துக் கிடக்கின்ற மலர் போன்று அல்லாமல் நான் மட்டும் கண்டு மகிழ எனக்கே உரிமைப் பொருளான மலர் போன்ற என்பதைக் குறிப்பது.

**வரத;**

மலரைப் போன்ற கண்களை யுடைய இந்தப் பெண்ணின் முகத்தை ஒத்து இருப்பாயானால், ஏ சந்திரனே, நீயும் பலர் பார்க்கும் வண்ணம் ஆகாயத்தில் தோன்று வாயாக.

நான் விரும்புகின்ற இந்தப் பெண்ணின் முகத்திலுள்ள உறுப்புக்கள் பல உவமானப் பொருள்களுக்கு உவமேயப் பொருளாக இருக்கின்றன. ஆனால், சந்திரனோ ஒரு உவமானப் பொருள் தான். அதில் கூடக் குற்றம் நிறைந்து குறைவு படுகிறது. ஆதலால், இந்தப் பெண் மிகவும் சிறந்தவள். இந்தப் பெண் இருக்கு மிடத்தில் ஏசந்திரனே, நீ வானத்தில் தோன்றாதே என்று தலைமகன் இழித்துக் கூறுகின்றான். எல்லாச் சிறப்புக் களையும் நீ பெற்று விட்டால் நீ தோன்றுவதைப் பற்றிக் கவலை யில்லை என்று தேற்றிக் கொள்கிறான். குறையையுடைய நீ தோன்றாதே என்றும் கூறலாம்.

**முடிநிலை:**

'தோன்றல் மதி' என்புழித் தோன்றுக என உடன்பாட்டு வியங்கோளாகக் கொள்வர் வரதராசனார். 'மலர்காணின் மையாத்தி நெஞ்சே, இவள்கண் பலர்காணும் பூவொக்கு மென்று' என்னுங் குறளால் பலர்காணத் தோன்றல் முன்னரே பழிக்கப்பட்டது. அங்ஙனம் தோன்றுதல் மதிக்கும் உண்மையின் அதனை இக்குறளிற் சுட்டிக் காட்டுவர். எனவே ஒருவன் காணவே தோன்றும் தலைவிக்கு ஒப்புமையாக வேண்டின் அங்ஙனம் ஒப்புமையாக வரும் பொருளும் அத்தனித் தன்மையுடையதாக விளங்கல் வேண்டும். ஆதலின், மதியை நோக்கி, நீ பலர்காணத் தோன்றாதே என அறிவுறுத்துவர். பலர்காணத் தோன்றுவதே மதியின் இயற்கை யாதலின், ஒரு நாளும் அது தலைவிக்கு உவமையாக முடியாது என்று தலைவன் நலம் பாராட்டுகிறான். ஆகவே, வரதராசனார் பலர் காணத் தோன்றுக என உடன்பாடாகப் பொருள்கோடல் பொருந்தாது. தலைவனோடு மதியைத் தொடர்புபடுத்திக் கூறாது அதற்கெனத் தனிக்காதலனொடு தொடர்புபடுத்தி உரைசெய்துள்ளார் இராமலிங்கம்பிள்ளை. இவ்வுரைப்போக்கு முன்குறளுக்கு அவர் செய்த உரையை ஒட்டியதாகும். பலர்

காணும் பூ யானே காணும் இவள் கண்ணுக்கு ஒவ்வாது என்று 1112 ஆம் குறளில் தலைவன் கூறியபின் 'மலரன்ன கண்ணாள்' என இங்கு அதனை உவமையாகக் கூறுதல் முரணாகும் என்று கண்ட இராமலிங்கம்பிள்ளை நான் ஒருவனே காணுதற்குரியதாக உள்ளமலர் என முரணறுத்துப் பொருள் கூறியிருப்பது போற்றத் தகும்.

**1120. அனிச்சமு மன்னத்தின் றூவியு மாத
ரடிக்கு நெருஞ்சிப் பழம்.**

**பரிமே:**

[உடன் போக்குரைத்த தோழிக்கு அதனது அருமை கூறி மறுத்தது.]

உலகத்தாரான் மென்மைக்கு எடுக்கப்பட்ட அனிச்சப்பூவும் அன்னப் புள்ளின் சிறகுமாகிய இரண்டும் மாதரடிக்கு நெருஞ்சிப் பழம் போல வருத்தஞ் செய்யும்.

முள் வலிதாதல் உடைமையின் 'பழம்' என்றான்.

**பரிப்:**

அனிச்சப் பூவும் அன்னத்தின் தூவியும் மாதர் அடிக்கு நெருஞ்சிப் பழத்தோடு ஒக்கும்.

அவையிற்றினும் மெல்லியது அடி என்று கூறிற்று. இதனுள் இரவும் பகலும் காணப்பட்ட பொருள்களை உவமமாகக் கூறிய அதனால் இயற்கைப் புணர்ச்சியும் நலம் பாராட்டுதலும், பகற் குறியினும் இரவுக்குறியினும் என்று கொள்ளப்படும்.

**பழைய: [உ. வே. சா]**

காயின் முள்ளிலும் வலிது பழத்தின் முள் என்பதனால் பழம் என்றார் என்க. ஆகையால், பாலை நிலம் பொறாது என்று மறுத்தது.

**முடிநிலை:**

நலம்புனைந்துரைத்தல் என்ற இவ்வதிகாரத்து அனிச்சம் அன்னத்தின் தூவி முதலிய உவமையாக வருதலைப் பகற் குறியில் நலம்புனைந்துரைத்தலாகவும் மதி, விண்மீன் முதலிய உவமையாக வருதலை இரவுக் குறியில் நலம்புனைந் துரைத்தலாகவும் கொள்ள வேண்டும் என்று எழுதிய பரிப் பெருமாள் குறிப்பு சிறப்புடைத்து. முள்வலிதாக லுடைமையின் பழம் என்றான் எனக் கூறும் பரிமேலழகர் உரைக்குப் பழைய உரை விளக்கமாக அமைந்துள்ளது காண்க.

# 113. காதற்சிறப்புரைத்தல்.

அஃதாவது தலைமகன் தன் காதல் மிகுதி கூறலும் தலைமகள் தன் காதல் மிகுதி கூறலுமாம். இது, புணர்ச்சியும் நலனும் பற்றி நிகழ்வதாகலின் புணர்ச்சி மகிழ்தல், நலம் புனைந்துரைத்தல்களின் பின் வைக்கப்பட்டது என அதிகார விளக்கமும் முறைவைப்பும் கூறுவர் பரிமேலழகர்.

காதற்சிறப்புரைத்தலாவது தலைமகன் காதல் மிகுதி கூறுதலும், தலைமகள் காதல் மிகுதி கூறுதலுமாம். இது நலம்புனைந்துரைத்தலின் பின் நிகழ்வதொன்றாகலின், அதன்பின் கூறப்பட்டது என விளக்கந் தருவர் மணக்குடவர்.

புணர்ந்து பிரிந்திருக்கும் காதலர்கள் ஒருவர் மீது ஒருவர்க்குள்ள அன்பு மிகுதியை நினைத்துப் பிரிவாற்றாமையால் தனித் தனியே தமக்குள் சொல்லிக் கொள்வது காதற்சிறப்புரைத்தலாகும். ஆணும் பெண்ணும் சரிசமானம் ஆனவர்கள் என்பதைக் காட்டுவது போல், இந்த அதிகாரத்தில் சரிபாதி ஐந்து குறள்கள் ஆண்சொல்வதாகவும் மீதி ஐந்து குறள்கள் பெண்சொல்வதாகவும் அமைந்திருப்பது குறிக்கத்தக்கது என்பது இராமலிங்கம்பிள்ளை தரும் விளக்கமாகும்.

**1121. பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி**
**வாலெயி றூறிய நீர்.**

**பரிமே:**

(இயற்கைப் புணர்ச்சி இறுதிக்கண் தலைமகன் தன் நயப் புணர்த்தியது.)

இம்மெல்லிய, மொழியினை யுடையாளது வாலிய எயிறூறிய நீர் பாலுடனே தேனைக் கலந்த கலவை போலும்.

'எயிறூறிய' என இடத்து நிகழ் பொருளின் தொழில் இடத்தின் மேனின்றது.

**பரிப்:**

இஃது இரந்து பின்னின்ற தலைமகனை நோக்கி நீர் பெரிய ராதலானே எமது புணர்ச்சி நுமக்கு இன்பம் தர வற்றோ என்ற தோழிக்குத் தனது புணர்ச்சி யுண்மையும் காதன் மிகுதியும் தோற்றத் தலைமகன் கூறியது.

**பி. சா. சுப்பிர:**

பணிவான சொல்லோடு வாலெயிறூறிய நீர் பாலொடு தேன் கலந்தற்று என்பர். [இவர் உரைக்குப் பிறர் உரையிற் கொண்டது போல, பணிமொழி என்பது அன்மொழித் தொகை யன்று ]

**முடிநிலை:**

இக் குறட்குக் கூறியுள்ள இருதுறைகளும் கொள்ளத் தக்கனவே. இவ்வதிகாரக் குறள்களுக்கு நிரல்படப் பரிமேலழகர் அகத்துறைகளை அமைத்துக் கொண்டிருப்பது நினையத் தகும். ‘எயிறு’ என்பதற்குப் பல் என்று பொருள் கொண்டதால் தான் பரிமேலழகர் இடத்து நிகழ்பொருளின் தொழில் இடத்தின் மேலேற்றப்பட்டது என விளக்கந் தருவாராயினார். எயிறு- பல்லுள்ள சதை. அங்கிருந்து தான் நீர் ஊறும். எயிறும் பல்லும் தனித்தவை. பல்லிலிருந்து நீர் சுரவாமையும் எயிறுகளிலிருந்து சுரப்பதையும் கண்டே யறியலாம். இந் நுணுக்கத்தைக் கண்டே கலித்தொகை ‘கூர் எயிற்று முகை வெண்பல்’ என எயிற்றையும் பல்லையும் வேறோதிற்று’ என்று தண்டபாணி தேசிகர் தம் உரைக்களஞ்சியத்தில் எடுத்துக் காட்டுதல் பொருத்த முடைத்து. பாலொடு தேன் என உவமையில் இருபொருள் இருத்தல் கண்டு உவமேயத்திலும் இருபொருள் இருத்தல் வேண்டுமென்று பணி மொழியும் எயிறூறிய நீரும் எனப் பொருள் செய்த சுப்பிரமணிய சாத்திரியார் உரை பொருந்தாது. அங்ஙனம் கொள்ளின் ‘கலந் தற்றே’ என்னும் ஒருமை வினையொடு இயையாமை யறிக.

**1122.** **உடம்பொ டுயிரிடை யென்னமற் றன்ன**
**மடந்தையொ டெம்மிடை நட்பு:**

**பரிமே:**

(பிரிவச்சங் கூறியது.)

உடம்போடு உயிரிடை உளவாய நட்புக்கள் எத்தன்மைய, அத்தன்மைய இம்மடந்தையோடு எம்மிடை யுளவாய நட்புக்கள்.

'என்னை' என்று பாடமோது வாரு முளர்.

என்ன எனப் பன்மையாற் கூறியது இரண்டும் தொன்று தொட்டு வேற்றுமையின்றிக் கலந்து வருதல், இன்ப துன்பங்கள் ஒக்க அனுபவித்தல், இன்றியமையாமை என்ற இவற்றை நோக்கி.

**பரிதி:**

உடம்புக்கும் உயிர்க்கும் எப்படி நட்பு? அதற்கு ஒக்கும் நாயகிக்கும் எனக்கும் கூடின இன்பம்.

**காலிங்:**

உடம்பொடு உயிரிடை உள்ள நட்பு எத்தன்மையது மற்று அத்தன்மையது, எம்மால் காணப்பட்ட மடவாளொடு எம்மிடை யுள்ள நட்பு. எனவே, எவ்வாற்றானும் இன்றியமையாமை எடுத் துரைத்தான் என்பது பொருள்.

இது வினவிய பாங்கற்குத் தலைமகன் கூறியது.
'என்னை' என்பது இவர் பாடம்.

**மயிலை.சிவ:**

உடம்பும் உயிரும் வேற்றுமை யில்லாமல் கலந்திருத்தல் போலவும் இன்ப துன்பங்களைச் சேர்ந்து அனுபவித்தல் போலவும் நாங்களிருவரும் வேற்றுமை இல்லாமல் இன்ப துன்பங்களைச் சேர்ந்து அனுபவிக்கக் கூடிய அவ்வளவு நெருங்கிய தொடர்புடையரானோம் என்பதாம்.

**சி. இலக்:**

காதலனும் காதலியும் உடலும் உயிரும் போன்றவர்கள் என்று கூறும்போது, யார் உடல் யார் உயிர் என்று கூறிலர் கணவன் உடலானால் மனைவி உயிராவாள். மனைவி உடலானால், கணவன் உயிராவான். இருவரிடையேயும் இருக்க வேண்டிய ஒருமித்த தன்மையை மிக அழகாக விளக்கியுள்ளார் திருவள்ளுவர். உடலும் உயிரும் போல் வாழவேண்டிய கணவன் மனைவியிடையே வேற்றுமை ஏது? உயர்வு தாழ்வு ஏது?

(திருவள்ளுவர் கண்ட இல்லறம், ப.86)

**முடிநிலை:**

இக்குறளைத் தலைவன் கூற்றாகப் பரிமேலழகரும் காளிங்கரும் கொள்ளினும் வேறுபாடிருத்தல் காண்க. 'மற்றன்ன' என அடுத்து வருந்தொடரை நோக்கின் 'என்ன' என்ற பாடமே சிறக்கும். 'மடந்தையொடு எம்மிடை நட்பு' என்பதற்கு நாயகிக்கும் எனக்கும் கூடின இன்பம் என்னும் பரிதியின் பொருள் சிறப்பில்லை. 'என்ன மற்றன்ன' என்பதற்குப் பன்மையாகக் கொண்டு எழுதும் பரிமேலழகர் விளக்கம் தெளிவுடையது. அதனைத் தழுவி மயிலை. சிவமுத்து தம் உரையை விரித்துள்ளமை காண்க. உடம்பொடு உயிரிடை, மடந்தையொடு எம்மிடை என வரும் குறளின் தொடர்களை நிரல் நிறையாகப் பொருத்திப் பொருளுரைக்காமல் தலைவன் தலைவியர் இருவர்க்கும் பொதுவாகக் கொண்டு இலக்குவனார் விளக்கம் செய்தல் ஏற்புடைத்து.

**1123. கருமணியிற் பாவாய்நீ போதாயாம் வீழுந்**
**திருநுதற் கில்லை யிடம்.**

**பரிமே:**

(இடந்தலைப்பாட்டின் கண் தலைமகள் நீக்கத்துச் சொல்லியது)

என் கண்ணிற் கருமணியின் கண் உறையும் பாவாய், நீ யங்கு நின்றும் போதருவாயாக, போதராதிருத்தியாயின், எம்மால் விரும்பப்பட்ட திருநுதலை யுடையாட்கு இருக்க விடமில்லையாம்.

**பரிப்:**

இஃது இரண்டாங் கூட்டத்து எதிர்ப்பட்ட தலைமகன் தலைமகளது நாணம் நீங்குதற் பொருட்டு அவளது கவின் தனது கண்ணிறைந்தது, என்று தலைமகள் கேட்பச் சொல்லியது.

**காளிங்:**

இவள் கண்மணியுள் புக்கு உறையும் பாவாய்! நீ அங்கு நின்று என் மாட்டுப் போதுவாயாக; என்னை காரணம் எனில், யாம் விரும்பும் திருநுதலாட்கு இவ்வுருவு கொண்டு நிற்றற்கு இடமில்லை இவள் கண்மணி.

**முடிநிலை:**

பரிமேலழகர் கூறிய துறையின் விளக்கமாகப் பரிப்பெருமாள் துறைப்பகுதி அமைந்துள்ளது. தலைவியின் கண்ணிலுள்ள பாவையை வெளிவருக என்றும் அப்பொழுதுதான் நான் அவள் கண்மணியில் இடம் பெற முடியும் என்றும் பொருள்படக் காளிங்கர் உரை செய்துள்ளார். எனக்கு இடமில்லை என்று குறள் அமையாது திருநுதற்கு இடமில்லை என்று அமைந்திருத்தலின், தலைவன் தன் கண்ணிற் பாவையை நோக்கிக் கூறியதாகவே கொண்ட பரிமேலழகர் உரை தகும்.

**1124. வாழ்த லுயிர்க்கன்ன ளாயிழை சாத**
**லதற்கன்ன ணீங்கு மிடத்து.**

**பரிமே:**

(பகற் குறிக்கண் புணர்ந்து நீங்குவான் சொல்லியது.)

தெரிந்த இழையினை யுடையாள் எனக்குப் புணருமிடத்து உயிர்க்குடம்போடு கூடிவாழ்தல் போலும்; பிரியுமிடத்து அதற்கு அதனின் நீங்கிப் போதல் போலும்.

வாழுங் காலத்து வேற்றுமை யின்றி வழி நிற்றலானும் சாங் காலத்து வருத்தஞ் செய்தலானும் அவற்றை அவள் புணர்வு பிரிவுகட்கு உவமை யாக்கினான்.

**மணக்:**

கூடுமிடத்து இவ்வாயிழை உயிர்க்கு வாழ்தலோடு ஒப்பள்; நீங்கு மிடத்து அவ்வுயிர்க்குச் சாதலோடு ஒப்பள்.

இஃது இரண்டாங் கூட்டத்துப் புணர்ந்து நீங்கானென்று கருதிய தலைமகள் கேட்பத் தலைமகன் தன் நெஞ்சிற்குச் சொல்லியது.

**மயிலை.சிவ:**

ஆராய்ந்த அணிகலன்களை யுடைய இவள் என்னைச் சேரும்போது உயிருக்கு உடம்பில் வாழ்வது எப்படி இன்பம் அளிக்கிறதோ, அப்படி எனக்கு இன்பத்தைத் தருகின்றாள். இவள் என்னைவிட்டுப் பிரியும்போது இறத்தல் என்பது உயிருக்கு எவ்விதத் துன்பத்தைத் தருகின்றதோ, அவ்விதத் துன்பத்தைத் தருகின்றாள்.

**முடிநிலை:**

பரிமேலழகரும் மணக்குடவரும் கொள்ளும் துறைகளில் வேறுபாடு காணப்பெறும். மணக்குடவர் கூறும் இரண்டாம் கூட்டம் என்பது இடந்தலைப் பாட்டைக் குறிக்கும். 'வாழ்தல் உயிர்க் கன்னள்' என்பதற்கு மயிலை. சிவமுத்துவின் உரை விளக்கம் தெளிவுபயக்கும்.

**1125. உள்ளுவன் மன்யான் மறப்பின் மறப்பறியே**
**னொள்ளமர்க் கண்ணாள் குணம்.**

**பரிமே:**

[ஒருவழித் தணந்துவந்த தலைமகன் நீயிர் தணந்தி ஞான்று எம்மை உள்ளியும் அறிதிரோ என்ற தோழிக்குச் சொல்லியது]

ஒள்ளியவாய் அமரைச் செய்யுங் கண்ணினை யுடையாள் குணங்களை யான் மறந்தேனாயின் நினைப்பேன்; ஒரு பொழுதும் மறத்தலை யறியேன், ஆகலான் நினைத்தலையு மறியேன்.

குணங்கள்—நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு முதலாயின.

**மணக்:**

மறந்தேனாயின் நினைப்பேன் யான்; மறத்தலறியேன்;
ஒள்ளமர்க் கண்ணாள் குணத்தினை.

தோழியிற் கூடி நீங்குந் தலைமகனை நோக்கி, எங்களை நினைக்கிலீரோ என்ற தோழிக்குத் தலைமகன் கூறியது.

**பரிப்:**

இது நாணுத் துறவுரைத்தலில் கூறற்பாலது. காதன் மிகுதி நோக்கிக் கூறுகின்றார் ஆதலின் ஈண்டுக் கூறப்பட்டது. காதல் மிக்கார்க்குத் தான் காதலிக்கப்பட்டாரை ஒழிவின்றி நினைதலும் அவர் தம்மாட்டு இல்லாத காலத்தினும் கண்முன்னாய்க் காண்டலும் உண்ணாமையும் உறங்காமையும் கோலஞ் செய்யாமையும் உளவாம் அன்றே; அவை ஐந்தும் ஈண்டுக் கூறப்படுகின்றன.

**வெ. இராம:**

ஒளி மிகுந்து விரும்பத் தக்க கண்களுடைய காதலியின் நற்குணத்தை மறப்பிலும் மறக்க முடிய வில்லை. எப்போதும் நினைத்துக் கொண்டிருக்கிறேன்.

அமர்—விருப்ப மூட்டக்கூடிய; மறப்பின்—மறப்பிலும், மறந்தாற்போலும்.

**வரத:**

நிறைந்த ஒளியையும் அமர்த்த கண்களையு முடைய தலைவியானவள் காதலித்த சிறந்த இன்பத்தை நான் மறப்பது முடியாது அப்படி யிருக்க மறந்து பின் நினைத்தல் என்பது எப்படி என்னிடம் நிகழும்?

**முடிநிலை:**

பரிமேலழகரும் மணக்குடவரும் பொருள் வேறுபட்டிலர்: துறை வேறுபடுவர். பரிப்பெருமாள் உரையில் சில விளக்கங்கள் காணலாம். 'மறப்பின்' என்பதைச் செயின் என்னும் எச்சமாகக் காள்ளாதுமற, பின் எனப் பிரித்து மறந்து பின் என வரதரர்சனார் உரை செய்வர். இத்தகைய பிரிப்பு இலக்கண நெறியன்று. மறப்பின் மறப்பறியேன் என ஒருசேரக் கூட்டி மறப்பினும் என உம்மை தொக்கதாகக் கொண்டு பொருள் கூறுவர் இராமலிங்கம் பிள்ளை. இம்முறையால் பொருள் சிறப்பதாகத் தோன்றவில்லை மறப்பின் உள்ளுவன் என்று பரிமேலழகரும் மணக்குடவரும் கொண்டாங்கு, கொள்வதே ஏது நடையாக அமைந்துள்ளது.

**1126. கண்ணுள்ளிற் போகா ரிமைப்பிற் பருவரார்
நுண்ணியரெங் காத லவர்.**

**பரிமே:**

[ஒருவழித் தணப்பின்கண் தலைமகனைத் தோழி இயற் பழிக்கு மென்றஞ்சி அவள் கேட்பத் தன்னுள்ளே சொல்லியது.]

(தாங் காணாமை பற்றிச் சேய்மைக்கட் போயினாரென்று கருதுவார் கருதுக) எம்முடைய காதலர் எங்கண்ணகத்து நின்றும் போகார். யாமறியா திமைத்தோமாயின், அதனால் வருந்துவதுஞ் செய்யார்; ஆதலாற் காணப்படா நுண்ணியர்.

**மணக்:**

என் கண்ணுள் நின்று நீங்கார்; இமைப்பேனாயின், இவட்கு உறுத்தும் என்று பருவருத்திருப்பதும் செய்யார்; ஆதலான், எம்மால் காதலிக்கப்பட்டார் நுண்ணிய அறிவையுடையார்.

**பரிப்:**

இஃது அறிவிலர் என்று இயற்பழித்த தோழிக்குத் தலைமகள் கூறியது. இஃது 'எதிர் பெய்து பரிதல்' என்னும் மெய்ப்பாடு.

**வெ. இராம:**

கண்ணின் உள்ளேயும் போகமாட்டார்; இமைத்தால் துன்பமடைவது மில்லை. என் காதலர் நுண்மையான திறமையுள்ளவர்.

கண்ணுக்கு உள்ளே போகாமல் கண்ணுக்கும் இமைக்கும் இடையில் இருந்துகொண்டே நான் கண்ணை இமைக்கும் போதெல்லாம் இமைகள் தம்மீது தாக்காதபடி இருந்து கொண்டிருக்கிற என் காதலர் வெகு நுட்பமான சமர்த்தர் என்பது கருத்து.

**மு.கோ:**

தலைவன் மிகவும் மென்மையானவன்; அவன் தலைவி கண்ணினின்றும் போகான். இமைத்தால் துன்புறுவான். அவன் கண்ணாளன் ஆயினான். நுட்பமாகிய அறிவினர் கண்ணை இமைபோல் காப்பவளாவாள்.

**முடிநிலை:**

மணக்குடவர் உரைக்கு விளக்கம் போல் பரிப்பெருமாள் உரை அமைந்துள்ளது. இராமலிங்கம் பிள்ளை உரைக்குக் கண்ணுட் போகார் என்றிருந்தாலே அமையும். கண்ணுள்ளின் என நீக்கப் பொருள் தரும் ஐந்தாம் வேற்றுமை யுருபு 'இன்' இருத்தலின், பரிமேலழகர் உரையே பொருந்தும். 'நுண்ணியர்' என்பதற்குக் காணப்படா நுண்உருவினர் எனப் பரிமேலழகரும்

நுண்ணிய அறிவையுடையார் என மணக்குடவரும் நுட்பமான சமர்த்தர் என இராமலிங்கம் பிள்ளையும் வேறுபாடு தோன்றப் பொருளுரைத்துள்ளனர். இப்பொருள்களுள் பரிமேலழகர் கூறும் பொருள் இயைபானது. பருவரார் என்னும் எதிர்மறை வினை முற்றுக்குத் துன்புறுவார் என உடன்பாட்டுப் பொருள் கூறும் மு.கோ. உரை இயல்பில்லை.

**1127. கண்ணுள்ளார் காத லவராகக் கண்ணு**
**மெழுதேங் கரப்பாக் கறிந்து.**

**பரிமே:**

(ஒருவழித் தணப்பின்கண் தலைமகளைத் தோழி இயற் பழிக்கும் என்றஞ்சி அவள் கேட்பத் தன்னுள்ளே சொல்லியது.)

காதலர் எப்பொழுதும் எம் கண்ணின் உள்ளாராகலாற் கண்ணினை அஞ்சனத்தா லெழுதுவதுஞ் செய்யேம்; அத்துணைக் காலமும் அவர்மறைதலை யறிந்து.

**மணக்:**

எம் காதலவர் கண்ணுள்ளார்; ஆதலானே, கண்ணும் மையெழுதோம்; அவர் ஒளித்தலை அறிந்து.

எப்பொழுதும் நோக்கி யிருத்தலால், கோலஞ் செய்தற்குக் காலம் பெற்றிலேன் என்றவாறாயிற்று.

**பரிப்:**

உம்மை சிறப்பும்மை. கோலம் செய்யாதது என்னை என்ற தோழிக்கு அவர் ஒளிப்பதனை அறிந்து கண்ணும் எழுதேன்; என்னை உறுப்புக் கோலம் செய்யுமாறு என்னை என்று கூறியது; எப்பொழுதும் நோக்கியிருத்தலால் கோலஞ் செய்தற்குக் காலம் பெற்றிலேன் என்றவாறு ஆயிற்று. இஃது இன்பத்தை வெறுத்தல் என்னும் மெய்ப்பாடு; இவை ஐந்தும் காதல் மிகுதியால் கூறியவாறு கண்டுகொள்க.

**முடிநிலை;**

துறையளவில் மணக்குடவர் உரையும் பரிமேலழகர் உரையும் வேறுபடும். மணக்குடவர் கொண்ட துறைக்குப் பரிப்பெருமாள் உரை விளக்கம் போல் உள்ளது. இவை ஐந்தும் காதல் மிகுதியால் கூறியவாறு கண்டு கொள்க எனக் கூறும் பரிப் பெருமாள் உரையில் வரும் ஐந்து: காதலிக்கப் பட்டாரை ஒழி வின்றி நினைதல், அவர் தம்மாட்டு இல்லாத காலத்தினும் கண் முன்னாய்க் காண்டல், உண்ணாமை, உறங்காமை, கோலஞ் செய்யாமை என்பவற்றைச் சுட்டும்.

**1128. நெஞ்சத்தார் காத லவராக வெய்துண்ட**
**லஞ்சுதும் வேபாக் கறிந்து.**

**பரிமே:**

[ஒருவழித் தணப்பின் கண் தலைமகனைத் தோழி இயற் பழிக்கும் என்றஞ்சி அவள் கேட்பத் தன்னுள்ளே சொல்லியது.

காதலர் எந்நெஞ்சினுள்ளா ராகலான் உண்ணுங்கால் வெய்தாக உண்டலை யஞ்சாநின்றேம்; அவர் அதனான் வெய் துறலை யறிந்து.

எப்பொழுதும் எந்நெஞ்சின்கண் இருக்கின்றவரைப் பிரிந்தா ரென்று கருதுமாறு என்னை யென்பது குறிப்பெச்சம்.

**மணக்:**

எம்மாற் காதலிக்கப்பட்டார் எம் நெஞ்சத்தில் இருக்கின்றார் ஆதலானே, வெய்தாக வுண்டலை அஞ்சாநின்றேம்; அவர்க்குச் சுடும் என்பதனை அறிந்து.

இது நீ உண்ணாதது என்னை என்று வினாவிய தோழிக்குத் தலைமகள் உணவில் காதலில்லை யென்று கூறியது. இது காரணத்துறவு உரைத்தல்.

**பரிப்:**

இது பசியடரநிற்றல் என்னும் மெய்ப்பாடு.

**(பழைய: உ.வே.சா)**

காதலர் என் நெஞ்சினுள்ளார் ஆகலான், உண்ணும் போது வெப்பாக உண்டலை யஞ்சுவோம்; அதனால் அவர்க்கு வெறுப் புறுதலை அறிந்து.

பாக்கு- எதிர்காலம். வெப்பம், சூடாயிருத்தல். வெப்பாக்கு என்பது சிலர் பாடம்,

**மயிலை. சிவ:**

தன் அன்புடைமையின் சிறப்புத் தோன்ற 'அஞ்சுதும்' என்று தன்னையே உயர்வுப் பன்மையால் கூறினாள்.

**மு.கோ:**

அவன் மனத்திற்கு வெம்மை (துன்பம்) தருவதெதனையும் சிறிதும் நினையாள்

**முடிநிலை:**

முன்குறள் ஒப்பவே துறை கொள்வதில் மணக்குடவர் உரையும் பரிமேலழகர் உரையும் வேறுபடும். பாக்கு என்னும் விகுதி எதிர்காலம் காட்டும் எனப் பழைய உரை கூறுவது புதிய இலக்கணக் குறிப்பாகும். வெப்பாக்கு என்ற பாடம் சிறப்பில்லை. அஞ்சுதும் என்று தலைவி தன்மைப் பன்மையாற் கூறியது, அன்புடைமையின் சிறப்புத் தோன்ற என மயிலை. சிவமுத்து கூறுவர். அதனினும் நெஞ்சிலுள்ள தலைவனையும் உளப்படுத்தி ஒன்று பட்ட உள்ளத்தால் உரைக்கின்றாள் எனத் தண்டபாணி தேசிகர் தரும் விளக்கம் நன்று. 'வெய்துண்டல்' எனக் குறள் விதந்து 'உண்டல்' எனச் சுட்டவும் அதற்குத் தலைவனுக்கு வெம்மை (துன்பம்) தருவது எதனையும் சிறிதும் நினையாள் என்று உரைக்கும் மு.கோ. கருத்து சிறப்பில்லை.

**1129. இமைப்பிற் கரப்பாக் கறிவ லனைத்திற்கே**
**யேதில ரென்னுமிவ் வூர்.**

**பரிமே:**

[வரைவிடை வைத்துப் பிரிவின்கண் தலைமகள் ஆற்றுதற் பொருட்டுத் தோழி தலைமகனை இயற்பழித்த வழி அவள் இயற்பட மொழிந்தது.]

என் கண் இமைக்குமாயின் உள்ளிருக்கின்ற காதலர் மறைதலை யறிந்து இமையேன்; அவ்வளவிற்கு அவரைத் துயிலாநோய் செய்தார் அன்பிலரென்று சொல்லாநிற்கும் இவ்வூர்.

**மணக்:**

இது 'கண் துயில் மறுத்தல்' என்னும் மெய்ப்பாடு.

**பரிப்:**

கண் முன்னேயே காதலர் இருப்பதால் நான் கண்ணை இமைத்தாலே அவர் உருவம் மறையும் என்பது எனக்குத் தெரியும். அப்படியிருக்க, என்னை இப்படிச் செய்த அவர் என் பேரில் அன்பு இல்லாதவர் என்று இவ்வூரார் பேசுகிறார்கள்.

**முடிநிலை:**

இக் குறட்குத் தலைவன் தலைவியின் கண்ணகத் திருப்பதாகக் கொண்டு பரிமேலழகர் உரை செய்திருத்தலையும் அவன் அவள் கண்ணுக்கு முன்னிருப்பதாகக் கொண்டு வரதராசனார் உரை செய்திருத்தலையும் காண்க. இவ்வதிகாரத்துக் 'கண்ணுள்ளிற் போகார்' 'கண்ணுள்ளார் காதலவராக' என வரும் குறள்களை நோக்கின் பரிமேலழகர் உரையே பொருந்துவதாகும். மேலும், 'கரத்தல்' என்னும் வினை மறைவைக் குறிப்பது என்பதும் ஈண்டு நினையத் தகும்.

130. உவந்துறைவ ருள்ளத்து ளென்று மிகந்துறைவ
ரேதில ரென்னுமிவ் வூர்.

**பரிமே:**

[வரைவிடை வைத்துப் பிரிவின்கண் தலைமகள ளாற்றுதற் பொருட்டுத் தோழி தலைமகனை இயற்பழித்த வழி, அவள் இயற்பட மொழிந்தது.]

காதலர் எஞ்ஞான்றும் என்னுள்ளத்துள்ளே யுவந்துறையா நிற்பர். அதனை யறியாது அவரைப் பிரிந்துறையா நின்றார் அன்பிலரென்று சொல்லாநிற்கும் இவ்வூர்.

'உவந்துறைவர்' என்றதனால் அன்புடைமை கூறினாள், பிரியாமையும் அன்பு முடையாரை இலரெனப் பழிக்கற்பாலை யல்லை யென்பதாம்.

**மணக்:**

அவர் எனது நெஞ்சத்தே என்றும் மகிழ்ந்து உறையா நிற்பர்; அவரை ஏதிலராய் நீங்கி யுறைவர் என்றே சொல்லா நின்றது இவ்வூர்.

தலைமகள் வேறுபாடு கண்டு தலைமகனை அன்பிலர் என்று இயற்பழித்த தோழிக்குத் தலைமகள் என்னெஞ்சில் நின்று நீங்கார் என்று நெஞ்சின்மேல் வைத்துக் கூறியது.

**முடிநிலை:**

பரிமேலழகரும் மணக்குடவரும் இக் குறட்குக் கொண்ட துறைகள் சிறிது வேறுபடுகின்றன.

# 114. நாணுத்துறவுரைத்தல்.

அஃதாவது சேட்படுக்கப்பட்டு ஆற்றானாய தலைமகன் தோழிக்குத் தன் நாண்துறவு உரைத்தலும், அறத்தொடு நிற்பிக்கலுற்ற தலைமகள் அவட்குத் தன் நாண்துறவு உரைத்தலு மாம் இது, காதன் மிக்குழி நிகழ்வதாகலின், காதற் சிறப்புரைத் தலின் பின் வைக்கப்பட்டது என அதிகார விளக்கமும் முறை வைப்பும் கூறுவர் பரிமேலழகர்.

நாணுத்துறவுரைத்தலாவது தலைமகன் தனது நாணின் மையைத் தோழிக்குக் கூறுதலும் தலைமகளது நாணம் நீங்கின மையைத் தோழி தலைமகற்குக் கூறுதலுமாம். காதல் மிக்கார்க்கு நாணம் இல்லை என்பதனால் அதன்பின் இது கூறப்பட்டது என விளக்கம் தருவர் மணக்குடவர்.

தான் அனுபவிக்கக் கூடாததை எண்ணக் கூசுவதும் குறையான வற்றைச் சொல்லக் கூசுவதும் பழியானவற்றைச் செய்யக் கூசுவதும் நாணமாகும். ஆனால், அந்நிலைகளைக் கூசாமல் சொல்லுவதே நாணுத்துறவு உரைத்தலாம். காதல் வசப்பட்ட ஆண் பெண் இருபாலர்க்கும் இதுபொது. ஆகையால் இங்கே உண்மை யுரைத்தல் என்னும் அறவழி நிற்றற்கே நாணத்தை விடுவதற்குத் தலைவனும், தலைவியும் இசை கின்றனர் என்றதை ஆசிரியர் விளக்குகிறார். காதலின் பெருமை நாணத்தையும் துறக்கச் செய்வதால், காதற்சிறப்பின் பின் இந்த அதிகாரம் அமைகிறது என்பர் வரதராசனார்.

**1131. காம முழந்து வருந்தினார்க் கேம**
**மடலல்ல தில்லை வலி.**

**பரிமே:**

(சேட்படுக்கப்பட்டு ஆற்றானாய தலைமகன் சொல்லியது.)

அரியராய மகளிரோடு காமத்தை யனுபவித்துப் பின் அது பெறாது துன்புற்ற வாடவர்க்கு, பண்டு ஏமமாய் வருகின்ற மடலல்லது இனி யெனக்கு வலியாவ தில்லை.

ஏமமாதல் அத்துன்பம் நீங்கும் வரை அவ் வனுபவத்தினைக் கொடுத்தல்.

**காளிங்:**

தாம் கருதிய இன்பம் கையுறாமையால் காமநோய் உழந்து மற்று அதனாலே தமது பெருநாணினைக் கைவிட்டுப் பெரிதும் வருந்துவார் யாவர்; மற்று அவர்க்கு இனி மேவுறுதி யாதோ எனின், மன்றத்துப் போந்து மடல் ஊர்தலே யல்லது பிறிது இல்லை என்று தன் கையுறை வாங்காத தோழிக்குத் தலைமகன் மடல் ஏற்று உலகின்மேல் வைத்து உணர்த்தினான் என்பது பொருள்.

**முடிநிலை:**

துறை வகையில் இக்குறட்குப் பெரிதும் வேறுபாடில்லை. 'ஏமம்' என்பதற்குப் பரிமேலழகர் கூறும் பொருளினும் உறுதி என்னும் காளிங்கர் பொருள் இயல்பாகும்.

**1132. நோனா வுடம்பு முயிரு மடலேறு
நாணினை நீக்கி நிறுத்து.**

**பரிமே:**

(நாணுடைய நுமக்கு அது முடியாதென மடல் விலக்க லுற்றாட்குச் சொல்லியது.)

அவ்வருத்தத்தினைப் பொறாத வுடம்பு முயிரும் அதற்கேம மாய மடன்மாவினை யூரக் கருதா நின்றன, அதனை விலக்குவதாய நாணினை யகற்றி.

**பரிப்:**

இஃது, 'நீர் கூறிய மடலேறு நாணமுடையார்க்குக் கூடுமோ' என்ற தோழிக்கு, 'நாணினை நீக்கி உடம்பும் உயிரும் மடலேறும்' என்று தலைமகன் கூறியது.

**சி. இலக்:**

ஒத்து இருக்கப்பெறாத உடம்பும் உயிரும் என்னும் கருத்தில் 'நோனா உடம்பும் உயிரும்' என்றனர் என்பதும் பொருந்தும்.

(வள்ளுவர் கண்ட இல்லறம், ப. 69)

**முடிநிலை:**

பரிமேலழகரும் தோழிக்குத் தலைவன் கூறியதாகவே இக் குறட்குத் துறை கொண்டுள்ளார். 'நோனா' என்பதற்கு ஒத்து இருக்கப்பெறாத என்பதினும் வருத்தத்தைப் பொறாத என்னும் பொருள் இயல்பானது.

**1133. நாணொடு நல்லாண்மை பண்டுடையே னின்றுடையேன்**
**காமுற்றா ரேறு மடல்.**

**பரிமே:**

(நாணே யன்றி நல்லாண்மையு முடைமையின் முடியா தென்றாட்குச் சொல்லியது).

நாணும் மிக்க ஆண்டகைமையும் யான் பண்டுடையேன், அவை காமத்தான் நீங்குதலான், அக்காம மிக்கார் ஏறும் மடலினை இன்றுடையேன்.

**பரிப்:**

மேற்கூறிய சொற்கேட்டு, நீர் உலகத்துப் பன்மக்களோடு ஒப்பார் ஒருவரன்றே; நாணமும் ஆண்மையும் இயல்பாக உடையீர்; ஆதலான் நுமக்கு இது கூடாது என்ற தோழிக்கு, 'இவை இரண்டும் இப்பொழுது இல்லேன்' என்று தலைமகன் கூறியது.

**பரிதி:**

நாணமும் நல்லாண்மையும் எமக்குப் பண்டு துணையாயிருந்தன; இன்று இப்பேதை தந்த ஆசையினாலே மடலே துணையானது.

**முடிநிலை:**

பரிமேலழகர் கொண்ட துறைக்கு விளக்கமாகப் பரிப்பெருமாள் உரை அமைந்துள்ளது. 'பண்டுடையேன்' 'இன்றுடையேன்' என்ற தொடர்களுக்குப் பண்டு துணையாயிருந்தன, இன்று துணையானது எனப் பரிதி பொருளுரைப்பர். 'ஏமம் மடலல்ல தில்லை வலி' என்ற அடி அங்ஙனம் பொருள் கொள்ள ஏதுவாகும்.

**1134. காமக் கடும்புன லுய்க்குமே நாணொடு**
**நல்லாண்மை யென்னும் புணை.**

**பரிமே:**

(நாணும் நல்லாண்மையும் காம வெள்ளத்திற்குப் புணையாகலின் அதனால் அவை நீங்குவன வல்ல என்றாட்குச் சொல்லியது.)

யான் தன்னைக் கடத்தற்குக் கொண்ட நாணும் நல்லாண்மையு மாகிய புணைகளை என்னிற் பிரித்துக் காமமாகிய கடிய புனல் கொண்டு போகாநின்றது.

**பரிப்:**

நினக்கு ஆண்மையும் நாணமும் இப்பொழுது யாண்டுப் போயின என்ற தோழிக்குத் தலைமகன் கூறியது.

**வெ. இராம:**

(மடலேறக் கூசுகின்ற) வெட்கமும் நல்லாண்மையும் ஆகிய தெப்பங்களைக் கொண்டு காமநோய் என்னும் வேகமான ஆற்று வெள்ளத்தைக் கடந்து கரையேற முடியுமா? (முடியாது; அதனால் மடலேறத்தான் வேண்டும்).

உய்த்தல்—கரையேற்றல்.

**வரத:**

நாணமும், நல்ல மன உறுதியு மாகிய இரண்டு தெப்பங்களும் காமம் என்று சொல்லப்படுகிற கொடிய கடலில் சிக்கி விடுமானால் தப்பாது மூழ்கிவிடும்.

காம இன்பத்தில் திளைத்திருப்பவர்க்கு நாணமும். நல்லாண்மையும் பயன்படாததோடு அழிவையும் இழிவையும் கொடுக்கும் என்பது கருத்து.

**வ. சுப. மா:**

நாணமும் வீரமும் ஆகிய தெப்பம் என்னைக் காமப் பெருவெள்ளத்தில் தள்ளி விடுமே.

**முடிநிலை:**

'புணை' என்ற இறுதிச் சொல்லிடத்து இரண்டாம் வேற்றுமை யுருபு தொக்கதாகக் கொண்டு பரிமேலழகர் உரை செய்வர். இவர் உரைக்குக் கடும்புனல் என்பது எழுவாய். இவர் நாணமும் நல்லாண்மையு மாகிய தெப்பங்களைக் காமப் பெருவெள்ளம் அடித்துக் கொண்டு போய்விடும் என அத் தெப்பங்களின் வலியின்மை சுட்டுவர். இராமலிங்கம் பிள்ளை 'உய்க்குமே' என்பதிலுள்ள ஏகாரத்திற்கு வினாப்பொருண்மை கொண்டு கரையேற முடியுமா? முடியாது; மடலேறத்தான் வேண்டும் என்பதாகக் கருத்துரைப்பர், வ. சுப. மா. 'புணை' என்பதனை எழுவாயாகக் கொள்வர். நாணமும் நல்லாண்மை யுமாகிய புணைகள் துணையாவது போல் வஞ்சித்துக் காமக் கடும்புனலில் தள்ளி விடும் எனத் தலைவன் தோழிக்கு மறுத்துரைப்பதாகக் கருத்துரைப்பர். காமத்தின் முன் நாணமும் நல்லாண்மையும் நில்லா என்பதே இக்குறட் கருத்து. இக் கருத்தினையே மேற்கண்ட மூவுரைகளும் சிற்சில இலக்கண வேறுபாடு கொண்டு விளக்குதல் காண்க.

**1135. தொடலைக் குறுந்தொடி தந்தாண் மடலொடு**
**மாலை யுழக்குந் துயர்.**

**பரிமே:**

(இவ்வாற்றாமையும் மடலும் நுமக்கெவ்வாறு வந்தன என்றாட்குச் சொல்லியது).

மாலைப்பொழுதின்கண் அனுபவிக்குந் துயரினையும் அதற்கு மருந்தாய மடலினையும் முன்னறியேன்; இது பொழுது எனக்கு மாலைபோலத் தொடர்ந்த சிறுவளையினையுடையாள் தந்தாள்.

காமம் ஏனைப் பொழுதுகளினும் உளதேனும் மாலைக்கண் மலர்தல் உடைமையின் (1227) 'மாலை யுழக்குந் துயர்' என்றும் மடலும் அதுபற்றி வந்த தாகலின் அவ்விழிவும் அவளால் தரப்பட்டதென்றும், அவள்தான் நீ கூறியதே கூறும் இளைமையள் என்பது தோன்றத் 'தொடலைக் குறுந்தொடி' யென்றுங் கூறினான். அப்பெயர் உவமைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. இவை அவள் தந்தன வாகலின் நின்னால் நீங்குமென்பது கருத்து.

**பரிப்:**

அதனானே இளையள் என்பது சொன்னானாம். தலைமகன் ஆற்றாமை கண்டு நின்னால் காதலிக்கப்பட்டாள் இவ்வாயத்துள் யாவள் என்ற தோழிக்கு இத்தன்மையாள் என்று தலைமகன் கூறியது. வளையுடையார் பலரும் கூட நிற்றலின், மாலை போலச் செய்த வளையினை யுடையாள் என்று விசேடித்துக் கூறப்பட்டது.

**வெ. இராம:**

மாலைக் காலங்களில் (காம மிகுதியால்) மடலேறுவதை நினைத்துக் குழப்பிக் கொண்டிருக்கும் துயரத்தை மேகலையும் அழகிய வளையல்களும் அணிந்தவளான அப்பெண் கொடுத்து விட்டாள்.

**'தொடலைக் குறுந்தொடி'** என்பதற்கு மாலை போலச் செய்யப்பட்ட சிறுவளை, சேர்ந்த வளை எனினும் அமையும் என்பர் **மணக்குடவர்**. **'தொடலை'** என்பதற்கு மாலை என்பர் **காளிங்கர்**. விளையாடல் என்னும் **பழைய உரை** (உ.வே.சா.)

**'மாலை யுழக்குந் துயர்'** என்பதற்குத் தீ நாற்றமுடைய எருக்கம் பூ மாலையால் துயருமாம் என்பர் **மு. கோ.**

முடிநிலை:

இக்குறளைத் தலைவன் கூற்றாகக் கொள்ளினும் பரிப்பெருமாள் கொண்ட துறைக்கும் பரிமேலழகர் கொண்ட துறைக்கும் வேறுபாடிருத்தல் காண்க. 'தொடலை' என்பதற்கு விளையாட்டு என்னும் பொருளும் மேகலை என்னும் பொருளும் சிறப்பில்லை. உவமைத் தொகையாகக் கொண்டு பரிமேலழகரும் பரிப்பெருமாளும் கூறும் பொருள்கள் தகுவன. 'மாலை' என்பதற்கு ஈண்டு எருக்கம் பூ மாலை என்னும் பொருள் சிறப்பில்லை.

**1136. மடலூர்தல் யாமத்து முள்ளுவேன் மன்ற**
**படலொல்லா பேதைக்கென் கண்.**

**பரிமே:**

(மடலூரும் பொழுது இற்றைக்குங் கழிந்தது என்றாட்குச் சொல்லியது).

நின்பேதை காரணமாக என்கண்கள் ஒரு காலுந் துயிறலைப் பொருந்தா; அதனால் எல்லாருந் துயிலுமிடை யாமத்தும் யானிருந்து மடலூர்தலையே கருதாநிற்பேன். பேதை என்பது பருவம் பற்றி அன்று; மடமை பற்றி.

**ந.சி.க:**

இப்பெண் காரணமாக என் கண்கள் தூங்குதலைப் பொருந்தாவாம்; பாதி இரவிலும் மடலூர்தலை மிகுதியும் நினைத்துக் கொண்டிருப்பேன்.

**முடிநிலை:**

'பேதை' என்பதற்கு மடமை என்னும் ஐந்து முதல் எட்டு வயதுள்ள பெண்ணின் பேதைப் பருவம் என்றும் கொள்ளாமல் பெண் என்ற நிலையில் பொருள் கொள்ளல் தகும். 'மன்ற' என்பதற்குமிகுதியும் என்று பொருள் கூறுவர் ந.சி.க. அதனினும் உறுதியாக எனப் பொருள் கொள்ளுதல் ஏற்புடையது.

**1137. கடலன்ன காம முழந்து மடலேறாப்**
**பெண்ணிற் பெருந்தக்க தில்.**

**பரிமே:**

(பேதைக் கென்கண் படலொல்லா வென்பது பற்றி அறிவிலராய மகளிரினும் அஃதுடையராய ஆடவரன்றே ஆற்றற் பாலர் என்றாட்குச் சொல்லியது.)

கடல் போலக் கரையற்ற காமநோயினை யனுபவித்தும் மடலூர்தலைச் செய்யாது ஆற்றியிருக்கும் பெண்பிறப்புப் போல, மிக்க தகுதியினையுடைய பிறப்பு உலகத்தில்லை.

**மணக்:**

இது நும்மாற் காதலிக்கப்பட்டாள் தனக்கும் இவ்வருத்தம் ஒக்கும். பெண்டிர்க்கு இப் பெண்மையான் மடலேறாததே குறை யென்று தலைமகன் ஆற்றாமை நீங்குதற் பொருட்டுத் தோழி கூறியது.

**பரிதி:**

கடலொத்த காம சமுத்திரத்தில் வீழ்ந்து மடல் என்னும் கப்பல்கொண்டு ஏறினும் ஏற வொண்ணாது; ஆதலால் ஆசைக் கடல் போலக் கடலும் பெருமையும் இல்லை.

**முடிநிலை:**

பரிமேலழகர் இக்குறளைத் தலைவன் கூற்றாகவும் மணக்குடவர் தோழி கூற்றாகவும் கொண்டுள்ளனர். தலைவன் கூற்றாகக் கொள்ளுதல் பொருத்த முடைத்து, ஆசைக் கடல் போலக் கடலும் பெருமையும் இல்லை என்னும் பரிதி உரைக்கும் 'பெண்ணிற் பெருந்தக்க தில்' என்னும் மூலத்திற்கும் தொடர் பில்லை ஆதலான் அவ்வுரைக்குப் பாடம் வேறாகலாம்.

**1138. நிறையரியர் மன்னளிய ரென்னாது காம
மறையிறந்து மன்று படும்.**

**பரிமே:**

(காப்புச் சிறைமிக்குக் காமம் பெருகியவழிச் சொல்லியது.)

இவர் நிறையால் நாம் மீதூர்தற் கரியரென்றஞ்சுதல் செய்யாது மிகவும் அளிக்கத்தக்கா ரென்று இரங்குதல் செய்யாது மகளிர் காமமும் அவர் மறைத்தலைக் கடந்து மன்றின்கண்ணே வெளிப்படுவதா யிருந்தது.

**மணக்:**

நிறையிலர்; மிக அளிக்கத் தக்கார் என்னாது என் காமமானது மறைத்தலைக் கடத்தலு மன்றி மன்றின்கண் படராநின்றது.

இஃது அம்பலும் அலரும் ஆகா என்று தோழி பகற்குறி மறுத்தது.

**பரிதி:**

செங்கோல் அறியாது அரசின் கொடுமை யறியாது வங்கிஷம் அறியாது உயிர் பாராது இவள் கொடுத்த மடல் மன்று படும்.

**காலிங்:**

அறிவு, நிறை, ஓர்ப்பு, கடைப்பிடி என்னும் நாற்பெருங் குணத்துள்ளும் நிறை என்கின்றது ஒருவன் தான் தன்னைச் சமைத்துக் கொள்ளும் வன்மையுடைமை யாதலால் மற்று அதன் இறப்பானது சாலப் பெறுதற்கு அரிதாயுள்ள தொன்று மிகவும் அதனால் அளிக்கத்தக்கார்; இவரை நாம் எளிமைப் படுத்த லாகாது என்னாது என்வயிற் காமமானது என்னையுங் கொண்டு அங்குப்பட்ட களவியலைக் கடந்து சென்று யாவரு மறிய மன்றத்து வெளிப்படும் ஆயின் யான் செயற்பாலது என்னை? எனத் தோழிக்குத் தலைமகன் சொல்லியது.

'நிறை யரிது' என்பது இவர் பாடம்.

**கா.சு.பிள்ளை:**

இவர் கற்புடையராதலின் மேற்பட்டு வெல்லுதல் இயலா தென்று அஞ்சாது இரங்கத்தக்கார் இவரென்று இரக்கம் வையாது காமமானது மறைப்பைக் கடந்து அவைக்கண்ணே வெளிப்படக் கூடியது ஆயிற்று.

**வெ.இராம:**

அடக்கத்தில் மிகுந்தவர், மேலும் இரக்கப்படத்தக்கவர் என்றும் பாராமல் காமவேதனை மறைவிலிருந்து வெளியில் வந்து விட்டது.

'மன்' என்பது மேலும் என்ற பொருளில் நிற்கும் அசை.

**வரத:**

பெண்கள் அற நெறியில் நிற்பவர்கள் என்றோ துன்பம் தாங்கமுடியாத மென்மையானவர்கள் என்றோ கருதாது, காமமானது இரகசியமாக இல்லாது பலராலும் சபைநடுவே பேசப் படுகிறதே!

**சி. இலக்:**

உள்ளத்தை நிறுத்தும் தன்மையால் சிறந்தவர் மிகவும் இரங்கத் தக்கவர் என்று கருதாது, காதல் நோய் மறைத்து வைத்திருக்கும் நிலையைக் கடந்து பலர் கூடும் மன்றின்கண் சென்று வெளிப்படும்.

**முடிநிலை:**

இளம்பூரணர் 'மன்எளியர்' எனப் பாடங் கொள்வர். அவர் மணக்குடவர் போலவே தோழி கூற்றாகக் கொண்டுள்ளார் (தொல். பொருள், 112). ஆனால், பரிமேலழகர் தலைவி கூற்றாகவும் காளிங்கர் தலைவன் கூற்றாகவும் கொண்டுள்ளனர். இவற்றுள் தலைவி கூற்றாகக் கொள்வது சிறப்புடைத்து. தலைவனை ஓர் அரசனாக நினைந்து பரிதி உரை செய்திருப்ப தாகத் தோன்றுகிறது. அவர் உரைக்குப் பாடவேறுபாடு இருத்தல்

வேண்டும். 'நிறையரியர்' என்பதற்கு நிறையால் நாம் மீதூர்தற்கு அரியர் என்று அஞ்சுதல் செய்யாது எனப் பரிமேலழகரும் நிறையிலர் என மணக்குடவரும் கற்புடையராதலின் மேற்பட்டு வெல்லுதல் இயலாது என்று அஞ்சாது எனக் கா.சு. பிள்ளையும் அடக்கத்தில் மிகுந்தார் என்று இராமலிங்கம் பிள்ளையும் அற நெறியில் நிற்பவர் என வரதராசனாரும் உள்ளத்தை நிறுத்தும் தன்மையால் சிறந்தார் என இலக்குவனாரும் பொருள் காண்பர். இவற்றுள் இலக்குவனார் கூறும் பொருள் இயல்பானது. 'மன் அளியர்' என்பதற்குத் துன்பந் தாங்க முடியாத மென்மையான வர்கள் என்னும் வரதராசனார் பொருள் நேர்பொருள் ஆகாது. எளியர் எனப் பாடங் கொள்ளின் ஏற்கும்.

**139. அறிகிலா ரெல்லாரு மென்றேயென் காம**
**மறுகின் மறுகு மருண்டு.**

**பரிமே:**

(காப்புச் சிறை மிக்குக் காமம் பெருகியவழிச் சொல்லியது.

யான் முன்னடங்கி நிற்றலான் எல்லாரும் என்னை யறிதல் இலர்; இனி யவ்வாறு நில்லாது யானே வெளிப்பட்டறிவிப்பல் என்று கருதி என் காமம் இவ்வூர் மறுகின்கண்ணே மயங்கிச் சுழலாநின்றது.

மயங்குதல்: அம்பலாதல்; மறுகுதல்; அலராதல். அம்பலும் அலருமாயிற்று; இனி அறத்தொடு நிற்றல்வேண்டும் என்பதாம். அறிவிலாரென்பதூஉம் பாடம்.

**மணக்:**

என்னை யொழிந்த எல்லாரும் அறிவிலர் என்றே சொல்லி என் காமமானது தலை மயங்கி மறுகின்கண்ணே வெளிப்படச் சுழலாநின்றது.

சுழல்தல் — இவ்வாறு சொல்லித் திரிதல். 'அறிவிலார்' என்பது இவர் பாடம்.

**பரிப்:**

நீர் அறிவுடையீர் ஆகலான் மடலேறுதல் கூடாது; இஃது அறிவுடையார் செயலின்மையான் என்ற தோழிக்கு என்னைப் போல மடலேறக் கருதாதாரே அறிவிலாதார்; யான் அறிவுடையேன் என்று தலைமகன் கூறியது.

**காளிங்:**

இங்கு யான் உறுதுயரினைக் கண்டும் உணர்ந்தும் இனி மற்று இது தீர்ப்போம் யாம் என்னும் அறிவில்லாதாராய் இருந்தார். இத்தலைக்கண் எல்லாரும் என்று கொண்டே இங்கு யானுற்ற காமநோயானது ஒரு மன்றத்து உரைத்தலு மன்றிப் பின்னும் மறுகுதொறும் தடுமாறும் போலும் மாலுற்று.

'அறிவில்லார்' என்பது இவர் பாடம்.

**முடிநிலை:**

தலைவி கூற்றாகப் பரிமேலழகரும் தலைவன் கூற்றாகப் பரிப்பெருமாளும் இக்குறட்குத் துறை வகுப்பர். பாடவேறுபாடு காரணமாக உரை வேறுபடுதலையும் நோக்குக. அறிவும் அருளும் நாணமும் உடையார் மடலேறார் என்ற தோழிக்குத் தலைமகன் கூறியதற்கு மேற்கோள் காட்டுவர் இளம்பூரணர்.

(தொல், பொருள்.99)

**1140.** **யாங்கண்ணிற் காண நகுப வறிவில்லார்**
**யாம்பட்ட தாம்படா வாறு.**

**பரிமே:**

(செவிலிக் கறத்தொடு நின்றுவைத்து யானிற்கு மாறென்னை யென்று நகையாடிய தோழியொடு புலந்து தன்னுள்ளே சொல்லியது.)

யாங் கேட்குமாறு மன்றிக் கண்ணாற் காணுமாறு எம்மை யறிவிலார் நகாநின்றார்; அவரங்ஙனஞ் செய்கின்றது யாமுற்ற நோய்கள் தாமுறாமையான்.

**பரிப்:**

யாமத்து மறவேன் என்ற தலைமகனை நோக்கி நகை செய்த தோழிக்கு, எமக்கு உண்டாகிய நோய் தமக்கும் உண்டாயினாரல்லரே என்று தலைமகன் வெகுண்டு சொல்லியது.

**முடிநிலை**:

தலைவி தோழியிடம் புலந்து தன்னுள்ளே கூறியதாகப் பரிமேலழகரும் தலைவன் தோழியிடம் வெகுண்டு கூறியதாகப் பரிப்பெருமாளும் இக்குறட் கருத்தைக் கொண்டுள்ளனர். பரிப் பெருமாள் கொண்ட துறையினைப் பரிமேலழகர் 'இது நகாநின்று சேட்படுக்குந் தோழிக்குத் தலைமகன் கூறியதாங்கால் அதிகாரத் திற் கேலாமை அறிக' என்று கூறி குறிப்பால் மறுப்பர். தலைவி கூற்றாகக் கொள்ளுதல் ஏற்புடைத்து.

# 115. அலரறிவுறுத்தல்.

அஃதாவது களவொழுக்கம் வேண்டிய தலைமகன் பிறர் கூறுகின்ற அலர் தனக்கு ஆகின்றவாற்றைத் தோழிக்கு அறிவுறுத்தலும், வரைவாக உடன்போக்காக ஒன்று வேண்டிய தலைமகளும் தோழியும் அவ்வலரை அவன்றனக்கு அறிவுறுத்தலுமாம். இது, நாணுத்துறந்தவழி நிகழ்வதாகலான், நாணுத்துறவுரைத்தலின் பின் வைக்கப்பட்டது என அதிகார விளக்கமும் முறைவைப்பும் கூறுவர் பரிமேலழகர்.

அலரறிவுறுத்தலாவது, இவ்வாறு ஒழுகும் ஒழுக்கத்தினால் வந்த அலரைத் தலைமகள் தோழிக்கு அறிவித்தலும் தோழி தலைமகட்கும் தலைமகற்கும் அறிவித்தலுமாம். நாணுத்துறவுரைத்து இரவுக்குறி ஒழுகாநின்ற தலைமகனுக்குத் தோழி அம்பலும் அலரும் ஆகாநின்றன என்று அறிவித்தலான், அதன் பின் இது கூறப்பட்டது என விளக்கந் தருவர் மணக்குடவர்.

**1141.** **அலரெழ வாருயிர் நிற்கு மதனைப்**
**பலரறியார் பாக்கியத் தால்.**

**பரிமே:**

(அல்ல குறிப்பிட்ட பிற்றை ஞான்று வந்த தலைமகனைத் தோழி யலர்கூறி வரைவுகடாயவழி அவன் சொல்லியது).

மடந்தையொடு எம்மிடை நட்பு ஊரின்கண் அலராய் எழுதலான், அவளைப் பெறாது வருந்துமென் அரிய வுயிர் பெற்றது போன்று நிலைபெறும், அந்நிலைபேற்றைத் தெய்வத்தால் யானே யறிவதல்லது கூறுகின்ற பலரு மறியார்.

**மணக்:**

நமது புணர்ச்சியால் வந்த அலர் எழுதலினாலே அவளது ஆருயிர் நிற்கும்; அவ்வாறு உயிர் நிற்றலை எங்கள் புண்ணியத்தாலே பலர் அறியா ராயினார். அறிவராயின் எமக்கு ஏதிலராய் அலர் தூற்றுவார் இவள் இறந்துபட வேண்டும் என்று தூற்றார்.

**பரிப்:**

நொதுமலர் வரைய வந்துழி இறந்துபடுவா ளாயினாள்; ஆயிடை இவ்வலர் எழுதலினாலே இனிப் பிறர்க்குக் கொடார் என்று உயிர் நீங்காதாயிற்று என நொதுமலர் வரைய வந்தமை அவள் தோழி (தலைமகற்குக்) கூறியது.

**வெ. இராம:**

என் காதலியைப் பற்றி பரிகாச நிந்தனைகள் பரவி விட்டதாகத் தெரிகிறது. அதனால் இனி என் உயிருக்குப் பயமில்லை. அவள் என்னை மறந்திருந்தால் நான் இறந்து போக எண்ணியிருந்தேன்; நல்ல வேளையாக நான் எண்ணியது பிறருக்குத் தெரியாது என்பது கருத்து.

**முடிநிலை:**

மணக்குடவரும் பரிமேலழகரும் இக்குறளைத் தலைவன் கூற்றாகக் கொள்ளினும் அலரெழ ஆருயிர் நிற்றலைத் தலைவன் மேலதாகப் பரிமேலழகரும் தலைவி மேலதாக மணக்குடவரும் கொண்டு உரை எழுதியுள்ளனர். தலைவியின் மேலதாகக் கொள்வதே சிறப்புடைத்து, வரைந்து கற்பொழுக்கப்படும் வேட்கை அவளுக்கே மிக்கிருத்தலின். தோழி கூற்றாகப் பரிப்பெருமாள் உரைத்தல் சிறப்பில்லை. தலைவி தன்னை மறந்து விடுவாள் எனத் தலைவன் கருதியதாகக் கொண்டு கூறும் இராமலிங்கம்பிள்ளை உரை அகத்திணை மரபன்று.

**1142.** **மலரன்ன கண்ணா ளருமை யறியா**
**தலரெமக் கீந்ததிவ் வூர்.**

**பரிமே:**

(அல்ல குறிப்பட்ட பிற்றைஞான்று வந்த தலைமகனைத் தோழி அலர் கூறி வரைவு கடாயவழி அவன் சொல்லியது.)

மலர் போலுங் கண்ணை யுடையாளது எய்தற்கருமை யறியாது இவ்வூர் அவளை யெளியளாக்கி அவளோடு அலர் கூறலை எமக்கு உபகரித்தது.

**பரிப்:**

தமது புணர்ச்சி அலராயிற் றென்று தோழி கூறியது.

**கவிராச:**

அலர் எமக்கு ஈந்தது இவ்வூர். அலராகிய வசையைச் சொல்லி எனக்கு உபகாரத்தைச் செய்கின்றார். உபகாரம் செய்த லாவது தன் பிராணனை நிறுத்துகிறதாம்.

**வெ. இராம:**

பூப்போன்ற கண்களை யுடைய அப்பெண் என் மீது கொண்டுள்ள காதலின் அருமையை அறியாத இவ்வூரார், நான் காதலில்லாத ஒரு பெண்ணைக் கருதி நாணம் விட்டு அலை வதாகப் பரிகாசம் செய்தார்கள் என்பது கருத்து.

'மலரன்ன கண்ணாள்' என்பது முன் சொன்ன 'மலர்காணின் மையாத்தி நெஞ்சே இவள்கண் பலர்காணும் பூவொக்கும் என்று' என்ற குறளை நினைப்பூட்டி இவள் எனக்கே உரியவள் என்ற கருத்தைக் காட்ட நிற்பது.

**முடிநிலை:**

பரிமேலழகர் தலைவன் கூற்றாகவும் பரிப்பெருமாள், தோழி கூற்றாகவும் இக்குறளைக் கொள்வர். 'அருமை யறியாது' என்ப தற்கு என்மீது வைத்த காதலின் அருமையை அறியாமல் என வருவித்துரைப்பர் இராமலிங்கம் பிள்ளை. 'மலரன்ன கண்ணாள் அருமை' என்னும் சொல்லோட்டம் இடையே வேறொன்றை வருவித்தற்கு இடந்தராது. அகத்திணைக்கண் வரும் அலர் என்பதற்கு அன்பிலொத்த மறை வொழுக்கத்தைப் பலரறிய வெளிப்படுத்துதல் என்பது பொருளாகும். அங்ஙன மிருப்பவும் தகாத காதலுடையவன் எனக் கருதித் தலைவனை எள்ளி நகையாடுவர் எனக் கூறும் அவருரையும் பொருந்துமாறில்லை.

**1143. உறாஅதோ வூரறிந்த கௌவை யதனைப்
பெறாஅது பெற்றன்ன நீர்த்து.**

**பரிமே:**

(அல்ல குறிப்பட்ட பிற்றைஞான்று வந்த தலைமகனைத் தோழி அலர் கூறி வரைவு கடாயவழி அவன் சொல்லியது.)

எங்கட்குக் கூட்டமுண்மை இவ்வூரறிதலான் விளைந்த அலர் எனக்குறுவ தொன்றன்றோ? அது கேட்ட என்மனம் அக்கூட்டத்தைப் பெறாதிருந்தே பெற்றாற் போலும் நீர்மையை யுடைத்தாகலான்.

பெற்றன நீர்மை-பெற்றவழி உளதாம் இன்பம் போலும் இன்பமுடைமை.

**மணக்:**

ஊரறிந்த அலர் வருவதொன் றன்றோ? அவ்வலரைத் தீதாகக் கொள்ளாது பெறாத தொன்றைப் பெற்றா லொத்த நீர்மைத்தாகக் கொள்ளல் வேண்டும்.

இஃது அலரறிவுறுத்த தோழிக்கு அவ்வலரினான் என்றும் தமராவார் உடன்படுவர் என்று தலைமகன் கூறியது.

**காளிங்:**

நெஞ்சே! நமக்குச் சால உறுவது ஒன்று அன்றோ, ஊர் அறிந்து உரைத்த கவ்வையானது, அதனை அவர் அறியாது நம்மை நிறையழித்தற்கு முன்னம் பெறாதது ஓர் உபாயம் பெற்றா லொத்த நீர்மையை உடைத்து இவ்வூர்.

**வெ. இராம:**

ஊரிலுள்ளவர்க ளெல்லாம் (எனக்கும் அந்தப் பெண்ணுக்கும் உள்ள தொடர்பை அறியும்படிச் செய்து விட்ட) இந்த ஏளனப் பேச்சுக்களால், கிடைக்காம லிருக்கிற (அவளுடைய இன்பம்) அதனைக் கிடைக்கப் பெற்றுவிட்டது போன்று இருக்கிறது;

(அதனால் இந்த ஏளனப் பேச்சுக்கள்) தகாத தாகுமா? (தக்கது தான்)

**உறாஅதோ ஊர்அறிந்த கௌவை** என்பதற்கு ஊரில் எல்லோராலும் பேசப்படும் பழிச்சொற்கள் எனக்குச் சற்றும் பொருந்தாது என உரைப்பர் **வரதராசனார்**.

**முடிநிலை:**

துறையமைப்பில் பரிமேலழகர்க்கும் மணக்குடவர்க்கும் வேறுபாடு காண்க. 'அதனை' என்பது முன்வரும் கௌவையைச் சுட்டுவதே இயல்பு. கூட்டம் என ஒரு சொல்லை வருவித்துக் கொண்டு அதனைச் சுட்டுவதாகப் பரிமேலழகர் உரைப்பது பொருந்தாது. 'பெறாஅது' என்பதனைப் பெறாஅதது என்பதன் விகாரமாகக் கருதி வினையாலணையும் பெயராகக் கொண்டு பெறாத ஒன்றைப் பெற்றாற் போல என மணக்குடவர் உரைப்பர். அதனை வினையெச்சமாகக் கோடலே சாலும். தலைவியின் நிறையழித்தற்கு ஊர் ஓர் உபாயம் பெற்றது போலக் கொண்டு வரையும் காளிங்கர் உரை தெளிவில்லை. 'உறாஅதோ' என்பதற்கு இவ்வலர் தகாத தாகுமா? தக்கது தான் எனக் கூறும் இராமலிங்கம் பிள்ளை உரையும் ஊரார் பேசும் பழிச் சொற்கள் எனக்குச் சற்றும் பொருந்தாது எனக் கூறும் வரதராசனார் உரையும் சிறப்பில ஊரறிந்த அலர் எனக்கு வாராதோ? அத்தகைய அலர் எனக்குக் கிடைக்கா விட்டாலும் கிடைத்தாற் போன்ற தன்மையுடையது எனத் தலைவன் கூறுவதாகச் சொற் கிடக்கைப் படி பொருள் கொள்ளலாம். அலருக்கு ஏங்கிய தலைவன் அஃது எழாமை கண்டும் எழுந்தாற் போன்ற ஓர் இன்பப் பயனை எய்தினான் என்பது கருத்தாகக் கொள்ளலாம்.

**1144. கவ்வையாற் கவ்விது காம மதுவின்றேற்**
**றவ்வென்னுந் தன்மை யிழந்து.**

**பரிமே:**

(அல்ல குறிப்பட்ட பிற்றைஞான்று வந்த தலைமகனைத் தோழி அலர் கூறி வரைவுகடாயவழி அவன் சொல்லியது).

என் காமம் இவ்வூரெடுக்கின்ற அலரானே யலர்தலை யுடைத்தாயிற்று. அவ்வல ரில்லையாயின், தன்னியல் பிழந்து சுருங்கும்.

**பரிப்:**

அலர் அறிவுறுத்த தோழிக்கு இவன் கூறுகின்றது புனைந் துரையாகும் என்று நினைத்துப் பின்னும் களவொழுக்கம் வேண்டித் தலைமகன் கூறியது. இதுவும் ஒரு கூற்று.

**பரிதி:**

கவ்வை என்னும் வித்தினாலே என் காமம் உறுதி பெற்றது; இல்லையாயின் உறுதி பெறாது.

**காளிங்:**

நெஞ்சே! பிறர் கூறும் கவ்வையால் கவ்வுண்டது யாம் வேண்டும் காமம்; அதனால் கவ்வை இன்றாயின் சாலத் தவறு படும், தன் தன்மை இழந்து.

இதிற் கவ்வித்து என்பது கவ்வியது என்றது; தவ்வென்னும் என்பது தவறுபடும் என்றது.

தன்மை யிழந்து என்று பாடங் கொள்ளும் பழைய உரை. (உ.வே சா.)

**தேவ:**

கவை—கவ்வை=பிளப்பு, பிரிவு, மலர்வு, அலர். கவ்வை—கவ்வித்து. அலர்தல்—அலர்க் கூற்றுப் பரவுதலும் காமம் வளர்தலும். 'தன்மை'—இன்பம் பயத்தல். தவ்வுதல்—தாழ்தல், ஏதேனு மொரு பாடத் துறையில் மாணவர் தாழ்வாயிருப்பதைத் தவ்வல் என்பது நெல்லை நாட்டு வழக்கு.

**முடிநிலை:**

பரிமேலழகரும் பரிப்பெருமாளும் தலைவன் கூற்றாகக் கொள்ளினும் துறைகளில் சிறிது வேறுபாடு காணலாம். கவ்வை என்னும் வித்தினாலே எனப் பரிதி வித்தினை வருவித்து உருவகமாக உரைவரைந்துள்ளார். கவ்விது என்பதற்கு உறுதி பெற்றது எனப் பரிதியும் கவ்வுண்டது எனக் காளிங்கரும் கூறும் பொருளினும் அலர்தலை உடைத்தாயிற்று எனப் பரிமேலழகர் கூறும் பொருள் சிறப்பினது. 'தவ்வென்னும்' என்பதற்கு உறுதி பெறாது, தவறுபடும் என்னும் பொருள்களினும் சுருங்கும் என்னும் பரிமேலழகர் பொருள் பொருத்தமாகும். கவ்வை, கவ் என்னும் சொற்களுக்குப் பாவாணர் தரும் விளக்கம் ஏற்புடைத்து.

**1145. களித்தொறுங் கள்ளுண்டல் வேட்டற்றாற் காமம்**
**வெளிப்படுந் தோறு மினிது.**

**பரிமே:**

(அல்ல குறிப்பட்ட பிற்றை ஞான்று வந்த தலைமகனைத் தோழி அலர் கூறி வரைவு கடாயவழி அவன் சொல்லியது.)

கள்ளுண்பார்க்குக் களிக்குந் தோறுங் கள்ளுண்டல் இனிதாமாறு போல, எனக்குக் காமம் அலராந் தோறும் இனிதாகாநின்றது.

**மணக்:**

மயங்குந் தோறும் கள்ளுண்டலை விரும்பினாற் போலக் காமமும் அலராகுந் தோறும் இனிதாகும்.

இஃது, அலரறிவுறுத்த தோழியை நோக்கி, 'நுமக்குத் துன்ப மாயிற்றே இவ்வலர் என்று வினாவிய தலைமகற்குத் தோழி கூறியது.

**முடிநிலை:**

மணக்குடவர் இக்குறளைத் தோழி கூற்றாகவும், பரிமேலழகர் தலைவன் கூற்றாகவும் கொண்டுள்ளனர்; இருவகைக் குறியிடத்தும் தலைவியை எதிர்ப்படும் ஞான்றும் எதிர்ப்பட்ட

ஞான்றும் எதிர்ப்படாநின்ற ஞான்றும் பலவாய வழித் தலைவன் வருந்திய உள்ளத்தனாய் மெலிந்து கூறுவன் என்பதற்கு இக்குறளை மேற்கோள்காட்டியுள்ளார் நச்சினார்க்கினியர். (தொல். பொருள்-103) இங்ஙனம் கூற்றின்பாற் படுத்தி இடர்ப் படுதலைக் காட்டிலும் தலைவன் அலரும் நல்லதாயிற்று எனத் தானே தன் நெஞ்சொடு கூறிக் கொள்கிறான் என்றல் பொருத்த மாகும் என்னும் தண்டபாணி தேசிகர் கூற்று ஏற்கத்தகும்.

**1146. கண்டது மன்னு மொருநா ளலர்மன்னுந்**
**திங்களைப் பாம்புகொண் டற்று.**

**பரிமே:**

(இடையீடுகளானும் அல்லகுறியானுந் தலைமகனை யெய்தப் பெறாத தலைமகள் அவன் சிறைப்புறத்தானாகத் தோழிக்குச் சொல்லுவாளாய் அலரறிவுறீஇ வரைவுகடாயது)

யான் காதலரைக் கண்ணுறப் பெற்றது ஒரு ஞான்றே; அதனினாய அலர் அவ்வளவிற் றன்றித் திங்களைப் பாம்பு கொண்ட அலர் போன்று உலகெங்கும் பரந்தது.

**பரிப்:**

காப்புக் கைம்மிகப்பட்ட தலைமகள் வேறுபாடு கண்டு செவிலி முதலாயினோர் உற்று நோக்கிய குறிப்பைத் தலைமகள் கொண்டு ஒரு நாளைக் காட்சியே அலராகா நின்ற தென்று தோழிக்குக் கூறியது.

**பரிதி:**

ஒரு நாள் நாயகரிடத்தில் இன்பங் கண்டது. அது சந்திரனை இராகு தீண்டினதற்கு ஒக்கும்.

**முடிநிலை:**

பரிமேலழகரும் பரிப்பெருமாளும் துறை வேறுபடுவர். 'கண்டது' என்னும் சொல்லுக்கு இன்பங் கண்டது எனப் பரிதி உரைப்பது சிறப்பில்லை. 'களவும் கற்பும் அலர்வரை வின்றே' என்பதில் களவின்கண் தோழி அலர் கூறியதற்கு மேற்கோள் காட்டுவர் இளம்பூரணர் (தொல். பொருள். 160).

**1147. ஊரவர் கௌவை யெருவாக வன்னைசொன்**
**னீராக நீளுமிந் நோய்.**

**பரிமே:**

(வரைவுநீட ஆற்றாளாய தலைமகளை தலைமகன் சிறைப் புறத்தா னாதலறிந்த தோழி ஊரவரலரும் அன்னை சொல்லும் நோக்கி யாற்றல் வேண்டு மெனச் சொல்லெடுப்பிய வழி அவள் சொல்லியது.)

இக்காம நோயாகிய பயிர் இவ்வூரின் மகளிரெடுக்கின்ற அலர் எருவாக, அது கேட்டு அன்னை வெகுண்டு சொல்லுகின்ற வெஞ் சொல் நீராக வளராநின்றது.

**மணக்:**

இஃது அலரின் ஆற்றாளாகிய தலைமகன் தோழிக்குச் சொல்லியது.

**காளிங்:**

நெஞ்சே! நம்மைத்தான் எய்தப் பெறாமையாலுள்ளவாறு அருமை அவள் தனக்கும் ஒக்கும் அன்றே; அதனால் ஊரவர் உரைக்கும் கவ்வைதானே எருவாகத் தாய் சொல்லும் செறுத் துரையே நீராகக் கொண்டு நெடிது வளரும் போலும் இந்நோ யானது இவள் திறத்தும்.

**முடிநிலை:**

காளிங்கர் தலைவன் தன்நெஞ்சிற்கு உரைப்பதாகத் துறை யமைப்பர். அதனினும் தலைவி கூற்றாகக் கொண்டு எழுதிய உரைகளே சிறக்கும். 'அலரின் தோன்றும் காமத்து மிகுதி' என்ற நூற்பாவுக்கு இதனை இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் மேற்கோள் காட்டுவர்.

**1148. நெய்யா லெரிநுதுப்பே மென்றற்றாற் கெள்வையாற்
காம நுதுப்பே மெனல்.**

**பரிமே:**

[வரைவு நீட ஆற்றாளாய தலைமகளைத் தலைமகன் சிறைப்புறத்தானாதல் அறிந்த தோழி ஊரவரலரும் அன்னை சொல்லும் நோக்கி ஆற்றல் வேண்டும் எனச் சொல் எடுப்பிய வழி, அவள் சொல்லியது.]

ஏதிலா ரெடுக்கின்ற அலரால் நாம் காமத்தை யவித்துமென்று கருதுதல், நெய்யால் எரியை யவித்து மென்று கருதுதலோடு ஒக்கும்.

**மணக்:**

இது தலைமகன் பின்னும் களவொழுக்கம் வேண்டினமை கண்டு தோழி கூறியது.

**காளிங்:**

பற்றி எரிகின்ற எரியினை நெய்யினைச் சொரிந்து மற்று இதனால் தணிக்கக் கடவேம் என்று கருதிய அத்தன்மைத்து யாதெனில்; யாம் உற்ற காம எரியினைச் சிலர் தமது அலர் உரையால் தணிப்போம் என நினைக்கின்றது.

இதில் நுதுத்தல் என்பது அமுக்குதல்; தணித்தல் என்றுமாம்.

**முடிநிலை:**

தலைவி கூற்றாகப் பரிமேலழகரும் தோழி கூற்றாக மணக் குடவரும் துறை கொள்வர். தலைவி கூற்றாகக் கோடல் சிறப் புடைத்து. நுதுத்தல் என்பதற்குத் தணித்தல் என்னும் பொருளினும் அவித்தல் என்னும் பொருள் இங்குப் பொருந்துவ தாகும்.

**1149. அலர்நாண வொல்வதோ வஞ்சலோம் பென்றார்**
**பலர்நாண நீத்தக் கடை.**

**பரிமே:**

(வரைவிடைவைத்துப் பிரிவின்கண் ஆற்றாளாய தலைமகள் அவன் வந்து சிறைப்புறத்தா னாதலறிந்து அலரஞ்சி யாற்றல் வேண்டு மென்ற தோழிக்குச் சொல்லியது.)

தம்மை யெதிர்ப்பட்ட ஞான்று நின்னிற் பிரியேன், அஞ்ச லோம்பு என்றவர் தாமே இன்று கண்டார் பலரும் நாணும் வகை நம்மைத் துறந்தபின், நாம் ஏதிலார் கூறும் அலருக்கு நாணக் கூடுமோ? கூடாது.

**பரிப்:**

தலைமகனைக் காணும் பொழுதில் காணாப் பொழுது பெரிதாதலால், தான் ஆற்றாளாகிய தலைமகளை நோக்கி, நினது ஆற்றாமை அலராகின்றது என்ற தோழிக்குத் தலைமகள் கூறியது.

**முடிநிலை:**

கூற்று ஒன்றாயினும் துறை விளக்கத்தில் உரையாசிரியர்க ளிடையே வேறுபாடு காண்க.

**1150. தாம்வேண்டி னல்குவர் காதலர் யாம்வேண்டுங்**
**கௌவை யெடுக்குமிவ் வூர்.**

**பரிமே:**

(தலைமகன் சிறைப்புறத்தானாகத் தோழி தலைமகட்குச் சொல்லுவாளாய் அலரறிவுறீஇ அவன் உடன்போக்கு நயப்பச் சொல்லியது).

உடன்போகற் கேதுவாகல் நோக்கி யாம் பண்டே விரும்புவ தாய அலரை இவ்வூர் தானே யெடாநின்றது; இனிக் காதலர் தாமும் யாம் வேண்டியக்கால் அதனை இனிதின் நேர்வர்; அதனால் இவ்வலர் நமக்கு நன்றாய் வந்தது.

**மணக்:**

யாம் விரும்பும் அலரையும் இவ்வூரார் எடுத்தார். ஆதலான் இனித் தாங்களே விரும்பிக் கொடுப்பர் நமது காதலர்க்கு.

'தாம் வேண்டி நல்குவர்' என்பது இவர் பாடம்.

**பரிப்:**

வரைவெதிர் கொள்ளாது தமர் மறுத்துழி, ஆற்றாளாகிய தலைமகட்கு இப்புணர்ச்சியை அயலார் தூற்றா நின்றார்; ஆதலால் குரவர்தாமே விரும்பிக் கொடுப்பர் என்று தோழி தலைமகளை ஆற்று வித்தது. யாம் வேண்டும் கவ்வை இவனுக்கு நாம் பெண்டிரானது புறத்தார் அறிய வேணும் என்று நினைத்திருந்த வாறாம்.

**பரிதி:**

நாயகர் நமக்கு இன்பந் தருவர். அந்த இன்பத்தை யாம் கொள்வோமோ என ஊர் அலர் தூற்றியது.

**காலிங்:**

நெஞ்சே! நம்மால் காதலிக்கப்பட்ட காரிகையார் இன்னும் தாமே நல்க வேண்டின் நம்மை நல்குவர். ஆதலால் இவர்பெயர் நினைந்து இறந்து படுதற்கு இயையு மிடத்து அவர் பெயர் கொண்டு யாம் கேட்க விரும்பும் கவ்வை எடுத்து உரையா நின்றது இவ்வூர். எனவே, தோழியைப் பிறர்போலக் கொண்டு கூறியது பொருள்.

**வெ.இராம:**

என்காதலர்தாம் விரும்புகிற போது வந்துதவுவார்; (அது வரையிலும்) இவ்வூரார் நான் விரும்பும் ஏளனப் பேச்சுக்களைப் பேசிக்கொண்டே தானிருப்பார்கள்.

**வரத:**

காதலர் என்னை வேண்டினால், அவர் அடைந்து விடுவார். ஆனால் நான் அவரை வேண்டினாலோ ஊர்ப்பழிதான் கிடைக்கும்.

**முடிநிலை:**

பரிமேலழகர், பரிப்பெருமாள், காளிங்கர் என்னும் மூவரும் இக்குறளுக்கு வெவ்வேறு துறை கொள்வர். 'தாம் வேண்டின் நல்குவர்' என்றவிடத்து உடன்போக்கை நல்குவர் என பரிமேலழகர் உரைப்பது பொருத்தமில்லை. நல்குவர்-வந்துதவுவர் எனக் கூறும் இராமலிங்கம் பிள்ளை உரை ஏற்புடையது. மணக் குடவரும் பரிப்பெருமாளும் 'தாம் வேண்டி' எனப் பாடங்கொண்டு குரவர் தாமே விரும்பி எனப் பொருள் செய்வர். காதலர் என்புழி, நான்காம் வேற்றுமை தொக்கதாகக் கொண்டு காதலர்க்கு என மணக்குடவர் பொருள் செய்தல் இயல்பாகப் படவில்லை. யாம் வேண்டும் என்ற விடத்து யாம் கொள்வோமோ எனப் பரிதி வினாப் பொருள் செய்திருப்பதும் வேண்டினாலோ என வரதராசனார் வினையெச்சப் பொருள் செய்திருப்பதும் ஏலா தலைமகன் கூற்றாகக் காளிங்கர் கொண்டமையின் 'காதலர்' என்பதற்குக் காதலிக்கப்பட்ட காரிகையர் என்று வலிந்து பொருள் கொள்வாராயினர். 'கௌவை' என்பதற்கு ஏளனப் பேச்சு என்னும் இராமலிங்கம் பிள்ளை உரை பொருந்தாது.

# 116. பிரிவாற்றாமை.

அஃதாவது வரைந்தெய்தியபின் தலைமகன் அறம் பொருள் இன்பங்களின் பொருட்டுச் சேயிடையினும் ஆயிடையினும் தலைமகளைப் பிரிந்து செல்லும்; செல்லுஞான்று அப்பிரிவினை அவள் ஆற்றாளாந் தன்மை. அஃது ஈண்டுப் பிரிவுணர்த்திய தலைமகற்குத் தோழி கூறலும், அவள் தனக்குத் தலைமகள் தானே அவன் குறிப்பான் உணர்ந்து கூறலும், பிரிவுணர்த்திய வழிக் கூறலும், தலைமகன் பிரிந்துழி ஆற்றுவிக்கும் தோழிக்குத் தலைமகள் மறுத்துக் கூறலும் என நால்வகையான் கூறப்படும் என அதிகார விளக்கம் தருவர் பரிமேலழகர்.

பிரிவாற்றாமையாவது அலர் அறிவுறுத்தப்பட்ட தலைமகன் தலைமகளை வரைந்து கொண்டு இன்புறுமாயினும், பிரியுங் காலத்து ஆற்றாமை கூறுதல். மேலதனோடு இயைபும் இது இது முதலாகக் கற்பு என்று கொள்ளப்படும் என்பர் மணக்குடவர்.

பிரிவாற்றாமையாவது அலர் அறிவுறுத்தப்பட்ட தலைமகன் தலைமகளை வரைந்து கொண்டதன் பின்பாயினும் வரைவதன் முன்பாயினும் பிரியும் காலத்து ஆற்றாமை. மேலதனோடு இயைபும் இது. இஃது ஈண்டு விசேடித்துக் கூறியது என்னை? காதற்சிறப்பு உரைத்தலின் தலைமகள் கூறினவும் நாணுத் துறவுரைத்தலின் தலைமகன் கூறினவும் பிரிவாற்றாமை யன்றே எனின், இவை எல்லாம் களவு காலத்து ஓரிடத்து உறைவதோர் புணர்ச்சியிற் பிரிவால் வருந்தும் கூற்றெனின், அஃது அற்று அன்று. ஓதல், காவல், பகைதணிவினை, வேந்தற் குற்றுழி, பொருட்பிணி, என்னும் ஐந்தினும் ஒன்று காரணமாக நாடிடையிட்டுத் தலைமகன் பிரியுங்காலத்து ஆற்றாமை யென்று கொள்க. இது முதலாகக் கற்பு என்று கொள்ளப்படும் என விளக்கந்தருவர் பரிப்பெருமாள்.

தனிக்குடித்தனம் ஆரம்பித்துத் தன்னுடன் இன்ப வாழ்க்கை நடத்திக் கொண்டிருந்த கணவன் அரசாங்க அலுவலாக நாட்டுப் பணிச் செய்யவோ, பொருள் சம்பாதிக்கும் அலுவலாக வீட்டுப்

பணியைக் கருதியோ வேற்றூருக்குப் போகவேண்டிய நிமித்தத் தால் மனைவியை விட்டுப் பிரிந்துபோக அவளிடம் விடை பெறும் போது மனைவியின் "பிரிவு ஆற்றாமை" சொல்லுவது இவ்வதி காரம் என விளக்கந்தருவர் **இராமலிங்கம் பிள்ளை.**

தலைமகன் தலைமகளைப் பிரிதல் என்றால், தலைமகனுக்கும் பிரிவினாலாய வருத்தம் ஏற்படவேண்டும். ஆனால் தலைமகள் தான் வருந்துகிறாள் என்ற போது தலைமகன் மேற்கொள்ளும் செயலில் மனம் ஈடுபடுதலால் அவனுக்குப் பிரிவின் கொடுமை இல்லை யென்பதும் தலைமகள் தான் பிரிவினால் தனித்து, அவனையே நினைந்து வருந்த நேரிடும் என்பதும் அறியக் கிடக்கின்றன. அன்றியும், தலைவன் உயிர், தலைவி உடல் என முன்னே கூறினமையின், உடலை விட்டு உயிர் பிரிந்தால், உடலே அழியும்; உயிர் அழியாது என்ற உண்மையும் இதனால் விளங்கும் என விளக்கம் தருவர் வரதராசனார்.

**1151. செல்லாமை யுண்டே லெனக்குரை மற்றுநின்**
**வல்வரவு வாழ்வார்க் குரை.**

**பரிமே:**

(பிரிந்து கடிதின் வருவலென்ற தலைமகற்குத் தோழி சொல்லியது)

நீ யெம்மைப் பிரியாமை யுண்டாயின் அதனை யெனக்குச் சொல்; அஃதொழியப் பிரிந்துபோய் விரைந்து வருதல் சொல்வையாயின்; அதனை அப்பொழுது உயிர் வாழ்வார்க்குச் சொல்.

தலைமகளை ஒழித்து 'எனக்கு' என்றாள், தான் அவள் என்னும் வேற்றுமை யின்மையின்.

**மணக்:**

இது கடிது வருவார் என்ற தோழிக்குத் தலைமகள் ஆற்றாமையால் கூறியது.

**பழைய: (உ. வே. சா.)**

ஒன்று சொல்கின்றேன் என்ற தலைவர்க்குத் தலைவி சொல்லியது.

'மற்றுத்தன் வல்வரவு' என்றது **காளிங்கர்** பாடம்.

**கவிராச:**

நாயகனைப் பிரிந்த உடனே உயிர்போகிறது உத்தமமான கற்பு; பிரிந்த பின்னும் பிராணன் இருக்கிறது மத்திமமான கற்பு'

**மு. கோ:**

வாழ்வார்-காதற் பரத்தை, காமக்கிழத்தியுமாம்.
வல்வரவு- தலைவனுக் கியன்றபோது வரும் வரவு.

**முடிநிலை:**

இக்குறளைத் தலைவனுக்கு முன் தோழி கூறியதாகப் பரிமேலழகர் உரைகூறும். தலைவி கூறியதாகப் பழைய உரை கூறும். இரு உரையும் கொள்ளும் துறைகள் பொருந்துவனவே மணக்குடவர் தோழிக்குத் தலைவி கூறுவதாகக் கொண்டுள்ளார். 'நின் வல்வரவு' என்னும் பாடத்துக்கு அக்கூற்றுப் பொருந்தாது. 'மற்றுந்தன் வல்வரவு' என்று காளிங்கர் கொண்ட பாடத்தை மணக்குடவரும் கொண்டிருத்தல் கூடும் என அவர் கண்ட துறை நோக்கின், கருத இடமுண்டு. கவிராசபண்டிதர் உத்தமமான கற்பு, மத்திமமான கற்பு என்று பகுப்பது சிறப்பில்லை. 'வாழ்வார்' என்பதற்குக் காதற்பரத்தை, காமக்கிழத்தியர் எனக் கொள்ளலாம் எனக் கூறும் மு. கோ. உரை இயல்பில்லை.

**1152. இன்க ணுடைத்தவர் பார்வல் பிரிவஞ்சும்**
**புன்க ணுடைத்தாற் புணர்வு.**

**பரிமே:**

(பிரிவு தலைமகன் குறிப்பானறிந்த தலைமகள் தோழிக்குச் சொல்லியது).

தழையுங் கண்ணியுங் கொண்டு பின்னின்ற ஞான்று அவர் நோக்கு மாத்திரமும் புணர்ச்சி குறித்தமையான் நமக்கின்ப முடைத்தா யிருக்கும், இன்று அப்புணர்ச்சிதான் நிகழாநிற்கவும் அது பிரிவரென்றஞ்சு மச்சத்தினை யுடைத்தாயிற்று, அவரன்பின் நிலைமையிது.

**மணக்:**

நம் காதலரை வரவு பார்த்திருக்குமது இன்பத்தை உடைத்து, அவரைப் புணர்ந்திருக்கும் இருப்பு பிரிவாரோ என்று அஞ்சப்படும் துன்பத்தை உடைத்து.

**பரிப்:**

வரவு பார்த்தல் - களவு காலத்து வரவு பார்த்தல்.

**பரிதி:**

இன்பமான நாயகரைப் பிரியாமல் பிரிவுக்கு அஞ்சப்பட்ட புன்கண்மையால் புணர்வு எப்படி உண்டாம்.

**காலிங்:**

நெஞ்சே! வன்கண்மை சிறிதும் இன்றிப் பெரிதும் இன்கண்மை யுடைத்தாய் இருந்தது. அவர் வந்து நோக்கிய நோக்கமானது. இனி, மற்று இவ்வாறு அன்றி நமக்குப் பெரிதும் மாற்றலாகாப் பிரிவென்னும் புன்கண்மை உடைத்தாயிற்று, அவர் நம்மோடு கூடிய கூட்டம். எனவே, அவர் நோக்கம் பயந்தது இனிய புணர்ச்சி; புணர்ச்சி பயந்தது பெரியதோர் புன்கண்மையை; இனி யாம் உய்யுமாறு எங்ஙனம் என்று தலைமகள் தன் நெஞ்சிற்குச் சொல்லியது பொருள்.

'பிரிவென்னும்' என்பது இவர் பாடம்.

**கவிராச:**

இவர் இத்தனை நாளும் போலே யல்லாமல் இப்பொழுது நம்மிடத்திலே இனிதான பார்வை உடையரான படியினாலே அவர் பிரிவுக்குப் பயப்படுகின்றேன்.

நாம் இவரைப் பிரியவொட்டாமல் புணர்ச்சியிலே மகிழ்ச்சி செய்ய வேணும் என்பது கருத்து.

**வெ. இராம:**

அவரைப் பார்த்துக் கொண்டு இருப்பது எனக்கு இன்பம் உடையது. (பிரிந்துபோக) இணங்குவது பிரிவினால் வரும் அச்சம் உண்டாக்கக் கூடிய துன்பம் உள்ளது. (நான் எப்படி விடை கொடுப்பேன்.)

புணர்வு—இணக்கம் அல்லது சம்மதம்.

**முடிநிலை:**

பரிமேலழகர் இக்குறளைத் தலைமகள் தோழிக்குக் கூறியதாகவும் காளிங்கர் தலைமகள் தன் நெஞ்சிற்குக் கூறியதாகவும் கொண்டுள்ளமை காண்க. 'பார்வல்' என்பதற்குத் தலைவனது பார்வை என்று பரிமேலழகரும் தலைவனைத் தலைவி எதிர் நோக்கியிருத்தல் என மணக்குடவரும் பொருள் கூறுவர். 'அவர் பார்வல்' எனத் தொடர் இருப்பவும் அவரை எதிர்நோக்கியிருத்தல் என்று பொருள் செய்வது வலிந்துரையாகும், பரிதி உரை உள்ள மூலத்தோடு ஒத்திலது. பார்வல் இன்கண் உடைத்து; புணர்வு புன்கண் உடைத்து எனப் பொருள் காண்பதே குறள் நடைக்கு இயைந்தது. ஆனால், கவிராசபண்டிதர் 'பார்வை யுடையரான படியினாலே பிரிவுக்குப் பயப்படுகிறேன்' எனக் கூறும் உரை இயல் பில்லை. 'இன்கண் உடைத்தவர் பார்வல்' என்பதைக் களவுக்காலத்து நிகழ்ச்சியாகக் கொண்டுரைக்கும் உரையும் தகும். 'புணர்வு' என்பதற்குப் பிரிந்துபோக இணங்குதல் என இராமலிங்கம் பிள்ளை உரைப்பது சிறப்பில்லை. 'பெறிற் பிரிவஞ்சும்' (1295) என்னும் குறளில் புணர்ச்சிக் காலத்துப் பிரிவச்சம் கூறப்படுதல் போல, இக்குறளும் அவ்வகை அச்சத்தையே கூறுகிறது. 'புணர்வு' என்பதற்கு ஈண்டு முயக்கம் என்பதே பொருள்.

**1153. அரிதரோ தேற்ற மறிவுடையார் கண்ணும்
பிரிவோ ரிடத்துண்மை யான்.**

**பரிமே:**

(பிரிவு தலைமகன் குறிப்பானறிந்த தலைமகள் தோழிக்குச் சொல்லியது.)

பிரியேனென்ற தஞ்சொல்லும் நம் பிரிவாற்றாமையும் அறிதலுடையராய காதலர் கண்ணும் ஒரோவழிப் பிரிவு நிகழ்தலான் அவர் சொல்லும், தலையளியும் பற்றி நம்மாட்டு அன்புடையரெனத் தேறுந் தேற்றம் அரிதா யிருந்தது.

**பரிப்:**

தலைமகன் பிரிந்தான் என்று கேட்ட விடத்து நின்னிற் பிரியேன் என்ற சொல்லை உட்கொண்டு தலைமகள் கூறியது.

**காலிங்:**

தோழி! உலகத்தினில் தம் உற்றார், சுற்றம், நட்டார் என்னும் அவரவர் மாட்டும் தேறும் தேற்றம் அரிது; மற்று இதற்கு என்னை காரணம் எனின், இன்றியமையாத் தன்மையராகிய இனிய அறிவுடையார் மாட்டும் கூடப் பிரியின் வாழார் பேதையர் எனாது பிரிவு என்பதும் ஒரு நிலத்து உளதாகலான்.

**வெ.இராம:**

பிரிந்து போகிற காதலரிடத்தில் வைத்துள்ள உண்மையான கற்பினால் அறிவுடைய பெண்களுக்கும் பிரிந்து கலங்காமல் இருக்கும் தன்மை முடியாத காரியம்.

தேற்றம்—மனம் தேறியிருத்தல்; அறிவுடையார் கண்ணும்—கணவன் தன்னைவிட்டுப் பிரிந்துபோக வேண்டிய அவசியம் இருப்பதை உணரக் கூடிய அறிவுடைய பெண்களுக்கும்.

**மு.கோ:**

'அறிவுடையார்' என்றமையின் ஓதற் பிரிவுமாம். 'உண்மையான்' என்றதால் பிரிவு இன்றியமையா தென்பது. பிரிவு அறிவுடைய சான்றோரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

**முடிநிலை:**

பரிமேலழகர் இக்குறளைக் கற்பொழுக்கத்தைச் சார்ந்த தாகவும் பரிப்பெருமாள் களவொழுக்கத்தைச் சார்ந்ததாகவும் கொண்டிருப்பர் எனத் தோன்றுகிறது. 'அரிதரோ தேற்றம்' என்பதற்குத் தலைவன்மேல் வைத்தெழுதிய பரிமேலழகர் உரை யினும் உலகில் யாரையும் நம்புதற்கு முடியாது எனப் பொதுப்பட எழுதிய காளிங்கர் உரை பொருத்தமாகும். 'அறிவுடையார்' என்பதற்கு ஈண்டுப் பெண்கள் எனவும் 'உண்மையான்' என்பதற்கு உண்மையான கற்பினால் எனவும் பிரிவு ஓரிடத்து எனப் பிரிக்காது பிரிவோரிடத்து எனக் கொண்டு பிரிந்து செல்லும் காதலரிடத்து எனவும் இராமலிங்கம் பிள்ளை கொண்ட உரைப் போக்கு வலிந்து கொள்வதாகும். 'அறிவுடையார்' என்ற சொல்லாட்சி கொண்டு ஓதற் பிரிவு என்று உரைக்கும் மு.கோ. குறிப்பும் ஏற்புடைத்து.

**1154. அளித்தஞ்ச லென்றவர் நீப்பிற் றெளித்தசொற்**
**றேறியார்க் குண்டோ தவறு.**

**பரிமே:**

(பிரிவு தலைமகன் குறிப்பானறிந்த தலைமகள் தோழிக்குச் சொல்லியது.)

எதிர்ப்பட்ட ஞான்றே தலையளி செய்து நின்னிற் பிரியேன், அஞ்சலென்றவர் தாமே பின் பிரிவராயின், அவர்க்கன்றி அவர் தெளிவித்த சொல்லை மெய்யெனத் தெளிந்தார்க்குக் குற்ற முண்டோ?

**பரிப்:**

பிரிவுணர்த்திய தோழிக்குப் பிரிவு உடன்படாது தலைமகள் வெகுட்சிக் குறிப்பால் கூறியது.

**பரிதி:**

இன்பந் தந்து பிரியோம் என்று உறுதி சொன்ன நாயகர் பிரிந்தார். இனி வந்து நன்மை செய்யினும் துன்ப மன்றியே இன்பமில்லை.

**காளிங்:**

முன்னம் தாமே வந்து தலையளித்து இனி நீ யாதும் அஞ்சேல், ஒரு காலும் நின்னிற் பிரியேன், பிரியின் ஆற்றேன் என்று ஒரு சூளுறவு போலத் தம் உரையால் தெளிவிக்கப் பட்டாரைத் தாமே விட்டு நீங்கின் தாம் அங்ஙனம் தெளிவித்த சொல்லினை இது நமக்கு ஒரு தீர்வுரை என்று தேறினவர்க்கு உண்டோ ஒரு தவறு.

'என்றார் உரை நீப்பின்' என்பது இவர் பாடம்.

## வெ. இராம:

அன்புடன் ஆதரவளித்து நான் இருக்கிறேன் அஞ்ச வேண்டாம் என்று மணந்தவர் என்னை விட்டுப் பிரிந்தால், அதற்காக மறுத்துப் பேசுவதை மேற்கொண்டவர்க்குக் குற்ற முண்டா? (இல்லை).

தெளித்த சொல்-தெறித்த சொல், அதாவது மாறுபட்ட சொல்; மறுக்குஞ் சொல். தேறியார்க்கு-தேர்ந்து சொன்னவர்க்கு, இங்கே தேர்ந்து சொன்ன எனக்கு. தெளித்த சொல்- 'செல்லாமை உண்டேல் எனக்குரை, மற்றுநின் வல்வரவு வாழ்வார்க்குரை' என்றது.

**முடிநிலை:**

குறளின் பிற்பகுதிக்குப் பரிதி உரை மூலத்தோடு இயைந்திலது. 'அளித்து' என்பதற்கு இன்பந்தந்து என்று கூறும் அவர் பொருளினும் தலையளி செய்து என்று கூறும் பிறர்பொருள் பொருத்தமாகும். காளிங்கர் உரை வேற்றுமைக்கு அவர்கண்ட பாட வேற்றுமையே காரணமாகும். 'என்றார் உரை நீப்பின்' என அவர் கொண்ட பாடம் 'தெளித்த சொல்' என வருஞ் சீரொடு இயையாது தளை தட்டலின், அப்பாடம் சிறவாது. 'தெளித்த சொல்' என்பதற்கு மறுக்கும் சொல் என்றும் 'தேறியார்க்கு' என்பதற்குத் தேர்ந்து சொன்ன எனக்கு என்றும் பொருள் கொள்வது இயல்பாகப்படவில்லை.

**1155. ஓம்பி னமைந்தார் பிரிவோம்பன் மற்றவர்**
**நீங்கி னரிதாற் புணர்வு.**

**பரிமே:**

(பிரிவு தலைமகன் குறிப்பான் அறிந்த தலைமகள் தோழிக்குச் சொல்லியது.)

என் னுயிரைச் செல்லாமற் காத்தியாயின், அதனை யாளுதற் கமைந்தாருடைய செலவினை அழுங்குவிப்பாயாக. அழுங்கு விப்பாரின்றி அவர் செல்வாராயின், அவராலாளப்பட்ட வுயிருஞ் செல்லும்; சென்றாற் பின்னவரைக் கூடுதல் எனக்கரிதாம்.

**மணக்:**

மேல் தலைமகள் கூறிய சொல்கேட்டு யாது சொல்வேன் என்ற தோழிக்குத் தலைமகள் கூறியது.

**வெ.இராம:**

என்னைப் பாதுகாக்கவே ஏற்பட்டவர் (என் கணவர்) என்னைப் பிரிவதைத் தவிர்க்க வேண்டும்; அதற்கு மாறாக அவர் பிரிந்து போனால் நான் அதற்கு இணங்கிச் சகித்திருப்பது முடியாது.

ஓம்பின் — பாதுகாக்க. புணர்வு—சகிப்பு.
'**அமைந்தார்**' என்பதற்கு நமது நெஞ்சொடு அமைந்த நம் காதலர் எனப் பொருளுரைப்பர் **காளிங்கர்.**

**அமைந்தார்** என்னுஞ் சொல் இறைவன் ஏற்பாட்டின்படி அமைந்தவர் என்னுங் குறிப்பினது என்பர் **தேவநேயப் பாவாணர்.**

**முடிநிலை:**

'அமைந்தார்' என்பது தலைவரைக் குறிக்குஞ் சொல்.அதற்கு உயிரை ஆளுதற்கு அமைந்த தலைவர் எனப் பரிமேலழகரும் நெஞ்சொடு அமைந்த காதலர் எனக் காளிங்கரும் இறைவன்

ஏற்பாட்டின்படி அமைந்தவர் எனப் பாவாணரும் விளக்கஞ் செய்தல் காண்க. தலைவராக அமைந்தவர் என இயல்பாகக் கொள்ளலாம். ஓம்பின் அமைந்தார் என்பதைச் சேர்த்துப் பாதுகாக்கவே ஏற்பட்ட கணவர் என்று உரைசெய்வர் இராமலிங்கம் பிள்ளை. 'ஓம்பின்' என்பது செயின் என் எச்சம் ஆதலின் செயவென் எச்சமாகப் பொருள் செய்திருத்தல் பொருந்தாது. 'புணர்வு' என்பதற்குச் சகிப்பு என்று கூறும் அவர்தம் பொருளும் பொருத்தமில்லை.

**1156. பிரிவுரைக்கும் வன்கண்ண ராயி னரிதவர்**
**நல்குவ ரென்னு நசை.**

**பரிமே:**

*[தலைமகன் பிரிவுணர்த்தியவாறு வந்து சொல்லிய தோழிக்குச் சொல்லியது.]*

நம் கவவுக்கடுமை யறிந்த தலைவர் தாமே நம்முன் நின்று தம் பிரிவினை யுணர்த்தும் வன்கண்மை யுடைய ராயின், அத்தன்மையார் பின்பு நம் மாற்றாமை யறிந்துவந்து தலையளி செய்வர் என்றிருக்கும் ஆசை விடப்படும்.

**மணக்:**

இது தலைமகன் பிரிந்தான் என்று கேட்ட விடத்து நின்னிற் பிரியேன் என்ற சொல்லை உட்கொண்டு தலைமகள் கூறியது.

**பரிப்:**

பிரிதலும் ஆற்றுதலும் உலகியல் என்று நெருங்கிக் கூறிய தோழிக்குத் தலைமகள் கூறியது.

**பரிதி:**

பிரியாமல் கூடியிருக்கும் நாயகர் பிரிந்தால் பின்பு கூடுதல் அரிது.

**வெ.இராம:**

மீண்டும் மீண்டும் பிரிந்து போக வேண்டும் என்பதைச் சொல்லுகிற நெஞ்சழுத்த முள்ளவராக இருப்பதனால், அவர் நான் விரும்புகிறபடி பிரியாமலிருப்பதை அருள்வார் என்னும் ஆசை முடியாது. (ஆதலால் என் ஆசையை விடுத்து விடை கொடுக்க வேண்டியதுதான்)

வன்கண்— மன உறுதி.

**மு.கோ:**

நல்குதல் — சென்று கொண்டு வந்த பொருளைப் பலர்க்கும் பகுத்துண்டு வாழ்தலுமாம் -திரும்பினாலன்றோ அவையெல்லாம் ஆகுமென்பது. வன்கண்ணர்-காவற் (போர்) பிரிவுமாம்.

**தேவ:**

இது தலைமகள் தன் இளமையினாலும் இல்லறத் தொடக்க நிலையினாலும் பொருளின் இன்றியமையாமையையும் ஆடவர் கடமையையும் உணராது காதலொன்றையே கருதிக் கூறிய கூற்றாகும்.

**முடிநிலை:**

'பிரிவுரைக்கும் வண்கண்ணர்' என நிகழ்காலமாகக் கூறி யிருப்பவும் மணக்குடவர் தலைமகன் பிரிந்தான் என்று கேட்டவிடத்து என இறந்தகாலமாகத் துறை வகுத்திருப்பது இயைவதன்று. இதனை உரைக்கும் என்பது உரைத்த, உரைக் கின்ற என்ற இறந்தகால நிகழ்காலப் பெயரெச்சங்களுக்கு இனமான எதிர்காலப் பெயரெச்சமே யன்றி நிகழ்காலப் பெயரெச்ச மன்மை தெளிவு என உரைக்களஞ்சிய ஆசிரியர் மறுப்பர். உரைக்கும் என்னும் செய்யுமென்னும் வாய்பாடு நிகழ்வு, எதிர்வு ஆகிய இரு காலங்கட்கும் பொது. உரைக்கின்ற என்ற செய்கின்ற எனும் வாய்பாடு பிற்காலத்தது ஆதலின், உரைக்கும் என்பதிலே நிகழ்வு, எதிர்வுஆகிய காலங்களை அடக்கிக் கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் முக்காலங்களுக்கும் செய்யும், செய்த, என்ற இரு வாய்பாடுகளை மட்டுமே தொல்காப்பியர் கூறியுள்ளார்.

ஆகவே உரைக்கும் என்பது நிகழ்காலப் பெயரெச்ச மன்று என்றல் சாலாது. பரிதி உரையைத் தோழி கூற்றாகக் கொள்வர் தண்டபாணி தேசிகர். மற்றை உரையாசிரியர்கள் போலத் தலைவி கூற்றாகக் கொள்ளினும் இழுக்காது. தலைவன் பிரிவது ஒருதலை யாதலின் அதற்கு விடையளிக்க வேண்டியது தான் எனத் தலைவி கவன்று கூறுவதாக இராமலிங்கம் பிள்ளை கூறும் கருத்து போற்றத் தகும். 'நல்குதல்' என்பதற்குப் பலர்க்கும் பகுத்துண்டு வாழ்தல் என்னும் மு.கோ. கூறும் பொருள் இயல்பாகாது. காமத்துப்பாலில் 'நல்குதல்' என்பது அருளுதல், தண்ணளி செய்தல் என்ற பொருளிலேயே பயின்று வரும். 'தாம் வேண்டின் நல்குவர் காதலர்' (1150) என்பது காண்க. 'வன்கண்ணர்' என்ற சொல் கருதி, காவற் (போர்) பிரிவுமாம் என்ற அவர் குறிப்பும் ஈண்டுப் பொருந்தாது. தலைவியின் கூற்றாகக் கருதிய பாவாணர் அதற்குத் தரும் விளக்கம் தெளிவுடையது.

**1157. துறைவன் றுறந்தமை தூற்றாகொல் முன்கை**
**யிறையிறவா நின்ற வளை.**

**பரிமே:**

[தலைமகன் பிரிவுணர்த்தியவாறு வந்து சொல்லிய தோழிக்குச் சொல்லியது.]

துறைவன் என்னைப் பிரிவலுற்றமையை அவனுணர்த்தாமல் தாமே யுணர்ந்து என் முன்கையின் இறையினின்றுங் கழலா நின்ற வளைகள் எனக்கறிவியாவோ, அவனுணர்த்த வுணர்ந்து வந்து நீ யறிவித்தல் வேண்டுமோ?

**பரிப்:**

பிரியாரென அறிவுறுக்கும் தோழிக்கு நீ சொல்ல வேண்டா; யான் அறிந்தேன் என்று தலைமகள் கூறியது.

'தேற்றாதோ' என்பது இவர்பாடம்.

**பரிதி:**

நாயகர் பிரிந்ததை ஒருவரும் அறியார்; நம்முடைய முன்கை வளை கழல எல்லாரும் அறிந்தனர்.

**காலிங்:**

தோழி! இவை நம் துறைவன் நம்மைப் பிரிந்தமை அறியாவோ? அறியும். என்னையோ வெனின், முன்கைச் சந்தினின்று நீங்கா நின்றன வளை; எனவே, தோள் மெலிவு பார்த்துத் தளர்வுற்றாள் என்பது பொருள்.

'தேற்றாகொல்' என்பது இவர் பாடம்.

**பழைய: (உ.வே.சா.)**

துறைவன் என்னைப் பிரியலுற்றமையை, அவன் உணர்த் தாமல் தானே உணர்ந்து என் முன்கை மணிக்கட்டினின்று வளையயெல்லாம் கழன்று விழுந்தன; அவன் பிரிந்தமையை எனக்கு நீ தெளிவிக்க வேண்டா.

'தேற்றாய் கொல்' என்பதிவர் பாடம். தலைவன் பிரிவினை யானறிய என்கை வளை அவன் பிரிந்தான் என்று வீழ்ந்து சொல்லிய; தோழி, நீ சொல்ல வேண்டா என்றது. விலக்காது சொல்ல வந்தாய் என்று புலந்து சொல்லியது.

**வரத:**

என் முன்கை மணிக்கட்டிலிருந்து கழன்று கொண்டிருக்கும் வளையல்கள் என்னைப் பிரிய வேண்டு மென்று நினைக்குந் தலைவருக்கு என்மெலிந்த நிலைமையை எடுத்துக் கூறாவோ?

**'வளை'** என்பதற்கு வளையல்களின் ஓசை எனப் பொருள் கூறுவர் **இராமலிங்கம் பிள்ளை.**

**முடிநிலை:**

தேற்றாதோ, தேற்றாகொல், தேற்றாய் கொல் என முறையே பரிப்பெருமாளும், காளிங்கரும், பழைய உரையும் கொண்டபாடங்களினும் 'தூற்றாகொல்' எனப் பிறர் கொண்டபாடமே தொடை நயமும் பொருள் நயமும் உடையது. பரிமேலழகரும் பரிப்பெருமாளும் தலைவன் இன்னும் பிரிந்து செல்லவில்லை என்னும் நிலையில் வைத்துத் துறை கூறி யுள்ளனர். துறைவன் துறந்தமை என இறந்தகாலமாக வருதலின் அவ்விருவர் கொண்ட துறைகள் சிறப்பில்லை. பிரிந்து சென்றார் என இறந்தகாலமாகக் கொண்டே பரிதி உரை எழுதியிருப்பது பொருத்தமுடைத்து. 'தூற்றாகொல்' என்பதற்குத் தலைவி தனக்கே அறிவிப்பதாகப் பரிமேலழகர் உரை செய்திருப்பதினும் ஊருக்கு அறிவிப்பதாகப் பரிதி உரை செய்திருப்பது மிகப்பொருந்தும், 'தூற்றுதல்' என்னும் சொற்குப் பலரறிய வெளிப்படுத்தல் என்பதே பொருளாதலின். வரதராசனார் 'துறைவன்' என்புழி நான்கனுருபு தொக்கதாகக் கொள்வதும் 'துறந்தமை' என்பதற்கு மெலிந்தமை எனப்பொருள் கொள்வதும் பொருத்தமாகா. 'தூற்றாகொல்' என்னும் பன்மை நடையை நோக்குழி, 'வளை' என்பதற்கு வளையல்களின் ஓசை என்னும் இராமலிங்கம் பிள்ளையின் பொருள் சிறப்பாகப் படவில்லை.

**1158. இன்னா தினனில்லூர் வாழ்த லதனினு
மின்னா தினியார்ப் பிரிவு.**

**பரிமே:**

[தலைமகன் பிரிவுணர்த்தியவாறு வந்து சொல்லிய தோழிக்குச் சொல்லியது.]

மகளிர்க்குத் தங் குறிப்பறியுந் தோழிய ரில்லாத வேற்றூரின் கண் வாழ்தல் இன்னாது; அதன்மேலுந் தங்காதலரைப் பிரிதல் அதனினும் இன்னாது.

தலைவன் செலவினை அழுங்குவித்து வாராது, உடன்பட்டு வந்தமை பற்றிப் புலக்கின்றாள் ஆகலின், 'இனன் இல்லூர்' என்றாள்.

**மணக்:**

தனக்கு இனம் இல்லாத ஊரின்கண் இருந்து வாழ்தல் இன்னாது; இனியாரைப் பிரிதல் அதனினும் இன்னாது.

இது பிரிவுணர்த்திய தலைமகற்கு இவ்விரண்டு துன்பமும் எங்கட்கு உளவாம் என்று பிரிவுடன்படாது தோழி கூறியது.

**பரிதி:**

தன் உறவின்முறை யில்லாத ஊரிலே வாழ்தல் பொல்லாது; அதனினும் பொல்லாது நாயகரைப் பிரிதல்.

**சக்கர:**

திருமணத்திற்குப் பின் அயலார் வாழ்கின்ற தன்கணவன் ஊருக்குச் செல்லும் பெண்ணுக்கு அவ்வூர் முன் தான் வாழ்ந்த இடம்போல் மகிழ்வளிக்காது. அவ்வூரில் வாழும் துன்பத்திலும் கணவனைப் பிரிந்து வாழ்தல் அவளுக்கு மிகுந்த துன்பந்தரும்.

(ஆங்கில மொழிபெயர்ப்பு)

**முடிநிலை:**

தோழிக்குத் தலைவி கூறியதாகப் பரிமேலழகரும் தலைமகனுக்குத் தோழி கூறியதாக மணக்குடவரும் கொள்வர். துறை வேறுபாடுகட்கேற்ப 'இனன்' என்ற சொற்குத் தோழியர் எனப் பரிமேலழகரும் சுற்றம் என்பதுபட மணக்குடவரும் பொருள் கூறியுள்ளனர். இத்துறை வேறுபாடுகளும் உரைவேறுபாடுகளும் கொள்ளத் தக்கனவே. தலைவி மணந்து கொண்டு தன்னூர் விடுத்து மணமகனது புதிய ஊர் புகுந்த போது அங்குப் பலரும் அறிமுக மில்லாதவராக இருப்பர். ஆதலின் 'இனன் இல்லூர்' எனப்பட்டது என்று கூறி அதனோடு இனியார்ப் பிரிவு இன்னாது என்பதனை இயைபுபடுத்திக் காட்டும் சக்கரவர்த்தி நயினார் உரை நயமுடைத்து.

**1159. தொடிற்சுடி னல்லது காமநோய் போல
விடிற்சுட லாற்றுமோ தீ.**

**பரிமே:**

(காமந் தீயே போன்று தானின்ற விடத்தைச் சுடுமாகலான் நீ யாற்றல் வேண்டு மென்ற தோழிக்குச் சொல்லியது)

தீத் தன்னைத் தொட்டாற் சுடுமாயிற் சுடுத லல்லது காமமாகிய நோய் போலத் தன்னை யகன்றால் தப்பாது சுடுதலை வற்றோ? மாட்டாது.

**மணக்:**

தீண்டினால் சுடுமதல்லது காமநோய் போல நீங்கினால் சுடவற்றோ தீ.

தலைமகன் பிரிந்துழித் தலைமகளாற்றாமை கண்டு தோழி கூறியது.

**முடிநிலை:**

மணக்குடவர் தலைமகள் ஆற்றாமை கண்டு தோழி கூறியதாகத் துறை கொள்வர். 'விடினும் காமஞ் சுடும்' என்ற குறட்கருத்து ஆற்றாமைக் குரியதே யன்றி, ஆற்றுதற்குரிய தன்று அங்ஙனம் உரியதாக மணக்குடவர் கொள்வது பொருத்தமில்லை. தலைவி கூற்றாகக் கொண்ட பரிமேலழகர் துறையே தகும்.

**1160. அரிதாற்றி யல்லனோய் நீக்கிப் பிரிவாற்றிப்
பின்னிருந்து வாழ்வார் பலர்.**

**பரிமே:**

(தலைவியர் பலரும் பிரிவாற்றி யிருப்பர், அது நீ செய்கின்றிலை யென்ற தோழிக்குச் சொல்லியது).

(நீ சொல்லுகின்ற தொக்கும்), பிரிவுணர்த்தியவழி அதற்குடம் பட்டுப் பிரியுங்கால் நிகழும் அல்லல் நோயினையும் நீக்கி, பிரிந்தால் அப்பிரிவு தன்னையு மாற்றிப் பின்னு மிருந்து உயிர்வாழு மகளிர் உலகத்துப் பலர்.

(பிரிந்து உயிர்வாழ்வார் ஒருவருமில்லை என்பது குறிப்பு).

**பரிப்:**

அதனைப் பொறுத்தலாவது பொழுதும் குழலும் முதலாயினவற்றான் வரும் துன்பத்தைப் பொறுத்தல். இவ்வாறு உலகியற்கையாதலால், நீ ஆற்றாயாகின்றது தக்க தன்று என்று தோழி தலைமகளை நெருங்கிக் கூறியது.

**காளிங்:**

தத்தம் கொழுநரைப் பிரிந்த பிரிவின்கண் தமக்கு அல்லலைச் செய்யும் நெஞ்சுறுவது யாது, அதை வரவரத் தணித்தும் மற்றும் அரியவை பொறுத்தும் இங்ஙனம் பிரிவு ஆற்றிப் பின்னும் இருந்து தம் உயிர் வாழும் பெண்டிரும் பலர் இவ்வுலகத்து; எனவே, யான் இருந்து வாழ்தல் எவ்வாற்றானும் அரிது என்று தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

**வெ. இராம:**

மிகவும் பாடுபட்டு முயன்று துன்பந் தரும் காம நோயை விலக்கிப் பிரிந்திருப்பதைப் பொறுத்துக் கொண்டிருந்து (காதலர் வந்த) பின் அவருடன் வாழ்கின்றவரே பலராவர்.

நானும் அப்பெண்கள் போலவே பொறுத்திருக்க வேண்டும் என்பது கருத்து.

**முடிநிலை:**

'பின்னிருந்து வாழ்வார் பலர்' என்பதற்குப் பிரிந்து உயிர் வாழ்வார் ஒருவருமில்லை என்ற குறிப்பிற் பொருள் கொள்வர் பரிமேலழகர். இத்தகைய குறிப்புப் பொருட்குக் குறள் நடை இடந்தருவதாகத் தோன்றவில்லை. பரிமேலழகர் போலவே காளிங்கர் தலைவி கூற்றாகக்கொண்டாரேனும், உலகில் தலைவன் பிரிவிடைப் பின்னிருந்து வாழ்வார் பலர் உளர். என்னால் அங்ஙனம் இருந்து வாழ்தல் இயலாது என்று தலைவியின்

ஆற்றாமையை மிகுத்துக் காட்டுமாறு எழுதிய உரை தகும். பரிப்பெருமாள் பிரிவாற்றாது வருந்தும் தலைவிக்கு உலகியல் கூறித் தோழி ஆற்றுவிப்பதாகக் கொண்ட துறையும் பொருந்துவதே. 'பின்இருந்து' என்பதற்குப் பிரிந்த தலைவன் வந்தபின் அவனுடன்கூடியிருந்து என்பதுபட எழுதிய இராமலிங்கம் பிள்ளை உரை வலிந்து கோடலாகும்.

# 117. படர்மெலிந்திரங்கல்.

அது படரால் மெலிந்திரங்கல் என விரியும். அஃதாவது பிரிவாற்றானாய தலைமகள் தானுறுகின்ற துன்பத்தினை எப்பொழுதும் நினைத்தலின், அந்நினைவான் மெலிந்து இரங்குதல். அதிகார முறைமையும் இதனானே விளங்கும் என விளக்கம் தருவர் பரிமேலழகர்.

படர்மெலிந்திரங்கலாவது, தலைமகள் தலைமகன் பிரிந்துழிக் கதுமென உற்ற துன்பத்தினால் மெலிந்திரங்குதல். பிரிந்துழி யுற்ற துன்பமாவது போனானென்று கேட்ட காலத்து வருவதோர் மன நிகழ்ச்சி. இது பிரியப்பட்டார்க்கு முற்பாடு தோன்று மாதலான், அதன்பின் கூறப்பட்டது என்பர் மணக்குடவர்.

அஃதாவது நாயகன் பிரிந்து போனதினாலே தலைமகள் தன்னுடைய துக்கத்தை எப்பொழுதும் நினைத்தலின் அதனால் மெலிந்திரங்குதல்; நாயகனும் நாயகியைப் பிரிந்து போன விடத்திலே அவளை நினைத்துக்கொண்டு விசாரப்படுகிறதுமாம் என்பர் கவிராச பண்டிதர்.

இவ்வதிகாரம் தலைவனுக்கும் உரியதாகக் கொள்வது பொருத்தமாகப் படவில்லை. இவ்வதிகாரக் குறளெல்லாம் பெரும்பாலும் தலைவிக்குரியவாகவே உள்ளன.

**1161. மறைப்பேன்மன் யானிஃதோ நோயை யிறைப்பவர்க்**
**ஊற்றுநீர் போல மிகும்.**

**பரிமே:**

(காம நோயை வெளிப்படுத்தல் நின்நாணுக்கு ஏலாது என்ற தோழிக்குச் சொல்லியது).

இந்நோயைப் பிறரறிதல் நாணி யான் மறையாநின்றேன்; நிற்பவும், இஃது அந்நாண் வரை நில்லாது நீர் வேண்டுமென்று இறைப்பவர்க்கு ஊற்றுநீர் மிகுமாறுபோல் மிகாநின்றது.

**காளிங்:**

தோழி! 'நம் துணைவரானவர் பிரிந்த விடத்து நம் துயர் பிறர்க்குப் புலனாகாமை மறைக்கு மதுவே நம் பெண்மைக்கு இயல்பு என்று என்னை நீ இடித்து உரைக்க வேண்டுவது இல்லை; இந்நோயினை யான் பிறர் அறியாமை மறைப்பேன்; மறைத்த இடத்தும் இறைப்பவர்க்கு ஊற்றுநீர் போலத் தானே மிகா நின்றது.

'யானிஃதோர் நோயை' என்பது இவர் பாடம்.

**சி. இலக்:**

'இதோ' என்பது 'இஃதோ' என வந்துள்ளது. 'இதோ படிக்கின்றேன்' என்றால் உடனே படிக்கத் தொடங்குதலைக் குறிக்கும். 'இதோ ஓடிக்கின்றேன்' என்றால் 'இவ்வாறு ஓடிக் கின்றேன்' என்று உடனே செய்யத் தொடங்குவதையும் செய்யும் முறையையும் உணர்த்தும். இங்குத் தோழி தலைவியை நோக்கிப் 'பிரிவுத் துயரை உன்னால் மறைக்க முடியவில்லையே!' என்று கூறிய ஞான்று தலைவி இதோ பார், யான் மறைக் கின்றேன்; ஆனால் அது மறையாது வெளிப்படுகின்றது. யான் என்ன செய்வேன்? என ஏங்குகின்றாள்.

இஃதோ என்பது 'இது' என்ற சுட்டுப் பெயரிலிருந்து தோன்றிய தாயினும், இங்குச் சுட்டுப் பொருளைத் தந்திலது.

**முடிநிலை:**

'யானிஃதோர் நோய்' என்னும் காளிங்கர் பாடம் சிறப் பில்லை, ஓர் என்பதற்குப் பின் வருஞ் சொல்லின் முதலெழுத்து உயிரன்மையின். இக்குறட்குத் துறை வேற்றுமை யில்லை. 'இஃதோ' என்பதற்கு வழக்கு நெறிகாட்டி விளக்கம் தரும் இலக்குவனார் உரை நினையத்தகும்.

**1162. கரத்தலு மாற்றேனிந் நோயைநோய் செய்தார்க்**
**குரைத்தலு நாணுத் தரும்.**

**பரிமே:**

(ஈண்டையார் அறியாமல் மறைத்தல், ஆண்டையார் அறியத் தூதுவிடுதல் என்னு மிரண்டனுள் ஒன்று செயல் வேண்டு மென்ற தோழிக்குச் சொல்லியது.)

இந்நோயை ஈண்டையார் அறியாமல் மறைத்தலும் வல்லே னாகின்றிலேன்; ஆகாக்கால், நோய் செய்தார்க்கு உரைக்க வெனின், அதுவும் எனக்கு நாணினைத் தாராநின்றது; இனி யென் செய்கோ?

**பரிப்:**

இந்நோயை மறைக்கவும் அறிகின்றிலேன்; இந்நோயைச் செய்தார்க்குச் சொல்லவும் நாண மாகாநின்றது.

இவ்வாற்றாமையைத் தலைமகற்குச் சொல்லிவிடுவோம் என்று தலைமகள் குறிப்பு அறிதற் பொருட்டுக் கூறிய தோழிக்குத் தலைமகள் கூறியது.

**காளிங்:**

தோழி! இங்ஙனம் பெருகிச் செல்லாநின்ற படர் நோயை யான் இனிப் பலர்க்குப் புலனாகாமை மறைத்தலும் அறியேன்; மற்று, இப்படர் நோய் செய்தார்க்குச் சென்று ஒரு தூது உரைக்கக் கருதின், மற்று அதுவும் பெரியது ஓர் நாணுதலைத் தருமா யிராநின்றது; இனி என் வினையும் யான் அறிகிலேன்.

**முடிநிலை:**

'நோய் ஊற்றுநீர் போலமிகும்' என்ற முற்குறள் நினைந்து, 'இந்நோய்' என்பதற்கு இங்ஙனம் பெருகிச் செல்லாநின்ற படர் நோய் எனக் காளிங்கர் உரைப்பர். இக்குறளை உரையாளர் மூவரும் தோழிக்குத் தலைவி கூறியதாகக் கொள்ளினும், பிற்புலம் அமைப்பதில் சிறிது வேறுபடுதல் காண்க.

**1163. காமமு நாணு முயிர்காவாத் தூங்குமென்**
**னோனா வுடம்பி னகத்து.**

**பரிமே:**

(ஈண்டையார் அறியாமல் மறைத்தல், ஆண்டையார் அறியத் தூதுவிடுதல் என்னும் இரண்டனுள் ஒன்று செயல் வேண்டும் என்ற தோழிக்குச் சொல்லியது.)

காமநோயும் அதனைச் செய்தவர்க்கு உரைக்க லொல்லாத நாணும் தம்மைப் பொறாத என்னுடம்பின் கண்ணே, உயிர் காத்தண்டாக அதனிரு தலையினுந் தூங்கா நின்றன.

**பரிப்:**

தலைமகள் கருத்தின் பொருட்டு அவர் உள்வழிச் செல்வேம் என்ற தோழிக்குப் போக நினைக்கும் ஒருகால்; அது பெண்மை யல்ல என்று நினைத்துத் தவிரும் ஒருகால்; இப்பொழுது என் மனநிகழ்ச்சி அது என்று தலைமகள் கூறியது.

**முடிநிலை:**

தலைவன்பால் தூது விடுதலாகப் பரிமேலழகரும் தலைவன் பால் தானே செல்ல நினைப்பதாகப் பரிப்பெருமாளும் சிறு வேறுபாடு தோன்றத் துறை வகுத்துள்ளமை காண்க.

**1164. காமக் கடன்மன்னு முண்டே யதுநீந்து**
**மேமப் புணைமன்னு மில்.**

**பரிமே:**

(தலைவியர் காமக் கடற் படார்; படினும், அதனை ஏற்ற புணையான் நீந்திக் கடப்ப ரென்ற தோழிக்குச் சொல்லியது.)

யாவர்க்கும் உளவாய் வருகின்ற இவ்விரண்டனுள்ளும் எனக்கு உண்டாகின்றது காமக் கடலே; அதனை நீந்தும் அரணாகிய புணை யில்லை.

இருவழியும் மன்னும் உம்மும் அசைநிலை. தூதுவிட்டு இதற்குப் புணை யாகற்பாலையாய நீயும் ஆயிற்றிலை என்பது கருத்து.

**மணக்:**

காமக் கடல் நிலையாக உண்டே, அது கடக்கும் ஏமமாகிய புணை நிலையாக இல்லையே.

இது தலைமகள் ஆற்றாமை கண்டு நெருங்கிக் கூறிய தோழியைக் குறித்து நமக்குத் துணையாவார் இல்லை எனத் தலைமகள் கூறியது.

**வரத;**

காமம் கடல்போன்றது. ஆனால், அதை நீந்திக் கரைசேரப் பாதுகாவலான தோணிதான் இல்லை.

இங்குப் பாதுகாவலாகிய தெப்பம் எனத் தலைமகனைக் குறிப்பிடுகிறாள் தலைவி.

**சி.இலக்:**

காதலாகிய கடல் நிச்சயமாக உளதே; அக்கடலைக் கடக்கும் பாதுகாவலாகிய தெப்பம் நிச்சயமாக இல்லை.

பிரிந்துள்ள தலைவனைக் கொண்டு வந்து சேர்ப்பாரும் இலரே என வருந்தி இவ்வாறு கூறுகின்றாள் தலைவி.

**'மன்னும்'** என்பதற்கு மிகவும் எனப் பொருள் கூறுவர் **காளிங்கர்.**

தெப்பமாவது நாயகிக்கு நாயகனும் நாயகனுக்கு நாயகியும் என விளக்கந் தருவர் **கவிராசபண்டிதர்.**

**முடிநிலை:**

'ஏமப்புணை' என்பதற்குத் தோழி எனப் பரிமேலழகரும் தலைவன் என் வரதராசனாரும் உரைப்பர். ஓராற்றான் இரண்டும் கொள்ளத்தக்கனவே. 'மன்' என்னும் இடைச்சொல்லை அசை நிலையாகப் பரிமேலழகரும் நிலைத்தல் என்னும் பொருளில் மணக்குடவரும் மிகுதி என்னும் பொருளில் காளிங்கரும் உறுதி யாக என்னும் பொருளில் இலக்குவனாரும் கொண்டுள்ளனர். அசைநிலையாகக் கொள்வதினும் நிலைத்தல், உறுதியாக என்னும் பொருள்கள் கொள்ளலாம்.

**1165. துப்பி னெவனாவர் மற்கொ றுயர்வரவு
நட்பினு ளாற்று பவர்.**

**பரிமே:**

(தூது விடாமை நோக்கித் தோழியொடு புலந்து சொல்லியது)

இன்பஞ் செய்தற் குரிய நட்பின்கண்ணே துன்ப வரவினைச் செய்ய வல்லவர் துன்பஞ் செய்தற் குரிய பகைமைக்கண் என் செய்வார் கொல்லோ?

துயர் வருதலை விலக்கலா யிருக்க அது செய்கின்றிலை எனப் புலக்கின்றமையின், துயர் வரவு செய்தாளாக்கியும் பிறளாக் கியும் கூறினாள்.

**மணக்:**

மென்மை செய்யவேண்டும் நட்டோர் மாட்டே துன்பம் வருதலைச் செய்கின்றவர், வன்மை செய்ய வேண்டுமிடத்து யாங்ஙனம் செய்கின்றாரோ?

இது பகைதணி வினையின் கண் பிரிந்த தலைமகனது கொடுமையை உட்கொண்டு தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

'எவன் செய்வார் கொல்லோ' என்பது இவர் பாடம்.

**வெ. இராம:**

என்னிடத்தில் பிரியமுள்ளவராக இருக்கிற போதே எனக்கு இவ்வளவு துன்பம் வரச் செய்கிற என் காதலர் என்னிடத்தில் ஏதேனும் வருத்தமுற்று பிரியம் இல்லாதவராகி விட்டால் இன்னும் எவ்வளவு துன்பம் உண்டாக்குவாரோ?

**வரத:**

பிரிக்க முடியாத நட்புக் கொண்டவரிடத்தே துன்பம் உண்டாவதை அறிந்தே தாங்கிக் கொண்டிருக்கும் தலைவருக்குப் பிறர்போய்ச் சொல்வதனால் என்ன நன்மை செய்து விடுவார் என்று நம்புவது?

**சி. இலக்:**

துன்பம் வருதலை, துன்பக் காலத்து உதவுதற்குரிய நட்புத் தன்மையில் உண்டாக்குபவர், பற்றுக்கோடாகக் கொள்ளின் என்ன பயனைச் செய்வர்?

உடுக்கை இழந்தவர் கைபோல் உதவ வேண்டியது நட்பின் இயல்பு; ஆனால், இவரோ நம்முடன் நட்புடையவரா யிருந்தும் நமக்குத் துயர் தருதலைச் செய்கின்றார். துன்பம் வரும் காலத்தில் இவரைப் பற்றுக்கோடாகக் கொண்டால், நமக்குப் பயன் இல்லை

**முடிநிலை:**

பரிமேலழகரும் மணக்குடவரும் துறையமைப்பில் வேறுபடுதல் காண்க. நட்பினுள் துயர் வரவு ஆற்றுதலைத் தோழி மேலதாகப் பரிமேலழகர் கூறுவர். அதனினும் தலைவன் மேலதாகக் கூறும் உரைகள் சிறப்பின. 'துப்பு' என்பதற்கு வன்மை, பற்றுக்கோடு என்னும் பொருளினும் பகை என்னும் பொருள் ஈண்டுச் சிறக்கும். வரதராசனார் குறளின் இறுதியில் வரும் 'ஆற்றுபவர்' என்னும் சொற்கு நான்காம் வேற்றுமை உருபு விரித்தலும் விரித்துத் தலைவன் துன்பத்தைத் தாங்கிக் கொண்டிருப்பதாகப் பொருள் கோடலும் குறளின் முதலடிக்குத் தலைவருக்குப் பிறர்போய்ச் சொல்வதனால் என்ன நன்மை செய்து விடுவர் என்று நம்புவது என்று பொருளுரைத்தலும் இலக்கண நெறிக்கும் சொற்கிடக்-கைக்கும் பொருந்தவில்லை. 'துப்பின்' என்பதனைத் தலைவிக்கே கொண்டு அவள் தலைவனிடத்து விருப்பின்றி நடந்து விட்டால் என்னதுன்பம் செய்வானோ எனக் கூறும் இராமலிங்கம் பிள்ளையின் கருத்து ஏற்புடையதே. இக்குறட்கு நட்பில் துன்பம் செய்யும் தலைவர், பகையில் என்னாவர்? (மிகத் துன்பம் செய்வர்) என்று தலைவி தோழிக்குரைத்து இரங்கினாள் என்பது பொருளாகும்.

**1166. இன்பங் கடன்மற்றுக் காம மஃதடுங்காற்**
**றுன்ப மதனிற் பெரிது.**

**பரிமே:**

(காமத்தான் இன்ப முற்றார்க்கு அதனினாய துன்பம் வருமென்ற தோழிக்குச் சொல்லியது).

காமம் புணர்வால் இன்பஞ் செய்யுங்கால், அவ்வின்பங் கடல் போலப் பெரிதாம்; இனி, அதுதானே பிரிவால் துன்பஞ் செய்யுங் கால், அத்துன்பம் அக்கடலினும் பெரிதாம்.

**மணக்:**

இஃது, 'இன்ப முற்றார் துன்பமுறுதல் உலகியல்' என்று ஆற்றுவித்த தோழிக்கு, 'ஆற்றலரிது' என்று தலைமகள் கூறியது.

இவர் பாடம் 'கடலற்றுக் காமமற் றஃதடுங்கால்' என்பது.

**பரிதி:**

காம இன்பம் கடல்நீரை யொக்கும்; அதனினும் துன்பம் எழுகடல் எனச் சொல்லவும் படும்.

**முடிநிலை:**

'கடலற்று' என்னும் பாடம் சிறப்பினது. இக் குறளை இளம் பூரணர் துன்பத்துப்புலம்பல் என்னும் மெய்ப்பாட்டிற்குச் சான்று காட்டுவர். துன்பம் அதனிற் பெரிது என்பதற்குக் கருத்து வாங்கித் துன்பம் எழுகடல் எனப் பரிதி விளக்குவர். 'ஒருநாள் எழுநாள் போற்றோன்றும்' (1269) என்னும் குறளை அவ்வுரைக்கு ஒப்பு நோக்குக.

**1167. காமக் கடும்புன லீந்திக் கரைகாணேன்**
**யாமத்தும் யானே யுளேன்.**

**பரிமே:**

(காமக்கடல் நிறை புணையாக நீந்தப்படு மென்றாட்குச் சொல்லியது).

காமமாகிய கடலை நீந்தாதேன் அல்லேன், நீந்தியும் அதற்குக் கரைகாண்கின்றிலேன்; அக்காணாமைக் காலந்தான் எல்லாருந் துயிலும் அரையிரு ளாயிற்று; அவ்வரை யிருட் கண்ணும் அதற்கொரு துணையின்றி யானேயாயினேன்; ஆயும் இறந்து பட்டு உய்ந்து போகாது உளேனாகா நின்றேன்; ஈது ஒரு தீவினைப் பயனிருந்த வாறென்!

'கடுமை' ஈண்டு மிகுதிக்கண் நின்றது.

**மணக்:**

இது காதலர் குறித்த நாள் வருந்துணையும் ஆற்றுமாறு என்னை என்று தலைமகள் தன்னுள்ளே சொல்லியது.

**வரத:**

தலைவனோடு காமக்கடலை நீந்தத் தொடங்கி இடையில் தலைவர் பிரிந்ததால் கடலிடைத் தோணி கவிழ்ந்து கரைசேர முடியாதவ ளானேன் என்று தலைவி கூறினாள்.

**முடிநிலை:**

தலைவி தோழிக்குக் கூறியதாகப் பரிமேலழகரும் தலைவி தனக்குள்ளே கூறியதாக மணக்குடவரும் துறை கொண்டிருத்தல் காண்க. 'நீந்துதல்' என்ற வினை துன்பந்தரும் ஒன்றைக் கடப்பதையே குறிக்கும். 'பிறவிப் பெருங்கடல் நீந்துவர்' (10) என்பது காண்க. ஆதலின், 'காமக் கடும்புனல் நீந்தி' என்பதற்குத் தலைவனோடு காமக்கடலை நீந்தத் தொடங்கி என்று இன்பக் கடலைக் கடப்பதாகக் கூறும் வரதராசனார் உரை பொருத்தமில்லை.

**1168. மன்னுயி ரெல்லாந் துயிற்றி யளித்திரா**
**வென்னல்ல தில்லை துணை.**

**பரிமே:**

(இரவின் கொடுமை சொல்லி யிரங்கியது.)

இவ்விரா அளித்தா யிருந்தது, உலகத்து நிலை பெறுகின்ற உயிர்களை யெல்லாந் தானே துயிலப் பண்ணுதலான் என்னை யல்லது வேறு துணை யுடைத்தாயிற் றில்லை.

அளித்து-இகழ்ச்சிக் குறிப்பு.

**மணக்:**

இவ்விரா அளித்தாயிருந்தது, உலகத்து வாழ்கின்ற உயிர்க ளெல்லாவற்றையும் துயிலப் பண்ணி, என்னை யல்லாது, வேறு துணை யில்லையாக இருந்தது.

இது பிற்றை ஞான்று வினாவிய தோழிக்குத் தலைமகள் 'கண் உறங்குகின்ற தில்லை' என்று சொல்லியது.

**ந சி. க:**

அருள் செய்து உலகில் நிலைபெற்ற உயிர்களை எல்லாம் நித்திரை கொள்ளச் செய்கின்ற இராக்காலத்துக்கு என்னை யல்லாமல் வேறு துணையில்லை.

**சி. இலக்:**

இவ்விரவுப் பொழுது உலகத்துயிர்கள் அனைத்தையும் துயில வைத்து இன்பம் அளித்து, என்னைத் தவிர அதற்குத் துணையாவாரைப் பெற்றிலது.

எல்லா உயிர்க்கும் அருள் செய்த இரா எனக்கு அருள் செய்திலதே! எனத் தலைவி தன் ஆற்றாமையால் இராவின் மீது பழி சுமத்தி வருந்துகின்றாள்.

**முடிநிலை:**

பரிமேலழகரும் மணக்குடவரும் இக்குறளைத் தலைவி கூற்றாகக் கொள்ளினும் சிறிது வேறுபடுதல் காண்க. 'அளித்து என்பதனை முற்றாகக் கொண்டு இரா அளிக்கத்தக்கது என பொருள் கூறுவர் பரிமேலழகர். அதனை வினையெச்சமாகக் கொண்டு அருள் செய்து என்று ந.சி. கந்தையா பிள்ளையும் இன்பத்தை அளித்து என்று இலக்குவனாரும் பொருள் கொள்வர். வினை யெச்சப் பொருள்களினும் முற்றாகக் கொண்ட பொருள், இரக்க மிகுதி சுட்டுதல் காண்க. 'துயிற்றி' என்னும் வினையெச்சத்திற்கு ந.சி. க. நித்திரை கொள்ளச் செய்கின்ற எனப் பெயரெச்சமாகப் பொருள் கொள்வது பொருந்தாது.

**1169. கொடியார் கொடுமையிற் றாங்கொடிய விந்நா**
**ணெடிய கழியு மிரா.**

**பரிமே:**

(இரவின் கொடுமை சொல்லி இரங்கியது.)

காதலரோடு நாமின்புற்ற முன்னாள்களிற் குறியவாய் அவர் பிரிவாற்றே மாகின்ற இந்நாட்களிலே, நெடியவாய்ச் செல்கின்ற கங்குல்கள் அக்கொடியாரது கொடுமைக்கு மேலே தாங் கொடுமை செய்யாநின்றன.

**மணக்:**

கொடியவர் செய்த கொடுமையினும் தாம் கொடியனவாய் நின்றன, இக்காலத்து நெடியவாய்க் கழிகின்ற இராப்பொழுதுகள்.

இது 'பொழுது விடிகின்ற தில்லை' என்று தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

**பரிதி:**

கொடிய நாயகனிலும் கொடிய, நெடிய இரா.

**காலிங்:**

நெஞ்சே! நமக்குப் பிரிவு என்பதோர் கொடுமை செய்த அக்கொடியாரது கொடுமையினும் தாம் சாலக் கொடியவாய் இருந்தன; யாவை எனின், நம்மை ஒருபொழுதும் அறியாது இன்னாவாய் நெடியவாய்ப் பெருகிச் செல்லும் பல யாமங்களை நிலையுறுப்பாக உடைய இந்நெட்டிரா.

எனவே, அன்று நெடுகாமையும் இன்று நெடுகுதலும் கண்டு மெலிந்துரைத்தவா றாயிற்று.

**பழைய:(உ.வே.சா)**

தலைவர் கூடி இன்பம் செய்யும் நாளில் இன்பஞ் செய்து குறுகியும் அவர்பிரிந்து துன்பம் செய்யும் நாளில் துன்பஞ் செய்து நீட்டித்தும் நிற்பதனாற் 'கொடியார் கொடுமையினும் தாம் கொடிய' என்றதென்க.

**முடிநிலை:**

காளிங்கர் தலைவி தன் நெஞ்சினை முன்னிலைப் படுத்தி இரவின் கொடுமை கண்டு மெலிந்துரைத்ததாகத் துறை கொள்வர் பரிமேலழகரும் மணக்குடவரும் தலைவி தோழியிடம் இரவின் கொடுமை சொல்லி இரங்கியதாகக் கொள்வர். பரிதி உரை குறட்கருத்தை மிகச் சுருக்கமாகத் தந்துள்ளது. இரா 'கொடியார் கொடுமையினும் கொடிய' என்பதற்குப் பழைய உரை தரும் விளக்கம் நயமுடையது.

**1170. உள்ளம்போன் றுள்வழிச் செல்கிற்பின் வெள்ளநீர்**
**நீந்தல மன்னோவென் கண்.**

**பரிமே:**

(நின் கண்கள் பேரழகழிகின்றன வாகலின் அழற்பாலை யல்லை யென்றாட்குச் சொல்லியது.)

மனம் போலக் காதலருள்ள தேயத்துக் கடிதிற் செல்ல வல்லன வாயின் என் கண்கள் இங்ஙனம் வெள்ளமாகிய தந்நீரை நீந்தா.

**மணக்:**

அவருள்ள இடத்து நெஞ்சினைப் போல என்கண்கள் செல்ல வல்லன வாயின், வெள்ளமாகிய நீரின்கண் புகுந்து நீந்தா.

இது, காண்டல் விருப்பினால் தலைமகள் கூறியது.

**பரிதி:**

நாயகன் மேலே வைத்த மனம் எனக்கு வசப் படாமல் நாயகனைப் பற்றிச் செல்வது போல, கண்ணே! நீயும் உள்ளத் துடனே கூடி நாயகனைக் காண்ப தன்றியே கலுழ்ந்து நீர் கரைவது என்னோ?

**காலிங்:**

தோழி! எனது உள்ளமானது அவர் உள்வழிச் சென்று என் மாட்டு வருதலின், மற்று அதுபோலத் தாமும் ஆண்டுச் சென்று கண்டு கண்டு ஓடிவருகற்பின் அங்ஙனம் அழுது அழுது பெரு வெள்ளம் கோத்தநீர் நீந்துதலைச் செய்யல, என்னோ என் கண்களானவை: அதனால் என்நெஞ்சு போலத் தாமும் அவரைக் கண்டு மீளப்பெறாத கடுந்துயரினால் கலுழ்கின்றன.

**'வெள்ளநீர் நீத்தல'** எனப் பாடங் கொண்டு வெள்ளம் போலக் கண்ணீரை ஊற்றமாட்டா எனப் பொருள் கூறுவர் **வெ. இராமலிங்கம் பிள்ளை.**

**முடிநிலை:**

மணக்குடவரும் பரிமேலழகரும் தலைவி கூற்றாக இக் குறளைக் கொள்ளினும், அவர்கள் துறைக்கு அமைத்துக் கொண்ட சூழலில் வேறுபட்டிருத்தல் காண்க. கண்களை விளித்துக் கூறுவதாக அமைந்த பரிதி உரைக்கு மூலத்துள்ள சொற்கள் இயையவில்லை. 'செல்கிற்பின்' என்பதற்குச் செல்ல வல்ல வாயின் என்னாது சென்று கண்டு மீளப்பெறாத ஒன்று திரும்புதலையும் இயைத் துரைக்கும் காளிங்கர் உரை பொருந் தாது. இராமலிங்கம் பிள்ளை 'நீத்தல' என்று பாடமோதுவதும் அதற்கு ஊற்ற மாட்டா என்று பொருளுரைப்பதும் சிறப்பில.

# 118. கண்விதுப்பழிதல்.

அஃதாவது கண்கள் தம் காட்சிவிதுப்பான் வருந்துதல். காட்சிவிதுப்புத் தலைமகனைக் காண்டற்கு விரைதல். இது படரான் மெலிந்தவழி நிகழ்வதாகலின், படர்மெலிந்து இரங்கலின் பின் வைக்கப்பட்டது என அதிகார விளக்கமும் முறைவைப்பும் கூறுவர் பரிமேலழகர்.

கண்விதுப்பழிதலாவது, கண் தனது விரைவினால் அழிந்தமை தலைமகள் தோழிக்குக் கூறுதல். பிரிவின்கண் துன்பமுற்றார்க்குக் கண்ணீர் முற்பாடு தோன்றுமாதலின் தனது ஆற்றாமையை ஒன்றன் மேலிட்டுக் கூறுவாள், அதனை முற்பாடு கண்ணின் மேலிட்டுக் கூறுதலால், அதன்பின் இது கூறப்பட்டது என விளக்கந் தருவர் மணக்குடவர்.

கண்விதுப்பழிதல் என்பது காதலனைப் பிரிந்திருக்கும் ஏக்கத்தால் காதலி அடிக்கடி அழுது கண்களின் நலம் குறைவது. இது முழுதும் காதலியின் பேச்சு என்பர் இராமலிங்கம் பிள்ளை.

**1171. கண்டாங் கலுழ்வ தெவன்கொலோ தண்டாநோய்**
**தாங்காட்ட யாங்கண் டது.**

**பரிமே:**

(நின்கண்கள் கலுழ்ந்து தம்மழகு இழவாநின்றன; நீயாற்றல் வேண்டு மென்ற தோழிக்குத் தலைமகள் சொல்லியது).

இத்தணியா நோயை யாமறிந்தது தாமெமக்குக் காதலரைக் காட்டலா னன்றோ; அன்று அத் தொழிலவாய கண்கள் இன்று எம்மைக் காட்டச் சொல்லி யழுகின்றது என்கருதி?

**மணக்:**

இது தலைமகள், காட்டுவா ரில்லை என்று தோழியைக் குறித்துச் சொல்லியது.

**பரிதி:**

கண்டால் அழுவது எவன் கொலோ, நோய் செய்து தானே காட்ட யான் கண்டேன்.

**முடிநிலை:**

பரிதி உரையை நோக்கின், 'கண்டால் கலுழ்வது' என அவர் பாடங் கொண்டிருக்க வேண்டும் எனத் தோன்றுகிறது. அப்பாடங் கொள்ளின் 'கலுழ்வது' என்பதற்கு வினைமுதலும் இல்லையாகும். 'தாம் காட்ட' என்ற விடத்துத் 'தாம்' என்பதனால் சுட்டப்படும் பெயரும் இல்லையாகும். ஆதலால், 'கண்டாங் கலுழ்வது' எனக் கொண்ட பரிமேலழகர் பாடமே சிறப்புடைத்து.

**1172. தெரிந்துணரா நோக்கிய வுண்கண் பரிந்துணராப்
பைதல் லுழப்ப தெவன்.**

**பரிமே:**

[நின் கண்கள் கலுழ்ந்து தம்மழகு இழவா நின்றன; நீ ஆற்றல் வேண்டும் என்ற தோழிக்குத் தலைமகள் சொல்லியது].

மேல் விளைவதனை யாராய்ந் தறியாது அன்று காதலரை நோக்கி நின்ற உண்கண்கள், இன்று இது நம்மால் வந்த தாகலிற் பொறுத்தல் வேண்டுமெனக் கூறுபடுத்துணராது துன்ப முழப்பது என் கருதி?

**மணக்:**

முன்பு அவர் நல்லர் என்று தெரிந்து உணர்ந்து நோக்கிய உண்கண்கள் இப்பொழுது வருத்தமுற்று நல்லரென்று உணராவாய், துன்பம் உழப்பது எற்றுக்கு?

இது கண்ணின் அறியாமையைத் தோழிக்குச் சொல்லியது.

**காளிங்:**

தோழி! யான் உன்னை ஒன்று வினாவுகின்றேன். மற்று அதனைச் சிறிது ஆராய்ந்து அறிந்து சொல்லுவாயாக, அவரிடத்துப் பரிந்து நோக்கிய என் மைஉண்டு ஆகன்ற கண்ணானவை அங்ஙனம் அன்று அறியாவாயினும் இன்று உற்ற பின்னும் உணராவாய் உறுதுயர் உழப்பது என் கருதிக் கொல்லோ? சொல்.

***சாமி. சிதம்:***

ஆராய்ந்து அறியாமல் அன்று தலைவரைப் பார்த்து மையுண்ட கண்கள் தம் குற்றத்தை விரைந்து அறியாமல் இன்று துன்பம் அடைவது ஏனோ?

**மு.கோ:**

தலைவன் பரிந்து வந்துணர்த்தாத பைதல். அவனை உண்டு (விழுங்கி விடுவது போலக்) கண்ட கண்கள். நோயை யுண்ட கண்ணுமாம். தான் செய்த பிழைக்கு நாணி யல்லவா கிடக்க வேண்டும்.

**'உண்கண்'** என்பதற்குக் காதலரது அழகை உண்ட கண்கள் என உரைப்பர் **மயிலை. சிவமுத்து.**

**முடிநிலை;**

**'உணரா'** என ஈரிடத்தும் வருவனவற்றை எதிர்மறை வினை யெச்சமாகக் கொள்வர் பரிமேலழகர். முதலில் வரும் **'உணரா'** என்பதனை மட்டும் செய்யா என்னும் வாய்பாட்டு வினை யெச்சமாகக் கொண்டு உணர்ந்து எனப் பொருளுரைப்பர் மணக்குடவர். இங்ஙனம் கொண்டது இலக்கண நெறிக்கு ஒக்கு மேனும் தெரிந்துணரா, பரிந்துணரா என்னும் நடைப்போக்கை நினையுங்கால் இரண்டனையும் எதிர்மறை வினையெச்சமாகக் கொண்டு பொருள் செய்தல் தெளிவு பயப்பதாம்; பொருட்குறைவு மில்லை. பரிந்து நோக்கிய உண்கண் தெரிந்துணரா எனக்

காளிங்கர் உரைக்கு வலிந்து கொண்டு கூட்ட வேண்டியுள்ளது. அவர் உரைக்கு ஈரிடத்து வரும் உணரா வினையெச்சமில்லை. 'பரிந்து' என்பதற்குக் கூறுபடுத்து, வருத்தமுற்று, அன்புகொண்டு, விரைந்து என்றெல்லாம் பொருள் கூறியுள்ளனர். 'இருந்துள்ளி என் பரிதல்' (1243) 'பரிந்தோம்பிப் பற்றற்றேம்' (88) 'பரிந்தோம்பிக் காக்க' (132) என்னுமிடங்களில் எல்லாம் பரிதல்-வருந்துதல் என்னும் பொருளே காணப்படுதலின், ஈண்டு அப்பொருளுரைத்த மணக்குடவர் உரையே சிறப்பினதாம். 'பரிந்துணரா' என்பதற்கு வினைமுதலாக 'உண்கண்' இருப்பவும், தலைவன் என்னும் சொல்லை வருவித்துத் தலைவன் பரிந்துவந்து உணர்த்தாத என்றுரைப்பது வலிந்துரையாகும். 'உண் கண்' என்பதற்கு மையுண்டகண் என்பதே இயல்புரையாகும். பிறவாறு கூறப்படுவன நயவுரையெனக் கொள்க.

**1173. கதுமெனத் தானோக்கித் தாமே கலுழு**
**மிதுநகத் தக்க துடைத்து.**

**பரிமே:**

[நின்கண்கள் கலுழ்ந்து தம்மழகு இழவாநின்றன; நீ ஆற்றல் வேண்டும் என்ற தோழிக்குத் தலைமகள் சொல்லியது.]

இக்கண்கள் அன்று காதலரைத் தாமே விரைந்து நோக்கி இன்று தாமே விரைந்தழுகின்ற இது, நம்மாற் சிரிக்கத் தக்க இயல்பினை யுடைத்து.

**மணக்:**

இஃது ஆற்றாமை மிகுதியால் நகுதல் மிக்க தலைமகளை இந்நகுதற்குக் காரணமென்னை? என்று வினாவிய தோழிக்கு அவள் கூறியது.

**மு.கோ:**

கதுமென என்றது ஆற்றாமையால் அடிக்கடி அவன் காலடி சத்தமும் தொலைவில் அவன் போன்ற தோற்றமும் கொண்டு நோக்கல்.

முடிநிலை:

மணக்குடவரும் பரிமேலழகரும் இக்குறளைத் தலைவி கூற்றாகக் கொள்ளினும் சூழல் அமைப்பில் வேறுபடுதல் காணலாம். 'கதுமென' என்பது விரைவு குறிக்கும் ஒலிக்குறிப்பிடைச் சொல், 'பொள்ளென ஆங்கே புறம் வேரார்' (487) என்புழிப் பொள்ளென என்பது போல. அதற்கு மு.கோ. எழுதிய விளக்கமும் நினையத் தகும்.

**1174. பெயலாற்றா நீருலந்த வுண்கண் ணுயலாற்றா
வுய்வினோ யென்க ணிறுத்து.**

**பரிமே:**

[நின் கண்கள் கலுழ்ந்து தம்மழகு இழவாநின்றன; நீ ஆற்றல் வேண்டும் என்ற தோழிக்குத் தலைமகள் சொல்லியது.]

உண்கண்கள் அன்று யானுய்ய மாட்டாமைக்கு ஏதுவாய ஒழிவில்லாத நோயை என்கண்ணே நிறுத்தித் தாமு மழுதலை மாட்டாவண்ணம் நீர் வற்றிவிட்டன.

**மணக்:**

உயல் ஆற்றாத என்மாட்டு உய்வில்லாத நோயை உண் கண்கள் நிறுத்தி, தாமும் அழமாட்டாவாய் நீருலந்தன.

கண்கள் தாம் நினைத்தது முடித்துத் தொழின்மாறின என்று கூறியவாறு.

பரிதி:

மழைபெய்வது போலக் கண்ணீர் சொரிந்து என் ஆவியைக் காமநோய் செய்தது இக்கண்.

முடிநிலை:

மணக்குடவர் 'உயலாற்றா உய்வில் நோய் என்கண்' என்ற தொடரை உயலாற்றா என்கண் எனக் கொண்டு கூட்டிப் பொருள்

செய்துள்ளார். இக் கொண்டு கூட்டால் பொருள் சிறக்கவில்லை. 'பெயலாற்றா' என்ற விடத்து மழைபெய்வது போல என உவமை தோன்ற உரை செய்வர் பரிதி. 'பெயல்' என்ற சொல் அவரை அங்ஙனம் உரை செய்யத் தூண்டிற்றுப் போலும். எனினும், உவமை காட்டும் குறிப்பு குறளகத்து எவ்வகையானும் இல்லை.

**1175. படலாற்றா பைத லுழக்குங் கடலாற்றாக்**
**காமநோய் செய்தவென் கண்.**

**பரிமே:**

[நின் கண்கள் கலுழ்ந்து தம்மழகு இழவாநின்றன; நீ ஆற்றல் வேண்டும் என்ற தோழிக்குத் தலைமகள் சொல்லியது.]

எனக்குக் கடலுஞ் சிறிதாம் வண்ணம் பெரிதாய காமநோயைச் செய்த என் கண்கள், அத்தீவினையால் தாமுந் துயில்கிலவாய்த் துன்பத்தையும் உழவாநின்றன.

காமநோய் காட்சியான் வந்ததாகலின், அதனைக் கண்களே செய்ததாக்கிக் கூறினாள். துன்பம் அழுதலானாயது

**மணக்:**

இது, பிறர்க்கு இன்னாமை செய்தார்க்கு இன்னாமை வந்தது என்று தோழிக்குத் தலைமகள் கூறியது.

**வரத:**

கடலைவிடப் பெரியதாய்க் காமநோயை அன்று எனக்குத் தந்த கண்கள் இன்று படமுடியாத துன்பத்தைப் பட்டு வருந்துகின்றன.

**மயிலை சிவ:**

படல் ஆற்றா-மூட இயலாத; கண் இமைக்களை மூடித்தூங்க முடியாத; பொறுக்க முடியாத என்றும் கூறலாம்.

**முடிநிலை:**

பரிமேலழகரும் மணக்குடவரும் இக்குறளைத் தலைவி கூற்றாகக் கொள்ளினும் சூழலமைப்பில் வேறுபடுதல் காண்க. படலாற்றா பைதல் என்பதற்குப் படமுடியாத துன்பம் என வரதராசனாரும் கண் இமைகளை மூடித் தாங்கமுடியாத துன்பம் என வரதராசனாரும் கண் இமைகளை மூடித் தாங்கமுடியாத துன்பம் என மயிலை. சிவமுத்துவும் பொருள் கூறுவர். அப் பொருளுக்குப் படலாற்றாப் பைதல் என ஒற்று மிகுந்திருத்தல் வேண்டும். 'படலொல்லா பேதைக் கென்கண்' (1136) என்புழிப் போலக் கண்படல் என இயைந்து உறக்கத்தைக் குறித்தல் காண்க. கண்படல் என்பது கண்பொருந்துதல் எனப் பொருள் பட்டு உறக்கத்தைக் குறிக்கும். கண்படைநிலை என்புழியும் கண்படை, உறக்கம் என்னும் பொருளது. படுதல்–படை என வரும்.

**1176. ஓஒ வினிதே யெமக்கிந்நோய் செய்தகண்
டாஅ மிதற்பட் டது.**

**பரிமே:**

[நின் கண்கள் கலுழ்ந்து தம்மழகு இழவாநின்றன; நீ ஆற்றல் வேண்டும் என்ற தோழிக்குத் தலைமகள் சொல்லியது.]

எமக்கு இக்காமநோயினைச் செய்த கண்கள் தாமும் இத்துயிலாது அழுதற்கண்ணே பட்டது மிகவு மினிதாயிற்று.

'ஓ' வென்பது மிகுதிப் பொருட்கண் வந்த குறிப்புச்சொல். தம்மால் வருத்த முற்ற வெமக்கு அது தீர்ந்தாற் போன்ற தென்பதாம்.

**மணக்:**

இது நின்கண் கலங்கிற்று; அஃது எனக்கு இன்னாதாயிற்று என்ற தோழிக்கு அது மிகவும் இனிது என்று தலைமகள் கூறியது.

**'தாஅ மிடர்ப்பட்டது'** எனப் பாடங் கொள்வர் **காளிங்கர்.**

**மு. க:**

"சும்மா இருந்த என்னைச் சுந்தரியின் நினைவால் வாடச் செய்யும் நோயை உண்டாக்கிய ஏ, கண்களே! நீங்கள் தூக்கம் வராமல் அழுகிறீர்களே. அது எனக்கு மிக மகிழ்ச்சி. 'முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்' என்பதற்கேற்ப, தண்டனையை ஒன்றாக அனுபவியுங்கள் என்று முணுமுணுத்தான்.

(தலைவன் கூற்றாகக் கொள்வர்)

(குறளோவியம், ப. 53)

**முடிநிலை:**

'தாஅ மிதற்பட்டது' என்னும் பாடத்தினும் 'தாஅ மிடர்ப் பட்டது' என்னும் காளிங்கர் பாடம் சிறக்கும். இவ்வதிகாரம் முழுதும் தலைவி கூற்றாகவே உரையாசிரியர்கள் கொண்டு உள்ளனர். குறட்போக்குக்கும் அதுவே பொருத்தமாகத் தோன்றுகிறது. ஆனால், இக்குறளைத் தலைவன் கூற்றாகக் கொண்டு கலைஞர் மு. க. விளக்கமளித்தல் காண்க.

**1177. உழந்துழந் துண்ணீ ரறுக விழைந்திழைந்து**
**வேண்டி யவர்க்கண்ட கண்.**

**பரிமே:**

(நின்கண்கள் சுலுழ்ந்து தம்மழகு இழவாநின்றன; நீ ஆற்றல் வேண்டும் என்ற தோழிக்குத் தலைமகள் சொல்லியது.)

விழைந்து உண்ணெகிழ்ந்து விடாதே, அன்று அவரைக் கண்ட கண்கள், இன்று இத்துயிலாது அழுங்கலாய துன்பத்தினை யுழந்துழந்து தம்மகத்துள்ள நீர் அற்றே போக!

**மணக்:**

அழுதலை யுழந்துழந்து உள்ள நீர் அறுவனவாக, தாம் வேண்டினவரை விரும்பி நெகிழ்ந்து கண்ட கண்கள்.

இஃது இவ்வாறு அழுதல் தகாதென்று தோழிக்குத் தலைமகள் கூறியது.

**பரிதி:**

உழைத்து உழைத்துக் கண்ணீர் உகுத்தது, விரும்பி அவரைக் கண்ட கண்.

**காளிங்:**

தோழி! முன்னம் தாம் விரும்பியவரைக் கண்டு இன்புற்ற கண் இவ்வாறு விரும்பிக் குழைந்து அமைந்து அலமந்து அழுது இங்ஙனம் உண்ணீர் செலவற்றுப் போக; இனி இதற்கு என்னை செய்வது?

'உழைந்துழைந்து' என்பது இவர்பாடம்.

**வரத:**

'கண்ணின் உள்ளே நீர் இருக்கிறது. அதன்கண்ணே தான் பார்க்கும் உருவங்கள் பட்டு மனத்துக்குச் செல்லுகின்றன. அந்த நீர் கலங்கி விடுமானால் பார்வை யில்லாது போய் விடும். என்னுடைய கண்ணுக்குப் பார்வை யில்லாது போய் விடட்டும் என்று கண்ணைப் பார்த்துத் தலைவி சபிக்கிறாள்.

**முடிநிலை:**

'வேண்டியவர்க் கண்ட' என்னும் தொடரை வேண்டி எனவும் அவர்க் கண்ட எனவும் பிரித்துப் பொருளுரைப்பர் பரிமேலழகர். வேண்டியவர் என்பதனையே ஒரு சொல்லாகக் கொண்டு பொருளுரைப்பர் மணக்குடவர். இவ்விருவர் கொண்டனவும் பொருந்தும். வேண்டியவர்க் கண்ட கண் விழைந்திழைந்து உழைந்துழைந்து உண்ணீர் அறுக எனக் காளிங்கர் இயைப்பர். இவ்வியைப்பினும் விழைந்திழைந்து வேண்டியவர்க் கண்ட கண் எனக் கிடந்தாங்கே கொள்ளுதல் இயல்பும் தெளிவுமாகும். 'உழைந்துழைந்து' என்னும் காளிங்கர் பாடம் எதுகைச் சிறப்புடையது. குறளின் முதற்பகுதிக்கு பரிதி உரை பொருந்தி வரவில்லை. 'உண்ணீர் அறுக' என்பதன் கருத்தினை வாங்கிக் கொண்டு வரதராசனார் புதுவிளக்கம் தருதல் காண்க.

**1178. பேணாது பெட்டா ருளர்மன்னோ மற்றவர்க்**
**காணா தமைவில கண்.**

**பரிமே:**

(காதலர் பிரிந்து போயினா ரல்லர்; அவர் ஈண்டுளர்; அவரைக் காணுமளவும் நீ யாற்றல் வேண்டு மென்ற தோழிக்குச் சொல்லியது)

நெஞ்சால் விழையாது வைத்துச் சொன்மாத்திரத்தால் விழைந்தவர் இவ்விடத்தே யுளர். அவ்வுண்மையாற் பயன்யாது? அவரைக் கண்கள் காணாதமைகின்றன வில்லையாயின்.

மன்–ஒழியிசைக்கண் வந்தது. ஓகாரம் அசைநிலை. இனிக் கொண்கனை என்று பாடமாயின், என் கண்கள் தம்மைக் காணாதமைகின்ற கொண்கனைத் தாம் காணா தமைகின்றன இல்லை. இவ்வாறே தம்மை ஒருவர் விழையா திருக்கத் தாம் அவரை விழைந்தார் உலகத்துளரோ என்று உரைக்க. இதற்கு 'மன்' அசைநிலை.

**மணக்:**

விரும்பத் தகாததனை விரும்புவாரும் உளரோ? நம்மைக் காண்டல் விருப்ப மின்றிப் போன அவரைக் காணாது அமைகின்றில என்கண்கள்; இதனை ஒழியப் பிறவும் உளவோ?

**பரிப்:**

சொல்லாது பிரிந்த தலைமகனது பெருமையை உட்கொண்டு வேட்கையால் கூறியது. விரும்பத் தகாது என்றமையால் சொல்லாது பிரிதலாயிற்று.

'காணாதிமையல' என்பது இவர் பாடம்.

**காளிங்கர்:**

தோழி! இவ்விடர் இரக்கத்திற்கு ஏது வாகிய கொண்கனைப் பின்னுங் காணாவாயின் வாழாவாய் விட்டன இக்கண்களானவை. இதற்கு என்னை காரணம்? உலகத்துத் தம்மை விரும்பாதாரை தாம் விரும்புவாரும் உளரோ? எங்கும் கண்டது இல்லை.

'கொண்கனை' என்பது இவர்பாடம்.

**முடிநிலை:**

பரிமேலழகரும் பரிப்பெருமாளும் கொண்ட துறையில் வேறுபாடு காணப்பெறும். 'பேணாது' என்பதற்கு விரும்பத்தகாததனை என மணக்குடவர் உரைத்தலின், பேணாதது என்ற வினையாலணையும் பெயர் தொகுத்தல் விகாரம் பெற்றதாக அவர் உரைக்குக் கோடல் வேண்டும். இவ்விடத்துத் தொகுத்தல் விகாரம் கொள்வது நயமில்லை. 'பேணாது' என்ற அச்சொல் வினை வினையெச்சமாகக் கொண்டு, பரிமேலழகர் உரை செய்துள்ளார். 'தம்மை விரும்பாதாரை' என வரும், காளிங்கர் உரைப் பகுதிக்குப் 'பேணாரைப் பெட்டார்' என்று பாடமிருத்தல் வேண்டும். அங்ஙனம் இன்மையின், அவ்வுரை சாலாது. பரிமேலழகர் இரண்டாவதுரையிற் காட்டிய 'கொண்கனை' என்னும் பாடம் காளிங்கர் கொண்டது என்பது நினையத்தகும். இக்குறட்குப் பரிமேலழகரின் முதலுரையினும் அவர் வேறுபாடம் காட்டியுரைக்கும் இரண்டாம் உரை சிறப்பாக உள்ளது.

**1179. வாராக்காற் றுஞ்சா வரிற்றுஞ்சா வாயிடை
யாரஞ ருற்றன கண்.**

**பரிமே:**

(நீயு மாற்றி நின் கண்களுந் துயில்வன வாதல் வேண்டுமென்ற தோழிக்குச் சொல்லியது.)

காதலர் வாராத ஞான்று அவர் வரவு பார்த்துத் துயிலா; வந்த ஞான்று அவர் பிரிவஞ்சித் துயிலா; ஆகலான் அவ்விரு வழியும் என்கண்கள் பொறுத்தற்கரிய துன்பத்தினை யுடைய.

**பரிதி:**

நாயகர் வாராக்காலும் நித்திரை யில்லை; வந்தாலும் கலவியினால் நித்திரை யில்லை.

**முடிநிலை:**

'வரின் துஞ்சா' என்பதற்குக் கலவியினால் நித்திரை இல்லை என்பர் பரிதி. உறக்கமின்மை கூறித் துன்பத்தைப் புலப்படுத்தலே குறளின் நோக்க மாகலின், அவர் உரை பொருந்தாது. 'பெறாஅமை யஞ்சும் பெறிற் பிரிவஞ்சும் அறாஅ இடும்பைத்தென் நெஞ்சு' (1295) என்னும் குறளை ஒப்பு நோக்குக.

**1180.** மறைபெற லூரார்க் கரிதன்றா லெம்போ
லறைபறை கண்ணா ரகத்து.

**பரிமே:**

(காதலரை இவ்வூர் இயற்பழியாமல் அவர் கொடுமையை மறைக்க வேண்டுமென்ற தோழிக்குச் சொல்லியது.)

எம்மைப் போலும் அறைபறை யாகிய கண்ணினை யுடையார் தந்நெஞ்சின் கண் அடக்கிய மறையை யறிதல் இவ்வூரின்கண் உள்ளார்க்கு எளிது.

இங்ஙனம் செய்யுள் விகாரமாக்காது 'அறைபறைக்கண்ணார்' என்று பாடமோதுவாரு முளர்.

**பரிப்:**

வரையாது பிரியப்பட்ட தலைமகள், 'என் கண்ணினாலே இவ்வொழுக்கம் பிறர்க்குப் புலனாகா நின்றது; அதற்கு யாங்ஙனம் செல்வேம்' என்று தோழிக்குக் கூறியது.

**பரிதி:**

மறைப்பது அரிது; பலருமறியத் தட்டிச் சாற்றும் பறைபோல என் கண்ணீர் பலருமறிய என் காமத்தை அறிவிப்பது.

**தேவ:**

இனி, எம்போற் பறையறை கண்ணார் என்று பாடமோதின், எதுகை கெடாதும் இன்னோசை குன்றாதும் மரபு திரியாதும் இலக்கணம் வழாதும் இருத்தல் காண்க. மோனை கெடுமே யெனின், அதனா லிழுக்கில்லை யென்றும், மோனையில்லா ஈற்றடியே திருக்குறளிற் பெருவழக் கென்றும் கூறி விடுக்க.

**முடிநிலை:**

பரிப்பெருமாள் களவுக்குரியதாகக் கொண்டு இக்குறட்குத் துறை கூறியுள்ளார். அதனினும் கற்புக்குரியதாகக் கொண்டு உரைக்கும் பரிமேலழகர் உரை இயல்பாகும். செய்தியைப் பிறர்க்கு அறிவிப்போர் பறை தட்டி அறிவிக்கும் பழக்கத்தைப் பரிதி உரை அறிவிக்கிறது. 'அறைபறைக் கண்ணார் என்று சிலர் பாடங்கொண்டுள்ளனர் என்பது பரிமேலழகர் உரையால் அறியக் கிடக்கின்றது. அங்ஙனம் பாடங் கொண்டவர் யாவர் என்பது புலப்பட்டிலது. பறைக்கண்ணார் என்பது செய்யுள் விகாரத்தால் பறை கண்ணார் என வந்தது என்று கொள்வதினும் பறையறை கண்ணார் எனப் பாடங் கொள்ளலாம் என்பர் பாவாணர். அது தாம் படைத்துக் கொள்ளும் புதுப்பாட மாதலால் ஏற்றற் குரியதன்று.

# 119. பசப்புறுபருவரல்.

அது பசப்புற்ற பருவரல் என விரியும். அஃதாவது பசப் புறுதலானாய வருத்தம். இதனைப் 'பந்தெறிந்த வயா' என்பது போலக் கொள்க. பசப்பாவது பிரிவாற்றாமையான் வருவதோர் நிற வேறுபாடு. இது, தலைமகனைக் காணப் பெறாதவழி நிகழ்வதாகலின், கண்விதுப்பழிதலின் பின் வைக்கப்பட்டது என அதிகாரவிளக்கமும் முறைவைப்பும் கூறுவர் பரிமேலழகர்.

பசப்புறுதலாவது பசப்புறுதலால் வந்த வருத்தத்தைத் தோழிக்குத் தலைமகள் கூறுதல். காதலித்தார்க்குக் காதலிக்கப் படும் பொருளெய்தாக்கால் அவர் நிறம் வேறுபடு மாதலின், அதன்பின் இது கூறப்பட்டது என விளக்கம் தருவர் மணக்குடவர்.

தலைவன் பிரிந்த காரணத்தால், சொல்ல முடியாத உடல் வாதனை உண்டாகித் தலைவியின் மேனி நிறம் மாறிவிட்டது. அதனால் உண்டான வருத்தம் கூறப்பட்டது. பிரிவாற்றாமையால் உண்டான கண்வேதனையை முன் அதிகாரத்தில் கூறி, உடல் வேதனையை இந்த அதிகாரத்தில் கூறுகிறார். அதிகாரத் தொடர்பும் காண்க என்பர் வரதராசனார்.

**1181. நயந்தவர்க்கு நல்காமை நேர்ந்தேன் பசந்தவென்**
**பண்பியார்க் குரைக்கோ பிற.**

**பரிமே:**

(முன் பிரிவுடம்பட்ட தலைமகள் அஃதாற்றாது பசந்தவழித் தன்னுள்ளே சொல்லியது)

என்னை நயந்தவர்க்கு அதுபொழுது பிரிவை யுடம்பட்ட நான் அதனை யாற்றாது இதுபொழுது பசந்த வென் னியல்பினை யார்க்குச் சொல்வேன்?

பிற என்பது அசைநிலை.

**பரிப்:**

காதலர் பிரிந்துழி ஆற்றி யிருத்தல் பெண்கடன் என்ற தோழிக்கு யானும் ஆற்றுவேனாக இப்பசப்பை யாவரால் நீக்கு வேன் என்று வெகுண்டு கூறியது.

**காளிங்:**

நெஞ்சே! முன் எம்மைப் பெரிதும் நயந்து அளித்தவர் தாமே பின் இடையறவு இன்றிக் கடைபோக நல்காமையைக் கண்டு நேர்ந்தானாகி மேனி பசந்த என் பருவரலினை வேறு யார்க்குச் சொல்லி ஆற்றுவேனோ என்பதனால் இதுதோழி கேட்பக் கூறிய கொடுமைக் கூற்று என்பது பொருள்.

'நயந்தவர்' என்பது இவர் பாடம்.

**வெ. இராம:**

பிரிவாற்றாமையினால் என்மேனி நிறம் வேறுபட்டிருக்கும் நிலைமையை நான் விரும்பும் என் காதலருக்குத் தெரிவிக்க முடியாமல் இருக்கிறேன்; மற்ற யாருக்கு இதைச் சொல்லுவேன்.

நல்காமை-தெரிவிக்காமை; காட்டமுடியாமை. பிற யார்க் குரைக்கோ என்று கூட்டி அவருக்கன்றி வேறுயாருக்கு உரைப் பேன் என்று பொருள் கொள்ள வேண்டும்.

**மு. கோ:**

பிரிவினால் தலைவர்க்கு இன்பத்தைத் தலைவி தர இயல வில்லை. அதனாலுற்ற பசலையினை யார்க்குச் சொல்லி யாற்றுவது என்கிறாள்.

பிரிகிறானென்ற வருத்தத்தில், புணர்ச்சி விரும்பியவனுக்கு அதனைத் தலைவி தாராமையால் பசப்புற்றது எனலுமாம்.

**முடிநிலை:**

பரிமேலழகர், பரிப்பெருமாள், காளிங்கர் ஆகிய மூவரும் துறைக் கூற்றில் வேறுபடுகின்றனர். 'நயந்தவர்' என்னும் பாட வேறுபாட்டினால் காளிங்கர் உரை சிறிது வேறுபடுகின்றது. நல்காமை' என்னும் சொல்லுக்குத் தெரிவிக்க முடியாமல் என

இராமலிங்கம் பிள்ளையும் இன்பம் தாராமை என மு. கோ. வும் கூறும் பொருள்கள் பொருந்தா. 'நயப்பித்தார் நல்காமை தூற்றா ரெனின்' (1190) என்புழி 'நல்காமை' என்னும் சொல்லுக்கு இராமலிங்கம் பிள்ளை பிரிவு என்றும், மு. கோ. அருளாமை என்றும் பொருள் கூறியுள்ளனர். அப்பொருளே ஈண்டும் ஏற்ப தாகும். அகத்திணைப் பாடல்களில் 'நல்காமை' என்பது அருளா மையைக் குறிப்பதே மரபாகும். பிறயார்க்கு எனக் கொண்டு கூட்டி இராமலிங்கம் பிள்ளை உரைசெய்திருப்பதும் பொருந்தாது, 'பிற' என்னும் அஃறிணைப் பன்மைப் பெயரை 'யார்க்கு' என்னும் உயர்திணைப் பன்மைப் பெயரோடு இயைப்பது இலக்கண மன்றாகலின்.

**1182. அவர்தந்தா ரென்னுந் தகையா லிவர்தந்தென்**
**மேனிமே லூரும் பசப்பு.**

**பரிமே:**

(ஆற்றாளெனக் கவன்ற தோழிக்கு ஆற்றுவ லென்பதுபடச் சொல்லியது)

யான் ஆற்றி யுளேனாகவும் இப்பசப்புத்தான் என்னை யுண்டாக்கினார் அவரென்னும் பெருமிதத்தான் என் மேனியை மேல்கொண்டு செலுத்தாநின்றது.

**மணக்:**

இஃது இப்பசலையை நீக்க வேண்டு மென்ற தோழிக்கு இஃது என் குறிப்பினாலே வந்ததல்ல; நீக்க வேண்டுவா யாயின், அவர்க்குச் சொல் என்று கூறியது.

**காலிங்:**

நம்மைப் பிரிந்து ஏகிய அவர் இங்ஙனம் நமக்குத் தந்தார் என்னும் இவ்வுரிமைத் தகைமையாலே என் மேனிமேல் இங்ஙனம் பரந்து ஏறுகின்றது பசப்பு.

**வரத:**

இந்தப் பசலையானது, அவர்தந்த குழந்தையானதால் அந்த உரிமை கொண்டு என் மேனிமேல் ஏறித் தவழ்கிறது.

**தேவ:**

ஊர்தல்-பசலை படர்தல். இப்படர்ச்சி குதிரையேற்றம் போறக் கூறப்பட்டிருப்பது குறிப்புருவகம்.

**முடிநிலை:**

தலைவி கூற்றாயினும் துறையின் பின்னணி அமைப்பில் உரையாளர்கள் வேறுபடுகின்றனர். 'தகை' என்பதற்கு உரிமைத் தகைமை என்னும் பொருளினும் பெருமிதம் என்னும் பொருள் சிறப்புடையது. இவர்தல், ஊர்தல், என்ற சொற் குறிப்புக் கொண்டு குதிரை ஏற்றம் போல் பசலை கூறப் பட்டுள்ளதாகப் பாவாணர் காட்டுவது நயமுடைத்து. அச்சொற்களுக்கு ஏறுதல், தவழ்தல் என்று பொருள்கொண்டு பசலையைக் குழந்தையாக உருவகித்துக் கூறும் வரதராசனார் உரையும் தகுவதே.

**1183.** **சாயலு நாணு மவர்கொண்டார் கைம்மாறா**
**நோயும் பசலையுந் தந்து.**

**பரிமே:**

(அழகும் நாணு மழியாமல் நீ யாற்றல் வேண்டு மென்ற தோழிக்குச் சொல்லியது)

பிரிகின்ற ஞான்றே அவ்விரண்டற்குந் தலைமாறாக இக் காம நோயினையும் பசலையையும் எனக்குத் தந்து, என் மேனியழகினையும் நாணினையும் அவர் கொண்டு போயினார்.

எதிர் நிரல்நிறை. அடக்குந்தோறும் மிகுதலான் நோய் நாணிற்குத் தலைமாறாயிற்று.

**மணக்:**

மென்மை—பெண்மை. இது, தலைமகள் வெருட்சி கண்டு அது மென்மையும் நாணமும் உடையார் செயலன்று என்று கடிந்து கூறிய தோழிக்கு அவள் ஆற்றாமையால் கூறியது.

**காளிங்:**

தோழி! மயில்போலும் சாயலும் உயிர் போலும் நாணமும் என் காதலராகியவர் கொண்டு ஏகினார்; தாம் அவை கொண்டு ஏகினார், அதற்குக் கைம்மாறாக எனக்கு இவ்வுறு துயரும் பசப்பும் என்னும் இவை இரண்டும் ஒருங்கு தந்து.

**முடிநிலை:**

இதனைத் தலைவி கூற்றாகவே எல்லோரும் கொள்ளினும் துறைப்பின்னணியில் சிறிது வேறுபாடு காணலாம். 'சாயல்' என்பதற்குக் கூறப்பெறும் அழகு, மென்மை என்னும் பொருள்கள் தகுவனவே. 'சாயலும் நாணும் என்பவற்றைக் காளிங்கர் உரை உவமை தந்து தெளிவு செய்கிறது. இக்குறளை எதிர்நிரனிறை யாகக் கொள்ளுதல் பொருட்சிறப்பு உடையதாகும்.

**1184** **உள்ளுவன் மன்யா னுரைப்ப தவர்திறமாற்**
**கள்ளம் பிறவோ பசப்பு.**

**பரிமே:**

(பிரிகின்றவர் தெளிவித்த சொற்களையும் அவர் நற்றிறங்களையும் அறிதியாகலின் நீட்டியாது வருவ ரென்றவழிச் சொல்லியது)

அவர் சொற்களை யான் மனத்தான் நினையாநிற்பேன்; வர்க்கா லுரைப்பதும் அவர் நற்றிறங்களையே; அங்ஙனஞ் செய்யாநிற்கவும் பசப்பு வந்து நின்றது, இது வஞ்சனையா யிருந்தது.

'பிறவும்' 'ஓ'வும் அசைநிலை.

**பரிப்:**

முன்பு களவு கால்த்து வேட்கையால் அவரது செயலைக் கூறவும் நினைக்கவும் ஆற்றாமை நீங்கும்; இப்போது அதுபோல் அன்றி ஆற்றாமை மிகாநின்றது என்று கூறியது.

**காளிங்:**

தோழி! யான் முதுகுரவர் ஆகிய பெரியோரையும் முகம் நோக்குதல் இன்றி எப்பொழுதும் மற்று அவரையே என் நெஞ்சினால் நினைத்திருப்பது பெரிது; மற்று என் நாவினால் உரைப்பதும் எப்பொழுதும் அவர் தம் குணத்திறமே; இங்ஙனம் அவரிடை அற்றம் இன்றி எனது உரையும் மனமும் ஒருங்கு கலந்திருப்பவும் இவ்விடத்து வருகின்றது அற்றம் பார்த்தல் செய்வது அல்லாமையும் மற்றிது ஓர் வஞ்சனையாம் இத் துணையே பசக்கின்ற பசப்பு.

**'கள்ளம் பிறவோ'** என்பதற்கு வஞ்சனையோ, வேறு வகையோ என்று மு. வ. வும் பிற கள்ளமோ என்று சேர்த்து வேறு மாயமோ என்று **இராமலிங்கம் பிள்ளையும்** பொருள் கூறுவர்.

**முடிநிலை:**

பரிப்பெருமாள், காளிங்கர் தம் உரைகளில் விரிவான விளக்கங் காணலாம். 'உள்ளுவன் மன்' என்பதிலுள்ள மன்னை அசைநிலையாகக் கொள்ளாது பெரிது எனப் பொருள் கூறுவர் காளிங்கர். பிற, ஓ என்னும் இரண்டனையும் அசைநிலையாகக் கொள்வர் பரிமேலழகர். அங்ஙனம் கொள்ளாது ஓகாரத்தைக் கள்ளத்தோடும் கூட்டிக் கள்ளமோ பிறவோ எனக் கொண்டு பொருள் கூறும் மு. வ. உரை சிறப்பினது. பிற கள்ளமோ என இயைத்துக் கூறும் இராமலிங்கம் பிள்ளை உரை இயல்பில்லை;

**1185. உவக்காணெங் காதலர் செல்வா ரிவக்காணென்
மேனி பசப்பூர் வது.**

**பரிமே:**

(காதலர் பிரிந்து அணித்தா யிருக்கவும் ஆற்றுகின்றிலை யென்ற தோழிக்கு முன்னிகழ்ந்தது கூறியது.)

பண்டு நங்காதலர் உங்கே செல்வாராக என் மேனி பசப்பூர்வ திங்கே யன்றோ? அப்பெற்றியது இன்று பிறிதொன்றாமோ?

உவக்காண், இவக்காண் என்பன ஒட்டி நின்ற இடைச் சொற்கள்.

**மணக்:**

எம் காதலராகச் செல்கின்றாரை உங்கே பாராய்; என்மேனி மேலே பசப்புப் பரவுதலை இங்கே பாராய்.

இஃது அவர் பிரிந்தது இப்பொழுதாயிருக்க, பசலை பரவா நின்றது; அவர் வருமளவும் யாங்ஙனம் ஆற்றுதும் என்று தலைமகள் கூறியது.

**பரிதி:**

'அதே நாயகர்; செல்வம் இதே' என் மேனி பசப்புறுவது பார்.

**முடிநிலை:**

'காண்' என்பதனைத் தனிவினையாகக் கொள்ளாது ஒட்டி நின்ற ஓர் இடைச்சொல்லாகக் கொள்வர் பரிமேலழகர். மணக்குடவர் உங்கே பாராய், இங்கே பாராய் என முன்னிலை வினையாகக் கொண்டு உணர்ச்சி தோன்ற உரைத்திருப்பது சிறப்புடையதாகும்.

**1186. விளக்கற்றம் பார்க்கு மிருளேபோற் கொண்கன்**
**முயக்கற்றம் பார்க்கும் பசப்பு.**

**பரிமே:**

[காதலர் பிரிந்தணித்தா யிருக்கவும் ஆற்றுகின்றிலை யென்ற தோழிக்கு முன்னிகழ்ந்தது கூறியது.]

விளக்கினது மெலிவு பார்த்து நெருங்கி வரு மிருளே போல, கொண்கன் முயக்கினது மெலிவு பார்த்து நெருங்கிவரும் இப் பசப்பு.

**மணக்:**

விளக்கினது இறுதி பார்க்கும் இருளே போலக் கொண்கன் முயக்கினது இறுதிபார்த்து நின்றது பசப்பு.

இஃது, 'அவர் பிரிந்தது இப்பொழுது; இப்பசப்பு யாங்ஙனம் வந்தது' என்ற தோழிக்குத் தலைமகள் கூறியது.

**முடிநிலை:**

துறையமைப்பில் பரிமேலழகர்க்கும் மணக்குடவர்க்கும் பெரிதும் வேறுபாடில்லை. அற்றம் என்பதற்கு மெலிவு (சோர்வு) இறுதி என்னும் பொருள்கள் ஏற்றற்குரியனவே.

**1187. புல்லிக் கிடந்தேன் புடைபெயர்ந்தே னவ்வளவி**
**லள்ளிக்கொள் வற்றே பசப்பு**

**பரிமே:**

['காதலர் பிரிந்து அணித்தா யிருக்கவும் ஆற்றுகின்றிலை' என்ற தோழிக்கு முன்னிகழ்ந்தது கூறியது.]

முன்னொரு ஞான்று காதலரைப் புல்லிக் கிடந்த யான் அறியாது புடைபெயர்ந்தேன்; அப்புடை பெயர்ந்த வளவிலே பசப்பு அள்ளிக் கொள்வது போல வந்து செறிந்தது.

**மணக்:**

முயங்கிக் கொண்டு கிடந்தயான் அறியாது புடைபெயர்ந்தனன்; அவ்வளவிலே அள்ளிக்கொள்ளலாம்படி செறிந்தது பசலை.

இது, தலைமகனால் சொல்லாது பிரியப்பட்ட தலைமகளைப் பிற்றை ஞான்று இவள் வேறுபாடு கண்டு, 'இஃது எற்றினான் ஆயிற்று' என்று குறித்து நோக்கிய தோழிக்குத் தலைமகள் கூறியது.

**முடிநிலை:**

மணக்குடவர், பரிமேலழகர் கொண்ட துறைகளில் உள்ள சிறுவேறுபாடு காண்க.

**1188. பசந்தா ளிவளென்ப தல்லா லிவளைத்**
**துறந்தா ரவரென்பா ரில்.**

**பரிமே:**

[நீ யிங்ஙனம் பசக்கற்பாலை யல்லை யென்ற தோழியொடு புலந்து சொல்லியது.]

இவள் ஆற்றி யிராது பசந்தா ளென்று என்னைப் பழி கூறுவ தல்லது, இவளை யவர் துறந்து போயினா ரென்று அவரைக் கூறுவா ரொருவரு மில்லை.

**மணக்:**

'இவள் பசந்தாள்' என்று எனக்குக் குற்றம் நாடும தல்லது, 'இவளைத் துறந்தார் அவர்' என்ற அவரது கொடுமையைச் சொல்லுவார் இல்லை.

இஃது, 'இப்பசப்பு வரலாகாது' என்ற தோழிக்குத் தலைமகள் கூறியது.

**முடிநிலை:**

தலைவி தோழியொடு புலந்து கூறியதாகக் கொள்ளும் துறை மிகப் பொருத்த முடையது.

**1189. பசக்கமற் பட்டாங்கென் மேனி நயப்பித்தார்**
**நன்னிலைய ராவ ரெனின்.**

**பரிமே:**

['நீ இங்ஙனம் பசக்கற்பாலை யல்லை' என்ற தோழியோடு புலந்து சொல்லியது.]

இப்பிரிவை யானே யுடம்படும் வகை சொல்லியவர் இன்று நின் கருத்தான் நல்ல நிலையின ராவ ராயின், என் மேனி பட்டதுபடப் பசப்பதாக.

நன்னிலையராதல்—நன்மைக்கண்ணே நிற்றலை உடைய ராதல். பட்டாங்காக என ஆக்கம் விரித்துரைக்க. மன்-ஒழியிசை.

**மணக்:**

என்னுடம்பு நிலையாக என்றும் பசப்பதாக; நம்மைக் காதலித்தவரும் நம்மைப் போலத் துன்பமுறுவராயின்.

இது தலைமகனது கொடுமையை உட்கொண்டு கூறியது.

'நந்நிலையர்' என்பது இவர் பாடம்.

**பரிதி:**

என்மேனி பசலையாகக் கடவது, நமக்கு மயல் தந்த நாயகர் நெஞ்சறிய.

**காளிங்:**

தோழி! என் மேனியானது பெரிதும் பசப்பதாக; மற்று இது பட்டாங்கு எய்துதலால் முன்பு என்னைத் தமது அருட் குணங்களால் பெரிதும் விரும்புதல் செய்த அவர், மற்று யான் பசப்பினால் பருவரல் உற்ற இந்நிலை ஒழிக்க வந்து தலை யளிக்கும் நன்னிலையர் ஆவாராயின்.

நயப்பித்தல்—விரும்புவித்தல் என்று அறிக.

**வ. சுப. மா:**

பிரிவை இசைவித்த தோழி நலம் எனின் பட்டுப் போலும் என்மேனி பசக்கட்டும்.

'பட்டாங்கு' என்பதற்கு முன்னே படர்ந்தது போல எனக் **கா.சு.பிள்ளையும்** எல்லோரும் ஏளனம் செய்யும்படி என **இராமலிங்கம் பிள்ளையும்** உண்மையாகவே என **வரதராசனாரும்** பட்டுப்போலும் என **வ.சுப மா.**வும் பொருள் கூறுவர்.

**நன்னிலைய ராவ ரெனின்** என்பதற்குப் பொருள் சம்பாதிப் பதிலோ புகழடைவதிலோ உத்தியோகம் உயர்வதிலோ சிறப்பு அமைவாரானால் என விளக்கந் தருவர் **இராமலிங்கம் பிள்ளை.**

**முடிநிலை:**

'நந்நிலையர்' என்னும் பாடவேறுபாட்டால் மணக்குடவர் உரை முற்றும் வேறுபடுகின்றது. 'பட்டாங்கு' என்பதற்குப் பட்டதுபட, நிலையாக, முன்னே படர்ந்தது போல, ஏளனமாக, உண்மையாக, பட்டுப் போலும் எனப் பல பொருள்கள் கூறப் பட்டுள. இவற்றுள் உண்மையாக என்னும் பொருள் சிறக்கும். 'பட்டாங்கு யானுமோர் பத்தினியே யாமாகில்' (சிலப்பதிகாரம், காதை 21:31) ஒப்பு நோக்குக. 'நன்னிலைய ராவ ரெனின்' என்பதற்குத் தலைவர் மீண்டு வந்து தலையளி செய்வராயின் என்னும் பொருள்படப் பலவாறு விரித்துரைப்பர் காளிங்கர். அதனினும் தலைவன் சென்றவிடத்து நலமாக இருப்பராயின் எனக் கூறும் பரிமேலழகர் உரை இயல்பானது. இப்பகுதிக்குப் பரிதி உரையில் பொருள் காணப் பெறவில்லை. இதற்கு இராமலிங்கம் பிள்ளை தரும் புது விளக்கம் நினையத் தகும். 'நயப்பித்தார்' என்பது தோழியைச் சுட்டுவதாகக் கூறும் உரை இயல்பில்லை.

**1190. பசப்பெனப் பேர்பெறுத னன்றே நயப்பித்தார்**
**நல்காமை தூற்றா ரெனின்.**

**பரிமே:**

(தலைமகள் ஆற்றுதற் பொருட்டுத் தோழி தலைமகனை இயற்பழித்தவழி அவள் இயற்பட மொழிந்தது)

அன்று தாங் குறை நயப்பித்துக் கூடினவர்க்கு இன்று நல்காமையை நட்டோர் தூற்றா ராயின், பசப்புற்றாளென வேற்றுமையா னன்றிப் பசப்புத் தானாயினாளென ஒற்றுமையால் தாஞ் சொல்ல அப்பெயரைப் பெறுதல் எனக்கு நன்று.

'நட்டா' ரென்பது அவாய்நிலையான் வந்தது.

**மணக்:**

இது, 'நின்மேனி பசந்தது' என்ற தோழிக்கு 'அவ்வளவாய்க் குற்றம் இல்லை' என்று தலைமகள் கூறியது.

**பரிதி:**

பசப்பென்று பெயர் பெறுதல் நன்று; நாயகரை நாம் பொல்லாதவர் என்று சொல்லாமல் என் பசலையே சொல்லியது.

**காளிங்:**

நெஞ்சே! நமது பசப்புருபு தானே இவ்விடத்துப் பெயர் பெற்றிருத்தலும் சால நன்றே; எப்பொழுது எனில் நம்மை இங்ஙனம் முன்னம் நமது அருட் குணங்களாற் காதலுறுத்தியவர் பின் ஒரு காலம் நினைந்து வந்து அருளாமையைப் பிறர்க்குச் சாற்றாதாயின்,

'தூற்றா தெனின்' என்பது இவர் பாடம்.

**மு.ரா.க:**

நம்மை விரும்பிக் காதலித்த தலைவரது அருளில்லாமையை ஊரார் தூற்றமாட்டா ரானால் இவள் பசலை யடைந்தாள் என்று பேர் பெறுதல் நன்றாமோ?

தலைவரை ஊரார் பழிக்க மாட்டா ராயின் என்னைப் பழித்தல் நன்றாகாது என்று தலைவி கூறினாள்.

**முடிநிலை:**

மணக்குடவரும் பரிமேலழகரும் துறையமைப்பில் வேறுபடுதல் காண்க. 'நயப்பித்தார் நல்காமை' என்றவிடத்து நயப்பித்தார்க்கு நல்காமை எனப் பரிமேலழகர் நான்கனுருபு விரிப்பது சிறப்பில்லை. ஆறனுருபு விரித்தெழுதிய உரைகள் சிறக்கும். 'தூற்றா ரெனின்' எனப் பரிமேலழகர் கொள்ளும் பாடத்துக்கு அவர் அவாய் நிலையால் 'நட்டார்' என்னும் எழுவாய்ச் சொல்லை வருவித்துள்ளார். அதனினும் மு.ரா. க. கொண்டாங்கு 'ஊரார்' என்னும் சொல்லை வருவித்தல் பொருத்தமாகும். 'தூற்றா தெனின்' எனக் காளிங்கர் கொள்ளும் பாடத்திற்குக் குறளில் வரும் 'பசப்பு' என்னுஞ் சொல்லே எழுவாயாக அமைந்து நிற்பதைக் காணலாம். குறளின் பிற்பகுதிக்குப் பரிதியின் உரை நேரே பொருந்தவில்லை. கருத்து

வாங்கி எழுதியிருப்பதாகத் தோன்றுகிறது. அவர் உரைக்குத் 'தூற்றா தெனின்' என்பது பாடம் போலும். 'பேர் பெறுதல் நன்றே' என்றவிடத்து ஏகாரம் எதிர்மறைப் பொருளில் வந்ததாகக் கொள்வர் மு.ரா.க. 'அகனமர்ந் தீதலின் நன்றே' (92) 'ஒல்லும்வா யெல்லாம் வினை நன்றே' (673) 'நன்றென்ற வற்றுள்ளும் நன்றே' (715) என்ற விடங்களில் எல்லாம் 'நன்றே' என்பது உடன்பாட்டுப் பொருளிலே வந்திருத்தலின், இக்குறளிடத்தும் அச்சொல்லுக்கு அப்பொருள் கோடலே சாலும். பரிமேலழகர் முதலியோர் அங்ஙனமே பொருள் கண்டிருத்தல் நோக்குக.

# 120. தனிப்படர்மிகுதி.

அது தனியாகிய படர்மிகுதி என விரியும். அஃதாவது படர் மிகுதி தலைவன்கண் இன்றித் தன்கண்ணதே யாதல் கூறுதல். அறமும் பொருளும் நோக்கிப் பிரிதலின் அவன்கண் இல்லையாயிற்று. இது பசப்புற்று வருந்தியாட்கு உரியதாகலின், பசப்புறு பருவரலின் பின் வைக்கப்பட்டது என அதிகார விளக்கமும் முறைவைப்பும் கூறுவர் பரிமேலழகர்.

தனிப்படர்மிகுதியாவது தனிமையால் வந்த துன்ப மிகுதி கூறுதல். யாம் பசப்பால் வருந்துகின்றமை போல அவரும் வருந்துவா ரென்றும், புணர்ச்சி யிடையறாமல் இனிது நடக்குமென்றும் நினைத்துத் தலைமகள் தனது துன்பத்தினைக் கூறுதலான் அதன்பின் இது கூறப்பட்டது என விளக்கம் தருவர் மணக்குடவர்.

**1191. தாம்வீழ்வார் தம்வீழப் பெற்றவர் பெற்றாரே
காமத்துக் காழில் கனி.**

**பரிமே:**

(காதலரும் நின்னினு மாற்றாராய்க் கடிதின்வருவர்; நீயவரொடு பேரின்ப நுகர்தி யென்ற தோழிக்குச் சொல்லியது.)

தம்மாற் காதலிக்கப்படுங் கணவர் தம்மைக் காதலிக்கப் பெற்ற மகளிர் பெற்றாரன்றே, காம நுகர்ச்சி யென்னும் பரலில்லாத கனியை.

காமம்-ஆகுபெயர்; அத்து அல்வழிக்கண் வந்தது.

**மணக்:**

தாம் காதலித்தாரால் தம்மைக் காதலிக்கப் பெற்ற மகளிர் காம நுகர்ச்சியின்கண் பரலில்லாததோர் பழத்தைப் பெற்றாராவர்.

இது தடையின்றி நுகரலாம் என்றது.

**பரிப்:**

புணர்வு வேட்ட நெஞ்சிற்கு யாம் நல்வினை செய்கிலேம்; செய்தேமாயின் அவரும் காதலிப்பர்; அவர் மாட்டுக் காதலின்றாக வருந்த வேண்டா என்று தலைமகள் கூறியது.

'காமத்திற் காழில்கனி' என்பது காளிங்கர் பாடம். 'தாம் வீழப் பெற்றவர்' என்பது பழைய உரை (உ.வே.சா.) பாடம்.

**ஞா. மாணிக்:**

தம்மால் விரும்பப்பட்ட கணவர் தம்மை விரும்பப்பெற்ற மகளிர் காம நுகர்ச்சியாகிய விதை யில்லாத பழத்தைப் போன்றவர் ஆவர்.

**காழில் கனி** என்பதற்குக் குற்றமில்லாத கனி என்று பொருள் கூறுவர் **இராமலிங்கம் பிள்ளை.** விதை போடாமல் தானே பழுத்த பழத்தைச் சாப்பிடுவது போலல்லவா எனக் கருத்துரைப்பார் **கண்ணதாசன்.**

**முடிநிலை:**

தோழிக்குக் கூறியதாகப் பரிமேலழகரும் நெஞ்சிற்குக் கூறியதாகப் பரிப்பெருமாளும் வேறுபடத் துறை கொள்வர். 'காமத்துக் காழில் கனி' என்னும் பகுதியை உருவகமாகக் கொண்டு காம இன்பமாகிய பரலில்லாத கனி எனப் பரிமேலழகரும் ஏழாம் வேற்றுமைத் தொகையாகக் கொண்டு காம இன்பத்தின் கண் பரலில்லாத கனி என மணக்குடவரும் உரைப்பர். இரண்டும் இலக்கணத்துக்கு ஒக்குமேனும், உருவக மாகக் கொள்வது நயமுடையது. 'பெற்றாரே காமத்துக் காழில் கனி' என்ற நடைக்குக் காமத்துக் காழில் கனி போன்றவர் என உவமையாகக் கொள்ளும் ஞா. மாணிக்கவாசகனார் உரை சிறப்பில்லை. 'காழில் கனி' என்பதற்குக் குற்றமில்லாத கனி என்னும் பொருளும் விதை போடாமல் பழுத்த பழம் என்னும் பொருளும் சிறப்பில.

**1192.** **வாழ்வார்க்கு வானம் பயந்தற்றால் வீழ்வார்க்கு**
**வீழ்வா ரளிக்கு மளி.**

**பரிமே:**

['காதலரும் நின்னினும் ஆற்றாராய்க் கடிதின் வருவர்; நீ அவரோடு பேரின்பம் நுகர்தி' என்ற தோழிக்குச் சொல்லியது.]

அறமும் பொருளும் நோக்கிப் பிரிந்தால் தம்மை யின்றி யமையா மகளிர்க்கு அவரை யின்றியமையாக் கணவர் அளவறிந்து வந்து செய்யுந் தலையளி தன்னையே நோக்கி உயிர்வாழ்வார்க்கு வானம் அளவறிந்து பெய்தாற் போலும்.

**மணக்:**

இது, 'நின்மேனி பொலிவழிந்தது' என்னும் தோழிக்குத் தலைமகள் கூறியது.

**மயிலை.சிவ:**

தம்மை விரும்புகின்றவர்கட்குக் காதலர் காட்டும் கருணை உழவுத் தொழிலால் வாழ்கின்றவர்கட்கு மேகம் வேண்டிய மழையைப் பெய்து வாழ்வளித்துக் காப்பாற்றுதல் போன்றதே ஆகும்.

**முடிநிலை:**

மணக்குடவரும் பரிமேலழகரும் இக்குறளைத் தலைவி கூற்றாகக் கொள்ளினும் சூழலமைப்பில் வேறுபடுகின்றனர். 'வாழ்வார்க்கு' என்பதற்குப் பொது நிலையிற் கூறாது உழவர் களைக் குறிப்பதாகக் கூறுவர் மயிலை. சிவமுத்து. 'ஏரின் உழாஅர் உழவர் புயலென்னும் வாரி வளங்குன்றிக் கால்' (14) என்னும் குறள் போலச் சிறப்புக் கருதி உழவர் குறிக்கப் பட்டதாகக் கொள்க.

1193. வீழுநர் வீழப் படுவார்க் கமையுமே
வாழுந மென்னுஞ் செருக்கு.

**பரிமே:**

(காதலரும் நின்னினும் ஆற்றாராய்க் கடிதின் வருவர், நீ அவரொடு பேரின்பம் நுகர்தி என்ற தோழிக்குச் சொல்லியது.)

தாம் விழையுங் கணவரான் விழையப்படும் மகளிர்க்கு ஏற்புடைத்து, காதலர் பிரிந்தாராயினும் நம்மை நினைந்து கடிதின் வருவர், வந்தால் நாமின்புற்று வாழ்துமென் றிருக்குந் தருக்கு.

**மணக்:**

தாம் காதலித்தாரால் காதலிக்கப்படுவார்க்கு உலகின்கண் இருந்து உயிர் வாழ்வோம் என்னும் களிப்பு அமையும்.

இது தலைமகள், இருந்தாலும் பயனில்லை அதிற் சாதல் அமையும் என்று வாழ்க்கையை முனிந்து தோழிக்குக் கூறியது

**பரிதி:**

விரும்பப்பட்ட நாயகருக்கும் அன்றே வாழ்வோம் என்னும் செருக்கு என்போலும் பிரிந்திருப்பார்க்கு உண்டோ வாழ்வோம் என்னும் நன்மை.

'அமைந்ததே' என்பது காளிங்கர் பாடம்.

**கா.சு.பிள்ளை:**

காதலுடையார்க்கும் காதலிக்கப் படுவார்க்குமே இன்புற்று வாழ்கின்றோம் என்னும் இறுமாப்புப் பொருத்தமுடையது.

**முடிநிலை:**

வாழ்க்கையை முனிந்து தலைவி கூறுவதாக மணக்குடவர் கூறும் கருத்து போற்றத்தகும். இக்குறள் காதல் நிலையில் பொது வறம் கூறும் போக்குடையதாகலின், முக்காலத்திற்கும் ஏற்ப மொழிநடை யிருத்தல் வேண்டும். 'அமைந்ததே' என்னும் காளிங்கர் பாடம் இறந்த காலம் சுட்டுதலின் பொருந்தாது.

'அமையுமே' என்னும் பாடம் அறநடைக் குரியது. 'வீழப்படுவார்க்கு' என்பதற்கு விரும்பப்பட்ட நாயகர்க்கு எனப் பரிதி உரை கூறுவர். அச்சொற்குத் தலைவன் மேற்றாகப் பொருள் கொள்ளல் சிறப்பான மரபில்லை. மேலும் அவர் உரையில் 'வீழுநர்' என்னும் மூலத்துக்குப் பொருள்காணுமாறில்லை. வீழுநர் வீழப்படுவார்க்கு என்ற இடத்தை உம்மைத் தொகையாகக் கொண்டு பொருளுரைப்பர் கா.சு.பிள்ளை. அங்ஙனம் கொள்வதாயின் வீழுநர்க்கு என்புழியும் குவ்வுருபு விரிந்திருத்தல் வேண்டும். அங்ஙனமின்மையின் அவருரைக்கு உம்மையோடு குவ்வுருபும் விரித்துரைத்தல் வேண்டும். அவ்வாறு விரிப்பது வலிந்து கூறலாகும். மேலும், 'தாம்வீழ்வார் தம்வீழப் பெற்றாரே' (191) என்னும் குறள் நடையோடு ஒப்பது இக்குறள் நடையாதலின் அவர் உரை சிறப்பில்லை.

**1194. வீழப் படுவார் கெழீஇயிலர் தாம்வீழ்வார்**
**வீழப் படாஅ ரெனின்.**

**பரிமே:**

(காதலரை யியற்பழித்தலை யஞ்சி அவரருளின்மை மறைத்த நீ கடவுட் கற்பினை யாகலிற் கற்புடை மகளிரால் நன்கு மதிக்கப் படுதி யென்ற தோழிக்குச் சொல்லியது.)

கற்புடை மகளிரால் நன்கு மதிக்கப் படுவாரும், தாம் விரும்புங் கணவரான் விரும்பப்படாராயின் தீவினையாட்டியர்.

கெழீஇயின்மை - நல்வினையின்மை; அஃது அருத்தாபத்தியால் தீவினையுடைமை யாயிற்று.

**மணக்:**

நற்குணங்கள் பலவுடையர் என்று உலகத்தாரால் விரும்பப் பட்டாரும் தம்மால் காதலிக்கப் பட்டவரால் தாம் காதலிக்கப் படாராயின் விருப்பமில்லா ராவர்.

இது வாழ்க்கையை முனிந்து கூறிய தலைமகளுக்கு நீ இவ்வாறு கூறுவை யாயின், நின்னைப் புகழ்கின்ற உலகத்தாருள் மிக வாழ்வார் யார் என்ற தோழிக்கு அவள் கூறியது. கொண்டான் காயின் கண்டான் காயும் என்பது பழமொழி.

**சி. இலக்:**

தாம் விரும்பும் காதலரால் காதலிக்கப்பட்டார் என்றால் காதலிக்கப் படுவார் பொருந்தி இலர்.

காதலிக்கும் காதலரால் என்றும் காதலிக்கப்பட வேண்டும். அங்ஙனம் இடையறாது காதலிக்கப்பட வில்லையேல், அமைதி யாகப் பொருந்தி இருத்தல் இயலாது. ஆகவே, துன்பத்தால் வருந்த வேண்டியது தான்.

**வெ. இராம:**

தாம் விரும்புகிறவரால் தாம் விரும்பப்படாவிட்டால் தாம் விரும்புகின்ற அவர் அன்பில்லாதவர்.

கெழீஇயிலர்-கெழுவி, இலர்-பற்றுடையவராக இல்லாதவர்.

**இளங்:**

தாம் விரும்புகின்றவர், தம்மை விரும்பாராயினார் என்றால், விரும்பப்படுகின்றவர் 'பழந்தொடர்புடையவர் அல்லர்' என்பதை, யன்றி என்ன செய்வது?

**முடிநிலை:**

'வீழப்படுவார்' என்பதற்குக் கற்புடைமகளிரால் மதிக்கப் படுவார் என மகளிர் மேலதாகப் பரிமேலழகரும், உலகத்தாரால் விரும்பப்படுவார் என உலகத்தின் மேலதாக மணக்குடவரும் வருவித்துரைப்பதில் வேற்றுமை காணலாம். 'வீழப்படுவார்' என்பதற்குத் தலைவரின் மேலதாகப் பொருள் கூறுவர் இராமலிங்கம் பிள்ளை. இத்தகைய தொடர்கள் தலைவரைக் குறிப்பதாகக் கொள்ளல் மரபில்லை, 'கெழீஇயிலர்' என்பதற்குத் தீவினையாளர், விருப்பமில்லாதவர், அமைதியாகப் பொருந்தி

வாழ இயலாதவர், பற்றில்லாதவர். பழந்தொடர்புடையரல்லர் எனப் பலவாறு பொருள் கண்டுள்ளனர். கெழீஇ இலர் என்பது கெழுதகைமை இலர் என்பதன் சுருக்கமெனக் கருதலாம். கெழுதகைமை, பெருங்கிழமை (805) என்றும் அன்பின் வழிவந்த கேண்மை (807) என்றும் 'பழைமை' அதிகாரத்துச் சுட்டப்பெறும். ஆகவே, 'கெழீஇயிலர்' என்பது அன்பின் வழிவந்த கேண்மை யாகிய பெருங்கிழமையைக் குறிப்பதாகக் கோடல் பொருந்தும். இக்கருத்தை ஒட்டி எழுதிய இளங்குமரனார் உரை ஏற்கத்தகும்.

**1195. நாங்காதல் கொண்டார் நமக்கெவன் செய்பவோ**
**தாங்காதல் கொள்ளாக் கடை.**

**பரிமே:**

[அவர் மேற் காதலுடைமையின் அவர் கருத்தறிந் தாற்றினா யென்ற தோழிக்குச் சொல்லியது.]

நம்மாற் காதல் செய்யப்பட்டவர் நமக்கென்ன இன்பத்தைச் செய்வர்; அவ்வாறே தாமும் நங்கட்காதல் செய்யாவழி.

**பரிப்:**

புணர்வு வேட்ட நெஞ்சிற்கு நின் காதலினால் பயனில்லை என்று தலைமகன் கொடுமையை உட்கொண்டு அவன் பாங்காயினார் கேட்பத் தலைமகள் கூறியது.

'கொண்டால்' 'செய்யவோ' என்பன இவர்பாடம்.

**பரிதி:**

ஒருதலைக் காமம் நன்றல்ல; இருதலைக் காமம் நன்று.

**முடிநிலை:**

பாடவேறுபாடும் துறைவேறுபாடும் இக்குறளில் காணத் தக்கவை. குறட்கருத்தினை வாங்கிச் சுருக்கமாக எழுதி யிருத்தலைப் பரிதி உரையிற் காண்க.

**1196. ஒருதலையா னின்னாது காமங்காப் போல
விருதலை யானு மினிது.**

**பரிமே:**

['அவர்மேல் காதலுடைமையின் அவர் கருத்தறிந்து ஆற்றினாய்' என்ற தோழிக்குச் சொல்லியது.]

மகளிர் ஆடவரென்னு மிருதலையினும் வேட்கை ஒருதலைக் கண்ணேயாயின் அஃதின்னாது; காவினது பாரம்போல இருதலைக் கண்ணு மொப்பின் அஃதினிது.

கா—ஆகுபெயர்.

**மணக்:**

இது, மேற் கூறிய சொற்கேட்ட தலைவர் அருள் செய்வாரென்றும் தெய்வக் குறிப்பினால் கூறிய சொற்கேட்டுக் கூடினாலும் பயனில்லை என்றும் தலைமகள் கூறியது.

**பரிதி:**

ஒருதலைக் காமமாகிய கைக்கிளை ஒண்ணாது; காவடியிற் பாரம் ஒத்தது போல் இரண்டு பேர்க்கும் ஒத்த இன்பம் நன்று.

**பழைய: (உ.வே.சா.)**

ஆண்பால் பெண்பால் என்னும் இருதலையினும் எண்ணுமாசை ஒருதலைக்கண்ணே யாயின் அது இன்னாது; தராசின் தட்டுப் போல இருதலைக் கண்ணும் ஒப்பின், அது இனிது.

**வெ. இராம:**

காம ஆசை துலாக்கோல் இரண்டு பக்கமும் சமமாக இருந்தால்தான் இன்பம்; (அப்படியின்றி) ஒருபக்கம் மட்டும் இருந்தால் துன்பம்தான்.

*முடிநிலை:*

மணக்குடவரும் பரிமேலழகரும் இக்குறளைத் தலைவி கூற்றாகக் கொள்ளினும் பிற்புல அமைப்பில் வேறுபடுதல் காண்க. 'காமம்' என்பதற்கு வேட்கை என்று பரிமேலழகரும் இன்பம் என்று பரிதியும் பொருள் கொள்வர். பரிதியின் பொருளுக்கு 'இன்பம் இனிது' என்று முடிக்க வேண்டியிருத்தலின் வேட்கை என்று கொண்ட பொருள் பொருத்தமுடைத்து. 'கா' என்பதற்குக் காவடித் தண்டு, தராசின் தட்டு, துலாக்கோல் என்று பொருள் கூறியுள்ளனர். அவற்றுள் காவடித் தண்டு என்னும் பொருள் பொருந்தும்.

**1197. பருவரலும் பைதலுங் காணான்கொல் காம**
**னொருவர்க ணின்றொழுகு வான்.**

**பரிமே:**

[அவர்மேல் காதலுடைமையின் அவர் கருத்தறிந்து ஆற்றினாய் என்ற தோழிக்குச் சொல்லியது.]

காம நுகர்தற்குரிய விருவரிடத்தும் ஒப்ப நிற்ற லொழிந்து ஒருவரிடத்தே நின்று பொருகின்ற காமக் கடவுள், அவ்விடத்துப் பசப்பானாய பருவரலும் படர்மிகுதியும் அறியான் கொல்லோ?

**பரிப்:**

நமது தடுமாற்றமும் நாம் உறுகின்ற துன்பமும் காணாதான் ஒருவர் பக்கமாக நின்று ஒழுகித் துன்பஞ்செய்கின்ற காமதேவன் காண்பானாயின் நம்மை வருத்தானே, தெய்வமாதலான்.

சேய்மைக்கண் பிரிதலே அன்றி அணுமைக்கண் பிரியும் பிரிவும் உள; அவையாவன: அவைக்களனும் மாசவையும் அத்தாணியும் புகுதவும், நல்லிசை நயந்து வந்தோர் காணவும், பணைநிலைப் புரவி காணவும், வாரியுள் யானை காணவும், நாட்டகத்துப் பிரியும் பிரிவு. அவற்றுள் யாதானும் ஒன்றனால் தலைமகன் பிரிந்துழி ஆற்றாளாகிய தலைமகள் தன் நெஞ்சிற்குச் சொல்லியது, சேய்மைக்கண் பிரிந்தான் ஆயின் பருவம் காணின்

அல்லது இக்கூற்றினால் பயன் இல்லை. பரத்தையிற் பிரிவு ஆயின் புலவி தோன்றும். ஆதலான் அணுமைக்கண் பிரிந்தானைப் பற்றிக் கூறப்பட்டது என்று கொள்ளப்படும். இவ்வுரை மேல் வருவனவற்றிற்கும் ஒக்கும்.

**'பருவரலும் பைதலும்'** என்பதற்கு உரை:

**மணக்:**

நமது தடுமாற்றமும் நாம் உறுகின்ற துன்பமும்.

**பரிதி:**

மயலான கிலேசமும் பசலையும்.

**காலிங்:**

யாம் உறுதுயரமும் இதனால் உள்ளுறும் இரக்கமும்.

**குழந்தை:**

துன்பமிகுதியும் பசப்பு நோயும்.

**வெ.இராம:**

துன்பத்தையும் துயரத்தையும்.

அவை முறையே உடல்வேதனை மனவேதனைகளைக் குறிக்கும்.

**முடிநிலை:**

தலைவன் அணிமைக்கண் பிரிந்தகாலை தலைவி வருந்திக் கூறியதாகப் பரிப்பெருமாள் கூறுவர். பிரிவு அணியதா? சேயதா? என்று காணுதற்குரிய குறிப்பு குறளகத்தில்லை. பருவரல், பைதல் என்னுஞ் சொற்களுக்கு உரையாசிரியர்கள் வெவ்வேறு பொருள் கண்டுள்ளனர். 'பருவந்து பாழ்படுதல் இன்று' (83) 'இமைப்பிற் பருவரார்' (1126) என்ற வினைவடிவச் சொல்லாட்சிகளையும் நோக்கும் போது பருவரல் என்பதற்கு வருத்தம் என்ற பொருள் பொருந்தும் எனத் தோன்றுகிறது.

'பைதல் உழப்பது எவன்' (1172) 'படலரற்றா பைதல் உழக்கும்' (1175) 'பதிமருண்டு பைதலுழக்கும்' (1229) 'பைதல் நோய்' எல்லாம் கெட' (1266) என்ற சொல்லாட்சிகளை நோக்கும் போது, 'பைதல்' என்பதற்குத் துன்பம் என்ற பொருள் பொருந்தும் என்னலாம். வருத்தத்தைக் காரணமாகவும் துன்பத்தைக் காரியமாகவும் கொள்க.

**1198. வீழ்வாரி னின்சொற் பெறாஅ துலகத்து**
**வாழ்வாரின் வன்கணா ரில்.**

**பரிமே:**

(தலைமகன் தூதுவரக் காணாது சொல்லியது.)

தம்மால் விரும்பப்படுங் காதலர் திறத்து நின்றும் ஓர் இன்சொல்லளவும் பெறாதே பிரிவாற்றி உயிர் வாழ்கின்ற மகளிர் போல, வன்கண்மையுடையார் இவ்வுலகத் தில்லை.

**பரிப்:**

தூது விடுதல் குறிப்பினால் தோழிக்குச் சொல்லியது.

**வரத:**

விரும்பப்பட்டவரின் இனிமையான சொல்லைக் கேட்டு மகிழாது உலகத்தில் வாழ்ந்து கொண்டிருப்பவரைப் போலக் கொடியவர் ஒருவரு மில்லை.

**சாமி.சிதம்:**

தாம் விரும்பும் கணவரின் இனிய சொல்லைப் பெறாமல் தனித்து வாழ்கின்ற மகளிரைப் போல உலகில் தைரியம் உள்ளவர் வேறு இல்லை.

**மு.கோ:**

அவர் (தலைவர்) வீழ்வார் என்ற நம்பிக்கையால் வாழ்கிறாள். கடைசி வரைக் கைக்கிளைக் காமத்துடனேயே பல பெண்டிர் கணவனொடு காலங்கழிப்பர். அவர்க்குரைத்தது. இன்சொல் தந்தி, கடிதமுமாம்.

**முடிநிலை:**

'இன்சொல்' என்பதற்குத் தலைவன் விடுக்கும் தூதுச்சொல் எனவும் தலைவனே சொல்லும் சொல் எனவும் கூறப்படும் ஈருரைகளும் ஏற்கத் தகும். அதற்குத் தலைவன் அனுப்பும் தந்தி, கடிதம் ஆகியவற்றையும் கொள்ளலாம் என்று கூறும் மு. கோ. உரை காலத்துக்கேற்ற புத்துரையாகும். 'வன்கணார்' என்பதற்குத் தைரியம் உள்ளவர் என்பதினும் கொடியவர் என்னும் பொருளே ஈண்டைக்குப் பொருந்துவதாகும். இக் குறட்குக் கடைசிவரைக் கைக்கிளைக் காமத்துடனேயே பலபெண்டிர் கணவனொடு காலங்கழிப்பர் எனக் கருத்துரைப்பது இயல்பாகாது.

**1199.** **நசைஇயார் நல்கா ரெனினு மவர்மாட்**
**டிசையு மினிய செவிக்கு.**

**பரிமே:**

(தலைமகன் தூதுவரக் காணாது சொல்லியது.)

என்னால் நச்சப்பட்ட காதலர் என்மாட்டன்பிலரே யாயினும், அவர் திறத்து யாதானு மோர்சொல்லும் என் செவிக்கினியவாம்.

அவர் வாரலர் என்னும் சொல்லாயினும் அமையும் என்பது பட நின்றது. அதுவும் பெற்றிலேன் என்பதாம்.

**பரிப்:**

எங்கள் பக்கத்தனவாகிய சொற்கள் அவர்க்கு இன்னாது ஆகும் என்பது குறிப்பு. தலைமகன் பாங்காயினார் அவனைப் புகழ்ந்துழித் தனது வேட்கை மிகுதியால் தலைமகள் கூறியது. அன்றியும் தலைமகனுழை நின்றும் வந்த தூதர் வாய்ச்சொற் கேட்ட தலைமகளது முகமலர்ச்சி கண்டு இஃது எற்றினான் ஆயிற்று என்று வினாவிய தோழிக்குத் தலைமகள் கூறியது.

**காளிங்:**

நெஞ்சே! நாம் ஆசையுற்றவர் நம்மை அளித்திலர் ஆயினும் அவர் திறத்து ஒருவார்த்தை ஆயினும் கேட்கப் பெறின் அதுவும் நமது செவிக்குச் சால இனியதே.

எனவே, அங்கு நின்றான் ஒரு தூது வருதலினும் இங்கு நின்றும் தோழி தானொரு தூது விடுதல் செய்வதே இனிது என்பதாம்.

**மு.வ:**

யான் விரும்பிய காதலர் மீண்டுவந்து அன்பு செய்யமாட்டார் என்றாலும் அவரைப் பற்றிய புகழைக் கேட்பதும் என் செவிக்கு இன்பமாக இருக்கின்றது.

**வெ. இராம:**

நான் ஆசை கொண்டுள்ளவர் தாமாகச் சேதியனுப்பி உதவ மாட்டார் என்றாலும் அவரைப் பற்றிய ஒரு இனிய சொல் யார் சொன்னாலும் என் காதுக்கு இன்பம் உண்டாக்கும்.

நல்குதல்-(சேதியனுப்பி) உதவுதல். இசை-இனிய சொல்.

**மு. கோ:**

பழி கூறிக் கொண்டிருத்தலும் இன்பம்.

அவனைப் பற்றிச் செய்தி, தாளில் வானொலியில் கேட்டல். 'புகழும் தலைமையு முடையோர்' அடிக்கடிப் பிரிவர் போலும்.

'அவர் மாட்டு இசை' என்பதற்கு அவரைப் பற்றிய பாட்டு எனினும் பொருந்தும் என்பர் சி. இலக்குவனார்.

**முடிநிலை:**

தூதுச் சொற் கேட்டுத் தலைவி மகிழ்ந்ததாகக் கொள்ளும் பரிப்பெருமாள் துறை பிரிவுத் துயர் காட்டும் தனிப்படர் மிகுதி என்னும் இவ்வதிகாரத்துக்குப் பெரிதும் பொருத்த மில்லை. 'நல்கார்' என்பதற்குச் சேதியனுப்பி உதவார் என்னும் பொருள் இயல்பில்லை. அதற்கு அன்பிலர், அளித்திலர் (அருள் செய்திலர்) என்னும் பொருள்களே இயல்பாகும். 'இசை' என்பதற்குச் சொல், புகழ், இனிய சொல், பாட்டு, எனக் கூறப்படும் பொருள்களுள் சொல், புகழ், என்பன தகும். அதற்கு வாரலர் என்னும் சொல்லா யினும் என்று பரிமேலழகர் உரைப்பது இயல்பிறந்ததாகும். 'இசையும் இனிய' என்ற உம்மையால் வசையும் இனிய எனக் கருத்துக் கொண்டு மு.கோ. பழிகூறிக் கொண்டிருத்தலும் இன்பம் எனக் கூறுவது சாலாது.

**1200. உறாஅர்க் குறுநோ யுரைப்பாய் கடலைச்
செறாஅஅய் வாழிய நெஞ்சு.**

**பரிமே:**

(தலைமகன் தூது வரப் பெறாது தான் தூதுவிடக் கருதியாள் நெஞ்சொடு சொல்லியது.)

நின்னோடு உறாதார்க்கு நின்னுறு நோயை யுரைக்கலுற்ற நெஞ்சே! நீ யாற்றா யாயினும் அரிதாய அதனை யொழிந்து, நினக்குத் துயரஞ்செய்கின்ற கடலைத் தூர்க்க முயல்வாயாக, அஃதெளிது.

**மணக்:**

நெஞ்சே! நம்மோடு அன்புற்றார்க்குத் தூது விட்டாலும் பயனில்லை யென்று உன்னோடு உறாதார்க்கு நீ உற்றநோயைச் சொல்லி நினையா நின்றாய்; நம்மை உறங்காமல் வருத்துகின்ற கடலைத் தூர்ப்பாயாயின், அஃது அதனினும் நன்று.

இது தூதுவிடக் கருதிய நெஞ்சுக்குத் தூது விட்டாலும் பயனில்லை என்று தலைமகள் கூறியது.

**பரிதி:**

நாயகருக்குக் காம நோயைச் சொல்லாய், விரகக் கடலைச் செறாய் நெஞ்சமே! என்ன காரியம் செய்தாய்.

**மு. ரா. க:**

நெஞ்சே, நீ வாழ்வாயாக! உன்னை வந்து கூடாத தலைவர்க்கு உனது மிக்க காம நோயினைச் சொல்ல முயல்வாயாக; அதனை விட்டு நம்மை வருத்தும் கடலை வீணாக வெறுக்காதே.

**சி. இலக்:**

மனமே, நம்மை வந்து அடையாதவர்க்கு நாம் அடையும் துன்பத்தைச் சொல்லுவாயாக. காதல் நோயை மிகுதிப்படுத்தும் கடலை முனியாதே, வாழ்வாயாக.

கடல்காட்சி காதலை மிகுதிப்படுத்தும். காதலன் இன்றி கடற் காட்சியால் வருந்தும் தலைவியின் நெஞ்சம் கடலை வெறுக்க முனைகின்றது. கடலை வெறுத்துப்பயனில்லை. ஆகவே, அதனை வெறுக்காது அவரிடம் சென்று யாம் அடையும் துன்பத்தை உரைப்பாய் என்று கூறுகிறாள் தலைவி. இது நெஞ்சு விடு தூதாக அமைந்துள்ளது.

**வெ.இராம:**

நெஞ்சே, உன்னை வாழ்த்துகிறேன்; உன்னைப் போல் காமநோய் உறாத அவருக்கு அவர் வந்தபின் நீ உறுகின்ற காம நோயைச் சொல்லிக் கொள்வாய். கடல்போன்ற உன் காமத்தை அடக்கு.

உறாஅர்—காம ஆசை உறாதவர்; கடலை-கடல் போன்ற காம ஆசையை; செறாய்-செறுப்பாய், அடக்குவாய்.

**சாமி. சிதம்:**

உன்னிடம் அன்பில்லாதவர்க்கு மிகுந்த காமநோயைச் சொல்லுகின்றாய். அதைவிடக் கடல்மீது கோபங் கொள்வாய் நெஞ்சே, வாழ்க.

**இளங்:**

நெஞ்சே, நீ வாழ்வாயாக! நம்மை வருந்தச் செய்யும் கடல் மேல் நீ சினந்து உரையாதே! நம்மேல் அன்பு கொள்ளாத துணைவர்க்கு நாம் அடையும் துன்பத்தைக் கடலே உரைப் பாயாக.

**முடிநிலை:**

தலைமகள் நெஞ்சுக்குக் கூறியதாகப் பரிமேலழகரும் மணக்குடவரும் துறைகொள்ளினும் துறையின் சூழலமைப்பில் அவ்விருவரும் வேறுபடுவர். 'கடல்' என்பதற்கு விரகக் கடல் என உருவகமாகப் பரிதியும் கடல்போன்ற காம ஆசை என உவமை

யாக இராமலிங்கம் பிள்ளையும் உரைப்பர். இவ்வணிகட் குரிய குறிப்பு மூலத்தில் இல்லை. மு. ரா. க. உரையின் விளக்கம் போல் இலக்குவனார் உரை உள்ளது. 'கடலைச் செறாஅய்' என்பதற்குத் தலைவனிடத்துக் காமநோய் சொல்வதை விடுத்துக் கடலை ஏன் வெறுக்கிறாய். அதனை வெறுக்காதே என்னும் மு. ரா. க. உரையும் தகுவதே. பரிதி உரையில் வரும் 'சொல்லாய்' என்னும் சொல்லை நோக்குழி, அவர் 'உ ரை யா ய்' எனப் பாடங் கொண்டிருப்பர் போலும். 'உறாஅர்க்கு' என்பதற்குக் காமநோய் உறாதவர்க்கு என்னும் பொருள் சிறப்பினது. 'செறாஅஅய்' என்பதற்கு அடக்குவாய், கோபங் கொள்வாய் என்னும் பொருள்கள் ஈண்டுச் சிறப்பில்லை. 'உரைப்பாய்' என்பதன் வினைக்குரியதாக நெஞ்சினைக் கொள்ளுதலே இயல்பாகும். கடலைக் கொண்டுரைக்கும் இளங்குமரனார் உரை பொருந்தாது. மேலும், அவர் 'கடலைச் செறாஅய்' என்றிருப்பவும் மீண்டும் கடலே என அதனை வருவித்து விளித்து 'உரைப்பாய்' என்ப தனோடு முடித்துக் காட்டுவதும் இயல்பாகப் படவில்லை.

# 121. நினைந்தவர்புலம்பல்.

அஃதாவது முன் கூடிய ஞான்றை இன்பத்தினை நினைந்து தலைமகள் தனிமை எய்தலும், பாசறைக்கண் தலைமகன் தனியை எய்தலுமாம். இவ்வாறு இருவர்க்கும் பொதுவாதல் பற்றிப் பன்மைப் பாலால் கூறப்பட்டது. இது, படர்மிகுதி தன்கண்ணதாக நினைந்த தலைமகட்கும் உரித்தாகலின், அவ்வியைபு பற்றித் தனிப்படர் மிகுதியின் பின் வைக்கப்பட்டது என அதிகார விளக்கமும் முறைவைப்பும் கூறுவர் பரிமேலழகர்.

நினைந்தவர் புலம்பலாவது, சேய்மைக் கண்ணாயினும் அண்மைக் கண்ணாயினும் பிரிந்த தலைமகனை ஒழிவின்றி நினைந்த தலைமகளிர் துன்பமுறுதல். நினைத்தவர் புலம்பல் என்று பாடமாயின், அதற்கு அவரை நினைத்துப் புலம்பல் என்று பொருளுரைத்துக் கொள்க என விளக்கந் தருவர் மணக்குடவர்.

தனிப்பட்டார் காதலரை எல்லாக் காலமும் ஒழிவின்றி நினைப்பர் ஆதலின் அதன்பின் கூறப்பட்டது என்பர் பரிப்பெருமாள்.

நினைந்தவர் புலம்பல் என்பது அவர் நினைந்து புலம்பல்; அதாவது அவரை நினைத்துப் புலம்பல் ஆகும். புலம்பல் என்பது வருத்தப்பட்டுச் சொல்லிக் கொள்வது. இது காதலன் காதலி இருவர்க்கும் பொதுவானது அல்ல, காதலி மட்டும் காதலனை நினைத்து ஏங்குவது என விளக்கந் தருவர் இராமலிங்கம் பிள்ளை.

இவ்வதிகாரத்தைக் தலைவன் தலைவியர் இருவர்க்கும் உரியதாகக் கொள்ளல் பொருந்தும்

**1201. உள்ளினுந் தீராப் பெருமகிழ் செய்தலாற்**
**கள்ளினுங் காம மினிது.**

**பரிமே:**

(தூதாய்ச் சென்ற பாங்கனுக்குத் தலைமகன் சொல்லியது.)

முன் கூடிய ஞான்றையின்பத்தினைப் பிரிந்துழி நினைந்தாலும், அது பொழுது பெற்றாற் போல நீங்காத மிக்க மகிழ்ச்சியைத் தருதலால் உண்டுழியல்லது மகிழ்ச்சி செய்யாத கள்ளினுங் காமம் இன்பம் பயத்த லுடைத்து.

தன் தனிமையையும் தலைமகளை மறவாமையுங் கூறிய வாறு.

**மணக்:**

தம்மாற் காதலிக்கப்பட்டவரை நினைத்தாலும் அது நீங்காத பெருங்களிப்பைத் தரும். ஆதலால், கள்ளினும் காமம் இனிது.

**பரிப்:**

நினைவு மகிழ்ச்சியைத் தாரா நின்றமையால் என் மனம் காதலரை ஒழிவின்றி நினையா நின்றது என்று தோழிக்கு கூறியது.

**பழைய: (உ. வே. சா.)**

தலைவன் பாசறையில் தலைவியை நினைந்தது.
'பெருமகிழ் வெய்தலால்' என்று பாடம் கொள்ளும்.

**சி. இலக்**

அவர் காலத் தலைவன் கள்ளுண்பவனாக இருந்திருப்பான். ஆகையினால், தலைவன் கூற்றாக வரும் போது கள்ளுண்டல் பற்றிக் குறிப்பிடுவது குற்றமுடைத்தாகாது; உண்மையை வெளிப்படுத்துவதாகும். இலக்கியம் வாழ்க்கைக் கண்ணாடி யாகு மன்றோ?

**முடிநிலை:**

தலைவிதானே கூறிக் கொள்வதாக மணக்குடவரும் தலைவி தோழிக்குக் கூறியதாகப் பரிப்பெருமாளும் தூதுபோன பாங்கனுக் குத் தலைவன் உரைத்ததாகப் பரிமேலழகரும் தலைவன் பாசறையில் நினைந்ததாகப் பழைய உரையாளரும் துறை வேறுபடுவர். மணக்குடவரும் இராமலிங்கம் பிள்ளையும் இவ்வதிகாரம் முழுவதும் தலைவி கூற்றாகக் கொண்டுள்ளனர். ஆனால், பரிமேலழகர் போன்றவர் சில குறளைத் தலைவன் கூற்றாகவும் சில குறளைத் தலைவி கூற்றாகவும் கொள்வதைக் காணலாம். 'நினைந்தவர் புலம்பல்' என்பதனை நோக்கும் போது இருபாலர்க்கும் பொதுவாகக் கொள்ளல் ஏற்புடைத்தே.

**1202. எனைத்தொன் றினிதேகாண் காமந்தாம் வீழ்வார்
நினைப்ப வருவதொன் றில்.**

**பரிமே:**

(தூதாய்ச் சென்ற பாங்கனுக்குத் தலைமகன் சொல்லியது.)

தம்மால் விரும்பப் படுவாரைப் பிரிவின்கண் நினைத்தால் அந்நினைவார்க்கு அப்பிரிவான் வருவதோர் துன்ப மில்லையாம்; அதனாற் காமம் எத்துணையேனு மினிதொன்றே காண்.

புணர்ந்துழியும் பிரிந்துழியும் ஒப்ப இனிது என்பான், 'எனைத்தும் இனிது' என்றான். சிறப்பும்மை விகாரத்தால் தொக்கது. தான் ஆற்றிய வகை கூறியவாறு.

**மணக்:**

காமம் யாதொன்றினாலும் இனியதே காண். தாம் விரும்பப் படுவாரை நினைக்க வருவதொரு துன்பம் இல்லையாயின்.

இது நீ இவ்வாறு ஆற்றாயாகின்றது துன்பம் பயக்கும் என்ற தோழிக்குத் தலைமகள் மறுத்துக் கூறியது.

**பரிதி:**

எல்லாவற்றிலும் இனியது காமம்; அஃது எப்படி என்றால் தாம் விரும்பினாரை நினைக்கின் சுகந்தரு மாகலின்.

**பழைய: (உ. வே. சா.)**

தலைவனோடுற்ற இன்பத்தை நினைத்துத் துன்பத்தை ஆற்றுவாய் என்ற தோழிக்குத் தலைவி சொல்லியது.

**வெ.இராம:**

காமம் வேறு எதைவிடவும் இன்பம் தருவ தென்பது உண்மை; ஏனெனில், தாம் விரும்புகின்றவரை நினைத்த வுடனே இன்பம் வருவது போல் இன்பம் தரக் கூடியது வேறொன்றும் இல்லை.

**மு.ரா.க:**

தம்மால் காதலிக்கப்பட்ட மகளிரைப் பிரிவிடத்து நினைக் கவே வருவதோர் புணர்ச்சியின்பம் இல்லை; ஆயினும் காமமானது எவ்வாற்றாலும் இனிய தொன்றே யாகும்.

**முடிநிலை:**

பரிமேலழகர், மணக்குடவர், பழைய உரையாளர் ஆகியோர் துறை கொள்ளுவதில் வேறுபடுதல் காண்க. 'வருவதொன்றில்' என்பதன் இறுதியில் 'ஆயின்' என்னும் செயின் எனும் வினை யெச்சத்தை வருவித்துக் கொண்டு மணக்குடவர் உரை எழுதி யிருப்பது ஏற்புடைத்தன்று. 'வருவதொன்று' என்பதற்கு வருகிற துன்பம், புணர்ச்சி இன்பம், இன்பம்போல் வேறோர் இன்பம் என வரும் உரைகளுள் வருகிற துன்பம் என்பது இயல்பான பொருளாகும். 'எனைத் தொன்று' என்பதற்கு யாதொன்றினாலும்' எல்லாவற்றினும், எவ்வாற்றாலும் என்னும் பொருள்களினும் எத்துணையேனும் என்னும் பரிமேலழகர் பொருள் சிறப்பினது.

**1203. நினைப்பவர் போன்று நினையார்கொ றும்மல்
சினைப்பது போன்று கெடும்.**

**பரிமே:**

(தலைமகனை நினைந்து வருந்துகின்ற தலைமகள் தோழிக்குச் சொல்லியது).

எனக்குத் தும்மல் எழுவது போன்று தோன்றிக் கெடா நின்றது; அதனாற் காதலர் என்னை நினைப்பார் போன்று நினையாராகல் வேண்டும்.

**பழைய:(உ.வே.சா)**

நின்னை நினைத்துத் தலைவர் கடிதின் வருவர் என்ற தோழிக்குச் சொல்லியது;

தம்மால் காதலிக்கப் பட்டார் நினைக்கத் தமக்குத் தும்மல் வருதல் பெண்கள் வழக்கம்.

**முடிநிலை:**

துறை கூறுவதில் சிறுவேறுபாடு காண்க. தும்மல் பற்றிய செய்தியை இருபாலார்க்கும் பொதுவாகக் கொள்ளாமல் பழைய உரை பெண்கள் வழக்கமாகக் கூறும்.

**1204. யாமு முளேங்கொ லவர்நெஞ்சத் தெந்நெஞ்சத்
தோஒ வுளரே யவர்.**

**பரிமே:**

(தலைமகனை நினைந்து வருந்துகின்ற தலைமகள் தோழிக்குச் சொல்லியது.)

எம்முடைய நெஞ்சத்து அவர் எப்பொழுது முளரேயா யிரா நின்றார்; அவ்வகையே அவருடைய நெஞ்சத்தும் யாமு முளமாதுமோ, ஆகேமோ?

ஓகார இடைச்சொல் ஈண்டு இடைவிடாமை உணர்த்தி நின்றது.

**மணக்:**

ஓஓ என்பது மிகுதிப் பொருளின்கண் வந்த தாதலான்' எப்பொழுதும் என்னும் பொருள் தாயிற்று.

**பரிதி:**

யாமும் நாயகர் மனத்தில் இருப்போம்; அவர் எம் மனத்தில் சதாகாலத்திலும் இருக்கிறபடியால்.

**பழைய:(உ.வே.சா.):**

இருவர்க்கும் ஒரு நினைப்பாம் என்ற தோழிக்குச் சொல்லியது. 'என் நெஞ்சத்து' என்பது காளிங்கர் பாடம்.

**முடிநிலை:**

'உளேங்கொல்' என்பதில் 'கொல்' என்பதனை அசைநிலை யாகப் பரிதி கொள்ளுதல் பொருட்சிறப்பில்லை. 'யாமும்' என்ற பன்மை 'என்னெஞ்சத்து' என வரும் ஒருமையோடு இயைதல் வழுவாதலின், காளிங்கர் பாடம் பொருந்தாது. பழைய உரை (உ.வே.சா) இக்குறட்குக் கூறும் துறையையே பின்வரும் குறளுக்கும் கூறுகிறது. 'ஓஓ' என்னும் இடைச் சொல் பற்றிய விளக்கத்தில் பெரிதும் வேறுபாடில்லை.

**1205. தங்நெஞ்சத் தெம்மைக் கடிகொண்டார் நாணார்கொ**
**லெங்நெஞ்சத் தோவா வரல்.**

**பரிமே:**

[தலைமகனை நினைந்து வருந்துகின்ற தலைமகள் தோழிக்குச் சொல்லியது].

தம்முடைய நெஞ்சின்கண்ணே யாஞ் செல்லாமல் எம்மைக் காவல் கொண்ட காதலர் தாம் எம்முடைய நெஞ்சின்கண் ஒழியாது வருதலை நாணார் கொல்லோ?

**மணக்:**

இது நினையாரோ நினைப்பாரோ என்று ஐயப்பட்ட தலைமகள் நினையார் என்று தெளிந்து கூறியது.

'காணார் கொல்' என்பது இவர் பாடம்.

**பரிதி:**

தம் மனத்திலே இருக்கவொட்டாமல் முடுக்கினவர் என் மனத்தில் இருக்கின்றாரே; ஆகவே நாணமில்லையோ!

**காளிங்:**

தமது நெஞ்சத்து யான் வராமல் காவல் கொண்டு போனவர், மற்று என் நெஞ்சத்து ஒழிவிலராய் வருகின்ற இதனை நமக்கு இது தகாது என நாணாரோதான்.

கடிகொண்டார் என்பது கரந்து போனார் என்றது, கடிந்து போனார் என்றும் ஆம்.

'என்னை' எனவும் 'என்னெஞ்சத்து' எனவும் பாடம் கொள்வர்.

**சாமி. சிதம்:**

தமது நெஞ்சில் எம்மைக் காப்பாற்றி வைத்திருக்கும் தலைவர் எமது மனத்தில் நீங்காமல் வருவதற்கு வெட்கமடைய மாட்டாரா?

**முடிநிலை:**

உரையாசிரியர்கள் துறையமைப்பில் சிறிது வேறுபடுதல் காண்க. 'காணார் கொல்' என்னும் பாடத்தினும் 'நாணார்கொல்' என்னும் பாடம் பொருள் நயமுடையது. 'கடிகொண்டார்'

என்பதற்கு வாராமல் காவல் கொண்டார், முடுக்கினவர், கரந்து போனவர், கடிந்து போனார், காப்பாற்றி வைத்திருக்கும் தலைவர் என்னும் பொருள்களுள் வாராமல் காவல் கொண்டார். முடுக்கினவர் (விரட்டியடித்தவர்) என்னும் பொருள்களே தகுவன. காளிங்கர் கொள்ளும் பாடங்களும் ஏற்கத்தகும்.

**1206 மற்றியா னென்னுளேன் மன்னோ வவரொடியா**
**னுற்றநா ளுள்ள வுளேன்.**

**பரிமே:**

(அவரொடு புணர்ந்த ஞான்றை யின்பத்தை நினைந்து இறந்துபாடு எய்தாநின்றாய்; அது மறத்தல் வேண்டும் என்றாட்குச் சொல்லியது.)

யான் அவரோடு புணர்ந்தஞான்றை யின்பத்தை நினை தலான் இத்துன்ப வெள்ளத்தும் உயிர் வாழ்கின்றேன்; அது வின்றாயின், வேறெத்தால் உயிர் வாழ்வேன்?

**மணக்:**

இது, தலைமகன் தலையளியை நினைந்து ஆற்றாளாயின தலைமகளை நோக்கி, 'நீ இவ்வாறு நினைந்து இரங்கல் உயிர்க்கு இறுதியாகும்' என்ற தோழிக்கு அவள் கூறியது.

**பரிதி:**

நான் நாயகர் மனத்தில் எப்படியிருந்தேனோ, நாயகரைக் கூடிய அன்று முதல் இன்றளவும் நாயகர் என் மனத்திலிருக்கிறார்; நான் எப்படி அவர் மனத்தில் இருந்தேனோ?.......................

**முடிநிலை:**

இக்குறளைத் தலைவி தோழிக்குக் கூறியதாகவே உரை யாசிரியர்கள் கொண்டனர் எனினும் துறையமைப்புச் சூழலில் சிறிது வேறுபாடு காணப்பெறும். பரிதி உரை முழுதும் கிடைத் திலது. குறளின் பிற்பகுதிக்கு அவர் உரை முற்றும் பொருந்தி வரவில்லை.

**1207. மறப்பி னெவனாவன் மற்கொன் மறப்பறியே**
**னுள்ளினு முள்ளஞ் சுடும்.**

**பரிமே:**

[அவரோடு புணர்ந்த ஞான்றை இன்பத்தை நினைந்து இறந்துபாடு எய்தா நின்றாய், அது மறத்தல் வேண்டும் என்றாட்குச் சொல்லியது].

அவ்வின்பத்தை மறத்தலறியேனாய் இன்றுள்ளா நிற்கவும், பிரிவு என்னுள்ளத்தைச் சுடா நின்றது; அங்ஙனம் பிரிவாற்றாத யான் மறந்தால் இறந்துபடாது உளேனாவது எத்தால்?

**மணக்:**

அவரை மறந்தால் என்னவென் கொல்லோ, மறப்பறியேனாய் நினைக்கவும் இக்காமம் நெஞ்சத்தைச் சுடா நின்றது.

இது சீரியன உள்ளிப் பூரியன மறத்தல் வேண்டும் என்ற தோழிக்குத் தலைமகள் கூறியது.

**பரிதி:**

மறந்தால் உயிர் வாழேன், ஆகையால் மறப்பறியேன்; மறப்பன் என்று நினைப்பினும் நாயகரிடமுள்ள காமாக்கினி யானது என் நெஞ்சுக்குள்ளே பற்றி எழும்.

**பழைய: [உ.வே.சா.]**

இனியாவாரை நினைத்தாற்ற வேண்டும் என்ற தோழிக்குச் சொல்லியது.

அவரை மறந்தால் யானென்கின்றேனாக மாட்டேன்; மறக்க வேண்டுமென்று நினைந்தாலும் மறந்தறியேன்; அவர் எமக்குச் சொல்லிய வாய்மையை நினைப்பினும் அது என் உள்ளத்தைச் சுடுகின்றது.

வாய்மை-தெய்வப் புணர்ச்சியிற் பிரியேன் என்று சொல்லிய சத்தியம்.

**மு.கோ:**

மறத்தலைப் பற்றி யுள்ளினு மென்க; அவனில்லாத காலத்து அவனைத் தவிர்த்த வேறெச் செயலை யுள்ளினும் வெம்மையும் வேம்புமாகிறது, உண்டலும் உடுத்தலும் கூட.

**முடிநிலை:**

உரையாசிரியர்கள் இக்குறளைத் தலைவி கூற்றாகக் கொள்ளினும் சூழலமைப்பில் வேறுபடுதல் காண்க. 'உள்ளினும்' என்பதற்குச் செயப்படு பொருளாகத் தலைவர் இன்பம், மறப்பு, தலைவனின் வாய்மை, உண்டல் உடுத்தல் முதலிய செயல்கள் ஆகியவற்றை வருவித்து உரை எழுதியுள்ளனர். இவற்றுள் தலைவர், இன்பம் என்பவற்றைச் செயப்படுபொருளாகக் கொள்ளல் பொருந்தும் 'உள்ளினும் உள்ளஞ் சுடும்' என்பதிலுள்ள உள்ளுதல், சுடுதல் வினைகட்குரியவாக மணக்குடவர் தலைவரையும் காமத்தையும் கொள்ள, பரிமேலழகர் இன்பத்தையும் பிரிவையும் கூறுதல் காண்க. இங்ஙனம் இரண்டு கொள்ளாது ஒன்றனை (தலைவன் அல்லது இன்பத்தை) கொள்ளுதல் பொருத்தமாகும்.

**1208. எனைத்து நினைப்பினுங் காயா ரனைத்தன்றோ**
**காதலர் செய்யுஞ் சிறப்பு.**

**பரிமே:**

(இத்துன்ப மறிந்து வந்து காதலர் நினக்கின்பஞ் செய்வர் என்றாட்குச் சொல்லியது.)

தம்மை யானெத்துணையும் மிக நினைந்தாலும் அதற்கு வெகுளார்; காதலர் எனக்குச் செய்யு மின்பமாவது அவ்வள வன்றோ?

'காதலர் நம்மாட்டருள்' என்றும் 'செய்யுங்குணம்' என்றும் பாடமோதுவாரு முளர்.

**மணக்:**

யாம் காதலரை எவ்வளவு நினைப்பினும் வெகுளார்; அவ்வளவன்றோ அன்புற்றார் செய்யும் அருள்.

அருள் செய்தலாவது, குற்றங் கண்டாலும் வெகுளாமை.

**பரிப்:**

தலைமகள் ஆற்றாமை கண்டு அருளிலன் என்று இயற்பழித்த தோழிக்கு யாம்கொடியர் என்று நினைக்கவும் அதற்கு முனியாது நெஞ்சத்தே உறையாநின்றார். ஆதலான் அருள் உடையார் என்று கொள்ளப்படும் என்று இயற்பட மொழிந்தது.

**பரிதி:**

நாயகரை எப்போது நினைப்பினுங் காயார்; இதுவன்றோ நல்லோர் செய்யும் குணம்.

**காலிங்:**

கண்டு எய்திய காலத்திலும் தமது இனிய குணங்களை நினைத்தல் அன்றிப் பின்பு நின்னிற் பிரியேன்; பிரியின் ஆற்றேன் என்று இங்ஙனந் தெளிந்து அளித்துப் பிரிதலும் ஆற்றலும் வல்லமையிற் படிறுடைமையும் பண்பின்மையும் உடையர் ஆயினர் என்று இங்ஙனம் கொடுமை நினைப்பினும் காய்வது ஒன்று இலர்; காதலித்து உள்ளுள்ளே உறைவர், அதனால் நமக்கு நம் காதலர் செய்யும் பெருஞ்சிறப்பு அவ்வளவைத்து அன்றோ? எனவே கண்ணெதிர் நிற்பர். இன்று கருத்து எதிர் நிற்பர். இதுவன்றோ நம்மாட்டுத் தலைவர் செய்யும் தலையளி.

**முடிநிலை:**

மணக்குடவரும் பரிமேலழகரும் இக்குறளைத் தலைவி கூற்றாகக் கொள்ளுதலில் ஒத்திருப்பினும் சூழலமைப்பில் வேறுபடுவர். இயற்பட மொழிந்தாகக் கூறுவது ஏற்புடைத்து' மணக்குடவர் உரையை நோக்கின் 'காதலர் நம்மாட்டருளா என்பது அவர் பாடமாகலாம் என்றும் பரிதி உரையை நோக்கின் 'காதலர் செய்யுங் குணம்' என்பது அவர் பாடமாகலாம் என்றும் அறியக் கிடக்கின்றன. இப்பாடவேறுபாடுகள் உள்ளமையைப் பரிமேலழகர் தம் உரையிற் காட்டியுள்ளார். இவ்வேறுபாடுகளால் உரைவேறுபாடுகளும் இக்குறட்கு எழுந்துள்ளன. 'எனைத்து நினைப்பினும்' என்பதற்கு எப்போது நினைப்பினும் எனக் கூறும் பரிதி உரை இயல்பில்லை. அதற்குக் காளிங்கர் உரையில் பெரு விளக்கம் உண்டு.

**1209.** **விளியுமெ னின்னுயிர் வேறல்ல மென்பா**
**ரளியின்மை யாற்ற நினைந்து.**

**பரிமே:**

(தலைமகன் தூதுவரக் காணாது வருந்துகின்றாள் வற்புறுத்துந் தோழிக்குச் சொல்லியது.)

முன்பெல்லாம் நாமிருவரும் வேறல்லமென்று சொல்லுவாரது அளியின்மையை மிகவும் நினைந்து எனதினிய வுயிர் கழிய நின்றது.

**மணக்:**

இது தலைமகன் நினையானென்று தெரிந்து தலைமகள் தோழிக்குக் கூறியது.

**பரிதி:**

என் விழியும் உன் உயிரும் வேறல்ல என்று இருந்தவர் பிரிந்தார். அவர் சொன்ன சொல்லை நினைந்து அழியாய் நெஞ்சே

'விழியும்' 'அழியின்மை' என்பன இவர் பாடம்.

'வேறல்ல' எனப் பாடமோதுவர் **காளிங்கர்.**

*முடிநிலை:*

மணக்குடவரும் பரிமேலழகரும் கொண்ட துறைவேறுபாடு நோக்குக. 'விழியும்' 'அழியின்மை' எனப் பரிதி கொண்ட பாடங்கள் சிறப்பில. மேலும் அவர் கொண்ட பாடத்திற் கேற்பவும் உரை அமைய வில்லை. பரிதியும் காளிங்கரும் 'வேறல்ல' எனப் பாடங்கொள்வர். 'வேறல்ல' என்னும் அஃறிணைப் பன்மைப் பயனிலை குறளில் தோன்றா எழுவாயாக வரும், 'யாம்' என்னும் தன்மைப்பன்மையோடு இயையு மாறில்லை.

**1210. விடாஅது சென்றாரைக் கண்ணினாற் காணப்
படாஅதி வாழி மதி.**

**பரிமே:**

(வன்புறை யெதிரழிந்தாள் காமம் மிக்க கழிபடரா‌ற் சொல்லியது.)

மதியே! என்னெஞ்சின் இடைவிடாதிருந்தே விட்டுப் போயினாரை யானென் கண்ணளவானாயினும் எதிர்ப்படும் வகை நீ படா தொழிவாயாக.

கண்ணளவான் எதிர்ப்படுதலாவது, மதி இருவரானும் நோக்கப்படுதலின், இருவர் கண்ணும் அதன்கண்ணே சேர்தல்.

**மணக்:**

என் நெஞ்சை விடாது போனவரைக் கண்ணினாற் காணுமாறு படுகின்றதில்லை. இம்மதி.

பட்டதாயின், என்கண் உறங்கும்; உறங்கினால் அவரைக் காணலாம் என்பது கருத்து. இது மதியுடன் புலந்து கூறியது. இதனாலே நனவினால் வருத்த முற்றதும் கூறினாளாம்.

'படாஅது' என்பது இவர் பாடம்.

**பரி தி:**

விடாமற் சென்றாரைக் கண்ணினாற் காணு மளவு அஸ்தமனமாகாமல் விளங்கியிருப்பாய் மதியே.

**குழந்தை:**

மதியே, வாழ்வாயாக! என் நெஞ்சில் இடைவிடாது இருந்து விட்டுப் போனவர் கண்ணினாலும் காணும்படி நீ மறையா திருப்பாயாக.

மதி கண்டு கூறியது. சென்றாரை ஐ.- சாரியை. அவர் நின்னைக் கண்டால் என்னை நினைக்கவுங் கூடு மாகையால் நீ இவ்வுதவி செய்வாய் என்பதாம்.

**மு.ரா.அரு:**

என் மனத்தை விட்டு நீங்கா திருந்தே நீங்கிப் பிரிந்து போன தலைவரை என் கண்களாற் கண்டு மகிழுமாறு சந்திரனே! நீ வெளிப்படாமல் மறைந்து செல்வாயாக. அப்படிச் சென்றால் நீ வாழக் கடவாய் என்பதாம். பிரிந்துபோன தலைவர் குறித்த காலத்தில் வராதிருப்பது பின் வந்தால் ஊடல் மிகுதியாற் பாராதிருப்பாள், ஆசை மிகுதியாற் பார்க்க வேண்டியது அவசர மாதலால், அப்போது பிறரறியும்படி பார்த்தால் நாணங் கெடுமாதலால் சந்திரனை மறைந்து போம்படி கூறினாள் என்பது கருத்து.

இது வன்புறை எதிரழிந்த தலைவி காம மிகுதியால் அதிகப் பட்ட துன்பத்தாற் சொல்லியது.

**சி.இலக்:**

மதியே, நீ வாழ்வாயாக. என் நெஞ்சை விட்டு நீங்காது என்னை விட்டுப் போயினவரை, கண்களால் பார்க்கத் தோன்றாது இருப்பாயாக.

மதி அவன் கண்ணில் படாமல் இருந்தால் அவள் முகத்தைக் கண்டு மகிழும் ஆவலுடன் விரைந்து வருவான். ஆதலின் மதி வானில் தோன்றா திருத்தல் நன்று எனக் கருதி அதனை வேண்டுகின்றான், அவனைப் பார்க்கத் தோன்றாதே! என்று.

**வெ.இராம:**

அறிவே! உன்னை வாழ்த்துகின்றேன். பொறு. விடாப் பிடியாகப் பிரிந்து சென்றவரைக் கண்ணினால் கண்டதும் துன்பப் படுதல் நீங்குவாய்.

படாதி—துன்பப்படமாட்டாய்; விடாது சென்றார்-'செல்லாமை யுண்டேல், எனக்குரை, மற்று நின் வல்வரவு வாழ்வார்க்குரை' என்று நான் தடுத்ததைக் கேளாமல் தான் கொண்டதை விடாமல் சென்றவர்.

**வரத:**

சந்திரனே, என் உடலை விட்டு உயிரை விடாது கொண்டு சென்ற காதலர் கண் எதிரே தோன்றாதே. நீ வாழ்வாயாக.

சந்திரனைக் கண்டதும் என் காதலருக்கு என்னைப் பற்றிய நினைவு வந்து விடும். முன்பு அவர் என்னைப் பிரியமாட்டேன் என்று சந்திரனை முன்வைத்துச் சொன்ன மொழிகள் அவர் நினைவுக்கு வந்து அவரை வருத்தும் அவரைத் துன்பப் படுத்தக் காரணமாக அமையாதே என்று சந்திரனைப் பார்த்துத் தலைவி கூறி வருந்துகிறாள்.

**பழைய: (உ.வே.சா.)**

தலைவன் வரவுணர்ந்து சொல்லல் எனத் துறை கூறும்.

**முடிநிலை:**

பரிமேலழகர், மணக்குடவர், பழைய உரையாளர் ஆகியோர் துறை கூறுவதில் வேறுபடுதல் காண்க. 'படாஅது' என்னும் மணக்குடவர் பாடம், 'விடாஅது' என்னும் தொடை நயத்துக்குப் பெரிதும் இசைகின்றது எனினும் 'வாழி' என்ற சொல் வரும் நன்னீரை வாழி அனிச்சமே (1111) காதலை வாழிமதி (1118) புன்கண்ணை வாழி (1228) என்பன போன்ற குறள்களை நோக்கின் ஆண்டெல்லாம் முன்னிலைவினைப் பயனிலை வரக் காண்கின்றோம். ஆதலின் 'படாஅதி' என்னும் பரிமேலழகர் பாடம் குறள் நடைக்கேற்றதே 'கண்ணினாற் காணல்' என்னும் பகுதிக்குப் பரிமேலழகர் கூறும் விளக்கம் இயல்பில்லை. மதியைக் கண்டால் தலைவன் தலைவியை நினைப்பான் என்ற கருத்தினைப் புலவர் குழந்தை உரையும் வரதராசனார் உரையும் காட்டும். இத்தகைய கருத்துக்குக் குறள் நடை இடந்தரவில்லை. தம் கருத்திற்கு இயைய வேண்டியே சென்றாரை என்ற சொல்லுக்குச் சென்றார் என்னும் பொருள் கூறுவாராயினர். 'சென்றாரை' என்பதிலுள்ள 'ஐ'யை இரண்டனுருபாகக் கொள்ளாது சாரியையாகத் தள்ளி எழுவாய் வேற்றுமையாக அவ்விருவரும் உரை எழுதியிருத்தல் உடன்படத் தக்க தன்று. அறிவை முன்னிலைப் படுத்திக் கூறல் அகத்திணைக் கண் வழக்காறின்மையானும் மதிக்கு அறிவெனப் பொருள் கொள்ளின் 'கண்ணினாற் காணப்படாதி' என்பதனோடு இயல்பான பொருட் பொருத்தம் அமையாமையானும் இராமலிங்கம் பிள்ளை உரை தகுவதன்று. மு.ரா. அருணாசலக் கவிராயரும் இலக்குவனாரும் 'படாஅதி' என்பதற்கு மறைந்து செல்வாயாக, தோன்றா திருப்பாயாக எனப் பொருள் கூறி மதி மறைய வேண்டுதற் குரிய காரணத்தை விளக்கி யுள்ளனர். அப்பொருளும் விளக்கமும் அத்துணைச் சிறப்பில. இக்குறட்குப் பரிதி உரை பொருத்த மானது. அவர் 'விளங்கியிருப்பாய்' என முன்னிலையாக உரை எழுதியிருப்பது நினையத்தகும்.

# 122. கனவுநிலையுரைத்தல்.

அஃதாவது தலைமகள் தான்கண்ட கனவினது நிலைமையைத் தோழிக்குச் சொல்லுதல். அக்கனவு நனவின்கண் நினைவுமிகுதியால் கண்டதாகலின் இது நினைந்தவர் புலம்பலின் பின் வைக்கப்பட்டது என அதிகார விளக்கமும் முறைவைப்பும் கூறுவர் பரிமேலழகர்.

கனவுநிலை யுரைத்தலாவது கனவினது நிலையைச் சொல்லுதல். காதலரை யொழிவின்றி நினைப்பார்க்கு உறக்கமில்லை யாகும்; அவர் உறங்கிலராயின், அவரது சேதியை மறவாது நினைப்பாராதலான், அதன்பின் இது கூறப்பட்டது. தலைமகன் நினைத்தல், தலைமகள் நினைத்தல் என்னும் இரண்டனுள்ளும் இவட்காயின், உறக்கமில்லை என்று கொள்க என விளக்கந் தருவர் மணக்குடவர்.

காதலன் நினைவினாலே வருத்தமுற்ற துன்பம் கூறினாள்' அந்நினைவினால் இக்கனவுநிலை யுரைத்தல் கூறுகின்றமையின் இது பின் கூறப்பட்டது. தலைமகனை நினைத்தல், கனவின் நிலைமை என்னும் இரண்டினுள்ளும் இவட்குக் கனவு நிலையாகிய உறக்கம் இல்லை எனக் கொள்க என்பர் பரிப் பெருமாள்.

பழைய உரை (உ.வே.சா.) கனவு நலிபுரைத்தல் எனத் தலைப்புக்கொண்டு கனவுகண்டு தலைவி நலிவினை உரைத்தல் எனப்பொருள் கூறும். கனவு காணல், தலைவன் கலவி நலத்தினைத் தலைவி கனவிலே கண்டு விழித்து நலிந்துரைத்தல் என அது விளக்கம் தரும்.

செயல் மேற்கொண்ட தலைவனுக்கு, காம எண்ணம் ஓர் ஒருகால் தோன்றுமே யன்றி எப்போதும் இல்லில் உறையும் தலைவிக்கு உண்டாவது போல எண்ணத்தில் நிலைத்திருக்காது. ஆகையால் கனவுநிலை தலைவிக்கே உரியதாயிற்று என்பர் வரதராசனார்.

**1211. காதலர் தூதொடு வந்த கனவினுக்**
**கியாதுசெய் வேன்கொல் விருந்து.**

**பரிமே:**

(தலைமகன் தூதுவரக் கண்டாள் சொல்லியது.)

யான் வருந்துகின்ற தறிந்து அது தீரக் காதலர் விடுத்த தூதினைக் கொண்டு என்மாட்டு வந்த கனவினுக்கு யான் விருந் தாக யாதனைச் செய்வேன்?

'விருந்து' என்றது விருந்திற்குச் செய்யு முபகாரத்தினை. அது கனவிற் கொன்று காணாமையின், 'யாது செய்வேன்' என்றாள்.

**மணக்:**

இது தலைமகள் ஆற்றுதற் பொருட்டுக் காதலர் வாரா நின்றார் என்று தூதுவரக் கனாக் கண்டேன் என்று தோழி சொல்லியது.

**பழைய: (உ.வே.சா.)**

கனவில் காண்டல் நனவில் பலித்தல் கூறல்.

காதலர் நம்பால் விட்ட தூதுடனே வந்ததனால் அப்படிக் கண்ட கனவு, நனவிற் பலித்தலால் அந்தக் கனவினுக்கு யாது விருந்தாகச் செய்வேன்.

விருந்து செய்தல்—கனவினுக்கு வெகுமானம் செய்தல்.

**வெ. இராம:**

காதலர் என்னிடம் தூதாக வரும்படி எனக்கு உண்டான நான் கண்ட கனாவிற்கு என்ன பெருமை செய்வேனோ!

**வரத:**

என் காதலரையும் தூதுவரையும் என்னிடம் அழைத்து வந்த கனவினுக்கு நான் என்ன விருந்துபசாரம் செய்வேன்?

**முடிநிலை:**

தூதுவரக் கனாக் கண்டேன் எனத் தோழி தலைவியை ஆற்றுதற் பொருட்டுக் கூறியதாகக் கொள்ளும் மணக்குடவர் துறையினும் தலைமகன் தூதுவரக் கண்டாள் (தலைவி) கூறியது என்னும் பரிமேலழகர் துறை சிறப்பினது. 'காதலர் தூதொடு' என்பதற்கு காதலரையும் தூதுவரையும் என உம்மைத் தொகை கொள்வது இலக்கணமன்று. மேலும், காதலரே கனவில் வந்தார் என்னும் போது தூதும் உடன் கூறுவதால் பயன் யாது? காதலரே தூதாய்க் கனவில் வருவதாக இராமலிங்கம் பிள்ளை உரைப்பர். அவ்வுரை 'காதலர் தூதொடு' என்னுந் தொடருக்குப் பொருந்தாது. மேலும், காதலரே தூதாக வந்தார் என்று கூறுவது மரபு மில்லை, நயமு மில்லை. பழைய உரையில் ஒருவகை விளக்கம் காணலாம்.

**1212. கயலுண்கண் யானிரப்பத் துஞ்சிற் கலந்தார்க்
குயலுண்மை சாற்றுவேன் மன்.**

**பரிமே:**

(தூது விடக் கருதியாள் சொல்லியது)

துஞ்சாது வருந்துகின்ற என் கயல் போலும் உண்கண்கள் யானிரந்தால் துஞ்சுமாயின், கனவிடைக் காதலரைக் காண்பேன்; கண்டால் அவர்க்கு யானாற்றி யுளேனாய தன்மையை யானே விரியச் சொல்வேன்.

'கயலுண்கண்' என்றாள் கழிந்த நலத்திற்கிரங்கி.

**பரிப்:**

ஈண்டு எப்பொழுதும் காதலர் வரவு பார்த்திருக்கின்ற தடு மாற்றத்தை உடைத்தாகிய **கண்** என்றவாறாயிற்று. **உறங்க** வேணும் என்ற தோழிக்குக் கண்கள் நீயும் யானும் **வேண்டிக்** கொள்ள **உறங்கு**மாயின், இத்துணை நாள் சாவாது **இருந்தோம்** என்று நம் காதலருக்கு உரைக்கலாயிற்று என்று **தலைமகள்** கூறியது.

'யாமிரப்ப' என்பது இவர் பாடம்.

**பரிதி:**

கயல் போன்ற கண்ணே, என் நாயகர் கனவில் வரும்படி நீ துஞ்சுவா யாகில் வேண்டி உடனே வரும்படி சொல்லி நிறுத்திக் கொள்வேன்; நீ துஞ்சுவாயாக.

**காளிங்:**

நீரோடு வாழும் கயல்போல நீந்தும் எம் கலுழ் **கண்ணினை** ஒருகால் எம்பொருட்டாகவே நீர் துஞ்சவேண்டும் என்று யாம் இரந்துகொள்ள அருளித் துஞ்சுமாயின், சொல்லாது பிரிந்த நம் காதலருக்கு யாம் உய்தலுடைமைக்கு வேண்டும் உபாயத்தைச் சொல்லிக் கொள்வம் இனி நெஞ்சே!

'கரந்தார்க்கு' என்பது இவர் பாடம்.

**வெ.இராம:**

கயலுண்கண் என்றது கனவில் வந்த காதலர் **மறைந்து** விட்டாரே என்று, கெண்டை மீன் புரள்வது போல் **மருண்டு** **புரண்டு** விழிக்கின்ற கண்கள் என்பதைச் சுட்டுவது.

**உயல் உண்மை** — உயிரோடிருப்பதன் உண்மையான காரணத்தை. அக்காரணம் 'மற்றியான் என்உளேன் மன்னோ அவரோடுயான் உற்றநாள் உள்ள உளேன்' என்ற குறளில் **சொல்லப்பட்ட காரணம்.**

**முடிநிலை:**

பரிமேலழகர், பரிப்பெருமாள், காளிங்கர் மூவரும் இக்குறளைத் தலைவி கூற்றாகக் கொள்ளினும், துறையின் சூழலமைப்பில் வேறுபாடுண்மை காண்க. கயலுண்கண் என்பதற்குத் தடு மாற்றத்தையுடைய கண் என்று பரிப்பெருமாளும் நீந்தும்படியாக அழுத நீர் நிறைந்த கண் என்று காளிங்கரும் மருண்டு புரண்டு விழிக்கும் கண் என்று இராமலிங்கம் பிள்ளையும் வெவ்வேறு வகையான விளக்கந் தருவர். 'கயலுண்கண்' என்பதனை விளி யாகக் கொண்டெழுதும் பரிதி உரை உடன்படத் தக்கதே. எனினும், அவ்வுரையின் பிற்பகுதி மூலத்தோடு இயையவில்லை. 'யாமிரப்ப' என்னும் பரிப்பெருமாள் பாடத்தாலும் 'கரந்தார்க்கு' என்னும் காளிங்கர் பாடத்தாலும் அவர்தம் உரைகள் வேறுபடு கின்றன. உயலுண்மைக்குக் காரணமாக 'அவரொடு யான் உற்ற நாள் உள்ள உளேன்' என்றதை இராமலிங்கம் பிள்ளை காட்டுதல் சிறப்புடைத்து.

**1213. நனவினா னல்கா தவரைக் கனவினாற்**
**காண்டலி னுண்டென் னுயிர்.**

**பரிமே:**

(ஆற்றாளெனக் கவன்றாட்கு ஆற்றுவ லென்பது படச் சொல்லியது)

நனவின்கண் வந்து தலையளி செய்தாரை யான் கனவின்கட் கண்ட காட்சியானே என்னுயி ருண்டாகாநின்றது.

**மணக்:**

இஃது உறங்கினால் காணலாமோ என்ற தோழிக்குத் தலைமகள் கூறியது.

**காளிங்:**

'காண்டலும்' என்பது இவர் பாடம்.

**வெ.இராம:**

நல்காதார்—கொடுக்காதவர். இங்கே இன்பம் கொடுக்காதவர் என்று பொருள் தருவது. என் காதலர் நனவில் வந்து இன்பம் தராவிட்டாலும் கனவில் வந்து இன்பம் தந்து விட்டதனால் இனி என் உயிருக்குப் பயமில்லை என்பது கருத்து.

**முடிநிலை:**

பரிமேலழகரும் மணக்குடவரும் தலைவி கூற்றாகக் கொள்ளினும், துறையமைப்பில் உள்ள வேறுபாடு காண்க. 'நல்காதவர்' என்பது அகத்திணைப் பாக்களில் அருளாதார் என்னும் பொருளிலேயே பயின்று வரும். இது முன்னரும் சுட்டப் பெற்றுள்ளது. அதற்கு இன்பங் கொடுக்காதவர் என்னும் இராமலிங்கம் பிள்ளையின் பொருள் இயல்பில்லை.

**1214. கனவினா னுண்டாகுங் காம நனவினா**
**னல்காரை நாடித் தரற்கு.**

**பரிமே:**

[ஆற்றா ளெனக் கவன்றாட்கு ஆற்றுவல் என்பது படச் சொல்லியது.]

நனவின்கண் வந்து தலையளி செய்தாரை அவர் சென்றுழி நாடிக் கொண்டுவந்து கனவு தருதலான் அக்கனவின் கண்ணே எனக்கின்ப முண்டாகாநின்றது.

**மணக்:**

இது, கண்டால் பயன் என்னை? காம நுகர்ச்சி யில்லையே என்ற தோழிக்குத் தலைமகள் கூறியது.

**காளிங்:**

நெஞ்சே! நனவிடத்து நல்காது பிரிந்த நம் காதலரைத் தேடிக் கொணர்ந்து தருதற்குக் கனவின் கண்ணும் எனக்கு உண்டாகாநின்றது ஓர் ஆசை.

**தேவ:**

நனவின்கண் வந்து கூடி யின்பந் தராதவரை இருக்கு மிடந் தேடிச் சென்று தூதர் அழைத்து வரற்கு ஏதுவான இன்ப நிகழ்ச்சிகள் கனவின்கண் நிகழ்கின்றன.

**காமம்** என்பதற்கு அன்பு எனப் பொருள் கூறுவர் **கா. சு. பிள்ளை.**

**முடிநிலை:**

மணக்குடவரும் பரிமேலழகரும் இக்குறளைத் தலைவி தோழிக்குக் கூறியதாகவும் காளிங்கர் தலைவி நெஞ்சினை முன்னிலைப் படுத்திக் கூறியதாகவும் கொள்வர். காமத்துப் பாலில் இவ்வாறு நெஞ்சினை முன்னிலைப்படுத்தி உரை யெழுதுவது காளிங்கரின் பெருவழக்காகக் காணப்படுகின்றது. தரற்கு—தருதலான் என உருபு மயக்கமாகப் பொருள் கூறுவர் பரிமேலழகர். காளிங்கர் அவ்வாறு கொள்ளாமல் பொருளெழுதி யிருப்பதும் ஏற்கத்தகும். 'நாடித் தரற்கு' என்பது கொண்டு தேடிச் சென்று தூதர் அழைத்து வரற்கு எனத் தூதரை வருவித்துப் பாவாணர் உரை செய்வாராயினார். அவர் 'நல்காரை' என்பதற்கு இன்பந் தராதவரை எனப் பொருள் கூறுவர். அதனினும் அருள் செய்யாதாரை என உரைத்தல் மரபாகும். 'நனவினால் நல்காரை நோவர்' (1219) 'நசைஇ யார் நல்கார்' எனினும் (1199) 'பரிந்தவர் நல்கார் என்றேங்கி' (1248) 'நனவினால் நல்காதவரை' (1213) என்னும் குறளாட்சி நோக்குக. 'காமம்' என்பதற்கு இன்பம், ஆசை, இன்ப நிகழ்ச்சிகள், அன்பு எனப் பொருள் கூறியுள்ளனர். அவற்றுள் இன்பம் என்பது சிறப்பினது.

**1215. நனவினாற் கண்டதூஉ மாங்கே கனவுந்தான்**
**கண்ட பொழுதே யினிது.**

**பரிமே:**

(ஆற்றாளெனக் கவன்றாட்கு ஆற்றுவல் என்பது படச் சொல்லியது.)

முன் நனவின்கண் அவரைக் கண்டு நுகர்ந்த இன்பந்தானும் இனிதாயிற்று; அப்பொழுதே இன்று கனவின்கட் கண்டு நுகர்ந்த இன்பமும் அக்கண்ட பொழுதே இனிதாயிற்று; அதனான் எனக்கு இரண்டும் ஒத்தன.

கனவு-ஆகுபெயர்.

**மணக்:**

இது கனவிற் புணர்ச்சி இன்பந் தருமோ என்ற தோழிக்குத் தலைமகள் கூறியது.

**பரிதி:**

நனவினால் கண்டதும் இனிது. அதனினும் இனிது நாயகரைக் கனவில் காணுதல்.

**முடிநிலை:**

பரிமேலழகரும் மணக்குடவரும், துறை யமைப்பில் வேறுபடுதல் நோக்கத் தகும். இக்குறளுக்குப் பரிமேலழகர் ஒப்புப் பொருள் பட உரை எழுதுவர். பரிதி உறழ்ச்சி நடைபட எழுதுவர். இவ்வுறழ்ச்சிப் பொருளுக்கு ஏற்ற நடை மூலத்தில் இல்லை.

**1216. நனவென வொன்றில்லை யாயிற் கனவினாற்**
**காதலர் நீங்கலர் மன்.**

**பரிமே:**

(ஆற்றாளெனக் கவன்றாட்கு ஆற்றுவல் என்பது படச் சொல்லியது.)

நனவென்று சொல்லப்படுகின்ற ஒரு பாவி யில்லை யாயின் கனவின்கண் வந்து கூடிய காதலர் என்னைப் பிரியார்.

மன்–ஒழியிசை.

**பரிப்:**

யாங்கள் எல்லாம் காணாது ஒழியவும் நீ கண்டாய் ஆயின் அவரைப் பிரியவிட்டது என்னை என்ற தோழிக்குத் தலைமகள் கூறியது.

**காளிங்:**

தோழி! நனவெனப் பெயர் பெற்றது ஒரு காலம் வேறு ஒன்று இல்லையாயின், இக்கனவிடை நம் காதலர் ஒரு பொழுதும் நம்மை நீங்குவது இலர் மிகவும்; எனவே, நனவின்கண் தனது பிரிவாற்றாமை தோன்றக் கூறினாள்.

**பழைய: (உ. வே. சா)**

தன் நெஞ்சொடு சொல்லியது.
காதலர் நீங்கலரிது' என்பது பாடம்.

**இறை:**

நனவிலே அவர்வந்து விரும்பும் இன்பம்
நல்குகின்ற நன்னிலையே இல்லை என்றால்
எனக்குவரும் கனவினிலே இன்பம் ஈவார்
எப்போதும் எனைவிடுத்தே எங்கும் ஏகார்.

**முடிநிலை:**

உரையாசிரியர்களிடையே துறை யமைப்பில் சிறிது வேறுபாடுண்டு. மன்-ஒழியிசை என்பர் பரிமேலழகர். அதற்கு மிகுதிப் பொருள் கூறுவர் காளிங்கர். 'நனவென ஒன்றில்லை ஆயின்' என்னும் நடைக்குத் தலைவர் நனவில் வந்து இன்பம் நல்கும் நன்னிலை இல்லை என்றால், என இறையரசனார் பொருள் கூறுதல் இயல்பாகாது. அவர் 'ஒன்று' என்பதற்கு நன்னிலை என்று பொருள் கண்டுள்ளார். நனவு கனவில் காதலர் நீங்கக் காரணமாக இருக்கும் ஒன்றாதலின், அதனை

நன்னிலை என்றல் சாலாது. 'ஒன்று' என்பது அது பயின்று வருமிடத்திற் கேற்ப இன்பம், துன்பம், குற்றம் முதலிய பொருள்களைச் சுட்டும். அது 'தாம் வீழ்வார் மென்றோள் அகறலின் ஆங்கொன்று உடைத்து'. (1325) என்புழி, இன்பத்தையும், 'பேதைமை என்ப தொன்று யாதெனின்' (831) என்புழிக் குற்றத்தையும், 'தாம்வீழ்வார் நினைப்ப வருவதொன் றில்' (1202) என்புழித் துன்பத்தையும் சுட்டுதல் காண்க. அதுபோல 'நனவென ஒன்றில்லை யாயின்' என்னும் இக்குறளில் 'ஒன்று' என்பது துன்பத்தைச் சுட்டுதல் காண்க. நனவின் துன்ப மிகுதி கருதிப் பரிமேலழகர் 'ஒன்று' என்பதற்கு ஒருபாவி என்று உரை கூறியுள்ளார், 'அழுக்காறென ஒருபாவி' (168) என்பது போல அவ்வுரை கொடுமை மிகுதி சுட்டுதலின் தள்ளத்தக்க தன்று.

**1217. நனவினா னல்காக் கொடியார் கனவினா**
**னென்னெம்மைப் பீழிப் பது.**

**பரிமே:**

(விழித்துழிக் காணா ளாயினாள் கனவிற் கூட்டம் நினைந்து ஆற்றாளாய்ச் சொல்லியது.)

ஒரு ஞான்றும் நனவின்கண் வந்து தலையளி செய்யாத கொடியவர், நாடோறுங் கனவின்கண் வந்து நம்மைவருத்துவது எவ்வியைபு பற்றி? கனவில் தோள் மேலராய் விழித்துழிக் கரத்தலின் அதனானும் துன்ப மாகாநின்றது என்பாள் 'பீழிப்பது' என்று கூறினாள்.

**பரிப்:**

இது தலைமகனைக் கனவகத்துக் கண்டு முன்பு நல்காமையை நினைத்து ஊடல் உற்றுழி, அதனை உணர்த்திக் கூடுவதன் முன்னம் விழித்த தலைமகள் ஆற்றாமையால் தோழிக்குக் கூறியது.

பீழை என்றது அவன் கூந்தலும் அல்குலும் பற்றி நலிந்ததனை.

**பரிதி:**

நனவினால் இன்பம் தராமல் பிரிந்த நாயகர் கனவினால் வந்து எம்மை வருத்தம் செய்வது என்னை?

**முடிநிலை;**

பரிமேலழகரும் பரிப்பெருமாளும் கொண்ட துறையமைப்பில் சிறிது வேறுபாடிருத்தல் காண்க. 'பீழை' பற்றிய விளக்கத்தை அவ்விருவர்தம் உரையில் காணலாம். பரிமேலழகரின் விளக்கம் 'துஞ்சுங்கால் தோள் மேலராகி விழிக்குங்கால் நெஞ்சத்தராவர் விரைந்து' (1218) என்னும் அடுத்த குறள் நினைந்தெழுதிய தாகும். நல்காமை-இன்பந்தராமை என்னும் பரிதி உரையினும் தண்ணளி செய்யாமை (அருளாமை) என்னும் பொருளே இயல்பாகும். 'நல்கார் நயவா ராயினும் பல்காற் காண்டலும் உள்ளத்துக் கினிதே' '(60) என்னும் குறுந்தொகைப் பாடலிலும் நல்காமை அப்பொருட்டாதல் காண்க.

**1218. துஞ்சுங்காற் றோண்மேல ராகி விழிக்குங்கா**
**னெஞ்சத்த ராவர் விரைந்து.**

**பரிமே:**

(தானாற்றுதற் பொருட்டுத் தலைமகனை யியற்பழித்தாட்கு இயற்பட மொழிந்தது.)

என்னெஞ்சு விடா துறைகின்ற காதலர் யான் துஞ்சும் பொழுது வந்து என் தோள் மேலராய், பின் விழிக்கும் பொழுது விரைந்து பழைய நெஞ்சின் கண்ண ராவர்.

ஒருகாலும் என்னின் நீங்கி யறியாதாரை நீ நோவற்பாலை யல்லை என்பதாம்.

**மணக்:**

இஃது உறக்கம் நீங்கினால் யாணடுப் போவர் என்று நகைக் குறிப்பினாற் கூறிய தோழிக்குத் தலைமகள் கூறியது.

**காளிங்:**

'தோள் மேலராவர்' என்பது இவர் பாடம்.

**பழைய: (உ.வே.சா.)**

தன் நெஞ்சொடு சொல்லியது. இது, 'நெஞ்சத்துளாவர்' என்று பாடங் கொள்ளும்.

**முடிநிலை:**

இக் குறளைத் தலைவி கூற்றாகக் கொள்ளினும் உரைகள் துறையமைப்பில் வேறுபடுதல் காண்க. காளிங்கரும் பழைய உரையும் கொள்ளும் பாட வேறுபாடுகள் பொருள்வேறுபாட்டிற்கு உரியவல்ல.

**1219. நனவினா னல்காரை நோவர் கனவினாற்**
**காதலர்க் காணா தவர்.**

**பரிமே:**

(தான் ஆற்றுதற் பொருட்டுத் தலைமகனை இயற்பழித்தாட்கு இயற்பட மொழிந்தது.)

தமக்கொரு காதலர் இன்மையின் அவரைக் கனவிற் கண்டறியாத மகளிர், தாமறிய நனவின்கண் வந்து நல்காத நங்காதலரை அன்பிலரென நோவாநிற்பர்.

**மணக்:**

இது, தலைமகள் ஆற்றாமை கண்டு தலைமகனை இயற் பழித்த தோழிக்கு அயலார்மேல் வைத்துத் தலைமகள் கூறியது.

**காளிங்:**

நெஞ்சே! நம் காதலர் நம்மை நனவிடத்து வந்து நல்காமையைக் குறித்து இவள் மாட்டு அருளும் அன்பும் இலர் என்று இங்ஙனம் நொந்து உரைப்பர் யார் எனின், இங்ஙனம் நனவிடைப் பிரிந்த தம் காதலரைக் கனவிடைக் கண்டு இன்புறா தவர்; எனவே, அங்ஙனம் கூறிய அயலார் கேட்பத் தன் நெஞ்சிற்குச் சொல்லுவாளாய்ச் சொல்லினாள்.

**முடிநிலை:**

மணக்குடவரும் பரிமேலழகரும் கொண்ட துறையில் வேறு பாடில்லை தலைவி அயலார் கேட்பத் தன் நெஞ்சிற்குக் கூறிய தாகக் காளிங்கர் துறை கொள்வர். இக்குறட்கு உரைவேற்றுமை இல்லை.

**1220. நனவினா னங்நீத்தா ரென்பர் கனவினாற்**
**காணார்கொ லிவ்வூ ரவர்.**

**பரிமே:**

(தான் ஆற்றுதற் பொருட்டுத் தலைமகனை இயற்பழித்தாட்கு இயற்பட மொழிந்தது.)

இவ்வூரின் மகளிர் நனவின்கண் நம்மை நீத்தாரென்று நங்காதலரைக் கொடுமை கூறாநிற்பர்; அவர் கனவின்கண் நீங்காது வருதல் கண்டறியாரோ?

என்னொடு தன்னிடை வேற்றுமை இனறாயின், யான் கண்டது தானும் கண்டமையும்; அது காணாது அவரைக் கொடுமை கூறுகின்றமையின் அயலாளேயாம் என்னும் கருத்தால் 'இவ்வூரவர்' என்றாள்.

**மணக்:**

இஃது 'இவ்வேறுபாடு அலராயிற்று' என்ற தோழிக்குத் தலைமகள் கூறியது.

**காளிங்:**

நெஞ்சே! நம் காதலர் நம்மைக் கையகன்றனர் என்று நனவின்கண் அவரைக் கொடுமை கூறாநிற்பர். இதற்கு என்னை காரணம்? கனவிடத்து யான் என்காதலரைக் காண்பேன் என்ப தனால், அப்பொழுது தாமும் அவரைக் கண்டு கொள்ளாரோ இவ்வூரவ ராகிய மகளிர். எனவே, இனி அவரைக் கொடுமை கூறுகின்ற தென்னை?

**வெ. இராம:**

என் காதலர் என்னை விட்டுப் பிரிந்திருக்கிறார் என்று நனவிலிருந்து கொண்டு (என்னை ஏளனம்) பேசுகின்ற இந்த ஊரார் (நானும் என் காதலரும் கனவில் சந்தித்து இன்ப மடைந்ததை) அவர்களும் கனவிற் காணவில்லை போலும்; (கனவு கண்டிருந்தால் இப்படி ஏளனம் செய்ய மாட்டார்கள்).

**முடிநிலை:**

உரையாசிரியர்கள் துறைவேறுபடுதல் காண்க. 'நந்நீத்தார்' என்று கனவின்கண் ஊரார் குறை கூறுவர் என நனவினை ஊரார் மேலதாகக் கொண்டு காளிங்கரும் இராமலிங்கம் பிள்ளையும் உரை கூறுவர். நனவு கனவுநிலைகள் தலைவிக்கே யாதலின், அவர்கள் கூறும் உரை சிறப்பில்லை. 'இவ்வூரவர்' என்பது தோழியை அயலாளாக்கிக் கூறியதாகப் பரிமேலழகர் கொள்ள, இராமலிங்கம் பிள்ளை ஊர்மக்களைக் குறிப்பதாகவே கொள்வர். இரண்டும் பொருந்துவனவேயாம்.

# 123. பொழுது கண்டிரங்கல்.

அஃதாவது மாலைப்பொழுது வந்துழி அதனைக் கண்டு தலைமகள் இரங்குதல். கனா முந்துறாத வினையில்லை என்பது பற்றிப் பகற்பொழுது ஆற்றியிருந்தாட்கு உரியதாகலின், இது கனவு நிலை யுரைத்தலின் பின் வைக்கப்பட்டது என அதிகார விளக்கமும் முறைவைப்பும் கூறுவர் பரிமேலழகர்.

பொழுது கண்டிரங்கலாவது மாலைப்பொழுது கண்டு தலைமகள் வருந்துதல். ஏனைப் பொழுதில் வருத்தமிலலோ எனின், பிரியப்பட்டார்க்கு எல்லாக் காலமும் வருத்தமுள வாயினும், விடியலும் நண்பகலும் போலாது மாலைப்பொழுது வருத்தமிகுதலால், இது கூறப்பட்டது என விளக்கந் தருவர் மணக்குடவர்.

என்னை வருத்தம் மிகுமாறு எனின், புள்ளும் மாவும் விடியலும் நண்பகலும் தத்தம் சேக்கையி னின்று நீங்கி அந்திக்காலம் வந்து சேரும்; அவையிற்றைக் கண்டு நம் காதலர் நம்மை உள்ளுகின்றிலர் என்றும் மைந்தரும் மகளிரும் விடியலும் நண்பகலும் அறத்தினும் பொருளினும் முயன்று அந்திக்காலத்தில் தம்மிற் கூடி இன்பம் நுகர்வது கண்டு யாம் இவ்வாறு நுகரப் பெறுகிலோம் என்றும் நினைத்தலான் வருத்தம் மிகும் என்க. நடுநாள் யாமத்தும் துன்பம் உறும் அன்றே; அதுவும் கூற வேண்டாவோ எனின், அக்காலத்து வரும் துன்பமும் இதனின் மிகுதி யின்மையின் வேறு கூறாராயினர். இது நினைந்தவர் புலம்பலின் பின் கூறற்பாலது. கனவு நிலையும் சேரச் சொல்ல வேண்டுதலின் இரண்டு சொல்லும் அவராகக் கொண்டு முன் கூறவேண்டும் என்பதனால் நினைவொடு கூடிய கனவை முன்கூறி அதன்பின் கூறினார் என்று கொள்ளப்படும் என்பர் பரிப்பெருமாள்.

மாலை என்பது இரவின் முதற்பத்து நாழிகை. கணவரைப் பிரிந்த மாளிர்க்குப் பிரிவுத்துன்பம் இருவேளைக்கும் பொது வேனும், பகலிற்போற் பல பொருள்களைக் கண்டும் பல வினைகளைச் செய்தும் பலரொடு பேசியும் காலம் போக்கும்

வாய்ப்பு இரவிலின்மையானும் மக்களைப் போன்றே விலங்கு பறவைகளும் அடங்கித் துணையொடு கண்படை கொள்ளுங் காட்சி துன்பந் தருதலானும், ஆயர் புல்லாங்குழலிசை அத் துன்பத்தை மிகுத்தலானும், மாலைப்பொழுது வருந்துவதற் கிடமாயிற்று; காதலரைப் பிரிந்த மகளிர்க்குப் பொதுவாக இரவில் தூக்கம் வாராமையானும், அரிதில் வருந் தூக்கத்திற் காணுங் கனவும் மெய்யான இன்பந் தராமையானும், அப் போலி யின்பக் கனவும் இடைவிழிப்பால் துன்பத்தை மிகுத்தலானும், கனவு நினையால் நீண்ட காலம் பிரிவாற்றி யிருக்க இயலாமையானும், அவற்றின் விளைவான பொழுது கண்டிரங்கல், கனவுநிலை யுரைத்தலின் பின் வைக்கப்பட்டது என்பர் தேவநேயப்பாவாணர்.

**1221. மாலையோ வல்லை மணந்தா ருயிருண்ணும்**
**வேலைநீ வாழி பொழுது.**

**பரிமே:**

(பொழுதொடு புலந்து சொல்லியது)

பொழுதே, நீ முன்னாள்களின் வந்த மாலையோ வெனின், அல்லை; இருந்த வாற்றான் அந்நாட் காதலரை மணந்த மகளிருயிரை யுண்ணும் இறுதிக் காலமா யிருந்தாய்.

வாழி என்பது குறிப்புச்சொல். வேலை — ஆகுபெயர்.

**மணக்:**

பொழுதே! நீ வெப்பமுடையை ஆனமையான் மாலையோ எனின் அல்லை; முன்பு கூடிப்பிரியப்பட்டார் உயிரை உண்பதாகிய ஒரு வேலாயிருந்தாய்.

இது மாலைப்பொழுது கண்டு தலைமகள் ஆற்றாமையால் கூறியது.

'மாலை நீ யல்லை' என்பது இவர்பாடம்.

**வேலை** என்பதற்குக் கூற்று என்றுரைப்பர் **காளிங்கர்.**

**குழந்தை:**

வேலை என்பதற்குக் கடலாவாய் என்று பொருள் கூறுவர். பொழுதொடு புலந்து சொல்லியது. வாழி-வாழ மாட்டாய் என்பது குறிப்பு. சிறிது நேரம் நிற்கும் மாலை யன்று, என்னை வருத்துதலால் கடல் போலப் பெருமை யுடையாய் என்பதாம்.

**வரத:**

ஏ மாலைப்போதே! அந்த நாள் தலைவனுடன் கூடியிருந்த பொழுது இன்பத்தைக் கொடுத்த மாலைப்பொழுது அல்லை. ஆனால், இன்று மணம் முடிந்து தலைவனைப் பிரிந்த பெண்களின் உயிரை உண்ணுபடியான விஷமாக மாறி வந்திருக்கிறாய். வாழ்வாயாக!

**மு. கோ:**

'மாலையே' நீ ஓயாது புணர்ந்த காதலரது உயிரையுண்டு கொண்டிருப்பதே வேலையாக விருக்கிறாய், வாழ்வாயாக'.

பொழுது-எக்காலமும் என்க.

**முடிநிலை:**

'மாலை நீ யல்லை' என்ற மணக்குடவர் பாடமும் ஏற்கும். 'வேலை' என்பதற்குப் பொருள் கூறும் வகையில் தான் இக் குறளுக்கு வேறுபாடுகள் எழுந்துள்ளன. வேலை என்பதற்குக் கடல் என்று புலவர் குழந்தை கூறுதல் 'உயிருண்ணும்' என்னும் அடைமொழித் தொடரோடு இயையாமையின் பொருந்தாது. ஆகுபெயராகக் கொண்டு இறுதிக் காலம் (யுகாந்த காலம்) எனப் பரிமேலழகர் உரைப்பதும் வேண்டியதில்லை. இதற்குக் கூற்று என்னும் காளிங்கர் பொருளும் நஞ்சு என்னும் வரதராசனார் பொருளும் சிறப்பில்லை. 'பொழுதே; நீ மாலையோ அல்லை; வேலை என்று கூறும் நடையை நோக்கின், 'வேலை என்பதனை முன்னிலை ஒருமை முற்றாகக் கொள்வதே இயல்பாகும். ஆகவே, 'வேலை' என்பதற்குத் தொழில் என்பதுபடக் கொண்டு கூறும் மு.கோ. உரை பொருந்தாது, அவர் 'பொழுது' என்பதனை

விளியாகக் கொள்ளாது எக்காலமும் என அதற்குப் பொருள் கூறலும் சாலாது. 'வேலை' என்பதனை முன்னிலை ஒருமை வினைமுற்றாகக் கொண்டு 'வேலாக இருந்தாய்' என உரைக்கும் மணக்குடவர் உரையே சிறப்பினது. 'உயிரீரும் வாள்' (334) என்பதனை இவ்வுரைக்கு ஒப்பு நோக்குக.

**1222. புன்கண்ணை வாழி மருண்மாலை யெங்கேள்போல்**
**வன்கண்ண தோநின் றுணை.**

**பரிமே:**

(தன்னுட் கையாற்றை அதன்மேலிட்டுச் சொல்லியது)

மயங்கிய மாலாய், நீயும் எம்போலப் புன்கண்ணுடையையாய் இருந்தாய்; நின்துணையும் எந்துணை போல வன்கண்மை யுடையதோ? கூறுவாயாக.

புன்கண்–ஒளியிழத்தல்.

**பரிதி:**

மாலைப் பொழுதே! என் கண் பனிவருமாப் போல உன் கண்ணும் பனித்து உருகாநின்றது; என் கேள்வன் பிரிந்தாற் போல உனக்கும் ஓர் வன்கண்ணர் பிரிந்தார் உண்டோ?

**காளிங்:**

மாலாய்! நீ புன்கண்மையை உடையையாய் அறப்பொலிவு அழிந்து இராநின்றாய்; மருண்மாலாய், நீ வாழ்வாயாக! நீ செய்கின்றது எம் உறுகேள் போல அருட்கண் இன்றி வன் கண்மை உடையது ஒன்று ஆகின்றது நின் துணையும்; எனவே தன்மேனி பொலிவு அழிந்திட்ட புல்லிமை யெல்லாம் புலப்படச் சொல்லினாள் தன்மேலிட்டு.

உலகத்து மாலை என்று இங்ஙனம் பெண்மைப் பெயர் வழக்கம் உண்டாகலானும், சந்தியாதேவி என்று வடசொல் இலக்கணம் உண்டாகலானும், இதனைப் பெண்பெயர் கொடுத்துக் கூறினார்.

**இறை:**

மெய்மயக்கம் தருகின்ற மாலை யேநீ
மிகுதுயரக் கண்களுடன் இருக்கின் றாயே
பொய்யுரைத்துப் போனஎன்றன் துணைவர் போலப்
பொல்லாரோ உன்துணைவர்? வாழி நீயே.

**முடிநிலை:**

'புன்கண்ணை' என்ற சொல்லுக்குப் பொருள் விளக்கம் சொல்வதில் தான் உரையாளர்கள் வேறுபடுகின்றனர். 'பனி யரும்பிப் பைதல்கொள் மாலை' (1223) என்னும் அடுத்த குறள் நினைந்து பரிதி 'புன்கண்ணை' என்பதற்குப் பனித்துருகும் கண்ணை உடையை என்பது பட உரை கூறியுள்ளார். அதற்கு மிகுதுயரக் கண்களுடன் இருக்கின்றாய் என இறையரசனார் பொருளுரைப்பர். குறிப்புணர்த்தலில் கண் சிறந்த தாதலின் கண்ணுக்கு அடை கொடுத்து இன்கண், வன்கண், மென்கண், புன்கண் என்ற சொற்களாலே முறையே இன்பம், கொடுமை, அருள், துன்பம் என்பவற்றை உணர்த்தி விடுகின்றனர். அவ் வகையில் 'புன்கண்' என்பது பொலிவிழந்த கண் என்று நேர் பொருள் உடையதேனும் துன்பத்தையே உணர்த்துவதாகும். ஆகவே, ஈண்டு புண்கண்ணை என்பதற்குத் துன்பமுடையை என்பதுபடப் பொருள் கோடலே சிறக்கும். கண் எனப் பிரித்துச் சினைப் பெயராகக் கொள்ளலாகாது. மாலைப் பொழுதினைப் பெண்ணாகக் கொண்டு கூறியதற்குக் காளிங்கரின் உரை விளக்கந் தந்துள்ளது.

**1223. பனியரும்பிப் பைதல்கொண் மாலை துனியரும்பித்
துன்பம் வளர வரும்.**

**பரிமே:**

(ஆற்றல் வேண்டுமென்ற தோழிக்குச் சொல்லியது.)

காதலர் கூடிய நாளெல்லாம் என்முன் நடுக்க மெய்திப் பசந்து வந்த மாலை இந்நாள் எனக்கு இறந்துபாடு வந்து தோன்றி அதற்குளதாந் துன்பம் ஒரு காலைக் கொருகால் மிக வாராநின்றது.

குளிர்ச்சி தோன்ற மயங்கி வரும் மாலை என்னும் செம்பொருள் இக் குறிப்புணர நின்றது.

துனி-உயிர் வாழ்தற்கண் வெறுப்பு.

**மணக்:**

நெருநல் எனக்கு நடுக்கத்தை உண்டாக்கித் தானும் புன்மை கொண்டிருந்த மாலைப்பொழுது இன்றும் எனக்கு வெறுப்புத் தோன்றி வருத்தம் மிகும்படியாக வாராநின்றது.

இது முன்னை ஞான்று மாலையால் அடர்ப்புண்ட தலைமகள் பிற்றை ஞான்று மாலை வருவது கண்டு கூறியது.

**வெ.இராம:**

கண்ணீர் அரும்பித் துன்பப் பட்டுக்கொண்டு என் முன் வரும் மாலைப்பொழுது எனக்கு அச்சமுண்டாகித் துன்பம் அதிகரிக்கத்தான் வருகிறது.

பைதல்-துன்பம்; துனி-அச்சம்.

**வரத:**

முன்னொரு நாள் குளிர்ச்சியையும் உடல் உணர்ச்சியையும் கொடுத்த மாலைப் பொழுது, இப்பொழுது வெறுப்பையும் துன்பத்தையும் கொடுத்து வளர்ந்து வருகிறது.

**முடிநிலை:**

பரிமேலழகர் தலைவி தோழிக்குக் கூறியதாகத் துறை கொள்ள மணக்குடவர் தலைவி தானே கூறிக் கொள்வதாகத் துறையமைப்பர். பனியரும்புதல், பைதல் கொள்ளுதல் என்னும் இரண்டையும் மாலைக்கு இயைத்தலே குறள் நடைக்கு ஏற்றது. அவ்வாறன்றிப் பனி யரும்புதலைத் தலைவிக்கும் பைதல் கொள்ளுதலை மாலைக்கும் இயைக்கும் மணக்குடவர் உரை பொருத்தமில்லை. அவ்விரண்டனையும் தலைவிக்குக் கொடுத்த மாலை என வரதராசனார் உரைப்பதும் இயல்பில்லை. குறள் கொடுத்தலைக் குறிப்பிடாமல் ‘பைதல்கொள் மாலை’ எனக்

கொள்ளுதலைக் குறிப்பிடல் காண்க. பனி என்பதற்குக் கண்ணீர் என்று இராமலிங்கம் பிள்ளை உரைப்பது ஒக்கு மேனும், துனி யென்பதற்கு அச்சம் என்று அவர் உரைப்பது ஒவ்வாது.

**1224. காதல ரில்வழி மாலை கொலைக்களத்**
**ஏதிலர் போல வரும்.**

**பரிமே:**

['ஆற்றல் வேண்டும்' என்ற தோழிக்குச் சொல்லியது ]

காதலர் உள்ள பொழுதெல்லாம் என்னுயிர் தளிர்ப்ப வந்த மாலை அவரில்லாத இப்பொழுது, அஃதொழிந்து நிற்றலே யன்றிக் கொல்லுங் களரியிற் கொலைஞர் வருமாறு போல அவ் வுயிரைக் கோடற்கு வாராநின்றது.

**மணக்:**

இது, 'மாலைக்காலத்து நோய் மிகுதற்குக் காரணம் என்னை' என்ற தோழிக்குத் தலைமகள் காரணம் கூறியது.

**பரிதி:**

காதலரை இல்லாத மாதருக்கு மாலைப்பொழுது கொலைக் களத்துச் சத்துரு போல வரும்.

**பழைய: (உ.வே.சா.)**

தலைவி நெஞ்சொடு சொல்லல்.

காதலர் அவ்விடத்து இல்லாத காலம் அறிந்து மாலைப் பொழுது கொலைசெய்யும் செருக்களத்தில் பகைவர்போல வரும்.

படைத்தலைவ ரில்லாத செருக்களத்தில் கொல்லப் பகைவர் போலச் செவ்வானத்துடன் மாலைப்பொழுதும் வரும் என்றது. செவ்வானம் செருக்களத்துக்கு ஒப்பு.

**முடிநிலை:**

மணக்குடவர், பரிமேலழகர், பழைய உரையாளர் மூவரும் துறையமைப்பில் வேறுபடுகின்றனர். எனினும், எல்லாருக்கும் இக் குறள் தலைவி கூற்றே. 'ஏதிலர்' என்பதற்கு ஈண்டு பகைவர் (சத்துரு) என்னும் பொருளினும் கொலைஞர் என்னும் பொருள் சிறப்பினது. 'காதல ரில்வழி' என்பது கொண்டு படைத்தலைவ ரில்லாத செருக்களம் என்றும் செருக்களத்து ஏதிலர் என்பது கொண்டு செவ்வானத்துடன் மாலைப்பொழுது என்றும் பழைய உரை படைத்தலைவர், செவ்வானம் ஆகியவற்றை வருவித்துப் பொருத்தங் காட்டுவது நயமுடைய தாகும்.

**1225. காலைக்குச் செய்தநன் றென்கொ லெவன்கொல்யான்
மாலைக்குச் செய்த பகை.**

**பரிமே:**

['ஆற்றல் வேண்டும்' என்ற தோழிக்குச் சொல்லியது.]

காலையும் மாலையும் அவர் கூடிய ஞான்று போலாது இஞ்ஞான்று வேறுபட்டு வாராநின்றன; அவற்றுள் யான் காலைக்குச் செய்த வுபகாரம் யாது? மாலைக்குச் செய்த அபகாரம் யாது?

**மணக்:**

இது, மாலையது பண்பின்மையை உட்கொண்டு தலைமகள் கூறியது.

**முடிநிலை:**

இக் குறளுக்கு உரைவேற்றுமையில்லை. இது தலைவி கூற்றே யாயினும் துறை அமைப்புச் சூழலில் உரையாளர்கள் வேறுபடுதல் காண்க.

**1226. மாலைநோய் செய்தன் மணந்தா ரகலாத
காலை யறிந்த திலேன்.**

**பரிமே:**

[இன்று இன்னை யாகின்ற நீ அன்று அவர் பிரிவிற்குடம்பட்ட தென்னை யென்றாட்குச் சொல்லியது.]

முன்னெல்லாம் எனக்கு நட்பாய் இன்பஞ் செய்து போந்த மாலை, இன்று பகையாய்த் துன்பஞ் செய்தலை, காதலர் பிரிதற்கு முன்னே அறியப் பெற்றிலேன்.

இங்ஙனம் வேறுபடுத லறிந்திலேன்; அறிந்தே னாயின் அவர் பிரிவிற் குடம்படே னென்பதாம்.

**மணக்:**

மாலைப்பொழுது நோய் செய்தலை என்னோடு கூடினவர் பிரியாத காலத்தே அறியப் பெற்றிலேன். அறிந்தேனாயின் இது நோய் செய்யும் என்று கூறி யிருப்பேன்.

இது, மாலையால் வருத்தமுற்ற தலைமகள் தலைமகனை நினைந்து கூறியது.

## பழைய: (உ.வே.சா)

எமக்கு மாலைப்பொழுது நோய் செய்யும் என்பதனை எம்மை மணஞ்செய்த தலைவர் பிரிவதற்கு முன்னே அறிந்தேனாயின் இவ்வாறு உறுகின்ற நோய்தீரும் மருந்து யாதென்று கேட்பேன்; அறிகின்றிலேன்.

**முடிநிலை:**

பிரிவிற்கு உடம்பட்டதேன் என்று வினவிய தோழிக்குத் தலைவி கூறியதாகப் பரிமேலழகர் துறை கூறுவர். மணக்குடவர் தலைவி தன்னுட் கூறியதாகத் துறை கொள்வர். துறை வேறு பாடன்றி இக்குறட்கு உரை வேறுபாடில்லை. மாலை நோய் செய்தலை அறிந்தால் செய்வது யாது என்று தலைவி கூறுவதாக உய்த்துணர்ந்து பழையஉரை கூறியிருத்தல் காண்க. 'மணந்தார்' என்பதற்குக் காதலர், மணஞ்செய்த தலைவர், என்னும் பொருளினும் என்னோடு கூடினவர் என மணக்குடவர் கூறுவது நேர் பொருளாகும். அதற்குக் 'குருகும் உண்டுயான் மணந்த ஞான்றே' என்னும் குறுந்தொகை அடியினை ஒப்புநோக்குக.

**1227. காலை யரும்பிப் பகலெல்லாம் போதாகி**
**மாலை மலருமிந் நோய்.**

**பரிமே:**

(மாலைப் பொழுதின்கண் இனையை யாதற்குக் காரண மென்னை யென்றாட்குச் சொல்லியது.)

இக் காம நோயாகிய பூ காலைப் பொழுதின்கண் அரும்பி, பகற்பொழுதெல்லாம் பேரரும்பாய் முதிர்ந்து, மாலைப் பொழுதின் கண் மலராநிற்கும்.

**பரிப்:**

மாலையால் வருத்தம் உற்ற தலைமகள் வேறுபாடுகண்டு, 'விடியலும் நண்பகலும் ஆற்றி இப்பொழுது வேறுபட்டாய்; இதற்குக் காரணம் என்' என்ற தோழிக்குத் தலைமகள் காரணம் கூறியது.

**முடிநிலை:**

இக்குறளுக்குப் பரிமேலழகர் கொண்ட துறைக்கு விளக்கம் போல் பரிப்பெருமாள் கொண்ட துறை அமைந்துள்ளது.

**1228. அழல்போலு மாலைக்குத் தூதாகி யாயன்**
**குழல்போலுங் கொல்லும் படை.**

**பரிமே:**

['மாலைப் பொழுதின்கண் இனையை யாதற்குக் காரணம் என்னை' என்றாட்குச் சொல்லியது.]

முன்னெல்லாம் இனியதாய்ப் போந்த ஆயன்குழல், இது பொழுது அழல்போலச் சுடுவதாய மாலைக்குத் தூதுமாய் அது வந்தென்னைக் கொல்வுழிக் கொல்லும் படையுமாயிற்று.

பின்னின்ற 'போலும்' என்பது உரையசை. முன்னரே வரவுணர்த்தலின் தூதாயிற்று. கோறற் கருவியாகலின் படையா யிற்று. தானே சுடவல்ல மாலை இத்துணையும் பெற்றால் என் செய்யாது என்பதாம்.

**பரிப்:**

அவர் பிரிவதன்முன் இன்பம் நுகர்தற்குக் காலம் பார்த்து இருந்துழி, மாலை வருகின்றது என்று தூதாய் வருதலின், 'தூது' என்றாள். அழல்போலும் மாலை என்றது பிரிந்த காலத்துக் கொடுமை செய்தலான் அதற்குக் குணமாகக் கூறினாள். இது மாலையொடு வந்த குழலும் கொடிது என்று கூறியது.

**பரிதீ:**

தீப்போல வரும் மாலைப் பொழுதிற்கும் அதன் படை வருவதற்கும் தூது ஆயரின் குழல்; அது வந்து கொல்லும்.

**காலிங்:**

இனி இவ்விடத்து வரப் புகுகின்ற வடவைத்தீப் போலும் மாலைப் பொழுதுக்குத் தூதாகி வந்து நம்மைக் கொல்லும் கருவியானது அம்மாலை தன்வரவு அறிந்தும் சூழாதுவரும் ஆயன் விளிக்கும் குழற்கருவி போலும்; எனவே, இனி அக்குழல்விளி கேட்பினும் ஆற்ற மாட்டேன்; அதனால் அம் மாலைப் பொழுது வரின், என்செய்வல் என்று இங்ஙனம் கூறினாள் தலைமகள்.

**பழைய உரை:**

அழல்போன்ற மாலைக்குத் தூதாகி ஆயர்குழல் போல உருப் பெற்றிருக்கும் பிரிந்தாரைக் கொல்ல வேணும் என்ற ஐம்படை.

**கா.சு.பிள்ளை:**

தீப்போலச் சுடுகின்ற மாலைப் பொழுதிற்கு இடையன் குழலானது தூதாக வந்து, பின் கொல்லும் ஆயுதம் போலவும் இருக்கின்றது.

**தேவ:**

இனி, ஆயன் குழல்போலுங் கொல்லும்படை மாலைக்குத் தூதாகி அழல்போலும் என்றுமாம்.

**முடிநிலை:**

பரிதி மாலைக்கும் அதன் படைக்கும் எனமூலச்சொற்களைக் கொண்டு கூட்டுவதும் அவற்றிற்குத் தூது ஆயன் குழல் என உரைப்பதும் பொருத்தமில்லை. பழைய உரை கொல்லும்படை குழல் போன்ற வடிவு பெற்றிருக்கிறது என உரைப்பது ஓரளவு காளிங்கர் கருத்துப் போன்றுள்ளது. அஃது ஒக்குமேனும் அப்படையை மன்மதனது ஐம்படையாகக் கொள்வதும் அது தூதாக வந்ததெனக் கோடலும் சிறப்பில. காளிங்கர் அழல்-வடவைத்தீ என்று உரை செய்வதும் மாலைப்பொழுது வரின் என் செய்வல் எனத் தலைவி பெரிதும் கவல்வதாக விளக்குவதும் 'பொழுது கண்டிரங்கல்' என்ற அதிகாரத்துக்கு மிகப் பொருத்தமாகும். காளிங்கர் உரைக்கு அழல் போலும் மாலைக்குத் தூதாகி, கொல்லும் படை ஆயன் குழல் போலும் என மாற்றிக் கூட்ட வேண்டும். இக்குறட் கருத்து மாலைப் பொழுதும் ஆயன் குழலும் தலைவியை வருத்துகின்றன என்பது. அதற் கேற்ப மாலை அழல் போலும் குழல் கொல்லும் படை போலும் எனக் கருத்துக் கொள்வதே இயல்பாகும். அக் கருத்துக் கேற்ப அழல் போலும் மாலைக்கு ஆயன் குழல் தூதாகிக் கொல்லும் படைபோலும் எனக் கொண்டு கூட்டி உரைத்த கா. சு. பிள்ளை உரை தகும். பரிமேலழகர் இங்ஙனம் கருத்துக் கொள்ளினும் 'போலும்' என்பதனை உரையசை என்பர். அதனினும் முற்றாகக் கொண்டெழுதிய உரைசிறக்கும். ஆயன்குழல் போலும் கொல்லும் படை மாலைக்குத் தூதாகி அழல் போலும் எனப் பாவாணர் சுட்டியது போலக் கொண்டு கூட்டின், மாலைப் பொழுதின் கொடுமை புலப்படுத்தியதாகாது. கிடந்தாங்கே அழல்போலும் மாலை எனக் கொண்டுரைத்தல் இயல்பாதலோடு மாலைப் பொழுதின் கொடுமை புலப்படுத்தியதும் ஆகும்.

**1229. பதிமருண்டு பைதல் உழக்கும் மதிமருண்டு
மாலை படர்தரும் போழ்து.**

**பரிமே:**

[மாலைப் பொழுதின்கண் இனையை யாதற்குக் காரணம் என்னை என்றாட்குச் சொல்லியது.]

இதற்கு முன்னெல்லாம் யானே மயங்கி நோயுழந்தேன்;இனிக் கண்டாரும் மதிமருளும் வகை மாலை வரும் பொழுது, இப்பதியெல்லாம் மயங்கி நோயுழக்கும்.

'மதிமருள' என்பது 'மதிமருண்டு' எனத் திரிந்து நின்றது. மாலை மயங்கி வரும் போழ்து என்மதி நிலைகலங்கி நோயுழக்கும் என்று உரைப்பாரு முளர்.

**பரிப்:**

மதி என்பதனை முன்னே கூட்டுக. மதி–மனம். அறிவில்லாதாரைப் போல மயங்குதல் தக்கது அன்று; நமக்கு ஆற்றியிருத்தல் கடன் என்ற தோழிக்குத் தன் குறிப்பின்றியும் இம் மாலையைக் கண்ட பொழுதே என் மனம் மயங்கும் என்று தலைமகள் கூறியது.

**காளிங்:**

தோழி! பெரும்பகல் எல்லாம் வருந்தி ஆற்றிய என்மனமானது வெண்மையும் கருமையும் வேற்றுமை செய்யும் பகலும் இரவும் போல் அன்றி நிறம் மயங்கு உருபிற்றாய மாலையானது, இன்னணம் வந்து ஆர்க்கும் நேரத்துத் தன் பதியினுள் தணிந்து நில்லாது; தடுமாறிச் சாலத் துயருழக்கும் என் நெஞ்சானது; மற்று அதனை அறியாது நீ ஆற்றுகில்லை என்று என்னை இடித்துச் சொல்லுவது என்னை? என்பது பொருள்.

**சி.இலக்:**

திங்களானது மயங்கி மாலைப் பொழுதில், செல்லும் பொழுது, நகரைக்கண்டு உளங்கலங்கி துன்பத்தால் வருந்துவாள் தலைவி.

திங்கள் (சந்திரன்) ஞாயிறு போன்று காலையில் தோன்ற வேண்டும். அறிவு மயங்கி மாலையில் வந்து விட்டதாகக் கருதுகின்றாள் தலைவி. அம்மதி வந்ததும் மாலைப் பொழுதில் நகர் முழுவதும் இனிய காட்சிகள் விளங்குகின்றன. காதலர்கள் தத்தம் துணையுடன் ஆடிப் பாடிப் பொழுது போக்குகின்றனர். இக் காட்சிகள் தலைவிக்குத் தலைவன் நினைப்பை மிகுதிப் படுத்துகின்றன. இதனால் தலைவி வருந்துகின்றாள்.

**வெ. இராம:**

மாலை நேரத்தை நினைக்கும் போதே என் அறிவு கலங்கி இடம் தடுமாறும்படித் துன்பம் உண்டாகிறது.

படர்தல்-நினைத்தல்; மதிமருண்டு-இடம் தடுமாறி.

**வரத:**

என் அறிவை மயக்கித் துன்பம் செய்யும் மாலைப் பொழுது வரும்போது, என் பதியாகிய தலைவனும் மருண்டு துன்பம் அடையத்தான் நேரிடும் என்று தன்னைப் போல் தலைவனும் துன்பப்படுவான் என்பதை எண்ணித் தலைவி கூற்றாகவும் உரைக்கலாம்.

**முடிநிலை:**

பரிமேலழகர், பரிப்பெருமாள், காளிங்கர் ஆகிய மூவரும் துறையமைப்பில் வேறுபடுதல் நோக்குக. 'பதிமருண்டு' என்பதில் வரும் பதிக்குத் தலைவன் எனக் கூறும் வரதராசனார் பொருள் பிற்கால வழக்காதலின் பொருந்தாது. 'மதிமருண்டு' என்னும் தன்வினைச் சொல்லுக்கு 'அறிவை மயக்கி' என அவர் பிறவினையாகப் பொருள் கூறலும் சாலாது. இராமலிங்கம் பிள்ளை மதி மருண்டு, பதிமருண்டு எனக் கொண்டு கூட்டுவதும் பைதலுழக்கும் என்பதற்குத் துன்பமுண்டாகும் எனப் பொருள் கொள்வதும் ஏற்புடைய வல்ல. 'மதி' என்பதற்கு மனம், அறிவு, திங்கள் எனப் பொருள் கண்டு உரை வரைந்துள்ளனர். அவற்றுள் இங்கு அறிவு எனக் கொண்ட உரைகள் சிறக்கும். இலக்குவனார் இக்குறளில் 'பைதலுழக்கும்' என்பதற்கு எழுவாயாகப் பதியைக் கொள்ளாது பதியைக் கண்டு தலைவி பைதலுழக்கும் எனத் தலைவியை எழுவாயாக்கி உரை கூறுவர். பதிமருண்டு பைதல் உழக்கும் என்னும் தொடரை நோக்குங்கால் அவர் கொண்ட பொருள் வலிந்துரையாகத் தோன்றுகிறது. 'மதிமருள' என்பது மதிமருண்டு எனத் திரிந்து நின்றது என்பர் பரிமேலழகர், அங்ஙனம் கொள்வதினும் அவர்காட்டும் இரண்டாம் உரையில் உள்ளது போல் மாலை மருண்டு படர்தரும் போழ்து எனக்கூட்டிப்

பொருள் கொள்வது பொருத்தமேயாம். இவ்வுரை யாருடையது என்பது புலப்படவில்லை. அவ்வுரைக்கு மதி பதிமருண்டு பைதலுழக்கும் என்று கூட்டுக. பதிமருளல்-நிலைகலங்கல் பதி-நிலை என்னும் பொருளதாதலைப் 'பதியிற் கலங்கிய மீன்' என்ற குறளால் அறியலாம்.

**1230. பொருண்மாலை யாளரை யுள்ளி மருண்மாலை**
**மாயுமென் மாயா வுயிர்.**

**பரிமே:**

[மாலைப் பொழுதின்கண் இனையை யாதற்குக் காரணம் என்னை என்றாட்குச் சொல்லியது.]

காதலர் பிரிவைப் பொறுத்து இறந்து படாதிருந்த என்னுயிர் இன்று பொருளியல்பே தமக்கியல்பாக உடையவரை நினைந்து இம்மயங்கு மாலைக் கண்ணே இறந்துபடாநின்றது.

**மணக்:**

இது மாலையா லடர்ப்புண்ட தலைமகள் தலைமகன் அன்பும் அறனுமிலன் என்று நினைத்துத் தன்னுள்ளே சொல்லியது.

**பரிதி:**

பொன்மேலே ஆசை வைத்த நாயகரை நினைந்து நமக்கு மயக்கம் செய்யப்பட்ட மாலை என்னும் பெண் மாயமாவது கண்டிருந்தும் என் உயிர் மாய்ந்தது இல்லை.

**முடிநிலை:**

தோழிக்குத் தலைவி கூறியதாக இக்குறளுக்குப் பரிமேலழகர் துறைகொள்வர். ஆனால் தலைவி தனக்குத் தானே கூறிக் கொள்வதாக மணக்குடவர் கொண்டுள்ளார். பரிதி உரையை நோக்கின், 'மாயமென்' எனப் பாடங் கொண்டிருப்பரோ எனத் தோன்றுகிறது. 'மாயா' என்பதனை அவர் முற்றாகக் கொண்டு உரை எழுதியுள்ளார். அவ்வுரையும் அவர் கொண்டதாகக் கருதப் பெறும் பாடமும் சிறப்பில. 'மருண்மாலை' என்பதற்கு

மயங்கும் மாலை என்று பரிமேலழகரும் பிறர்க்கு மயக்கந் தரும் மாலை என்று பரிதியும் வேறுபாடு தோன்றப் பொருள் கூறியுள்ளனர். மயங்கும் மாலை என்பதற்கு இரவும் பகலும் மயங்குதற்குரிய மாலைப் பொழுது என்பது பொருள்.

# 124. உறுப்புநலனழிதல்

அஃதாவது தலைமகள் தன் கண்ணும், தோளும், நுதலும் முதலாய அவயவங்கள் தம் அழகு அழிதல். இஃது, இரக்க மிக்குழி நிகழ்வ தாகலின், பொழுது கண்டிரங்கலின் பின் வைக்கப்பட்டது என அதிகார விளக்கமும் முறைவைப்பும் கூறுவர் பரிமேலழகர்.

உறுப்பு நல னழிதலாவது, தலைமகளது உறுப்புக்கள் நலனழிந்தமை கூறுதல். காதன்மிக்கு இரங்குவார் அக்காதலை அயலார் அறியாமல் அடக்கின காலத்து வெம்மையுற்ற கொடி போல அனைத்து உறுப்பும் வாடுதலான், இது பொழுது கண்டிரங்கலின் பின் கூறப்பட்டது என விளக்கந் தருவர் மணக்குடவர்.

பிரிவினால் தலைவியின் அங்கங்கள் அழகு கெடுவதுடன் தாம் பெறும் இன்பமும் அடையாதது உறுப்புநலன் அழிதலாம் என்பர் வரதராசனார்.

**1231. சிறுமை நமக்கொழியச் சேட்சென்றா ருள்ளி**
**நறுமலர் நாணின கண்.**

**பரிமே:**

(ஆற்றாமை மிகுதியான் வேறுபட்ட தலைமகட்குத் தோழி சொல்லியது).

இவ்வாற்றாமை நங்கண்ணே நிற்பத் தாஞ் சேணிடைச் சென்ற காதலரை நீ நினைந்தழுதலாங், நின் கண்கள் ஒளி யிழந்து முன் தமக்கு நாணிய நறுமலர்கட்கு இன்று தாம் நாணிவிட்டன,

**மணக்:**

நமக்குத் துன்பம் ஒழிய வேண்டி, நெடுநெறிக்கட் சென்றாரை நினைத்து, கண்கள் நறுவிய பூக்களைக் கண்டு நாணாநின்றன.

பலகால் அழுதலால் நிறங்கெட்டது என்றவாறாயிற்று.

**பரிப்:**

வரைந்து கோடற்குப் பொருள் தேடி வருகின்றேன் என்று பிரிந்த தலைமகனை நினைந்து, ஆற்றாளாய்த் தலைமகள் தனது கண் பொலிவழிந்தது என்று கூறியது.

**பரிதி:**

சிறுமை தீரத் தக்க காத தூரம் பொருள்மேற் பிரிந்து போன நாயகரை நினைத்து மாறாத கண் நீர் பொழிகையினாலே கண்ணைச் செங்கழுநீர் வென்றது.

**காளிங்:**

'நறுமலர் நாணின கண்' என்பதற்கு நறுவிய குவளைச் செவ்விய மலரினை நின் கண்ணிணை தாம் பெரிதும் நாணிற்று என்பர். தோழி தலைவியிடம் இயற்பழித்துக் கூறியது.

**ந.சி.க:**

இப் பொறுக்க முடியாத வறுமை நம்மை விட்டு நீங்கும்படி நெடுந்தூரத்திலே சென்ற தலைவரை நினைத்து, கண்கள் முன்பு தமக்கு நாணின நல்ல மலர்களுக்கு இன்று வெட்கப்பட்டு விட்டன.

**முடிநிலை:**

கற்பின்கண் தோழி கூற்றாகப் பரிமேலழகரும் களவின்கண் தலைவி கூற்றாகப் பரிப்பெருமாளும் தோழி இயற்பழித்தலாகக் காளிங்கரும் துறைகொள்வர். இக்குறளைக் கற்புக்குரிய கூற்றாகக் கொள்ளல் சிறப்பினது. 'சிறுமை' என்பதற்கு

ஆற்றாமை, துன்பம், வறுமை எனவும் 'ஒழிய' என்பதற்கு நிற்ப, நீங்க எனவும் பொருள் கூறியுள்ளனர். அவற்றுள் 'சிறுமை, என்பதற்குத் துன்பம் என்னும் பொருளும் 'ஒழிய' என்பதற்கு நிற்ப என்னும் பொருளும் தகும். 'சிறுமை பல செய்து சீரழிக்கும் சூதின்' (934) என்புழிச் சிறுமை-துன்பமாதல் காண்க. 'நறுமலர்' எனப் பொதுவாகக் கூறியிருப்பினும் கண்ணுக்கேற்ற, குவளையைக் குறிப்பிட்டுக் காளிங்கரும், செங்கழுநீரைக் குறிப்பிட்டுப் பரிதியும் எழுதியது பொருத்தமாகும்.

**1232. நயந்தவர் நல்காமை சொல்லுவ போலும்**
**பசந்து பனிவாருங் கண்.**

**பரிமே:**

[ஆற்றாமை மிகுதியான் வேறுபட்ட தலைமகட்குத் தோழி சொல்லியது.]

பசப்பெய்தன் மேல் நீர் வார்க்கின்ற நின்கண்கள் நம்மால் நயக்கப் பட்டவரது நல்காமையைப் பிறர்க்குச் சொல்லுவ போலா நின்றன; இனி நீயாற்றல் வேண்டும்.

'நயந்தவர்க்கு' என்று பாடமோதுவாரு முளர்.

**மணக்:**

இது தலைமகள் ஆற்றாமைகண்டு இக்கண்ணீர் அலராகா நின்றது என்று அவள் ஆற்றுதற் பொருட்டுத் தோழி கூறியது.

**காளிங்:**

தோழி! நம்வயின் நயம்பெரிது உடையவரை நல்காமை படைத்துச் சொல்லுவன போலும்; இங்ஙனம் பசந்து பண்டை நலனழிந்து கலுழ்ந்து நீர்சோரும் என்கண்; எனவே, அவரைத் தான் இயற்பட மொழிந்தமை பொருளாயிற்று.

**பழைய: (உ.வே.சா)**

நின் உடம்பு பசலை பூப்ப அதன்மேல் நீர் பரக்கின்ற நின்கண்கள் நம்மேல் நயக்கப்பட்டவர் நமக்குத் தலையளி செய்யாமையை அவருக்குச் சொல்வ போலும்.

'நயந்தவர்க்கு' என்பது இவர் பாடம்.

**முடிநிலை:**

பரிமேலழகரும் மணக்குடவரும் கைகோளானும் துறையானும் வேறுபடுதல் நோக்குக. முற்குறளைத் தோழி இயற்பழித்ததாகக் கூறிய காளிங்கர் அதனோடு தொடர்புபடுத்தி இக்குறளைத் தலைவி இயற்பட மொழிந்ததாகக் கொள்வர். பரிமேலழகர் காட்டிய 'நயந்தவர்க்கு' என்ற பாடம் பழைய உரை (உ.வே.சா) யிற் காணப்படும்.

**1233. தணந்தமை சால வறிவிப்ப போலு
மணந்தநாள் வீங்கிய தோள்.**

**பரிமே:**

[ஆற்றாமை மிகுதியான் வேறுபட்ட தலைமகட்குத் தோழி சொல்லியது.]

காதலர் மணந்த ஞான்று இன்பமிகுதியாற் பூரித்த நின்தோள்கள், இன்று அவர் பிரிந்தமையை விளங்க உணர்த்துவ போல மெலியாநின்றன; இது தகாது.

**மணக்:**

பிரிவிடையாற்றாளாகிய தலைமகள் தனது தோள் வாட்டமுற்றது கண்ட தோழிக்குச் சொல்லியது.

**காளிங்:**

இதனாலும் இயற்பட மொழிந்தமை பொருளாயிற்று,

**வெ. இராம:**

தணந்தமை சால அறிவித்தல் என்பதற்குக் காதலர் எவ்வளவு காலமாகப் பிரிந்திருக்கிறார் என்பதையும் அதனால் நான் எவ்வளவு துன்பமடைந்து ஊணுறக்க மில்லாமல் இருந்து வருகிறேன் என்பதையும் முற்றிலும் தெளிவாகத் தெரிவிப்பது என விளக்கங் கூறுவர்.

**முடிநிலை:**

தோழி கூற்றாகப் பரிமேலழகரும் தலைவி கூற்றாக மணக் குடவரும் இக்குறளைக் கொண்டுள்ளனர். தலைவி கூற்றாகக் கொள்ளுதல் மிகப் பொருத்த முடைத்து. காளிங்கர் இதனை முற்குறள் போல இயற்பட மொழிந்ததாகக் கூறுவர். இராமலிங்கம்பிள்ளையின் விளக்கம் தெளிவுபயக்கும்.

**1234. பணைநீங்கிப் பைந்தொடி சோருந் துணைநீங்கித்
தொல்கவின் வாடிய தோள்.**

**பரிமே:**

(ஆற்றாமை மிகுதியான் வேறுபட்ட தலைமகட்குத் தோழி சொல்லியது.)

அன்றுந் தந்துணைவர் நீங்குதலால் அவராற் பெற்ற செயற்கை யழகேயன்றிப் பழைய இயற்கையழகு மிழந்த இத் தோள்கள் இன்றதற்கு மேலே தம் பெருமை யிழந்து வளை கழலாநின்றன; இவை இங்ஙனஞ் செயற்பாலவல்ல.

பெருமை யிழத்தல் - மெலிதல்.

**மணக்:**

தோள் அழகு அழிதலே யன்றி மெலிவதும் செய்யா நின்றது என்று தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

'பணை நீங்க' 'துணை நீங்க' என்று பாடங்கொள்வர்.

**பரிதி:**

பச்சை மூங்கில் போன்ற அழகும் இழந்து வளையும் நீங்கும், துணைவராகிய காதலர் பிரிய அழகு வற்றியதோள்,

**காளிங்:**

பண்டுபோல். இணை யொத்து நில்லாது இன்று பசும் பணையானது வேறுபட்டு நிற்ப, மற்று இப் பசும்பொற்றொடிகளும் நட்பு ஒழிந்து நழுவுகின்றன; என் காதல் துணை சிறிது கையகல இதனைத் தூற்றுவேம் அல்லம் என்னாது தொல்லைக் கவின் வாடிய தோள்களானவை; எனவே, இது செய்யத் தாமும் தமக்கு அடுத்த வினையும் திருவும் இழந்தமை கண்டு இன்புற்றாள்.

'பணை நீங்க' 'துணை நீங்க' என்பன இவர் பாடம்.

**முடிநிலை:**

முன் குறள் போலவே இதனையும் பரிமேலழகர் தோழி கூற்றாகவும் மணக்குடவர் தலைவி கூற்றாகவும் கொண்டுள்ளனர். தலைவன் பிரிந்தமையை வாட்ட முற்றுப் பிறர்க்கு அறிவித்த தோள்கள் மூங்கிலுக்கு ஒப்பாந் தன்மை யிழந்ததும் தொடி கழன்றதும் கண்டாள் தலைவி; என் துயரைப் பிறர்க்கறிவித்த தோள்களுக்கு இவை வேண்டியனவே என்று தலைவி மகிழ்கின்றாள். தனக்குத் துன்பம் செய்த தோள் துன்பப்படுவது அவள் மகிழ்வுக்குக் காரணமாகும். இவ்விளக்கந் தோன்றக் காளிங்கர் எழுதுவது வலிந்துரையாகும், 'ஓஒ இனிதே எமக்கிந்நோய் செய்தகண் தாஅம் இதற்பட்டது' (1176) என்னும் குறளை அவர் உரைக்கு ஒப்பு நோக்குக. பரிதி 'பணை' என்பதற்கு மூங்கில் எனக்கொண்டு உவமைபடப் பொருளெழுதியிருத்தல் சிறப்பில்லை. பணை-பணைத்தல்-பருத்தல்; பணை நீங்கி-மெலிந்து எனக் கொள்ளுதல் ஒக்கும்.

**1235. கொடியார் கொடுமை யுரைக்குந் தொடியொடு**
**தொல்கவின் வாடிய தோள்.**

**பரிமே:**

[ஆற்றாமை மிகுதியான் வேறுபட்ட தலைமகட்குத் தோழி சொல்லியது.]

கவவுக்கை நெகிழினும் ஆற்றாதாட்கு இக்கால நீட்டத்து என்னாமென்று நினையாத கொடியாரது கொடுமையைத் தாமே சொல்லா நின்றன. வளைகளுங் கழன்று பழைய வியற்கையழகு மிழந்த இத்தோள்கள்; இனியதனை யாம் மறைக்குமா றென்னை?

**பரிப்:**

தலைமகள் கூறிய சொற்கேட்டு, 'யான் முன்பே தோள்கண்டு அறிந்தேன் அவர் கொடியராதலை, என்று தலைமகள் ஆற்றுதற் பொருட்டுத் தலைமகனை இயற்பழித்துத் தோழி கூறியது.

**காளிங்:**

தோழியை நோக்கித் தலைவி கூறுவதாக உரை எழுதுவர்.

**வெ.இராம:**

பழைய செழுமையில் குறைந்து போன கைகள் தளர்ந்து போன இந்த வளையல்களோடு இருந்தால் தான், கொடியவராகிய என் காதலருக்கு அவர் செய்துவிட்ட கொடுமையைச் சொல்லும்.

கவின்–பண்புகள்; தொடியொடு–வளையலோடு இருந்தால் தான்.

**முடிநிலை:**

பரிமேலழகரும் பரிப்பெருமாளும் தோழி கூற்றாகக் கொள்ளக் காளிங்கர் தலைவி கூற்றாகக் கொள்வர். தலைவி கூற்றாகக் கொள்ளுதல் சிறப்பினது. இராமலிங்கம் பிள்ளை 'கொடியார் கொடுமை' என்புழி நான்கனுருபு விரிப்பதும் 'தொடியொடு' என்பதற்கு வளையலோடு இருந்தால் தான் என வருவித் துரைப்பதும் ஏற்கத்தக்கன அல்ல.

**1236. தொடியொடு தோணெகிழ நோவ லவரைக்**
**கொடிய ரெனக்கூற னொந்து.**

**பரிமே:**

(தானாற்றுதற் பொருட்டு இயற்பழித்த தோழிக்குத் தலைமகள் சொல்லியது.)

யானாற்றவும் என்வயத்த வன்றித் தொடிகள் கழலுமாறு தோள்கள் மெலிய, அவற்றைக் கண்டு நீ யவரைக் கொடியரெனக் கூறுதலைப் பொறாது யானென்னுள்ளே நோவாநின்றேன்.

**மணக்:**

இஃது ஆற்றாள் எனக் கவன்ற தோழிக்கு ஆற்றுவல் என்பது படத் தலைமகள் சொல்லியது.

**பரிதி:**

தொடியொடு தோள்வாட நோவோம்; நாயகர் விட்டுப் பிரிந்தால் கொடியர் இவர் என்று சொல்லுதற்கு.

'நோவேம் இவர்தாம்' என்பது இவர் பாடம்.

**காளிங்:**

தோழி! இங்ஙனம் தொடியுடனே தோளும் கூட நெகிழ அதற்கு யான் உடம்பட்டிருப்பது என் எனின், என்மாட்டு அன்புடையவரைக் கொடியர் என்று இவை பிறர்க்கு உரைத்தலை உள்ளுள்ளே பெரிதும் நொந்து.

'நேர்வல்' என்பது இவர்பாடம்.

**வெ: இராம:**

என் காதலரை நான் கொடியவர் என்று சொல்லி விட்டதற்கு வருத்தப்படுகிற என்மனம் என்னுடைய கைகள் வளையல்கள் கழன்று விடும்படி மெலிந்துவிட்டதற்கு வருத்தப்பட வில்லையே

நோவல்–நோகவில்லை.

**ந.சி.க:**

வளைகள் கழலும்படி தோள்கள் வாட அதனை நீ பார்த்து அவரைக் கொடியவரென்று நீ சொல்லாதே; நீ இவ்வாறு சொன்னதைக் கேட்டுப் பொறாமல் வருந்துகின்றேன்.

**மு.ரா.க:**

பிரிவாற்றி யிருக்கவும் வளை கழல்வதுடன் என் தோள்கள் மெலிவதற்கே யான் நோகின்றேன். அதற்காக நீ அத்தலைவரை நொந்துகொண்டு அவர் கொடுமையுடையவர் என்று கூறாதே.

**முடிநிலை:**

இக்குறட்குப் பெரிதும் துறைவேறுபாடில்லை. 'நோவேம் இவர்த்தாம்' என்று பரிதியும் 'நேர்வல்' என்று காளிங்கரும் பாடங் கொண்டமையால் பொருள் சிறிது வேறுபடுகின்றது. 'நேர்வல்' என்னும் பாடம் பொருட் சிறப்பிலது. 'நோவல்' என்பதற்கு நோகவில்லை என்னும் இராமலிங்கம் பிள்ளை உரை பொருந்தாது. தொடியொடு தோள்நெகிழ அவரைக் கொடியரெனக் கூறல் எனக் கொண்டு கூட்டியும் நொந்து நோவல் எனக் கொண்டு கூட்டியும் எழுதும் பரிமேலழகர், ந.சி.க. உரைகள் சிறப்பில. தொடியொடு தோள் நெகிழ நோவல் (நோகின்றேன்); அவ்வரைநொந்து கொடியரெனக் கூறல் (கூறாதே) எனப் பெரிதும் கிடந்தாங்கே வைத்துப் பொருள் கூறிய மு.ரா. கந்தசாமிப்பிள்ளை உரை சிறப்புடையது;

**1237. பாடு பெறுதியோ நெஞ்சே கொடியார்க்கென்**
**வாடுதோட் பூச லுரைத்து.**

(அவ் வியற்பழிப்புப் பொறாது தன்னெஞ்சிற்குச் சொல்லியது).

**பரிமே:**

நெஞ்சே! இவள் கொடியார் என்கின்றவர்க்கு நீ சென்று என் மெலிகின்ற தோளினால் விளைகின்ற ஆரவாரத்தைச் சொல்லி, ஒரு மேம்பாடெய்த வல்லையோ? வல்லை யாயின் அதனை யொப்பதில்லை.

பூசல்-ஆகுபெயர்; அஃது அவள் தோள்நோக்கி இயற்பழித்தன்மேலும் அதனால் தனக்கு ஆற்றாமை மிகன்மேலும் நின்றது.

**மணக்:**

நெஞ்சே! இக்கொடுமை செய்தவர்க்கு எனது தோள் வாடுதலானே ஊரில் எழுந்த அலரைச் சென்று சொல்லி, நீயும் நினது வாட்டம் நீங்கி அழகு பெறுவாயோ!

இது நீ அவர்பாற் போகல் வேண்டும் என்று நெஞ்சிற்குத் தலைமகள் சொல்லியது.

**வெ.இராம:**

நெஞ்சே! கொடியவராகிய காதலர்க்கு என் மெலிந்துபோன கைகளிலிருந்து எழுகின்ற ஓசையைச் சொல்லி அவரை வரச் செய்து பெருமை யடைவாயா?

வாடுதோள் பூசல்- மெலிந்துவிட்ட கைகளிலுள்ள வளையல்கள் ஒன்றோடொன்று மோதி எழுகின்ற ஓசை.

**முடிநிலை:**

தோழி இயற்பழித்தாள் எனத் தாம் கொண்ட துறைக் கேற்பக் 'கொடியார்க்கு' என்னும் சொற்குத் தோழி கொடியர் என்று சொல்லுகிற தலைவர்க்கு எனப் பரிமேலழகர் பொருள் எழுது வாராயினார். அச்சொற்கு அப்பொருள் வலிந்து கோடலாகும். 'வாடுதோட் பூசல்' என்பது தோள்வாட்டங் கண்டு தோழி இயற்பழித்தலைக் குறிக்கும் என்று பரிமேலழகர் கொள்ளுதலினும் ஊரார் அலரைக் குறிக்கும் என்று கொண்ட மணக்குடவர் பொருளும் அவர் கொண்ட துறையும் பொருந்துவன. மெலிந்த கைவளையல்களின் ஆரவாரம் என்னும் இராமலிங்கம் பிள்ளையின் உரை 'வாடுதோட்பூசல்' என்னும் தொடர்க்கு இயல்பாகப் பொருந்த வில்லை.

**1238.** முயங்கிய கைகளை யூக்கப் பசந்தது
பைந்தொடிப் பேதை நுதல்.

**பரிமே:**

(வினைமுடித்து மீடலுற்ற தலைமகன் முன்னிகழ்ந்தது நினைந்து தன்னுள்ளே சொல்லியது).

தன்னை யிறுக முயங்கிய கைகளை இவட்கு நோமென்று கருதி ஒரு ஞான்று யானெகிழ்த்தேனாக, அத்துணையும் பொறாது பைந்தொடிகளை யணிந்த பேதையது நுதல் பசந்தது; அப்பெற்றித்தாய நுதல் இப்பிரிவிற்கு யாது செய்யுமோ!

இனிக் கடிதிற் செல்ல வேண்டு மென்பது கருத்து.

**மணக்:**

யான் பிரிவதாக நினைத்து, அவள் முயங்கிய கைகளை நீக்கினேனாக, அதனை அறிந்து பசுத்த தொடியினையுடைய பேதை நுதல் பசந்தது.

**காளிங்:**

நெஞ்சே! அவர் இவளைப் பிரிவதன் முன்னமே தமது அன்பினான் அருளி முயங்குமிடத்து அதற்கு எதிர்முயங்கிய கைகளைப் புலந்தார் போல் நயந்து ஊக்கினராகப் பசந்தது, இப்பைந்தொடிப் பேதையாளது நுதல்; எனவே, இன்று இவள் ஆற்றாமல் தளர்தற்குச் சொல்லவேண்டுமோ என்று இவள் தான் ஆற்றாளாயினள் என்று தோழி தன் நெஞ்சிற்குச் சொல்லுவாள்.

**வரத:**

தழுவிய காலத்துக் கைகள் இன்பம் பெறுவதைக் கண்ட வளையலை யணிந்த பெண்ணின் நெற்றியானது, தான் இன்பம் பெறவில்லை யென்று வேதனை யடைந்து சோர்வுற்றது.

**முடிநிலை:**

பரிமேலழகரும் காளிங்கரும் கொண்ட துறைகள் பெரிதும் வேறுபாடுடையன. பிரிவுணர்ச்சியே பசப்புக்குக் காரணமாக யாண்டும் பேசப்படும். 'கொண்கன் முயக்கற்றம் பார்க்கும் பசப்பு' (1186) 'புல்லிக் கிடந்தேன் புடை பெயர்ந்தேன் அவ்வளவில் அள்ளிக்கொள் வற்றே பசப்பு' [1187) எனவரும் குறள்கள் சான்றாகும். அவ்வாறின்றிக் கைகள் எய்திய புணர்ச்சியின்பம் தனக்கு எய்தவில்லையே என நுதல் சோர் வுற்றதாக வரதராசனார் உரைப்பது ஈண்டுப் பொருத்தமாகாது. அவர் கைகளை என இரண்டாம் வேற்றுமை உருபேற்ற சொல்லை ஊக்க என்பதற்கு வினைமுதலாகக் கொள்வதும் ஊக்க என்பதற்கு இன்பம் பெற எனப் பொருள் காண்பதும் பொருந்தா.

**1239. முயக்கிடைத் தண்வளி போழப் பசப்புற்ற
பேதை பெருமழைக் கண்.**

**பரிமே:**

[வினை முடித்து மீடலுற்ற தலைமகன் முன் நிகழ்ந்தது நினைந்து தன்னுள்ளே சொல்லியது.]

அங்ஙனம் கைகளை யூக்குதலான் அம் முயக்கிடையே சிறுகாற்று நுழைந்ததாக, அத்துணை யிடையீடும் பொறாது பேதையுடைய பெரிய மழைக்கண் பசப்புற்றன; அத்தன்மைய வான கண்கள் மலைகளும், காடும், நாடுமாய இவ்விடை யீடுகளை யெல்லாம் யாங்ஙனம் பொறுத்தன.

தண்மை ஈண்டு மென்மைமேல் நின்றது.

**பரிதி:**

முயங்கிய விடத்துத் தென்றல் ஊரப் பசலையாச்சு,கண்ணும் மழைபொழிந்தது நாயகிக்கு.

**காளிங்:**

தோழி! அவர் என்றும் எமக்கு இனியர் ஆகலின் தாம் என்னை இறுக முயங்கிய முயக்கத்திடையே இடம் பார்த்துத் தண் என்றதோர் சிறு தென்றற் கொழுந்து ஊடு போகப் பசப்புற்றன; எனது அழுது ஒழியாக் கண் ஏதும் அறியாது வெறும் பேதை; எனவே அவரும் அன்புடையார்; யானும் ஆற்றுவல்; இவை அன்றும் இன்றும் தமது அறியாமையின் பசந்து அழும்.

'போழ்ப்ப' என்பது இவர்பாடம்.

**வெ. இராம:**

'மழைக்கண்கள்' என்று பெண்களின் கண்களைக் குறிப்பது தமிழ் வழக்கு. ஏன் எனில், பெண்கள் இயல்பாகவே மிக்க இரக்க முள்ளவர்கள். சிறு துன்பத்தைக் கண்டாலும் மனமுருகி மழைபோல் கண்ணீரைக் கொட்டி விடுவார்கள். மேலும், எக்காரணத்தாலும் பெண்கள் நினைத்த உடன் மழைபோல் கண்ணீர் வடிக்க முடியும். அதனால், பெண்களின் கண்கள் 'மழைக்கண்' எனப்படும்.

**முடிநிலை:**

பரிமேலழகரும் காளிங்கரும் கூற்றானும் துறை விளக்கத் தானும் வேறுபடுதல் காண்க. குறளின் தொடர் முடிபுகளைக் கருதாது பரிதி கருத்து வாங்கி எழுதியுள்ளார். 'பேதை' என்பதற்குத் தலைவி எனப் பொருள் கொள்வர் பரிமேலழகர். அதனைப் 'பெருமழைக்கண்' என்பதற்குப் பெயர்ப் பயனிலையாகக் கொள்வர் காளிங்கர், இவர் உரைப்படி 'கண்' என்னும் எழுவாய் 'பசப்புற்ற'; 'பேதை' என்னும் இரு பயனிலைகளையும் பெறுகின்றது. இங்ஙனம் கொள்ள இலக்கணம் இடந் தருமேனும், 'பேதை பெருமழைக்கண்' என்பதை ஒரு தொகைநிலைத் தொடராகக் கொள்வதும் அத் தொடர்க்குப் பசப்புற்ற என்பதைப் பயனிலையாகக் கொள்வதும் குறள் நடைக்கு

மிகவும் இயையும். இக்குறள் நடை 'முயங்கிய கைகளை ஊக்கப் பசந்தது பைந்தொடிப் பேதைநுதல்' (1238) என்னும் முந்திய குறள் நடையை ஒத்தது என்பதும் நினையத்தகும். 'மழைக்கண்' என்பதற்கு இராமலிங்கம் பிள்ளை விளக்கம் நயமுடையது.

**1240. கண்ணின் பசப்போ பருவர லெய்தின்றே**
**யொண்ணுதல் செய்தது கண்டு.**

**பரிமே:**

(வினை முடித்து மீடலுற்ற தலைமகன் முன் நிகழ்ந்தது நினைந்து தன்னுள்ளே சொல்லியது)

தண்வளி போழ வந்த கண்ணின் பசப்புத் துன்பமுற்றது; தனக்கயலாய ஒண்ணுதல் விளைத்த பசப்பைக் கண்டு.

அது கைகளை யூக்க அவ்வளவிற் பசந்தது, யான் கைகளையும் ஊக்கி மெய்களும் நீங்கிச் சிறுகாற்று ஊடறுக்குந் துணையும் பசந்திலன் எனத் தன் வன்மையும் அதன் மென்மையும் கருதி வெள்கிற்று என்பதாம். ஆகவே, அவளுறுப்புக்கள் ஒன்றினொன்று முற்பட்டு நலனழியும், யாங் கடிதிற் சேறும் என்பது கருத்தாயிற்று.

**பரிப்:**

இவை மூன்றினானும் சொல்லியது யான் பிரிவதாக நினைத்து முயக்கத்தின்கண்ணே உடம்பை அகற்ற, அதனை அறிந்து கண் பசந்தது. அதன் பின் முயங்கிக் கொண்டு கிடந்த கைகளை விடுவிக்க நுசல் பசந்தது. அவ்வளவே அன்றி, நுதல் பசந்தபின்பு கண்ணின் பசலை போய் மற்றொன்று ஆம்படி ஆயிற்று. ஆதலான், யான் செல்லும் அளவும் ஆற்றுங் கொல்லோ என்று வினைமுற்றி மீண்ட தலைமகன் தேர்ப்பாகன் கேட்பச் சொல்லியவாறு.

**பரிதி:**

கண்ணீரும் உடம்பிற் பசலையுங் கூடி விதனம் செய்யும்; நாயகர் ஒண்ணுதலாளுக்குச் செய்த கொடுமையுடன் கூடி.

**காளிங்:**

ஆற்றாளாகிய தலைமகள் தோழிக்குக் கூறியது.

**வெ. இராம:**

ஒள்ளிய நெற்றியளாகிய அப்பெண் முன் செய்தது போல் இப்போது என்முன் கண்டு எனக்குத் துன்பமுண்டாகிறது. இது என் கண்களின் மயக்கமோ?

பசப்பு-மயக்கம், தோற்றம்.

என் காதலி நான் அவளுடன் இருக்கும் போது பிரிவினால் துன்பப் படுவதைப்போல் இப்போதும் என் கண் முன் தோன்றி என்னைத் துன்புறுத்துகிறது. இது வெறும் கண்ணின் மயக்கமோ அல்லது உண்மைதானோ என்பது கருத்து.

**வரத:**

ஒளிபொருந்திய நெற்றியை உடைய இவள், கூடின காலை கை நெகிழக் கண்பசந்த நிலையானது, இன்று பிரிந்த காலை மனக்கண்ணால் கண்டு துன்பம் உண்டாகிறது.

தழுவியகை நெகிழவும் பசந்த கண்களையுடையாளின் மென்மைஎங்கே? இவ்வளவு நாள் பிரிந்திருந்தும் வருந்தாத நான் எங்கே? என்று தலைமகன் தலைவியின் பிரிவாற்றாமைக்கு இரங்கிக் கூறியது இது. எனவே உடனே சென்று கூடிவிட வேண்டுமென்பது குறிப்பெச்சம்.

**முடிநிலை:**

தலைமகன் தனக்குள்ளே சொல்லியதெனப் பரிமேலழகரும் தலைமகன் தேர்ப்பாகன் கேட்பச் சொல்லியது எனப் பரிப்பெருமாளும் தலைமகள் தோழிக்குக் கூறியதாகக் காளிங்கரும் துறைவேறுபடுவர். பரிதி உரையை நோக்கின்,

கண்ணீர்' எனப் பாடங் கொண்டிருப்பர் போலும். தலைவனின் பிரிவிடைத் தலைவியின் கண் என்னும் உறுப்பும் நுதல் என்னும் உறுப்பும் பசந்து நலனழிந்ததைக் கூறுவதே இக்குறட்கருத்தாகலின், 'ஒண்ணுதல்' என்பதற்கு ஒண்ணுதலையுடையாள் என அன்மொழித் தொகையாகப் பரிதியார், இராமலிங்கம் பிள்ளை, வரதராசனார் ஆகியோர் பொருள் கொண்டதும் அங்ஙனம் கொண்டெழுதிய உரைக் கருத்துக்களும் பொருந்தா. இவ்வதிகார முன்னைக் குறட் கருத்துக்களைத் தழுவிப் பரிமேலழகரும் பரிப்பெருமாளும் எழுதிய விளக்கங்கள் எண்ணத் தகுவன.

# 125. நெஞ்சொடு கிளத்தல்.

அஃதாவது ஆற்றாமை மீதூரத் தனக்கோர் பற்றுக் கோடு காணாத தலைமகள் தன் நெஞ்சொடு செய்திறன் அறியாது சொல்லுதல். இஃது உறுப்புக்கள் தம் நலன் அழிந்தவழி நிகழ்வ தாகலின், உறுப்பு நலன் அழிதலின் பின் வைக்கப்பட்டது என அதிகார விளக்கமும் முறைவைப்பும் கூறுவர் பரிமேலழகர்.

நெஞ்சொடு கிளத்தலாவது, நெஞ்சு முன்னிலையாகத் தலைமகள் சொல்லுதல். காதலடக்க லாற்றாதார் பிறர்க்குச் சொல்லுதற்கு நாணித் தன் நெஞ்சிற்குச் சொல்லி ஆற்றுதலான், அதன்பின் இது கூறப்பட்டது என விளக்கந்தருவர் மணக்குடவர்.

உறுப்பும் நலனும் அழிந்த தலைவி மேலும் ஆற்றாத நெஞ்சை முன்னிலைப்படுத்தி அந்நெஞ்சிற்கு அறிவுரை கூறுதல் என உரைப்பர் வரதராசனார்.

**1241. நினைத்தொன்று சொல்லாயோ நெஞ்சே யெனைத்தொன்று**
**மெவ்வநோய் தீர்க்கு மருந்து.**

**பரிமே:**

(தன்னாற்றாமை தீருந்திற னாடியது.)

நெஞ்சே! இவ்வெவ்வ நோயினைத் தீர்க்கு மருந்தாவ தொன்றனை (யானறியு மாற்றலிலன்) எத்தன்மையது யாதொன் றாயினும் நீ யறிந்து எனக்குச் சொல்.

எவ்வம்—ஒன்றானுந் தீராமை.

**பரிதி:**

நினைத்துக் கொண்டு ஆசை தீர்க்கும் மருந்து ஒன்று சொல்லாயோ, நெஞ்சே.

**காளிங்:**

நெஞ்சே! யாதானும் ஒன்று நினைத்தலும் மறத்தலும் நினக்கும் இயல்பு அன்றே; யான் துணைவர்பின் நயந்து துன்புறும் நோயைத் தீர்க்கும் மருந்து எத்தன்மைத்தாக இயையும்? மற்று அத்தன்மையை நினைத்து ஒன்று எனக்குச் சொல்லாயோ? எனவே, சொல்லுவையாயின் உய்குவேன் என்பது பொருள்.

**முடிநிலை:**

'எனைத் தொன்றும்' என்பதனைப் பயனிலையாகக் கொண்டு எத்தன்மைத்தாக இயையும் எனக் காளிங்கர் எழுதுவது நன்றாக இல்லை. அதற்குப் பரிதி உரையில் பொருள் காணப்பெறவில்லை. 'எவ்வநோய்' என்பதற்கு ஒன்றானுந் தீராத நோய், ஆசை நோய், துன்புறும் நோய் எனச் சிறுவேறுபாடு தோன்ற உரையாசிரியர்கள் கூறுவர். எவ்வநோய்-எவ்வத்தைத் தரும் நோய் (வருத்தந் தரும் காமநோய்) என உரைப்பர் நச்சினார்க்கினியர். (கலி. 80:17)

**1242.** **காத லவரில ராகநீ நோவது**
**பேதைமை வாழியென் னெஞ்சு.**

**பரிமே:**

(தலைமகனைக் காண்டற்கண் வேட்கை மிகுதியாற் சொல்லியது.)

என்னெஞ்சே, வாழ்வாயாக; அவர் நங்கட் காதலிலராகவும் நீயவர் வரவு நோக்கி வருந்துதற் கேது, நின் பேதைமையே; பிறிதில்லை.

நம்மை நினையாமையின் நங்கட் காதலிலரென்ப தறியலாம் அஃதறியாமை மேலும் அவர்பால் செல்லக் கருதாது அவர் வரவு பார்த்து வருந்தா நின்றாய், இது நீ செய்து கொள்கின்ற தென்னுங் கருத்தாற் 'பேதைமை' யென்றாள். 'வாழி' இகழ்ச்சிக் குறிப்பு. யாமவர்பாற் சேறலே அறிவாவ தென் பதாம்.

**காளிங்:**

கேளாய் என்னுடைய நெஞ்சமே! நம்மைப் பிரிந்தார் ஒருகால் நினைந்து வந்து அருளுவதோர் காதல் என்பது ஒன்று அவர் இலார்; விருப்பாயின் இனி நீ நோவது நின் அறியாமை யல்லது பிறிதொன்றில்லை என்பது.

வாழி என்பது அசைச் சொல். 'இலராயின்' என்பது இவர் பாடம்.

**பழைய: (உ.வே.சா.)**

பேதைமை—அறியாமை. அவர் காதல் வைத்து வாரா திருக்கவும், நீ காதல் வைத்து வரவு பார்த்தல் பேதைமை என்றது.

**கா.சு.பிள்ளை:**

நெஞ்சே! நீ வாழ்வாயாக; காதல் வைப்பவர் இங்கே இல்லாதிருக்க, நீ அவரைக் கருதி வருந்துவது நின் அறியாமையே.

**முடிநிலை:**

'காத லவரில ராக' என்பதற்குச் சிறு சிறு வேறுபாடு தோன்ற உரைகள் அமைந்தன. அவர் காதல் இலராக என்று மாற்றிக்கொண்டு தன்னைத் தலைவர் நினைக்கவில்லை எனப் பரிமேலழகரும் நினைந்து வந்து அருளவில்லை எனக் காளிங் கரும் காதல் வைத்து வரவில்லை எனப் பழைய உரையும் கூறுதல் காண்க. 'காதலவர்' என்பதனை ஒரு சொல்லாகவே கொண்டு காதலர் இங்கே இல்லாதிருக்க எனக் கா.சு.பிள்ளை உரைப்பர். இப்பொருளும் ஏற்கும். அதற்குக் 'களவின்கண் கன்றிய காதலவர்' (286) 'நுண்ணியர் எங்காதலவர்' (1126) 'நெஞ்சத்தார் காதலவராக' (1128) முதலிய சொல்லாட்சி காண்க. காளிங்கர் 'இலராயின்' எனப் பாடங்கொண்டு 'இலர்' என்பதனை முற்றாக்குவர். அதன் மேலும் 'ஆயின்' என்பதற்கு விருப்பாயின் (காதலுடையராயின்) எனப் பொருளுரைப்பர். இங்ஙனம் அறுத்துப் பொருளுரைப்பதினும் 'இலராயின்' என்பதனை ஒரு தொடராகக் கொண்டுரைப்பது நன்று.

**1243. இருந்துள்ளி யென்பரித னெஞ்சே பரிந்துள்ளல்
பைதனோய் செய்தார்க ணில்.**

**பரிமே:**

(தலைமகனைக் காண்டற்கண் வேட்கை மிகுதியாற் சொல்லியது).

நெஞ்சே, அவர்பாற் செல்வதுஞ் செய்யாது ஈண்டு இறந்துபடுவதுஞ் செய்யாதிருந்து அவர் வரவு நினைந்து நீ வருந்துகின்ற தென்னை? இப் பையுணோய் செய்தார் மாட்டு நமக்கிரங்கி வரக் கருதுதல் உண்டாகாது.

நம்மாட்டு அருளுடையர் அன்மையின் தாமாக வாரார், நாம் சேறலே இனித் தகுவ தென்பதாம்.

**காளிங்:**

நெஞ்சே! நீ அவர் தம்மை எப்பொழுதும் நினைந்து இருந்து ஏதுக்கு மற்று இங்ஙனம் பரிகின்றனை? தாம் பரிந்து ஒருகால் நம்மை உள்ளுதல் இத்துயர்தரும் நோயைச் செய்தவர் மாட்டுச் சிறிதும் இல்லை என்று யான் தேறினேன்.

என் என்பினை ஈர்ந்தி என்றுமாம். 'என்பரிதி' என்பது இவர் பாடம்.

**பழைய: (உ வே.சா.)**

'பரிந்துள்ளி' எனப் பாடங்கொண்டு, பரிந்து-நினைத்து வருதல் எனப் பொருள் கூறும்.

இருந்து நினைத்தலாவது என்பயன், நீ அவரையும் போய் அழைத்துவா என்பது கருத்து.

**முடிநிலை:**

'நெஞ்சே' என்னும் விளிக்கேற்ப இயைதலின் 'என்பரிதி' எனக் காளிங்கர் கொண்டபாடம் சிறப்புடையது. 'பரிந்துள்ளி' என்பது பழைய உரை கொண்டபாடம். அப்பாடம் 'இருந்துள்ளி' என்னும் முதற் சீருக்கேற்ற தொடை நயம் வாய்ந்தது. எனினும்

அப்பாடத்திற்கு 'வருதல்' என ஒரு சொல்லை முடிபாக வருவித்துரைக்க வேண்டுதலின் சிறப்பில்லை. 'என்பினை ஈர்தி' என்றுமாம்' என்னும் காளிங்கர் கூறும் இரண்டாவது உரைக்கு ஏன்பு அரிதி எனப் பிரித்தல் வேண்டும். இப்பிரிப்பும் பொருளும் சிறப்பில. பைதல்நோய் என்பது குறிப்பாக எவ்வநோய் (1241) போலக் காம நோயினைக் குறிக்கும்.

**1244. கண்ணுங் கொளச்சேறி நெஞ்சே யிவையென்னைத்
தின்னு மவர்க்காண லுற்று.**

**பரிமே:**

தலைமகனைக் காண்டற்கண் வேட்கை மிகுதியால் சொல்லியது).

நெஞ்சே, நீ யவர்பாற் சேறலுற்றாயாயின் இக் கண்களையும் உடன்கொண்டு செல்வாயாக; அன்றி நீயே சேறியாயின், இவை தாம் காட்சி விதுப்பினால் அவரைக் காண்டல் வேண்டி நீ காட்டென்று என்னைத் தின்பன போன்று நலியாநிற்கும்.

**காளிங்:**

நெஞ்சே! அவரிடத்து நீயே எப்பொழுதும் செல்கின்றாய்; எம் கண்ணினையும் கூடக்கொண்டு செல்வாயாக; ஏன் எனில் மற்று, இவை அவரைக் காண்டல் விருப்புற்று எம்மை ஒறுக்கும் ஒறுப்பு யாம் ஆற்றேம்: எனவே, இன்று எம்கண் எதிர் வரின் உய்வம் என்பது பொருள்.

'இவை எம்மை' என்பது இவர் பாடம்.

**முடிநிலை:**

காளிங்கர் பாடம் பன்மையாக அமைந்துள்ளது. அது, பொருள் வேறுபாட்டிற்குரிய பாட வேறுபாடன்று. 'தின்னும் என்பதற்கு நலியும் எனப் பரிமேலழகரும் ஒறுக்கும் எனக் காளிங்கரும் பொருள் கூறுவர். இரண்டும் வருத்த மிகுதி

சுட்டுவதே. உண்டற்குரிய அல்லாப் பொருளை உண்டனபோல் கூறியதற்கு மேற்கோளாக இளம்பூரணரும் (தொல்-பொருள்-210) வண்ணம் பசந்து புலம்புறுகாலை தலைவி, தன் கண் தலைவன் பால் செல்வனவாகக் கூறியதற்கு மேற்கோளாக நச்சினார்க் கினியரும் (தொல்-பொருள்-202) இக்குறளைக் காட்டுவர்.

**1245. செற்றா ரெனக்கை விடலுண்டோ நெஞ்சேயா**
**முற்றா லுறாஅ தவர்.**

**பரிமே:**

(தலைமகனைக் காண்டற்கண் வேட்கை மிகுதியாற் சொல்லியது)

நெஞ்சே! யாம் தம்மையுறத் தாமும் உறாத நம் காதலரை வெறுத்தாரென்று கருதிப் புலந்து கைவிட்டிருக்கும் வலி நமக்குண்டோ? இல்லை.

உறுதல்—அன்பு படுதல்.

**மணக்:**

நெஞ்சே! யாம் உற்ற பின்பு உறாது போனவர் செறுத்தா ரென்று அவரைக் கைவிடுதல் இயல்போ?

உறுதல் - விரைந்துறுதல். தலைமகள் தலைமகன் கொடுமையை உட்கொண்ட நெஞ்சிற்குச் சொல்லியது.

**பரிதி:**

நாம் அன்பு வைக்கவும் தாம் அன்புவையாத நாயகர் நம்மைப் பிரிந்தாற் போலப் பிரிந்து விடுவரோ நெஞ்சமே சொல்லாய்.

**காளிங்:**

நெஞ்சே! நாம் இங்ஙனம் பிரிவுத்துயர் உற்ற இடத்துத் தாமும் அஃது உறாதவர் இங்ஙனம் நம்மைச் செறுத்தனர் எனக் கொண்டு நாமும் கைவிடுதற் கடனுண்டோ? எனவே, கணவர் பிரிவின் கற்புடையாட்டியர் கடுந்துயர் உறினும் கருத்து ஒழியார் என்பது பொருள்.

'நெஞ்சே நாம்' என்பது இவர்பாடம்.

**முடிநிலை:**

தலைமகனைக் காண்டற்கண் வேட்கை மிகுதியால் தலைவி சொல்லியது என்னும் பரிமேலழகர் துறையினும் தலைமகள் தலைவனின் கொடுமையை உட்கொண்ட நெஞ்சிற்குச் சொல்லியது என்னும் மணக்குடவர் துறை மிகப் பொருந்தும். 'உறுதல்' என்பதற்கு அன்புபடுதல், விரைந்துறுதல், பிரிவுத்துயருறுதல் எனப் பொருள் வேறுபட்டு உரையாசிரியர்கள் எழுதக் காண்கின்றோம், 'உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்' (புறம். 183:1) 'ஒன்றுற்றக் கால் விற்றற் குரியர் விரைந்து' (1080) என்னுமிடங்கள் போல 'உற்றால்' என்பதற்கும் துன்பமுற்றால் எனப் பொருள் கோடலே இயல்பானது. அங்ஙனம் கொண்டெழுதிய காளிங்கர் உரை ஒக்கும். நாம் தலைவனைக் கைவிடுதல் உண்டோ எனத் தலைவி மேலதாகப் பிறரெல்லாம் உரைசெய்ய, நம்மைத் தலைவர் கைவிடல் உண்டோ எனத் தலைவன் மேலதாகப் பரிதி உரைசெய்வர். தலைவன் எந்நிலையனாயினும் அவன் கற்புடை நங்கையர்க்கு இன்றியமையாதவன் என்னும் கருத்தே இக்குறட்குச் சிறப்புடையது. இதனைக்காளிங்கர் உரை விளக்கம் காட்டும் எனவே பரிதி உரை சிறப்பில்லை.

**1246. கலந்துணர்த்துங் காதலர்க் கண்டாற் புலந்துணராய்**
**பொய்க்காய்வு காய்தியென் னெஞ்சு.**

**பரிமே:**

[தலைமகள் கொடுமை நினைந்து செலவுடன்படாத நெஞ்சினைக் கழறியது]

என்னெஞ்சே! யான் தம்மொடு புலந்தால் அப்புலவியைக் கலவி தன்னானே நீக்கவல்ல காதலரைக் கண்டாற் பொய்யே யாயினும் ஒருகாற் புலந்து பின்னதனை நீங்கமாட்டாய்; அதுவு மாட்டாத நீ இப்பொழுது அவர் கொடியரெனப் பொய்க்காய்வு காயாநின்றாய்; இனியிதனை யொழிந்து அவர்பாற் செல்லத் துணிவாயாக.

பொய்க்காய்வு-நிலையில் வெறுப்பு.

**மணக்:**

என் நெஞ்சே! நீ காதலர் கொடுமையை அவர்க்கு உட்பட்டு அறிந்துவைத்தும் அவரைக் கண்டால் புலந்து கலக்கமாட்டாது முன்பே கலப்பை; இப்பொழுது பொய்க்காய்வு காயாநின்றாய். 'கலந்துணர்ந்தும்' என்பதிவர் பாடம்.

## வெ. இராம:

நெஞ்சமே! புணர்ந்து இன்ப உணர்ச்சி தருகின்ற காதலரைக் கண்டு விட்டால் அவருடன் நீ பிணங்கி யறியமாட்டாய்; எதற்காக இந்தப் பொய்க் கோபம் கோபிக்கிறாய்.?

**முடிநிலை:**

மணக்குடவர் 'கலந்துணர்ந்தும்' என்னும் பாடத்திற்கேற்ப அவர்க்குட்பட்டு அறிந்துவைத்தும் என உரை செய்வர். பிறரெல்லாம் 'என் நெஞ்சு' என்பதனை ஆறாம் வேற்றுமைத் தொகையாகக் கொள்ள, இராமலிங்கம் பிள்ளை என் பொய்க் காய்வு காய்தி என இயைத்து வினாப்பொருள் கொள்வர். அதுவும் ஒக்கும். 'உணர்த்தும்' என்பதற்கு ஊடல் நீக்கித் தெளிவித்தல் என்பதே அகப்பொருளிற் பயின்று வரும் பொருளாகும். அதற்கு இன்ப உணர்ச்சி என்னும் இராமலிங்கம் பிள்ளையின் உரை சிறப்பில்லை.

**1247. காமம் விடுவொன்றோ நாண்விடு நன்னெஞ்சே
யானோ பொறேனிவ் விரண்டு.**

**பரிமே:**

[நாண் தடுத்தலின் அச் செலவொழிவாள் சொல்லியது.)

நல்ல நெஞ்சே! ஒன்றின் நாண் விட மாட்டாயாயிற் காம வேட்கையை விடு; (ஒன்று) ஒன்றின் அது விடமாட்டாயாயின் நாணினை விடு; அன்றியே இரண்டும் விடாமை நின் கருத்தாயின் ஒன்றற் கொன்று மறுதலையாய இவ் விரண்டனையும் உடன் தாங்கு மதுகை யானிலன்.

**மணக்:**

இது, பிரிவிடை யாற்றாளாய்த் தலைமகனிருந்துழிச் சொல்லக் கருதிய தலைமகள் நாணம் தடுத்தமை கண்டு கூறியது.

**காளிங்:**

நல்வழி அறியும் நெஞ்சமே! ஒன்றோ யாம் அவர்வயின் உற்ற காமநோய்ப் பாரத்தைக் கைவிடுவாயாக; இனி ஒன்றோ இதனால் வருஉம் அவர் நாணுகின்ற நாண் பாரத்தைக் கைவிடுவாயாக; அல்லது மற்று யான் இவ்விரண்டு பாரமும் கூடப் பொறுக்கல் ஆற்றேன் என்கண்.

எனவே, கணவன் மாட்டுக் காதலும் பிறர்மாட்டு நாணமும் பெண்டிர்க்கு இயல்பு; ஆதலால், ஒழித்தற்கு அருமையின் உறுகின்ற உள்ளுறு துயரம் உணர்த்தியவாறாயிற்று என அறிக.

**முடிநிலை:**

மணக்குடவரும் பரிமேலழகரும் கொள்ளும் துறையில் வேறுபாடில்லை. மணக்குடவர்துறைவிளக்கமாக அமைந்துள்ளது. ‘பொறேன்’ என்பது கண்டு காளிங்கர் காமத்தையும் நாணத்தையும் பாரமாகக் கொண்டு உரை செய்திருத்தல் நோக்கத்தகும்.

**1248 பரிந்தவர் நல்காரென் றேங்கிப் பிரிந்தவர்
பின்செல்வாய் பேதையென் னெஞ்சு.**

**பரிமே:**

[நாண் தடுத்தலின் அச்செலவொழிவாள் சொல்லியது]

என்னெஞ்சே! அவர் இவ்வாற்றாமையை யறியாமையின் நொந்து வந்து தலையளி செய்யாராயினார் என்று கருதி அஃதறிவித்தற் பொருட்டு நம்மைப் பிரிந்து போயவர்பின் ஏங்கிச் செல்லலுற்ற நீ யாது மறியாய்.

ஆற்றாமை கண்டுவைத்தும் நல்காது போயினாரைக் காணாதவழிச் சென்றறிவித்த துணையானே நல்க வருவரென்று கருதினமையிற் 'பேதை' யென்றாள்.

**மணக்:**

இது, தலைமகள் தலைமகனிருந்த தேயத்தை நினைத்துக் கவன்ற நெஞ்சிற்குச் சொல்லியது.

**காலிங்:**

'நாம் இவரைப் பாதுகாக்கவேண்டும்' என்று உள்ளத்தாற் பரிந்து 'நம்மை அவர் நல்குகின்றிலர்; என்னை' என்று ஏங்கியே பின்னும் பிரிந்தவர் பின்சென்று நிற்பாய்; நீ சாலப் பேதைகாண்; என்னுடைய நெஞ்சே!

**பழைய: (உ.வே.சா.)**

நெஞ்சே! நம்மேல் பரிவுவைத்துக் கருணை செய்யார் என்று ஏங்கி, அதனை அறிவித்தற் பொருட்டு நம்மைப் பிரிந்தவர் பின்னே செல்லலுற்றாய்; நீ ஒன்று மறியாத பேதை.

நீ அவர் சென்றவழியும் அவர் இவ்விடத்திருப்பாரென்பதும் அறிதியோ பேதாய் என்றது.

**முடிநிலை:**

மணக்குடவரும் பரிமேலழகரும் கொண்ட துறைவேறுபாடு காண்க. 'பரிந்தவர் நல்கார்' என்பதற்குப் பரிமேலழகரும் காளிங்கரும் உரைவிளக்கத்தில் சிறிது வேறுபடுவர். நீ 'அவர் சென்ற வழியும் அவர் இவ்விடத்திருப்பார் என்பதும் அறிதியோ என்று 'பேதாய்' என்ற சொல்லுக்கு விளக்கம் போல் எழுதியுள்ள பழைய உரை நயமுடையது.

**1249. உள்ளத்தார் காத லவராக வுள்ளிநீ
யாருழைச் சேறியென் னெஞ்சு.**

**பரிமே:**

[நாண் தடுத்தலின் அச்செலவொழிவாள் சொல்லியது.]

என்னெஞ்சே; காதலர் நின்னகத்தாராக, முன்பெல்லாங் கண்டு வைத்து இப்பொழுது நீ புறத்துத் தேடிச் செல்கின்றது யாரிடத்து?

**காளிங்:**

நெஞ்சமே! நீ புறத்து அவரைத் தேடிச் சென்றாலும் அப்பொழுதும் என் அகத்தவராய் இருப்பர்; இங்ஙனம் அகத்து உள்ளார் ஆகவும் புறத்து யாண்டும் உள்ளாரோ என்று கருதி ஓடிச் செல்வாய்; நீயார் மாட்டுச் செல்கின்றனை சொல்; எனவே அகத்தும் புறத்தும் அவன் அன்றி அறிவது பிறிது இல்லை.

**முடிநிலை:**

'யாருழைச் சேறி' என்பதற்குத் தேடிச் செல்கின்றது யாரிடத்து என்னும் பரிமேலழகர் உரையினும் யார்மாட்டுச் செல்கின்றனை என்னும் காளிங்கர் உரை பொருத்தமாகும். சேறி-முன்னிலை ஒருமை வினைமுற்று. அகத்தும் புறத்தும் அவன் அன்றி, அறிவது பிறிதில்லை என்னும் காளிங்கர் கருத்துக்குக் குறளில் இடமில்லை.

**1250. துன்னாத் துறந்தாரை நெஞ்சத் துடையேமா**
**இன்னு மிழத்துங் கவின்.**

**பரிமே:**

(அவரை மறந்தாற்றல் வேண்டு மென்பது படச் சொல்லியது.)

நம்மைக் கூடாவண்ணந் துறந்து போயினாரை நாம் நம்மகத் துடையேமாக, முன்னிழந்த, புறக்கவினேயன்றி நின்ற அகக் கவினு மிழப்பேம்.

"குன்றி னெஞ்சுபக வெறிந்த வஞ்சுடர் நெடுவேல்" (குறுந் தொகை, கடவுள் வாழ்த்து) என்புழிப் போல 'நெஞ்சு' என்பது ஈண்டும் அகப் பொருட்டாய் நின்றது. அவர் நம்மைத் துன்னாமல் துறந்தாராகவும், நாமவரை மறத்தன் மாட்டே மாகவும், போன மெய்க்கவினே யன்றி நின்ற நிறையு மிழப்பேம் என்பதாம்.

அகக் கவின் — நிறை.

**மணக்:**

மனமே! நம்மோடு செறியாராய்த் துறந்து போனவரை நெஞ்சகத்தே உடையோமாயின் முன்னும் இழந்த கவினொழிய இன்னமு முள்ள கவினை இழப்போம்; ஆதலான், மறத்தலே கருமம்.

இது நினைக்கின்றதனால் பயனில்லை என்று கூறியது. 'துன்னார்' என்பது இவர் பாடம்.

**காலிங்:**

நெஞ்சே! இன்றியமையாமை யறிந்தும் நம்மோடு கூடி வாழாருமாய்ப் பின்னை நினைந்து அருளலும் இன்றிப் பெரிதும் துறந்தே ஒழிந்தாரை நாம் மற்று உடையேம்; ஆதலால், முன்பு இழந்த கவினே அன்றி மற்று இன்னமும் கவின் இழப்பேம். எனவே, இறந்துபாடும் இயையும் என்பது பொருள்.

'துன்னார் துறந்தாரை நெஞ்சே உடையமால்' என்பது இவர் பாடம்.

**பழைய: (உ. வே. சா.)**

கவின்: அழகு. முன் கூடியிருந்த உடம்பினழகு அவர் பிரியப் பிரிந்தது; நெஞ்சகத்துக் கூடினவர் பிரிந்தால் நெஞ்சின் அழகும் பிரியும் என்றது.

நெஞ்சின் அழகு நிறையும் நாணமும் எனக் கூறுவர்.

**முடிநிலை:**

துன்னார் என்ற பாடவேறுபாட்டால் சிறிது பொருள் வேறு படும். 'இன்னும் இழத்தும் கவின்' என்பதற்கு நிறையும் இழப் போம் என்று பரிமேலழகரும் எஞ்சியுள்ள கவினை இழப்போம் என மணக்குடவரும் நெஞ்சின் அழகாய நாணமும் நிறையும் பிரியும் எனப் பழைய உரையும் பொருள் கூறும். இக்குறளுக்கு அடிப்படையான உரைவேற்றுமை யில்லை.

# 126. நிறையழிதல்.

அஃதாவது தலைமகள் மனத் தடக்கற் பாலனவற்றை வேட்கை மிகுதியான் அடக்கமாட்டாது வாய்விடுதல்; 'நிறை எனப்படுவது மறைபிறரறியாமை' என்றார் பிறரும். அஃதழிதற் காரணம் நெஞ்சொடு கிளந்தமையின் இது, நெஞ்சொடு கிளத் தலின் பின் வைக்கப்பட்டது என அதிகாரவிளக்கமும் முறை வைப்பும் கூறுவர் பரிமேலழகர்.

நிறையழிதலாவது, வேட்கை மிகுதியால் தன் நிலைமை யழிந்து தலைமகள் கூறுதல். நெஞ்சின் மிக்கது புலப்படுமாதலான் அதன்பின் இது கூறப்பட்டது என விளக்கம் தருவர் மணக்குடவர்.

**1251. காமக் கணிச்சி யுடைக்கு நிறையென்னு**
**நாணுத்தாழ் வீழ்த்த கதவு.**

**பரிமே:**

(நாணு நிறையு மழியாமை நீ யாற்றல் வேண்டு மென்ற தோழிக்குத் தலைமகள் சொல்லியது).

நாணாகிய தாழினைக் கோத்த நிறையென்னுங் கதவினை காம வேட்கையாகிய கணிச்சி முறியாநின்றது; இனி அவை நிற்றலுமில்லை; யானாற்றலு மில்லை.

'கணிச்சி' குந்தாலி.

**மணக்:**

காமமாகிய மழு உடையாநின்றது; நாணமாகிய தாழினாலே அடைக்கப்பட்ட அறிவாகிய கதவினை,

இஃது அறிவும் நாணமும் உடையார் இவ்வாறு செய்யார் என்ற தோழிக்குத் தலைமகள் கூறியது.

'அறிவென்னும்' என்பது இவர் பாடம்.

**பரிதி:**

பயிர்ப்பாகிய வீட்டில் அச்சம் என்னும் நிலையில் மடம் என்னும் கதவில் இட்ட நாணம் என்னும் தாளை வெட்டும் காமமாகிய மழு.

**பழைய: (உ.வே.சா)**

கணிச்சி—உளி; குந்தாலியும் ஆம். இப்படித் தன் நிறையைக் காமவேட்கை அழிக்கின்றதென்று தோழிக்குச் சொல்லியது.

**முடிநிலை:**

மணக்குடவரும் பரிமேலழகரும் கொள்ளும் துறைவேறுபாடு நோக்குக. மணக்குடவர் கொண்ட 'அறிவென்னும்' பாடத்தினும் பரிமேலழகர் கொண்ட 'நிறையென்னும்' பாடம் இவ்வதிகாரத்துக் கேற்றது. கதவென்னும் உருவகத்திற் கேற்பப் பெண்டிரின் பிற பண்புகளையும் வருவித்துப் பரிதி உருவகஞ் செய்தல் காண்க. கணிச்சி என்பதற்கு மழு, உளி என்னும் பொருளினும் குந்தாலி என்னும் பொருள் சிறக்கும். குந்தாலி என்பது கோடரி. இப்பொழுது கோடாலி என வழங்கும்.

**1252. காம மெனவொன்றோ கண்ணின்றென் னெஞ்சத்தை
யாமத்து மாளுந் தொழில்.**

**பரிமே:**

(நெஞ்சின்கண் தோன்றிய காமம் நெஞ்சால் அடக்கப்படு மென்றாட்குச் சொல்லியது)

எல்லாருந் தொழிலொழியும் இடை யாமத்தும் என்னெஞ் சத்தை யொறுத்துத் தொழில் கொள்ளாநின்றது; ஆதலாற் காம மென்று சொல்லபட்ட வொன்று கண்ணோட்ட மின்றாயிருந்தது.

**மணக்:**

இது நெஞ்சின் மிக்கது வாய்சோர்ந்து ஆற்றாமையால் தலைமகள் தோழிக்குக் கூறியது.

**பரிதி:**

காமம் என ஒன்று என்னிடமாக நின்று, என் நெஞ்சே இருட்டிலும் அடிமைத் தொழில் கொள்ளுவது.

**காளிங்:**

தோழி! காதலர் பிரிவில் பெருகும் காமநோய் என்கின்ற இது சாலக் கண்ணின்றே; என் எனில் யான் உறுதுயர் யாதும் காணாது இடையிருள் யாமத்தும் என்னைத் தன் தொழிற் கண்ணே யாளும்; எனவே தன் தொழிலாவது அரற்றலும் உலற்றலும் அலமரலும் பிறவும் அன்றே! அவை அனைத்தும் யான் உறப்பண்ணும்.

**வெ. இராம:**

இரக்க மில்லாமல் என் நெஞ்சத்தை நடுச் சாமத்திலும் அடிமைப் படுத்தும் வேலை இந்தக் காமம் என்ற ஒன்றுதானா?

**முடிநிலை:**

'ஆளுந் தொழில்' என்பதற்குக் காளிங்கர் உரையில் விளக்க முண்டு. 'கண்ணின்று' என்பதனை முற்றாகக் கொண்டு இரக்க மில்லை எனப் பொருள் கூறுவர் பரிமேலழகர். கண் நின்று எனப் பிரித்து என்னிடமாக நின்று என இடப்பொருள் கொண்டு எச்ச மாக்குவர் பரிதி. இப்பொருளும் கொள்ளலாமேனும், பிறர் நெஞ்ச மின்றி என்நெஞ்ச மொன்றனையே யாமத்தும் தொழில் ஆளும் என்ற கொடுமை நோக்கின் இரக்கமில்லை என்னும் பொருளே சிறப்புடையது. 'காமத்திற்குக் கண்ணில்லை' என்ற பழமொழியும் ஈண்டு ஒப்பு நோக்கத் தக்கது. இராமலிங்கம் பிள்ளை கண் இன்று எனப் பிரித்து எச்சமாக்குவதும் தொழில் காமம் என ஒன்றோ என இயைப்பதும் சிறப்பில.

**1253. மறைப்பேன்மற் காமத்தை யானோ குறிப்பின்றித்
தும்மல்போற் றோன்றி விடும்.**

**பரிமே:**

(மகளிர் காமம் மறைக்கப்படு மென்றாட்குச் சொல்லியது)

இக்காமத்தை யானென்னுள்ளே மறைக்கக் கருதுவேன்; அதனாலென், இஃதென் கருத்தின் வாராது தும்மல் போல வெளிப்பட்டே விடாநின்றது.

**காளிங்:**

தோழீ! அங்ஙனம் உற்ற எம் காமத்தை யானோ மற்று ஆம் துணையும் புலப்படாமை அகத்துள் நிறுத்து அமைப்பனாயினும், தும்மலானது ஒருவர் குறிப்பின்றிப் புறத்து எழுந்து புறம் தோன்று மாப்போலே, மற்று இதுவும் என் குறிப்பு இன்றித் தானே புறத்து எங்கும் புலப்படும்; ஆயின் என் செய்வேன்.

'நிறுப்பென்மன்' என்பது இவர் பாடம்.

**முடிநிலை:**

உரையாசிரியர்கள் கொண்ட துறையில் இக்குறட்கு வேறு பாடில்லை. 'நிறுப்பென்மன்' என்ற பாடவேறுபாட்டால் உரை சிறிது வேறுபடுகின்றது.

**1254. நிறையுடையே னென்பேன்மன் யானோவென் காம
மறையிறந்து மன்று படும்.**

**பரிமே:**

[மகளிர் காமம் மறைக்கப்படும் என்றாட்குச் சொல்லியது.]

இன்றினூங் கெல்லாம் யானென்னை நிறையுடையே னென்று கருதியிருந்தேன்; அதனாலென்! இன்றென் காமம் மறைத்தலைக் கடந்து மன்றின்கண் வெளிப்படாநின்றது.

மன்று படுதல்—பலரும் அறிதல். மன்-ஒழியிசை.

**வெ. இராம:**

நான் யாரிடமாவது 'நான் காமத்தை அடக்குந் தன்மையுள்ளவள் என்று சொல்லுவேன்; ஆனால் அப்போதே என் காமம் மறைவிடத்தைக் கடந்து வெளியே பாய்ந்து வந்து விடும்.

படும்—பாயும்

நிறையுடையேன் என்று சொல்லிக் கொண்டிருக்கும் போதே என் காமம் முகத்தின் பசப்பினாலும் கண்களின் நீரினாலும் பொய்யென்று காட்டி மன்றுபடும் என விளக்கந் தருவர்.

**முடிநிலை:**

'மன்றுபடும்' என்பதற்கு மன்றத்தைக் கடந்து வெளியே பாயும் என்னும் பொருளினும் மன்றின்கண் வெளிப்படும் என்னும் பரிமேலழகர் பொருள் சிறப்பினது. எங்ஙனம் மன்று படும் என்பதற்கு இராமலிங்கம் பிள்ளையின் விளக்கம் நன்று.

**1255. செற்றார்பின் செல்லாப் பெருந்தகைமை காமநோ
யுற்றா ரறிவதொன் றன்று.**

**பரிமே:**

(நம்மை மறந்தாரை நாமு மறக்கற்பால மென்றாட்குச் சொல்லியது.)

தம்மை யகன்று சென்றார் பின் செல்லாது தாமும் அகன்று நிற்கும் நிறையுடைமை, காமநோயினை யுறாதார் அறிவதொன்றன்றி உற்றார் அறிவதொன் றன்று.

பெருந்தகைமை—ஆகுபெயர்.

**மணக்:**

தம்மை இகழ்ந்தார்பின் செல்லாத பெரியதகைமை காமநோயுற்றாரால் அறிவதொன் றன்று.

இது தம்மை இகழ்ந்து போனவர் பின் சென்று இரங்குதல் பெரியார்க்குத் தகாது என்ற தோழிக்குத் தலைமகள் கூறியது.

**பழைய: (உ.வே.சா.)**

தன் நிறையை அழித்தவர் பின் செல்லாது பெருந்தகைமையை யுடைய காமநோயானது தன்னை யுற்ற நடுவன்னிடத்து ஒன்றையும் அறியாமல் மயக்கும்.

பெருந்தகைமை - காமத்தின் செருக்கு; செற்றார்-தன் நிறையை யழித்த தலைவர்.

**வெ.இராம:**

நமக்குத் தீமை செய்துவிட்ட ஒருவரிடத்திற்கே போய் அத் தீமையைத் தீர்த்துக் கொள்ள அவரை வணங்கக் கூடாது என்ற பெரிய நியாயம் காமநோய் கொண்டு விட்ட மனைவி அறிய வேண்டிய ஒரு நீதி யல்ல.

**மு. கோ:**

பகை யென்பதே காதற் கில்லை. பகையுள்ளும் பண்பே காதல். காதலில் தோல்வியும் அடிமைத் தனமும் இல்லை.

ஏறுபோற் பீடுடையவனும் தலைவியின் கால்களில் நெடுங் கடையாக வீழ்வான். வாழ்வில் வேண்டாமை சில போது வேண்டுவதாய் விடுகின்றது.

**முடிநிலை:**

மணக்குடவரும் பரிமேலழகரும் இக்குறளைத் தலைவி கூற்றாகக் கொள்ளினும் துறையமைப்பில் வேறுபடுவர். 'செற்றார்' என்பதற்கு அகன்று சென்றார், இகழ்ந்தார், தீமைசெய்தார், நிறையழித்தார் என்னும் பொருள்களுள் இடையன இருபொருளும் பொருந்தும். 'பெருந்தகைமை' என்பதற்கு நிறையுடைமை, காமத்தின் செருக்கு, பெரிய நியாயம் என்னும் பொருள்களுள் நிறையுடைமை என்னும் பொருளே சிறக்கும், நிறையுடைமை அதிகாரமாதலின். பழைய உரை பெருந்தகைமையை யுடைய காமநோய் என ஒரு தொடராகக் கொள்வதும் அஃது உற்றாரை அறியவிடாது மயக்கும் எனக் கூறுவதும் பொருத்தமில்லை. இக்குறட்கு மு.கோ.வின் விளக்கம் நினையத்தகும்.

**1256. செற்றவர் பின்சேறல் வேண்டி யளித்தரோ**
**எற்றென்னை யுற்ற துயர்.**

**பரிமே:**

(நம்மை மறந்தாரை நாமும் மறக்கற்பாலம் என்றாட்குச் சொல்லியது.)

என்னை யகன்று சென்றார் பின்னே யான் சேறலை வேண்டுதலான், என்னை யுற்ற துயர் எத்தன்மையது? சால நன்று.

'வேண்ட' என்பது வேண்டி எனத் திரிந்து நின்றது. 'அளித்து' என்பது இகழ்ச்சிக் குறிப்பு.

**மணக்:**

இது தனித்திருந்து துயருறுதல் காமத்திற்கு இயற்கை என்று கூறிய தலைமகளை நோக்கி, இது நின் போல்வார்க்குத் தகா தென்ற தோழிக்கு அவள் சொல்லியது.

**பரிப்:**

செறுத்தார் பின்பே யான் சேறலை வேண்டி இத்துயர் உற்ற தென்று கொள்ளப்படும். அளித்து அதற்கு மற்றுப் பயன் என்ன?

**பரிதி:**

சத்துருக்களை யான் பின் செல்ல வேண்டியும் என்பலத்தை யும் அறிவையும் கெடுக்க வேண்டியும் காமத்துயர் உண்டாயிற்று.

**பழைய: (உ.வே.சா.)**

என் நிறையை யழித்தவர் பின்னே சென்று வேண்டி யழைத்து வந்து அளிக்கலாகாதோ, என்னை உற்றுத் துயர் செய்வதென் கருதி இக் காமநோய்.

செற்றவர்-நிறையை அழித்தவர்,

**வெ. இராம:**

துன்பம் செய்தவரிடத்திற்கே போய்ப் பணிய வேண்டு மென்ற ஆசையுள்ளதாக இருக்கிறதே; ஐயோ! எனக்கு வந்த இந்தத் துயரம் எப்படிப்பட்ட புதுமையாக இருக்கிறது.

அரோ—அதிசயப் பொருளையும் வருத்தத்தையும் சேர்த்துக் குறிக்கும் அசைச் சொல்.

'பின் செல்ல' எனப் பாடங்கொள்வர் காளிங்கர்.

**முடிநிலை:**

இக்குறளையும் மணக்குடவரும் பரிமேலழகரும் தலைவி கூற்றாகக் கொள்ளினும் துறையின் சூழலமைப்பில் வேறுபடுதல் காணலாம். பரிப்பெருமாளும் பரிதியும் துயர் உற்றது என உரை செய்துள்ளனர். அவர்கட்கு 'உற்ற' என்பது வினை முற்றாகும். 'உற்றதுயர்' என்பதைப் பெயரெச்சத் தொடராகக் கொள்வதே நடைக்கு ஏற்றது. 'என் பலத்தையும் அறிவையும் கெடுக்க வேண்டியும்' எனவரும் பரிதி உரையை நோக்கின் 'அழித்து' என்பது அவர் கொண்ட பாடமாகலாம். 'அளித்தரோ'—அளிக்க லாகாதோ என்று பழைய உரை கூறுவது பொருத்தமாகாது. 'வேண்டி அளித்து' எனக் கிடந்தாங்கே இராமலிங்கம்பிள்ளை பொருள் கொண்டாரேனும் அளித்து—ஆசை யுடையதாக இருக்கிறது என்று அவர் கூறும் பொருள் அச்சொற்கு உரியதாகப் படவில்லை.

**1257. நாணென வொன்றோ வறியலங் காமத்தாற்**
**பேணியார் பெட்ப செயின்.**

**பரிமே:**

(பரத்தையிற் பிரிந்துவந்த தலைமகனோடு நிறையழிவாற் கூடிய தலைமகள் நீ புலவாமைக்குக் காரணம் யாதென்ற தோழிக்குச் சொல்லியது.)

நம்மால் விரும்பப்பட்டவர் வந்து காமத்தால் நாம் விரும்பிய வற்றைச் செய்யுமளவின், நாணென் றொன்றையும் அறிய மாட்டேமா யிருந்தோம்.

விரும்பியன-வேட்கை மிகவினால் கருதியிருந்த கலவிகள். நாண்-பரத்தையர் தோய்ந்த மார்பைத் தோய்தற்கு நாணுதல். ஒன்று என்பது ஈண்டுச் சிறிது என்னும் பொருட்டு.

**மணக்:**

நாணென்பது ஒன்று அறியார் மகளிர், காமம் காரணமாக விரும்பப்பட்டவர் தாம் விரும்புமாறு செய்வாராயின்.

அவர் விரும்புமாறு செய்வராயின் நாணமுண்டாகா தென்றவாறு.

'அறியலர்' 'பெட்பச்செயின்' என்பன இவர் பாடங்கள்.

**பரிதி:**

நாணமுடைமை உண்டாகில் காமம் வெளிப்படாது; ஆகவே, காமம் உடையார்க்கு நாணம் இல்லை.

**காலிங்:**

தோழி! முன் நம்மை விரும்பார் ஆகிய காதலர் யாம் விரும்பவே தாம் வருவராயின் அவ்விடத்து ஒப்பிறந்த நாணினையும் ஒரு பெரிதும் அறியலம்; எனவே, அவரிடத்தில் அவாப் பெறில் வந்தாங்கே எமது ஆவல் தீரும்படி அவரைப் பணிந்தும் எழுந்தும் பரிவுற மகிழ்ந்தும் நோக்கி ஊடியும் நுணுக நகைத்தும் நீக்கிய நாணொடு நிற்பேன்.

**வெ. இராம:**

என் காதலர் தாமும் என்னைப் போல் காம ஆசை கொண்டவராக நான் மிகவும் ஆசைப்படுகிற கலவி செய்யும் போது எனக்கு நாணம் ஒன்று மட்டுமா மறந்து போகிறது. (பெண்மைக்கான மற்ற மடமை, அச்சம், பயிர்ப்பு என்ற எல்லாமே மறந்து போகின்றன.)

**மு.கோ:**

தனிமையில் காம லீலைகளுக்கு நாணுவதும் கூசுவதும் காதல் நிறைவில் மாசுண்டாக்கும். இருவரும் விரும்பியவா றெல்லாம் விட்டுக்கொடுக்க வேண்டும்.

**தேவ:**

ஆசிரியர் ஒருமனை (வி) மணத்தையே இவ்வின்பத்துப் பாலிற் கூறுவதாலும் இது தலைசிறந்த தமிழற நூலாதலாலும், கோவைகளிற் போலப் பரத்தை கூற்றாக இங்கு ஒன்றுங் கூறப்படாமையாலும் 'பரத்தையிற்பிரிந்து வந்த தலைமகனோடு' என்று பரிமேலழகர் கொளுவிற் கூறியிருப்பது பொருந்தாது. ஒன்று' என்பது ஒரு தனிப்பொருள் என்னும் பொருட்டு.

**முடிநிலை:**

பரிமேலழகர் பரத்தையிற் பிரிவைத் தொடர்புபடுத்தித் துறை, கூறுவர். இப்பிரிவுக் குறிப்பு குறளகத்து இன்மையின் அங்ஙனம் துறை கொள்ள வேண்டுவதில்லை. இது முதல் நான்கு குறள் களைப் பரத்தையிற் பிரிவில் அடக்காது சேயிடைப் பிரிவின்பாற் படுத்தலாம் என்பர் தெ.பொ. மீனாட்சிசுந்தரனார். பாட வேறுபாடுகளால் மணக்குடவர் உரை வேறுபடும். பரிதி உரை குறளுக்கு நேர்பொருளாக அமையாமல் குறளின் ஒரு பகுதிக் கருத்தை மட்டும் புலப்படுத்துகின்றது. 'வருவராயின்' என்னும் காளிங்கர் உரை நோக்கின் 'வரின்' என்பது அவர் பாடமாகலாம். அவர் உரையில் 'நாணென ஒன்றோ அறியலம்' என்னும் பகுதிக்கு நல்ல விளக்கங் காணலாம். இப்பகுதிக்கு நாண் மட்டுமா? மடமை, அச்சம், பயிர்ப்பு, ஆகிய பண்புகளும் அறியமாட்டோம் என்று 'ஒன்றோ' என்ற சொல்லாற்றலால் பொருள் செய்வர் இராமலிங்கம்பிள்ளை. அப்பொருள் சிறப்புடையதேனும் ஒன்றோ எனவரும் குறட்பாக்களை நோக்குங்கால், ஆற்றலாற் கொள்ள வேண்டா'து எண்ணப்படும் பொருள்களையும் வெளிப்படையாகவே எண்ணியிருக்கக் காண்கிறோம். 'அறனொன்றோ ஆன்ற ஒழுக்கு' (148) 'பேதைமை ஒன்றோ பெருங்கிழமை' (805) 'பொய்படும் ஒன்றோ புனைபூணும்' (836) என்பன காண்க. இம்முறையே நடையாகக் காண்டலான், இக்குறளில் வரும் 'ஒன்றோ என்பதற்குப் பிறபண்புகளை வருவித்துரைத்தல் சிறப்பில்லை. மு.கோ. உரையும் பாவாணர் உரையும் விளக்க வகைக்காகக் காட்டப்பட்டுள.

**1258. பன்மாயக் கள்வன் பணிமொழி யன்றோநம்
பெண்மை யுடைக்கும் படை.**

**பரிமே:**

[பரத்தையிற் பிரிந்து வந்த தலைமகனோடு நிறையழிவால் கூடிய தலைமகள் நீ புலவாமைக்குக் காரணம் யாது என்ற தோழிக்குச் சொல்லியது].

நம் நிறையாகிய அரணை யழிக்குந் தானை பல பொய்களை வல்ல கள்வனுடைய தாழ்ந்த சொற்களன்றோ? ஆனபின் அது நிற்குமா றென்னை?

பெண்மை ஈண்டுத் தலைமை பற்றி நிறைமேல் நின்றது. பணிமொழி - நம்மினும் தான் அன்பு மிகுதி உடையனாகச் சொல்லுஞ் சொற்கள்.

**மணக்:**

இது பெண்மை யல்ல என்ற தோழிக்கு அவன் என்னோடு கலந்த நாளில் சொன்ன சொற்கள் காண் நம் பெண்மையைக் கெடுக்கின்றது; அல்லது கெடாது என்று தலைமகள் கூறியது.

**காளிங்:**

தோழி! நின்மாட்டு அன்பு பெரிது உடையேன்; அருளும் நீங்கேன்; நின்னிற் பிரியேன்; பிரியினும் ஆற்றேன்; புறத்து உடம்பு இரண்டல்லது அகத்துயிர் ஒன்றென வஞ்சனை பலவும் வகுத்து உடன்படுத்து எம் கவின்திறம் முழுதும் கவர்ந்த கள்வன் பண்புறமொழிந்த பணிமொழி அன்றோ நம்பெண்மையை உடைக்குங் கருவி.

**பழைய: (உ.வே.சா.)**

நம்முடைய பெண்மையாகிய நாணினையும் நிறையினையும் அழிக்கும் ஆயுதமாவது, பல மாயங்களையுடைய கள்வனுடைய தாழ்ந்த சொற்களன்றோ?

பெண்மையாவது: கற்புடை மகளிர்; நாணம், மடம், அச்சம் பயிர்ப்பு என்னும் நான்கும் எனக் கொள்க.

பன்மாயக் கள்வன்: தலைவன் பணிமொழி தாழ்ந்த மொழி யன்றோ நம் பெண்மையை உடைக்கும் படை ஆயுதம் எனக் கொள்க.

**வெ. இராம:**

மிகுந்த மாயக்காரத் திருடனாகிய காமனுடைய கட்டளை யல்லவா என் பெண்தன்மையான நிறையை உடைக்கும் ஆயுதம்.

பன்மாயம் — மிகுந்த வஞ்சனை. அதாவது 'பருவரலும் பைதலுங் காணான் கொல், காமன் ஒருவர்கண் நின்றொழுகலான்' என்ற குறளிற் சொல்லியபடி மிகுந்த ஓரவஞ்சனையாக என் காதலருக்குக் காம மூட்டாமல் என்னை மட்டும் துன்பப் படுத்துகிறான் என்பதைக் குறிக்கும். 'கள்வன்' என்றது கள்ளனைப் போல் கண்ணுக்குத் தெரியாமல் மறைந்திருந்து காமபாணந் தொடுப்பதைக் குறிப்பது. பணிமொழி — பணியச் செய்யும் அதிகாரக் கட்டளை.

**முடிநிலை:**

முற்குறள் போலவே இக்குறட்குப் பரிமேலழகர் துறை கொண்டிருத்தல் காண்க. 'பெண்மை' என்பதற்கு நிறையென்னும் பொருள் சிறக்கும்; நிறையழிதல் என்னும் இவ்வதிகாரத்திற்கு மிகப் பொருத்தமாகலின். அதற்கு நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு எனக் கூறும் பழைய உரையும் ஏற்கலாம். ஆனால் கவின்திறம் என்று கூறும் காளிங்கர் பொருள் சிறப்பில்லை. 'படை' என்பதற்குத் தானை என்னும் பரிமேலழகர் பொருளினும் பிறர் கூறும் கருவி என்னும் பொருள் தகும். 'காமக் கணிச்சி உடைக்கும் நிறையென்னும் நாணுத்தாழ் வீழ்த்த கதவு' (1251) என்னும் குறளை அப்பொருட்கு ஒப்பு நோக்குக. 'பணிமொழி' என்பதற்குக் காளிங்கர் விளக்கந் தருவர். 'பன்மாயக் கள்வன்' என்பது தலைவனைக் குறிப்பதாகப் பிறரெல்லாம் கொள்ள, மன்மதனைக் குறிப்பதாக இராமலிங்கம் பிள்ளை கொள்வர்.

அகப்பொருளில் மன்மதனைக் கள்வன் என்று சொல்வது மரபில்லை யாதலானும் 'களித்தார்க்குக் கள்ளற்றே கள்வ நின் மார்பு' (1288) எனத் தலைவன் கள்வன் எனச் சுட்டப்பட்டிருத்த லானும் கள்வன்—மன்மதன் என்னும் பொருள் சிறப்பில்லை. 'பணிமொழி' என்பதற்கும் அவர் பணியச் செய்யும் அதிகாரக் கட்டளை என்று கூறும் பொருளும் சிறப்பில்லை.

**1259. புலப்ப லெனச்சென்றேன் புல்லினே னெஞ்சங்**
**கலத்த லுறுவது கண்டு.**

**பரிமே:**

[பரத்தையிற் பிரிந்து வந்த தலைமகனோடு நிறையழிவால் கூடிய தலைமகள் நீ புலவாமைக்குக் காரணம் யாது என்ற தோழிக்குச் சொல்லியது]

அவர் வந்தபொழுது புலக்கக் கடவே னென்று கருதி முன்னில்லாது பிறிதோரிடத்துப் போயினேன்; போயும் என்னெஞ்சம் நிறையின் நில்லாது அறைபோய் அவரோடு கலத்தல் தொடங்குதலை யறிந்து, இனி அது வாயாதென்று புல்லினேன்.

வாயாமை—புலத்தற் கருவியாய நெஞ்சு தானே கலத்தற் கருவியாய் நிற்றலின் அது முடியாமை.

**மணக்:**

புலப்பலெனச் சென்ற யான் முயங்கினேன், நெஞ்சு முற்பட்டுப் பொருந்துதல் உறுவதனைக் கண்டு.

இஃது ஊடுதல் அருமை என்ற தோழிக்கு முன்னொருகால் அவனைப் பிரிந்து கூடிய என் மனம் செய்தது இது என்று தலைமகள் கூறியது.

'கலக்கலுறுவது' என்பது காளிங்கர் பாடம்.

**முடிநிலை:**

பரிமேலழகர் கொள்ளும் துறை தலைமகனைப் பரத்தைத் தொடர்பு படுத்திக் கூறுவதால் ஏற்றற்கில்லை, ஆசிரியர் அதனை யாண்டும் விலக்கியே கூறுகின்றமையின். 'சென்றேன்' என்பதனை வினையாலணையும் பெயராகக் கொள்வர் மணக்குடவர். அதனைவிட முற்றாகக் கொண்டுரைக்கும் பரிமேலழகர் உரை குறட் கருத்தினைத் தெளிவாகக் காட்டுகின்றது.

**1260. நிணந்தீயி லிட்டன்ன நெஞ்சினார்க் குண்டோ
புணர்ந்தூடி நிற்பே மெனல்.**

**பரிமே:**

(பரத்தையிற் பிரிந்து வந்த தலைமகனோடு நிறையழிவால் கூடிய தலைமகள் 'நீ புலவாமைக்குக் காரணம் யாது' என்ற தோழிக்குச் சொல்லியது)

நிணத்தைத் தீயின் கண்ணே யிட்டால் அஃதுருகுமாறு போலத் தங் காதலரைக் கண்டால் நிறையழிந்துருகும் நெஞ்சினை யுடைய மகளிர்க்கு அவர் புணர யாமூடிப் பின்புஉணராது அந்நிலையே நிற்கக் கடவே மென்று கருதுதல் உண்டாகுமோ? ஆகாது.

புணர்தல்- மிக நணுகுதல்; எதிர்ப்படலும் ஆம். 'புணர' என்பது புணர்ந்து எனத் திரிந்து நின்றது.

**பரிப்:**

இது, நிறையழிந்து கூறிய தலைமகள் ஆற்றுதற் பொருட்டு, நம் காதலர் வந்தால் ஊடுவையோ என்று நகைக் குறிப்பினால் கூறிய தோழிக்கு, 'ஊடுதல் அரிது' என்று தலைமகள் கூறியது.

**பரிதி:**

நெருப்பைச்சேர்ந்த நெய் போல நெஞ்சம் உருகும்; ஆதலால் காதலர்க்கு இல்லை, புணர்ந்தாரிடத்து ஊடுதல்.

**'புணர்ந்தூடி நிற்பேம் எனல்'** என்பதற்குக் காதலன் எதிர்ப் பட்டு வந்து ஊடி நிற்போம் என்று நினைத்தல் எனப் பொருள் கூறுவர் **மணக்குடவர்.**

**முடிநிலை:**

இக்குறளுக்கு முற்குறள் போலவே பரிமேலழகர் துறை கூறுவர். 'நிணம்' என்பதற்கு நெய் என்றும் 'நெஞ்சினார்' என்பதற்குக் காதலர் என்றும் பரிதி கூறும் பொருள் சிறப்பில்லை. 'புணர்ந் தூடி நிற்பே மெனல்' என்புழிப் புணர்ந்து - புணர்ந் தோரிடத்து எனக் கொண்டு கூறும் அவர் பொருள் நேர் பொருளாகாது. இத்தொடரிலுள்ள புணர்தல் ஊடற்றாழில்களைத் தலைவிக்கேற்றியுரைப்பது குறள் நடைக் கேற்றதாகும். அங்ஙனம் கொண்ட மணக்குடவர் உரை தகும். அவர் புணர்ந்து என்பதற்கு எதிர்ப்பட்டு என உரைப்பர். பரிமேலழகர் புணர்தல் தொழிலைத் தலைவர்க்குக் கொண்டமையின் புணர்ந்து என்பதைச் செய்தெனெச்சமாகக் கொள்ளின் பிறவினை ஏற்க வேண்டுதலின். அவர் புணரவென்னும் செயவெனெச்சம் புணர்ந்து எனத் திரிந்து நின்றது என இலக்கணக் குறிப்புத் தருவாராயினர். இவ்விலக் கணக்குறிப்பும் அச்சொற்கு அவர் பொருளும் இயல்பாகா.

# 127. அவர்வயின் விதும்பல்.

அஃதாவது சேயிடைப் பிரிவின்கண் தலைமகனும், தலைமகளும் வேட்கை மிகவினான் ஒருவரை ஒருவர் காண்டற்கு விரைதல். தலைமகன் பிரிவும் தலைமகளாற்றாமையும் அதிகாரப்பட்டு வருகின்றமையின், இருவரையும் சுட்டிப் பொதுவாகிய பன்மைப் பாலால் கூறினார். பிறரெல்லாம் இதனைத் தலைமகனை நினைந்து தலைமகள் விதுப்புறல் என்றார். சுட்டுப்பெயர் சொல்லுவான் குறிப்பொடு கூடிய பொருள் உணர்த்துவ தல்லது தான் ஒன்றற்குப் பெயராகாமையானும், கவி கூற்றாய அதிகாரத்துத் தலைமகன் உயர்த்தற் பன்மையால் கூறப்படாமையானும் அஃது உரையன்மை அறிக. இதனுள் தலைமகள் கூற்று நிறையழிவான் நிகழ்ந்ததாகலின், அவ்வியைபு பற்றி நிறையழிதலின் பின் வைக்கப்பட்டது என அதிகார விளக்கமும் முறைவைப்பும் கூறுவர் பரிமேலழகர்.

அவர்வயின் விதும்பலாவது, அவர் வரவின் கண்ணே துக்க முறுதல்; காதலர் வரவு கேட்டிருத்த லென்றவாறு. இவையெல்லாம் தோழிக்குக் கூறினவாகக் கொள்ளப்படும். நிறையழிந்தார் எப்பொழுதும் காதலர் வரவிற்கு ஆசையுற்றிருப்பாராதலான் அதன்பின் இது கூறப்பட்டது என விளக்கந்தருவர் மணக்குடவர்.

நிறையழிந்த தலைவியும் வினை முடித்த தலைவனும் ஒருவரை ஒருவர் முந்திக் கூடவேண்டும் என்று மனத்தால் விரைதலாம். விதும்பல், வெதும்பல் என உலக வழக்கில் உள்ளது. விதும்பல் மனம் ஆற்றாது தூண்ட உடல் விரைதல் என்பதாம் என்பர் வரதராசனார்.

'விதும்பல்' என்பதற்குத் துக்க முறுதல் என்ற பொருளினும் விரைதல் என்னும் பொருள் சிறப்பினது. கண்விதுப்பழிதல், புணர்ச்சி விதும்பல் என்னும் அதிகாரப் பெயர்களில் விதுப்பு - விரைதலையே குறிக்கும்.

**1261. வாளற்றுப் புற்கென்ற கண்ணு மவர்சென்ற
நாளொற்றித் தேய்ந்த விரல்.**

**பரிமே:**

[தலைமகள் காண்டல் விதுப்பினாற் சொல்லியது.]

அவர் நம்மைப் பிரிந்துபோய நாள்கள் சுவரின்கண் இழைத்த வற்றைத் தொட்டு எண்ணுதலான் என் விரல்கள் தேய்ந்தன; அதுவேயன்றி, அவர் வரும்வழி பார்த்து என்கண்களும் ஒளி யிழந்து புல்லிய வாயின; இவ்வாறாயும் அவர் வரவு உண்டாயிற்று இல்லை.

**காளிங்:**

தோழி! நம்மைப் பிரிந்து சேய தேயத்தின்கண் சென்றவர் வருநாள் காணப் பெறுதும் கொல்லோ என்று உரைக்க எப்பொழுதும் நோக்கியே என்கண்ணும் சால ஒளிமறைந்து புற்கென்றன; அன்றியும் அவர் சென்ற நாள்களைச் சுவர்தோற்றி, ஒற்றியே நலமறத் தேய்ந்தன நகமும்.

'வாளொற்றி', 'நகம்' என்பன இவர்பாடம். இவ்வுரை யாசிரியர் அவர்வயின் **விரும்பல்** என அதிகாரத் தலைப்புக் கொள்வர்.

**முடிநிலை:**

அவர்வயின் விரும்பல் என்பதினும் அவர்வயின் விதும்பல் என்று கொண்ட அதிகாரத் தலைப்பே பொருத்த முடையது. 'வாளொற்றி' 'நகம்' என்று காளிங்கர் கொண்ட பாடங்கள் எதுகை மோனை நயம் உடைய வாயினும் 'வாளற்று', 'விரல்' என்ற பாடங்களே பொருட் சிறப்புடையன.

**1262. இலங்கிழா யின்று மறப்பினென் றோண்மேற்
கலங்கழியுங் காரிகை நீத்து.**

[ஆற்றாமை மிகுதலின் இடையின்றி நினைக்கற் பாலை யல்லை; சிறிது மறக்கல் வேண்டு மென்ற தோழிக்குச் சொல்லியது.)

**பரிமே:**

விளங்கா நின்ற இழையினை யுடையாய்! காதலரை இன்று யான் மறப்பே னாயின் மேலுங், காரிகை யென்னை நீப்ப, என் தோள்கள் வளை கழல்வனவாம்.

மேலும்-மறு பிறப்பினும். எச்சவும்மை விகாரத்தாற்றொக்கது. இவ்வெல்லைக்கண் நினைந்தால் மறுமைக்கண் அவரை எய்தி யின்புறலாம்; அதனால் மறக்கற் பாலேனல்லன் என்பதாம்.

**மணக்:**

இலங்கிய இழையை யுடையவளே! யான் இன்று அவரை மறப்பே னாயின் பண்டை மெல்லிய என்னுடைய தோள்கள் தம் அழகினை நீக்கி வளை முதலான அணிகலங்களையும் கழலவிடும்.

'மென்தோள்' என்பது இவர் பாடம்.

**பரிப்:**

தன் அணிகலங்கள் விலங்காமை யிருப்பச் சிறிய உள்ளிப் பெரிய மறக்க வேண்டும் என்று வற்புறுத்திய தோழிக்கு வன் புறை எதிரழிந்து கூறியது.

**பரிதி:**

எனதெழிலை என் நாயகரை ஒரு காலத்திலும் மறவேன்; மறந்தால் வளை கழன்று அழகும் குன்றும்.

**மு.வ:**

தோழி! காதலரின் பிரிவால் துன்புற்று வருந்துகின்ற இன்றும் அவரை மறந்து விட்டால் அழகு கெட்டு என் தோள் மேல் அணிந்துள்ள அணிகள் கழலுமாறு நேரும்.

**முடிநிலை:**

பரிமேலழகரும் பரிப்பெருமாளும் கொண்ட துறைகளில் பெரிதும் வேறுபாடில்லை. 'மேல்' என்ற விடத்து **உம்மை** தொக்கதாகக் கொண்டு மறுபிறப்பினும் எனப் பரிமேலழகர் எழுதுவது வலிந்துரையாகும். அதனை ஏழாம் வேற்றுமை யுருபாகக் கொண்டு மு.வ. இயல்பான பொருள் கூறியுள்ளார். எனதெழிலை என் நாயகரை ஒரு காலத்திலும் மறவேன் எனக் கூறும் பரிதி உரைக்கு மூலத்தில் நேரே இடமில்லை.

**1263.** **உரனசைஇ யுள்ளந் துணையாகச் சென்றார்**
**வரனசைஇ யின்னு முளேன்.**

**பரிமே:**

(ஆற்றாமை மிகுதலின் இடையின்றி நினைக்கற் பாலை யல்லை; சிறிது மறக்கல் வேண்டும் என்ற தோழிக்குச் சொல்லியது)

இன்ப நுகர்தலை நச்சாது வேறலை நச்சி நாம் துணை யாதலை யிகழ்ந்து தம் மூக்கந் துணையாகப் போயினார்; அவற்றை இகழ்ந்து ஈண்டு வருதலை நச்சுதலான், யானிவ் வெல்லையினும் உளேனாயினேன்.

உரன்-ஆகுபெயர்.

**மணக்:**

இன்பத்தை நச்சாது வலிமையையே நச்சிப் பேசுகின்ற மனமே துணையாகச் சென்றவர் வருவா ரென்கின்ற ஆசைப் பாட்டினால் இன்னும் உளேன் ஆனேன்.

இஃது அவர் வாரார் என்று கூறியது.

**பரிதி:**

நாயகர் தனியே போகாமல் என் நெஞ்சைத் துனணக் கூட்டிப் போனவர் என் அருமையும் பெருமையும் உள்ள நெஞ்சைத் தனியே விடார், தாமும் கூட வருவார்.

**காளிங்:**

அருங்கலை கற்றவர் அருகு சென்று பெருங்கலை ஞானம் பெறுதல் வேண்டித் தம் பண்பு அறிவு தான் ஒரு பருவம் செய்து எழுந்த உள்ளமே அதற்கு உறுதுணையாகக் கொண்டு ஓதற்குப் போனவரது வரவை நச்சி இது பற்றுக் கோடாக இன்னும் இறந்துபடாது உளேன் என் நெஞ்சமே.

எனவே, இதனாலும் இவளது தூது விடுதல் பயன் என்பது பொருள்.

உரம்-அறிவு, 'உரநசைஇ' என்பது இவர் பாடம்.

**வெ.இராம:**

வாழ்க்கைக்கு வலிமையான பொருள் தேடும் ஆசையுடன் என்னைப் பிரிந்து போயிருக்கிற காதலர் திரும்பி வருவதில் ஆசைவைத்து அந்த ஆசைக்கு என் மனமே அவரை மறவாமல் எனக்குத் துணை புரிவதனால் நான் இன்னும் உயிரோடு இருக்கிறேன்.

**தெ. பொ.மீ:**

உரன் என்பதற்கு அறிவு என்றேனும், நில்லா வுலகத்து நிலையே அறன் என்றேனும் பொருள் கொள்ள இடமுண்டு. இவ்வாறு அறனும் பொருளும் கூறுகின்றமை போல் இன்பம் பற்றிய பிரிவினை வள்ளுவர் கூறுகின்றிலர்.

**முடிநிலை:**

உரையாசிரியர்கள் எல்லோரும் பொதுவாகப் பிரிவுக் குறளாக இதனைக் கருதினும், பகைவயிற் பிரிவாகப் பரிமேலழகரும் ஓதற்பிரிவாகக் காளிங்கரும் பொருள்வயிற் பிரிவாக இராமலிங்கம் பிள்ளையும் கொண்டுள்ளனர். 'உரன்' என்பதற்கு வெல்லுதல், வலிமை, அறிவு, பொருள், அறம் எனக் கூறப் பெறும் பொருள்களுள், வலிமை, அறிவு என்பன கொள்ளத்தகும். 'உள்ளந் துணையாகச் சென்றார்' என்ற விடத்துத் தலைவியின் உள்ளம்

என்று கொண்டு எழுதிச் செல்லும் பரிதி உரைக்குக் குறளில் யாதும் இடமில்லை. உரன் நசைஇச் சென்றார் எனவும் வரல் நசைஇ உள்ளந் துணையாக இன்னும் உளேன் எனவும் இராமலிங்கம்பிள்ளை கொண்டு கூட்டுவது வரவேற்கத் தகுவ தன்று. இக்குறளைக் காளிங்கர் தனிப்படர் மிகுதியில் இறுதிக் குறளாகக் கொண்டுள்ளார்.

**1264.** **கூடிய காமம் பிரிந்தார் வரவுள்ளிக்**
**கோடுகொ டேறுமென் னெஞ்சு.**

**பரிமே:**

(ஆற்றாமை மிகுதலின் இடையின்றி நினைக்கற்பாலை யல்லை; சிறிது மறக்கல் வேண்டும் என்ற தோழிக்குச் சொல்லியது).

நீங்கிய காமத்தராய் நம்மைப் பிரிந்து போயவர் மேற்கூடிய காமத்துடனே நங்கண் வருதலை நினைந்து, என்னெஞ்சு வருத்த மொழிந்து மேன்மேற் பணைத்தெழாநின்றது.

'ஒடு'வுருபு விகாரத்தாற் றொக்கது. கோடுகொண்டேறலாகிய மரத்தது தொழில் நெஞ்சின்மேல் ஏற்றப்பட்டது.

**மணக்:**

கூடுதற்கு அரிய காமத்தைக் கூடப் பெற்றுப் பிரிந்தவர் வருவாராக நினைந்தே என் நெஞ்சம் மரத்தின் மேலேறிப் பாராநின்றது.

உயர்ந்த மரத்தின் மேல் ஏறினால் சேய்த்தாக வருவாரைக் காணலாம் என்று நினைத்து அதனை ஏறிற்றாகக் கூறினாள்.

**பரிதி:**

'கூடிப்பிரிந்த நாயகர் வரும்வழி பார்த்து ஆசை என்னும் மலையில் என்நெஞ்சு ஏறிப் பார்க்கும்.

**காளிங்:**

தோழி! நம்மைப் பிரிந்த காதலர் பண்டு எம்மோடு கலந்த காலையினும் இன்னும் இங்ஙனம் வரும் என்று கொண்ட அவ்வரவை நினைத்து மற்று, இது பற்றுக் கோடாக முன்னம் போலுக்குச் செல்லாது பணைத்து ஏறுகின்றது காண் நெஞ்சமானது; எனவே, இதுவும் அவர் வருதற்கு ஒரு குறியாகும் என்று இன்புற்றாள்.

'கூடிய காலம்' என்பது இவர்பாடம்.

**பழைய: (உ.வே.சா.)**

கூடி யிருக்குங் காமத்தினைப் பிரிந்து போன காதலர் வருவதனை நினைத்துப் பூரிக்கும் என் நெஞ்சம்.

கோடேறுதல்; பணைத்துப் பூரித்தல். காதலர் வருவதனைக் கொம்பேறியும், மலையேறியும், கோடேறியும் பார்க்கும் என் நெஞ்சம் என்றுமாம்.

கோடு என்பது: கொம்பும்; மலையும், மேடுமாம்.

**கா. சு, பிள்ளை:**

பிரிந்த தலைவர் காதலாற் கூடும்பொருட்டு வருதலை நினைந்து, என் மனமானது மேன்மேலும் பருத்தெழுகின்றது.

**சாமி. சிதம்:**

என்னைப் பிரிந்து போன தலைவர் மிகுந்த காமத்துடனே நம்மிடம் வருவதை நினைத்து என் மனம் வருத்தம் நீங்கிக் கிளை கொண்டு வளர்கின்றது.

**அ. கு. ஆ:**

மனம் ஒரு குரங்கு; குரங்கு கொப்பு விட்டுக் கொப்பு தாவுவது போல மனமும் நிலையின்றிப் பல்வேறு வகையில் எண்ணி எண்ணி மாறும். இக்கருத்தையே வள்ளுவர் மனக்குரங்கு பல்வேறு வகையிற் கருதித் தாவும் என்று குறிப்பிட்டார்.

**முடிநிலை:**

பரிமேலழகர் பிரிந்தார் கூடிய சாமம் என மாற்றிக்கூட்டி எழுதும் பொருள் பொருத்தமாகப்படவில்லை. இதற்கு மணக்குடவர் கிடந்தாங்கே எழுதிய உரை இயல்பானது. கூடிய காமம் பிரிந்தார் என்பதற்கு மணக்குடவர் கொள்ளும் பொருளினும் மிகுந்த காமத்துடன் பிரிந்த தலைவர் எனக் கொள்ளும் பொருள் சிறக்கும். 'கூடிய' என்பதனைச் செய்யிய என்னும் வாய்பாட்டு வினை யெச்சமாகக் கொண்டு பிரிந்த தலைவர் காதலாற்கூடும் பொருட்டு எனக் கூறும் கா.சு. பிள்ளை உரையும் சிறப்பில்லை. 'கோடு கொடு ஏறும்' என்பதற்குப் பணைத்தெழும், ஆசை மலையில் ஏறிப்பார்க்கும், கிளைகொண்டு வளரும், கிளைக்குக் கிளை தாவும் என்னும் பொருள்கள் இயல்பாகா. 'கோடு' என்பதற்குப் பற்றுக்கோடு, மலை, மேடு என்னும் பொருள்களும் ஈண்டுப் பொருந்தா. வருகையை எதிர்நோக்குவார் மரமேறிப் பார்த்தல் ஒரு மரபாதலின், அம் மரபை வைத்துப்பாடிய ஆசிரியர் கருத்திற்கேற்பக் 'கோடு கொடு ஏறும்' என்பதற்கு மரத்தின் மேல் ஏறிப் பார்க்கும் என எழுதிய மணக்குடவர் உரை மிக இயல்பாகும். கோடு என்பதற்கு மரக்கிளை எனக் கொள்ளினும், சாமி சிதம்பரனார் கிளை கொண்டு வளரும் என்றும் அ.கு. ஆதித்தனார் கிளைக்குக்கிளை தாவும் என்றும் கூறும் பொருள்கள் சிறப்பில. கோடு கொடு ஏறும்-என்பதில் வரும் 'ஏறும்' என்னும் சொல் அப்பொருள்கட்கு இடந்தராது.

**1265.** **காண்கமற் கொண்கனைக் கண்ணாரக் கண்டபி**
**னீங்குமென் மென்றோட் பசப்பு.**

**பரிமே:**

(தலைமகன் வரவு கூறி ஆற்றாயாய்ப் பசக்கற் பாலை யல்லை யென்ற தோழிக்குச் சொல்லியது.)

என் கண்களாரும் வகை என் கொண்கனை யான் காண் பேனாக; அங்ஙனம் கண்டபின் என் மெல்லிய தோளின்கட் பசப்புத் தானே நீங்கும்.

காண்க என்பது ஈண்டு வேண்டிக்கோடற் பொருட்டு. அது வேண்டும் என்பதுபட நின்றமையின் 'மன்' ஒழியிசைக்கண் வந்தது.

**மணக்:**

என் கண்கள் கொண்கனை நிறையக் காண்பனவாக; அவனைக் கண்ட பின்பு எனது மெல்லிய தோளில் உண்டான பசலை நீங்கும்.

இது காண்டல் வேட்கையாற் கூறியது.

**காளிங்:**

நெஞ்சமே, யான் அங்ஙனம் நோக்குகின்ற இடத்து மற்று எம் கண்ணார யாம் அவரைக் காணப் பெறுவோமாக; மற்று அவரை கண்ட பொழுதே எம் தோள் பசப்பு அனைத்தும் விட்டு நீங்கும்.

'மன்' என்பது அசைச்சொல்.

**முடிநிலை:**

துறையமைப்பில் மணக்குடவருக்கும் பரிமேலழகருக்கும் உள்ள வேறுபாடு நோக்குக. 'காண்க' என்பதற்கு எழுவாயாக யான் என்பதனைப் பரிமேலழகர் வருவித்துரைக்க, மணக்குடவர் என்கண்கள் என்பதை வருவித்துரைப்பர். 'மன்' என்பதை அசைச்சொல் எனக் கொள்வதினும் ஒழியிசை எனக் கொள்ளுதல் பொருட் சிறப்பினது.

**1266.** வருகமற் கொண்க னொருநாட் பருகுவன்
பைதனோ யெல்லாங் கெட.

**பரிமே:**

(தலைமகன் வரவுகூறி 'ஆற்றாயாய்ப் பசக்கற்பாலை யல்லை' என்ற தோழிக்குச் சொல்லியது.)

இத்துணை நாளும் வாராக் கொண்கன் ஒருநாள் என்கண் வருவானாக; வந்தாற் பையுளைச் செய்கின்ற இந்நோயெல்லாங் கெட அவ்வமிழ்தத்தை வாயில்கள் ஐந்தானும் பருகக்கடவேன்.

**மணக்:**

கொண்கன் ஒருநாள் வருவானாக வேண்டும்; வந்தானாகில் என் பசலை நோயெல்லாங் கெடப் பருகுவேன்.

இது, வரவு வேட்கையால் கூறியது.

**காலிங்:**

தோழி! மற்று அவர் வருக; வந்தால் பருகுவல் என்றது என்னையோ எனில், இங்ஙனம் இற்றை நாள் அன்றேனும் மற்று ஒருநாள் ஆயினும் கடிதின் வருவார்; அவ்வாறு வந்தபொழுதே யான் நெஞ்சு இரக்கத்தோடு உழந்த, தனித்துயர் எல்லாம் கெடுமாறு மெய் வாய் கண் மூக்குச்செவி என்கின்ற ஐம்புலன்களும் அவரிடத்து அவாவிச் செல்கின்ற வேட்கை மிகுதி நோக்கிப் பருகிக் கொள்வேன்.

**பழைய: (உ.வே.சா.)**

இத்தனை நாளும் வாராத கொண்கன், ஒருநாள் என்கண் காண வருவானாகில் இத்தனை நாளும் பட்ட பாடெல்லாந் தீர அவனது அதர பானமாகிய மருந்தைக் குடிப்பேன்.

**வெ. இராம:**

கணவர் வரட்டும் (வந்துவிட்டால்) ஒரே நாளில் துன்பமிக்க காமநோய் முழுதும் ஒழிந்து போகும்படியாக (மருந்தைக்) குடித்து விடுவேன்.

கணவர் மட்டும் வந்துவிடட்டும். இந்த வேதனை மிகுந்த காமநோயும் (அதையொட்டிய துன்பங்கள்) எல்லாம் ஒரேநாளில் ஒழிந்து போகும்படியாகக் காம இன்பம் பருகி (பரிகாரம்) செய்து கொள்வேன்.

**முடிநிலை:**

பரிமேலழகரும் மணக்குடவரும் கொண்ட துறைகளில் உள்ள வேறுபாடு காண்க. 'பைதல் நோய்' என்பதற்குப் பசலைநோய் என மணக்குடவரும் துன்பத்தைச் செய்கின்ற காமநோய் எனப் பரிமேலழகரும் நெஞ்சு இரக்கத்தோடு உழந்த தனித்துயர் எனக் காளிங்கரும் துன்பமிக்க காமநோய் என இராமலிங்கம் பிள்ளையும் உரைப்பர். இவற்றுள் துன்பந்தரும் காமநோய் என்னும் பொருள் சிறப்பினது. பரிமேலழகர் கூறும் வாயில்கள் ஐந்து என்பது மெய் வாய் கண் மூக்குச் செவி என்னும் ஐம்பொறிகளை உணர்த்தும். 'பருகுவன்' என்னும் சொல் கருதிப் பழைய உரை தலைவனது அதரபானத்தை வருவித்துரைக்கும். 'நோய்கெடப் பருகுவன்' என்ற தொடர் நோக்கிச் சில உரையாசிரியர்கள் மருந்தைக் குடிப்பேன் எனப் பொருத்தமாக எழுதியுள்ளனர் இக்குறளுக்கு அடிப்படையான உரைவேறுபாடில்லை. விளக்கங் களில் சிலவேற்றுமை காணலாம்.

**1267. புலப்பேன்கொல் புல்லுவேன் கொல்லோ கலப்பேன்கொல்
கண்ணன்ன கேளிர் வரின்.**

**பரிமே:**

[தலைமகன் வரவு கூறி ஆற்றாயாய், பசக்கற்பாலை யல்லை என்ற தோழிக்குச் சொல்லியது.]

கண்போற் சிறந்த கேளிர் வருவ ராயின், அவர் வரவு நீட்டித்தமை நோக்கி யான் புலக்கக் கடவேனோ, அன்றி என் ஆற்றாமை நோக்கிப் புல்லக் கடவேனோ, அவ்விரண்டும் வேண்டுதலான் அவ்விரு செயல்களையும் விரவக் கடவேனோ, யாது செய்யக்கடவேன்?

'இனிக் கலப்பேன்கொல்' என்பதற்கு ஒரு புதுமை செய்யாது பிரியாத நாட்போலக் கலந்தொழுகுவேனோ என்று உரைப்பாரும் உளர்,

**பரிப்:**

என் கண்போன்ற காதலர் வருவர் ஆயின் நம்மை நினையாமையை நினைத்துப் புலந்து நிற்பேனோ? நெட்டாறு நீந்தி வருகின்றார் ஆதலின், எதிர்சென்று புல்லிக் கொள் வேனோ? இவையிரண்டும் செய்யாதே வேட்கை தீரக் கலப்பேனோ? இவை மூன்றினும் யாது செய்வேன்.

இது கண்டாற் செய்வன இவை ஆதலின், இவை மூன்றும் செய்யவேண்டாநின்றது என்று ஆராமை கூறியது.

**'கலப்பேன்கொல்'** என்பதற்குக் கலவி நலம் கட்டுரைப் போமோ? எனப் **பரிதியும்** ஒரு புதுமை செய்யாது பிரியாத நாட்போலக் கலந்தொழுகுவேனோ எனப் **பிறரும்** கூறுவர்.

**முடிநிலை:**

இக்குறளுக்குக் 'கலப்பேன் கொல்' என்பதற்குத்தான் வேறு பாடு தோன்ற உரையாசிரியர்கள் பொருள் எழுதியுள்ளனர். ஒரு புதுமை செய்யாது பிரியாத நாள்போலக் கலந்தொழுகு வேனோ, வேட்கை தீரக் கலப்பேனா, கலவி நலம் கட்டுரைப் போமோ, புலத்தலையும் புல்லுதலையும் விரவக் கடவேனோ என்று கூறும் பொருள்களுள், வேட்கை தீரக் கூடுவேனோ (கலப்பேனோ) என்பது சிறந்து நிற்கின்றது.

**1268. வினைகலந்து வென்றீக வேந்தன் மனைகலந்து**
**மாலை யயர்கம் விருந்து.**

**பரிமே:**

(வேந்தற் குற்றுழிப்பிரிந்த தலைமகன் வினை முடிவு நீட்டித் துழித் தலைமகளை நினைந்து தன்னுள்ளே சொல்லியது.)

வேந்தன் வினை செய்தலைப் புரிந்து வெல்வானாக; யாமும் மனைவியைச் சென்று கூடி ஆண்டை மாலைப் பொழுதிற்கு விருந்தயர்வோமாக.

மனை—ஆகுபெயர். நான்கனுருபு விகாரத்தாற் றொக்கது. பிறரெல்லாம் இதனைத் தலைமகள் கூற்றாக்கி யுரைத்தார். தலைமகனைக் கூறாது வேந்தன் வெல்க என்றும் மனை கலந்து என்றும் மாலைப் பொழுதின்கண் விருந்தயர்கம் என்றும் வந்த அவ்வுரை தானே அது கூடாமைக்குக் கரியாயிற்று.

**மணக்:**

நம் வேந்தன் போரின் கண்ணே பொருந்தி வெல்வானாக; யாமும் மனையிலே பொருந்தி இம்மாலைப் பொழுதிலே நம் காதலர்க்கு விருந்து செய்வேமாக.

வருதற்கு இடையீடு அவன் வினை முடியாமை என்று நினைத்து அவனை வெல்க என்றாள். மனை—அட்டில்.

**பரிதி:**

வினை வென்று வரும் நாயகனது மால் என்னும் பசிக்கு என் ஆகம் விருந்திடுவேன்.

**காளிங்:**

காலைப் பகையோடு எதிர்மயங்கிப் பொருது வெல்வோனாக நம் வேந்தனானவன்; என் எனில், யாமும் இவற்றை மாலை எல்லைக்கு இம்மனைக்கண் விருந்து இயற்றுவம் ஆக அவரோடு வரூஉம் விருந்தினர் அனைவர்க்கும்.

**ந.சி.க:**

அரசன் போர் செய்து வெல்வானாக; (யாமும்) மனைவியைச் சேர்ந்து மாலைக் காலத்தில் விருந்து உண்போமாக.

**வெ.இராம:**

வேலையைச் செய்து வெற்றிகரமாக முடித்துவிட்டு அரசன் விடை கொடுக்க மனைக்குச் சென்று மாலை விருந்தாகிய கலவியின்பத்தில் அயர்வு தோன்றும் வரை அனுபவிப்போம்.

வேந்தன்ஈக—வேந்தன் விடைகொடுக்க.

மாலை விருந்து—காமக்கலவி.

**வரத:**

போருக்குச் சென்ற அரசன் வெற்றியோடு வினைமுடித்து ஊருக்குத் திரும்பட்டும். நாமும் அன்று மாலை மனைவியோடு அவள் விருந்தாக இருந்து மகிழ்வோமாக.

**முடிநிலை:**

இக்குறட்கு வேந்தன் வேறு காதலன் வேறு எனக் கொண்டு பரிமேலழகரும் மணக்குடவரும் உரை செய்வர். வேந்தனே தலைவன் எனக் கருதிக் கூறும் பரிதி உரை ஏற்புடையது. பரிமேலழகர் இக்குறளையும் இனிவரும் குறள்களையும் தலைவன் கூற்றாக்குவர். மணக்குடவர், பரிப்பெருமாள் முதலியோர் இவ் வதிகாரம் முழுவதுமே தலைவி கூற்று என்பர். இவ்வதிகாரக் குறள்கள் தலைவி கூற்றுக்கே எளிதிற் பொருந்துவனவாக உள்ளன. எனினும், இந்த ஒரு குறளைப் பரிமேலழகர் கொண்டாங்குத் தலைவன் கூற்றாகக் கொள்ளுதற்கும்இடனுண்டு. 'மாலை அயர்கம் விருந்து' என்னும் மூலப்பகுதிக்குப் பரிதியின் உரை சிறிதும் பொருந்துவதாக இல்லை. மாலை அயர்கம் விருந்து என்னு மிடத்து, மாலைக்கு விருந்து செய்வோம் என நான்கனுருபு விரிப்பது இயல்பில்லை. மாலைப் பொழுதில் தலைவனுடன் வரும் பலர்க்கும் விருந்திடுவோம் எனக் காளிங்கர் உரைப்பது பொருத்தமேயாம். இராமலிங்கம் பிள்ளை வென்றீக என்னும் வினைத்திரிசொல்லில் ஈக என்பதைப் பிரித்து விடை கொடுக்க எனப் பொருள் கூறுவது ஏற்புடைத்தன்று. மாலை விருந்தயர்கம் என இயைத்துக் காமக் கலவி இன்பத்தை அயர்வு தோன்றும் வரை அனுபவிப்போம் என அவர் உரைப் பதும் அத்தகைத்தே. 'மனைகலந்து மாலை அயர்கம் விருந்து' என்பதற்கு மாலை மனைவியோடு அவள் விருந்தாக இருந்து மகிழ்வோமாக எனக் கூறும் வரதராசனார் பொருளும் அத் துணைச் சிறப்பில்லை. இதற்கு அரசன் போர்செய்து வெல் வானாக; (யாமும்) மனைவியைச் சேர்ந்து மாலைக்காலத்தில் விருந்து உண்போமாக எனக் கூறும் ந.சி. கந்தையா பிள்ளை உரை ஏற்கலாம், இவர் உரைக்கு அரசன் வேறு தலைவன் வேறு எனக் கோடல் வேண்டும்.

**1269. ஒருநா ளெழுநாள்போற் செல்லுஞ்சேட் சென்றார்
வருநாள்வைத் தேங்கு பவர்க்கு.**

**பரிமே:**

[வேந்தற் குற்றுழிப் பிரிந்த தலைமகன் வினை முடிவு நீட்டித்துழித் தலைமகளை நினைந்து தன்னுள்ளே சொல்லியது.]

சேணிடைச் சென்ற தங் காதலர் மீண்டு வரக் குறித்த நாளை யுட்கொண்டு அது வருந்துணையும் உயிர்தாங்கி வருந்து மகளிர்க்கு ஒரு நாள் பல நாள் போல நெடிதாகக் காட்டும்.

'இருநாள்' என்று பாடமோது வாருமுளர்.

**பரிப்:**

இது தலைமகன் குறித்த நாள் வருவதன் முன்னம் வருந்துகின்றது என்னை என்ற தோழிக்கு அது தானும் கடிது வருகின்றது இல்லை என்று தலைமகள் சொல்லியது.

**முடிநிலை;**

'இருநாள்' என்று பாடமோதியவர் யார் என்று புலப்பட்டிலது. துறையமைப்பில் பரிமேலழகருக்கும் பரிப்பெருமாளுக்கும் வேறுபாடு காணப்படும். பரிமேலழகர் இக்குறளைத் தலைவன் கூற்றாகக் கொள்ளப் பரிப்பெருமாள் முதலியோர் தலைவி கூற்றாகக் கொண்டுள்ளனர். 'வருநாள்வைத் தேங்குபவர்க்கு' என்ற நடையை நோக்கின், தலைவி கூற்றென்றலே மிகப் பொருத்தம் என்பது புலனாகும்.

**1270. பெறி னென்னாம் பெற்றக்கா லென்னா முறினென்னா
முள்ள முடைந்துக்கக் கால்.**

**பரிமே:**

(வேந்தற் குற்றுழிப் பிரிந்த தலைமகன் வினைமுடிவு நீட்டித்துழித் தலைமகளை நினைந்து தன்னுள்ளே சொல்லியது.)

காதலி நம் பிரிவினை யாற்றாது உள்ள முடைந்து பட்டவழி நம்மைப் பெறக்கடவளானாலென்? அது வன்றியே பெற்றாலென்? அது வன்றியே, மெய்யுறக் கலந்தாற்றானென்? இவை யொன் றானும் பயனில்லை.

இம் மூன்றும் உடம்பொடு புணர்த்திக் கூறப்பட்டன; அதன் மேலும் முன்னை வழக்குண்மையின். அதற்கு முன்னே யான் செல்ல வேண்டும் என்பது கருத்தாகலின், விதுப்பாயிற்று. இது தலைமகள் கூற்றாயவழி இரங்கலாவ தல்லது விதுப்பாகாமை யறிக.

**மணக்:**

எனது உள்ளம் உடைந்து போயின், பின்பு அவரைப் பெறுவே மென்று இருந்ததனாற் பயன் என்னுண்டாம்? முன்பே பெற்றேமானேம். அதனால் பயன் என்னுண்டாம்? இப்பொழுது உற்றேமாயின், அதனால் பயன் என்னுண்டாம்?

இது வருவாரென்ற தோழிக்குத் தலைமகள் கூறியது

**பரிதி:**

நாயகர் வந்தால் என்ன? காதலின்பம் விளைந்தால் என்ன பயன்? பக்குவம் தப்பி உள்ளம் உடைந்து உக்கிப் போன தினமே.

**காளிங்:**

தோழியை நோக்கித் தலைவி கூறிய தென்பர். 'உறி லென்னாம்' என்பது இவர் பாடம்.

**வெ. இராம:**

என் மனைவி மனம் உடைந்து ஏதேனும் கேடடைந்து விட்டால் நான் வந்த காரியம் வெற்றி பெற்றால் தான் என்ன? அதற்காக வேந்தனிடம் பரிசும் விடையும் பெற்றுவிட்டால் தான் என்ன? செல்வத்தோடு என் மனைவியிடம் சென்றடைந்தால் தான் என்ன? (ஒரு பயனுமில்லை).

**வரத:**

தலைவியின் உள்ளமானது உடைந்து இறந்து விடுவாளா னால், நான் அவளை அடைந்து என்ன பயன்? அவள் என்னைப் பெற்றால்தான் என்ன பயன்? அல்லது அவளோடு முன்னால் கூடின நட்பினால் தான் என்ன பயன்?

**தண்ட:**

பெறின், பெற்றக்கால், உறின் என்பன மூன்றும் எதிர்கால வினையெச்சங்கள். அடைந்தால் என்னும் பொருளனவே. பரிமேலழகர் இம் மூன்றிற்கும் வேற்றுமை உண்மையை விளக்க உளங் கொண்டு 'பெறின்' என்பதற்குப் பெறக்கடவளானால் எனத் தலைவியின் மேலதாயும் 'பெற்றக்கால்' என்பதற்குப் பெற்றால் எனவும் 'உறின்' என்பதற்கு மெய்யுற்றால் எனவும் தலைவன் வினையாகவும் பொருள் கண்டார். விசேட உரையில் இம் மூன்றும் உடம்பொடு புணர்த்துக் கூறப்பட்டன என்றார். உடம்பொடு புணர்த்துக் கூறுதல் உத்தியுள் ஒன்றாக உரையிற் கோடலால் கொள்ளப் பெற்ற ஒன்று. இதன் இலக்கணமாவது கூறும் இலக்கியத்திலேயே இலக்கணமும் பெறவைத்தல். அஃதாவது, எழுத்ததிகாரத்து எழுத்துக்கட்குப் பிறப்பு வன்மை மென்மை முதலிய கூறவே உரு என்பது ஒன்று உண்டு என்னும் இலக்கணமும் கொள்ளவைத்தாற் போல்வது. கோ. வடிவேலுச் செட்டியார் அவர்கள் கூற வேண்டிய அருத்தத்தை வெளிப் படையாகக் கூறாது தான் கூறுவதன் குறிப்பினால் விளங்கச் செய்வது இது. பெறின் முதலிய மூன்றும் உடன் கூறியவதனால் தலைவன் பிரிந்தவழி, தலைவி இறந்துபடும் வழக்குண்மையை உணர்த்தியதாம் என்பர் சடகோபராமாநுசாச்சாரியார். குறிப்பில் உள்ளம் உடைந்து உக்கவிடத்து இருப்பது உடம்பு ஒன்றுமே யாதலால் அதனோடு சேர்த்துப் 'பெறின்' முதலிய மூன்றனையும் கூறியதாக, பாஷாகவிசேகர ரா. இராகவய்யங்கார் சுவாமிகள் கூறியதாகக் குறிப்பித்தனர். இம் மூன்று கருத்துக்களுள் ரா. இராகவய்யங்கார் அவர்கள் கருத்துத் தெளிவாக இருப்பது காண்க. பரிதியார் மனம் உடைந்து சிதறிய விடத்து மணங் கூடாத நாயகரைப் பெற்றால் என்ன? பெறாவிடில் என்ன? என்று

உரை காண்பர். இவ்வுரைக்கு இவர் கொண்ட பாடம் பெற்றக் கால் என்னாம்? பெறாவிடி லென்னாம் என்றிருக்கும் போலும். இந்தப் பாடம் இருப்பின் பெறின், பெற்றக்கால், உறின் என்ற ஒரு பொருள் தரும் சொல் மூன்றிற்கும் வேற்றுமை தோன்றப் பொருள் கற்பிக்கும் சிரமும் குறையலாம். ரா.ரா. அவர்கள் சொல்லிய குறிப்பிலும், அதன் மேலும் வழக்குண்மையின் என்பது விளக்கமில்லாமை சிந்தித்தற் குரியது. இங்ஙன மன்றி, தலைவிக்கு மனம் உடைந்து சிதறியவிடத்துத் தலைவனாய தன்னை அவள் பெற்றாலும் உற்றாலும் என்ன பயன் என்றும் அடையலாம் என்ற முயற்சி சிதறிக் கெட்ட பிறகு பயன் என்ன என்றும், உயிர் கெட்டுச் சிதறி வெளிப்பட்ட பிறகு பயன் என்ன என்றும் உரை காண்டலும் உண்டு. உள்ளம் உயிராதலைக் 'காணும் கண்ணுக்குக் காட்டும் உளம்போல்' என்ற சிவஞான போதச் சூத்திரம் கொண்டும் துணியலாம்.

**முடிநிலை:**

இக்குறளைப் பரிமேலழகர் முதலியோர் தலைவன் கூற்றாகவும் மணக்குடவர் முதலியோர் தலைவி கூற்றாகவும் கொண்டுள்ளனர். இவ்வேற்றுமையால் உரைப் பொருள்கள் வேறுபடுகின்றன. பெறின் என்னாம், பெற்றக்கால் என்னாம் என்பவற்றுக்கு உரை தெளிவில்லை. உள்ளம் உடைந்து உக்கக்கால் என்பதற்கு இறந்துபட்டால் என்னும் உரை பொருந்தாது. நெஞ்சழிந்து கெட்டுப் போனால் என்ற அளவில் பொருள்கோடல் தகும் என்னும் தண்டபாணி தேசிகர் உரை சாலும். 'பெறின்' என்பதற்கு வெற்றி பெற்றால் என்றும் 'பெற்றக்கால்' என்பதற்கு வேந்தனிடம் பரிசும் விடையும் பெற்று விட்டால் என்றும் கூறும் இராமலிங்கம் பிள்ளை உரை பொருத்தமாகப் படவில்லை. 'உறின்' என்பதற்கு அவளோடு முன்னால் கூடின நட்பினால் தான் என்னபயன் எனக் கூறும் வரதராசனார் பொருளும் சிறப்பில்லை. 'உள்ளம்' என்பதற்கு முயற்சி, உயிர் எனக் கொள்ளலும் உண்டு எனத் தண்டபாணி தேசிகர் காட்டுவர். அவற்றினும் மனம் என்ற பொருளே இங்குப் பொருந்தும்.

# 128. குறிப்பறிவுறுத்தல்.

அஃதாவது தலைமகன், தலைமகள், தோழி என்றிவர் ஒருவர் குறிப்பினை ஒருவர்க்கு அறிவுறுத்தல். இது, பிரிந்துபோய தலைமகன் வந்து கூடியவழி நிகழ்வதாகலின், அவர்வயின் விதும்பலின் பின் வைக்கப்பட்டது என அதிகார விளக்கமும் முறை வைப்பும் கூறுவர் பரிமேலழகர்.

குறிப்பறிவுறுத்தலாவது குறிப்பினை அறிவுறுத்தல் என்பர் மணக்குடவர்.

மேல் தலைமகள் குறிப்புத் தலைமகன் அறிந்தான் என்றது அல்லது இயற்கைப் புணர்ச்சி புணர்ந்து நீங்கின தலைமகள் குறிப்புத் தோழி அறிதலும், இரந்து பின் நின்ற தலைமகன் தோழி குறிப்பு அறிதலும், குறை நயப்பித்தவழித் தலைமகன் குறிப்புத் தோழி அறிதலும், நொதுமலர் வரைய வந்துழி வேறுபட்ட தலைமகள் குறிப்புச் செவிலி அறிதலும், பிரிதல் உற்ற தலைமகன் குறிப்புத் தலைமகள் அறிதலும், பிரிவு உணர்த்தச் சென்ற தோழி குறிப்புத் தலைமகன் அறிதலும், அவ்வழித் தலைமகள் குறிப்புத் தோழி அறிதலும் இவை எல்லாம்இயற்கைப் புணர்ச்சிக்குப் பின்பு இத்துணையும் பிரிந்துழி நிகழ்பவை கூறினார் ஆதலானும் இனிப் புணர்ச்சி விதும்பல் கூறுகின்றார் ஆதலானும் ஈண்டுக் கூறப்பட்டது என விளக்கந்தருவர் பரிப்பெருமாள்.

இனி இவ்வாறு ஓதற்குப் பிரிதல் முதலாகிய பலவகைப் பிரிவுகளையும் உணர்த்துவான் எடுத்துக் கொண்டார், அவற்றுள் இருவர் உள்ளத்துக் குறித்தது ஒன்று தெரிந்து நோக்க மெய்க் குறியான் விளங்கும் அன்றே; அதனால் மற்று இதன் பின்னரே அதனை அறிவிக்கின்றது மேலை அதிகாரம் என விளக்கம் தருவர் காளிங்கர்.

பிறர் மனத்திலே உண்டான எண்ணத்தை வாயினால் சொல்லி அறியாது குறிப்பினால் உணர்ந்து கொண்டு அவ்வுணர்ச்சியைக் கூறுவது, குறிப்பு அறிவுறுத்தலாம். தலைவியின் குறிப்பைத் தலைவனும் தோழியும் அறிந்து கூறுவது இங்குக் கூறப்பட்டது. பிரிந்து சென்ற தலைவன் கூடினவுடன் தலைவியின் குறிப்பை அறிவது தானே முதல் நிகழ்ச்சி. அதனால் அதிகார அடைவும் விளங்குகிறது என்பர் வரதராசனார்.

**1271. கரப்பினுங் கையிகந் தொல்லாநின் னுண்கண்**
**ணுரைக்க லுறுவதொன் றுண்டு.**

**பரிமே:**

(பிரிந்து கூடிய தலைமகன் வேட்கை மிகவினாற் புதுவது பன்னாளும் பாராட்டத் தலைமகள் இது வொன்றுடைத் தென அஞ்சிய வழி அதனை யவள் குறிப்பான் அறிந்து அவன் அவட்குச் சொல்லியது).

நீ சொல்லாது மறைத்தா யாயினும், அதற்கு உடம்படாதே நின்னைக் கைகடந்து நின்னுண் கண்களே எமக்குச் சொல்ல லுறுவ தொரு காரிய முண்டா யிராநின்றது; இனி யதனை நீயே தெளியச் சொல்வாயாக.

கரத்தல்-நாணான் அடக்குதல்.

**பரிப்:**

நீ மறைக்கவும் நின்னைக் கைகடந்து மறைத்தற்கு இசையாவாய் நின் கண்கள் சொல்லுவது ஓர் அருள் உண்டு.

இயற்கைப் புணர்ச்சி புணர்ந்த தலைமகளை இவ்வேறுபாடு எற்றினான் ஆயிற்று என்று வினாவிய தோழிக்குச் சுனை ஆடினேன் என்று தலைமகள் மறைத்தவிடத்து அவள் நாணம் நீங்குதல் பொருட்டுப் புணர்ச்சி உண்மை அறிந்தமை குறிப்பினால் தோழி சொல்லியது. இவ்வாறு ஒரு புறம் தோன்றச் சொல்லாக்கால் நாணத்தாலே இறந்துபடும்.

**பரிதி:**

ஒளிக்கினும் ஒளிக்கப்படாது; விரக மகிழ்ச்சி கண் பார்வையில் காட்டும்.

**காளிங்:**

'ஒண்கண்' என்பது இவர் பாடம். தலைவற்குக் கண்ணினால் தன் குறிப்பு அறிவுறுத்தச் செலவு அழுங்கியமை பொருள்.

**இறை:**

பெருந்திறத்தால் உள்ளத்துள் மறைத்த போழ்தும்
பேதையுன்றன் கைத்திறமை எல்லாம் மீறிக்
கருவண்ண மையுண்ட கண்எனக்குக்
கடிதுரைக்க முயலுமொரு செய்தி உண்டே.

**முடிநிலை:**

கற்புத் துறையாகப் பரிமேலழகரும் காளிங்கரும் களவுத் துறையாகப் பரிப்பெருமாளும் கொள்வர். பரிதி 'கையிகந் தொல்லா' என்பதை முற்றாகக் கொண்டு பொருள் கூறுவது சிறப்பில்லை. 'கையிகந்து' என்பதற்குக் கைத்திறமை எல்லாம் மீறி என்னும் இறையரசனார் கூறும் பொருள் இயல்பில்லை.

**1272. கண்ணிறைந்த காரிகைக் காம்பேர்தோட் பேதைக்குப்**
**பெண்ணிறைந்த நீர்மை பெரிது.**

**பரிமே:**

(நாணால் அவள் அது சொல்லாளாயவழி அவன் தோழிக்குச் சொல்லியது.)

என் கண்ணிறைந்த அழகினையும் வேயை யொத்த தோளினையுமுடைய நின் பேதைக்கு, பெண்பாலாரிடத்து நிறைந்த மடமை அவ்வளவன்றி மிகுந்தது.

இலதாய பிரிவினைத் தன்கண் ஏற்றி அதற்கு அஞ்சுதலான் இவ்வாறு கூறினான்.

**பரிப்:**

இஃது இவள் வேறுபாடு எற்றினான் ஆயிற்று என்று வினாவிய செவிலிக்கு இவள் வடிவுக்குத் தக்க பெண்மை நிரப்பம் உடையவள் ஆனமையான் வந்தது போலும் என்று தலைமகள் குறிப்பைக் கூறியது.

பெண்மை நிரப்பம் கற்பு. பூத்தரு புணர்ச்சியானும், புனல்தரு புணர்ச்சியானும் ஒன்றைச் சொல்லுவதாகக் குறித்துக் கூறினாள் இத்துணையும் களவு.

**பரிதி:**

என் கண் நிறைந்து அடங்காத பேரெழில் பெற்ற பசு மூங்கில் ஒத்த தோளினை யுடைய பேதைக்குப் பெண்ணுக்குள்ள பக்குவம் பெரிது.

**காலிங்:**

பசும் பணை யொத்த பெருந்தோள் பேதையாட்குப் பண்டை நிறக் கவின் அன்றி இன்று தன்கண் எங்கும் புகுந்து நிறைந்த நிற அழகானது தனக்கு இயல்பாகிய நாணும் குடிகொண்ட தன்மை மிகப் பெரிதாய் இருந்தது காண். எனவே, தன் உள்ளத்துக் குறிப்பு எதிர்நின்றுரைத்தலைப் பெறாது குறிப்பிற் கண்ட தலைமகன் செலவழுங்கினான்.

'கண்ணிறைந்த காரிகை' என்பது பண்டை நலன் ஒழியத் தன்னிடம் எங்கும் புகுந்து நிறைந்து நிற்கின்ற புத்தழகு என்றது

**வெ.இராம:**

கண்ணைக் கவரும் அழகும் மூங்கிலைப் போன்ற மினுமினுப்பான தோள்களும் உடைய இவள் (இவ்வளவு அழகிழந்து மங்கிப் போய் இருக்கிறாளே!) இவளுக்குப் பெண்களின் இயல்பான நிறையுடைமை என்னும் குணம் அதிகமாக இருக்கிறது. அதனால் மிகுந்த வேதனைகளை சகித்திருக்கிறாள் என்பது தெரிகிறது.

பெண்நிறைந்த நீர்மை-பெண்ணின் நிறை குணமாகிய தன்மை.

**தேவ:**

பெண்ணிறைந்த நீர்மை யென்றது, அச்சமட நாணங்களை. மீண்டும் பிரிவுண்டென்று அஞ்சியதால் அச்சமும், இல்லாத பிரிவை ஏற்றிக் கொண்டதால் மடமையும், அதை வெளிவிட்டுச் சொல்லாமையால் நாணமும் வெளிப்பட்டன.

**முடிநிலை:**

கற்பியலில் தலைவன் தோழிக்குக் கூறியதாகப் பரிமேலழகரும் களவியலில் செவிலிக்குத் தோழி கூறியதாகப் பரிப்பெருமாளும் துறை வகுப்பர். காம்பேர் தோள் பேதைக்கு, கண் நிறைந்த காரிகை பெண்நிறைந்த நீர்மை பெரிது எனக் காளிங்கர் இயைப்பர். கண்நிறைந்த என்பதற்கு இடம் நிறைந்த என அவர் உரை செய்வர். இவை சிறப்பில. 'பெண்நிறைந்த நீர்மை' என்பதற்கு மடமை, கற்பு, பெண்ணுக்குள்ள பக்குவம், நாண் பெண்ணின் நிறை குணமாகிய தன்மை (நிறையுடைமை), அச்சம் மடம் நாண் என்று உரை கூறியுள்ளனர். இவற்றுள் மடமை என்ற பொருள் பொருந்தாது. அச்சம் மடம் நாணம் என்னும் பொருள் தகும். இப்பொருள் கொண்டு பாவாணர் தரும் விளக்கம் சிறப்பினது.

**1273. மணியிற் றிகழ்தரு நூல்போன் மடந்தை**
**யணியிற் றிகழ்வதொன் றுண்டு.**

**பரிமே:**

[நாணால் அவள் அது சொல்லாளாய வழி அவன் தோழிக்குச் சொல்லியது.]

கோக்கப்பட்ட பளிக்கு மணியகத்துக் கிடந்து புறத்துப் புலனாம் நூல்போல, இம்மடந்தையது அணியகத்துக் கிடந்து புறத்துப் புலனாகின்றதொரு குறிப்புண்டு.

அணி—புணர்ச்சியானாய அழகு.

**மணக்:**

கோவைப்பட்ட நீல மணியின்கண்ணே தோற்றுகின்ற நூல் போல, இம்மடந்தை அழகினுள்ளே இவள் மறைக்கவும் தோற்றுகின்றதொரு துன்பம் உண்டு.

**பரிப்:**

நொதுமலர் வரைய வந்துழி வேறுபட்ட தலைமகள் குறிப்புக் கண்டு அதற்குக் காரணம் என்னை என்று தோழியைச் செவிலி வினாவியது.

**பரிதீ:**

முத்துக்குள் ளிருந்த நூல் மேல் காட்டுமாப் போல நாயகி மனநிலை காட்டும்.

**வெ.இராம:**

மணிவடத்தில் தெரியக் கிடக்கிற நூல் போல் இந்தப் பெண்ணின் ஆபரணங்களால் அறியக்கூடிய உண்மை ஒன்று இருக்கிறது.

ஆபரணத்தில் அறியக் கிடப்பது என்னவென்றால் காதலியின் ஆபரணம் வெறும் வளையல்கள் மட்டுமாக இருப்பதும் அவைகளும் மிகவும் தொளதொளத்துப் போகும்படி அவள் மிக்க மெலிந்து போயிருப்பதும் (மனைவி சகித்திருக்கும் துன்பங்களை அவள் சொல்லாவிடினும் அவளுடைய வளையல்களே தெளிவாகத் தெரியப்படுத்துகின்றன என்பது கருத்து )

**முடிநிலை:**

மேலைக் குறள்கள் போலவே பரிமேலழகரும் பரிப்பெருமாளும் ஈண்டும் துறை வேறுபடுவர். 'மணி' என்பதற்கு நீலமணி என மணக்குடவரும் முத்து எனப் பரிதியும் பொருள் கூறுவர். நூல் நன்கு திகழ்வது பளிங்கு மணியில் ஆதலின் அங்ஙனம் பொருள் கொண்ட பரிமேலழகர் பொருளே சிறப்புடையது. 'அணி' என்பதற்கு ஆபரணம் என்னும் பொருள் ஈண்டுச் சிறப்பில்லை,

அணியிற் றிகழ்வ தொன்றுண்டு என்புழி 'ஒன்று' என்பதற்குப் புறத்துப் புலனாகும் குறிப்பு, துன்பம், மனநிலை, ஓர் உண்மை மெலிவு) என்று பலவாறு பொருள் கூறப் பெறுகின்றது. இப் பொருள்களெல்லாம் ஒருவாறு பிரிவுத் துன்பத்தைச் சுட்டுவனவே யாம்.

**1274. முகைமொக்கு ளுள்ளது நாற்றம்போற் பேதை
நகைமொக்கு ளுள்ளதொன் றுண்டு.**

**பரிமே:**

(நாணினால் அவள் அது சொல்லாளாய வழி அவன் தோழிக்குச் சொல்லியது.

முகையது முகிழ்ப்பி னுளதாய்ப் புறத்துப் புலனாகாத நாற்றம் போல நின்பேதை என்னொடு நகக் கருதும் நகையது முகிழ்ப்பி னுளதாய்ப் புறத்துப் புலனாகாததோர் குறிப்புண்டு.

நகை–புணர்ச்சி யின்பத்தால் நிகழ்வது.

**மணக்:**

மொட்டின் முகிழ்ப்பின்கண் உளதாகிய நாற்றம் போல, பேதையுடைய நகை முகிழ்ப்பின்கண்ணே உள்ளதோர் இன்பம் உண்டு.

இஃது இரந்து பின்னின்ற தலைமகனைத் தோழி நகை செய்து சேட் படுத்திய போது, இவள் குறிப்பு நமக்கு இன்பம் பயக்குமென்று அவள் தன்னெஞ்சிற்குச் சொல்லியது.

**பரிதி:**

அரும்புக்கு நாற்றம் போல நாயகி சிரிப்பிலே, அன்பு உண்டு அல்லது இல்லை என்று காட்டும்.

**வெ. இராம:**

(இதழ் விரியாவிடினும்) மலரப் போகின்ற பூ மொட்டுக்கு உள்ளே இருக்கிற மணம் (வெளியிலும் வீசுவது போல) (பல் தெரியாமல்) குவிந்திருக்கிற இப்பேதையின் உதடுகளின் உள்ளே [சிரிப்பு] இருக்கிறது (எனக்குத் தெரிகிறது.)

**பூ. அமிர்த:**

'ஒன்று' என்பதற்கு வாய்விட்டு வெளிப்படையாய்ச் சொல்ல வியலாக் கூட்ட இன்பத்தை விரும்பும் தலைவியின் உள்ளக் கிடக்கையை மறைந்திருக்கும் நறுமணத்திற்கு ஒப்பாக்கி ஒன்று எனச் சுட்டித் தலைவன் குறிப்பறிவுறுத்தலாக விளக்கம் தருவர்.

(வள்ளுவர் கண்ட உயிரினங்கள், 20)

**முடிநிலை:**

மணக்குடவரும் பரிமேலழகரும் இக்குறளைக் களவுக் குரியதாகக் கொண்டுள்ளனர். கற்பிற்குரியதாகக் கொண்டு எழுதும் பரிமேலழகர் துறை ஏற்புடையது. 'நாயகி சிரிப்பிலே அன்பு உண்டு அல்லது இல்லை என்று காட்டும்' என்னும் பரிதி உரை பொருந்தாது, தலைவியின் சிரிப்பு அன்பு இல்லை என்பதனைப் புலப்படுத்தாது ஆதலின் 'நகை மொக்குள் உள்ள தொன்றுண்டு' என்னும் தொடரில் 'ஒன்று' என்பது புறத்துப் புலனாகாததோர் குறிப்பு, இன்பம், அன்பு, சிரிப்பு, புணர்ச்சியின் பத்தை விரும்பும் எண்ணம் என்பனவற்றைச் சுட்டும் எனப் பலவாறு கூறுவர். இவற்றுள் புணர்ச்சியின்பத்தைக் காட்டுவதாக உரைத்தல் சிறப்பினது.

**1275. செறிதொடி செய்திறந்த கள்ள முறுதுயர்**
**தீர்க்கு மருந்தொன் றுடைத்து.**

**பரிமே:**

[நாணால் அவள் அது சொல்லாளாயவழி அவன் தோழிக்குச் சொல்லியது].

நெருங்கிய வளைகளை யுடையாள் என்கண் ணில்லாத தொன்றனை யுட்கொண்டு அது காரணமாக என்னை மறைத்துப் போன குறிப்பு, என் மிக்க துயரைத் தீர்க்கு மருந்தாவ தொன்றனை யுடைத்து.

உட்கொண்டது-பிரிவு. கள்ளம்-ஆகுபெயர்.

மறைத்தற் குறிப்புத்தானும் உடன்போக்கு உட்கொண்டது.

**மணக்:**

செறிந்த வளையினை யுடையாள் செய்தகன்ற களவு நீ உற்றதொரு துன்பத்தைத் தீர்ப்பதொரு மருந்தாதலை உடைத்து,

தோழி மெலிதாகச் சொல்லிக் குறை நயப்பித்த வழி கேளாரைப் போலத் தலைமகள் அகன்றசெவ்வியுள் எதிர்ப்பட்ட தலைமகற்கு நின்குறைமுடியும்; நீ இவ்விடைச்செல் என்று தோழி கூறியது.

**பரிதி:**

செறியப்பட்ட வளையுடையாள் செய்த குறி வளையின் ஒலி காட்டி அடங்கியது வருவதற்கும் இடமாக்கி ஆசை நோய்க்கு ஒரு மருந்தாயிற்று.

**காளிங்:**

நெஞ்சே! யான் அவள் தன்னைப் பெரிது அளிக்கவு அவள் முன்கைச் செறிந்த வளையானது பின்பு செய்துபோன கள்ளம் யான் அறிந்தேன். பிரிவு அஞ்சி இவள் தன் உள்ளத்து நின்ற துயரத்தைத் தான் தணிக்கும் உபாயம் ஒன்று உடைத்து எனவே, அவ்வளையானது இவள் தன் நெஞ்சிற் குறிப்பினை நமக்கு அறிவுறுத்திய அதனானும் செலவு ஒழிவதே பொருள்.

**வெ.இராம:**

ஒன்றோடொன்று மோதி சேர்ந்திருக்கும் வளையல்களை யுடைய இப்பெண் சகித்து முடிந்திருக்கிற புண்கள் எனக்கு வரக் கூடிய துயரங்களையும் தீர்த்துவிடும் மருந்து ஒன்றை உடையன. நான் பாக்கியசாலிதான் என்பது கருத்து.

'செறிதொடி' என்பது முன் பூரிப்பினால் கைகள் செழித்திருந்த போது ஒன்றோடொன்று மோதிக் குலுங்காமல் இருந்த வளையல்கள் இப்போது கைகள் மெலிந்து போனதால் மோதிக் குலுங்குகின்றன என்பதைக் குறிப்பது.

செய்து இறந்த—அனுபவித்து முடிந்த. கள்ளம்-புண்கள்; துன்பம்.

**முடிநிலை:**

பரிமேலழகரும் மணக்குடவரும் துறையில் வேறுபடுதல் நோக்கத் தகும். செறிதொடி என்பதைப் பிறரெல்லாம் அன்மொழித் தொகையாகக் கொள்வர். காளிங்கர் அங்ஙனம் கொள்ளாது வளையல் செய்த கள்ளம் எனப் பொருள் கூறி அக் கள்ளம் தலைவன் செலவழுங்கக் காரணம் என உரை எழுதுவர். இத்துறைக்கு அப்பொருளும் ஏற்கும். 'செய்திறந்த கள்ளம்' என்பதற்குச் செய்த குறி வளையின் ஒலி காட்டி அடங்கியது வருவதற்கும் இடமாக்கி என்னும் பரிதி உரை பொருந்தி வரவில்லை. 'கள்ளம்' என்பதற்குப் புண்கள் (துன்பம்) எனக் கொண்டெழுதும் இராமலிங்கம் பிள்ளை உரை பொருத்தமில்லை.

**1276 பெரிதாற்றிப் பெட்பக் கலத்த லரிதாற்றி**
**யன்பின்மை சூழ்வ துடைத்து.**

**பரிமே:**

[தலைமகன் குறிப்பறிந்த தலைமகள் அதனை அது தெளிவிக்கச் சென்ற தோழிக் கறிவுறுத்தது.]

காதலர் வந்து தம் பிரிவினா னாய துன்பத்தினை மிகவு மாற்றி நாமகிழும் வண்ணங் கலக்கின்ற கலவி இருந்தவாற்றான் மேலும் அத்துன்பத்தினை அரிதாக வாற்றி யிருந்து அவரன் பின்மையை நினையுந் தன்மையுடைத்து.

**மணக்:**

ஊடின காலத்து அதன் அளவன்றி மிகவு மாற்றிப் புணருங் காலத்து முன்பு போலாகாது, மேன்மேலும் விரும்புமாறு புணர்தல் யான் அரிதாக ஆற்றி யிருந்து தம் அன்பின்மையை எண்ணுவ தொரு பிரிவுடைத்து.

இது பிரியலுற்ற தலைமகனது குறிப்பு அறிந்த தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

**வெ. இராம:**

மிகவும் துன்பம் அடைந்து (அதனால்) விருப்பத்தோடு தழுவிக் கொள்ளல் இல்லாமற் செய்து (என்னுடைய) அன்பில்லாத் தனத்தைத் தாக்குகிற தன்மையுடையது.

அரிதாற்றி - இல்லாமற்செய்து, இல்லாமல்.

சூழ்வது - கண்டிப்பது, தாக்குவது.

**முடிநிலை:**

'பெரிதாற்றி' என்பதற்கு மணக்குடவர் உரையில் கூடுதலான விளக்கம் காணலாம். அவர் 'அன்பின்மை' பிரிவைச் சுட்டுவதாக எழுதியதும் தெளிவு பயக்கும். 'பெரிதாற்றி' என்பதற்குத் தலைவி மிகுந்த துன்பத்தைத் தாங்கிக் கொண்டு என்றும் 'அரிதாற்றி' என்பதற்கு இல்லாமல் என்றும் 'சூழ்வது' என்பதற்குத் தாக்குவது என்றும் பொருள் கூறி இராமலிங்கம் பிள்ளை இக்குறட்கெழுதிய உரை இயல்பில்லை. பரிமேலழகரும் மணக்குடவரும் இக்குறளைத் தலைவி கூற்றாகக் கொள்ள, இராமலிங்கம் பிள்ளை தலைவன் கூற்றாகக் கொண்டுள்ளார். தலைவி கூற்று எனவே பொருந்தும்.

**1277. தண்ணந் துறைவன் றணந்தமை நம்மினு
முன்ன முணர்ந்த வளை.**

**பரிமே:**

[தலைமகன் குறிப்பறிந்த தலைமகள் அதனை அது தெளிவிக்கச் சென்ற தோழிக் கறிவுறுத்தது.]

குளிர்ந்த துறையை யுடையவன் நம்மை மெய்யாற் கூடியிருந்தே மனத்தாற் பிரிந்தமையை, அவன் குறிப்பானறிதற்குரிய நம்மினும் இவ்வளைகள் முன்னே யறிந்தன.

**பரிப்:**

தலைமகன் சொல்லாது பிரிந்துழி அதனை அறிந்த தோழி, இதனை அறிவித்தால் இவள் ஆற்றுங்கொல்லோ ஆற்றாள் கொல்லோ' என்று உட்கொண்டு பிரிவுணர்த்தச் சென்ற குறிப்பு நோக்கி, 'இதனை இப்பொழுது சொல்லுமாறு என்னை என்று பரியல்வேண்டா; யான் முன்பே அறிந்தேன்' என்று தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

**வெ.இராம:**

அன்புள்ள நம் தலைவன் பிரிந்து போய் விட்டதை நமக்கும் முன்னால் அறிந்தவை வளையல்கள்.

தண் நம் துறைவன் எனப் பிரிப்பர்.

**முடிநிலை:**

பரிமேலழகரும் பரிப்பெருமாளும் கொள்ளும் துறையமைப்பில் வேறுபடுதல் காண்க. இராமலிங்கம் பிள்ளை தண்ணந் துறை வன் என்பதனை தண் நந்துறைவன் எனப் பிரித்தது இயல் பில்லை.

**1278. நெருநற்றுச் சென்றாரெங் காதலர் யாமு
மெழுநாளே மேனி பசந்து.**

**பரிமே:**

[தலைமகன் குறிப்பறிந்த தலைமகள் அதனை அது தெளிவிக்கச் சென்ற தோழிக் கறிவுறுத்தது.]

எங் காதலர் பிரிந்து போயினார் நெருநற்றே; அப்பிரிவிற்கு யாமும் மேனி பசந்து எழுநாளுடைய மாயினேம்.

**பரிப்:**

இது பிரியப்பட்ட தலைமகனை இத்துணைக் காலமும் இன்பந் துய்த்தாட்கு இன்றே இவ்வேறுபாடு வந்தது என்று தோழி நோக்கிய குறிப்புக் கண்டு அவர் பிரிவதன் முன்னும் பிரிவர் என்று ஏங்கி இன்புற்றிலேம் என்று தலைமகள் கூறியது.

**முடிநிலை:**

பரிமேலழகரும் பரிப்பெருமாளும் தோழி கூற்றாகக் கொள்ளினும் துறையமைப்பில் வேறுபடுதல் காண்க.

**1279.** **தொடிநோக்கி மென்றோளு நோக்கி யடிநோக்கி**
**யஃதாண் டவள்செய் தது.**

**பரிமே:**

(தலைமகள் குறிப்பறிந்த தோழி அதனைத் தலைமகற் கறிவித்தது.)

யானது தெளிவித்தவழித் தெளியாது அவர் பிரிய யான் ஈண்டிருப்பின் இவை நில்லா வெனத் தன் தொடியை நோக்கி, அதற் கேதுவாக இவை மெலியுமெனத் தன் மென்தோள் களையும் நோக்கி, பின்னிவ் விரண்டும் நிகழாமல் நீர் நடந்து காத்தல் வேண்டுமெனத் தன் அடியையும் நோக்கி அங்ஙனம் அவள் செய்த குறிப்பு உடன்போக்கா யிருந்தது.

**காளிங்:**

எனவே இற்றை நாள் நம்மோடு செறிந்திருந்த வளையே! இவர் எம்மைவிட்டு நீங்க நீயும் நீங்குவை; பணைத்து நிறத்தது ஓர் தோளே! நீயும் இவர் விடப் பசங்குவை; இறுதிக்கண் கைவிடும் நும்மை நம்புவதனினும் அவர் தம்மோடு சேறலே தலைமை; இதற்கு இனி இவ்வடியிணை செய்வது என்னை என்று அறிகிலேன் என்று இவை அவை நோக்கி நம் குறிப்பு அறிந்து அலமரல் உற்ற அத்துணையே; நெஞ்சே! யாம் ஒன்று குறித்த இடத்து அவள் செய்த கருமம் இவை என்று எண்ணிச் செலவு அழுங்குவ னாவது பயன் என அறிக.

**வெ. இராம:**

தளர்ந்துபோன வளையல்களைப் பார்த்துவிட்டு மெலிந்து போன தோள்களையும் பார்த்துத் தன் பாதங்களைப் பார்த்த அதுதான் அப்போது அவள் செய்தது.

இங்ஙனம் தன்மெலிவைப் பிரிந்து வந்த கணவனுக்குக் குறிப்பாலுணர்த்தினாள் என்பது கருத்து.

**முடிநிலை:**

உடன் போக்காகப் பரிமேலழகரும் செலவழுங்கலாகக் காளிங்கரும் பிரிந்து வந்த கணவற்குத் தலைவி உணர்த்துவதாக இராமலிங்கம் பிள்ளையும் துறை வேறுபடுவர்.

**1280. பெண்ணினாற் பெண்மை யுடைத்தென்ப கண்ணினாற் காமநோய் சொல்லி யிரவு,**

**பரிமே:**

(தலைமகன் பிரியாமைக் குறிப்பினைத் தோழிக் கறிவுறுத்தது)

மகளிர் தங் காமநோயினைத் தோழியர்க்கும் வாயாற் சொல்லாது கண்ணினாற் சொல்லி, அது தீர்க்க வேண்டுமென்று அவரை யிரவாது உடன்போதல் குறித்துத் தம்மடியினை யிரத்தல், தமக்கியல்பாகிய பெண்மை மேலும் ஓர் பெண்மை யுடைத்தென்று சொல்லுவர் அறிந்தோர்.

**மணக்:**

வாயாற் சொல்லாது கண்ணினாலே காமநோயைச் சொல்லி வேண்டிக் கோடல், தமது இயல்பாகிய பெண்மையோடே பின்னையும் ஒரு பெண்மையுடைத்தென்று சொல்லுவர் அறிவோர்.

இதுபிரிவுணர்த்திய தலைமகள் குறிப்புக்கண்டு தலைமகற்குத் தோழி சொல்லியது.

**பரிதி:**

பெண்ணிற்குப் பெண் இதம் சொன்னது போல நாயகியிடத்து நாயகன் இன்பம் வேண்டி இரந்து கொள்ளுதல்.

**வெ.இராம:**

வாய் பேசாமல் கண் பார்வையினாலே தன் காம வேதனையைத் தெரியப்படுத்தி வேண்டிக் கொள்ளும் தன்மை யுடைய பெண்ணினால் தான் பெண்தன்மை பெருமையுடையதா கிறது என்பது இது தான்.

கண்ணினால்—பார்வையினால். இங்கே அந்தப் பார்வை அவள் தன் வளையலையும் கைகளையும் பாதங்களையும் பார்த்த பார்வையைக் குறிப்பது.

**முடிநிலை:**

'இரவு' என்பதற்கு உடன் போதல் குறித்து அடியினை இரத்தல் எனப் பரிமேலழகர் எழுதுவது வலிந்துரையாகும். பரிதி உரை மூலத்தோடு எவ்வகையானும் இயையவில்லை. இரவு பெண்ணினால் என இயைத்து வேண்டிக் கொள்ளும் தன்மை யுடைய பெண்ணினால் என இராமலிங்கம் பிள்ளை பொருள் எழுதுவது நன்றாக வில்லை. 'கண்ணினால்' என்பதற்கு அவர், பார்வையினால் எனப் பொருளுரைத்து முன் குறளாகிய 'தொடி நோக்கி மென்தோளும் நோக்கி அடிநோக்கி அஃதாண்டவள் செய்தது.' (1279) என்னும் குறளை ஒட்டி விளக்கம் தந்துள்ளார். இக்குறளுக்கு மணக்குடவர் உரை முற்றும் பொருந்துவதாகும்.

# 129. புணர்ச்சிவிதும்பல்.

அஃதாவது தலைமகனும் தலைமகளும் புணர்ச்சிக்கண்ணே விரைதல். மேற் புணர்ச்சி மிகுதி பற்றித் தலைமகன் பிரிதற் குறிப்பு அறிவுறுத்த, தலைமகள் அவன் மாட்டே நிகழாது வேட்கை மிகவினால் பின்னும் தன்கண்ணே நிகழ்தலான், இது குறிப்பறிவுறுத்தலின் பின் வைக்கப்பட்டது என அதிகார விளக்கமும் முறைவைப்புக் காரணமும் கூறுவர் பரிமேலழகர்.

புணர்ச்சி விதும்பலாவது பிரிந்து கூடின தலைமகனும் தலைமகளும் புணர்தல் வேண்டி ஒருவரி னொருவர் முந்து முந்து விரைதல் என விளக்கந் தருவர் மணக்குடவர்.

**1281.** **உள்ளக் களித்தலுங் காண மகிழ்தலுங்**
**கள்ளுக்கில் காமத்திற் குண்டு.**

***பரிமே:***

(பிரிதற் குறிப்பின னாகியானோடு நீ புலவாமைக்குக் காரணம் யாதென நகையாடிய தோழிக்குத் தலைமகள் சொல்லியது)

நினைந்த துணையானே களிப்பெய்தலும், கண்ட துணையானே மகிழ் வெய்தலும் கள்ளுண்டார்க்கில்லை; காமமுடையார்க் குண்டு.

களித்தல்—உணர்வழியாதது; மகிழ்தல் அஃதழிந்தது.

***பரிப்:***

இது தலைமகனைக் கண்ணுற்ற இடத்துப் புலவியைக் கருதின தலைமகள் புணர்வு வேட்கையால் சென்ற நெஞ்சினைக் கண்டு தன்னுள்ளே வியந்து கூறியது.

***முடிநிலை:***

தலைவி தோழிக்குக் கூறியது எனப்பரிமேலழகர் துறை கூறப் பரிப்பெருமாள் தலைவி நெஞ்சினைக் கண்டு தன்னுள்ளே வியந்து கூறியது எனக் கூறும் வேறுபாடு காண்க.

**1282. தினைத்துணையு மூடாமை வேண்டும் பனைத்துணையுங்
காம நிறைய வரின்.**

**பரிமே:**

(பிரிதற் குறிப்பினனாகியானோடு நீ புலவாமைக்குக் காரணம் யாது என நகையாடிய தோழிக்குத் தலைமகள் சொல்லியது.)

மகளிர்க்குக் காமம் பனை யளவிலும் மிக வுண்டாமாயின், அவரால் தம் காதலரோடு தினை யளவு மூடுதல் செய்யாமை வேண்டப்படும்.

**மணக்:**

நெஞ்சே! நீ தினையளவும் ஊடா தொழிதல் வேண்டும், பனையளவினும் மிகக் காம நுகர்ச்சி வருமாயின்.

இஃது ஊட நினைத்த நெஞ்சிற்குத் தலைமகள் கூறியது.

தினைத்துணை—தினையளவு பொழுதாகிலும் எனக் கூறும் பழைய உரை (உ.வே.சா).

**முடிநிலை:**

முன்னைக் குறள் போலவே பரிமேலழகர் தலைவி தோழிக்குக் கூறியதாகக் கொள்ள, மணக்குடவர் தலைவி நெஞ்சிற்குக் கூறியதாகக் கொள்வர். தினைத் துணையையும் பனைத் துணையையும் ஒரு பொருள் மேலனவாகக் கொள்ளாமல் தினைத்துணையைப் பொழுதின் மேலும் பனைத்துணையைப் பொருளின் மேலும் கொள்ளும் பழைய உரை (உ.வே.சா.) சாலாது.

**1283. பேணாது பெட்பவே செய்யினுங் கொண்கனைக்
காணா தமையல கண்.**

**பரிமே:**

(பிரிதற் குறிப்பினனாகியானோடு நீ புலவாமைக்குக் காரணம் யாது என நகையாடிய தோழிக்குத் தலைமகள் சொல்லியது.)

நம்மை யவமதித்துத் தான் வேண்டியனவே செய்யுமாயினும் கொண்கனை என்கண்கள் காணா தமைகின்றன வில்லை.

**பரிப்:**

இது மேற்கூறிய சொற்கேட்டு ஊடல் வேண்டுவார் தலைமகற் காணா தொழிதலே உளது என்று நகையாடிய தோழிக்குத் தலைமகள் கூறியது.

**பரிதி:**

பேணாத பெரிய ஊடலிலே செய்யினும் நாயகரைக் காணாமல் நித்திரை வராது.

**பழைய: (உ. வே. சா)**

நம்மை அவமதித்துத் தான் வேண்டியன செய்யினும் கொண்கனை என்கண்கள் காணாது அமைகின்றன வில்லை.

பேணாது பெட்பல செய்தல் - தலைவியை அவமதித்துத் தலைவன் தான் வேண்டிய வாறே செய்தல்.

'பேணாது பெட்பல செய்யினும்' என்பதிவர் பாடம்.

**வரத:**

காதலன் மனத்தால் விரும்பாது செயலால் தான் விரும்பிய போது விருப்பத்தைச் செய்தாலும் அவனைக் காணாது என் கண்கள் அமைதி பெறுவதில்லை.

என் தலைவன் மனம் வினைமேல் செல்கிறது. ஆனால், என்னைக் கண்டபோது வாலாயமாகப் பிரியத்தைக் காட்டுகிறான்,

**முடிநிலை:**

பரிமேலழகர்க்கும் பரிப்பெருமாளுக்கும் உள்ள துறைவேறுபாடு காண்க. 'பேணாது பெட்பவே செய்யினும்' என்னும் பகுதிக்குப் பரிதி உரை சிறப்பின்றேனும் 'கண் அமையல' என்பதற்கு நித்திரை வாராது என்னும் அவர் உரைக்கருத்து நன்று. 'பெட்பல செய்யினும்' என்னும் பழைய உரை (உ.வே.சா.) கொண்ட பாடம் நன்று. ஆனால் 'பெட்பல செய்தல்' என்பதற்குத் தலைவன் தான் வேண்டியவாறே செய்தல் என்னும் அவரது பொருள் சிறப்பில்லை. பெட்பல—விரும்பத் தகாதன எனக் கோடல் பொருந்தும். 'பேணாது பெட்பவே செய்யினும்' என்பதற்கு வரதராசனார் உரையும் ஏற்கத் தகும்.

**1284. ஊடற்கட் சென்றேன்மற் றோழி யதுமறந்து
கூடற்கட் சென்றதென் னெஞ்சு.**

**பரிமே:**

[பிரிதற் குறிப்பினனாகியானோடு நீ புலவாமைக்குக்காரணம் யாது என நகையாடிய தோழிக்குத் தலைமகள் சொல்லியது.]

தோழி! காதலரைக் காணாமுன் அவர் செய்த தவற்றைத் தன்னொடு நினைந்து யானவரோடு ஊடுதற்கண்ணே சென்றேன் கண்டபின் என்னெஞ்சு அதனை மறந்து கூடுதற்கண்ணே சென்றது.

**மணக்:**

தோழி! யான் ஊடலைக் கருதிச் சென்றேன்; அவனைக் க்ண்ட பொழுதே அதனை மறந்து கூடலைக் கருதிற்று என் நெஞ்சு.

இது, 'நீ அவனோடு புலவாது கூடியதென்னை' என்று நகையாடிய தோழிக்குத் தலைமகள் கூறியது.

**முடிநிலை:**

இக்குறளுக்கு உரை வேறுபாடில்லை. துறையமைப்பில் சிறிது வேறுபாடு காணலாம்.

**1285. எழுதுங்காற் கோல்காணாக் கண்ணேபோற் கொண்கன்
பழிகாணேன் கண்ட விடத்து.**

**பரிமே:**

(பிரிதற் குறிப்பினனாகியானோடு நீ புலவாமைக்குக் காரணம் யாது என நகையாடிய தோழிக்குத் தலைமகள் சொல்லியது.)

முன்னெல்லாங் கண்டிருந்தும் எழுதுங் காலத்து அஞ்சனக் கோலி னியல்பு காணமாட்டாத கண்ணே போலக் கொண்கனது தவறு காணாத விடத்தெல்லாங் கண்டிருந்து அவனைக் கண்ட விடத்துக் காண மாட்டேன்.

கோல்-ஆகுபெயர்; இயல்பு-கருமை

**மணக்:**

இது மேற்கூறிய சொற்கேட்டு நீ அவனைக் கூறிய குற்ற மெல்லாம் யாண்டுப் போயின என்ற தோழிக்குத் தலைமகள் கூறியது.

**'எழுதுங்கால் கோல்காணாக் கண்ணே போல்'** என்பதற்குச் சித்திரம் எழுதும் தூரிகைக் கோலை முன்கண்ட கண்கள் எழுதும் போது காணமாட்டா எனப் பழைய உரையும் (உ.வே.சா) எழுதுகோலின் தன்மையை எழுதுங்காலத்துப் பார்க்கமாட்டாத கண்களைப் போல என மு.ரா.க. வின் உரையும் கூறும்.

**முடிநிலை:**

'கோல்' என்பதற்கு அஞ்சனக் கோல், தூரிகைக் கோல் எழுதுகோல் எனப் பொருள் கூறியுள்ளனர். அவற்றுள் அஞ்சனக் கோல் என்னும் பொருளே பொருந்தும். 'எழுதுங்கால் கோல்காணா' எனக் கூறியிருப்பது பிற கோல்களுக்குப் பொருந்தா, அவை பார்வைக்குரிய வாகலின். தலைவனுடைய குற்றங்களைத் தலைவி முற்றுங் காணாள் என்பதற்கு அஞ்சனக் கோல் உவமையே நனிபொருத்தமாகும். மைதீட்டுதலை எழுதுதல் என்னும் வழக்கு, 'கண்ணும் எழுதேம் கரப்பாக் கறிந்து' (1127) என்னும் குறளானும் 'எழுதெழில் மலருண்கண்' (ஊர்சூழ்வரி–67) என்னும் சிலப்பதிகார அடியானும் அறியலாம்.

**1286. காணுங்காற் காணேன் றவறாய காணாக்காற்**
**காணேன் றவறல் லவை.**

**பரிமே:**

[பிரிதற் குறிப்பினனாகியானோடு நீ புலவாமைக்குக் காரணம் யாது என நகையாடிய தோழிக்குத் தலைமகள் சொல்லியது.]

கொண்கனை யான் காணும் பொழுது, அவன் தவறாயவற்றைக் காண்கின்றிலேன்; காணாத பொழுது அவையே யல்லது பிறவற்றைக் காண்கின்றிலேன்,

**பரிப்:**

இது மேற்கூறிய சொற்கேட்டுக் 'கண்ட காலத்து மறக்குமாறு போலக் காணாத காலத்திலும் மறப்பது நன்று' என்று நகைக் குறிப்பினால் கூறிய தோழிக்குச் சொல்லியது.

**காளிங்:**

கேளாய் தோழி! பல சொல்லி என்? யான் அவரைக் காணும் காலத்துக் காணேன் தன் தவறாவன; மற்றுஇனி யான் அவரைக் காணாக்காலும் காணேன், மற்று அவர் செய்யும் தவறல்லன; எனவே, நாள்தோறும் காணாக்கால் ஆற்றாமையும், கண்ட இடத்து வழிபாடும் கற்புடைய மகளிர்தம் கடன் என்பது பொருள்.

**முடிநிலை:**

பரிமேலழகரும் பரிப்பெருமாளும் இக்குறளைத் தோழிக்குத் தலைவி கூறியதாகக் கொள்ளினும் துறையமைப்பிற் சிறிது வேறுபடுதல் காண்க. காளிங்கர் தம் உரையில் 'நாள் தோறும் காணாக்கால் ஆற்றாமையும் கண்டவிடத்து வழிபாடும் கற்புடைமகளிர்தம் கடன்' என்று காட்டியிருப்பது சிறப்பினதாகும்.

**1287. உய்த்த லறிந்து புனல்பாய் பவரேபோற்
பொய்த்த லறிந்தென் புலந்து.**

**பரிமே:**

(பிரிதற் குறிப்பினனாகியானோடு நீ புலவாமைக்குக் காரணம் யாது என நகையாடிய தோழிக்குத் தலைமகள் சொல்லியது).

தம்மை யீர்த்துக் கொண்டு போத லறிந்துவைத்து ஒழுகுகின்ற புனலுட் பாய்வார் செயல் போல, புலவி முடிவு போகாமை யறிந்துவைத்துக் கொண்கனோடு புலந்து பெறுவதென்?

பாய்பவர் என்பது ஆகுபெயர். பொய்த்தல்-புரைபடுதல். பொய்த்தல் அறிந்தேன் என்பது பாடமாயின், உய்த்தலரிய ஓடு நீருட் பாய்வார் போல முடிவறியப் பண்டொருகால் புலந்து முடியாமை அறிந்தேன்; இனி அது செயற்பாற் றன்று என உரைக்க.

**மணக்:**

இது புலவிக் குறிப்பு நீங்குவாள் தன்னுள்ளே சொல்லியது.

**பரிதி:**

உய்த்தல் அறிந்தும் புனல் பாய்பவரைப் போல நாயகர் பொய்யாசை என்றறிந்தும் கூடினேன்.

**பழைய உரை:**

நீத்தறிந்து நீந்திக் கரையேறுவாரைப் போலப் பொய்த் தலறிந்து ஊடுந் தறுவாயும் கூடுந்தறுவாயும் அறிந்தேன்.

**வெ. இராம:**

தப்பித்துக் கொள்வோம் என்பதை நிச்சயமாகத் தெரிந்து கொண்டு முழுகி இறந்து விடுகிறேன் என்று கிணற்றிலோ, ஆற்றிலோ நீரில் குதிக்கிறவர்களைப் போலவே, பிணங்குவது பொய்யாகி விடும் என்பதைத் தெரிந்து கொண்டு பிணங்குவதில் என்ன பயன்?

உய்த்தல்—தப்ப வைத்தல்.

**அ.கு.ஆ:**

நீர் இழுத்துச் செல்வதை அறிந்தும் வெறுக்காது குதித்து இன்புறுவது போலத் தலைவன் பொய்ம்முறை அறிவேன்; ஆனால் அதற்காகப் புலந்து ஒதுங்கேன்; கூடி இன்புறுவேன் எனத் தலைவி கூறுவதாகப் பொருள் தருகின்றது. இஃதே இப் பாட்டின் மெய்ப்பொருளாகும்.

**முடிநிலை:**

தலைவி தோழிக்குக் கூறியதாகப் பரிமேலழகரும் தலைவன் தன்னுள்ளே சொல்லியதாக மணக்குடவரும் துறை கொள்வர். பரிமேலழகர் காட்டும் 'அறிந்தேன்' என்னும் பாடம் பழைய உரையில் உள்ளது. எனினும் அதற்குப் பரிமேலழகர் காட்டிய உரை அப்பழைய உரையினும் வேறுபடுகின்றது. 'பொய்த்தல் அறிந்தென் புலந்து' என்பதற்கு நாயகர் பொய்யாசை என்றறிந்தும் கூடினேன் என்னும் பரிதி உரை சிறப்பில்லை. 'உய்த்தல்' என்பதற்குத் தப்பவைத்தல் என்னும் இராமலிங்கம் பிள்ளை உரை இயல்பில்லை. அதற்கு இழுத்துக் கொண்டு செல்லுதல் என்பது பட எழுதிய உரைகள் ஏற்புடையன. 'உய்த்த லறிந்து புனல் பாய்பவரே போல்' என்னும் உவமைக்கு உரையாசிரியர்கள் கூறும் வெவ்வேறு வகையான உரைகளும் புலவியாற் பயனில்லை என்னும் கருத்தின் விளக்கமாகவே உள்ளன. இக்குறளுக்கு நீர் இழுத்துச் செல்வதை அறிந்தும் புனல்பாய்ந்து ஆடி இன்புறுவார் போலத் தலைவன் பொய் கூறியதை அறிந்தும் புலந்தொதுக் காது கூடி இன்புறுவேன் எனத் தலைவி கூற்றாக உரைக்கும் அ.கு. ஆதித்தனார் உரை பொருந்துவதாகும்.

**1288. இளித்தக்க வின்னா செயினுங் களித்தார்க்குக்**
**கள்ளற்றே கள்வநின் மார்பு.**

**பரிமே:**

(தலைமகள் புணர்ச்சிவிதுப் பறிந்த தோழி தலைமகற்குச் சொல்லியது.)

வஞ்சக, தன்னை யுண்டு களித்தார்க்கு இளிவரத் தக்க இன்னாதவற்றைச் செய்யினும், அவரால் மேன்மேல் விரும்பப் படுவதாய கள்ளுப் போலும் எங்கட்கு நின் மார்பு.

அவ்வின்னாதன நாணின்மை, நிறையின்மை, ஒழுக்கமின்மை, உணர்வின்மை என்று இவை முதலாயின.

**மணக்:**

பிறர் இகழத் தக்க இன்னாமையை நீ எமக்குச் செய்யவும், மதுவுண்டு களித்தார்க்கு அதனாலுள்ள குற்றத்தினைக் கண்டு வைத்தும் அதனை யுண்ணல் வேட்கை நிகழுமாறு போலப் புணர்வு வேட்கையைத் தாரா நின்றது, வஞ்சகா, நின்மார்பு.

இது, புலவிக் குறிப்பு நீங்கின தலைமகள் தலைமகற்குச் சொல்லியது.

**இறை:**

இழிவுடைய துன்பங்கள் ஈனத் தக்க
இன்னாத செயலே நீ செய்யும் போழ்தும்
எழிற்கள்வா உன்மார்பு மதுவை உண்டே
இன்புற்றார்க்கு அம்மதுபோல் எமக்கி னிக்கும்.

**முடிநிலை:**

தோழி தலைமகற்குச் சொல்லியது என்னும் பரிமேலழகர் கொண்ட துறையினும் தலைமகள் தலைவனுக்குக் கூறியது எனக் கொள்ளும் மணக்குடவர் துறை பொருத்தமாகும். 'இளித் தக்க இன்னா செயினும்' என்பதனைக் கள்ளுக் கேற்றிப் பரிமேலழகரும் தலைவனுக் கேற்றிப் பிறரும் உரை செய்துள்ளனர். இரண்டும் ஒக்கும். 'கள்ளற்றே கள்வநின் மார்பு' என்புழி இரண்டற்கும் பொதுத்தன்மையாக வேட்கையையும் இன்புறு தலையும் கூறியுள்ளமை நோக்கத் தகும். 'களித் தொறும் கள்ளுண்டல் வேட்டற்றால்' (1145) 'கள்ளினும் காமம் இனிது' (1201) என்ற குறள்கள் அவற்றுக்குத் துணையாதல் காண்க.

**1289. மலரினு மெல்லிது காமஞ் சிலரதன்**
**செவ்வி தலைப்படு வார்.**

**பரிமே:**

(உணர்ப்புவயின் வாரா வூடற்கண் தலைமகன் சொல்லியது.)

காம வின்பம் மலரினு மெல்லிதாயிருக்கும்; அங்ஙனம் மெல்லி தாதலை யறிந்து அதன் செவ்வியைப் பெறுவார் உலகத்துச் சிலர்.

தொட்டதுணையானே மணச்செவ்வி யழிவதாய மலர் எல்லா வற்றினும் மெல்லி தென்பது விளக்கலின், உம்மை சிறப்பின்கண் வந்தது. குறிப்பும், வேட்கையும், நுகர்ச்சியும், இன்பமும் ஒரு காலத்தின் கண்ணே யொத்து நுகர்தற் குரியாரிருவர் அதற்கேற்ற இடனுங் காலமும் உபகரணங்களும் பெற்றுக் கூடி நுகர வேண்டு தலின் அதன் செவ்வி தலைப் படுவார் சிலரென்றும், அவற்றுள் யாதானு மொன்றனாற் சிறிது வேறுபடினும் வாடுதலின், 'மலரினு மெல்லி' தென்றுங் கூறினான். குறிப் பொவ்வாமையின் யானது பெறுகின்றிலே னென்பதாம். தலைமகளுடநீர்வது பயன்.

**மணக்:**

இது தலைமகன் புணர்ச்சிக் குறிப்புக் கண்டு பின்பு ஊடிக் கொள்ளலாம். இப்பொழுது ஊடுவை யாயின், இக் காமம் செவ்வி தப்பும் என்று புணர்ச்சி வேட்கையால் தலைமகள் நெஞ்சொடு கூறியது.

**பரிப்:**

இது தலைமகள் புலவிக் குறிப்புக்கண்டு இன்பம் ஊடிக் கொள்ளலாம். இப்பொழுது ஊடுவை யாயின், இக்காமம் செவ்வி தப்பும் என்று புணர்ச்சி வேட்கையால் தலைமகன் கூறியது.

**காளிங்:**

கேளாய் தோழி! உலகத்து வண்டானது மலர் சிதையாமல் மதுவை அருந்துவது போல, மற்று அதன் செவ்வி யறிந்து கைக் கொள்ளும் மக்களும் உலகத்துப் பலர் உளர். எனினும், மற்று அக்காம மாகின்ற அதன் செவ்வி சிதையாமல் சென்று தலைப் படுவார் அதனினும் சிலர் காண்; நீ காண்; நீ என்னை முனிய வேண்டா.

**பழைய: (உ.வே.சா.)**

தோழிக்குத் தலைவன் சொல்லியது.

**கு.ச.ஆ:**

காமம் என்பது முரட்டுத்தனமான, வன்மை கொண்ட மெய் யுணர்ச்சி யன்று. அது மிகமிக மென்மையானது. மலரைவிட மென்மையானது என்பதைப் பலர் உணர்வதில்லை. சிலரே அதன் பக்குவம் அறிந்து துய்க்கின்றனர். 'செவ்வி' என்றால் பக்குவம், காலம், இடம், நிலை, தன்மை, படிநிலை, ஆகியவற்றிற் கேற்ப ஒழுகும் பக்குவம். காமத்தின் நான்கு கூறுகளான காதல், ஊடல், உணர்தல், புணர்தல் ஆகிய அனைத்திலுமே மென்மை யும் பக்குவமும் இன்றியமையாதவை என எடுத்தியம்புகிறார்.

(மலரினும் மெல்லிது காமம். ப. 13)

**முடிநிலை:**

தலைமகன் தன் நெஞ்சிற்குக் கூறியதாகப் பரிமேலழகரும், தலைமகள் தன்நெஞ்சிற்குக் கூறியதாக மணக்குடவரும் தலைவி யிடம் தலைவன் கூறியதாகப் பரிப்பெருமாளும், தலைவி தோழிக்குக் கூறியதாகக் காளிங்கரும் தலைவன் தோழிக்குக் கூறியதாகப் பழைய உரையாளரும் துறை கொண்டுள்ளனர் இக்குறளுக்குத் துறை வேறுபாடு மிகுதி. அதனால் அத்துறை- களுக்கேற்ப விளக்கத்திலும் ஓரளவு வேறுபாடு காணப்பெறும். 'செவ்வி தலைப் படுவார்' என்பதற்குப் பரிமேலழகரும் கு.ச. ஆனந்தனும் எழுதிய விளக்கங்கள் ஏற்புடைய.

**1290.** **கண்ணிற் றுனித்தே கலங்கினாள் புல்லுத**
**லென்னினுந் தான்விதுப் புற்று.**

**பரிமே:**

[உணர்ப்பு வயின் வாரா ஊடற்கண் தலைமகன் சொல்லியது).

காதலி முன்னொரு ஞான்று புல்லல் விதுப்பினாற் சென்ற என்னொடு தன் கண் மாத்திரத்தானூடி, புல்லுதலை என்னினுந் தான் விதும்பலான் அது தன்னையும் அப்பொழுதே மறந்து கூடிவிட்டாள்; அதனால் யான் இத்தன்மையே னாகவும் விதுப் பின்றி யூடிநிற்கின்ற விவள் அவளல்லள்.

கண்மாத்திரத்தா னூடல், சொன்னிகழ்ச்சி இன்றி அது சிவந்த துணையே யாதல். அவளாயின் இங்ஙனம் ஊடற்கண் நீடாள் என்பது பயன்.

**மணக்:**

கண்ணாலே புலந்தும் அதனையும் ஊடி நிறுத்தாது கலக்க முற்றாள் புணர்தலை என்னினும் மிகத் தான், விரைதலானே.

இது தலைமகள் ஊடற்குறிப்புப் புணர்வு வேட்டல் கண்டு தலைமகன் தன்னுள்ளே சொல்லியது.

**காளிங்:**

நெஞ்சே! கண்ணினால் துனி செய்து ஊடி நெஞ்சினால் கலக்கம் உற்றாள்; நம்மினும் சாலத் தான் முயங்குதல் விருப்பம் உற்றாள்; அது என்ன பேறோ தான்.

'எம்மினும்' என்பதிவர்பாடம்.

**பழைய: {உ.வே.சா.}**

காதலி முன்னொரு ஞான்று புலவி விதுப்பினால் சென்ற என்னொடு தன் கண் மாத்திரம் துளிகள் வீழக் கலங்கினாள். அப்போதே மறந்தாள், தழுவுதல் என்னினும் பரபரத்துத் தழுவினாள்.

விதுப்புறுதல்—பரபரப்பு. 'கண்ணிற் றுளித்தே' என்பது இவர்பாடம்.

**முடிநிலை:**

மணக்குடவரும் பரிமேலழகரும் தலைவன் கூற்றாகத் துறை கொள்ளினும் அவர்கள் துறையமைப்பில் வேறுபடுவர். பரிமேலழகர் தாம்கொண்ட துறைக்கேற்ப விதுப்பின்றி ஊடி நிற்கின்ற இவள் அவள் அல்லள். அவளாயின் இங்ஙனம் ஊடற்

கண் நீடாள் என்று உரைப்பர். அது வலிந்துரையாகும். அவர் கலங்கினாள் என்பதற்குக் கூடினாள் என உரைப்பதும் இயல்பில்லை. இக் குறட்கு மணக்குடவர் கொண்ட துறையும் பொருளும் இயல்பாக உள்ளன. 'எம்மினும்' என்ற காளிங்கரின் பாடமும் 'கண்ணிற் றுளித்தே' என்ற பழைய உரையின்பாடமும் தள்ளத்தக்கன அல்ல.

# 130. நெஞ்சொடுபுலத்தல்.

அஃதாவது காரணம் உண்டாய வழியும் புலக்கக் கருதாது புணர்ச்சி விதும்புகின்ற நெஞ்சுடனே தலைமகள் புலத்தலும் தலைமகன் புலத்தலுமாம். அதிகார முறைமையும் இதனானே விளங்கும் என விளக்கந் தருவர் பரிமேலழகர்.

நெஞ்சொடு புலத்தலாவது தலைமகன் பரத்தையிற் பிரிந்துழி அவனோடு புலக்கக் கருதிய தலைமகள் முற்பட அவனோடு கூட்டம் வேண்டிய நெஞ்சோடு புலந்து கூறுதல். இனி ஊடிக் கூடல் கூறுகின்றாராகலின், அவ்வூடுதலின் முற்பட இது தோற்றுமாதலின் முற்கூறப்பட்டது என்பர் மணக்குடவர்.

**1291. அவர்நெஞ் சவர்க்காதல் கண்டு மெவனெஞ்சே**
**நீயெமக் காகா தது.**

**பரிமே**

(தலைமகன்கண் தவறுண்டாய வழியும் புலவி கருதாத நெஞ்சிற்குத் தலைமகள் சொல்லியது.)

நெஞ்சே! அவருடைய நெஞ்சு நம்மை நினையாது அவர்க்காய் நிற்றல் கண்டு வைத்தும், நீ யெமக்காய் நில்லாது அவரை நினைத்தற் காரணம் யாது?

**மணக்:**

அவருடைய நெஞ்சம் அவர்வழி நின்று நம்மை நினையாமையைக் கண்டு வைத்தும், நெஞ்சே! நீ எம்வழி நில்லாது அவரை நினைத்தல் யாதினைக் கருதியோ?

இது, தலைமகள் வருங்காலத்து வாராத தலைமகனை உள்ளிய நெஞ்சோடு புலந்து கூறியது.

**முடிநிலை:**

பரிமேலழகரும் மணக்குடவரும் தலைவி கூற்றாகக் கொள்ளினும் துறையமைப்பில் வேறுபடுதல் காண்க.

**1292. உறாஅ தவர்க்கண்ட கண்ணு மவரைச்**
**செறாஅரெனச் சேறியென் னெஞ்சு.**

**பரிமே:**

(தலைமகன்கண் தவறுண்டாய வழியும் புலவி கருதாத நெஞ்சிற்குத் தலைமகள் சொல்லியது.)

என்னெஞ்சே! மேலும் நம்மாட்டு அன்புடைய ராகாதவரை உள்ளவா றறிந்த விடத்தும் நாம் சென்றால் வெகுளார் என்பது பற்றி நீயவர் மாட்டுச் செல்லா நின்றாய்; இப் பெற்றியது மேலு மோர் அறியாமை யுண்டோ!

**மணக்:**

இது தலைமகள் தலைமகன் மாட்டுச் செல்லக் கருதிய நெஞ்சொடு புலந்து கூறியது.

**பரிப்:**

இஃது உணர்ப்புவயின் வாரா ஊடற்கண் தலைமகன் புலந்த வழி இன்னும் ஒருகால் உணர்த்துவோம் என்று கருதின நெஞ்சொடு புலந்து கூறியது.

**பரிதி:**

நாயகரைக் கண்டால் உறாதவரைப் போலக் கோபித்துப் பார்த்த பார்வை தவிர்த்துக் கிருபைப் பார்வை பார்ப்பித்தாய் நீ என்ன நெஞ்சு.

**முடிநிலை:**

பரிமேலழகர், மணக்குடவர், பரிப்பெருமாள் ஆகிய மூவரும் தலைவி கூற்றாகக் கொண்டனரேனும் சிறிது வேறுபாடு தோன்றத் துறை கொண்டமை காண்க. 'என் நெஞ்சு' என்ற விடத்துப் பரிதி 'என்' என்பதற்கு வினாப் பொருள் கொள்வது பொருந்தாது. கிருபைப் பார்வை பார்ப்பித்தாய் என்னும் அவர் உரைப்பகுதி சிறப்பில்லை.

**1293. கெட்டார்க்கு நட்டாரில் லென்பதோ நெஞ்சேநீ
பெட்டாங் கவர்பின் செலல்.**

**பரிமே:**

(தலைமகன்கண் தவறுண்டாய வழியும் புலவி கருதாத நெஞ்சிற்குத் தலைமகள் சொல்லியது.)

நெஞ்சே! என்மாட்டு நில்லாது நீ விரும்பிய வாறே அவர் மாட்டுச் செல்லுதற்குக் காரணம், கெட்டார்க்கு நட்டார் உலகத்தில் இல்லை யென்னும் நினைவோ, நின் இயல்போ கூறுவாயாக.

**பரிப்:**

இது வாயில் மறுத்த தலைமகள் அவனோடு கூட்டம் வேண்டிய நெஞ்சொடு புலந்து கூறியது.

**கவிராச:**

நட்டார் – உறவின் முறையார்.

**முடிநிலை:**

பரிமேலழகரும் பரிப்பெருமாளும் துறையமைப்பில் வேறுபடுதல் காண்க. 'நட்டார்' என்பதற்கு உறவின் முறையார் என்னும் பொருளும் பொருந்தும்.

**1294. இனியன்ன நின்னொடு சூழ்வார்யார் நெஞ்சே
துனிசெய்து துவ்வாய்காண் மற்று.**

**பரிமே:**

(தலைமகன்கண் தவறுண்டாய வழியும் புலவி கருதாத நெஞ்சிற்குத் தலைமகள் சொல்லியது.)

நெஞ்சே! நீ யவரைக் கண்ட பொழுதே இன்ப நுகரக்கருதுவ தல்லது அவர் தவறு நோக்கி முன் புலவியை யுண்டாக்கி அதனை யளவறிந்து பின் நுகரக் கருதாய்; ஆகலான், இனி யப்பெற்றிப் பட்டவற்றை நின்னோடு எண்ணுவார் யார்? யானது செய்யேன்.

அப்பெற்றிப்பட்டன-புலக்குந் திறங்கள். 'காண்' என்பது உரையசை.

### பரிப்:

தலைமகனோடு புலக்க நினைத்த நெஞ்சினை முன்பும் ஒரு நாள் புலந்து முடிய நில்லாவாயினாய்; இன்னும் புலப்பேனாயின் அறைபோகுவை ஆகலான்; தனியே எண்ணிக் கொள்கிறேன்; நின்னோடு எண்ணேன் என்று அதனோடு தலைமகள் புலந்து கூறியது.

### பரிதி:

இனி யாருடனே ஒத்திருப்பாய்; நாயகருடனே ஊடற் பிணக்கானால் நீ கூட்டிக் கொள்ளுகிறாய்; உன்னை எங்ஙனம் நம்புவேன்.

### வெ இராம:

நெஞ்சமே! பிணக்கம் மேற்கொண்டு பின் அதைக் கொண்டு செலுத்த மறுக்கிறாய்; இனிமேல் அப்படி உன்னோடு சேர்ந்து ஒரு தீர்மானம் செய்யப் போகிறவர்கள் யார்? (யாருமில்லை)

துவ்வுதல்-உறுதி கொள்ளல், கடைப்பிடித்து நிற்றல்.

### இறை:

ஊடுவதால் உளம்துடிக்கத் துன்பம் செய்தே
உழலுமவர் துயர்க்காட்சி சுவைக்க மாட்டாய்
கூடுதற்கே நாடுகின்றாய் இனிஉன் னோடு
குறித்தந்தச் செயலெண்ணச் சேர்வார் யாரே?

### முடிநிலை:

பரிமேலழகரும் பரிப்பெருமாளும் துறையமைப்பில் சிறிது வேறுபடுதல் காண்க. 'துனி' என்பதற்குப் புலவி என்று பரிமேலழகரும். புலவித்துன்பம் என்பதுபட இறையரசனும் பொருள் கூறியுள்ளனர். இரண்டும் பொருந்தும். ஊடலில்

தோன்றும் சிறு துனி, என்புழித் துனி--துன்பம் எனும் பொருட்டா தல் காண்க. துவ்வாய் என்பதற்குக் கடைப்பிடியாய் என்னும் இராமலிங்கம் பிள்ளை பொருளும் கூட்டிக் கொள்ளுகிறாய் என்னும் பரிதி பொருளும் சிறப்பில. நுகரக் கருதாய் என்னும் பரிமேலழகர் பொருளே சிறப்பினது.

**1295 பெறாஅமை யஞ்சம் பெறிற்பிரி வஞ்சு**
**மறாஅ விடும்பைத்தென் னெஞ்சு.**

**பரிமே:**

[வாயிலாகச் சென்ற தோழி கேட்பத் தலைமகள் சொல்லியது

காதலரைப் பெறாத ஞான்று அப்பெறாமைக்கு அஞ்சா நின்றது; பெற்றக்கால் வரக்கடவ பிரிவினை யுட்கொண்டு அதற்கு அஞ்சா நின்றது; ஆகலான், என்னெஞ்சம் எஞ்ஞான்றும் நீங்காத இடும்பையை யுடைத்தாயிற்று.

**மணக்:**

காதலரைப் பெறாத காலத்துப் புணர்வு இல்லையோ என்று அஞ்சும்; பெற்றோமாயின் பிரிவாரோ என்று அஞ்சும்; ஆதலால் இடைவிடாத துன்பத்தை உடைத்து என் நெஞ்சு.

இது தலைமகள் ஆற்றாமை கண்டு தூதுவிடக் கருதிய தோழிக்கு, அவர் வந்தாலும் இதற்கு உள்ளது துன்பமே என்று அதனோடு புலந்து கூறியது.

**முடிநிலை:**

பரிமேலழகரும் மணக்குடவரும் இக்குறட்குத் துறையமைப்பில் வேறுபடுவர். இக்குறட்கு உரைவேற்றுமை யில்லை.

**1296 தனியே யிருந்து நினைத்தக்கா லென்னைத்**
**தினிய விருந்ததென் னெஞ்சு.**

**பரிமே:**

[வாயிலாகச் சென்ற தோழி கேட்பத் தலைமகள் சொல்லியது]

என்னெஞ்சு ஈண்டிருந்தது காதலரைப் பிரிந்திருந்து அவர் கொடுமைகளை யான் தன்னோடு நினைத்தக்கால் அவ்வள வறிந்து என்னைத் தின்பது போன்று துன்பஞ் செய்தற்கே.

எம்மாட்டு இருந்தது, அன்று அவர் கொடுமைகளை உட் கொண்டு எனக்கு ஆற்றாமை செய்தற்கே; இன்று அவைநோக்கி அவரொடு புலத்தற்கு அன்று என்பதாம்.

**மணக்:**

என் நெஞ்சு, யான் தனிப்பட்டிருந்து நினைத்தால் உடம் படாது என்னை நலிவதாக இருந்தது.

இது தலைமகள் நெஞ்சு அவர் செய்கின்ற கொடுமையை யுட்கொண்டு உள்ளாதே யான் தனிப்பட்டால் நலிவதாக இருந்தது; நீ வருதலானே இப்பொழுது தப்பினேன் என்று அதனோடு புலந்து தோழிக்குக் கூறியது.

**வரத:**

நான் தனித்திருந்து என் நெஞ்சைப் பற்றிச் சிந்திப்பேனா னால் என்மனம் எனக்கு ஆறுதல் செய்து உதவுதற் கல்லாமல் என்னையே அரித்துத் தின்னுவதற்குத் தான் உள்ளது என்பது விளங்குகிறது.

என் நெஞ்சு அவர்பிரிவை ஆற்றாது என்னையும் அழிக்க முயலுகிறது.

**முடிநிலை:**

என் நெஞ்சு இருந்தது என்னைத் தினிய என்று கொண்டு உரைக்கும் பரிமேலழகர் உரையினும் தொடர் கிடந்தாங்கே உரைக்கும் மணக்குடவர் உரைக்கும் உரை இயல்பானது. 'நினைத்தக்கால்' என்பதற்கு நெஞ்சைப் பற்றிச் சிந்திப் பேனானால் எனக் கூறும் வரதராசனார் உரை சிறப்பில்லை.

**1297. நாணு மறந்தே னவர்மறக் கல்லாவென்**
**மாணா மடநெஞ்சிற் பட்டு.**

**பரிமே:**

[வாயிலாகச் சென்ற தோழி கேட்பத் தலைமகள் சொல்லியது]

தன்னை மறந்த காதலரைத் தான் மறக்க மாட்டாத என் மாட்சிமை யில்லாத மட நெஞ்சுடனே கூடி என்னுயிரினுஞ் சிறந்த நாண்தன்னையும் மறந்து விட்டேன்.

**மணக்:**

இது தலைமகள் யான் நாணாது தூதுவிட்டது, பின் நெஞ்சு மறவாமையாலே என்று அதனோடு புலந்து கூறியது.

**முடிநிலை:**

மணக்குடவர் தலைவி நெஞ்சொடு புலந்து கூறுவதாகவும் பரிமேலழகர் வாயிலாகச் சென்ற தோழி கேட்பத் தலைவி கூறுவதாகவும் துறை வேறுபடுவர். இக்குறளுக்கும் உரைவேற்றுமை யில்லை.

**1298. எள்ளி னிளிவாமென் றெண்ணி யவர்திற**
**முள்ளு முயிர்க்காத னெஞ்சு.**

**பரிமே:**

(வாயிலாகச் சென்ற தோழி கேட்பத் தலைமகள் சொல்லியது).

உயிர்மேற் காதலை யுடைய என்னெஞ்சு நம்மை யெள்ளிச் சென்றா ரென்று நாமு மெள்ளுவேமாயின், பின் நமக்கு இளிவா மென்று கருதி அவர் திறத்தினையே நினையாநின்றது.

எள்ளுதல்- வாயின் மறுத்தல்; திறம்- வாயில் நேர்தலும், வருதலும், கூடலும் முதலாயின.

**மணக்:**

அவர்திறத்தைத் தானும் இகழ்ந்தால் அதனானே தனக்கு இளிவரவு உளவாகக் கருதி நினையாநின்றது சாவ மாட்டாத நெஞ்சு.

இது தலைமகள் நெஞ்சு அவரைப் போலத் தானும் இகழலாயிருக்க இகழாநின்றது மில்லை; அவர் செயலைக் கேளாது சாவவும் வல்லுகின்றதில்லை என்று அதனோடு புலந்து கூறியது.

**கா.சு.பிள்ளை:**

உயிர்மேல் காதல் வைத்த என்நெஞ்சு தலைவன் இகழ்ந்தால் உயிர்க்கு இழிவு வரும் என்று கருதி அவரது பெருமையையே நினைக்கும்.

**வெ. இராம:**

உயிரின்மேல் ஆசை கொண்ட நெஞ்சம் அவரை மறந்தால் கேடு வந்து விடும் என்று நினைத்து அவரைப் பற்றியே எண்ணும்.

எள்ளின்-நீக்கினால், மறந்தால்; இளிவு-கேடு; அவர்திறம்-அவரைப்பற்றி.

**முடிநிலை:**

'அவர் திறம்' என்பதனை 'எள்ளின்' என்பதனோடு கூட்டி மணக்குடவர் உரைப்பதுவும் பொருந்தும். 'எள்ளின்' என்பதற்குப் பிறரெல்லாம் தலைவனை எள்ளின் என உரைக்க, கா.சு. பிள்ளை தலைவன் எள்ளின் என்று உரைப்பர். அது குறளின் பிற் பகுதியோடு பொருட் பொருத்த முறுவதாகப் படவில்லை. எள்ளின் - மறந்தால் எனவும் இளிவு-கேடு எனவும் இராமலிங்கம் பிள்ளை கூறும் பொருள் அச் சொற்களுக்கு உரியனவாக இல்லை.

**1299. துன்பத்திற் கியாரே துணையாவார் தாமுடைய**
**நெஞ்சந் துணையல் வழி.**

**பரிமே:**

(உணர்ப்பு வயின் வாரா ஊடற்கண் தலைமகன் சொல்லியது).

ஒருவர்க்குத் துன்பம் வந்துழி அது நீக்குதற்குத் தாமுரித்தாகப் பெற்ற தம்முடைய நெஞ்சந் துணையாகாவழி, வேறு துணையாவார் ஒருவரு மில்லை.

ஈண்டுத் துன்பமாவது ஊடலுணர்ப்புவயின் வாராமை.

**மணக்:**

இது தலைமகள் துணையாவார் யார் என்ற தோழிக்குக் கூறியது.

**பரிப்:**

துணையாவார் யார் என்றது தோழியைக் குறித்து; தலைமகள் வாயில் மறுத்த இடத்துத் தோழி நெருங்கிக் கூறியவழி உடன்பட்ட நெஞ்சொடு புலந்து வாயில் நேர்வாள் சொல்லியது)

**காளிங்:**

'நெஞ்சந் தமரல் வழி என்பது இவர் பாடம்.

**முடிநிலை:**

தலைவி கூற்றாக மணக்குடவரும் பரிப்பெருமாளும் தலைவன் கூற்றாகப் பரிமேலழகரும் 'துறைகொண்டுள்ளனர். 'தமரல் வழி' எனக் காளிங்கர் பாடமோதுவர். அடுத்த குறளில் தமரல்லர்........ தமரல்வழி (1300) எனத் தமர் என்ற சொல் முதலடியினும் இரண்டாமடியினும் இணைந்து வருதலை நோக்கின், இக்குறளினும் அதுபோலவே துணையாவார்........ துணையல்வழி எனப் பரிமேலழகர் கொண்ட பாடம் சிறந்தது என்று கொள்ளலாம்.

**1300.** **தஞ்சந் தமரல்ல ரேதிலார் தாமுடைய**
**நெஞ்சந் தமரல் வழி.**

**பரிமே.**

[உணர்ப்புவயின் வாரா ஊடற்கண் தலைமகன் சொல்லியது.]

தாமுரித்தாக வுடைய நெஞ்சம் ஒருவர்க்குத் தமரல்லாவழி அயலார் தமரல்ல ராதல் சொல்ல வேண்டுமோ?

**பரிப்:**

தலைமகன் யாண்டுளன் என்று குற்றேவல் மகளிரை அறியவிட, அவர் பரத்தையர் சேரியுளான் என்று கூறியவழி அவர்வந்த காலத்தில் நெஞ்சு நம்வழி ஒழுகாது அவர்வழி ஒழுகினால் அவர் ஏதிலர் ஆகுவது எளிதன்றோ என்று நெஞ்சொடு புலந்து கூறியது.

'ஏதிலார்' என்றாள் பிறர் மனையிற் செல்லுதலான்.

**காளிங்:**

தோழி! இவ்வுலகத்தில் தாம் தமக்கு உரிமையாக நெஞ்சம் கூடத் தமக்குத் துணை இல்லாத இடத்தினில், மற்று அயலார் தமக்குத் தஞ்சமும் அல்லார்; துணி என்றவாறு.

தஞ்சம் என்பது எளிமைப் பொருட்டு. இடுக்கண் உற்றவிடத்து எய்துதல் என்பது.

**வெ.இராம:**

மனமே! ஒருவருக்குத் தம்முடைய நெஞ்சமே உறவற்ற தாகிவிட்டால் அயலார் உறவாக மாட்டார்கள். (ஆகையால் நீதான் எனக்குத் தஞ்சம்.)

தஞ்சம்-புகலிடம், அடைக்கலம்.

**முடிநிலை:**

பரிமேலழகர், பரிப்பெருமாள், காளிங்கர் ஆகிய மூவரும் துறைவேறுபடுவர், பரத்தையர்ப் பிரிவு குறளாசிரியர் கூறாத தொன்றாகலின் அதனைத் தொடர்பு படுத்திக் கூறும் பரிப்பெருமாள் துறை ஏற்கத் தகுவதன்று. தஞ்சம்-புகலிடம் (அடைக்கலம்) என்னும் இராமலிங்கம் பிள்ளை உரை பொருந்தாது. அது பிற்கால வழக்கு. அதற்கு எளிமைப் பொருள் கொள்ளும் காளிங்கர் உரை தகும். 'தஞ்சக் கிளவி எண்மைப் பொருட்டே' (சொல்-இடையியல் 18) என்னும் தொல்காப்பிய நூற்பா காண்க.

# 131. புலவி.

அஃதாவது இருவர் நெஞ்சும் புணர்ச்சி விரும்பாது புலக்கக் கருதியவழி ஒருவரோடு ஒருவர் புலத்தல். அதிகார முறைமையும் இதனானே விளங்கும் என விளக்கந் தருவர் பரிமேலழகர்.

புலவியாவது தலைமகனோடு தலைமகள் புலந்து கூறுதல். இது வெளிப்பட்டு நிகழ்தலின், அதன்பின் கூறப்பட்டது என்பர் மணக்குடவர்.

புலத்தல் தலைமகள் செயலே யாதலாலும், இவ்வதிகாரத் தலைப்புப் புலவி யென்றே யிருத்தலாலும், உணர்ப்புவயின் வாரா வூடற்கண் தலைமகன் சொல்வ தெல்லாம் கூடற்கியலாமை பற்றி நொந்து கொள்வதல்லது கூடல் வேண்டாமென விலக்குதலன்மையாலும் "இருவர் நெஞ்சும் புணர்ச்சி விரும்பாது புலக்கக் கருதியவழி ஒருவரோடொருவர் புலத்தல்" எனப் பரிமேலழகர் கூறியிருப்பது பொருந்தா தென்க எனக் கூறுவர் தேவநேயப் பாவாணர்.

உணர்ப்பு வயின் வாரா ஊடற்கண் தலைவன் புலத்தல் உண்டு என இளம்பூரணர், நச்சினார்க்கினியர் முதலிய உரையாசிரியர்கள் கூறுதலான் (தொல்-கற்பியல் 4,15) புலவி இருபாற்கும் உரியதாகக் கொள்ளலாம். 'நோத லெவன்மற்று நொந்தாரென் றஃதறியும் காதல ரில்லா வழி' (1308) என்னுங் குறள் 'புலவி' இருபாற்கும் பொதுவாய்க் கூறுதல் காண்க.

**1301. புல்லா திராஅப் புலத்தை யவருறு**
**மல்லனோய் காண்கஞ் சிறிது.**

**பரிமே:**

[வாயிலாகச் சென்ற தோழி தலைமகன் வாயில் நேர்தற் பொருட்டு அவளொடு நகையாடிச் சொல்லியது.

அங்ஙனம் புலந்தாற் காதலரெய்தும் அல்லல் நோயினை யாம் சிறிது காணக் கடவேம்; நீ யவரை விரைந்து சென்று புல்லாதே; இத்தொழிலை மேலிட்டுக் கொண்டிருந்து புலப்பாயாக.

அல்லல் நோய் — துன்பத்தைச் செய்யுங் காமநோய்.

**மணக்:**

இது வாயில் வேண்டிச் சென்ற தோழி, தலைமகள் புலவிக் குறிப்புக் கண்டு முகங் கொடாமைப் பொருட்டு இனிமை கூறியது.

'புலத்தி' 'அல்லல் யாம்' என்பன இவர் பாடங்கள்.

**பரிதி:**

இராக்காலம் இன்று சற்று நேரம் புலக்காமலிருந்து நாயகர் வருத்தம் காண வேணும்.

'புலத்தல்' எனப் பாடங் கொள்வர் காளிங்கர்.

**முடிநிலை:**

இக் குறட்குச் சில பாடவேறுபாடுகள் உள. எனினும் அவற்றால் குறட்கருத்து வேறுபடவில்லை. இராக்காலம் எனப் பரிதி உரையில் வருவது கொண்டு 'புல்லா திராஅப் புலத்தை என்பதிலுள்ள 'இராஅ' என்பதற்கு இராஅக் காலம் எனப் பொருள் கண்டிருப்பரோ எனத் தோன்றுகிறது. பிறரெல்லாம் செய்யா என்னும் வாய்பாட்டு வினையெச்சமாகவே பொருள் கொண்டுள்ளனர். அதுவே பொருந்தும். 'புலக்காமலிருந்து' என்னும் பரிதி உரையை நோக்கின், அவரும் அவ்வாய்பாட்டு வினை யெச்சமாகவே பொருள் கொண்டிருக்கலாம் எனக் கருதவும் இடமுண்டு.

**1302. உப்பமைந் தற்றாற் புலவி யதுசிறிது**
**மிக்கற்றா னீள விடல்.**

**பரிமே:**

[புலவி யொழிந்து வாயினேரும்வகை அவள் சொல்லியது.]

புலவி, கலவி இன்பஞ் செயற்கு வேண்டு மளவிற்றாதல் உப்புத் துய்ப்பனவற்றை இன்சுவைய வாக்கற்கு வேண்டு மள விற்றாதல் போலும்; இனி அதனை யவ்வளவிற் சிறிது மிக விடுதல் அவ்வுப்பு அளவின் மிக்காற் போலும்.

**மணக்:**

இது வாயில் வேண்டிய தோழிக்குத் தலைமகள் மறுத்த விடத்துப் புலவியை நீள விடுதல் தகாது என்று அவள் கூறியது.

**பரிதி:**

கறிகாய் அளவு அறிந்து உப்பிட்டுச் சமைத்தற்கு ஒக்கும். புலவியும் கலவியும் ஏறாமல் குறையாமல் சமனாயிருக்கவேணும்.

**முடிநிலை:**

இக்குறளைத் தோழி கூற்றாகவே எல்லோரும் கொண்டுள்ளனர். புலவியின் அளவு பற்றிக் கூறும் இக்குறளில் கலவியின் அளவும் பரிதியார் கூறுவது ஒரு சருத்து விளக்கம் உடையது.

**1303. அலந்தாரை யல்லனோய் செய்தற்றாற் றம்மைப்**
**புலந்தாரைப் புல்லா விடல்.**

**பரிமே:**

[பரத்தைய ரிடத்து நின்றும் வந்த தலைமகனொடு தலைமகள் புலந்து சொல்லியது.]

தம்மைப் பெறாது புலந்த மகளிரைப் புலவி நீக்கிக் கலவாது ஆடவர் சேறல், பண்டே துன்பமுற் றழிந்தாரை அதன்மேலும் மிக்க துன்பத்தினைச் செய்தாற் போலும்.

பிறர்பாற் சேறலின் நும்மைப் பெறாது புலந்து ஊடியிருக்கின்ற பரத்தையரைப் போய்ப் புலவி நீக்கிப் புல்லீராயின் அவர் ஆற்றார் என்பதாம்.

**பரிப்:**

முன்பே கலக்கம் உற்று அழிந்தாரை அதன்மேலும் அல்லல் செய்யும் நோயைச் செய்தாற் போலும், காமத்தில் புலந்தாரை முயங்காது விடுதல்.

இஃது உணர்ப்புவயின் வாரா ஊடற்கண் தலைமகன் புலந்துழி, அதனை அறிந்து அகம்புக்க தோழி தலைமகற்குச் சொல்லியது.

'காமம் புலந்தாரை' என்பது இவர் பாடம்.

**பரிதி:**

நல்லோற்குத் துன்பம் செய்ததற்கு ஒக்கும் முடியப் பிணக்கறுத்துக் கூடாத இன்பம்.

**முடிநிலை:**

'தம்மைப் புலந்தாரை' என்ற விடத்துப் பரத்தைக் குறிப்புக்கு இடனில்லை யாதலின், பரிமேலழகர் கொண்ட துறையும் விளக்கமும் பொருந்தா. 'காமம் புலந்தாரை' என்று பாடங் கொண்டமையின், பரிப்பெருமாள் உரை சிறிது வேறுபடும். பரிதி உரையில் வரும் 'நல்லோற்கு' என்னும் சொல்லும் 'இன்பம்' என்னும் சொல்லும் மூலத்தோடு இயைய வில்லை.

**1304. ஊடி யவரை யுணராமை வாடிய**
**வள்ளி முதலரிந் தற்று.**

**பரிமே:**

(பரத்தையரிடத்து நின்றும் வந்த தலைமகனோடு தலைமகள் புலந்து சொல்லியது.)

நும்மோடு ஊடிய பரத்தையரை ஊடலுணர்த்திக் கூடா தொழிதல், பண்டே நீர் பெறாது வாடிய கொடியை அடியிலே யறுத்தாற் போலும்.

**மணக்:**

இது காமக் கிழத்தியரை ஊடல் தீராமை தீது; ஆண்டுப் போம் என்று தலைமகள் கூறியது.

**பரிதி:**

ஊடிய நாயகரை உறவு செய்யாமல் இருந்த நெஞ்சே! உன்னாலே நாயகர் பிரிந்தார்; இனி வாடிய கொடிக்கு வேரற்றது ஒக்கும்; அழகு அழியும்.

**காலிங்:**

தம்மோடு ஊடினவரை ஊடல் தீராது வருத்துவது முன்பே வாடிய கொடியை வேர் முதலோடும் அரிந்தாற் போலும்.

**சி.இலக்:**

ஊடல் கொண்டுள்ளவரை அறியாமல் இருத்தல் வாடிய வள்ளிக்கொடியை அடியில் அறிந்ததை ஒக்கும்.

**முடிநிலை:**

காமத்துப்பாலில் வள்ளுவர் பரத்தையிற் பிரிவு நிகழ்ந்த தாகக் கொண்டு குறள் யாக்க வில்லை என்பது இன்றைய அறிஞர் பலரின் கருத்து. அப்பிரிவு பற்றிய வெளிப்படையான குறிப்பு யாதும் குறளில் இல்லை என்பது அவர் கருத்துக்குச் சான்றாகும். 'நண்ணேன் பரத்தநின் மார்பு' (1311) என்ற விடத்துத் தலைவன் பரத்தமை யுடையனாகத் தலைவி கற் பித்துக் கொண்டதன்றி மெய்யான நிகழ்ச்சி யன்று. ஆதலின், பரிமேலழகரும் மணக்குடவரும் பரத்தையரையும் காமக்கிழத்தி யரையும் சுட்டி எழுதும் உரைகள் பொருந்தா. இதுபோன்ற பிற இடங்கட்கும் இம்மறுப்பு நினையத் தகும். பரிதியார் 'நெஞ்சே' என வருவித்துக் கொள்வதும் 'ஊடியவர்' என்பதற்குத் தலைவர் எனக் கொள்வதும் சிறப்பில. 'உணராமை' என்பதற்கு அறியாமல் என்னும் இலக்குவனார் பொருள் இயல்பில்லை. இக்குறட்குக் காளிங்கர் உரை இயல்பானது,

**1305. நலத்தகை நல்லவர்க் கேஎர் புலத்தகை**
**பூவன்ன கண்ணா ரகத்து.**

**பரிமே:**

(தலைமகளைப் புலவி நீக்கிக் கூடிய தலைமகன் தன்னுள்ளே சொல்லியது.)

நற்குணங்களால் தகுதியுடையராய தலைவர்க்கும் அழகாவது தம் பூவன்ன கண்ணார் நெஞ்சின்கண் நிகழும் புலவி மிகுதி யன்றே?

அழகு-இன்பப் பயனைத் தலைப்படுதல். தான் நுகர்ந்த இன்பத்திற்கு ஏதுவாகிய புலவியை வியந்து கூறியவாறு.

**மணக்:**

நலத்தகையினானே நல்லாரான பரத்தையர்க்கு ஓரழகாம்; பூவன்ன கண்ணார்மாட்டுப் புலத்தல்.

நமக்கு ஆகார்மாட்டுப் புலத்தல் தீது. இது பரத்தையோடு புலந்து கூறிய தலைமகட்குத் தோழி கூறியது.

நல்லவர்க் கோரம் என்பது இவர் பாடம்.

**காளிங்:**

பரத்தையரோடு புலந்து கூறிய தலைமகட்குத் தோழி சொல்லுமாறு நலத்தகையினானே நல்ல கற்புடைய மகளிர்கள் மாட்டுப் புலத்தல் தீது. எனவே, மற்றுப் பரத்தையர்க்கு அழகாம். பூவன்ன கண்ணார்மாட்டுப் புலத்தல்.

**வரத:**

பூவை ஒத்த கண்களை யுடைய பெண்களுக்கு ஊடலின் காரணம் அறிந்து ஊடல் நீக்கி நன்மை செய்யும் கணவர் இருந்தால் ஊடலும் ஒரு அழகுதான்.

**வ.சுப.மா:**

நற்பண்பு உடைய ஆடவர்க்கு அழகு மலரன்ன மகளிரின் ஊடலை நீக்குதல்.

**இறை:**

மலர்போன்ற விழியமைந்த மங்கை நெஞ்சுள்
மலர்கின்ற ஊடலினை அறியும் மாண்பே
நலம் சான்ற தன்மையெலாம் நன்கு வாய்த்த
நல்லாண்மைக் கழகூட்டும் நன்மை யாகும்.

**முடிநிலை:**

மணக்குடவர் 'ஓரம்' (ஓர் அழகு) எனப் பாடம் கொள்வது நன்றாக இல்லை. 'நல்லவர்' என்பதற்குப் பரத்தையர் கற்புடைமகளிர் என்னும் பொருள்கள் சிறப்பில்லை. மணக்குடவரும் காளிங்கரும் தம் உரையில் பரத்தையரைத் தொடர்பு படுத்திக் கூறுவது பொருந்தாது. ஊடலின் காரணமறிந்து ஊடல் நீக்கி (கணவர்) இருந்தால் எனப் பலவாறு வரதராசனார் வருவித் தெழுதுவது மூலத்தோடு ஒட்டாது. மேலும், அவர் பூவன்ன கண்ணாரகத்து என்புழி நான்காம் வேற்றுமையாகப் பொருள் கொள்வதும் நல்லவர்க்கு என்பதை எழுவாயாகக் கொள்வதும் இயல்பாகா. 'ஏர்' என்பதற்கு நன்மை என்பதினும் அழகு என்னும் பொருள் நன்று. 'புலத்தகை' என்பதற்குப் புலவி மிகுதி, புலத்தல், ஊடலை நீக்குதல், ஊடலினை அறியும் மாண்பு எனப் பொருள்கள் கூறப்பட்டுள. அவற்றுள் ஊடலினை அறியும் மாண்பு, ஊடலை நீக்குதல் என்னும் பொருள்கள் ஏற்கத் தகும்.

**1306. துனியும் புலவியு மில்லாயிற் காமங்**
**கனியுங் கருக்காயு மற்று.**

**பரிமே:**

(தலைமகளைப் புலவிநீக்கிக் கூடிய தலைமகன் தன்னுள்ளே சொல்லியது.)

முதிர்ந்த கலாமாகிய துனியும் இளைய கலாமாகிய புலவியும் இல்லையாயின், காமம் செவ்வி முதிர்ந்த பழமும் இளங்காயும் போலும்.

மிக முதிர்ந்து இறும் எல்லைத்தாய கனி நுகர்வார்க்கு மிகவும் இனிமை செய்யாது ஆதலின், துனி யில்லை யாயின் 'கனியற்று' என்றும் கட்டிளைமைத்தாய காய் நுகருஞ் செவ்வித்து அன்றாகலின் புலவி இல்லை யாயின் 'கருக்காயற்று' என்றும் கூறினான். இவ்விரண்டும் வேண்டும் என்று வியந்து கூறியவாறு;

**மணக்:**

இஃது உணர்தற்கு நல்லது உளதென்று தலைமகள் கூறியது.

**பரிப்:**

இது தலைமகள் புலவி நீட்டித்தவழித் துனி இல்லை யாயின் பழம் போல இனிமை தரும்; புலவி இல்லை யாயின் காய் போலத் துவர்க்கும் ஆதலான், இஃது உணர்தற்கு நல்லளவு என்று கூறியது.

**பரிதி:**

துனியும் புலவியும் இல்லாத காமம் பழத்தைப் போட்டுக் காயைத் தின்றதற்கு ஒக்கும்.

**பழைய: (உ.வே.சா.)**

துனியும் புலவியும் உண்டாயின் காமம் கனி போலச் சுவையும், துனியும் புலவியும் இல்லை யாயின் காமம் இளங்காய் போலச் சுவை இல்லைமையும் (பெறும்).

துனி—பெரும் பிணக்கு; புலவி–சிறுபிணக்கு.

**முடிநிலை:**

இக்குறளைத் தலைமகன் கூற்றாகப் பரிமேலழகரும் தலைவி கூற்றாக மணக்குடவர், பரிப்பெருமாள் ஆகியோரும் கொள்வர். 'கனியும் கருக்காயு மற்று' என எண்ணும்மை பெற்று வந்த தொடர்க்குப் பழத்தை விட்டுக்காயைத் தின்றதற்கு ஒக்கும் எனும்

பரிதி உரை ஒவ்வாது. துனி இல்லாயின் காமம் கனியற்று; புலவி இல்லாயின் காமம் கருக்காயற்று எனக் கோடல் வேண்டும். துனி அளவிறந்த ஊடலாதலின் காமத்துக்கு வேண்டாதது. ஆகவே, அஃது இல்லாவிடில் தான் காமம் கனிபோல இனிக்கும். புலவி வேண்டுவது. ஆகவே, அஃது இன்றெனின் காமம் கருக்காய் போலத் துவர்க்கும். இக் குறளுக்கு இங்ஙனம் கொண்டெழுதிய பரிப்பெருமாள் உரை தகும். (காளிங்கர்க்கும் இதுவே கருத்து) இப்பொழுதுள்ள பரிமேலழகர் உரையில் 'மிக முதிர்ந்து இறும் எல்லைத்தாய கனி மிகவும் இனிமை செய்யாது ஆதலின், துனியில்லை யாயின் கனியற்று' என்று காணப்படுகிறது. அப்பகுதியில் 'இனிமை செய்யாது ஆதலின்' எனக் காணப்படுவது தவறாகும். 'இனிமை செய்தலின்' என்றே பழைய பதிப்புக்களில் காணப்படுகிறது. பழைய பதிப்பிலுள்ளபடி 'இனிமை செய்தலின்' எனக் கொண்டால் பரிப்பெருமாள் முதலியோர் கருத்துடன் அவ்வுரைக்கு வேறுபாடில்லை. பரிமேலழகர் சிறப்புரையில் 'இவ்விரண்டும் வேண்டும் என்று வியந்து கூறியவாறு' என்பதில், இரண்டும் என்பது துனியின்மையையும் புலவியையும் சுட்டும்' 'துனியும் புலவியும் இல்லாயின்' எனக் குறளிருப்பத் துனியும் புலவியும் உண்டாயின் காமம் கனிபோலச் சுவை பெறும் என்று தொடங்கி எழுதிச் செல்லும் பழைய உரை முற்றும் பொருந்தாது. துனி புலவிகட்குரிய விளக்கங்களைப் பரிமேலழகர், மணக்குடவர் உரைகளிற் காண்க.

**1307. ஊடலி னுண்டாங்கோர் துன்பம் புணர்வது
நீடுவ தன்றுகொ லென்று.**

**பரிமே:**

(தலைமகளைப் புலவி நீக்கிக் கூடிய தலைமகன் தன்னுள்ளே சொல்லியது.)

இனிப் புணர்ச்சி நீட்டிக்குமோ நீட்டியாதோ என்று கருதலான் இன்பத்திற்கு இன்றியமையாத ஊடலின்கண்ணேயும் ஒரு துன்பம் நிகழும்.

**மணக்:**

இது தலைமகள் ஆற்றாமை வாயிலாகப் புலக்க, தலைமகன் அதுகண்டு சொல்லியது.

**மு.வ:**

கூடி யிருக்கும் இன்பம் இனிமேல் நீட்டிக்காதோ என்று ஏங்கி எண்ணுவதால் ஊடி யிருத்தலிலும் காதலர்க்கு ஒருவகைத் துன்பம் இருக்கின்றது.

**'நீடுவ தன்றுகொல்'** என்பதற்கு நெடுநேரமாகுமோ அல்லது புணர்ச்சி இல்லாமலேயே போகுமோ என்பர் **வெ. இராமலிங்கம் பிள்ளை.**

**முடிநிலை:**

இக்குறளைத் தலைவன் கூற்றாக மணக்குடவரும் பரிப் பெருமாளும் கொள்வர். நச்சினார்க்கினியரும் இதனை ஊடலை விரும்பிக் கூறிய தலைவன் கூற்றிற்கு மேற்கோள் காட்டுவர் (தொல்-பொருள், 146). 'நீடுவ தன்றுகொல்' என்ற தொடரை நீடுவதுகொல், அன்றுகொல் என இயைத்துப் பரிமேலழகர் உரை செய்வர். அஃது இயல்பாக இல்லை. 'அன்று கொல்' என்பதற்கு இல்லாமலேயே போகுமோ என்னும் இராமலிங்கம் பிள்ளை உரை சிறப்பில்லை. 'நீடுவதன்று கொல்' என்பதனை ஒரு தொடராகக் கொண்டு நீட்டிக்காதோ எனக் கூறும் மு.வ. உரை சிறப்புடையது.

**1308. நோத லெவ்வன்மற்று நொந்தாரென் றஃதறியுங்**
**காதல ரில்லா வழி.**

**பரிமே:**

(உணர்ப்புவயின் வாரா ஊடற்கண் தலைமகன் தலை மகளோடு புலந்து சொல்லியது.)

இவர் நம்பொருட்டாக நொந்தாரென்று அந்நோவினை யறியும் அன்புடையாரைப் பெறாவழி ஒருவர் நோகின்றதனாற் பயனென்னன்?

**மணக்:**

இஃது உணர்ப்புவயின் வாரா ஊடற்கண் தலைமகன் புலந்துழி அதனை யறிந்து அகம்புக்க தோழி அவனுக்குச் சொல்லியது.

'காத லவரில் வழி' என்பது இவர்பாடம்.

**பரிதி:**

காதலர் இல்லாவிடத்து நெஞ்சே, மயல் நோய் கொள்ளாதே. அவர் இருந்தா லல்லவோ உன் மயல் வருத்தம் அறிந்து விசாரிப்பார்.

**சி. இலக்:**

இஃது இருசாரர்க்கும் பொருந்தும். 'காதலர்' எனும் சொல் காதலன் காதலி இருவர்க்கும் பொது. உயர்த்திக் கூறும் பன்மைக் கண் வந்துள்ளது.

**ஞா. மாணிக்:**

நாம் ஊடியதால் நம்காதலர் வருந்த நேரிட்டதே என்று அந்த வருத்தத்தை எண்ணி அவர் இல்லாதபோது நொந்து கொள்வதினால் என்ன பயன்? ஊடியது ஊடியாயிற்று அதை எண்ணிப் பிறகு வருந்துவதால் என்ன பயன்?

**முடிநிலை:**

தலைவன் தலைவிக்குக் கூறுவதாகப் பரிமேலழகரும் தோழி தலைவனுக்குக் கூறுவதாக மணக்குடவரும் தலைவி தன் நெஞ்சிற் குரைப்பதாகப் பரிதியும் கூற்றிலும் துறையமைப்பிலும் வேறுபடுவர். இலக்குவனார் தலைவன் தலைவி ஆகிய இருவர் கூற்றுக்கும் இக்குறள் பொருந்தும் என்பர். அதற்குச் சான்றாகக் குறளில் பயின்றுவரும் 'காதலர்' என்ற இருபாற் பொதுச் சொல்லைக் காட்டுவர். 'புலவி பெரும்பாலும் தலைவிக்குரிய தேனும், ஒரோவழி தலைவனுக்கு முரித்தாகப் பண்டை உரை யாசிரியர்கள் கூறுதலின், இலக்குவனார் உரை ஏற்கத்தகும்,

'நோதல்' என்பதனைப் பரிதியார் எதிர்மறை வினைமுற்றாகக் கொள்வர். 'எவன்' என்னும் வினாச் சொல் அடுத்து வருதலை நோக்குங்கால், அங்ஙனம் கோடல் தகுவதன்று. 'நொந்தாரென் றஃதறியும்' என்னுந் தொடரைக் கிடந்தாங்கே காதலர்க்கு அடையாக்கிப் பொருள் கொள்வதே இயல்பும் சிறப்பும் ஆகும். ஞா. மாணிக்க வாசகனார் காதலர் நொந்தார் என்று மாற்றி உரைப்பதும் பொருள் நயனில்லை.

**1309. நீரு நிழல தினிதே புலவியும்**
**வீழுநர் கண்ணே யினிது.**

**பரிமே:**

[உணர்ப்பு வயின் வாரா ஊடற்கண் தலைமகன் தலைமகளோடு புலந்து சொல்லியது.

உயிர்க்கு இன்றியமையாத நீரும் நிழலின் கண்ணதே இனிதாவது; ஏனை வெயிலின் கண்ணது ஆகாது; அதுபோலக் கலவிக்கு இன்றியமையாத புலவியும் அன்புடையார் கண்ணே இனிதாவது; ஏனை யன்பிலார்கண் ஆகாது.

**பரிப்:**

மேல் புலவியின்கண் ஒரு துன்பம் உண்டு என்று தலைமகன் கூறிய சொற்கேட்டு அஃது இன்பமாவது அன்பு உடையார்க்கு; நுமக்கு அன்பின்மையால் துன்பம் உண்டாயிற்று என்று தலைமகள் கூறியது.

**வெ. இராம:**

தண்ணீரும் நிழல் காட்டக் கூடியதே நல்லது; அதைப் போல், பிணக்கமும் விருப்பங் காட்டக் கூடியவரிடத்திலேதான் நல்லதாகும்.

நிழலது-எதிர் உருவம் காட்டக்கூடிய தெளிவுடையது. பளிங்கு போன்றது. நம்முடைய வடிவத்துக்கு எதிர்வடிவம் காட்டுகின்ற தண்ணீரைப் போல, நம்முடைய விருப்பத்துக்கு எதிர் விருப்பம் காட்டுகின்ற என்பது இங்கே உபமானம்.

**முடிநிலை:**

இக்குறளைத் தலைவன் கூற்றாகப் பரிமேலழகரும் தலைவி கூற்றாகப் பரிப்பெருமாளும் கொள்வர். 'நிழல்' என்பதற்கு எதிர் உருவம் எனப் பொருள் கொண்டு அதற்குத் தக உவமையை விரிப்பர் இராமலிங்கம் பிள்ளை. இது வலிந்து கோடலாகும். 'நிழல் நீரும் இன்னாத இன்னா' என்னுங் குறள் ஒப்பு நோக்கத் தகும்.

**1310. ஊட லுணங்க விடுவாரோ டென்னெஞ்சங்**
**கூடுவே மென்ப தவா.**

**பரிமே:**

[உணர்ப்புவயின் வாரா ஊடற்கண் தலைமகன் தலைமகளோடு புலந்து சொல்லியது.]

தான் ஊடற் கண்ணே மெலியா நிற்கவும், விட்டிருக்க வல்லாரோடு கூடக் கடவே மென்று என்னெஞ்சம் முயறற்கு ஏது தன்னவாவே, பிறிதில்லை.

**மணக்:**

என்புலவியைச் சாக விட்டிருக்க வல்லாரோடு என்நெஞ்சு கூடுவேமென்று நினைக்கின்றது, தன்னாசைப்பாட்டால்.

இது புலவி நீங்கவேண்டு மென்ற தோழிக்குத் தலைமகள் புலவி தீர்வாளாய்ச் சொல்லியது.

**பரிப்:**

இஃது உணர்ப்புவயின் வாரா ஊடற்கண் தலைமகள் புலந்தது கண்டு புலவி நீங்கவேண்டும் என்ற தோழிக்குப் புலவி தீர்வான் சொல்லியது.

**முடிநிலை;**

மணக்குடவர் துறைக்கு விளக்கம் போல் பரிப்பெருமாள் கொண்ட துறை அமைந்துள்ளது. 'தோழிக்குப் புலவி தீர்வான் சொல்லியது' என வரும் பரிப்பெருமாள் உரையில் 'தீர்வான்' என்பது வானீற்று வினையெச்சம். ஆகவே, பரிப்பெருமாள் துறை புலவி தீரும் பொருட்டுத் தோழிக்குத் தலைவி சொல்லியது என்பதாகும். தலைவன் தலைவிக்குக் கூறுவதாகப் பரிமேலழகர் துறை கூறுவர். இத்துறை வேறுபாடுகளே யன்றி வேறு உரை வேறுபாடு இக்குறட்கில்லை.

# 132. புலவிநுணுக்கம்.

அது புலவியது நுணுக்கம் எனவிரியும். அஃதாவது தலைமகனும் தலைமகளும் ஓர் அமளிக்கண் கூடியிருந்துழி அவன் மாட்டுப் புலத்தற்காரணம் இல்லையாகவும் காதல் கைம்மிகுதலான் நுண்ணியதோர் காரணம் உளதாக உட்கொண்டு அதனை அவன்மேலேற்றி அவள் புலத்தல். காரணத்தின் நுணுக்கம் காரியத்தின் மேல் நின்றது. அதிகார முறைமையும் இதனானே விளங்கும் என விளக்கந் தருவர் பரிமேலழகர்.

புலவி நுணுக்கமாவது, தலைமகன் மாட்டுத் தவறிலவாயினும் தன் காதல் மிகுதியால் சொல்லெச்சத்தினானும் குறிப்பெச்சத்தினானும் வேறுபடப் பொருள்கொண்டு, தலைமகள் புலந்து கூறுதல். இது செவ்வயிற்றோன்றாது ஆதலின் நுணுக்கமாயிற்று என்பர் மணக்குடவர்.

இது செவ்வையில் தோன்றாமையின் உள்ளுறை ஆயிற்று புலவியினும் நுண்ணிய புலவி என்று கூறினமையால் வேறு படுத்து அதன் பின் கூறப்பட்டது என விளக்கந் தருவர் பரிப்பெருமாள்.

**1311. பெண்ணியலா ரெல்லாருங் கண்ணிற் பொதுவுண்பர்**
**நண்ணேன் பரத்தநின் மார்பு.**

**பரிமே:**

(உலாப் போய்வந்த தலைமகன் பள்ளியிடத்தானாகத் தலைமகள் சொல்லியது)

பரத்தமை யுடையாய், நின்னைப் பெண்ணியல்பினை யுடையார் யாவருந் தங்கண்ணாற் பொதுவாக வுண்பர்; அதனால் அவர் மிச்சிலாய நின்மார்பினைப் பொருந்தேன்.

கற்பு, நாணம் முதலிய நற்குணங்கள் இன்மையின் பரத்தையர்க்கு உள்ளது பெண்ணியற்கை மாத்திரமே என்னும் கருத்தால் ‘பெண்ணியலார்’ என்றாள்.

**மணக்:**

இது தலைமகள் புலவிகண்டு என்மாட்டுக் குற்றம் யாதோ என்று கூறிய தலைமகற்கு அவள் கூறியது.

**பழைய: (உ.வே.சா)**

நிறை, நாண், முறை இல்லாத வடிவினால் பெண்ணியல் பினையுடைய பரத்தையர் யாவரும் கண்ணால் பொதுவாக உண்ணும் மிச்சிலாகிய நின் பரந்த மார்பினை யான் பொருந்திலேன்.

பரந்த மார்பு என்பது, பரத்த மார்பாயிற்று.

**வெ. இராம:**

பெண் இயல்புள்ள எல்லாரும் கண்ணிற் கண்டு பொதுவாக அனுபவிக்கும் அழகுடையது உன்மார்பு; அழகைக் காட்டி ஆசை மூட்டுபவரே, நான் உம்மைத் தீண்ட மாட்டேன்.

பரத்த-பரத்தையர்போல, பார்த்த பெண்களுக் கெல்லாம் ஆசை மூட்டுபவரே!

**தேவ:**

இதனாற் பரத்தமை புலவி நுணுக்கத்தில் தலைமகன் மேல் ஏற்றிக் கூறப்படுவ தல்லது, உண்மையாக நிகழ்வதன்றென்றும், திருவள்ளுவர் கூறும் இன்பத்துப்பாலிற் குரிய தன்றென்றும் அறிந்து கொள்க.

**நா. இராமையா:**

கண்ணின் உண்பர் என்பதனாலேயே ‘உண்பர்’ என்னும் சொல் குலமகளிரை விலக்கியுள்ளது காண்க. ‘பரத்த’ என்னும் சொல்லுக்கு, ‘பரத்தமை உடையாய்’ என்று பொருள் கொண்டு தலைவி தலைவனை அவ்வாறு விளிப்பதாய்க் காட்டுகிறார் பரிமேலழகர். தலைவனை அவ்வாறு இழுக்கி விளிப்பதைக்

காட்டினும் தலைவியின் தகவுக்குப் பொருந்த அவ் அடையை அவன்தன் மார்பின் மேல் ஏற்றினால் நல்ல பொருள் கிடைக்கும். 'பரத்த மார்பு' எனக் கொண்டு 'பரத்தமை யுடைய மார்பு' என்று பொருள் கொள்ளுவது பொருத்தமுடையதாய் இருக்கும். 'அம்மார்பை நான் பொருந்தேன்' என்று தலைவி கூறுவதாகப் பொருள் கொண்டால் சீரும் சிறப்புமாய் இருக்கும். பெண்ணியலார்க்கு முன் 'பொது' என்ற அடையைக் கூட்டிப் பொதுப் பெண்ணியலார் என்று கொண்டால் அது பரத்தை யரையே சுட்டுதல் காணலாம்.

**முடிநிலை:**

மணக்குடவரும் பரிமேலழகரும் கூற்று வகையில் தலைவனுக்குத் தலைவி கூறியதாகக் கொள்ளினும் துறையமைப்பில் வேறுபடுவர். பழைய உரை 'பரந்த' என்பதனைப் பரத்த என வலித்தல் விகாரப் படுத்துதல் தொடை முதலிய காரணமின்மையின் பொருந்தாது. பரத்த மார்பு எனக் கொண்டு பரத்தமை யுடைய மார்பு எனப் பொருள் கொள்ளலும் அத்துணைச் சிறப்பில்லை. 'பரத்த' என்பதற்குப் பரத்தையர் போல் ஆசை மூட்டுபவரே என்னும் இராமலிங்கம்பிள்ளை உரை சரியில்லை. 'பொது' என்ற அடையைப் பெண்ணியலார்க்கு முன் கூட்டிப் பொதுப் பெண்ணியலார்- பரத்தையர் என்று நா. இராமையா பொருள் காண்பதும் இயல்பாகப் படவில்லை. 'பரத்த' என்பதற்குப் பரத்தமை யுடையாய் எனப் பரிமேலழகர் கொண்ட பொருளே இயல்பாகும், இக்குறட்குப் பரத்தமை பற்றிப் பாவாணர் தரும் விளக்கம் ஏற்றற் குரியதாகும்.

**1312. ஊடி யிருந்தேமாத் தும்மினார் யாந்தம்மை**
**நீடுவாழ் கென்பாக் கறிந்து.**

**பரிமே:**

(தலைமகன் நீக்கத்துச் சென்ற தோழிக்குத் தலைமகள் பள்ளியிடத்து நிகழ்ந்தது கூறியது.)

யாம் தம்மோடு ஊடி யுரையாடா திருந்தேமாகக் காதலர் தும்மினார், அதுநீங்கித் தம்மை நீடுவாழ் கென்று உரையாடு வேமாகக் கருதி.

**பரிப்:**

இஃது ஆற்றாமை வாயிலாகப் புக்க தலைமகன் புணர்ந்து நீங்கிய பின்அகம் புக்க தோழிக்கு அவர் செய்த களவு இது என்று தலைமகள் கூறியது.

**பரிதி:**

ஊடி யிருக்கையில் நாயகர் தும்மினார், நாயகி வாழ்த்தினால் ஊடல் தீரலாம் என்று; அது வறிந்து நாயகி தன் மங்கல நாணைத் தொட்டு மனத்திலே வாழ்த்தினாள்.

'நீடு வாழ் கென்ப **தறிந்து**' என்பது மணக்குடவர் பாடம். '**தும்மினார் தம்மைநாம்**' என்பது **பழையஉரை** (உ.வே.சா) பாடம்.

**முடிநிலை:**

பரிமேலழகரும் பரிப்பெருமாளும் கொண்ட துறையமைப்பில் வேறுபடுதல் காண்க. பாட வேறுபாட்டால் உரை வேறுபாடு தோன்றவில்லை. பரிதி உரையால் கணவனை வாழ்த்தும் போது மங்கல நாணைத் தொட்டு வாழ்த்தும் வழக்கம் பெறப்படும்.

**1313. கோட்டுப்பூச் சூடினுங் காயு மொருத்தியைக்**
**காட்டிய சூடினீ ரென்று.**

**பரிமே:**

(தலைமகள் புலவிக் குறிப்பினைக் கண்டு நீவிர் கூடி யொழுகாநிற்கவும் இது நிகழ்தற்குக் காரணம் யாதென்ற தோழிக்குத் தலைமகன் சொல்லியது.)

யான் கோடுதலைச் செய்யும் மாலையைச் சூடினே னாயினும், நும்மாற் காதலிக்கப் பட்டாளொருத்திக்கு இப்பூவணி காட்டல் வேண்டிச் சூடினீரென்று வெகுளாநிற்கும்; இத்தன்மையாட்கு ஒரு காரணம் வேண்டுமோ!

கோடு என்பது முதனிலைத் தொழிற் பெயர், பூ-ஆகுபெயர். வளையமாகச் சூடினும் என்பதாம். இனி அம்மருத நிலத்துப் பூவன்றி, வேற்று நிலத்துக் கோட்டுப் பூவைச் சூடினே னாயினும் ஈண்டையாள் பிறளொருத்திக்கு அவ்வேற்றுப் பூவணி காட்டல் வேண்டிச் சூடினீர் என்று வெகுளும் எனினும் அமையும்.

**மணக்:**

பக்கப்பூச் சூடினும் ஒருத்திக்குக் காட்டுதற்காகச் சூடினீர் என்று சொல்லிக் காயும்.

பக்கப்பூ-ஒப்பனைப்பூ. கோட்டுப்பூச் சூடினீர் என்பதற்கு வளைப்பூச் சூடினீர் எனினுமாம். இது கோலஞ் செய்யினுங் குற்றமென்று கூறியது.

**பரிப்:**

அன்றியும் கோட்டுப்பூச் சூடினே னாயின் இப்பூ இந்நிலத்தில் உள்ளது ஒன்றல்ல; பிறர் நிலத்திலுள்ளது என்று ஐயுற்று வெகுளும்; இதனை நீர் சூடியதும் அந்நிலத்தில் உள்ளாள் ஒருத்தியை எனக்கு அறிவித்தற் பொருட்டு என்று சொல்லி என்றுமாம்.

கோட்டுப்பூ-மருதநில மல்லாத நிலத்தில் உள்ள பூ.

**பரிதி:**

செண்பகப் பூ, பாதிரிப் பூ, புன்னைப்பூச் சூடினும் குறிஞ்சி நிலத்து நாயகியை வேண்டிச் சூடினீர் என்று ஊடினாள்.

**காளிங்:**

கோட்டுப்பூ-தாளிப்பூ என்பாரு முளர்.

**சி.இலக்:**

மரக் கிளைகளில் உள்ள பூக்களைத் தலைவிக்கு அணிந்தாலும் வேறு ஒருத்திக்குக் காட்டுவதற்காக அணிந்தீர் என்று கூறி, சீற்றம் கொள்வாள்.

எளிதாகக் கிடைக்கும் தரையில் உள்ள பூக்களை விடுத்து முயன்று பறித்தற் குரிய கிளைகளில் உள்ள பூக்களைத் தலைவிக்கு அணிந்தான் தலைவன். அவ்வாறு அன்பால் அவன் அணிவது அவள் மீதுள்ள அன்பின் காரணம் என்று கருதாமல், பிறள் ஒருத்தியின் மீதுள்ள பற்றுதலாகக் கொண்டு தலைவி ஊடல் கொண்டு விட்டாள். தலைவனுக்கு வகைவகையாகப் பூச்சூடத் தெரியும் என்பதனைத் தலைவிக்குப் பூச்சூடுதல் மூலம் அறிவிக்க விரும்பினான் என்று தலைவி கருதியது ஊடலுக்கு ஒருகாரணம் தேடவே.

**வரத:**

மரத்தில் உண்டான நல்ல மணமுள்ள பூவைத் தலையில் சூடினாலும் கோபிக்கிறாள், இன்னொரு பெண்ணைப் போல் அழகாக இருக்கிறதா என்று பார்ப்பதற்காக அல்லவா சூடினீர்கள் என்று.

**தேவ:**

கோட்டுப் பூ மரக்கிளைகளில் மலர்வது. கோடு கிளை. வேற்று நிலம், முல்லை குறிஞ்சி நெய்தல். கோட்டுப் பூவைக் கோடுதலைச் செய்யும் மாலை என்றார் பரிமேலழகர். ஆசிரியர் மாலை யென்னாது பூ வென்றமையாலும் 'கோடுதலைச் செய்யும்' என்னுங் கருத்தில் ஒரு சிறப்பு மின்மையானும், அது உரையன்மை அறிக.

**முடிநிலை:**

கோட்டுப்பூ என்பதற்குக் கோடுதலைச் செய்யும் மாலை, பக்கப்பூ (ஒப்பனைப்பூ), மரத்திற் பூக்கும் பூ, தாளிப் பூ, மாலைப் பூ எனப் பலவாறு பொருளுரைப்பர். அதற்குக் கோடு தலைச் செய்யும் மாலை என்னும் பொருள் ஒவ்வாது என்பதனைப் பாவாணர் பொருந்த மறுத்துள்ளமை காண்க. இக்குறட்குப் பரிப்பெருமாள் கூறும் உரை பரிமேலழகர் கூறும் இரண்டாவது உரையுடன் பெரிதும் ஒத்திருத்தல் காண்க ஒருத்தியைக் காட்டிய சூடினீர் என்பதற்குப் பிறளொருத்திக்குக் காட்ட

எனவும் பிறளொருத்தியை எனக்கறிவிக்க எனவும் பொருள் கூறுவர். இவற்றுள் பிறளொருத்திக்குக் காட்ட என்பதே ஏற்புடைத்து. சில கோட்டுப் பூக்களைப் பரிதி உரை காட்டும். இலக்குவனாரும் வரதராசனாரும் மரக்கிளையில் பூத்த பூவைத் தலைவிக்குத் தலைவன் அணிந்ததாகப் பொருள் கூறியுள்ளனர். இப்பொருளுக்குக் 'கோட்டுப் பூச் சூட்டினும்' என்று பாடமிருந்தால் நல்லது.

**1314. யாரினுங் காதல மென்றேனா வூடினாள்**
**யாரினும் யாரினு மென்று.**

**பரிமே:**

[தலைமகள் புலவிக் குறிப்பினைக் கண்டு நீவிர் கூடியொழுகாநிற்கவும் இது நிகழ்தற்குக் காரணம் யாதென்ற தோழிக்குத் தலைமகன் சொல்லியது.]

காம நுகர்தற்குரிய இருவராயினார் யாவரினும் யாம் மிக்க காதலை யுடையே மென்பது கருதி, யாரினுங் காதல மென்றேனாக, நின் தோழி அதுகருதாது, என்னாற் காதலிக்கப் பட்டமகளிர் பலருள்ளும் நின்கண் காதலுடையேன் என்றேனாகக் கருதி, அம்மகளிர் யாரினும் என்கண் காலதலுடையராயினீர் என்று சொல்லிப் புலந்தாள்.

**பரிப்:**

காதலுடையேம் என்று உளப்பாட்டுத் தன்மையாகக் கூறிய அதனை உணர்ச்சியாகக் கூறினான் ஆகக் கருதினாள். தலைமகன் வாயில் வேண்டின இடத்து, 'நின் குற்றத்தினாலே ஊடல் மிக்கிருந்தாள்' என்று கூறிய தோழிக்கு, 'அவள் ஊடுதற்கு யான் குற்றம் செய்ய வேண்டா; யான் சொல்லுவனவும் செய்வனவும் எல்லாம் குற்றமா யிருக்கும்; அவள் குற்றம் ஆகக் கொண்டவற்றைக் கேள்' என்று சொல்லுவான் முற்பட அன்புடையேன் என்று சொல்லியது குற்றமாயிற்று என்று கூறியது.

**மு.கோ:**

பெற்றோர், பிள்ளைகள், பரத்தை, காமக்கிழத்தி முதலியவர் யாரினு மென்று புலக்கிறாள். பரத்தையை வள்ளுவர் குறிக்க வில்லை யென்பது பொருந்தாதென இவ்வதிகாரம் காட்டுகின்றது. காதலன்பு தலையாயது.

**முடிநிலை:**

பரிமேலழகரும் பரிப் பெருமாளும் தோழிக்குத் தலைவன் கூறியதாகத் துறை கொள்ளினும் துறையமைப்பில் வேறுபடுதல் காணலாம். 'யாரினும்' என்பதற்குப் பெற்றோர், பிள்ளைகள், பரத்தை, காமக் கிழத்தி முதலியவர் யாரினும் என்றுரைக்கும் மு.கோ. உரை இயல்பில்லை.

**1315. இம்மைப் பிறப்பிற் பிரியல மென்றேனாக்
கண்ணிறை நீர்கொண் டனள்.**

**பரிமே:**

(தலைமகள் புலவிக் குறிப்பினைக் கண்டு நீவிர் கூடி யொழுகாநிற்கவும் இது நிகழ்தற்குக் காரணம் யாதென்ற தோழிக்குத் தலைமகன் சொல்லியது).

காதன் மிகுதியான் இம்மையாகிய பிறப்பின்கண் யாம் பிரியே மென்று சொன்னேனாக, அதனான் ஏனை மறுமையாகிய பிறப் பின்கட் பிரிவலென்னுங் குறிப்பினேனாகக் கருதி, அவள் தன் கண்ணிறைந்த நீரினைக் கொண்டாள்.

**பரிப்:**

இது பிரியேன் எனினும் குற்றமாம் என்று கூறியது.

**இறை:**

இப்பிறப்பில் ஓர்நாளும் பிரியேன் உன்னை
என்றேநான் வாய்தவறி உரைத்திட் டேனா?
எப்போதோ பிரிய இன்றே தேற்றுகின்றீர்
என்றாடிக் கண்ணீரைச் சிந்தி நின்றாள்.

**இளங்:**

'இப்போது நாம் பிரிய மாட்டோம்' என்று யான் கூறிய அளவில், அவ்வாறானால் எப்போது பிரிவோமோ என்று கண்ணில் நீர் ததும்ப நின்று ஊடினாள்.

**முடிநிலை:**

இக்குறளுக்குத் துறை கொண்டதில் வேறுபாடு காணப் பட்டிலது. தலைவி கண்ணில் நீர் கொண்டமைக்குப் பிறர்போல் மறுபிறப்பில் தலைவன் பிரிவானென்று அவள் கருதியதைக் காரணமாக்காது இறையரசனாரும் இளங்குமரனாரும் வேறு வகையில் காரணங் காட்டி விளக்குதல் நோக்கத் தகும். மறுமையைப் புகுத்திக் கூற வேண்டா என்பது அவர்கள் நோக்க மாகும். இம்மை-இப்போது என்னும் பொருள் இயல்பில்லை.

**1316. உள்ளினே னென்றேன்மற் றென்மறந்தீ ரென்றென்னைப் புல்லாள் புலத்தக் கனள்.**

**பரிமே:**

(தலைமகள் புலவிக் குறிப்பினைக் கண்டு நீவிர் கூடி ஒழுகா நிற்கவும் இது நிகழ்தற்குக் காரணம் யாது என்ற தோழிக்குத் தலைமகன் சொல்லியது.)

பிரிந்த காலத்து நின்னை யிடையின்றி நினைந்தேன் என்னுங் கருத்தால் யானுள்ளினேன் என்றேன்; என, அதனை ஒருகான் மறந்து பின் நினைந்தேன் என்றதாகக் கருதி, என்னை யிடையே மறந்தீரென்று சொல்லி முன் புல்லுதற் கமைந்தவள் அஃதொழிந்து புலத்தற் கமைந்தாள்.

**மணக்:**

அவ்விடத்து எம்மை நினைத்தோம் என்றீர்; மறந்தார் அன்றே நினைப்பார்; ஆதலான், எங்களை மறந்தீர் என்று சொல்லி எம்மை முயங்காளாய்ப் புலவிக்குத் தகுதியாளாயினாள்.

இது நினைத்தோம் எனினும் குற்றம் என்று கூறியது. 'உள்ளினேம் என்றீர்மற் றெம்மறந்தீர் என்றெம்மை' என்பது இவர் பாடம்.

**வரத:**

நாம் உன்னை எண்ணினேன் என்று சொன்னேன். புலமை மிக்க அவள் நீர் ஏன் மறந்தீர் என்று கேட்டுத் தழுவாது பிரிந்தாள்.

**முடிநிலை:**

மணக்குடவர் கொண்ட பாட வேறுபாட்டால் பெரிதும் பொருள் வேறுபாடு இல்லை. 'புலத்தக்கனள்' என்பதற்குப் புலமை மிக்க அவள் (தலைவி) என்னும் வரதராசனார் பொருள் சிறப்பில்லை.

**1317. வழுத்தினா டும்மினே னாக வழித்தழுதாள்**
**யாருள்ளித் தும்மினீ ரென்று.**

**பரிமே:**

(தலைமகள் புலவிக் குறிப்பினைக் கண்டு நீவிர் கூடி ஒழுகா நிற்கவும் இது நிகழ்தற்குக் காரணம் யாது என்ற தோழிக்குத் தலைமகன் சொல்லியது.)

கூடியிருக்கின்றவள் யான் தும்மினேனாகத் தன்னியற்கை பற்றி வாழ்த்தினாள், அங்ஙனம் வாழ்த்திய தானே மறித்து, நும்மை நினைத்து வருந்துகின்ற மகளிருள் யாவர் நினைத்தலால் தும்மினீ ரென்று சொல்லிப் புலந்தழுதாள்.

வாழ்த்தலொடு புலத்தல் இயையாமையின் 'அழித்து' என்றான்.

**பரிதி:**

நாயகர் தும்மக் கண்டு நாயகி மீளவும் நினைந்து அழுதாள், உமக்கு மனமகிழ்ந்த நாயகி யார் நினைக்க நினைந்து தும்மினீர்; அதற்கு நான் வாழ்த்துச் சொல்லாது என்று ஊடினாள்.

**மயிலை. சிவ:**

அழித்து – மறுபடியும்.

**முடிநிலை:**

'வழுத்தினாள்' என்னும் மூலத்துக்குப் பரிதி உரையில் பொருள் காணப்பட்டிலது. 'தும்மினேனாக வழித்தழுதாள்' என்ற தொடரில் வகரத்தை உடம்படு மெய்யாக்கி அழித்தழுதாள் என்று பிரித்து உரையாசிரியர்கள் எல்லோரும் பொருளெழுதி யுள்ளனர். 'வழித்தழுதாள்' எனக் கிடந்தாங்கே கொண்டு வடி கின்ற கண்ணீரை வழித்து (துடைத்து) அழுதாள் எனக் கொள்ளல் சாலும். அங்ஙனம் கொள்ளுங்கால், இயல்பான மோனை நயம் உண்டு. இப்பொருளுக்குக் 'கங்குலும் பகலும் கண்துயில் அறியாள், கண்ணநீர் கைகளால் இறைக்கும்' (நாலாயிரம், 2755) என்னும் நம்மாழ்வார் பாடலடியை ஒப்பு நோக்குக.

**1318.** **தும்முச் செறுப்ப வழுதா ணுமருள்ள**
**லெம்மை மறைத்திரோ வென்று.**

**பரிமே:**

(தலைமகள் புலவிக் குறிப்பினைக் கண்டு நீவிர் கூடி ஒழுகா நிற்கவும் இது நிகழ்தற்குக் காரணம் யாது என்ற தோழிக்குத் தலைமகன் சொல்லியது.)

எனக்குத் தும்மல் தோன்றியவழி யாருள்ளித் தும்மினீரென்று புலத்தலை யஞ்சி அதனை அடக்கினேன்; அங்ஙன மடக்கவும் நுமர் நும்மை நினைத்தலை எம்மை மறக்கலுற்றீரோ வென்று சொல்லிப் புலந்தழுதாள்.

**பரிதி:**

தும்மல் உண்டாகக் கண்ட நாயகி அழுதாள்; உமது நாயகி வாழ்த்தத் தும்முவ தன்றி இவர் வாழ்த்தத் தும்ம ஒண்ணாது என்று ஊடினாள்.

**முடிநிலை:**

'செறுப்ப' என்பதற்கு உண்டாக என்னும் பரிதியின் பொருள் எம்மை மறைத்திரோ என்று' என்னும் பின்வருந் தொடரோடு இயைய வில்லை. அதற்கு 'அடக்க' என்னும் பொருளே பொருந்துவது. 'நுமருள்ளல்' என்பதற்கும் நேரான பொருள் பரிதி உரையில் இல்லை.

**1819. தன்னை யுணர்த்தினுங் காயும் பிறர்க்குநீ
ரிந்நீர ராகுதி ரென்று.**

**பரிமே:**

[தலைமகள் புலவிக் குறிப்பினைக் கண்டு நீவிர் கூடி ஒழுகா நிற்கவும் இது நிகழ்தற்குக் காரணம் யாது என்ற தோழிக்குத் தலைமகன் சொல்லியது.]

இவ்வாற்றான் ஊடிய தன்னை யான் பணிந்துணர்த்துங் காலும் வெகுளா நிற்கும். பிறமகளிர்க்கும் அவருடியவழி இவ்வாறே பணிந்துணர்த்தும் நீர்மையை யுடையி ராகுதிர் என்று சொல்லி.

**காளிங்:**

தன்னை ஊடல் தீர்க்கும் பொழுதும் வெகுளும், பிறர்க்கும் இவ்வாறு செய்வீரே என்று சொல்லி.

தன்னைப் போற்றினும் குற்றமாம் என்று கூறியது.

**முடிநிலை:**

இக்குறளுக்குத் துறை வேறுபாடில்லை. உரை வேற்றுமையும் இல்லை. உணர்த்தல்–தெளிவித்தல் என்று பொருள் படும். அதனைக் காளிங்கர் ஊடல் தீர்த்தல் என்பர்.

**1320. நினைத்திருந்து நோக்கினுங் காயு மனைத்துநீர்
யாருள்ளி நோக்கினீ ரென்று.**

**பரிமே:**

[தலைமகள் புலவிக் குறிப்பினைக் கண்டு நீவிர் கூடி ஒழுகா நிற்கவும் இது நிகழ்தற்குக் காரணம் யாது என்ற தோழிக்குத் தலைமகன் சொல்லியது]

என் சொற்களுஞ் செயல்களும் பற்றித் தான் வெகுடலான், அவற்றை யொத்திருந்து தன்னவயவங்களது ஒப்பின்மையை நினைந்து அவற்றையே நோக்கினும் என்னை வெகுளா நிற்கும், என்னவயவ மனைத்தும் நோக்கினீர் அவற்றது ஒப்புமையான் எம்மகளிரை நினைந் தென்று சொல்லி.

**பரிதி:**

நாயகரே, இந்நேரமும் ஒரு நினைவு கொண்டிருந்து என்முகம் நோக்கினீர், முன்னாள் கூடிய நாயகி நலமும் கலவியும் நினைத்து அவள் நலத்துக்கு இவள் ஒவ்வா தென்றோ நோக்கினீர் என்று ஊடினாள்.

**வெ. இராம:**

அவளையே நினைத்துக் கொண்டு பேசாமல் சும்மா இருந்துவிட்டு அவளைப் பார்த்தாலும் அவ்வளவு நேரமும் நீர் யாரை நினைத்துக் கொண்டிருந்து என்னைப் பார்த்தீர் என்று கோபிக்கிறாள்.

நினைத்து–காதலி பிணங்குவதையும் அழுவதையும் பேசுவதையும் நினைத்து. அனைத்து–அவ்வளவு நேரமும்.

**முடிநிலை:**

'நினைத்திருந்து நோக்கினும்' என்னுந் தொடர், ஒன்றனை விதந்து கூறாது பொதுவாக இருத்தலின், உரையாசிரியர்கள் வேறு வேறு விளக்கஞ் செய்துள்ளனர். இக்குறட்கு அடிப் படையான உரைவேற்றுமை இல்லை.

# 133. ஊடலுவகை.

அஃதாவது அப்பெற்றித்தாய ஊடலால் தமக்குக் கூடலின்பம் சிறந்துழி அச்சிறப்பிற்கு ஏதுவாய அவ்வூடலைத் தலைமகள் உவத்தலும் தலைமகன் உவத்தலுமாம். அதிகார முறைமையும் இதனானே விளங்கும் என விளக்கந் தருவர் பரிமேலழகர்.

ஊடலுவகையாவது தலைமகன் மற்றுள்ள நாள்கள் போலன்றி அன்றையிற் புணர்ச்சி பெரியதோர் இன்பமுடைத் தென்று உவத்தலும் தலைமகன் அதற்குக் காரணமாய ஊடலை வியந்து கூறுதலும் அவ்வண்ணமே தலைமகள் கூறுதலுமாம். இது மேலதனோடு இயையும் என்பர் மணக்குடவர்.

ஊடலுவகையாவது ஊடலை உவந்து கூறியது. அஃதாவது புலவிநீக்கிப் புணர்ந்த தலைமகன் மற்றுள்ள நாள்கள் போலன்றி இப்புணர்ச்சிப் பெரியதோர் இன்பம் உடைத்து என்றற்குக் காரணமாகிய ஊடலை உவந்து கூறுதலும், இவ்வண்ணமே தலைமகள் கூறுதலும் மேலதனோடு இயைபும் அது என விளக்கந் தருவர் பரிப்பெருமாள்.

**1321. இல்லை தவறவர்க் காயினு மூடுதல்**
**வல்ல தவரளிக்கு மாறு.**

**பரிமே:**

(தலைமகள் காரணமின்றிப் புலக்கின்றமை கேட்ட தோழி அங்ஙனம் நீ புலக்கின்ற தென்னை என்றாட்கு அவள் சொல்லியது)

அவர்மாட்டுத் தவறில்லை யாயினும் நமக்கவர் தலையளி செய்கின்றவாறு அவரோடு ஊடுதலை விளைக்க வற்றாகின்றது

**காளிங்:**

அவர் நமக்குச் செய்த குற்றம் இல்லை யாயினும் ஊடுதலைச் செய்யின் மற்று அவர் அன்பு மிகுதியால் நமக்கு அவர் அளியைப் பெறுகுவேம்.

**வெ.இராம:**

அவரிடத்தில் தவறு இல்லையானாலும் தவறு சொல்லிப் பிணங்குவது அவருடைய அன்புக்கு நிகரான அன்புடைய தன்மையுள்ளது.

அவர் அளிக்குமாறு வல்லது – அவர் எவ்வளவு ஆசை காட்டுகிறாரோ அவ்வளவு ஆசை காதலியும் காட்டுவது போன்ற வல்லமை யுள்ளது.

**இறை:**

அவரிடத்தில் தவறொன்றும் இல்லையேனும் அன்புடனே நாள்தோறும் புதிய இன்பம் அவர் நமக்கு வழங்கிடவே தூண்டும் வண்ணம் அளவான பொய்யூடல் அமைத்தல் நன்றாம்.

**முடிநிலை:**

ஊடுதலைச் செய்யின் எனவும் அவரளியைப் பெறுகுவே எனவும் வரும் காளிங்கர் உரைப் பகுதிகள் உள்ள மூலத்தோடு பொருந்தவில்லை. 'அளிக்குமாறு' என்ற விடத்து மாறு எனப் பிரித்து ஒப்புப் பொருள்கொண்டு எழுதும் இராமலிங்கம் பிள்ளையின் கருத்து சிறப்பில்லை. 'அவரளிக்குமாறு' என்பதற்கு அவர் அன்புடன் இன்பம் நல்கத் தூண்டும் வண்ணம் என்னும் இறையரசனார் பொருள் இயல்பில்லை. அளித்தல்–தலையளி செய்தல், அருள் செய்தல் என்னும் பொருளே இங்கு பொருந்தும்.

**1322. ஊடலிற் றோன்றுஞ் சிறுதுனி நல்லளி**
**வாடினும் பாடு பெறும்.**

**பரிமே:**

(புலவாக்காலும் அத்தலையளி பெறலாயிருக்க, அஃதிழந்து புலவியான் வருந்துவ தென்னை யென்றாட்கு அவள் சொல்லியது.)

ஊடலேதுவாக நம்கண் தோன்றுகின்ற சிறிய துனி தன்னால் காதலர் செய்யும் நல்ல தலையளி வாடுமாயினும் பெருமை யெய்தும்.

**மணக்:**

ஊடலில் தோன்றும் சிறிய துனி, மிக்க அருள் பெறாது ஒழியினும் அழகு உடைத்து.

புணராது ஒழியினும் இன்பமாம் என்று கூறியவாறு.

**முடிநிலை:**

'பாடுபெறும்' என்பதற்குப் பெருமை எய்தும் எனப் பரிமேலழகரும் அழகுடைத்து என மணக்குடவரும் பொருள் வேறுபாடு தோன்றக் கூறினும், அதன் கருத்து இன்பமெய்துவார் என்பதாம். சிறு துனி என்பது சிறு துன்பம் என்னும் பொருளது.

**1323. புலத்தலிற் புத்தேணா டுண்டோ நிலத்தொடு
நீரியைந் தன்னா ரகத்து.**

**பரிமே:**

[புலவாக்காலும் அத்தலையளி பெறலா யிருக்க, அஃது இழந்து புலவியான் வருந்துவ தென்னை என்றாட்கு அவள் சொல்லியது.]

நிலத்தொடு நீர் கலந்தாற் போல ஒற்றுமை யுடைய காதலர்மாட்டுப் புலத்தல் போல நமக்கின்பந் தருவதொரு புத்தேளுலக முண்டோ, இல்லை.

நீர் தான் நிலத்தியல்பிற்றாமாறு போலக் காதலரும் தாம் கூடிய மகளிர் இயல்பினர் ஆகலான் அது பற்றி அவரோடு புலவி நிகழும் என்பாள் 'நிலத்தொடு நீரியைந் தன்னாரகத்து' என்றாள்.

**மணக்:**

நிலத்தொடு நீரியைதலால் அவை வெப்பமும் தட்பமும் கூடி இருக்குமாறு போல, இன்பமும் துன்பமும் கூட அநுபவிப்பார் மாட்டு.

**பரிப்:**

தலைமகன் புலந்து நீங்கிய வழி நுமக்குப் புலவி நன்றா யிற்று என்று நகையாடிய தோழிக்குத் தலைமகள் கூறியது.

**பரிதி:**

கலவி இன்பத்தினும் இன்பம் உண்டோ தேவர் உலகத்தினும்; அது எங்ஙனமோ எனில், அன்புள்ள நாயகரிடத்தில் புலவி.

**குழந்லத:**

இது வானுலகம் இன்பத்தின் இருப்பிடம் என்னும் அயலார் கூற்றைக் கொண்டு இவ்வின்பத்திற்கு அது இணையாகா தென்றது.

**வெ.இராம:**

நில வளத்தோடு நீரும் சேர்ந்தது போன்றவர்களிடத்தில் பிணங்கிப் புணர்வதிலுள்ள இன்பம் போல் தேவலோகத்திலும் இன்பம் உண்டோ?

புலத்தலின்—பிணங்கிப் பிரிந்திருந்து பின் புணர்வதினும். நிலத்தைப் பெண்ணாகவும் நீரை ஆணாகவும் கொள்வது உவமானத்துக்கு அழகு தரும்.

**ஞா.மாணிக்:**

நிலத்திலே விட்டால் சுவறி விடுகின்ற நீர்போல் என்னை அன்போடு கலந்து மகிழும் என் காதலருடன் ஊடுவதைவிட இன்பந் தருகிற தேவருலகம் வேறு இருக்கிறதோ?

**முடிநிலை:**

இக்குறளைத் தலைவி கூற்றாகக் கொண்டாலும் பரிமேலழகரும் பரிப்பெருமாளும் துறையமைப்பில் வேறுபடுவர். 'புலத்தலின்' என்றவிடத்துக் கலவியின்பம், புணர்ச்சியின்பம் என எழுதிய உரைகள் சொற்பொருளுமாகா; ஊடலுவகை கூறும் இவ்வதிகாரத்துக்கும் இயையா. 'நிலத்தொடு நீரியைந் தன்னாரகத்து' என்னும் மூலப் பகுதிக்குப் பரிதி உரையில் பொருள் காணப்படவில்லை. புலவர் குழந்தை 'புத்தேள் நாடு' என்பதற்குத் தம் கொள்கைப்படி உரை கண்டுள்ளார். 'நிலத்தொடு நீரியைதல்' என்ற உவமைக்குச் சிறு சிறு வேறுபாடான விளக்கங்கள் காணத் தகும்.

**3124. புல்லி விடாஅப் புலவியுட் டோன்றுமென்**
**னுள்ள முடைக்கும் படை.**

**பரிமே.**

[அப்புலவி இனி யாதானீங்கு மென்றாட்குச் சொல்லியது.

காதலரைப் புல்லிக் கொண்டு பின் விடாமைக் கேதுவாகிய அப்புலவிக்கண்ணே யுளதாம், அதன்மேற் சென்ற என்னுள்ளத்தைக் கெடுக்கும் படைக்கலம்.

என் உள்ளம் உடைக்கும் படைக்கலம் என்றது, வணக்கத்தையும் பணிமொழியையும்.

**மணக்:**

என் உள்ளத்தை அழிக்குங் கருவி, புல்லினவிடத்து விட்டுப் புலந்தவிடத்துத் தோன்றும்.

அது புணர்ந்த பின்பு தோன்றாமையால் அதனைக்கெடுக்கும் இன்பமுடைத் தென்று கூறியவாறு.

படை—பணிமொழி. இது தலைமகன் கூற்று.

**பரிப்:**

புல்லின இடத்துத் துனியாம்படி இவளைப் பொருந்தி விடாதே நிற்கின்ற புலவிக்கண்ணே வெளிப்படும் எனது உள்ளத்தைக் கெடுக்கும் படைக்கலம் போன்ற துன்பம்.

நீடுங்கால் புலவி துன்பம் எனவே புலவி கடிது நீங்க வேண்டும் என்றது. விட்டுப் புலந்த இடத்துத் தோற்றும் எனது உள்ளத்தை அழிக்குங் கருவி என்பதாம்.

அஃதாவது தலைமகள் புலவியால் கூறும் சொற்கள். அது புணர்ந்த பின்பு தோற்றாமையால் அதனைக் கேட்டால் இன்பம் உடைத்து என்று கூறியது.

**வெ.இராம:**

புணர்ந்து விடாத (வெறும்) பிணக்கத்தில் என் உள்ளத்தைப் பிளந்து விடுவது போன்ற ஆயுதம் இருந்தது.

படை—கணிச்சி. புணர்ந்து காம வேதனையைத் தீர்த்து விடாத வெறும் புலவியில் தான் என் நெஞ்சைப் பிளந்து விடும் படியான காம வேதனை இருந்தது. (இப்போது தீர்ந்து விட்டது) என்பது கருத்து.

**முடிநிலை:**

தலைவன் கூற்றாகக் கொள்ளும் மணக்குடவர் துறையினும்) தலைவி கூற்றாகக் கொள்ளும் பரிமேலழகர் துறைசிறப்புடையது. உள்ளம் உடைக்கும் படையாகிய பணிமொழி தலைவனுக்கு உரியதாகலின் 'விடாஅ' என்பதனைச் செய்யா என்னும் வாய் பாட்டு வினையெச்சமாகக் கொண்டு மணக்குடவர் எழுதுவது சிறப்பில்லை. 'உள்ள முடைக்கும் படை' என்பதற்குப் 'பன்மாயக் கள்வன் பணிமொழி யன்றோ நம் பெண்மை யுடைக்கும் படை' 1258) என்னும் குறளை ஒப்பு நோக்குக. 'புல்லி விடா அப் புலவி' என்பதற்குப் புணர்ந்து காம வேதனையைத் தீர்த்து விடாத வெறும் புலவி என்றும் 'படை' என்பதற்குக் காம வேதனை என்றும் இராமலிங்கம் பிள்ளை கூறும் பொருள் சிறப்பில்லை.

**1325. தவறில ராயினுந் தாம்வீழ்வார் மென்றோ
ளகறலி னாங்கொன் றுடைத்து.**

**பரிமே:**

(தலைமகளை யூடனீக்கிக் கூடிய தலைமகன் கழியுவகை யனாய்த் தன்னுள்ளே சொல்லியது)

ஆடவர் தங்கண் தவறிலராயினும் உடையார் போல ஊடப்பட்டுத் தாம் விரும்பு மகளிருடைய மெல்லிய தோள்களைக் கூடப் பெறாத வெல்லைக்கண் அவர்க்கு அப்பெற்றியதோர் இன்பம் பயத்தலுடைத்து.

ஊடலினாய இன்பம் அளவிறத்தலின் கூறற் கரிது என்பான் அப்பெற்றிய தொன்று என்றான்.

**பரிதி:**

நாயகர் பேரில் தவறில்லை; ஆயினும் குற்றம் உண்டாக்கி ஊடுதல் காமத்துக்கு இன்பம்.

**காளிங்:**

தாம் தவறு இல்லாராயினும் காதலிக்கப்பட்டாளது மென் தோள் நீங்குதலால், அஃது ஓர் இன்பம் உடைத்து ஆம்.

குற்றம் உண்டாயினும் இல்லை யாயினும் ஊடலால் கூடல் நன்று என்று கூறியது.

**பழையஉரை:**

ஆடவர் தங்கண் தவறில்லை யாயினும் தலைமகளை ஊடல் நீக்கித் தாம் விரும்பும் மகளிருடைய மெல்லிய தோள்களை அணைவதே இன்பம்.

**சி. இலக்:**

அவளை அகலும் நிலை துன்பமாகத் தோன்றினும், கூடும் போது பேரின்பம் உண்டாகின்றது; ஆகவே, அகலும் நிலையில் உண்டாகும் ஒன்று பின்னர்க் கூடுங்கால் இன்பத்தைப் பெருக்கு கின்றது. இன்பத்தைப் பெருக்குவதற்குத் துணையாய் உள்ள நிலையை இன்னது எனக் கூற இயலாது, 'ஒன்று' எனக் குறிப்பிட்டுள்ளார்.

**வெ.இராம:**

குற்றமற்றவள் ஆனாலும் தாம் காதலிக்கின்றவளுடைய மென்மையான தோள்களை விட்டு அகன்று விட்டால், அது ஒரு நன்மை உடையது.

தவறு-ஊடுதல் அல்லது அருவருப்புக்காட்டுதல்; இந்தக் குறளின் நோக்கம் புணர்ச்சி முடிந்தவுடன் காதலன் காதலியின் முயக்கத்தை விட்டுப் பிரிந்து விடுவது நல்லது என்பதே

**முடிநிலை:**

தலைமகன் தன் நெஞ்சிற்குக் கூறியதாகப் பரிமேலழகர் துறை கொண்டுள்ளார். பரிதி உரையை நோக்கின் அவர் தலைவி கூற்றாகக் கொண்டிருப்பர் எனத் தெரிகிறது. அவர் துறையில் வரும் 'குற்றமுண்டாக்கி ஊடுதல் காமத்துக் கின்பம்' என்னும் பகுதிக்கு மூலத்தில் இடமில்லை. மெல்லிய தோள்களை அணை வதே இன்பம் எனப் பழைய உரை கூறுதலின், 'அணைதலின் ஆங்கொன்றுடைத்து' எனப் பாடமிருந்திருக்கும் போலும். 'தவறில ராயினும்' என்பதனைத் தலைவியர் மேற்றாக இராமலிங்கம் பிள்ளை கூறுவது மரபில்லை. மேலும், அவர் உரைக் கருத்து இவ்வதிகாரத்துக்கு அப்பாற்பட்டது. 'ஆங்கொன் றுடைத்து' என்பதிலுள்ள 'ஒன்றுக்கு' இலக்குவனார் தரும் குறிப்பு நினையத் தகும்.

**1326. உணலினு முண்ட தறலினிது காமம்**
**புணர்தலி னூட லினிது.**

**பரிமே:**

(தலைமகளை ஊடனீக்கிக் கூடிய தலைமகன் கழியுவகை யனாய்த் தன்னுள்ளே சொல்லியது.)

உயிர்க்கு மேலுண்பதனினும் முன்னுண்ட தறுதல் இன்பந் தரும்; அதுபோலக் காமத்திற்கு மேற்புணர்தலினும் முன்னைத் தவறு பற்றி யூடுதல் இன்பந் தரும்.

பசித்துண்ணும்வழி மிக உண்ணலுமாய் இன்சுவைத்துமாம் அதுபோல, அகன்றுகூடும்வழி ஆராததுமாய்ப் பேரின்பத்ததுமாம் எனத் தன் அனுபவம் பற்றிக் கூறியவாறு.

**பழைய: (உ.வே.சா)**

உயிர்க்குமேல் உண்பது முன் உண்டது அறுதலின் இன்பந் தரும்; அது போலக் காமத்துக்கு மேல் ஊடல் நீங்கிப் புணருதல் இன்பந் தரும்.

**அ.மு.ப:**

இங்கே உவமை வாயிலாக நல்ல நோயற்ற உடல்நல முற்றவரே முற்றும் காமத்தைத் துய்க்க வல்லவர் என்பதை விளக்கி விட்டார். இந்த உவமை இங்கே அமைத்ததன் நோக்கம் அதுவே. நோயுற்றார் ஊடுவது, கூடுவது, குறையா இன்பம் துய்ப்பது ஆகிய நலன்களைப் பெறமுடியாது.

இப்படியே வள்ளுவர்தம் பல உவமைகள் அவ்வவ் விடத்துக்கும் பொருந்தும் நெறியினை எண்ணிக் காணின் பொருளால் மட்டுமன்றி, உவமைவாயிலாகவும் அச்சொல்ல வந்த பொருளின் ஏற்றத்தினையும் விளக்குகிறார் என்பது தெளிவாகும்

**முடிநிலை:**

பழைய உரை ஊடலினும் புணர்தல் இனிது எனக் கூறுகிறது. மூலமோ புணர்தலின் ஊடல் இனிது என்றுள்ளது. அவ்வுரை தன் கருத்திற் கேற்ப வேறுபாடம் கொண்டிருக்கலாம் எனக் கருதினும் அக்கருத்து ஊடலைச் சிறப்பிக்கும் இவ்வதிகாரத்துக்கு ஏலாது. இக்குறளில் வரும் உவமை உடல் நாம் பற்றிய தாதலின் காமந் துய்க்க அதனைத் தொடர்பு படுத்தி விளக்கும் மு.ப. உரை நயமுடைத்து. 'தம்மிலிருந்து தமதுபாத் துண்டற்றால்' (1107. 'அறிதோற றியாமை கண்டற்றால்' (1110) என்ற குறள்களுக்கும் அவர் இங்ஙனம் உவமைக்கும் பொருளுக்கும் தொடர்பு காட்டி உரை கண்டமை நோக்கத் தகும்.

**1327. ஊடலிற் றோற்றவர் வென்றா ரதுமன்னுங்**
**கூடலிற் காணப் படும்.**

**பரிமே:**

(தலைமகளை ஊடல் நீக்கிக் கூடிய தலைமகன் கழியுவகையனாய்த் தன்னுள்ளே சொல்லியது.)

காம நுகர்தற் குரிய இருவருள் ஊடலின்கண் தோற்றவர் வென்றா ராவர். அஃது அப்பொழுது அறியப்படா தாயினும் பின்னைப் புணர்ச்சியின்கண் அவரால் அறியப்படும்.

தோற்றவர்— எதிர்தலாற்றாது சாய்ந்தவர். அவர் புணர்ச்சிக் கண் பேரின்ப மெய்தலின் வென்றா ராயினார். மன்னும் உம்மும் அசைநிலை.

**மணக்:**

ஊடலின்கண் எதிராது சாய்ந்தவர் வென்றார். அவ்வெற்றியை நிலைபெறாநின்ற கூடலின்கண்ணே காணலாகும்.

**பரிதி:**

ஊடலிலே தோற்றவரையும் வென்றவரையும் கூடலில் காணப்படும்.

**முடிநிலை:**

பரிப்பெருமாள் கொள்ளும் துறையில் ஆராமை கண்டு தலைவி கூறினாளா? தலைமகளின் ஆராமை கண்டு தலைவன் கூறினானா? எனக் கூற்றில் ஐயம் தோன்றுகிறது. இதற்குத் தலைமகன் தனக்குள்ளே சொல்லியது என்னும் பரிமேலழகர் கொண்ட துறை பொருத்தமாகும். 'ஊடலில் தோற்றவர் வென்றார்' என்பதற்கு உரையாளர்கள் கூறும் உரையில் 'இகலிற் கெதிர் சாய்தல் ஆக்கம்' (858) என்னும் குறட்சாயல் உள்ளது. மன்–அசைநிலை என்பர் பரிமேலழகர். நிலைபேறு எனப் பொருள் கொள்வர் மணக்குடவர். இரண்டும் கொள்ளத் தக்கனவே. 'தோற்றவர் வென்றார்' என்பதனைப் பரிதி உம்மைத் தொகை யாகக் கொண்டு உரை யெழுதுவது குறள்நடைக்கு ஏலாது. 'காணப்படும்' என்னும் பயனிலைக்கு ஏற்ற எழுவாய் அவருரையில் காணப்படவில்லை.

**1328. ஊடிப் பெறுகுவங் கொல்லோ நுதல்வெயர்ப்பக்**
**கூடலிற் றோன்றிய வுப்பு.**

**பரிமே:**

(தலைமகளை ஊடல் நீக்கிக் கூடிய தலைமகன் கழியுவகை யனாய்த் தன்னுள்ளே சொல்லியது.)

இதுபொழுது இவள் நுதல் வெயர்க்கும் வகை கலவியின்கண் உளதாய இனிமையை இன்னும் ஒருகால் இவள் ஊடி யாம் பெறவல்லேமோ.

உப்பு—இனிமை. இனிமை கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்று அறிதலானாய இன்பம்.

**மணக்:**

நுதல் வெயர்ப்பக் கூடிய கூட்டத்தாலே உண்டாகிய இன்பத்தை இன்னும் ஒருகால் ஊடிப் பெறுவோமோ?

ஊடுதல் இருவர்க்கும் உண்டா மாதலால் பொதுப்படக் கூறினார். இஃது ஊடினார்க்கு அல்லது இன்பம் பெறுதல் அரிது என்றது.

**பரிப்:**

ஊடுதல் இருவர்க்கும் உண்டாகலால் பொதுப்படக் கூறினார். நுதலின் வெயர்ப்ப என்றான், புணர்ச்சிக் காலத்து வேகம் மிகுதலை. இவ்வின்பம் ஊடினார்க் கல்லது பெறுதலரிது என்றது.

**மு.கோ:**

புணர்ச்சியில் நுதல் வியர்த்தலும் வியர்வை காய்ந்த உப்பும் என்பது. உப்பு இன்பமுமாம். இன்ப உச்சத்தில் ஏற்படும் கைகாலாட்டத்தில் வியர்வை துளிக்கும்.

**முடிநிலை:**

ஊடுதலும் கூடலில் உப்புப் பெறுதலும் தலைவன் தலைவியர்க்கு உரிய எனினும் இக்குறளைப் பரிமேலழகர் கொண்டாங்குத் தலைவன் கூற்றாகக் கொள்ளல் சிறப்பாகும். 'உப்பு' என்பது ஈண்டு வியர்வையால் உடம்பிற் படிந்த உப்பையும் இன்பத்தையும் சுட்டுமாறு குறள் அமைந்திருப்பதை மு.கோ உரை காட்டும்.

**1329. ஊடுக மன்னோ வொளியிழை யாமிரப்ப
நீடுக மன்னோ விரா.**

**பரிமே:**

(தலைமகளை ஊடல் நீக்கிக் கூடிய தலைமகள் கழியுவகையனாய்த் தன்னுள்ளே சொல்லியது.)

ஒளியிழையினை யுடையாள் இன்னும் எம்மோடு ஊடுவாளாக; அங்ஙனம் அவள் ஊடி நிற்றற்கும் அதனை யுணர்த்துதற் பொருட்டு யாமிரந்து நிற்றற்கும் காலம்பெறும் வகை இவ்விரவு விடியாது நீட்டித்தல் வேண்டும்.

'ஊடுக' 'நீடுக' என்பன வேண்டிக் கோடற் பொருள.
'மன்' இரண்டும் ஆக்கத்தின்கண் வந்தன. ஓகாரங்கள் அசைநிலை.

**பரிப்:**

இது, மன் ஆக்கத்தின் கண் வந்தது. என்றும் உளதாக வேண்டும் என்றதனால் கூடலினும் ஊடல் நன்று என்றது.

**முடிவுரை:**

இக்குறட்குத் துறை வேறுபாடும் உரை வேறுபாடும் இல்லை

**1330. ஊடுதல் காமத்திற் கின்ப மதற்கின்பங்
கூடி முயங்கப் பெறின்.**

**பரிமே:**

(தலைமகளை ஊடல் நீக்கிக் கூடிய தலைமகன் கழியுவகை யனாய்த் தன்னுள்ளே சொல்லியது.)

காமநுகர்ச்சிக் கின்பமாவது அதனை நுகர்தற்குரிய ராவார் ஆராமை பற்றித் தம்முள் ஊடுதல்; அவ்வூடுதற்கு இன்பமாவது, அதனை யளவறிந்து நீக்கித் தம்முட் கூடி முயங்குதல் கூடு மாயின், அம்முயக்கம்.

கூடுதல்—ஒத்த அளவினராதல்.

**மணக்:**

இது யாம் பெற்றோம்; பிறர் அதன் செவ்வி யறியாமையால் பெறுதல் அரிது என்று கூறியது.

**கா.சு. பிள்ளை:**

பிணக்கம் காதன் மிகுதற் கேதுவாய் இன்பந் தருவது; பிணக்கந் தீர்ந்து கூடப் பெற்றால் அது காதலை நிறைவேற்றும் இன்பமாகும்.

**இளங்:**

ஊடுதல், காமத்திற்கு இன்பம் ஆகும்; அதனினும் ஊடிய வரை வயப்படுத்திக் கூடித் தழுவுதல் உயர்ந்த இன்பம் ஆகும்.

**முடிநிலை:**

இக்குறளுக்கும் துறைவேறுபாடில்லை. ‘அதற்கின்பம்’ என்பதற்குப் பொருள் கூறுவதில் தான் உரையாசிரியர்கள் வேறுபடுகின்றனர். அதற்குக் காதலை நிறைவேற்றும் இன்பம் எனக் கா.சு. பிள்ளையும் அதனினும் உயர்ந்த இன்பம் என இளங்குமரனாரும் பொருள் கூறுப. அவை அத்துணைச் சிறப்பில்லை. ஊடலுக்கு இன்பம் என எழுதிய உரைப்பொருளே பொருத்தமுடைத்து.

# பிற்சேர்க்கை

[பின்னர்க் கண்ட உரைவேற்றுமைகள் மட்டும் இப்பகுதியில் இடம்பெறும். அவற்றுக்கு முடிநிலை பின்வரும் பதிப்பில் எழுதப்பெறும்]

**திருக்குறள் உரைத்திறன்** — (முனைவர் கு. சுந்தரமூர்த்தி)

42. துறந்தார்க்கும் .... ... .... துணை.

மற்றும் இறந்தாராவார் இவ்வுலகத்தின்கண் வறுமையைக் கடந்து மிக்க செல்வத்தையுடையார். இவர்க்கும் துணை யென்றுமாம்.

82. விருந்து புறத்ததாத் .... .... ... றன்று.

விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவாம்; ஆதலின் (வீட்டின் புறத்தே இருக்கும் விருந்தினர் தாம் உண்ண இயலாமை கூறி வீட்டில் இருப்பாரை நீவிர் அருந்துக எனினும் அதனை ஏற்றுத் தனித்து உண்டல் தக்க தன்றாம் என உரை கோடலும் ஒன்று.

'மணல்மலி முற்றம் புக்க சான்றோர், உண்ணாராயினும் தன்னொடு சூளுற்று உண்மென இரக்கும் பெரும்பெயர்ச் சாத்தன்' (புறம். 178) எனச் சான்றோர் கூறுவதும் காண்க.

**திருக்குறள் தெளிவுரை** (நாவலர் நெடுஞ்செழியன்)

25. ஐந்தவித்தான் .... .... .... கரி.

'இந்திறனே சாலும் கரி' எனப் பாடங்கொள்வர். இனிய திறமை மிக்க அறிவாற்றலில் சிறந்த சான்றோனாகக் கருதப் படும் அறிவனே தக்க சான்றாவான்.

பரந்த வான் புகழ் கொண்டோரில் மிக உயர்ந்தோனாகக் கருதப்படும் இனிய திறமை மிக்க அறிவாற்றலிற் சிறந்த சான்றோ னாகக் கருதப்படும் அறிவனே தக்க சான்றாவான்.

ஐந்திறம் என்பது ஐந்திரம் என்று பாட வேறுபாடு அடைந்து உருக்குலைந்தது போன்று இந்திரன் என்று உருக்குலைந்திருக் கிறது பிற்கால ஏடுகளில்.

101. செய்யாமற் செய்த உதவி .... .... .... அரிது.

செய்யாமற் செய்த உதவி — வெளிப்படையாக உதவி செய்ததாகக் காட்டிக் கொள்ளாமல் ஒருவர் அவ்வப்போது செய்து வரும் உதவி.

தூங்காமல் தூங்கி, அடிக்காமல் அடித்து என்பது போன்ற நடையுடையது.

187. பகச்சொல்லிக் .... .... .... தவர்.

நண்பர்களோடு கொள்ளும் நட்புறவினால் ஏற்படும் நன்மையை அறியாதவர்கள் தாம் நண்பர்களைப் பற்றிப் புறங் கூறிப் பின்னர் அவர்களை விட்டுப் பிரிந்து போய் விடுவார்கள்.

236. தோன்றிற் புகழொடு ... .... .... நன்று.

ஒருவர் தாம் புக விரும்புகின்ற துறையில் புகழோடு விளங்க முடியும் என்றால் அந்தத் துறையில் தோன்ற வேண்டும். அதற்கான அறிவுத் திறனும் ஆற்றல் திறனும் வாய்ப்பும் இல்லாத வர்கள் அந்தத் துறையில் புகுவதைவிடப் புகாமல் இருப்பது நல்லது.

தோன்று இல் — தோன்றுகின்ற இடம்; அதாவது தோன்று கின்ற துறை.

356. கற்றீண்டு .... .... .... நெறி.

இவ்வுலகத்தில் கற்க வேண்டியவைகளை யெல்லாம் கற்று உண்மைப் பொருள்களை நன்கு அறிந்தவர்கள் மீண்டும் இல்லற நெறிக்கு வாராத அளவுக்குத் தூய துறவற நெறியை அடைவார்கள்,

580. பெயக் கண்டும் .... .... .... பவர்.

தம்முடைய நண்பரிடம் உள்ளது நைந்து போன பழம்தான் என்றாலும் அதனை உண்ணுமாறு அவர் அன்பின் காரணமாக வழங்கியிருப்பதைக் கண்டு கொண்ட பிறகும் விரும்பத்தக்க நாகரிகம் என்னும் கண்ணோட்டத்தை விரும்புபவர்கள் அதனை உதறித்தள்ளி விடாமல் உண்டு மனநிறைவைப் பெறுவார்கள்.

நஞ்சு — நைந்து போன பழம் என்பதைக் குறிக்கும்.

1103. தாம் வீழ்வார் .... .... .... உலகு.

தாமரை போன்ற கண்ணினை யுடைய தலைமகனால் விரும்பப்படும் அழகிய பெண்ணினது மென்மையான தோள்களின் மேல் தலைமகன் துயின்று இன்பம் பெறுவதைக் காட்டிலும் இந்த உலகில் இன்பந் தருவது வேறு ஏதேனும் உண்டோ? எதுவும் இல்லை.

வள்ளுவர் உள்ளம் (ரா. கேசவ அய்யங்கார்)

8. அறவாழி அந்தணன் ..................... அரிது.

அற முதல்வனாகிய சக்கரப்படை அந்தணன் திருவடியைச் சரணம் அடைந்தவர்க்கே பிற ஆழி (பிற சூழல்) கடத்தற் காகும். சரணம் அடையாதார்க்குக் கடத்தற்காகாது.

ஆழி—சக்கரச் சுழற்சிகள். கருமச் சூழல். அவிச்சைச் சுழல், காலச் சுழல் முதலிய சுழல்களைக் குறிக்கும்.

(பக். 434)

9. கோளில் பொறியிற் ........................ தலை.

இறைவன் தாளை வணங்காத் தலைக்குக் கோளுடைப் பொறியின் கேடே உற்றது. கோளில்லாப் பொறியின் நலம் அற்றது என்பது பொருள்.

கோள்—கேடு. பொறி–எழுத்து. (இறைவன் சேவடி சென்னியிற் பொறித்தல்).

(பக் 436).

27. சுவையொளி ........................ உலகு.

அனைவரையும் தம் வயப்படுத்தி ஆட்டி வைக்கும் இந்திரியங்களைத் தம் வயமாய்க் கொண்டு செலுத்தும் நீத்தார் வயத்து உலகை இருடீகேசனாம் இறைவன் காவற் பொருட்டு ஒப்படைத்துள்ளான்.

(பக். 288)

134. மறப்பினும் ஓத்துக் ........................ கெடும்.

பார்ப்பான் தான் முன்பு ஓதிக் கொண்ட வேதத்தை மறந்தாலும் பின்பு அவ்வேதம் மீண்டும் ஓதிக் கொள்வதற்கு ஆகும். மறப்பினும் வேதம் கெடாது. ஆனால், அவன் பிறப்பொழுக்கம் குன்றிடில் அவன்பால் ஓதிய அவ்வேதம் கெடும்.

(பக். 57)

373. நுண்ணிய நூல்பல ........................ மிகும்,

ஒருவன் எத்தனை நுண்ணிய உணர்வைப் பயக்கும் நூல்களைக் கற்றானாயினும், அவன் ஊழாம் வினைப்பயனாகிய மருளுணர்வே மிகுந்து நிற்கும்.

(பக். 296)

420. செவியிற் சுவையுணரா ........................ என்.

வேதம் என்பது சுருதி. அது செவி. அஃதொன்றில் தான் சுவை. வேதமும்செவி யென்றும் அவை வேத விளக்கங்களாகிய ஆரிடப் பனுவல்களும் இங்குப் பயப்பதே சுவையென்றும் அவ்வுணர்வே சுவையுணர்வென்றும் உணர்த்தப்பட்டது.

(பக். 152)

# திருக்குறள் அதிகார அகரவரிசை

## காமத்துப்பால்


| அதிகாரம் | பக்கம் | அதிகாரம் | பக்கம் |
|---|---|---|---|
| அலரறிவுறுத்தல் | 94 | நிறையழிதல் | 255 |
| அவர்வயின்விதும்பல் | 270 | நினைந்தவர்புலம்பல் | 180 |
| உறுப்புநலனழிதல் | 226 | நெஞ்சொடுகிளத்தல் | 242 |
| ஊடலுவகை | 354 | நெஞ்சொடுபுலத்தல் | 316 |
| கண்விதுப்பழிதல் | 138 | பசப்புறுபருவரல் | 151 |
| கனவுநிலையுரைத்தல் | 196 | படர்மெலிந்திரங்கல் | 125 |
| காதற்சிறப்புரைத்தல் | 67 | பிரிவாற்றாமை | 107 |
| குறிப்பறிதல் | 18 | புணர்ச்சி மகிழ்தல் | 37 |
| குறிப்பறிவுறுத்தல் | 288 | புணர்ச்சி விதும்பல் | 303 |
| தகையணங்குறுத்தல் | 1 | புலவி | 327 |
| தனிப்படர்மிகுதி | 164 | புலவிநுணுக்கம் | 341 |
| நலம்புனைந்துரைத்தல் | 54 | பொழுதுகண்டிரங்கல் | 210 |
| நாணுத்துறவுரைத்தல் | 81 | | |

# திருக்குறள் முதற்குறிப்பு அகரவரிசை

## காமத்துப்பால்


| குறள் | பக்கம் | குறள் | பக்கம் |
|---|---|---|---|
| அ | | இல்லைதவ | 354 |
| அசையியற் | 31 | இளித்தக்க | 310 |
| அணங்குகொ | 2 | இனியன்ன | 318 |
| அரிதரோ | 112 | இன்கணுடைத் | 109 |
| அரிதாற்றி | 122 | இன்பங்கட | 131 |
| அலந்தாரை | 329 | இன்னாதின | 120 |
| அலரெழ | 94 | உ | |
| அலர்நாண | 104 | உடம்பொ | 69 |
| அவர்தந்தா | 153 | உணலினு | 362 |
| அவர்நெஞ் | 316 | உண்டார்கணல் | 16 |
| அழல்போலு | 219 | உப்பமைந் | 329 |
| அளித்தஞ்ச | 113 | உய்த்தலறிந் | 308 |
| அறிகிலா | 91 | உரனசைஇ | 273 |
| அறிதோ | 52 | உவக்கா | 156 |
| அறுவாய் | 61 | உவந்துறைவ | 80 |
| அனிச்சப் | 58 | உழந்துழந் | 145 |
| அனிச்சமு | 65 | உள்ளக்களித் | 303 |
| இ | | உள்ளத்தார் | 252 |
| இமைப்பிற் | 79 | உள்ளம்போன் | 136 |
| இம்மைப்பிறப் | 348 | உள்ளினுந் | 181 |
| இருநோக் | 19 | உள்ளினே | 349 |
| இருந்துள்ளி | 245 | உள்ளுவன்-உரைப் | 155 |
| இலங்கிழா | 271 | உள்ளுவன்-மறப் | 72 |

| குறள் | பக்கம் | குறள் | பக்கம் |
|---|---|---|---|
| உறாஅதவர்க்கண்ட | 317 | ஒ | |
| உறாஅதவர்போற் | 28 | ஒண்ணுதற் | 13 |
| உறாஅதோ | 97 | ஒருதலையா | 171 |
| உறாஅர்க் | 177 | ஒருநாளெழு | 284 |
| உறுதோறுயிர் | 45 | ஓ | |
| ஊ | | ஓஒவினிதே | 144 |
| ஊடலிற்றோற்ற | 363 | ஓம்பினமைந் | 115 |
| ஊடலிற்றோன்றுஞ் | 355 | க | |
| ஊடலினுண்டாங் | 335 | கடலன்ன | 88 |
| ஊடலுணங்க | 339 | கடாஅக்களிற் | 12 |
| ஊடலுணர்தல் | 50 | கண்களவு | 21 |
| ஊடற்கட் | 306 | கண்டதுமன்னு | 101 |
| ஊடிப்பெறுகு | 364 | கண்டாங் | 138 |
| ஊடியவரை | 330 | கண்டாருயி | 7 |
| ஊடியிருந்தே | 343 | கண்டுகேட் | 37 |
| ஊடுகமன்னோ | 365 | கண்ணிறைந்த | 290 |
| ஊடுதல்காமத்திற் | 366 | கண்ணிற்றுனி | 313 |
| ஊரவர் | 102 | கண்ணின்பசப்போ | 239 |
| எ | | கண்ணுங்கொளச் | 246 |
| எழுதுங்காற் | 306 | கண்ணுள்ளார் | 76 |
| எள்ளினிளி | 322 | கண்ணுள்ளிற் | 74 |
| எனைத்துநினைப் | 189 | கண்ணொடு | 33 |
| எனைத்தொன் | 182 | கதுமெனத் | 141 |
| ஏ | | கயலுண்கண் | 198 |
| ஏதிலார் | 33 | கரத்தலு | 126 |

| குறள் | பக்கம் |
|---|---|
| கரப்பினுங் | 289 |
| கருமணியிற் | 70 |
| கலந்துணர்த் | 248 |
| கவ்வையாற் | 98 |
| களித்தொறுங் | 100 |
| கனவினா | 201 |
| **கா** | |
| காணிற்குவளை | 57 |
| காணுங்காற் | 307 |
| காண்கமற் | 277 |
| காதலரில்வழி | 216 |
| காதலர்தூதொடு | 197 |
| காதலவரில | 243 |
| காமக்கடன்மன்னு | 128 |
| காமக்கடும்-உய்க் | 84 |
| காமக்கடும்-நீந்தி | 132 |
| காமக்கணிச்சி | 255 |
| காமமுநாணு | 127 |
| காமமுழந்து | 81 |
| காமமெனை | 256 |
| காமம்விடு | 250 |
| காலைக்குச் | 217 |
| காலையரும்பி | 219 |
| **கு** | |
| குறிக்கொண்டு | 27 |

| குறள் | பக்கம் |
|---|---|
| **கூ** | |
| கூடியகாமம் | 275 |
| கூற்றமோ | 9 |
| **கெ** | |
| கெட்டார்க்கு | 318 |
| **கொ** | |
| கொடியார் கொடுமையுரை | 231 |
| கொடியார் கொடுமையிற் | 134 |
| கொடும்புருவங் | 10 |
| **கோ** | |
| கோட்டுப்பூ | 344 |
| **சா** | |
| சாயலு | 154 |
| **சி** | |
| சிறுமை | 226 |
| **செ** | |
| செல்லாமை | 108 |
| செறாஅச்சிறு | 30 |
| செறிதொடி | 295 |
| செற்றவர் | 261 |
| செற்றாரெனக் | 247 |
| செற்றார்பின் | 259 |

| குறள் | பக்கம் | குறள் | பக்கம் |
|---|---|---|---|
| **த** | | **தொ** | |
| தஞ்சந்தம | 325 | தொடலைக் | 85 |
| தணந்தமை | 229 | தொடிநோக்கி | 300 |
| தண்ணந்துறை | 298 | தொடியொடு | 233 |
| தந்நெஞ்சத் | 185 | தொடிற்சுடி | 122 |
| தம்மிலிருந்து | 46 | **ந** | |
| தவறில | 360 | நசைஇயார் | 175 |
| தனியேயிருந்து | 320 | நயந்தவர்க்கு | 151 |
| தன்னையுணர்த் | 352 | நயந்தவர்நல் | 228 |
| **தா** | | நலத்தகை | 332 |
| தாம்வீழ்வார்தம் | 164 | நனவினாற்கண் | 203 |
| தாம்வீழ்வார்மென் | 39 | நனவினானந்நீத் | 208 |
| தாம்வேண்டி | 104 | நனவினானல்காக் | 205 |
| **தி** | | நனவினானல்காதவ | 200 |
| தினைத்துணையு | 304 | நனவினானல்காரை | 207 |
| **து** | | நனவெனை | 203 |
| துஞ்சுங்காற் | 206 | நன்னீரை | 55 |
| துப்பினெவ | 130 | **நா** | |
| தும்முச்செறுப்ப | 351 | நாங்காதல் | 170 |
| துறைவன் | 118 | நாணுமறந் | 322 |
| துனியும் | 333 | நாணென | 262 |
| துன்பத்திற் | 324 | நாணொடு | 83 |
| துன்னாத்துறந் | 253 | **நி** | |
| **தெ** | | நிணந்தீயி | 268 |
| தெரிந்துணரா | 139 | நிறையரியர் | 89 |

| குறள் | பக்கம் |
|---|---|
| நிறையுடையே | 258 |
| நினைத்திருந்து | 353 |
| நினைத்தொன்று | 242 |
| நினைப்பவர் | 184 |
| **நீ** | |
| நீங்கிற்றெறூஉம் | 42 |
| நீரும்நிழல | 338 |
| **நெ** | |
| நெஞ்சத்தார் | 77 |
| நெய்யா | 103 |
| நெருநற்றுச் | 299 |
| **நோ** | |
| நோக்கினா ணோக்கெதிர் | 4 |
| நோக்கினா ணோக்கி யிறைஞ் | 23 |
| நோதலெவன் | 336 |
| நோனாவுடம்பு | 82 |
| **ப** | |
| பசக்கமற் | 159 |
| பசந்தாளிவ | 159 |
| பசப்பெனப் | 161 |
| படலாற்றா | 143 |
| பணைநீங்கிப் | 230 |
| பண்டறியேன் | 7 |
| பதிமருண்டு | 221 |

| குறள் | பக்கம் |
|---|---|
| பரிந்தவர் | 251 |
| பருவரலும் | 172 |
| பனியரும்பிப் | 214 |
| பன்மாயக் | 265 |
| **பா** | |
| பாடுபெறுதி | 234 |
| பாலொடு | 67 |
| **பி** | |
| பிணிக்கு | 38 |
| பிணையேர் | 14 |
| பிரிவுரைக்கும் | 116 |
| **பு** | |
| புலத்தலிற் | 356 |
| புலப்பலெனச் | 267 |
| புலப்பேன்கொல் | 280 |
| புல்லாதிராஅப் | 327 |
| புல்லிக் | 158 |
| புல்லிவிடாஅப் | 358 |
| புன்கண்ணை | 213 |
| **பெ** | |
| பெண்ணியலா | 341 |
| பெண்ணினாற் | 301 |
| பெயலாற்றா | 142 |
| பெரிதாற்றிப் | 297 |
| பெறாஅமை | 320 |
| பெறினென்னாம் | 284 |

| குறள் | பக்கம் |
|---|---|
| **பே** | |
| பேணாதுபெட்ப | 304 |
| பேணாதுபெட்டா | 147 |
| **பொ** | |
| பொருண்மாலை | 224 |
| **ம** | |
| மடலூர்தல் | 87 |
| மணியிற் | 292 |
| மதியுமடந்தை | 59 |
| மலரன்ன-அரு | 95 |
| மலரன்ன-முக | 63 |
| மலரினுமெல் | 311 |
| மலர்காணின் | 56 |
| மறப்பி | 188 |
| மறைபெற | 149 |
| மறைப்பேன்மற் | 258 |
| மறைப்பேன்மன் | 125 |
| மற்றியா | 187 |
| மன்னுயி | 133 |
| **மா** | |
| மாதர்முகம் | 62 |
| மாலைநோய் | 217 |
| மாலையே | 211 |
| **மு** | |
| முகைமொக்கு | 294 |
| முயக்கிடைத் | 237 |
| முயங்கிய | 236 |
| முறிமேனி | 57 |
| **யா** | |
| யாங்கண்ணிற் | 92 |
| யாமுமுளேங் | 184 |
| யாரினுங் | 347 |
| யானோக்குங் | 26 |
| **வ** | |
| வருகமற் | 278 |
| வழுத்தினா | 350 |
| **வா** | |
| வாராக்காற் | 148 |
| வாழ்தலுயிர்க் | 71 |
| வாழ்வார்க்கு | 166 |
| வாளற்றுப் | 271 |
| **வி** | |
| விடாஅது | 192 |
| விளக்கற்றம் | 157 |
| விளியுமெனின் | 191 |
| வினைகலந்து | 281 |
| **வீ** | |
| வீழப்படுவார் | 168 |
| வீழுநர்வீழப் | 167 |
| வீழுமிருவர்க் | 49 |
| வீழ்வாரி | 174 |
| **வே** | |
| வேட்டபொழுதி | 43 |


—★—

# பிழை திருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 33 | 18 | காதலர் | காதலார் |
| 63 | 22 | அவன் | அவள் |
| 74 | 9 | காள்ளாது | கொள்ளாது |
| 97 | 10 | பெற்றன | பெற்றன்ன |
| 154 | 5 | பின்ணணி | பின்னணி |
| 191 | 4 | மொழிந்தாகக் | மொழிந்ததாகக் |
| 223 | 4 | மதிமருண்டு | பதிமருண்டு |
| 269 | 10 | ஊடற்றாழில் | ஊடற்றொழில் |
| | | களைத் | களைத் |
| 296 | 13 | அளிக்கவு | அளிக்கவும் |
| 298 | 16 | எனவே | எனவே |
| 310 | 2 | தலைவன் | தலைவி |
| 331 | 13 | அறிந்ததை | அரிந்ததை |
| 347 | 18 | காலதலுடைய | காதலுடைய |
| 355 | 13 | பெறுகுவே | பெறுகுவேம் |
| 365 | 19 | தலைமகள் | தலைமகன் |
| 366 | 4 | முடிவை | முடிநிலை |

**அண்ணாமலைப் பல்கலைக்கழகம்**

# நூல் வெளியீட்டுத் துறை

## திருக்குறள் வெளியீடுகள்

| | | | |
|---|---|---|---|
| 1. | வள்ளுவரும் கம்பரும்<br>ச. தண்டபாணி தேசிகர் | 1975 | 12—00 |
| 2. | திருக்குறளும்<br>பிற உரையாசிரியர்களும்<br>மு. கோவிந்தசாமி | 1975 | 15—00 |
| 3. | பரிமேலழகர்<br>மு. கோவிந்தசாமி | 1977 | 10—00 |
| 4. | திருக்குறட் சிந்தனைகள்<br>தமிழியல் துறை ஆசிரியர்கள் | 1979 | 8—00 |
| 5. | வள்ளுவத்தில்<br>மெய்ப்பொருட் சுவடுகள்<br>ச. தண்டபாணி தேசிகர் | 1980 | 10—00 |
| 6. | திருக்குறளும்<br>தமிழ்ப் பாரத நூல்களும்<br>நா. இராமலிங்கம் | 1980 | 10—00 |
| 7. | திருவள்ளுவர்<br>குன்றக்குடி அடிகளார் | 1981 | 5—00 |
| 8. | திருக்குறள்<br>பரிப்பெருமாள் உரை<br>கா. ம. வேங்கடராமையா | 1988 | 20—00 |
| 9. | திருக்குறள் உரைவேற்றுமை<br>அறத்துப்பால்<br>இரா. சாரங்கபாணி | 1989 | 50—00 |
| 10. | திருந்குறள் உரைவேற்றுமை<br>பொருட்பால்<br>இரா. சாரங்கபாணி | 1992 | |

ANNAMALAI UNIVERSITY
PUBLICATIONS DIVISION
ANNAMALAI NAGAR 608 002
TAMILNADU, INDIA